உ

புலவர் உலகம்

கம்பன் கலை நிலை

பதின்மூன்றாவது தொகுதி

ஆசிரியர்

ஜெகவீரபாண்டியனார்

★

மதுரை
மதராஸ். சி. வரதராஜுலு நாயுடு பிரஸில்
பதிப்பிக்கப் பெற்றன.

1955.

All Rights Reserved.

முகவுரை.

இது கம்பன் கலை நிலையுள் பதின்மூன்றாவது தொகுதி. சிறந்த போர் வீரனான இந்திரசித்து மறைந்திருந்து செய்த காரண வேள்வி முடியாமல் போகவே உள்ளம் வருந்தி ஊக்கி எழுந்து இலக்குவனோடு போராடித் தெய்வப் படைகளை எல்லாம் இழந்து சிந்தை கலங்கித் திரும்பி வந்து தந்தையைக் கண்டான். தகுந்த புத்திமதிகளைச் சொன்னான். அவன் யாதும் கேளாமல் மோதி முனிந்து போருக்கு எழுந்தான். அவனைத் தடுத்து நிறுத்தி நெஞ்சம் கொதித்து மீண்டும் தேர் ஏறிச் சேனைகளோடு செருக்களம் புகுந்து உக்கிர வீரமாய்ப் போராடி முடிவில் இளைய பெருமாள் எய்த அம்பால் மாண்டு விழுந்தான்.

தனது தலைமகன் நிலைகுலைந்து அழிந்ததை இலங்கை வேந்தன் அறிந்து உள்ளம் உடைந்து உருகி அழுதான்; பின்பு தேறி உலகில் உள்ள அரக்கர் குலத்தை எல்லாம் ஒருங்கே திரட்டி மூலபலச் சேனைகளையும் கூட்டி அனுப்பினான். ஊழிக் கடல் போல் உருத்து வந்த படைகள் யாவும் இராமன் எதிரே அடியோடு மாண்டு மடிந்தன; போன சேனைகள் யாவும் பொன்றி முடிந்தன என்று தெரியவே இராவணன் மான வீரோடு மறுகி மயங்கினான்; அதன்பின் உறுதிபூண்டு ஊக்கி எழுந்து போர்க் கோலம் கொண்டு தேர் மேல் ஏறித் தானைகளோடு சமர்க்களம் அடைந்தான். சமர பூமியை அவன் அடையவே இராமன் யுத்த சன்னத்தனாய் உருத்து எழுந்து கோதண்டத்தைக் கையில் ஏந்தி வீரகம்பீரமாய் நேரே வந்தான். அப்பொழுது இந்திரனுடைய தேர் விண்ணுலகிலிருந்து விரைந்து வந்து எதிரே நின்றது. அதன் சாரதியான மாதலி இடம் உண்மையை உசாவி அறிந்து அந்தத் திவ்விய இரதத்தில் ஏறி வெவ்விய தெவ்வோடு வீரராகவன் போராட நேர்ந்தான். முதலில் நேரே வந்து மூண்ட மகோதரன் விரைவில் மாண்டான். மாளவே மீளாத வேகத்தோடு இராவணன் சீறி வந்து போராடினான். இந்த அமராடல்கள் முறையே இதில் மருவியுள்ளன.

இங்ஙனம்

ஜெகவீரபாண்டியன்.

சரித சாரம்

வில்வீரர் எவர்க்குமே மேலான
வீரன்என விளங்கி நின்ற
வல்வீரன் இராவணியை வன்சமரில்
இளவல் வென்று வாகைகொண்டான்;
பல்வீரம் படிந்துவந்த மூலபலம்
பாழாகப் படுத்தி மீண்ட
வெல்வீரக் குரிசில்பின் இராவணனை
வென்றொழிக்க விரைந்து நின்றான்

இந்தக் குறிப்பு மொழிகள் கூர்ந்து சிந்திக்கத்தக்கன.

பழியும் இழிவும் அடைந்து அழிநரகில் வீழும்படியான அவல நிலையில் தான் இறங்கியுள்ளதாகத் தன்னை மேகநாதன் பழித்துக் கூறியதற்குப் பதிலாக விபீடணன் இதனை இங்ஙனம் தெளித்துக் கூறினன். உரைகள் இகழ்ச்சிக் குறிப்பில் எழுந்து வந்துள்ளன. தரும சிந்தனையின்றி நீதி நெறிகளை மறந்து யாண்டும் தீமைகளையே செய்து வருகிற உங்களுக்கு இம்மையில் பழியும் மறுமையில் நரக துன்பமுமே உரிமையாம் என உரையாட நேர்ந்தவன் அதிவிநயமான முறையில் எதிர் மறையாக் கூறினன். உம்மையே புகழும் பூண்க, துறக்கமும் ஆக என்றது இம்மையும் மறுமையும் அறவே இழந்துள்ள நீ உண்மையை உணராமல் உளறுகின்றாயே! என்று உருத்து உரைத்த படியாம்.

தரும நீதியில் தோய்ந்து வந்துள்ளவன் ஆதலால் கரும வினைவுகளைக் கருதியுணருமாறு உறுதிமொழிகளைப் பொறுமையோடு கூறினன். வார்த்தைகள் வெளியே அமைதியாய் வந்தாலும் உள்ளே ஆத்திரம் அடல் கொண்டு நின்றது. பாவத்தீமைகளை விழைந்து புரிந்து அடியோடு இராவணன் அழிந்து போக நேர்ந்துள்ளான் எனத் தான் தெளிந்து கொண்டதை அவன் மகன் உணர்ந்து கொள வீடணன் நேரே தெரியப்படுத்தினன்.

அறத்தினைப் பாவம் வெல்லாது.

விபீடணனுடைய உள்ளத்தில் துணிந்துள்ளது இவ்வாறு உரையில் வெளிவந்தது. இந்திரசித்து சிந்தனை செய்து உணரும்படி நிந்தனை நிலையை மறைத்து இந்த வகையில் உரைத்தான்.

இராவணன் பல்லாயிரக்கணக்கான நெடிய சேனைகளையுடையவன்; அரிய பெரிய போர் வீரன்; கேளும் கிளைகளும் அருந்திறலாண்மைகள் அமைந்தன; ஆயினும் இராமன் எதிரே யாவும் இழந்து அவன் அழிந்தே போவான் என்பதை இங்ஙனம் துணிந்து மொழிந்தான்.

உவமான நிலையால் உண்மைநிலை உணர வந்தது.

அறம் தெய்வ ஒளி.

பாவம் பேயிருள்.

ஒளி முன் இருள் ஒழிவதுபோல் இராமச்சந்திரன் எதிரே இராவணன் குலத்தோடு அழிந்து ஒழிந்தே போவான் என்பதை உவமைக் குறிப்பு உணர்த்தி நின்றது. ஒளியை இருள் வெல்லுமானால் இராமனை ஒருவேளை இராவணன் வெல்ல முடியும்; யாதும் முடியாது என்பது இயற்கைக் காட்சியால் முடிவாகி நின்றது. அறம் இராமன்; பாவம் இராவணன் என்க.

நீங்கள் யாவரும் அடியோடு முடிந்து ஒழிவது முடிவாய் முடிந்து நின்றது; நிலைமையை உணர்ந்து கொள்ளாமல் நெஞ்சத்திமிரால் துணிந்து பேசுகின்றாய்! என இந்திரசித்தினுடைய பேச்சின் பிழை பாட்டையும், பிழையாமல் நாசம் அடைவதையும் விநயமாய் இதனால் எடுத்துக் காட்டினான்.

தருமமே துணை என்று தரும மூர்த்தியான இராமனை நான் சரணடைந்துள்ளேன்; விழுமிய அரணம் என்று உழுவலன்போடு மருவி மகிழ்ந்துள்ள என்னை இழிவு பல கூறி இகழ்ந்து நிற்கின்றாய்; மனத்திமிர் கொண்டு மடமை மண்டிக் கடமையை மறந்து கடுத்துப் பேசுகின்ற உனக்குச் சில உண்மைகளை ஈண்டு எடுத்துச் சொல்ல வேண்டும் என்னும் ஆசையால் நான் தொடுத்துச் சொல்லுகின்றேன் என்று தொடர்ந்து பேசினான்.

பாவம் கொடிய விடத்தினும் தீயது; நெடிய துயரங்களையே விளைப்பது; அடு நரகில் ஆழ்த்தி அவலப்படுத்துவது; அதன் தொடர்பு எந்தச் சமுதாயத்துக்கு ஏறுகிறதோ அந்தச் சமுதாயம் எந்த வகையிலும் அல்லலாய் இழிந்து அழிந்தே போகும்.

அறம் இனிய அமுதமாய் இன்பம் தருவது; இம்மையும் மறுமையும் நன்மைகளையே நல்கி எம்மையும் இதம்புரிவது; அதனை மருவி நின்ற சமுதாயம் மகிமைகள் பலபெற்று அதிசய நிலைகளை அடைந்து யாண்டும் துதிகொண்டு மகிழ்கின்றன.

அறநெறி, நல்வழி என்னும் மொழிகள் விழுமிய பொருள்களையுடையன; பெயர் அளவிலேயே உறுதியான உயர்நிலைகளை உணர்த்தி நிற்கின்றன. பேரின்ப வீட்டுக்கு நேரே இனிது கொண்டு போய்ச் சேர்க்கும் மார்க்கத்தையே சன்மார்க்கம், நீதி நெறி என ஓதி வருகின்றோம். இவ்வாறான தரும வழியில் செல்பவர் எவ்வகையிலும் இன்பமே அடைவர். இந்த வழியை

லகினவர் எந்த நிலையிலும் இழிவான துயரங்களையே அடைய நேர்வர்; இதனைத் தெளிவாக அறி என்று தேற்றியருளினன்.

The path of the just is as the shining light.

The way of the wicked is as darkness; they know not at what they stumble. [Bible]

" நீதிமான்களுடைய வழி மிகுந்த ஒளியுடையது; பாவிகளுடைய பாதை இருள் மண்டியிருக்கும்; தாங்கள் இடருய் இழிந்து அழிவதை அவர் அறியார் " என்னும் இது இங்கே அறியவுரியது. தீய செயல்களையுடையவர் பாவிகள் ஆகின்ருர்; ஆகவே அவரது வாழ்வு தாழ்வாய் அழிய நேர்கின்ருர். நெறி கேடர் நெடிது பெருகி நின்ருலும் கொடிய துயரங்களை அடைந்து அவர் முடிந்து படுவது இயற்கை நியமமாய் நின்றது.

இத்தகைய தத்துவ நிலைகளை நன்கு உய்த்து உணரும்படி வீடணன் இங்கே கூறியுள்ளமையால் அவனுடைய நீர்மை சீர்மைகளை நேரே உணர்ந்து கொள்ளுகிருேம். தருமமே வெல்லும் என்னும் உறுதி அவன் உள்ளத்தில் மருமமாய் மருவியுள்ளது. புண்ணிய நிலைகளை எண்ணி ஒழுகி வந்தவன் புண்ணிய மூர்த்தியைச் சேர்ந்தான். தேர்ந்து தெளிந்தே சார்ந்து கொண்டான்.

தேவர்க்கும் தேவைச் சேர்ந்தேன்.

தான் அடைக்கலமாச் சேர்ந்துள்ளவனது மகிமையை வீடணன் இங்ஙனம் குறித்திருக்கிருன். இராமன் மனித உருவில் மருவியிருந்தாலும் அவன் தேவ தேவனே என்று உறுதி கொண்டு உரிமை பூண்டுள்ளமை ஈண்டு உணர வந்தது.

தீயவர்களை ஒழித்து நல்லவர்களைப் பாதுகாத்துத் தருமங்களை நிறுத்தவே இராமன் அவதரித்து வந்திருக்கிருன் என்று இவன் சிந்தை தெளிந்திருக்கிருன். அந்த ஞானத் தெளிவினுல் நன்மைகளை விளக்கி உறுதி நிலைகளை உணர்த்தினன். சுகி நலம் கனிய அதிவிநயமாய்க் கூறிய இவனுடைய உணர்வுரைகளை ஒரு சிறிதும் மதியாமல் இந்திரசித்து பொருதிறலில் மூண்டான்.

இந்திரசித்து விரைந்து புரிந்தது.

"நேர்ந்த எதிரியை யாம் வெல்ல முடியாது; அழிந்தே போவோம் என்று அவல மொழிகளைக் கவலையின்றிப் பேசுகின்ற

உன் தலையை இதோ துணித்து வீழ்த்துகின்றேன்" என்று சொல்லிக் கொண்டே வீடணனுடைய கழுத்தைநோக்கி அழுத்தமாக்குறிசெய்துமேகநாதன் அதிவேகமாகஓர் அம்பைஏவினன்.

அயலே குறிப்போடு கூர்ந்து நோக்கி நின்ற இலக்குவன் கடுத்து வந்த அந்தக் கணையை விரைந்து துணித்து வீழ்த்தினன். கொல்ல ஏவிய கணை ஒல்லையில் அழிந்து வீழவே எல்லையில்லாத கோபத்தோடு மூண்டு நீண்ட வேல் ஒன்றை எடுத்து நேரே குறி பார்த்து வீசினன். அவ் வடிவேலையும் இளையவன் கடுவேகமாய்க் கணை தொடுத்துக் கண்ட துண்டகளாக்கினன்.

முதலில் ஏவிய கொடிய பகழியையும், அடுத்து வீசிய நெடிய வேலையும் ஒருங்கே துணித்து வீழ்த்தி வீடணனைப் பாதுகாத்து இலக்குவன் உக்கிர வீரமாய் முன் வந்து நின்றது அதிசய வெற்றியாய் விளங்கியது ஆதலால் அதனை யாவரும் துதி செய்து நின்றனர். வீடணன் சாகவேண்டும் என்று வேகமாய் வேலை செய்த மேகநாதனும் இளையவன் ஆற்றிய வேலையைக் கண்டு வியந்து வெகுண்டு மயங்கி மருண்டு நின்றான்.

கணை தொடுத்தது.

அக்கணை அசனி என்ன அன்றெனா ஆலம் உண்ட
முக்கணன் சூலம் என்ன முடுகிய முடிவை நோக்கி
இக்கணத்து இற்றான் இற்றான் என்கின்ற இமையோர் காணக்
கைக்கணை ஒன்றால் வள்ளல் அக்கணை கண்டம் கண்டான். (1)

வேல் விடுத்தது.

கோல் ஒன்று துணிதலோடும் கூற்றுக்கும் கூற்றம் அன்னான்
வேல் ஒன்று வாங்கி விட்டான் வெயில் ஒன்று விழுவது என்ன
நால் ஒன்று மூன்றும் ஆன புவனங்கள் நடுங்க லோடும்
நூல் ஒன்று விதி வலானும் அதனையும் நுறுக்கி வீழ்த்தான்.
(நிகும்பலைப்படலம்)

சிறிய தந்தை என்றும் பாராமல் கொடிய கோபத்தோடு இந்திரசித்து கொலை செய்ய மூண்டுள்ளதை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம். உள்ளக் கொதிப்பு கொல்ல மூண்டது.

நியாயமான முறையில் நேர்மையாய் நேரே நீதி நெறிகளைக் கூறுகின்ற வீடணனுக்கு இந்திரசித்து ஏதேனும் விரைந்து கேடு

செய்வான் என்று நாடியறிந்து முன் எச்சரிக்கையா இலக்குவன் வில்லோடு அயலே மருமமா நின்றிருந்த நிலையை நிகழ்ந்துள்ள செயல்கள் இங்கே நன்கு விளக்கி நிற்கின்றன.

அவன் எவிய அம்பும் வேலும் அதிசய ஆற்றல்களுடையன. எவரையும் கொல்ல வல்ல வர பலங்களோடு கூடி வந்தன. அவை வீடணன் மேல் ஓடி வரவே யாவரும் அஞ்சி அலமந்தனர். இக்கணத்து இற்றான் இற்றான் என இமையவர் பதறி அலறியிருத்தலால் அக்கணையின் வலியையும் நிலையையும் தெளிவாக அறிந்து கொள்ளுகிறோம். இறுதல் = முடிவாய் அழிதல்.

வீடணனுடைய உயிரைப் பருகும்படி உருத்து வந்த அக்கணையை இலக்குவன் கடுத்துத் துணித்தது இக்குலவீரனது கர வேகத்தையும் சர வேகத்தையும் காட்டி நின்றது. அடுத்து வந்த வேலையும் கண்ட துண்டங்களாக்கிக் கதி வேகம் காட்டவே அக்காட்சியை நோக்கிய அமரர் யாவரும் அதிசய பரவசராய்த் துதி செய்து இந்த வீரக் குரிசிலை வியந்து புகழ்ந்து போற்றினர்.

தனது உரிய அன்பன் உயிரைப் பரிவோடு இளையவன் பாது காத்தருளியது பெருமகிமையாய் விளங்கியது. இந்த அதிசய வீரன் ஆபத்தில் காத்தருளியது இந்திரசித்துக்குக் கோபத்தையும் தாபத்தையும் மூட்டின; குறி தவறியதே என்று பரிதாபமாய்ப் பதைத்தான். அவனது நிலை அவலமாய் நின்றது.

வீடணன் வெகுண்டு புரிந்தது.

இதமாய் இனிய அறநெறிகளைப் பேசிக் கொண்டிருக்கும் போது தன்னைக் கொடுமையாய்க் கொல்ல மூண்டானே! என்று வீடணன் உள்ளம் கொதித்து ஒல்லையில் பாய்ந்து மேகநாதனுடைய தேரையும் சாரதியையும் வேகமாய்ச் சிதைத்து ஒழித்தான். சாதுபோல் அமைதியாய் நின்றவன் கோபா வேசத்தால் நேரே தேர் மேல் மூண்டு பாய்ந்து தண்டாயுதத்தால் தாக்கவே பாகனோடு பரிகளும் ஒருசேர மாண்டன. ஏறியிருந்த இரதம் அழிந்து விழவே இந்திரசித்து சீறிச் சினந்து அம்புகளைச் சொரிந்தான்; வானில் மறைந்தான். மான வீரங்களோடு மறுகி நின்று பாணங்களை வாரி வீசினான். ஆகாயத்திலிருந்து அதிவேகமாய் வந்து பாய்ந்த அந்த அம்புகளால் கீழே நின்றவர் துன்பங்

கள் அடைந்தனர். யாது செய்வது என்று தெரியாமல் இலக்குவன் முதலாயினோர் அலமந்து நிற்பதைக் கண்டு இந்திரசித்து சிந்தை களித்துத் தெளித்து அந்தரவாசிகள் யாவரும் அஞ்சி அயர வானில் இருந்தபடியே இலங்கைநோக்கிப் போனான்.

விபீடணன் விளைத்தது.

கோல்கொடு கொல்லல் உற்றான் என்றுஒரு வெகுளி பொங்கக்
கால்கொடு காலிற்கூடிக் கைதொடர் கனகத் தண்டால்
கோல்கொளும் ஒருவனோடும் கொடித்தடந் தேரில் பூண்ட
பால்கொளும் புரவி எல்லாம் படுத்தினான் துடிப்பு மாற. (1)

இந்திரசித்து இழைத்தது.

அழிந்ததேர் மீது நின்றான் ஆயிர கோடி அம்பால்
பொழிந்து அவன் தோளின் மேலும் இலக்குவன் புயத்தின் மேலும்
ஒழிந்தபேர் உரத்தின் மேலும் உதிரநீர் வாரி யோதம்
அழிந்திழுந்து ஓட நோக்கி அண்டமும் இரிய ஆர்த்தான். (2)

மாறிப் போனது.

ஆர்த்தவன் அனைய போழ்தின் அழிவிலாத் தேர்கொண்டன்றிப்
போர்த்தொழில் புரியலாகாது எனபதோர் பொருளை யுன்னிப்
பார்த்தவர் இமையா முன்னம் விசும்பிடைப் பாய்ந்தான் என்னும்
வார்த்தையை நிறுத்திப் போனான் இராவணன் மருங்கு சென்றான்.
(நிகும்பலை, 179-181)

போர்க்களத்தில் இறுதியில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை இவை வார்த்துக் காட்டியிருக்கின்றன. யாரோடும் போராடாமல் யாண்டும் பொறுமையாய் நின்று வந்த விபீடணன் ஈண்டு மூண்டு முனைந்து பொருதிருப்பது நீண்ட வியப்பை விளைத்து நின்றது. கொடுமையாய்த் தன்னைக் கொல்ல மூண்டானே என்று கோபம் மூண்டமையால் மேகநாதன் மீது வேகமாய்ப் பாய்ந்து இந்த விவேகி வீரமா வேலை செய்ய நேர்ந்தான்.

தண்டால் படுத்தினான் துடிப்பு மாற என்றதனால் விபீடணன் கையில் தண்டாயுதம் எப்பொழுதும் வைத்திருந்தமை தெரிய வந்தது. போர் முறைகளையும் நன்கு பயின்று வந்திருக்கிறான்; அரசர் குடியில் பிறந்தவன் ஆதலால் அந்த மரபுக்குரிய வீறும் போரும் வீரத்திறல்களும் இயல்பாகவே இவனிடம்

அமைந்திருந்தன; உறுதி ஊக்கங்கள் நிறைந்த அந்தப் போர் இயல்புகள் இங்கே வெளியாய் நின்றன. அன்று இவன் கையில் வைத்திருந்த தண்டம் சிறந்த தங்கப்பூண் அமைந்தது ஆதலால் கனகத் தண்டம் என அதன் தலைமையும் நிலைமையும் காண வந்தன. ஞானசீலன் என ஞாலம் புகழ்ந்து வர நின்றவன் ஈண்டு மானவீரனாய்ப் போரில் உயர்ந்து விளங்கினான்.

இவ்வீரன் மூண்டு மோதிய போது பாகனும் பரிகளும் மாண்டு விழுந்தன; சாரதியை இழந்து தேர் நிலை குலைந்தாலும் இந்திரசித்து நிலை குலையாமல் அந்தத் தேர்த்தட்டில் நின்று கொண்டே பாணங்களை வாரிச் சொரிந்து வீரகர்ச்சனை புரிந்தான். வீறோடு விரைந்து எய்த அந்த அம்புகள் நேரே வேகமாய்ப் பாய்ந்து வீடணனையும் இலக்குவனையும் ஊடுருவிப் போயின. இருவருடைய உடல்களிலிருந்து பெருவரவாக உதிரங்கள் பாயவே அனைவரும் மறுகிப் பருவரலடைந்தனர்.

நேரே போராடி நின்ற இந்திரசித்து வெற்றிக் களிப்போடு ஆரவாரம் செய்தான். ஏறு தேர் இன்றி இனிமேல் போராடினால் இலக்குவன் நீறு செய்து விடுவான் என்று நினைந்து விரைந்து விசும்பில் மறைந்தான். காய மறைவு மாயமாய் நிகழ்ந்தது.

இமையா முன்னம் விசும்பிடைப் பாய்ந்தான்.

மேகநாதன் வேகமாய் வானில் மறைந்து நின்ற காட்சியை இது வரைந்து காட்டியுள்ளது. கண் இமைத்து விழிக்கு முன்னரே விண்ணில்விரைந்து பாய்ந்துஒளித்தது வியப்பைவிளைத்தது.

அவனுடைய வீரத்திறலும், வில்லாண்மையும், தந்திரயுக்தியும் மந்திரசித்தியும் அதிசய நிலையின. விண்ணில் ஏறியவுடன் விண்ணவர் யாவரும் வெருவி விலகினர். மண்ணில் நின்றவரும் மறுகி மயங்கினர். கண்ணில் தெரியாமல் கரந்து நின்றான்.

இருமுறை வானில் மறைந்து நின்று நாக பாசத்தாலும் பிரமாஸ்திரத்தாலும் உயிர்க்கேடுகள் புரிந்து கொடிய துயரங்களை விளைத்தவன் ஆதலால் இந்த முறை இந்திரசித்து ஆகாயத்தில் மறைந்த போது வானர வீரர்கள் மிகவும் சிந்தை கலங்கினர்; சிந்தனைகள் செய்தனர். "கொடிய மாயாவி ககனத்தில் கடிது மறைந்து போயுள்ளான்; நெடிய குடிகேடுகளை நேரே செய்து

விடுவான்; போராடல் நீங்கிப் புறமே போனான் என்று எளிதாக எண்ணி நாம் ஏமாந்து நிற்கலாகாது; இரண்டு தடவை அவன் செய்த மாயத்தீமையால் ஒருங்கே செத்து வீழ்ந்தோம்; தெய்வாதீனமாய்த் தப்பிப் பிழைத்தோம்; இப்பொழுது அவனைத் தப்பாமல் கொன்று தொலைக்க வேண்டும்; கொல்லாமல் கைவிட்டால் வெற்றி எல்லாம் அவனுக்கே ஆம்; ஒல்லையில் ஊக்கியருளுங்கள்" என்று வானரத் தலைவர்கள் இலக்குவனை அணுகி யான வீரங்களோடு முறையிட்டு நின்றனர். அந்த வில் வீரனும் ஆவதை ஆராய்ந்து எதிரி சாவதையே குறிக்கொண்டு தறுகண்மையோடு நின்றான். அந்நிலை அதிசயமாத் துலங்கியது.

இந்திரசித்து இலங்கை புகுந்தது.

தேர் அழிந்ததும் எல்லையில்லாத அம்புகளை வாரிச்சொரிந்து வில்லோடு வானில் விரைந்து மறைந்த இந்திரசித்து நேர்ந்த நிலைகளை எல்லாம் நினைந்து நினைந்து நெஞ்சம் கனன்றான். கருதிச் செய்த யாகம் கைகூடவில்லையே! என்று பெரிதும் மறுகினான். உறுதி ஊக்கங்கள் குறைந்தன; உள்ளக் கவலைகள் நிறைந்தன. இளைய பெருமாளுடைய வில்லாடலையும் வல்லாண்மையையும் எண்ணி வியந்து எதிர்வதை நினைந்து இரங்கி யுளைந்தான். எல்லா நிலைமைகளையும் தன் அருமைத் தந்தையிடம் போய் உரிமையோடு சொல்ல வேண்டும் என்று உள்ளம் துணிந்தான். அந்த நெஞ்சத்துணிவோடு நேரே விரைந்து இலங்கைக்குச் சென்றான்.

கீழே போர்க்களத்தில் நின்ற வானர சேனைகள் மேலேயிருந்து யாது விளையுமோ? என்று அதிக எச்சரிக்கையோடு வானை நோக்கி ஆயத்தமாய்நிற்க மேகநாதன் மேகமண்டலத்திலிருந்த படியே ஊரை நோக்கி வேகமாய்ப் போனான்; அப்போக்கு போரை நோக்கிய உபாயமாய்ப் பொலிந்து நின்றது.

இலங்காபுரிக்குச் சென்றவன் தனது மாளிகைக்குப் போகாமல் இராவணனிடம் நேரே போனான். இந்தக் கோமகன் அரண்மனை வாசலை அணுகிய பொழுது காவலாளிகள் யாவரும் கைதொழுது விலகி நின்றனர். மெய்முழுதும் சோரி நீர் சோர உள்ளே வந்த மைந்தனைக்கண்டதும் இலங்கைவேந்தன் உள்ளம் கலங்கினான். உரிமை மீதூர்ந்து உற்றதை ஓர்ந்து உசாவினான்.

மைந்தன வந்தது.

விண்ணிடைக் கரந்தான் என்பார்; வஞ்சனை விளைக்கும் என்பார்;
கண்ணிடைக் கலக்கம் நோக்கி ஐயுற வுழக்குங் காலை
புண்ணிடை யாக்கைச் செந்நீர் இழிதரப் புக்கு நின்ற
எண்ணுடை மகனை நோக்கி இராவணன் இனைய சொன்னான். (1)

தந்தை வினவியது.

தொடங்கிய வேள்வி முற்றும் பெற்றிலாத் தொழில் நின் தோள்மேல்
அடங்கிய அம்பே என்னை அறிவித்தது; அழிவில் யாக்கை
நடுங்கினை போலச் சாலத் தளர்ந்தனை கலுழன் நண்ணப்
படங்குறை அரவம் ஒத்தாய்! உற்றது பகர்தி என்றான். (2)

போரிலிருந்து மீண்டு வந்து தன்னைக் கண்ட இந்திரசித்தை இன்னல் யாதும் காணமல் இராவணன் வினவி யிருக்கிறான். நிலைமையை நேரே பார்த்தும் நெஞ்சம் கலங்காமல் இருந்தது அவனது இயல்பான அஞ்சாத திண்மையை அறிவுறுத்தி நின்றது. வயிரம் பாய்ந்த வன்னெஞ்சு துயரம் காணதிருந்தது.

செந்நீர் இழிதரப் புக்கு நின்ற மகன் என்றது அங்கே வந்து நின்ற இந்திரசித்தின் நிலைமையை விழி நீர் சொரிய விளக்கி நின்றது. செந்நீர் = இரத்தம். சிவந்த நிறமாய் இருத்தலால் அதற்குச் செந்நீர் என்று பெயர் வந்தது. உடலுக்கு உயிராதார மாயிருப்பது இரத்தமே; அது வெளியே கழிந்து போனல் உயிர் தளர்ந்து படும். சீவசத்து கழிய ஆவலித்து அடைந்தான்.

உயிர் நிலையமான செந்நீர் இழிதர வந்தான் என்றது போரில் நேர்ந்த அழிதுயரங்களைத் தெளிவாக்கி நின்றது. இலட்சுமணனுடைய பாணப் பிரயோகங்கள் இந்திரசித்தின் உடலைத் துளைத்திருக்கின்றன; அந்தப் புழைகளின் வழியே உதிரங்கள் ஒழுகியுள்ளன. புண்ணீர் சோர வந்த அருமை மகனைக் கண்டு கண்ணீர் சோராமல் கடு மனமுடையனய் இராவணன் கதித்திருந்து குலத்தின் கொடுமையை நெடிது துலக்கி நின்றது.

உதிரம் ஒழுக வந்தது உண்மை தெளிய.

தன் உடலில் இருந்து செந்நீர் இழிதர அடலாண்மையோடு இந்திரசித்து தந்தை எதிரே வந்தது எந்த வகையிலாவது அவன் சிந்தை தெளிந்து உய்ய வேண்டும்என்று கருதியேயாம். நேரே

தன் மாளிகைக்குப் போய்ப் போரில் நேர்ந்த இரத்த ஒழுக்கு களைக் கழுவிச் சுத்தம் செய்து வேறு உடைகள் புனைந்து அதன் பின் வந்து தந்தையைப் பார்த்திருக்கலாம். அவ்வாறு செய்யாமல் இவ்வாறு செய்தது இனிமேல் எவ்வாருயினும் எதிரியை வெல்ல முடியாது என்பதைச் சொல்லாமல் சொல்லவே யாம். பல வழிகளிலும் மூண்டு பொருது முடிவு கண்டவன் ஆதலால் முடிவாக இப்படி முடிவு செய்து வந்தான். அனுபவ அறிவு தனியான துணிவை இனிது நல்கியது. யாண்டும் காணுத அதிசய ஆற்றலை மூண்ட போர் தோறும் இலக்குவனிடம் நேரே கண்டு கொண்டான் ஆதலால் நெஞ்சம் தெளிந்து வேறே உறுதி செய்து கொண்டான். அமரர் அசுரர் முதல் எவரையும் அலமர வென்று அதிசய வீரனுய் உலகம் துதி செய்ய நின்றவன் இளவல் எதிரே பல முறையும் அளவில்லாத துயரங்களை அனுபவிக்க நேர்ந்தான்.

போரில் பட்டபாடுகள் நல்ல போதனைகளை அவனுக்கு நேரே போதித்தருளின. தந்தையார் எப்படியாவது சிந்தை தெளிந்து பகைமை ஒழிந்து சேமமாய் வாழ வேண்டும் என்றே ஆழமான எண்ணத்தோடு அவன் மீண்டு வந்தான். அந்த வரவில் இந்தவாறு உபாயம் சூழ்ந்து அபாயம் நீங்க ஆங்கு வந்தான்.

எண்ணுடை மகன்.

என்று இந்திரசித்தை ஈண்டு இவ்வாறு குறித்துக்காட்டியது கூர்ந்து சிந்திக்கத்தக்கது. வீரமகன், வெற்றி மகன் என மேன்மையாய் விளங்கி வந்தவன் ஈண்டு எண்ணுடை மகன் என இலங்கி நின்ருன். விண்ணுடை யாரையும் உடைய வென்றவன் எண்ணுடையான் என அடைய வந்தான்.

பகைவர் வலியையும், தங்கள் காலகதியையும், மூண்டுள்ள துயர்களையும் எண்ணி யுணர்ந்து உய்திகாண விரைந்து வந்துள்ளவன் ஆதலால் எண்ணுடை மகன் என எண்ண நேர்ந்தான். தமக்கு யாரும் நிகர் இல்லை; அமரரும் பணிய ஆட்சி புரிகின்ருேம்; தேவர் யாவரையும் வென்று அடக்கிய நாம் மனிதரை எளிதே கொன்று தொலைத்து விடலாம் என்று இதுவரை எண்ணி இறுமாந்து வந்த உறுதிநிலை முழுதும் இன்று உடைந்து

போயது; அவ்வாறு உடைந்த அவ் உடைவை நுண்ணிதாக எண்ணி உணர எண் உடை மகன் என எண்ணி உரைத்தார்.

அரிய வில்லாளி; பெரிய போர் வீரன் என்று எல்லாவுலகங்களும் எண்ணி மதித்து ஏத்திவர இசைபெற்று வந்தவன் என்பதும் எண்ணுடை மகன் என்பதால் தோற்றி நின்றது. அந்த எண்ணமும் மதிப்பும் இழந்து போரில் இழிந்து உள்ளமும் ஊக்கமும் உடைந்து ஊருக்கு மீண்டு வந்த இந்திரசித்தை நேருக்கு நேரே கண்டு இராவணன் நெஞ்சம் தளர்ந்து உசாவினன்.

வினவிய நிலை.

"நிகும்பலையில் நீ தொடங்கிய வேள்வி முடியவில்லை என்று தெரிகின்றது. தடையான இடையூறுகள் பல கொடிதாய் நேர்ந்துள்ளன என்பதை உன் தோளில் பாய்ந்துள்ள அம்பின் குறிகளே நன்கு சொல்லுகின்றன; யாரும் அறியாதபடி மிக்க எச்சரிக்கையாய்த் தக்க சேனைப் பாதுகாப்போடு யாகத்தைச் செய்ய நேர்ந்தாய்; அதிமருமமா மறைந்து புரிந்த அந்தக் கருமத்தை யாரேனும் அறிந்து கொண்டாரோ? அவகேடுகள் எப்படி விளைந்தன? யாண்டும் தளராத நீ இது பொழுது மிகவும் நொந்து வந்துள்ளாய்; அங்கே நடந்தது என்ன? நிலைமைகளைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்; யாதும் ஒளியாமல் உற்றதையெல்லாம் உரைத்தருள்!" என்று இவ்வாறு இலங்கை வேந்தன் கேட்கவே இந்திரசித்து யாவும் முறையே சொல்ல நேர்ந்தான். எல்லாம் உங்கள் தம்பி செய்த வேலையே நான் அடைந்த அல்லல்களுக் கெல்லாம் மூலகாரணம் என்று உள்ளம் கனன்று அவன் உரைத்த மொழிகள் உணர்ச்சியின் ஒளிகளாய் வெளி வந்தன. தந்தை சிந்தை தெளிய விளப்பினன்.

இந்திரசித்து இயம்பியது.

சூழ்வினை மாயம் எல்லாம் உம்பியே துடைக்கச் சுற்றி
வேள்வியைச் சிதைய நூறி வெகுளியால் எழுந்து வீங்கி
ஆள்வினை ஆற்றல் ஆற்றான் அமர்த்தொழில் தொடங்கி யார்க்கும்
தாழ்விலாப் படைகள் மூன்றும் தொடுத்தனன் தடுத்து விட்டான் (1)

நிலம்செய்து விசும்பும்செய்து நெடியவன் படை நின்றானை
வலம்செய்து போவதானால் மற்றினி வலியது உண்டோ?

குலம்செய்த பாவத் தாலே கொடும்பகை தேடிக் கொண்டோம்
சலம்செயின் உலகம் மூன்றும் இலக்குவன் முடிப்பன் தானே.

முட்டிய செருவின் முன்னம் முதலவன் படையை முன்பா
விட்டிலர் உலகை அஞ்சி ஆதலால் வென்று மீண்டேன்
கிட்டிய போதும் காத்தார் இன்னமும் கிளர வல்லார்
சுட்டிய வலியி னாலே கோறலைத் துணிந்து நின்றார். (5)

ஆதலால் அஞ்சினேன் என்று அருளலை ஆசைதான் அச்
சீதைபால் விடுதி ஆயின் அனையவர் சீற்றம் தீர்வர்;
போதலும் புரிவர் செய்த தீமையும் பொறுப்பர் உன்மேல்
காதலால் உரைத்தேன் என்றான் உலகெலாம் கலக்கி வென்றான்.

[இந்திரசித்துவதை 5-6]

போரிலிருந்து மீண்டு வந்த இந்திரசித்து தந்தையை நேரில் கண்டு அங்கே நேர்ந்த நிலைகளையெல்லாம் ஓர்ந்து உணர்ந்து உய்தியுறுமாறு தன் உள்ளத்தைத் திறந்து இவ்வாறு உரையாடியிருக்கிறான். பரிதாப நிலையில் உரைகள் மறுகி வந்துள்ளன: "என் அருமைத் தந்தையே! நான் நிகும்பலையில் மருமமாய் வேள்வியை முடித்து விடலாம் என்று கருமமே கண்ணாய்க் கருதிச் செய்தேன்; பக்கத்துணையாய்ச் சேனைகள் தக்க நிலையில் பாதுகாத்து நின்றன; யாகம் முக்கால்வாசி முடிவாகி வந்தது; உங்கள் தம்பி எப்படியோ இந்த மருமத்தை அறிந்து போய் எதிரிகளிடம் உரைத்து விட்டார்; உடனே வானரசேனைகளோடு வந்து இலக்குவன் என்னை வளைத்துக் கொண்டான்; படைகள் வளைந்து கொண்டாலும் வேள்வியை விரைந்து முடித்து விடலாம் என்று முயன்று பார்த்தேன்; முடியவில்லை; பின்பு போருக்கு மூண்டு எழுந்தேன்; நேருக்கு நேராய் இலக்குவன் எதிர்ந்து பொருதான்; சூழ்ந்து போராடிய வானரங்களையெல்லாம் தொலைத்து வீழ்த்தி ஆழ்ந்த கவனத்துடன் அவ் வீரனோடு போராடினேன்; அவனுடைய வில்லாடல்கள் எல்லையில்லாத அதிசய சாகசங்களாய் எவ்வழியும் வீறுகொண்டு விளங்கி நின்றன; யாரிடமும் காணாத வீர விளையாடல்களை அவனிடமே கண்டேன்; அந்த அற்புத வேலைகளைக் காணுந்தோறும் நான் அதிசயமே கொண்டேன்; அரிய போர் வீரர் என வெளிவருகின்ற தீரர் எவரும் அவன் எதிரே எளிய பேடிகளாய் இழியவே நேர்

வர்; எனது இயல்பான அருந் திறலாண்மையோடு மூண்டு பொருதும் முடிவு யாதும் காணாமையால் முடிவில் தேவதேவ ரான மூவர் அருளால் பெற்ற அம்புகளை மந்திர முறையோடு தொடுத்து விடுத்தேன்; யாராலும் தடுக்க முடியாத அந்தத் தெய் வாஸ்திரங்களை அவன் எளிதே தடுத்து ஒழித்தான்; பாசுபதமும் பிரமாத்திரமும் சக்கரமும் பயனிழந்து போகவே நான் படுதுய ருழந்தேன். உக்கிர வீரமான போராடலில் நேர்ந்த ஓர் அதிசயம் இன்னமும் என்னை மதிமயங்கச் செய்துள்ளது; காப்புக் கடவு ளான திருமாலிடம் பெற்ற ஆழிப் படையை அவன் மேல் ஏவி னேன்; எவரையும் கொன்று வீழ்த்த வல்ல அது அவனை அணு கியதும் வலமாகச் சூழ்ந்து வந்து நேரே நெடிய சோதியை வீசி மேலே விரைந்து எழுந்து மறைந்து போயது. கண்ணார நேரே நிகழ்ந்த அந்தக் காட்சியைக் கண்ட பின் மேலும் அவ னோடு போராட நேர்வது புலையாட்டமேயாம் என என் உள் ளம் நிலை நாட்டியுள்ளது. பாசுபதம் முதலிய திவ்விய ஆயுதங் கள் அவனிடம் உள்ளன; தனது சொந்த வீரத்திறலால் என்னை வெல்ல வேண்டும் என்று கருதியுள்ளமையால் எந்த விதமான தெய்வப்படையையும் என் மீது அவன் தொடுக்கவில்லை. அதை அவன் தொடுத்திருந்தால் என் உயிரை எடுத்திருப்பான். நான் ஈண்டு மீண்டு வந்திருக்க முடியாது; அவனது அதிசய ஆற்றல் மதி நிலை கடந்தது; தன்னந் தனியனாய் நின்று மூன்று உலகங்களையும் ஒரு நொடியில் ஒருங்கே அவன் வெல்ல வல்ல வன்; மேலும் விரித்து சொல்லுவது மிகை; குறிப்பு ஒன்றைக் குறித்துச் சொல்லுகிறேன்; நம் குலம் செய்த பாவமே கொடும் பகையாய் மூண்டுள்ளது; அமரரும் அடிதொழ அதிசய நிலையில் வாழ்ந்து வந்துள்ள நாம் அவல நிலையில் வீழ்ந்து தவிக்கின்றோம்; மூண்டுள்ள பகையால் நீண்ட அழிவுகள் நேருமேயன்றி மீண்டு நாம் இனிது வாழ முடியாது; எதிரியை இவ்வாறு வியந்து கூறு வதால் நான் பயந்து வந்ததாக நினைந்து கொள்ளலாகாது; நிலை மைகள் எல்லாவற்றையும் நேரே கூர்ந்து ஓர்ந்து அனுபவ அறி வால் ஆய்ந்து சொல்லுகின்றேன்; எந்தையே! சிந்தை தெளிந்து அருள்; இராமன் மனைவியாகிய சீதை மேல் தாங்கள் கொண்டு ள்ள ஆசையே நம் குலத்தை அடியோடு நாசம் செய்ய மூண் டுள்ளது; நேர்ந்துள்ள கொடிய அழிவுகளுக்கெல்லாம் மூல

காரணம் அதுவே; ஆதலால் அரசர் பெரும! அந்தத் தீய ஆசையை விட்டு விடுங்கள்; தங்கள் உள்ளத்திலிருந்து அது ஒன்று ஒழியின் பின்பு இன்ப வெள்ளத்தை நாம் கண்டு மகிழ்வோம்; மண்டி நின்ற பகை பழி பாவம் யாவும் பறந்து போம்; நம்மைக் கொன்று தொலைக்க வென்றி வீறோடு மூண்டு நிற்கின்ற பகைவரும் ஒல்லையில் மீண்டு போவர்; பண்டு போல் எல்லா மேன்மைகளும் நன்மைகளும் நாம் எய்தி வாழலாம்; தங்கள் பால் உள்ள உழுவலன்பால் என் உள்ளம் உருகி இந்த உரைகள் வந்துள்ளன; உறுதி நிலைகளை ஓர்ந்து உடனே சமாதானத்துக்கு இசைந்தருளுங்கள்" என்று இன்னவாறு இந்திரசித்து தந்தையிடம் அந்தரங்க வுரிமையோடு கூறி நின்றான்.

யாண்டும் யாதும் பணியாத அதிசய வீரன் ஈண்டு இவ்வாறு மனம் உடைந்து பேசியிருக்கிறான். உரைகள் அவனுடைய உள்ளத் துயரங்களை நிறை செய்து காட்டுகின்றன. பல வகையிலும் மூண்டு போராடி முடிவு கண்டமையால் முடிவில் இவ்வாறு நெடிது இரங்கி அவ்வீரன் நேரே உரைக்க நேர்ந்தான்.

முன்னம் நின்ற நிலை.

எதிரிகளை முன்னம் மிகவும் எளிதாக எள்ளி இகழ்ந்து உள்ளச் செருக்கோடு ஊக்கி நின்றான்; தேவர் யாவரையும் வென்றவன் ஆதலால் மனிதரையும் வானரங்களையும் துச்சமா எண்ணி உச்ச நிலையில் ஓங்கி யிருந்தான். அப்பொழுது செய்த மந்திராலோசனையில் அந்த இராச சபையில் நின்று தந்தையை நோக்கி இம்மைந்தன் பேசியிருக்கும் * பேச்சுக்கள் பெருமித நிலையில் பெருகி எழுந்தன. அவை இங்கே நன்கு சிந்திக்கவுரியன.

பகைவரை அடியோடு ஒரு நொடியில் வென்று வருகிறேன்; உடனே விடையருளுங்கள் என்று இராவணனிடம் இந்திரசித்து அன்று கூறிய உரைகள் வீரச் செருக்கோடும் வெற்றித்திறலோடும் வீறு கொண்டு சீறி வந்தன.

சொல்லிடை கழிக்கிலே சுருங்கிய குரங்கு என்
கல்லிடை கழித்த உருமிற் கடுமை காணும்

* இந்நூல் பக்கம் 3416, வரி 31 பார்க்க.

வில்லிடை கழித்த மிடல்வாளி வெருவித் தம்
பல்லிடை கிழித்திரிவ கண்டு பயன் உய்ப்பாய். (1)

குரங்குபட மேதினி குறைத்தலை படப்போர்
அரங்குபட மானுடர் அலைந்தலை படப் பேர்
இரங்குபடர் சீதைபட இன்று இருவர் நின்றார்
சிரம்குவடு எனக் கொணர்தல் காணுதி சினத்தோய்! (2)
(யுத்த, மந்திரப்படலம்)

மூண்டு வந்துள்ள குரங்குப் படைகளைக் கொன்று தொலைத்து, எஞ்சி நின்றவைகளெல்லாம் பல்லை இளித்துக் கொண்டு திசைகள் தோறும் சிதறி அஞ்சி ஓடும்படி செய்து, இராமன், இலட்சுமணன் என்னும் அந்த மனிதர் இருவருடைய தலைகளைக் கொய்து இரண்டு சிரசுகளையும் ஒருங்கே எனது இடது கையில் தூக்கிக் கொண்டு ஒல்லையில் வந்து உங்கள் முன்னிலையில் நான் வில்லும் கையுமாய் நிற்பதை நீங்கள் நேரே விழிகளிப்பக் காண்பீர்கள்; நேரத்தைக் கடத்தாமல் போருக்கு விடை தாருங்கள்! என்று அன்று வீரச் செருக்கோடு பேசினவன் இன்று உள்ளம் கலங்கி உறுதி குலைந்து பரிபவம் மீதூர்ந்து மறுகிப் பேசியிருக்கிறான். அனுமானுடைய சொல்லடியும், இலக்குவனுடைய வில்லடியும் இந்திரசித்தின் நெஞ்சைக் கலக்கி நிலை குலைத்துள்ளன; அந்த உண்மையை உரைகள் உணர்த்தி நிற்கின்றன. கொடிய தீவினையே முடிவாக வந்து மூண்டுள்ளது என நிலைமைகளையெல்லாம் நினைந்து இனைந்து நேரே முடிவுசெய்து நொந்துள்ளான்.

குலம் செய்த பாவத்தாலே
கொடும் பகை தேடிக் கொண்டோம்.

உள்ளம் சலித்து இந்திரசித்து இப்படிப் பேசியிருக்கிறான். இந்த வாய் வார்த்தை அவன் உள்ளத்தில் மூண்டுள்ள கொடிய துயரங்களையும் நெடிய அல்லல்களையும் நேரே வார்த்துக் காட்டியுள்ளது. பகையின் நிலையை நினைந்து மொழியாடியிருக்கிறான்.

பகை தேடிக் கொண்டாய்! எனத் தந்தையைத் தனியே பிரித்துச் சொல்லவில்லை; தன்னையும் உட்படுத்தித் தன்மைப் பன்மையில் கூறினான். குடும்ப மரியாதையோடு கெழுதகைமை தோய்ந்து பேசியுள்ளான். பேச்சில் பெருந்தன்மைமிளிர்கிறது.

பாவத்தால் பழியும் துன்பங்களும் வரும்;

புண்ணியத்தால் புகழும் இன்பங்களும் விளையும்.

அரக்கர் குலம் இரக்கம் இன்றி நீண்ட காலமாகச் செய்து வந்த பாவமே பலனுக்கு மூண்டு வந்துள்ளது; குலம் முழுவதும் நாசம் அடைய நேர்ந்திருக்கிறது; இந்த நிலையில் நல்ல யோசனைகளை நாடிச் செய்து ஒல்லையில் உய்தி பெறவேண்டும்; இல்லையேல் அழிவேயாம் எனத் தெளிவா உணர்த்தியிருக்கிறான்.

பழி பாவங்கள் இழிவுடையன; கொடிய அழிவுகளைத் தருவன என்று தெளிவுடையனாய் இந்திரசித்து இங்கே அவற்றை வெறுத்திருப்பது குறிப்பாய்த் தெரிய வந்தது. பல முறையும் மாய வஞ்சங்களைச் செய்தும் அவற்றால் யாதொரு பலனையும் காணவில்லை ஆதலால் தீயவை தீயினும் தீயன என வெறுக்க நேர்ந்தான். தீய செயல் தோல்வியும் துயரமுமே தரும்; வெற்றியும் மேன்மையும் அதனால் அடைய முடியா என்று முடிவாய் அறிந்து கொண்டான். அந்த அறிவால் அவநிலையை வெறுத்தான்.

" Never can any advantage be taken of nature by a trick. "
[Emerson]

" கபட வஞ்சனையால் யாதொரு நலனையும் யாரும் அடைய முடியாது" என அமெரிக்க அறிஞர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

கரவாய்த் தான் புரிந்த சதி மோசங்கள் தனக்கு நன்மை தர வில்லை; அதிகமான நாசங்களையே தந்தன ஆதலால் மாய வேலை செய்வது தீய வேதனையே என்று சிந்தை தெளிந்து கொண்டான். அந்தத் தெளிவினால் பழி பாவங்களை இகழ்ந்து நல்ல வழிகளைத் துலக்கித் தந்தைக்கு அறிவு கூறினான்.

போராட்டத்தில் அடைந்த அழி துயரங்கள் இந்திரசித்துக்கு விழி திறந்து நல்ல உணர்வொளி புரிந்துள்ளன. அல்லல்கள் நேர்ந்தபோது சீவர்கள் உள்ளம் திருந்தி நல்லது காண நேர்வர் என்பதை இந்த வில் வீரன் நிலை ஈண்டு விளக்கி நின்றது.

"Character is built in the storm and stress of the world."
[Hegel]

"உலக நெருக்கடியான பொல்லாத போராட்டத்தில் நல்ல தன்மை தோன்றுகிறது" என ஹீஹல் என்னும் ஜெர்மன் தேசத்துப் பேரறிஞர் இவ்வாறு நேர்மையாக் கூறியிருக்கிறார்.

நேரே நேர்ந்த துயர நிலைகளால் உள்ளம் திருந்தி உறுதி தேர்ந்து உரையாடி வந்த இந்திரசித்து தந்தையின் சிந்தை தெளியத் தனது அந்தரங்கநிலையை நன்கு அறிவுறுத்தினான். மூண்ட பகைமையை இகழ்ந்து எதிரியைப் புகழ்ந்து பேசியதால் தன்னைக் குறித்து மன்னன் பின்னமாக எண்ணி விடலாகாதே என்று உன்னி யுரைத்தான். பன்னிய உரை பரிவு தோய்ந்து எழுந்தது.

ஆதலால் அஞ்சினேன் என்று அருளலை.

இந்த வாசகம் அதிசய விநயமாய் வந்துள்ளது. மானச மருமங்கள் மருவி நிற்கின்றன. நெஞ்சில் நிகழ்ந்த ஐயம் நேரே செஞ்சொல் வழியாய்த் திறலோடு வெளியேறி வந்தது.

உலகம் மூன்றும் இலக்குவன் முடிப்பன் என்று பகைவனுடைய அதிசய பராக்கிரமத்தை வியந்து துதி செய்ததால் எதிரிகளோடு போராட அஞ்சியே மேகநாதன் விவேகமான நீதிகளை நேரே பேச நேர்ந்தான் என்று இலங்கை வேந்தன் எண்ணவும் கூடும் ஆதலால் அந்த வண்ணம் இழிவா எண்ணலாகாது என எண்ணியே இந்த வண்ணம் தெளிவா நிலைமையை விளக்கிப் பேசினான். அஞ்சாத தலைமையை எஞ்சாமல் வலியுறுத்தினான்.

ஆதலால் என்றது முன்னே பேசி வந்த வகைகளை எல்லாம் தொகையாகத் தொகுத்து அநுவாதம் செய்து வந்தது. வாத முறையில் பெரிய நியாயவாதிபோல் நியாயங்களைத் தலைக்கி நேரே வாதாடி யிருக்கிறான். அதிசய வீரனான இந்திரசித்து பேச்சிலும் பெரிய சதுரன் என்பதை இடங்கள் தோறும் முன்னே அறிந்து மொழிகளை வியந்து வந்திருக்கிறோம்.

இலக்குவன் எனும் பெயருக்கு இயைய இலக்குவன்களைக்கு ஆக்குவேன் எனச் சிலேடை திரிபு முதலிய இலக்கண வகையில் பேசியிருப்பது அவனது பேச்சுத் திறத்தில் ஒரு திறனாய் மருவி அருந்திறலாண்மைகள் பொருந்தி வந்துள்ளது.

வில்வீரமும் சொல்வீரமும் பல்வீரமும் மருவியிருந்தவன் வெல்வீரம் இழந்து அல்லல் மீதூர்ந்து வந்து தாதை எதிரே ஆதரவோடு அறிவுரைகள் கூறினான். அவ்வுரை முடிவில் தனது பெருமித நிலையையும் உறுதியாக நேரே தெரிய வுரைத்தான்.

அச்சம் என்பதை யாதும் அறியாதவன்; உச்சமான உக்கிரவீர நிலைகளில் பழகி வந்துள்ளவன் ஆதலால் தன் அஞ்சாமையைத் தந்தையின் நெஞ்சம் தெளிய விளக்கினான். நான் யோருக்கு அஞ்சவில்லை; பகைவர்க்கு அஞ்சவில்லை; யாருக்கும் அஞ்சவில்லை; ஆனால் பழிக்கு அஞ்சுகிறேன்; பாவத்துக்கு அஞ்கின்றேன்; இந்த உண்மையை உணர்ந்து உறுதி செய்தருள் எனப் பிதாவுக்குப் பிள்ளை இப்படிப் போதித்திருக்கிறான்.

அருளலை என்றது மருள் ஒழிந்து அருள் புரியும்படி பொருள் பொதிந்து வந்தது. எண்ணலை என்று சொல்லியிருக்கலாம்; அவ்வண்ணம் சொல்லவில்லை; அருளை மருவிச் சொல்லினான்; தந்தை பெரிய சக்கரவர்த்தி ஆதலால் அந்த அரிய இராச மரியாதையை யாரும் தெரிய உரிய தனையனும் பேசநேர்ந்தான்.

நல்ல குலமகன் தந்தையிடம் எப்படி நடந்து கொள்வான்? என்பதை இந்திரசித்து யாண்டும் நன்கு நடந்து காட்டியிருக்கிறான். தந்தை உள்ளம் உவந்து வர உரிமையோடு இனிது ஒழுகி வந்த மைந்தன் இங்கே உணர்வு நலன்களை உறுதியோடு உரைக்க நேர்ந்தான். அல்லல் யாவும் நீங்க நல்லதைநாடிமொழிந்தான்.

சீதைபால் ஆசை விடுதி.

இந்தப் போதனை பல சாதனைகளைக் கருதி வந்துளது.

நாமும் நம் குலமும் அடியோடு நாசம் அடைவதற்கு மூலகாரணமாய் மூண்டிருப்பது சீதைபால் நீங்கள் பூண்டுள்ள தீய ஆசையே; நீசமான அந்த ஆசையை உடனே ஒழித்து விடுங்கள் என்று பிழைக்கும் வழியைத் தெளித்தருளினான்.

இராமனுடைய தரும பத்தினி; கற்பரசி; அந்த உத்தமியை விரும்பியது கொடிய பாவம்; அதனால் நெடிய அழிவுகள் நேர்ந்தன என்று ஓர்ந்து உரைத்துள்ளது இதனால் உணர வந்தது.

சீதை இலங்கை புகுந்ததிலிருந்தே அரக்கர் எல்லாருக்கும் அழிதுயர்கள் புகுந்தன; அழகிய நகரமும் தீயில் எரிந்து திரும்ப எழுந்துள்ளது; இராச குடும்பமும் நாசமடைந்து வருகிறது; மேலும் கொடிய நாசங்கள் நெடிதாய் வளர்ந்து அரண்மனை வாசலை அணுகி நிற்கின்றன; யாவும் நுணுகி யுணர்ந்து உய்தி பெறுக; உய்திக்கு உரிய அரிய மருந்து கைவசமே உள்

னது. சீதை மேல் வைத்துள்ள ஆசையை விட்டு ஒழியுங்கள்; அதை ஒழியாது இருந்தால் நாம் அடியோடு அழிந்தே போவோம் என்று தெளிந்து மொழிந்தான். அழிவுக்கு உரிய மூல காரணத்தை விழி தெரிய விளக்கி அதனை விரைந்து ஒழிவு செய்ய வேண்டினன். மைந்தன் வேண்டுகோள் மதிநலமாய் வந்தது.

சீதைபால் கொண்டுள்ள என் ஆசையை நான் விட்டு விட்டால் மூண்டு நிற்கும் பகைமை நீங்கி விடுமா? போர் நின்று விடுமா? என்று இராவணன் கருதலாம் ஆதலால் அதற்குப் பதிலும் வந்தது. மனநிலையை எதிரறிந்து இனிது கூறினன்.

> அனையவர் சீற்றம் தீர்வர்;
> போதலும் புரிவர்; செய்த தீமையும் பொறுப்பர்.

இராம லட்சுமணருடைய பெருந்தகைமையை இந்திரசித்து எவ்வாறு உணர்ந்துள்ளான் என்பதை இதனால் தெரிந்து கொள்ளுகிறோம். போர் மூண்டதெல்லாம் சீதையை மீட்டவே; அந்தப் பத்தினியை விட்டுவிடின் அவ்வுத்தமர் உடனே கோபம் தீர்ந்து சமாதானம் அடைந்து மீண்டு போக நேர்வர்; நாம் செய்த தீமைகள் யாவும் பொறுத்தருளுவர்; என உரைத்தருளினன்.

சமாதான உடன்படிக்கையோ, நட்டஈடோ, அபராதமோ, அவமானமோ அவர் செய்ய மாட்டார்; சிறந்த பெருந்தகையாளர் ஆதலால் நாம் புரிந்துள்ள பிழைகளையெல்லாம் மன்னித்து நம்மைப் பெருமைப்படுத்தி விடுவர் எனச் சமாதானத்தின் இனிமையைத் தெளிவாக விளக்கினன். மூண்கொண்டு மூண்டு நில்லாமல் எப்படியாவது சமாதானத்துக்குத் தன் தந்தை இசைந்துவிட வேண்டும் என்று இம்மைந்தன் அரண் கொண்டு நேர்ந்து ஆதரவு மீதூர்ந்து பேசியிருக்கிறான்.

இராமன் பெரிய போர்வீரன் ஆயினும் பேரருளாளன்; தரும நீர்மைகள் உடையவன்; நாம் செய்த பாவத் தீமையை நோக்கியே அவன் கோபம் மூண்டு நிற்கின்றான். பற்றிய பிழையை ஒழியவிடின் உற்ற சினந்தணிந்து திரும்பி அவன் ஊருக்குப் போய் விடுவான் என நேருக்கு நெஞ்சம் இசையுமாறு நேரே கூறி நின்றான். பொறுப்பர், தீர்வர், புரிவர் என்றது அவனது பொறுமை முதலிய அருமைப் பாடுகள் அறிய வந்தது.

எதிரியாய் ஈண்டுநண்ணியுள்ளவன் புண்ணியம்நிறைந்த கண்ணியவான்; அவனோடு பகையை வளர்க்காமல் நகைவகையாய்த் தாழ்ந்து போவதே நல்லது எனத் தந்தை சாந்தமுறும்படி சதுரோடு பேசினான். உள்ளம்கரைந்து இசைய வரைந்துகுறித்தான்.

காதலால் உரைத்தேன்.

இந்திரசித்து எந்த நோக்கத்தில் தந்தையை நோக்கி இதுவரை பேசி வந்தது என்பதை இந்த வாசகம் வரைந்து காட்டியுள்ளது. காதல் என்ற சொல் அன்பு கனிந்த ஆதரவுடையது.

போருக்குப் போக அஞ்சியோ, வேறு காரணங்களைக் கொண்டோ நான் இங்கே யாதும் பேசவில்லை; உங்கள் பால் என் உள்ளம் பூண்டுள்ள ஆசையினாலேயே சமாதானத்துக்கு இசைந்தருளும்படி இவ்வாறு பேச நேர்ந்தேன் எனத் தன்னுடைய பேச்சின் நிலைமையைத் தலைமையாக நினைவுறுத்தினான்.

சீதைபால் நீங்கள் வைத்த ஆசையை ஒழித்து விடுங்கள் என்றது நான் உங்கள் பால் வைத்துள்ள ஆசையினாலேயாம் என இவ் வீரமகன் விளக்கியிருப்பது வினயம் மிகவுடையது.

சீதையிடம் கொண்ட ஆசையை விடவில்லையானால் இராவணன் உயிரைவிட நேரும்; தந்தை அநியாயமாய் அழிந்து போகலாகாதே என்று மைந்தன் பரிதாபமாய்ப் பரிந்து பேசுகின்றான். அந்தப் பரிவு நிலை காதல் என வந்தது. தாதையிடம் இக் காதலன் கொண்டுள்ள காதல் அவனது சாதலை நினைந்து இங்கே நோதலுழந்து நொந்து மறுகி இந்தவாறு வந்துள்ளது.

பிதா பிள்ளை மீது கொண்டுள்ள வாஞ்சையைவிடப் பிள்ளை பிதாவின் மேல் வைத்துள்ள பாசம் பெரிது என்பது நன்கு தெரிய நேர்ந்தது. சீதை மேல் மூண்ட ஆசையை விடவில்லையானால் தந்தை நாசமாய் மாண்டே படுவார் என்ற நீண்ட துயரம் நெஞ்சை வருத்தவே நெடிது மறுகி மேகநாதன் விவேகமாய் ஈண்டு வேண்டி நின்றான். காலம் கருதிக் கடிது விரைந்தான்.

சீதையை விட்டுவிடு என இராவணனிடம் கும்பகருணன் முன்பு உறுதியாச் சொல்லியிருக்கிறான்; இந்திரசித்து என்றுமே அவ்வாறு சொல்லவில்லை; இன்றுதான் இங்கே இவ்வாறு சொல்ல நேர்ந்தான். போரிலே நேரில் கண்ட நிலைமைகளே இவனு

டைய நெஞ்சைக்கலக்கி இப்படிப் போதிக்கும்படி தூண்டின.

தன் தந்தை கொண்டுள்ள பெண்ணாசை குலத்தை நாசமாக்கிக் குடியைக் கெடுத்து முடி அரசை அடியோடு அழித்து விடும் என அறிந்து கொண்டான் ஆதலால் அந்த ஆசையை விட்டு ஒழி என்று இம் மைந்தன் ஆவலாய் வேண்டி நின்றான்.

சமாதானத்தைக் குறித்து யாதும் பேசாமல் இதுவரை வீரச்செருக்கோடு வீறு கொண்டிருந்தவன் இன்று நெஞ்சம் திருந்தி நீதிமுறை தெரிந்து இங்ஙனம் நேரே பேச நேர்ந்தான். இலங்கை வேந்தன் எதிரே இவ்வாறு பேசினவன் யார்?

உலகெலாம் கலக்கி வென்றான்.

இந்திரசித்தைக் குறித்துக் கவி இங்கே இவ்வாறு துலக்கியிருக்கிறார். குறிப்பும் துலக்கமும் கூரிய நோக்குடையன.

சிறைபிடித்த சீதையைக் கைவிட்டு விரைவில் சமாதானம் செய்து கொள்ள வேண்டும் என்று இராவணனிடம் உரையாடினவன் எத்தகைய நிலையினன் என்பதை இது உய்த்துணர வந்தது. அவனுக்கு இயல்பாக மேவியுள்ள பெயர்களுள் எதையும் குறியாமல் இதனைக் குறித்தது அவனது அதிசய ஆற்றலும் ஏற்றமும் தெரிய. தக்க இடத்தில் தகுதியை விளக்கினார்.

தேவர் தானவர் யாவரும் அஞ்சி நடுங்க அகில வுலகங்களையும் அடங்க வென்று வெற்றி வீரோடு விளங்கி வந்தவன் இன்று உள்ளம் உடைந்து உளைந்து பேச நேர்ந்தான். உலகங்களை எல்லாம் கலக்கி வென்றவன் உள்ளம் கலங்கி நின்றான் என அவனுடைய பண்டைய உயர்வையும் அன்றைய அயர்வையும்ஒருங்கே கண்டுகொள்ள ஈண்டு மருங்கோடு காட்டினார்

முன்னம் மூண்டிருந்த வீரத்திமிர் எல்லாம் மாண்டுபோய் எதிரியோடு இதமாய்ச் சமாதானம் செய்து கொள்ளும்படி வேண்டி நின்றான். அந்தக் குல மகனுடைய வேண்டுகோள் பலவகை நிலைகளையும் தாண்டி யாவும் இனிது விளக்கி நீண்ட கவலைகளோடு வந்தது; வந்தும் தந்தை சிந்தை தெளிய வில்லை

இராவணன் நிலை.

தனது அருமைத் திருமகன் உரிமையோடு கூறிய உறு

மொழிகளைப் பொறுதியாக் கேட்டும் ஒரு சிறிதும் திருந்தாமல் பெருமித நிலையில் இலங்கை வேந்தன் இறுமாந்து பேசினான். பிடிவாதமாய் மூண்டு அவன் பேசிய மொழிகள் பரிதாபமாய் நீண்டு அவனுடைய அழிவு நிலைகளை விழி தெரியச் செய்தன. நல்ல நீதிகளை நயமாச் சொல்லிய பிள்ளையை எள்ளி இகழ்ந்து உள்ளச் செருக்கோடு உருத்து நின்று கருத்து மாறி விருத்தமா அவன் கூறிய வீரிய உரைகளை அயலே காண வருகிறோம்.

இயம்பலும் இலங்கை வேந்தன் எயிற்றிள நிலவும் எய்தப்
புயங்களும் குலுங்க நக்குப் போர்க்கினி ஒழிதி போலாம்
மயங்கினை மனிதன் தன்னை அஞ்சலை வருந்தல் ஐய
சயங்கொடு தருவென் இன்றே மனிதரைத் தனு ஒன்றாலே. (1)

முன்னையோர் இறந்தோர்எல்லாம் இப்பகை முடிப்பர் என்றும்
பின்னையோர் நின்றார் எல்லாம் வென்றனர் பெயர்வர் என்றும்
உன்னை நீ அவரை வென்று தருதிஎன்று உணர்ந்தும் அன்றால்
என்னையே நோக்கி யான்இந் நெடும்பகை தேடிக் கொண்டேன்.

பேதைமை உரைத்தாய் மைந்த உலகெலாம் பெயரப் பேராக்
காதைஎன் புகழி னோடு நிலைபெற அமரர் காண
மீதெழு மொக்குள் அன்ன யாக்கையை விடுவது அல்லால்
சீதையை விடுவது உண்டோ இருபது திண்டோள் உண்டாய்.

வென்றிலன் என்ற போதும் வேதம் உள்ளளவும் யானும்
நின்றுளன் அன்றோ மற்றவ் இராமன் பேர் நிற்கு மாயின்
பொன்றுதல் ஒரு காலத்தும் தவிருமோ பொதுமைத் தன்றோ
இன்றுளார் நாளை மாள்வார் புகழுக்கும் இறுதி யுண்டோ? (4)

விட்டனன் சீதை தன்னை என்னலும் விண்ணோர் நண்ணிக்
கட்டுவ தல்லால் பின்னை யான்எனக் கருது வாரோ?
பட்டனன் என்ற போதும் எளிமையில் படுகிலேன் யான்
எட்டினோடு இரண்டு மாய திசைகளை எறிந்து வென்றேன். [5]

சொல்லிஎன் பலவும் நீநின் இருக்கையைத் தொடர்ந்து தோளில்
புல்லிய பகழி வாங்கிப் போர்த்தொழில் சிரமம் போக்கி
எல்லியும் கழித்தி என்னு எழுந்தனன் எழுந்து பேழ்வாய்
வல்லியம் முனிந்தால் அன்னான் வருகதேர் தருக என்றான். [6]

(இந்திரசித்து வதை 7-12)

இந்தப் பகுதி மிகுதியும் கவனிக்கத் தக்கது. பாடல்களை

ஊன்றி நோக்கி உள்ள நிலைகளை ஓர்ந்து கொள்ள வேண்டும். ஒரு அதிசய வீரனுடைய மனவுறுதியும் மானச மருமங்களும் இங்கே நன்கு தெரிய வந்துள்ளன. திருந்திய தெளிவோடு பரிந்து மொழிந்த மேகநாதனுடைய விவேக மொழிகளை இகழ்ந்து வெறுத்துத் தன் உள்ளத்திறலையும் உறுதி நிலைமையும் இறுதியாக அறுதியிட்டு இலங்கை வேந்தன் ஊக்கி உரைத்தான்.

" அப்பா! இந்திரசித்து நல்ல போர் வீரனை உன்னுடைய உள்ளம் இன்று கலங்கியுள்ளது என்று தெரிகின்றது; யாண்டும் கலங்காத குலமரபில் தலைசிறந்த குலமகனாய்ப் பிறந்திருந்தும் ஈண்டு நீ நிலை குலைந்து பேச நேர்ந்தது என் நெஞ்சை வருத்துகின்றது. அஞ்சாத ஆண்மை அயர்ந்தது அதிசயமாயது.

தேவர் யாவரையும் அஞ்சி நடுங்கச் செய்த நீ ஒரு மனிதனை அஞ்ச நேர்ந்தது எனக்கு மனவேதனையாய் வந்தது. இனிமேல் நீ போருக்குப் போக வேண்டாம்; அரண்மனையில் போய் ஆறுதலடைந்து இரு; கும்பகருணன் முதலாக முன்னே மாண்டு போன வீரர்களை நினைந்தோ, ஈண்டு நிறைந்துள்ள சேனைகளை எண்ணியோ, அல்லது நீ எதிரிகளை வென்று தருவாய் என்று கருதியோ, நான் இந்தப் பகையை நாடிக் கொள்ளவில்லை; எனது தோள் வலி ஒன்றையே துணையாக நம்பி இதனைத் துணிந்து ஏற்றுக் கொண்டேன்; அதிசய வீரனை எனக்கு இன்று நீ மதி நலம் கூற வந்தாய்; உனது கடமையை உணராமல் மடமையாய்ப் பேசினாய்; சீதையை விட்டு விடு என்று நீ சுட்டிச் சொன்னது உனது பேதைமையை விளக்கி நின்றது; நீர் மேல் குமிழிபோல் நிலையில்லாத எனது உடலை உயிரோடு விட்டாலும் சீதையை நான் விடமாட்டேன்; வென்றி வீரனோடு நின்று என்றும் அழியாப் புகழை அடைவனே அன்றி பழியடைந்து நில்லேன்; இராமனை வெல்ல முடியாமல் போரில் நான் மாண்டு மடிந்தாலும் எனக்கு நீண்ட புகழே உண்டாம்; அவன் பேர் உலகத்தில் நிலைத்திருக்கும் வரையும் என் பேரும் அதனோடு நிலவி நிற்கும்; சாதல் எல்லாருக்கும் பொது; அதனை யாரும் மீறி நிற்க முடியாது; பிறந்த அன்றே இறந்து படும் நிலையும் உடன் பிறந்து வந்துள்ளது; அழிந்து ஒழியும் பிறவிக்குப் பயன் என்றும் அழியாத புகழை அடைந்து கொள்வதேயாம்; பொன்

றும் உடலை உகுத்துப் பொன்றாப் புகழைப் பெற்றவரே என்றும் அழியாமல் வென்றி வீறோடு விளங்கி நிற்கின்றார்; மேலான அந்த விழுமிய நிலையை பேணி நிற்பனே அன்றிக் கீழான இழி நிலையில் யாதும் இறங்கேன்; எனக்கு இரங்கிப் பேசுவதாக உனக்கு இசைந்தபடி பேசுகின்றாய்; சிறை பிடித்து வந்த சீதையை எதிரிக்கு அஞ்சிக் கைவிட்டால் அது இழிந்த பழியாம்; அவ்வாறு செய்தால் யாவரும் சிரிப்பார்; தேவரும் எளிதா எள்ளி இகழ்வார்; செத்தாலும் மேன்மையோடு சாவனே அன்றிக் கீழ்மையா யிழிந்து சாகேன்; இன்று உள்ளார் நாளை மாள்வர்; புகழ் என்றும் அழியாது; அழியாத அதனையே யாண்டும் ஒழியாமல் தழுவி எனது உயிரை ஒழிப்பேன்; இனிமேலும் பேசுவது மிகை; உனது மாளிகைக்குப் போய் நீ சுகமே வாழுக; எனது ஆளுகையில் எல்லாரும் இனிது வாழ்ந்து வந்துள்ளனர்; நீயும் அந்த இன்ப வாழ்வில் திளைத்துப் பொழுதைச் சுகமாக் கழித்து முழுதும் போகியாய் இரு போ!'' என்று இவ்வாறு சொல்லிக் கொண்டே சிம்மாசனத்தை விட்டு விரைந்து எழுந்தான்; சேனாதிபதிகளைச் சீறி நோக்கினான்; "நான் நேரே போருக்குப் போக வேண்டும் எனது தேரைக் கொண்டு வரும்படி செய்க'' என்று வீறோடு வெகுண்டு கூறினான்.

இராவணனுடைய மனவுறுதியும் மான வீரங்களும் வாய் மொழிகளும் செயல்களும் அதிசய நிலைகளில் மருவியுள்ளன. இரும்பு மனிதன், வயிரம் பாய்ந்த நெஞ்சன் எனப் பெரும்பாலும் காரிய தீரர்களையும் அஞ்சா வீரர்களையும் யாண்டும் கூறி வருவது உண்டு. அந்தக் கூற்றுகளுக்கெலாம் ஏற்றங்கள் இங்கே தோற்றி நின்றன. இலங்கை வேந்தன் எவ்வழியும் யாண்டும் கலங்காத கண்டனாய்க் கடுமுரண் கொண்டு அடுமுரண் மண்டி நெடுந் தீமையில் நீண்டு நிலையாய் நிலைத்து நிற்கின்றான்.

போரிலிருந்து அரிதின் மீண்டு உதிரம் பாய்ந்த மெய்யனாய் நேரில் வந்து நிற்கிற மைந்தனைக் கண்டும் நெஞ்சம் யாதும் இரங்கவில்லை. அவல நிலையை அறிந்தும் கவலை அடையாது நின்றான்.

கலுழன் நண்ணப் படம் குறை அரவம் ஒத்தாய்! என உற்ற மகனுடைய நிலைமைக்கு உவமையும் கூறினான். கருடனைக் கண்ட பாம்பு பயந்து நடுங்கி அடங்கி ஒடுங்கி யிருத்தல் போல்

இலக்குவனைக் கண்ட இந்திரசித்து கலக்கமடைந்து மடங்கி வந்திருக்கிறான்; அந்த வரவு இந்த உரையால் அறிய வந்தது. யாண்டும் நிலை குலையாத மைந்தன் நிலை குலைந்து நெடுந்திகில் கொண்டு நேரே வந்து நேர்ந்துள்ள நிலைமைகளை உரைத்தும் நெஞ்சம் இரங்காமல் இருந்தது நிருதர்பதியின் நெடிய கொடுமையாய் நிலவி இறுதி முடிவை எதிரே விளக்கி நின்றது.

செல்வத் திமிர் பல்வகை மமதை அகங்காரம் ஆணவம் முதலிய தீமைகள் எல்லாம் உள்ளே ஓங்கியிருத்தலால் அருமை மகன் மறுகி உரைத்த உறுதி மொழிகளை ஒரு சிறிதும் மதியாமல் பெருமித நிலையிலேயே வீறுடு பேச நேர்ந்தான். அவனுடைய உரைகள் உள்ளத் திறல்களையும் உறுதி நிலைகளையும் அரிய பல ஆண்மைகளையும் அடலோடு உணர்த்தி வந்தன.

"நான் யாரையும் துணையாக எண்ணவில்லை: எனது தோள்வலி ஒன்றையே துணையாக நம்பியுள்ளேன்; எனக்கு இணையான எதிரியை நானே விரும்பி ஏற்றுக் கொண்டேன்; என்னுடைய சொந்த ஆற்றலால் அவனை வென்று தொலைத்து வெற்றி வீரனாய் விளங்குவனே அன்றி எந்த வகையிலும் எவரையும் எனக்கு உதவி புரியும்படி விரும்ப மாட்டேன். சிறந்த வில் வீரனை நீயும் பகைவரை வென்று தொலைத்து எனக்குப் பெரிய உதவிகள் செய்து விடுவாய் என்று நான் எண்ணி ஏமாறவில்லை. நீ மூண்டு பொருது மீண்டு வந்துள்ளாய்! மறுபடியும் போருக்குப் போக முடியவில்லையானால் ஊருக்குள் ஒதுங்கியிருக்க வேண்டும்; எனக்கு அறிவுரைகள் யாதும் நீ கூற வேண்டியதில்லை" என்று தீரமாய்ச் சொல்லி முடித்து மேலும் தன் உள்ளநிலையை உறுதியாய் அறுதியிட்டு உரைத்து நின்றான்.

யாக்கையை விடுவது அல்லால்
சீதையை விடுவது உண்டோ?

தன் உள்ளத்தில் இராவணன் உறுதி பூண்டிருக்கும் நிலையை இவ்வுரைகள் உணர்த்தியுள்ளன. சீதையை விடுதி என்று தனக்குப் புத்தி சொன்ன மகனுக்குத் தகப்பன் இப்படிப் பதில் சொல்லியிருக்கிறான். சீதையின் உருவமும் இராவணன் உடலும் இங்கே நேராய் நிறையாடி நிற்கின்றன. "ஏ இலங்கேசா! சீதையை விடுகிறாயா? அல்லது உன் உடலை விடுகிறாயா?"

என எமன் நேரே கேட்கிருன்; அதற்கு விடையாக என் உடலை விடுவேன்; சீதை விடேன் என்று எமனுக்கு எதிரே இராவணன் பதில் சொன்னபடியான ஓர் விநோதக் காட்சி ஈண்டு வெளியாயுள்ளது. அவனது ஆவல் ஆவியைக் காவு கொண்டுள்ளது.

என் உயிரை விட்டாலும் விடுவேன்; சீதை விடேன் என்று இராவணன் சொல்லியிருக்க வேண்டும்; அவ்வாறு சொல்லவில்லை; உடலைக் குறித்தே அடல் கூர்ந்து உரைத்தான்.

இராவணனுடைய உள்ளமும் உயிரும் சீதை மயமாகவே உள்ளன. கண் எல்லாம் நீர்; பேர் எல்லாம் நீர்; உரை எல்லாம் நீர்; உயிர் எல்லாம் நீர் என்று சீதையை நோக்கி இராவணன் பரிதாபமாய் முன் உருகி யுரையாடி யுள்ளமை ஈண்டு ஊன்றி உணரவுரியது. அவ்வாறு நீண்ட மையலாய் மால் கொண்டு மயங்கியுள்ளமையால் இவ்வகையில் இயம்பினன். சீதையைக் கண்டு களித்த உயிரைக் கைவிட இசையாமல் வெளி யுடலை வீசிவிட இசைந்தான். உடல் சடம்; சீதையின் அதிசய அழகை அது அறிந்து மகிழ முடியாது; ஆதலால் அந்த யாக்கையை விட்டு விட அவன் துணிவு கொண்டு பணிவு காணுது நின்றான்.

நான் செத்தாலும் சாவனே அன்றிச் சீதையை விட முடியாது என்பான் இந்த வகையில் சொல்ல நேர்ந்தான். தன் உயிரினும் சீதை இனியவள் என உருகி மறுகி வருதலால் அவளை விட முடியாது என்பதை வலியுறுத்த உடலை விடுவதாகத் தெளிவுறுத்தினன். உள்ளத்தின் ஆசை உரையில் ஒளி வீசியுள்ளது.

மீது எழு மொக்குள் அன்ன யாக்கை.

நீர்மேல் விரைந்து தோன்றி மறைந்து போகின்ற குமிழி போன்றது என உடம்பின் அழிவு நிலைமையை இங்ஙனம் தெளிய உரைத்தான். கோடிக்கணக்கான நீண்ட ஆயுளைப் பெற்று நெடிது வாழ்ந்து வந்தவன் கடிது முடிய மூண்டுள்ளமையால் இவ்வாறு மொழிய நேர்ந்தான். எவ்வளவு காலம் வாழ்ந்து வந்தாலும் என்றைக்காவது ஒரு நாள் மடிந்து மண்ணாய் மறைந்து போகின்ற யாக்கையை விரைந்து விடுவனே அன்றி நான் நோக்கிய பாக்கியவதியை அயலே யாதும் போக்கேன் எனத் தனது போக்கும் புலையும் நிலையாய்த் தெரிய ஊக்கி உரைத்தான்.

மாண்டு மடிந்தாலும் நான் பிடித்த பிடியை யாண்டும் தளரவி டேன் என்று அவன் நீண்டு நிமிர்ந்து நிற்கும் நிலை நெடிய திமி ராய் நின்றது. அழிய நேர்ந்தவன் அழியாமையை நினைந்தான்.

வென்றிலன் என்றபோதும் வேதம் உள்ளளவும் யானும் நின்றுளன்.

இலங்கை வேந்தன் கலங்காமல் எண்ணியுள்ளதை இது காட்டியுள்ளது. இராமனை வென்று வெற்றித் திருவோடு மீண்டு வாழமுடியாது போயினும் நீண்ட காலம் உலகம் யாண்டும் புகழ்ந்து வர நான் நிலைத்திருப்பேன் என அவன் நினைத்திருப்ப தை இங்கே நாம் நேரே தெரிந்து கொள்ளுகிறோம். எதிரியால் அழிந்து படினும் அழியாத நிலையை அடைந்து கொள்ளலாம் என்று அவன் தெளிந்திருக்கிறான். அந்தத் தெளிவு மொழி வழி யே விழி தெரிய வந்தது. அழிவு நிலையில் களி மிகுந்துள்ளது.

இராமன் பேர் இருக்கும் வரையும் இராவணன் பேரும் இருக்கும் எனப் பேரிலும் சீரிலும் பேராசை கொண்டு போரா சையோடு பொங்கி நின்றான். புகழ்மேல் மூண்ட ஆசை உயிர் வாழ்வை இகழ நீண்டது. செத்து வீழினும் தனக்கு ஓர் நித்திய வாழ்வு நிலையாய் உண்டு என அவன் நினைந்து கொண்டான்.

வென்று இலன்; நின்று உளன் என்றது வெற்றி இன்மை யும் வேறு ஒன்று உண்மையும் விளக்கி நின்றது. இராவணன் போரில் வெல்ல வில்லையானால் மீண்டு வந்து ஊரில் வாழ மாட் டான்; ஆண்டே மாண்டு மடிவான்; அவ்வாறு மாண்டால் நீண்ட பெயர் உலகில் என்றும் நிலவி நிற்கும். அதிசய வீரனை இராமனோடு போராடி மாண்டான் என இராவணனை உலகம் எண்ணி வரும் ஆதலால் அந்தக் கண்ணிய நிலையை அவன் கருதி உவந்து உறுதி மீதூர்ந்து உள்ளம் துணிந்துள்ளான்.

தன் பேரைச் சாகாமல் நிலை நிறுத்த வீரச்சாவை அவன் விழைந்து நின்றான். சாதல் இயல்பு; யாரையும் அது விடாது; எல்லாருக்கும் பொது; பிறப்பில் எழுந்த எவரும் இறப்பில் விழுந்து மறைதல் இயற்கை நியமமாயுள்ளது; இயல்பான அந்த இறப்பை உயர்வான சிறப்பில் பயன் படுத்த வேண்டும் என்று அவன் உளம் துணிந்து கொண்டது உலகம் அறிய வந் தது. மாண்டுபட மூண்டவன் நீண்ட புகழை வேண்டி நின்றான்.

இன்றுஉளார் நாளை மாள்வார்; புகழுக்கும் இறுதியுண்டோ?

உயிர் வாழ்வையும் புகழையும் நேரே எதிர் நிறுத்தி இவ்வாறு உரைத்திருக்கிருன். உடல் குன்றி அழியும்; புகழ் என்றும் அழியாது; அழியும் இயல்புடைய வாழ்வை ஒழிய விடுத்து எஞ்ஞான்றும் அழியாத கீர்த்தியை அடைபவனே பிறவிப் பயனைப்பெற்ற பெரியவன்என்று உறுதியாக் கருதியிருக்கிருன்.

அநித்திய விவேகம் நித்திய நிலையை அடைதற்குக் காரணமாயிருத்தலால் அது பூரணமாய் முன் வந்தது. நிலையாமையை நினைந்து தெளிந்தவன் நிலையானதை நேரே சேர நேர்கின்ருன்.

நெருநல் உளன்ஒருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு. (குறள், 336)

நேற்று இருந்த மனிதன் இன்று இறந்தான் என்னும் பெருமையையே இந்த உலகம் மருவியுள்ளது; ஆதலால் காலம் உள்ள பொழுதே உன் உயிர்க்கு நிலையான கதியைக் கருதிக் கொள்ளுக எனத் தேவர் இவ்வாறு பரிவோடு அருளி யிருக்கிருர்.

இன்றுளார் நாளை இல்லை எனும் பொருள்
ஒன்றும் ஓராது உழிதரும் ஊமர்காள்!
அன்று வானவர்க்காக விடம் உண்ட
கண்டனுர் காட்டுப் பள்ளிகண்டு உய்ம்மினே. (தேவாரம்)

வென்றிலேன் புலன்கள் ஐந்தும் வென்றவர் வளாகம் தன்னுள்
சென்றிலேன் ஆதலாலே செந்நெறி அதற்கும் சேயேன்
நின்றுளே துளும்பு கின்றேன் நீசனேன் ஈசனேயோ
இன்றுளேன் நாளை இல்லேன் என்செய்வான் தோன்றினேனே.
(திருநாவுக்கரசர்)

நன்றுளேன் அல்லேன் யார்க்கும் நல்லறம் புரியேன் அன்றிக்
கொன்றுளேன் அற்றம் பார்க்கும் கூற்றுவன் விடுவான் அல்லன்;
இன்றுளேன் நாளை இல்லேன் எமன் வரும் போது வெள்ளி
மன்றுளே இருந்த சொக்கே! வழக்கு நீ என் சொல்வாயே?
(மதுரை அந்தாதி)

நேற்றுளார் இன்று மாளா நின்றனர் அதனைக் கண்டும்
போற்றிலேன் நின்னை அந்தோ போக்கினேன் வீணே காலம
ஆற்றிலேன் அகண்டானந்த அண்ணலே அளவில் மாயச்
சேற்றிலே இன்னம் வீழ்ந்து திளைக்கவோ சிறியனேனே.
(தாயுமானவர்)

நேற்று இருந்தார் இன்று இல்லை; இன்று இருந்தார் நாளை இல்லை; உலக வாழ்வு இவ்வாறு உள்ளது; இந்த அழிவு நிலையில் உள்ள மனிதன் தனது நிலைமையை உணர்ந்து தெளிந்து அழியாத பதவியை விரைந்து அடைந்து கொள்ள வேண்டும் என மேலே வந்துள்ள பாசுரங்கள் விளக்கி நிற்கின்றன. ஞான சீலங்கள் நிறைந்த மகான்கள் யாண்டும் நிலையாமையை நினைந்து நிலையுடையதை அடைய நெடிது மறுகிக் கடிது விரைகின்றனர். என்றும் அழியாத பொருள் இறைவன் ஒருவனே ஆதலால் அந்தப் பரம்பொருளை அடைவதே தெளிந்த ஞானத்தின் முடிந்த பயனாய் யாண்டும் முடிவாய் நீண்டு முடிந்துள்ளது.

பிறந்து பிறந்து வருந்தி யுழலுகிற ஆன்மாவின் சிறந்த பேறு என்றும் பிறவாமல் இன்ப நிலையமாயிருக்கின்ற பரமானை ஒன்றி யுறைவதேயாம் என்பதை ஈண்டு ஊன்றி உணர்ந்து கொள்ளுகிறோம். பேதம் ஒழிந்த அபேத நிலையே ஏதம் ஒழிந்து இன்பம் பெறுகிறது. இந்த உண்மையை வேதங்களும் உபநிடதங்களும் உரிமையோடு உறுதியா உணர்த்தியிருக்கின்றன.

அழியும் வாழ்வை அவாவி அலைவது அவம்; அழியாத விழுமிய வாழ்வை அடைவதே அதிசய சுகமாம். நேர்ந்துள்ள அழிவுநிலையை ஊன்றி உணர்ந்த போதுதான் நேர்கின்ற நித்திய நிலையை விரைந்து அடைய நேரும் ஆதலால் நிலையாமை நினைவு பிறவி நீக்கத்துக்கு உறவா நேரே தலைமையாய் வந்தது.

இன்றுளார் நாளை இல்லை என ஞானிகள் எண்ணுவதையே இராவணன் ஈண்டு எண்ணியிருக்கிறான். வேதங்களை யெல்லாம் நன்கு ஓதி யுணர்ந்த அதிசய மேதை ஆதலால் இறுதி நேர்ந்த போது இவ்வாறு உறுதிநிலையை ஓர்ந்து உணர்ந்து கொண்டான்.

சிறந்த கல்வி அறிவை நல்ல வழியில் பயன் படுத்தாமல் பொல்லாத புலைவழியில் செலுத்தியதால் அல்லல் அடைய நேர்ந்தான். அறிவு அரிய மகிமை யுடையது ஆயினும் புனிதமான இனிய மனப் பண்போடு மருவி மணம் பெறவில்லையானால் அது சிறுமையாய்ச் சீரழிந்து போகிறது. சீலம் படியாத கல்வி சிறுமை படிதலால் அது வெறுமையா யிழிந்து விளிந்து ஒழிகிறது.

கல்வி யறிவு குறைந்திருந்தாலும் மனப்பண்பு நிறைந்திருந்தால் அவன் மகானாய் மகிமை பெறுகிறான்; பண்பு இல்லையா

னல் அறிவு பயனில்லாமல் பாழ்படுகின்றது. நல்ல பண்போடு தோயாத கல்வி பொல்லாத வழிகளிலேயே புலையாட நேர்கின்றது. கல்லாதவர்கள் நல்லவர்கள் என்னும் படி கற்றவர்கள் நடந்து வருகின்றனர் என்று குற்றங்கள் தொடர்ந்து வருகின்றன. அவ்வாறுவருவதுஅந்த நாட்டுக்குப் பொல்லாத புலையாம்.

கல்லாத பேர்களே நல்லவர்கள் நல்லவர்கள்
 கற்றும் அறிவில்லாத என்
கர்மத்தை என்சொல்வேன்? மதியை என்சொல்லுவேன்?
 கைவல்ய ஞான நீதி
நல்லார் உரைக்கிலோ கர்மம் முக்கியம் என்று
 நாட்டுவேன்; கர்மம் ஒருவன்
நாட்டினலோ பழைய ஞானம் முக்கியம் என்று
 நவிலுவேன்; வட மொழியிலே
வல்லான் ஒருத்தன் வரவும் திராவிடத்திலே
 வந்ததா விவகரிப்பேன்;
வல்லதமிழ் அறிஞர்வரின் அங்ஙனே வடமொழியில்
 வசனங்கள் சிறிது புகல்வேன்;
வெல்லாமல் எவரையும் மருட்டிவிட வகை வந்த
 வித்தை என் முத்தி தருமோ?
வேதாந்த சித்தாந்த சமரசநன் னிலைபெற்ற
 வித்தகச் சித்தர் கணமே. (தாயுமானவர்)

தமிழிலும் வடமொழிலும் வல்லவராய் நல்ல புலமை எய்தித் தாயுமானவர் இருந்துள்ள நிலைமையை இதனல் உணர்ந்து கொள்ளுகிருேம். உண்மையான நல்ல பலனை அடையாமல் கல்விச் செருக்கால் வீண் பெருமை கொண்டு திரிவது சிறுமையாம் என உலக மாந்தருக்கு உணர்த்த வந்தவர் தன்னை இன்னவாறு எடுத்துக் காட்டி இனிது போதித்திருக்கிருர். வித்தை முத்தி தருமோ? என்று விநயமாய் வினவியது உண்மையை உய்த்துணர வந்தது. கல்வி யறிவை நல்ல வகையில் பயன் படுத்திச் சித்திசுத்தியோடுஒழுகிவரின் முத்தி தானகவே ஓடிவரும்; மனம் புனிதமாகவில்லையானல் மனிதன் உயர் கதியை அடைய முடியாது; அந்த முடிவை இந்த முறையில் தெளிவுறுத்தினர். கல்லாத பேர்களே நல்லவர்கள்; நல்லவர்கள் என்ற இந்த வாசகத்தைப் பழமொழிபோல் எல்லாரும் உளம் உவந்து வெளியே

சொல்லி வருகின்றனர். கற்றவர் உள்ளம் திருந்தி நல்லவர்களா யிருக்கவேண்டும்; அங்ஙனம் இல்லாது ஒழியின் கல்லாதவரினும் அவர் பொல்லாதவரே; கல்லாது நின்றவர் பின்பு கற்று நல்லவர் ஆகலாம்; கற்றும் பொல்லாதவராய்ப் போனவர்க்கு அந்த வாய்ப்பு இல்லாமையால் அவர் அவமே யிழிந்து அல்லலே அடைந்து அழிவு நிலையில் கழிவர் என்பது தெளிய நின்றது.

இராவணன் பெரிய கல்விமான்; இசை முதலிய இனிய கலைகளை யெல்லாம் தெளிவாக அறிந்தவன்; அத்தகைய கல்வி நலங்கள் அமைந்திருந்தும் அவன் நல்லவனாய்த் திருந்தி நில்லாமல் பொல்லாத நிலையிலேயே பொங்கி நின்றான். பண்பாடு படியாத கல்வி புண்பாடாக நீண்டு வருதலால் அது யாண்டும் இன்பம் அடையாமல் துன்பச் சுழலில் இழிந்து போகின்றது.

ரோஸோ என்பவர் நல்ல அறிஞர்; இயற்கை உணர்ச்சியுள்ளவர்; சீர்திருத்த வாதி; பிரஞ்சு தேசத்தில் இருந்தவர்; மனித சமுதாயம் சுதந்திரமுடன் சுகமாய் வாழ வேண்டும் என்று நாளும் முயன்று வந்தவர். கல்வியாளர் சிலர் ஆட்சிக் குழுவில் அமர்ந்து கொண்டு அரசனுக்கு ஆதரவாய்க் குடிகளுக்குக் கொடுமை புரிந்து வந்தார். அவரது நிலைமையை நினைந்து இவர் நெஞ்சம் வருந்தினர். "கல்லாத பேர்களே நல்லவர்கள்" என்று தாயுமானவர் சொன்னது போல் இவரும் கல்வி நிலையை இகழ்ந்து சொல்ல நேர்ந்தார். அங்ஙனம் சொல்லிய குறிப்புகளில் ஒன்று அயலே வருகின்றது.

"Education does not make a man good; it only makes him clever—usually for michief." [Rousseau]

"கல்வி மனிதனை நல்லவன் ஆக்காது; வல்லவன் ஆக்கும்; பெரும்பாலும் குறும்பு வஞ்சம் சூத்திரங்களைச் செய்யவே அவனை அது விசித்திரமாகச் செய்து விடுகிறது" என்னும் இது இங்கே கூர்ந்து சிந்திக்க வுரியது.

உள்ளப்பண்பு இல்லாதவனிடம் கல்வி புகுந்தால் செருக்கு முதலிய தீமைகளை வளர்த்துச் சிறுமைகளில் அவனைத் தள்ளி விடுகிறது. எவரையும் மதியாமல் எள்ளி இகழ்வதும், தன்னையே வியந்து தருக்கி நிற்பதும், பிடித்ததையே பிழையாகச் சாதிப்பதும் அவனுடைய பிறவிக் குணமாய்ப் பெருகி முடிகின்றன.

"If I want to commit a folly nothing will prevent me.,,
[Voltaire]

"நான் பிழை செய்ய விரும்பினல் என்னை யாரும் தடுத்து நிறுத்த முடியாது" என வால்டேர் என்னும் பேரறிஞர் இங்ஙனம் கூறியிருக்கிருர். பண்பு ஒன்று படியாதபோது கல்வி முரட்டுத்தனமாய் இரட்டித்து வருகிறது. நான் செத்தாலும் சீதையை விடேன் என்று பழி வழியில் கொடிய பிடிவாதம் கொண்டிருந்தும் இராவணன் புகழை விழைந்து நின்ருன்.

புகழுக்கும் இறுதி உண்டோ?

இறுதி அடைய நேர்ந்த இராவணன் இறுதியில்லாத ஓர் உறுதிநிலையை இவ்வாறு கருதியிருக்கிருன். அதிசயமான அரிய செயல்களால் உளவாகும் கீர்த்தி உலக வார்த்தைகளால் என்றும் நின்று நிலவி வரும் ஆதலால் அது அழிவில்லாததாயது. மனித சமுதாயம் மகிழ்ந்து புகழ்ந்து பேசி வருவது புகழ் என வந்தது. பொன்ற மூண்டவன் பொன்ருததை விழைந்தான்.

ஒன்ரு உலகத்து உயர்ந்த புகழல்லால்
பொன்ருது நிற்பது ஒன்று இல். (குறள், 233)

புகழ் ஒன்றே என்றும் அழியாது நிற்கும் விழுமிய பொருள் என இது விளக்கியுள்ளது. எனது அழியும் யாக்கையை விடுத்து அழியாத புகழை அடைவேன் என இலங்கை வேந்தன் தனது உறுதிநிலை துலங்க உரைத்தான். இகழ் உடம்பை எள்ளி விட்டுப் புகழ் உடம்பைக் கொள்ள விரைந்தான்.

பொன்றும் உடல்விடுத்துப் பொன்ருப் புகழ்எடுத்தார்
என்றும் இருப்பர் இவண்.

புகழ் சிரஞ்சீவி நிலையை அருளுகின்றது. பிறந்த மனிதன் அவசியம் அடைந்து கொள்ள வேண்டிய சிறந்த பேருய்ப் புகழ் அமைந்திருத்தலால் அந்தப் பேற்றைப் போற்றி நின்ருன்.

ஒருவனது இரண்டு யாக்கை ஊன்பயில் நரம்பின் யாத்த
உருவமும் புகழும் என்ருங்கு அவற்றினுள் காத்து வந்து
மருவிய உருவம் இங்கே மறைந்துபோம மற்ற யாக்கை
திருவமர்ந்து உலகம் ஏத்தச் சிறந்து பின் நிற்குமன்றே.
(சூளாமணி)

மனிதனுக்கு உருவம் புகழ் என இரண்டு உடல்கள் உள்ளன. பூதவுடம்பு, புகழுடம்பு என்று முறையே அவை புகலப்படுகின்றன. உருவம் பிறவியில் இயல்பாய் மருவியது; புகழ் பிறந்த பின் சிறந்த செயல்களால் அடைந்து கொள்வது. முன்னது விரைந்து மறைந்து போம்; பின்னது என்றும் நிலையாய் நின்று நிலவும்; அருமையான இந்த உருவ நிலையை இது உரிமையா வரைந்து குறித்துள்ளது. குறிப்பு கூர்ந்து சிந்திக்கத்தக்கது.

பொன்றுதல் தவிருமோ? என்றது சாதல் தவறாது; பிறந்த எவரும் இறந்தே தீர்வர்; அந்த இறப்பால் சிறப்பான புகழை நான் அடைந்து கொள்வேன் என்று இராவணன் உள்ளம் துணிந்து உறுதி பூண்டுள்ள நிலையைத் துலக்கி நின்றது.

நிலையான பதவியை அடைய நேர்ந்தான் ஆதலால் நிலையில்லாத யாக்கை முதலியவற்றைக் கடையா இகழ்ந்து நின்றான்.

மா குரு தநஜந யௌவன கர்வம்
ஹரதி நிமேஷாத் கால ஸர்வம்
மாயா மயமிதம் அகிலம் ஹித்வா
ப்ரஹ்மபதம் த்வம் ப்ரவிச விதித்வா. (பஜகோவிந்தம்)

"இளமை செல்வம் உறவு முதலியவற்றை நினைந்து நீ பெருமை கொள்ளாதே; நிமிடம் தோறும் காலம் எல்லாவற்றையும் அழித்து வருகிறது; இந்த உலகம் மாயா மயம் என்று உணர்ந்து தெளிந்து பரப்பிரம நிலையை நீ விரைந்து அடைந்து கொள்" என மனித சமுதாயத்தை நோக்கி ஆதி சங்கரர் இவ்வாறு போதித்திருக்கிறார். இந்த ஞான போதனை அநித்திய நிலையை விளக்கி நித்திய முத்தியை உணர்த்தியிருக்கிறது.

பொன்றும் யாக்கையை விடுத்துப் பொன்றாத புகழை அடைவேன் என்று இராவணன் கருதினனே அன்றி என்றும் அழியாத முத்தி நிலையை எய்துவேன் என்று அவன் எண்ணவில்லை. எவனும் அவனவனுடைய நிலைமைக்குத் தக்கபடியே பலனை அடைய நேர்கின்றான். சிறந்த போர் வீரன் ஆதலால் உயர்ந்த புகழை விழைந்து உரிமை கூர்ந்து ஊக்கி நின்றான்.

சூரபன்மனும் இராவணனும்.

முருகப் பெருமானோடு போராடி நின்ற சூரபன்மன் முடிவில் அழிய நேர்ந்தாலும் அழியாத புகழை அடைய நேர்ந்தேன்

என்று உள்ளம் உவந்து உறுதி பூண்டு நின்றான். மகா வீரனான அவனுடைய மன நிலைகள் மொழிகளின் வழியே வெளியாய் நின்றன. அயலே வருவன ஈண்டு அறிய வுரியன.

ஏதமில் அமரர் தம்மை யான்சிறை செய்த தெல்லாம்
தீதென உரைத்தார் பல்லோர் அன்னதன் செயற்கை யாலே
வேதமும் அயனும் ஏனை விண்ணவர் பலரும் காணா
நாதன் இங்கு அணுகப் பெற்றேன் நன்றதே யானதன்றே. (1)

ஒன்றொரு முதல்வன் ஆகி உறைதரு மூர்த்தி முன்னம்
நின்றமர் செய்தேன் இந்நாள் நெஞ்சினித் தளரேன் அம்மா!
நன்றிதோர் பெருமை பெற்றேன் வீரனும் நானே யானேன்
என்றுமிப் புகழே நிற்கும் இவ்வுடல் நிற்பது உண்டோ? (2)

வானுளோர் சிறையை நீக்கி வள்ளலை வணங்கி இந்த
ஊனுலாம் உயிரைப் போற்றி அளியர்போல் உறுவன் என்னின்
ஆனதோ எனக்கி தம்மா ஆயிர கோடி அண்டம்
போனதோர் புகழும் வீரத்தன்மையும் பொன்றிடாவோ? (3)

(கந்தபுராணம், சூரபன்மன்வதை 447-449)

அதிசய வீரனான சூரபன்மன் இவ்வாறு கருதி யிருக்கிறான்.

இவ் வுடல் நில்லாது; புகழ் என்றும் நிற்கும் என அந்த அசுரர்பதி எண்ணினான். பொன்றுதல் தவிராது; புகழ் அழியாது என்று இந்த அரக்கர்பதி கருதினான். தேவரைச் சிறை விடேன்; விட்டால் என் புகழ் போய்விடும் என்று அவன் துணிந்து நின்றான்; சீதையைச் சிறை விடேன்; விட்டால் தனக்கு இகழ்வாம் என்று இவன் முனைந்து மூண்டு நின்றான்.

உயிர் ஒழிய நேர்ந்தாலும் உறுதிநிலை குலையேம் என இருவரும் ஒருமுகமாய் ஊக்கி நின்றுள்ளனர். பொருதிறலுடைய போர் வீரர்களின் பெருமித நிலைகள் ஊன்றி உணர வந்தன.

பட்டனன் என்றபோதும் எளிமையில் படுகிலேன்.

இராவணனுடைய தீரமான உறுதி நிலையை இது உணர்த்தியது.

அடியோடு அழிய நேர்ந்தாலும் இராச கம்பீரமாகவே தனது நிலைமையை அவன் முடிவு செய்திருப்பது நெடிய வியப்பை விளைத்து நெஞ்சத் திண்மையைத் துலக்கி நிற்கின்றது.

யாண்டும் மூண்டு திக்கு விசயம் புரிந்து பத்துத் திசைகளையும் வென்று எத்திசையிலுள்ளாரையும் அடக்கி ஆண்டு இமையவரும் ஏவல் செய்ய உச்ச நிலையில் ஒளிமிகுந்து வாழ்ந்து வந்தவன் ஆதலால் அழிவு நேர்ந்த போதும் எளிமை சேர்ந்து மாளேன் எனத் தனது உறுதி நிலையை அறுதியிட்டு இறுதியில் உரைத்தான். உள்ளத்திறலும் உறுதியும் ஊக்கமும் மான வுணர்ச்சியும் மதிப்பின் கதிப்பும் விதியின் விளைவும் இங்கே அதிசய நிலையில் வெளியாயின. இலங்கைவேந்தன் இயல்பை வியந்து நிற்கிறோம்.

அயராத வயிரவுள்ளம் உயர்வாய் ஓங்கி நிற்கிறது. அருமைத் தலைமகனுடைய துயர நிலைகளையும் உறுதியுரைகளையும் ஒரு சிறிதும் கருதியுணராமல் பெரிதும் ஆங்காரமாய் ஓங்கி ஆணவத் திமிருடன் தன் உறுதி நிலையை வலியுறுத்தினான்.

வீறோடு மகனிடம் இவ்வாறு கூறி வந்தவன் விரைந்து எழுந்து நேரே போருக்குப் போக மூண்டு தன் தேரைக் கொண்டு வரும்படி அயலே நின்றவரை ஆர்த்துப் பார்த்தான்.

வல்லியம் முனிந்தால் அன்னான்
வருகதேர் தருக என்றான்.

புலிப் போத்து வெகுண்டு சீறியது போல் இலங்கை வேந்தன் விரைந்து நின்ற நிலையை இது வரைந்து காட்டியுள்ளது. வல்லியம் = புலி. கொடிய காட்டு மிருகம் காண வந்தது.

போரை நோக்கிப் போக நேர்ந்தவன் நேரே தேரைத் தருக என்று சீறி நோக்கவே இந்திரசித்து விரைந்து தடுத்து "எந்தையே! பொறுத்தருளுங்கள்; நானே போகின்றேன்; பகைவரை வென்று வருகின்றேன்" என்று உள்ளம் கன்றி உரைத்து உருத்து எழுந்து தன் மாளிகையை அடைந்து அரிய ஆயுதங்களை ஆய்ந்து கொண்டு நெடிய துயரங்களை நெஞ்சில் அடக்கி ஆளரிபோல் அடலாண்மையோடு வெளியேறினான்.

இந்திரசித்து எழுந்த நிலை.

தந்தையின் அழிவு நிலையை எண்ணி எண்ணி விழி நீர் சொரிந்து கழிபெருந்துயரோடு இரதம் ஏறி இக் குலமகன் போர்முகம் நோக்கிப் போகும்போது இலங்கை வாசிகள் எல்லாரும் கலங்கியழுது உழுவலன்புடன் தொழுது வணங்கி

யாண்டும் உரையாடாமல் மறுகுகள் தோறும் மறுகி மயங்கி உருகி நின்றனர். போர்மேல் மூண்டு தேர்மேல் போகிற வீரன் இனி மீண்டு வர முடியாது என்று தெரிந்து கொண்டமையால் உரியவர் பலர் பருவரலோடு உடன்தொடர்ந்து போனார். பரிபவமான அந்தப் பரிதாப நிலைகளை அயலே காண வருகிறோம்.

எழுந்தனன் தன்னை நோக்கி இணையடி இறைஞ்சி எந்தாய்.
ஒழிந்தருள் சீற்றம் சொன்ன உறுதியைப் பொறுத்தி யானே
கழிந்தனன் என்ற பின்னர் நல்லவாக் காண்டி என்னா
மொழிந்தனன் தெய்வத் தேர்மேல் ஏறினான் முடியலுற்றான். (1)

படைக்கல விஞ்சை மற்றும் படைத்தன பலவும் தன்பால்
அடைக்கல மாகத் தேவர் அளித்தன எல்லாம் வாங்கிக்
கொடைத்தொழில் வேட்டோர்க் கெல்லாம் கொடுத்தனன் கொடி [யோன் தன்னைக்
கடைக்கணால் நோக்கி நோக்கி இருகண்ணீர் கலுழப் போனான். (2)

இலங்கையின் நிருதர் எல்லாம் அழிந்தனர் விரைவின் எய்தி
விலங்கலம் தோளினானைப் பிரிகலம் விளிதும் என்னா
வலங்கொடு தொடர்ந்தார் தம்மை மன்னனைக் காமின் யாதும்
கலங்கலிர் இனிமேல் சென்று மனிதரைக் கடப்பல் என்றான்'

வணங்குவார் வாழ்த்துவார் தன் வடிவினை நோக்கித் தம்வாய்
உணங்குவார் உயிர்ப்பார் உள்ளம் உருகுவார் வெருவலுற்றுக்
கணங்குழை மகளிர் ஈண்டி இரைத்தவர் கடைக்கண் என்னும்
அணங்குறை நெடுவேல் பாயும் அமர்கடந்து அரிதில் போனான்.
(இந்திரசித்து வதை 13-16)

இங்கே நிகழ்ந்துள்ள காட்சிகளைக் கருதிக் காண்பவர் உருகி வருந்துவர். தான் உரிமையோடு கூறிய உறுதி மொழிகளைக் கேளாமல் தந்தை மாறுபட்டுச் சீறி எழுந்தபொழுது இம்மைந்தன் சிந்தை நொந்து அவனைத் தொழுது நிறுத்திவிட்டு அழுது வெளியேறியிருப்பது எவரையும் அழுது மறுகச் செய்துள்ளது. சிறந்த கோபகன் இறந்து போக விரைந்தான்.

தான் சொன்ன சமாதான மொழிகளை இகழ்ந்து தள்ளிவிட்டுத் தந்தை போருக்கு மூண்டபோது அடியோடு நாசம் அடைய மூண்டது என்று இந்திரசித்து முடிவு செய்து கொண்டான். மனவேதனையோடு தந்தையைத் தொழுது வணங்கி

"அப்பா! நான் சொன்னது தப்பு ஆனல் என்னை மன்னித்து விடுங்கள்; நான் இருக்கும்போது நீங்கள் போருக்குப் போகலாகாது; நானே போகின்றேன்; அனைவரையும் போராடுகின்றேன்; இனிமேல் மீண்டு இங்கு வருவேன் என்று சொல்ல முடியாது; நான் மாண்டு மடிந்து போனல் அதன் பின்பாவது சீதையை விட்டு விடுங்கள்; அல்லல் யாதும் இன்றிச் சுகமாய் நீங்கள் இருக்க வேண்டும் என்றே நான் இதனை வேண்டுகின்றேன்; எனது முடிவான வேண்டுகோளுக்கு இசைந்தருளவே வேண்டும்; சாகின்றேன் வேண்டுகின்றேன்; போகின்றேன் அரசே!" என்று வேகின்ற சிந்தையோடு வெளியே வந்தான்.

யான் கழிந்தபின் நல்லவாக் காண்டி.

நான் அழிந்து ஒழிந்து போனபின் உண்மை தெளிந்து உன் உயிருக்கு நன்மையை நாடிக்கொள் என்று பிதாவிடம் இவ்வாறு வேண்டியிருக்கிறான். இம்முறை தப்பாமல் செருக்களத்தில் செத்துவிழுவது உறுதி என்று இந்திரசித்து சித்தம் துணிந்திருப்பதை இதனால் உய்த்துணர்ந்து கொள்கிறோம். தன் முடிவைக் கண்டாவது தந்தை விடிவு காண வேண்டும் என்று இம்மைந்தன் வேணவாவோடு நெடிது மறுகி வேண்டியிருக்கிறான்.

காம மயக்கத்தால் இராவணன் தீமையே கண்டு செருக்கி வருகிறான்; தலைமகன் ஆன தான் இறந்த பின்பு ஆவது நிலைமையை உணர்ந்து நெஞ்சம் திருந்திச் சீதையை விட்டு நல்லவனாய் வாழ வேண்டும் என வேண்டியிருத்தலால் இக்கோமகன் தந்தைபால் கொண்டுள்ள பாசமும் பரிவும் தெரிய வந்தன.

பரிதாப நிலையில் பரிந்து பிரிந்தவன் தனது அரண்மனை புகுந்தான்; அமருக்கு உரியன யாவும் ஆயத்தம் செய்து கொண்டான்; நிதியறையைத் திறந்தான்; பொன்னையும் பொருளையும் நவமணிகளையும் வாரி வெளியே வீசினான்; அழகிய தேரின் ஏறினான்; மீண்டும் தந்தையிடம் வந்தான்; தாளில் விழுந்து வணங்கினான்; எழுந்தான்; யாதும் பேசவில்லை; உழுவலன்புடன் உருகி நோக்கினான்; படை பெற்ற கையோடு விடைபெற்று மீண்டான்; மீளும்போது தன் தாதையை நீள நோக்கி நெடுமூச்செறிந்து விழிநீர் சொரிந்து வழி நோக்கி விரைந்தான்.

கடைக்கணால் நோக்கி நோக்கி
இருகண் நீர் கலுழப் போனான்.

தந்தையைப் பிரிந்து இந்திரசித்து முடிவில் போர்மேல் போன நீர்மையை இதில் கூர்மையாய்க் காண்கின்றோம். இந்தப் பரிதாப நிலையை ஊன்றி உணரலாமே அன்றி உரைத்து விளக்க முடியாது. சொல் இறந்த நிலையில் சோகம் ஓங்கியது.

உள்ளத்தில் மண்டியுள்ள துயர நிலைகளை வெளியே பாய்ந்துள்ள கண் நீர் தெளிவாக் காட்டியுள்ளது. இதுதான் கடைசிப் பார்வை; இனிமேல் பிதாவைக் காண முடியாது; இராசகம்பீரமான இந்த அருமைத் தந்தையை இனி எந்தப் பிறப்பில் காண்போம் என்று ஏங்கித் தவித்து இக்குலமகன் அழுது போயிருக்கிறான். உழுவல் அன்பால் உள்ளம் உருகியுள்ளமையால் கண்ணீர் பெருகி வந்தது. கடைக்கணால் நோக்கி நோக்கி என்றது ஆர்வம் மீதூர்ந்து பல முறையும் பிதாவை இவன் பார்த்த பார்வையை வார்த்துக் காட்டியுளது. போரில் தான் இறந்துபடுவதை நினைந்து இவன் வருந்தவில்லை; தந்தையின் பரிதாப நிலையை எண்ணியே சிந்தை நைந்து தியங்கி மயங்கினான்; பெரியவர் இனிமேல் சுகமாய் வாழ முடியாது; விரைந்து மாண்டு விடுவார் என்று முடிவு செய்து கொண்டமையால் முடிவில்லாத துயரம் நெடிது ஓங்கி நெஞ்சை வருத்தி நிலை குலைத்து நின்றது.

இருகண் நீர் கலுழப் போனான் என்றதனால் இவன் அழுது வந்த நிலை அறிய வந்தது. யாண்டும் கலங்காத அசகாய சூரன்; அருந்திறலாண்மையன்; உறுதி பாய்ந்த வயிர நெஞ்சன்; எவ்வழியும் தளராத தைரியம் வாய்ந்தவன்; இவ்வழி விழிநீர் சொரிந்து இவ்வாறு அழுதிருக்கிறான். இந்த அழுகை தந்தை மேல் மூண்டுள்ள பாசத்தோடு தன் குலத்துக்கு நேர்ந்துள்ள நாசத்தையும் நினைந்து வந்தது. மானமும் வீரமும் மறுகி நொந்தன.

குடியும் குலமும் அடியோடு அழிய மூண்டதே என்ற நெடிய துயரம் நெஞ்சைப் பிளந்திருக்கிறது. அது ஓளவு அழுகையாய் வெளியாயது. அஞ்சாத தீரன் அழுது போகவே யாவரும் சாக நேர்ந்து ஏகமாய்த் தொடர்ந்து எழுந்தார்.

இலங்கையின் நிருதர் எல்லாம் அழிந்தனர் தொடர்ந்தார்.

போர்மேல் மூண்டு பரிதாப நிலையில் நேரே தேர் மேல் போன இந்திரசித்தைப் பின் தொடர்ந்து இலங்கை வாசிகள் சென்றிருத்தலை இங்கே நன்கு தெரிகின்றோம். தங்கள் சக்கரவர்த்தித் திருமகனான இளவரசு இழவு நிலையில் அழுது போவதைக் கண்டதும் அரக்கர் எல்லாரும் விரைந்து எழுந்து இவனுக்கு முன்னதாகவே அழிந்து படிய வேண்டும் என்று துணிந்து வந்தனர். போரை நோக்கிச் செல்லும் தேரைச் சூழ்ந்து எப்மருங்கும் நெருங்கி வருகிற நிருதர் திரள்களை நோக்கி இந்திரசித்து தேரை நிறுத்தினான்; அவர்க்கு ஆறுதல் கூறினான்: "என்பால் பேரன்பு நிறைந்த என் குலவீரர்களே! நீங்கள் யாதும் கவலையுற வேண்டாம்; இந்த முறை எதிரிகளை நான் வென்று விடுவேன்; எனக்காக நீவிர் துணை வர வேண்டியதில்லை; உரிய படைகள் உடன் வருகின்றன; அவையே போதும்; அரசர் பெருமான் தனியே இருக்கிறார்; அவர்க்கு ஆதரவு புரிந்து எவ்வகையும் இதமா அவரைப் பாதுகாத்து நில்லுங்கள்" என்று நீதி மொழிகள் கூறி நிருதர் திரளை நிறுத்திவிட்டுப் பொருதிறலோடு போகநேர்ந்தான்.

கலங்கலிர்! மன்னனைக் காமின்!

தன்னைத் தொடர்ந்து வந்த இலங்கை வாசிகளை நோக்கி இந்திரசித்து இவ்வாறு கூறியிருத்தலால் அவர் கலங்கியுள்ள கலக்க நிலைகள் துலங்கி நின்றன. மேகநாதன் சாகவே போகின்றான் என்று விவேகமாய்த் தெரிந்து கொண்டமையால் நிருதர் யாவரும் ஏகமாய்க் கலங்க நேர்ந்தார். உள்ளம் கலங்கி வந்த அவரை மெல்லத் தேற்றி ஊரிலிருந்து தந்தைக்கு உதவி புரிந்து வரும்படி பணித்தான். உரிமைப்பாசம் உரையில் வெளியாயது.

தான் அழிய நேர்ந்தாலும் தன்னுடைய தந்தை சுகமாய் வாழவேண்டும் என்று இக்குலமகன் எண்ணியிருப்பது உலக மக்களுடைய உள்ளங்களை உருக்கி நிற்கிறது. இத்தகைய உத்தம புத்திரனது பரிதாப நிலைகளை நேரில் கண்டும் ஒரு சிறிதும் இரங்காமல் பெருமித நிலையிலேயே உறுதி பூண்டு இராவணன் ஊக்கி நின்றது அவனுடைய அழிவு காலத்தின் களியாட்டமேயாம். நாசகாலம் நேர்ந்த போது ஆங்காரத் திமிர் யாருடைய யோசனையையும் கேளாமல் நீச நிலையிலேயே நிமிர்ந்து நிற்கிறது.

இலங்கை வேந்தனுடைய கலங்காத கடுந் திண்மையை ஓரளவு நாம் வியந்தாலும் பேரிழவுகள் மூளும்படி அவன் பெருகி நிற்ப தை நினைந்து பரிதாபமே அடைகின்றோம். உரிமைத் தம்பியான கும்பகருணன் முன்பு நொந்து போனது போலவே இந்த அருமை மகனும் இங்கே அழுது மறுகிப் போயிருக்கிறான்.

தன்னைத் தொழுது தொடர்ந்து வந்த நிருதர் குழுவை நிறுத் தியது அழிவு நிலையிலிருந்து தப்பி அவர் இனிது வாழ வேண்டி யேயாம். அவர் தெளிந்து நிற்கத் தேற்றி மொழிந்தான்.

இனிமேல் சென்று மனிதரைக் கடப்பல்.

தனக்குத் துணைவரா நேர்ந்தவர்க்குத் தேறுதல் உண்டாகும் படி இவ்வாறு ஆறுதல் கூறினான். எதிரிகளாய் மூண்டுள்ள இராமலக்குவரையும் வானர சேனைகளையும் எளிதே வென்று வருவேன் என்று தெளிவுரையாடினான்; தன்னோடு வரத்துணிந்த வரைத் தடுத்து நிறுத்தும் உபாயமாய் இது மடுத்து வந்தது.

மனிதரால் மாண்டு மடிவது உறுதி என்று தன் மனதில் முடிவு செய்து கொண்டாலும் வெளியே வென்றி வீரனே விளங்கி நின்றான். அந்தப்புர மகளிரும் நகர மாந்தரும் சிந்தை கலங்கி நொந்து மறுக இந்திரசித்து யாதும் கலங்காமல் வீரத் திறலுடன் சமர பூமியை அணுகினான். அமராடலை அவாவி னான்; சேனைகளின் திரள்களை நோக்கி வானவரும் மறுகினர்.

இலக்குவன் நிலை.

நேரே போராடி நின்ற இந்திரசித்து மாறாய் மறைந்து போகவே இலக்குவன் சிறிது நேரம் விசும்பை நோக்கி வேகித்து நின்றான். முன்னம் மறைந்து நின்று மாயப்போர் புரிந்தது போல் இதுபொழுதும் ஏதேனும் அவன் தீமை செய்வான் என்று கருதி வளைத்த வில்லோடு இம்மான வீரன் வானவீதி யைக் குறி செய்து நின்றது அதிசய தீரமாய்த் துதி கொண்டு விளங்கியது. வீர கம்பீரம் வெற்றியோடு நின்றது.

நெடும்பொழுது கடும் பார்வையாய் நின்றவன் மாற்றானு டைய தோற்றமும் தொடர்பும் யாதும் காணாமையால் போர் நிலை மாறி ஆறுதலடைந்து அமைதியாயிருந்தான். அனுமானும் அங்கதனும் அயலே நின்றனர்; விபீடணன் எதிரே அமர்ந்திருந்

தான். அந்த அறிவாளியை நோக்கி இளையவன் வினவின் உள வுகளை வினயமாய் உசாவினன். "நிகும்பலை வேள்வி முடியாமல் சிதைந்தது; இந்திரசித்து சினந்து போராடினன்; மூண்டு நேரே போராடி வந்தவன் தேர் முதலிய யாவும் இழந்து விரைந்து மறைந்து போயினன். அவ்வாறு போனவன் பண்டு போல் மாய வஞ்சமாய்த் தீய போர் புரிவான் என்று எதிர் பார்த்தேன்; யாதும் காணோம்; நீண்ட நேரம் கழிந்து போனமையால் மீண்டு அவன் இலங்கைக்கே போயிருப்பான் என்று எண்ணுகின்றேன்; இனி நாம் செய்ய வேண்டியது யாது?" என்று இன்னவாறு இலக்குவன் வீடணனோடு பேசிக் கொண்டிருந்தான். அப்பொழுது இலங்கைத் திசையிலிருந்து சேனைகள் சீறி வருகிற ஆரவாரங்கள் கேட்டன. அடலோடு ஆர்த்து வருகிற படைகளின் ஒலிகளைக் கேட்டதும் இலக்குவன் எழுந்து நோக்கினன். வானரப் படைகள் யாண்டும் மூண்டு ஆரவாரித்து விரைந்தன. வீர மானங்கள் வீறுகொண்டு நீண்டு சீறி நின்றன.

அமர் விளைந்தது.

அடலாண்மைகளோடு அரக்கர் சேனைகள் ஆர்த்து நெருங்கின; இந்திரசித்தின் யந்திர இரதமும் சமர பூமியுள் புகுந்தது. இப்பொழுது அவன் ஏறிவந்துள்ள தேர் அற்புத வலியுடையது. அரிய மகிமைகள் வாய்ந்தது. பொருகளத்துள் அது வந்து புகுந்த விறல் நிலையை அயலே காண வருகிறோம்.

குன்றிடை நெரிதர வடவரையின்
குவடுருள் குவதெ்தன முடுகுதொறும்
பொன்றிணி கொடியினது இடியுருமின்
அதிர் குரல் முரல்வது புனை மணியின்
மின்றிரள் சுடரது கடல் பருகும்
வடவனல் வெளியுற வருவதெ்தனச்
சென்றது திசைதிசை உலகிரியத்
திரிபுவனமுமுறு தனி இரதம். (1)

ஆர்த்தது நிருதர் தம் அனிகமுடன்
அமரரும் வெருவினர் கவி குலமும்
வேர்த்தது வெருவலொடு அலம் வரலால்
விடுகணை சிதறினன் அடுதொழிலோன்

தீர்த்தனும் அவன் எதிரா முடுகி நெடும்
திசை செவிடு எறிதர விசை கெழுதிண்
போர்த்தொழில் புரிதலும் உலகு கடும்
புகையொடு சிகையனல் பொதுளியதால். (2)

அரிய திறலுடைய இந்திரசித்து ஏறி வந்த பெரிய இரதம் சமர பூமியுள் புகுந்த போது நிகழ்ந்த நிலைகளை வியந்து காண்கிறோம். இரதத்தில் பூண்ட குதிரைகள் வெறிகொண்டு மண்டி விரவே யாண்டும் நெடுந்திகில்கள் நீண்டன. நிருதர் சேனைகளும் வானர வீரர்களும் இடங்கள் தோறும் பொரு திறலோடு பொங்கி எதிர்ந்தனர். இருதிறத்திலும் அடுதொழில்கள் கடிது மூண்டமையால் யாண்டும் படுகொலைகள் நெடிது நீண்டன.

தேரை நேரே கடாவிப் போர்மேல் மூண்டு வந்த இந்திரசித்து உக்கிர வீரமாய் உருத்துப் பக்கம் எங்கும் அம்புகளை வாரிச் சொரிந்தான். அவனுடைய பாணப் பிரயோகங்கள் விசித்திர கதிகளில் விளைந்து நின்றன. நெருப்பு வாணங்களாய்ச் சீறிப்பாய்ந்து வானர வீரர்களை வதைத்து வீழ்த்தின. அம்புகள் பாய்ந்த இடங்கள் எங்கணும் குரங்குகள் மாய்ந்து மடிந்தன.

மேகநாதன் வெகுண்டு மூண்டு வேகமாய்ப் பொருது வருவதை நோக்கி இலக்குவன் விரைந்து எதிர்ந்து வீறோடு தடுத்தான். கணைகளின் தொடுப்பும் கடுப்பும் எடுப்பும் இருவரிடமும் பொருவரு நிலையில் பெருகி எவரும் வெருவுற விரிந்து நின்றன.

தந்தையிடமிருந்து மீண்டு வரும்போது இந்திரசித்து சிந்தை தளர்ந்து வந்தாலும் போரில் மூண்ட பின்பு வீரவெறி நீண்டு விரைந்து வேலை செய்தான். அவனுடைய வில்லாடல் எல்லையில்லாத நிலையில் ஏற்ற முற்று நின்றது. இலக்குவன் கடுத்துத் தடுத்தாலும் அவன் தொடுத்த பகழிகள் சில அடுத்து நின்ற வானரங்களை அழித்து அயலெங்கும் ஒழித்துப் போயின.

அடலாண்மையோடு அவன் போராடி வருங்கால் வீடணன் இடையே வந்து இளையவனை அணுகி "ஐயனே! இந்த வெய்யவனை விரைந்து கொன்று வீழ்த்த வேண்டும்; காலதாமதம் ஆனால் சாலவும் பிழையாம்; இப்பொழுது அவன் ஏறிவந்துள்ள தேர் அதிசயமுடையது; அழிவில்லாதது; பூண்டுள்ள பரிகளும்

எளிதில் மாண்டு படாதன; இனி இவனை மீண்டு போக விடின் நாம் மாண்டு மடிந்த படியாம்; விரைந்து மூண்டு வென்றிபெற வேண்டும்" என்று வெற்றியை விழைந்து மொழிந்து நின்றான்.

உற்றதுணைவன் உரைத்த உறுதி மொழியை இக் கொற்றக் குரிசில் கேட்டதும் குறிப்போடு கூர்ந்து வேலை செய்தான். எதிரி கடுத்துத் தொடுத்து வந்த கணைகளைத் தடுத்து வந்தவன் அவனை ஒல்லையில் கொல்ல விரைந்து எல்லையில்லாத அம்புகளை எடுத்து எய்தான். தொடுத்து விடுத்தன கடுத்து அழித்தன.

இக்குலமகனது குறிப்பையும் வேகத்தையும் அத்தலைமகன் உணர்ந்து தறுகண்மையோடு தெய்வப் பகழிகளை உய்வைத் தரும்படி ஊக்கித் தொடுத்து யாண்டும் இறுதி நேராமல் உறுதி ஓர்ந்து பொருதிறல் புரிந்தான். அவ்வீரன் ஏவிய வித்தகப் பகழிகள் அனுமான் அங்கதன் முதலிய சேனைத் தலைவர்களைச் சித்திரவதை செய்து சீறிப் போயின. இலக்குவனும் சிறிது நேரம் கலக்கம் அடையும்படி கணைகள் கடுவேகம் காட்டி அடுதொழில் ஆற்றின. யாண்டும் மூண்டு பாய்ந்து கொலைகளைச் செய்தன.

தன் தோளினும் மார்பினும் பீறிட்டு ஓடுகிற உதிர நீரை நோக்கி இளையவன் ஊக்கிக் கொதித்தான்; உக்கிர வீரமாய் உருத்துத் தக்க கணைகளை மிக்க வேகமா எப்பக்கமும் தொடுத்து இந்திரசித்தின் கவசத்தைத் துணித்துத் தொலைத்து அம்புப் புட்டிலை உடைத்து வீழ்த்தி அடலாண்மை புரிந்தான். உடலினும் சில பாணங்கள் உருவி ஓடினமையால் குருதி நீர்கள் பெருகி ஓடின. தன் வீரமேனியில் விரவி ஒழுகுகின்ற இரத்த ஒழுக்கைக் கண்டதும் அத்தீரன் சீறித் திவ்விய வேல் ஒன்றை எடுத்துச் செவ்விய பூசைகள் ஆற்றி மந்திரமுறையோடு நேரே வீசினான்.

வேலின் வேலை.

யார் மேல் வீசினும் அவரது உயிரைப் பருகி உடலைப் பார் மேல் வீழ்க்க வல்ல அப்போர் வேல் பேரொளி வீசிச் சீறி வந்தது; அயன் மகனான மயன் அருளிய அந்த உக்கிர வேல் உருத்து வரவே இலக்குவன் அரிய பல கணைகளைக் கடுத்துத் தொடுத்தான். தொடுத்த பகழிகளையெல்லாம் துணித்து வீழ்த்தி மின்னல் ஒளி வீசி அவ்வேல் மேலே மூண்டு வந்தது; அதன்

அதிசய ஆற்றலை நோக்கி அதிவேகமாய் ஈசன் கணையை எடுத்துப் பூசனையோடு தொடுத்தான். அவ் வீர வேல் துண்டமாய் அயலே வீழ்ந்தது. அரிய வேல் அழிந்து விழவே மேகநாதன் மிகவும் கொதித்து வில்லாடலை விறலோடு செய்தான்; நெருப்பு வாணங்களைப் போல் பாணங்கள் யாண்டும் மூண்டு பாயவே படுகளம் எங்கணும் மீண்டும் அடு துயரமாயின; அவனுடைய போராடல்கள் வானரங்களின் உயிர்களைச் சூறையாடின; விரைந்து புரியும் அவனது வீரத்திறலை வியந்து நின்ற இளையவன் வெகுண்டு மூண்டான். வீறுடு முனைந்து தேரோடு நினைந்தான்.

தேரின் சீர்.

தெய்வீகமான அந்தத் தேரில் அமர்ந்திருக்கும் வரையும் இந்திரசித்தை யாரும் வெல்ல முடியாது; தேரையும் சிதைக்க முடியாது; தேரோடு தொடர்பு கொண்டுள்ளவரையும் பரிகளையும் அழிக்க இயலாது என்னும் இவ்வுண்மைகளை முன்னமே விபீடணன் மூலம் இளைய பெருமாள் உணர்ந்து கொண்டமையால் வேறு வகையால் சாரதியைத் தொலைக்க விரைந்தான். கருதி முயன்ற உறுதி நிலைகள் அரிய மருமங்களாய் மருவி வந்தன. எதிரியின் உளவுகளை அறிந்து இயல்வது புரிந்தான்.

தேர் உளது எனின் இவன்வலி தொலையான்;
போர் உறு புரவிகள் படுகில; புனைபிணி துணிகில.

இந்திரசித்து ஏறி வந்துள்ள தேரின் சீர்மை நீர்மைகளை இதனல் தெரிந்து கொள்கிறோம். அரிய போர் வீரமும் பெரிய வரபலங்களும் இவ்வாறு பெருகியுள்ளமையால் அவனுடைய பொருதிறல்கள் பொருவரு நிலைகளில் பெருகி எவரும் வெருவுற நின்றன. ஒருவரும் நிகர் இலர் என அவ்வீரன் ஓங்கி வருவதற்கு உரிய பல காரணங்கள் பாங்காய்ப் படிந்து வந்தன.

தேகபலம் மனோபலம் புத்திபலம் மந்திரபலம் ஆயுதபலம் வரபலம் முதலியன அவனுக்கு உயர் நிலையை அருளி மிளிர்கின்றன. அரிய உறுதி நிலைகளோடுபொருதிறலும் பொங்கிநின்றது.

பாகன் பட்டது.

தேரின் அதிசய நிலையைத் தெளிவாக அறிந்து கொண்டமையால் அதன் வலியைக் குறைக்க விரைந்து சாரதிமேல் இலக்

குவன் இலக்கு வைத்தான். கடுத்து இக்கோமகன் தொடுத்த கணை அடுத்த கணத்தில் அவன் தலையைத் தரையில் உருட்டி விரைவில் போயது. அரிய துணை அழிந்தது பெரிய துயராயது.

அந்தத் தேர்ப்பாகன் இந்திர சாரதியினும் தந்திரம் மிக வுடையவன்; போரின் அந்தரங்களை நன்கு தெரிந்தவன்; தனது எந்திரத் தேரை எவ்வழியும் சாதுரிய சாகசமாய் நடத்தி வந்தவன்; இந்திரசித்தின் சிந்தனைகளையெல்லாம் முந்துற அறிந்து யாண்டும் எச்சரிக்கையாய்த் தேரை ஊன்று செலுத்தி வந்த சாரதி மாண்டு விழவே அப்போர் வீரன் பொறி கலங்கி நின்றான். உரிய பாகன் உயிரிழந்து போகவே அந்த அரிய தேரும் அலமந்து நின்றது. பெரிய வீரமும் பேதுற நேர்ந்தது.

உய்வினை ஒருவன் தூண்டான் உலத்தலின் தவத்தை நண்ணி
ஐவினை நலிய நைவான் அறிவிற்கும் உவமை ஆகி
மெய்வினை அமைந்த காமம் விற்கின்ற விரகில் தோலாப்
பொய்வினை மகளிர் கற்பும் போன்றதப் பொலம்பொன் திண்டேர்.

தன்னைச் செலுத்தி வந்த சாரதி செத்து ஒழியவே அந்தச் சித்திரத் தேர் நின்ற நிலையைக் கவி இவ்வாறு விசித்திரமாய் விளக்கியிருக்கிறார். பொன் மயமான அழகிய வலிய பெரிய இரதம் என்பது பொலம் பொன் திண்தேர் என்றதனால் தெரிய வந்தது. உருவம் அழகு திண்மை தேசு பெருமை முதலியன மருவி நின்ற அதன் அருமைகளை உணர உரைத்தது அதனை யுடையவனது மகிமை மாண்புகளை நன்கு உணர்ந்து கொள்ள

நடத்த உரிய சாரதி இறந்துபட்டமையால் தேர் புடை பெயராது நிலையில் நின்றது. அந்நிலையை விளக்க வந்த உவமை கலையை விளைத்து வந்தது. கருதிச் சிந்திக்க நேர்ந்தது.

ஒரு துறவி பொறிகளை அடக்கி அரிய தவத்தை மருவி நின்றார்; அவ்வாறு இருந்தாலும் ஐம்புல ஆசைகளும் அவருடைய அறிவை அலைத்து நிலை குலைத்து வந்தன. தவம் கருதி உச்ச நிலையில் ஓங்கிநின்ற அறிவு புல இச்சையால் புலை அடைந்தது போல் அத்தேர் நிலை குலைந்து வலியிழந்து நின்றது.

இச்சையுடைய தவசி அறிவு கொச்சை அடையும்.

இலச்சை கெட்ட வேசியிடம் கற்பு யாதும் இல்லை.

அந்த அறிவும் கற்பும் வறிதே நின்ற தேருக்கு நேராய் நின்றன நிலை அழிந்த தேரின் நிலை தெளிவா விழி தெரிய வந்தது

உரிய கணவன் ஒருவனுக்கே தன் உள்ளத்தையும் உடலையும் உரிமை செய்திருப்பவள் அரிய கற்புடையவள் ஆகின்றாள். குலமகளிடம் குலவியுள்ள கற்பு விலைமகளிடம் விலகி விடுகிறது. தனது தேக போகத்தை விலைக்கு விற்பவள் விலைமகள் என வந்தாள். காமம் விற்கின்ற மகளிர்; விரகில் தோலா மகளிர் என்றது அவரது விலையும் நிலையும் தெரிய வந்தது. விரகு = வஞ்சகம், சூது, கபடம். இந்த வகைகளில் எந்த ஆடவரையும் எளிதே வெல்ல வல்லவர்; யாண்டும் யாருக்கும் யாதும் தோலாதவர். அந்த வெற்றி நிலை இங்கே உய்த்துணர வந்தது.

உலகில் தோன்றியுள்ள மனிதசமூதாயம் ஆண் பெண் என இருபாலில் அடங்கியுளது. ஆடவன் சீலவேலி கோலி மேலான அறிவுடையனாய் விழுமிய மேன்மையை அடைய வேண்டும். பெண் நிறை அரண் மருவிக் கற்பைப் பேணி அற்புத நிலையில் உயர வேண்டும் என்பது ஈண்டு உரிமையாய் உணர வந்தது

ஐவினை நலிய நைவான் அறிவு.

ஐம்புல ஆசையால் மனிதனது அறிவு அவலமாயுழலும் என்பதை இது அறிவுறுத்தி நின்றது. இச்சையை அடக்கிய அளவு தவம் உச்ச நிலையில் உயர்கிறது; அதனால் பேரின்பம் விளைகிறது. அந்த அதிசய இன்பநிலை துதிசெய்ய வந்தது

“மாறி நின்று என்னை மயக்கிடும் வஞ்சப்
புலன் ஐந்தின் வழி அடைத்து அமுதே
ஊறிநின்று என்னுள் எழு பரஞ்சோதி.” (திருவாசகம்)

ஐம்புலன்களையும் அடக்கியே மேலான இன்ப நிலையை மேலோர் அடைகின்றனர் என்பதை இந்த அனுபவ வாசகத்தால் நுணுகி அறிந்து இனிது தெரிந்து கொள்ளுகின்றோம்.

பொறியிற் செறி ஐம்புலக் கனியைப் புத்திக்கவரால் புகுந்திழுத்து
மறுகிச் சுழலும் மனக்குரங்கு மாள வாளா இருப்பேனோ?
அறிவுக்கு அறிவாய்ப் பூரணமாய் அகண்டானந்த மயமாகிப்
பிறிவற்றிருக்கும் பெருங்கருணைப் பெம்மானே! எம் பெருமானே!

ஐவரொடும் கூடாமல் அந்தரங்க சேவை தந்த
தெய்வ அறிவே சிவமே பராபரமே (2)

(தாயுமானவர்)

பொறிவெறிகளால் வருகிற புலன் இன்பம் புலையான துன்பமே; புலனுல் புலையுருத ஞானிகளே நிலையான பேரின்பத்தை எய்துகின்றூர். என்பதை இவை உணர்த்தியுள்ளன. இனிய மன அமைதியில் எழுகின்ற புனிதமான இன்பமே தனி மகிமை யுடையது. தவம், யோகம், ஞானங்களால் அதனை அடையலாம். வெளியே புலன் வழியே அவாவி அலைபவர் உள்ளே மருவியுள்ள ஆன்ம இன்பத்தை இழந்து விடுகின்றனர்.

" Vain, very vain, my weary search to find
That bliss which only centres in the mind. " [Goldsmith]

" உள்ளத்தில் உறைந்துள்ள பேரின்பத்தைக் காண விழைந்து வெளியே நாடி அலைந்தது வீண்; மிகவும் வீண் " என்னும் இந்த ஆங்கில வாசகம் ஈங்கு ஊன்றி உணர வுரியது.

போரைக் குறித்துக் கூறி வரும்பொழுது அரிய அறிவு நலங்களை இவ்வாறு இடையே அருளியிருப்பது கவியின் தத்துவ நோக்கை உய்த்துணரச் செய்கிறது. தவமுடைய அறிவு போல் பதிவிரதையின் கற்புப்போல் உயர் மகிமையோடு வந்த தேர் அவமடையவே இந்திரசித்து மனம் உடைந்து மறுகி நின்றான். உள்ளம் தளர்ந்து உளைந்து நின்றவன் உடனே உறுதி மீக்கூர்ந்து ஊக்கி விரைந்தான். பாகன் அழிந்து போயினும் வேகம் அழியாமல் வீறு கொண்டு மூண்டு சீறி நீண்டான்.

தேரில் பூட்டியிருந்த குதிரைகளைத் தானே நடத்தித் தறுகண்மையோடு போராடினன். தன்னந் தனியே நின்று தேரையும் செலுத்திப் போரையும் புரிந்தது பேராச்சரியமாய் நின்றது. அவனுடைய தீர தைரியமும் அடலாண்மையும் யாரையும் பிரமிக்கச் செய்தன. அதிசய வீரம் துதிகொண்டு நின்றது.

போருத திறம்.

துள்ளுபாய் புரவித் தேரும் முறைமுறை தானே தூண்டி
அள்ளினன் பறிக்கும் தன்பேர் ஆகமே ஆவம் ஆக
வள்ளல்மேல் அனுமன் தன்மேல் மற்றையோர் மற்றிண்டோள்மேல்
உள்ளுறப் பகழி தூவி ஆர்த்தனன் எவரும் உட்க.

வந்தன. மூல பலச்சேனைகளைக் கண்ட தேவர்கள் குடல் கலங்கி ஓடி வந்து கண்ணுதல் கடவுளை வணங்கிக் கடுந்திகிலோடு அபயம் புகவே அப்பெருமான் ஆறுதல் கூறி தேறுதல் பெறும்படி அவர்க்கு அருளியுள்ள மொழிகள் பொருள் பொதிந்து போத ஒளிகளை வீசி நிற்கின்றன. எண்ணரிய நிலையில் விண்ணவரும் அஞ்சி அயர மண்ணுலகில் நெடிய கடல்கள் போல் மண்டியெழுந்த கொடிய அரக்கர் திரள்களை இராமன் எளிதே அழித்து ஒழித்துவிடுவான் என இறைவன் தெளித்தருளியது இமையவர்க்கு வியப்பையும் விழிப்பையும் விளைத்தருளின. இராமன் என்று வெளிப்படையாகப் பெயரைக் குறியாமல் அக்கோற்றவன் என வெற்றிப் பேரைச் சுட்டிக் கூறியது வெல்ல மூண்டு வந்துள்ள அவனது மூல நிலையை நன்கு விளக்கி நின்றது. இராமனுடைய அவதாரம் அதிசய மருமமுடையது; தேவரும் அறிய முடியாதது; பரமன் ஒருவனே அறிய வுரியது; அதனால் பரம ரகசியம் என இராமாவதாரம் மருவி வந்துள்ளது; அவ்வுண்மையை உரிமையோடு ஈண்டு நாம் உணர்ந்து கொள்ளுகிறோம்.

உள்ளம் தேறி அமரர் அமைதியாய் இருக்கும்படி ஈசன் இவ்வாறு உறுதி கூறி ஆறுதல் புரியவே அவர் தேறி நின்றனர்; சிறந்த அறிவாளிகளாயினும் மூண்டு வந்த நிருதர் படைகளைக் கண்டு தேவர் தியங்கி மயங்க நேர்ந்தனர். அவரது மயக்கம் தெளிய மகாதேவன் விதி நிலையை விளக்கி மதிநலம் அருளினன். ஆண்டவன் அறிவுரை நீண்டவுறுதியை நினைவுறுத்தி அவரை நிலை நிறுத்தி நின்றது. உறுதிமொழி அமரர் உள்ளம் தெளிய வந்தது.

இக்குலம் எல்லாம் பொன்றுவிப்பதோர் விதி தந்தது.

கடல்கள் போல் பொங்கியெழுந்து யாண்டும் அடல் கொண்டு வருகிற இந்த அரக்கர் குலத்திரள்கள் யாவும் ஒருங்கே அழிந்து நாசமாகும்படி ஊழ்வினை திரட்டிக் கொண்டு வருகிறது என அவரது அழிவு நிலையை விழி தெரியத் தெளிவாக விளக்கியருளினர். அச்சத்தால் அலமந்து கலங்கிய தேவர் யாவரும் பரமன் கூறிய உறுதி மொழிகளைக் கேட்டதும் உள்ளம் தேறி உறுதி பூண்டு நின்றார். அச்சநிலை ஒழியவே உச்சநிலை ஓங்கியது.

வானரங்கள் மறுகி ஓடியது.

மூலபலபடைகள் மூண்டு வருவதைக் கண்டதும் வானரங்கள்

யாவும் கலங்க நேர்ந்தன. அளவிடலரிய நிலையில் அரக்கர் வெள்ளங்கள் ஆர்த்து அடல் மண்டி வரவே குரங்குகள் குடல் கலங்கி ஓடலாயின. அவை உள்ளம் உடைந்து ஓடிய ஓட்டங்கள் எள்ளல் இழிவுகளைக் காட்டியதோடு நெடிதாய் நீண்டு வந்த நிருதர் திரள்களின் பொருவரு நிலைகளையும் நேரே விளக்கி நின்றன.

புற்றில் நின்றுவல் அரவினம் புறப்படப் பொருமி
இற்றதுஎம்வலி எனவிரைந்து இரிதரும் எலிபோல்
மற்றை வானரப் பெருங்கடல் பயங்கொண்டு மறுகிக்
கொற்ற வீரரைப் பார்த்தில திரிந்தது குலைவால். (1)

அணையின் மேற்சென்ற சிலசில ஆழியை நீந்தப்
புணைகள் தேடின சிலசில நீந்தின போன
துணைகளோடு புக்கழுந்தின சிலசில தோன்றாப்
பணைகள் ஏறின மலைமுழை புக்கவும் பலவால். (2)

அடைத்த பேரணை அளித்தது நமக்குயிர் அழிவால்
உடைத்துப் போதுமால் அவர்தொடராமல் என்றுரைத்த
புடைத்துச் செல்குவர் விசும்பினும் புகுந்தன போதோன்
படைத்த திக்கெலாம் பாய்ந்தன சென்றன பயத்தால். (3)

அரியின் வேந்தனும் அனுமனும் அங்கதனவனும்
பிரிய கிற்றிலர் இறைவனை நின்றனர் பின்றார்
இரிய லுற்றனர் மற்றையோர் யாவரும் எறிநீர்
விரியும் வேலையைக் கடந்தனர் நோக்கினன் வீரன். (4)

மூண்டு வந்த சேனைகளைக் கண்டு வானரங்கள் வெருண்டு திசைகள்தோறும் சிதறி விரைந்து ஓடியிருக்கும் நிலைகளை இங்கே வியந்து நோக்கி வருந்தி நிற்கிறோம். அடலாண்மையும் ஊக்கமும் உடையராய் எவ்வழியும் உறுதி பூண்டு மூண்டு பொருது வந்த வானர வீரர்கள் இவ்வாறு அஞ்சி அலமந்து நெஞ்சம் கலங்கி ஓடியது நெடிய அவலக் காட்சியாய் நீண்டு நின்றது.

வலிய கொடிய நெடிய நாகப் பாம்புகளைக் கண்டு எலிகள் ஓடியது போல் அரக்கர் சேனைகளை நோக்கி வானர சேனைகள் ஓடிப் போயின என்றது உருத்து வந்த அந்தச் சேனை சமுத்திரங்களின் திறல்களையும் வலிகளையும் தெளிவாக விளக்கியது. எல்லை மீறிய படைகளைக் காணவே எல்லாரும் கலங்கினர்; நெஞ்சத் திகிலால் நிலைகுலைந்து கூட்டம் கூட்டமாய் ஓட்டம் பிடித்தனர்.

அதனை எறிந்து கொல்லத் தன் கையில் யாதும் இல்லை; அல்லலுழந்து நாடினன்; தன் மார்பில் பாய்ந்திருந்த வேலைக் கண்டான்; உள்ளம் உவந்து ஒல்லையில் பறித்து எல்லை நோக்கி வந்த யானையை எறிந்து கொன்றான். அந்த வீரமகன் செய்த தீர நிலையைத் தேவர் இதில் வீரச்சுவை கூரக் கூறியிருக்கிறார்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இந்நாடு பீடு மிகப் பெற்றுப் பெருமித நிலையில் பெருகியிருந்தது; வீரர்கள் நேர்மையான தீர தைரியங்களோடு யாண்டும் விளங்கி நின்றனர். அந்த நிலையை இந்த அருமைத்திருக்குறள் நம் சிந்தை தெளியச் செய்துள்ளது. கால நிலை கரும நிலையைக் காட்டி நின்றது.

அரிய அரியேறுகளோடும் பெரிய மதயானைகளோடும் போராடி வந்த வீர மரபினர் இன்று நரிகளோடும் நாய்களோடும் பூனைகளோடும் போராடும் நிலையில் புலையாயிழிந்து நிலை குலைந்து போயுள்ளனர். உண்மையான உயர்ந்த குறிக்கோள் ஒழிந்து போகவே புன்மைச் சிறுமைகள் புகுந்து கொண்டன.

பண்டை மக்கள் பால் கண்ட வீரங்களையே நம் கம்பர் பெருமான் தம் காவியத்தில் யாண்டும் காட்டி வருகிறார். ஆகமே ஆகம்; அள்ளினன் பறிக்கும் என்ற வீர வாசகம் வள்ளுவப் பெருமான் வாய் மொழிகளைப் பறித்து வந்துள்ளது.

அரிய துணைகள் இழந்தும் உரிய ஆயுதங்கள் ஒழிந்தும் உள்ளம் தளராமல் இந்திரசித்து ஊக்கிப் போராடி வருவது உக்கிர வீரங்களாய் ஒளி பெற்று ஓங்கி நின்றது. இதுவரையும் பகைமைக் கண்ணோடு பார்த்து இகழ்ந்து தூற்றி வந்த தேவர்கள் இப்பொழுது இந்திரசித்தை உவந்து வியந்து புகழ்ந்து போற்ற நேர்ந்தனர். அதிசய வீரரை எவரும் துதி செய்வர் ஆதலால் அந்த விதி முறையில் மதிமறந்து வானவரும் அம்மான வீரனை மகிழ்ந்து பாராட்டி மதித்துப் புகழ்ந்தனர்.

அவல நிலையிலும் அஞ்சாமல் நின்று அவன் செய்த அதிசயப் போர் பகைவரான அமரரையும் தொகையாகத் துதி செய்யச் செய்தது. சிந்தினர் தெய்வப் போற்பூ என்றதனால் மந்தாரம் பாரிசாதம் கற்பகம் முதலிய தெய்வத்தருக்களிலிருந்து மலர்களை வாரியிறைத்து அமரர் ஆரவாரித்துள்ளமை தெரிய வந்தது.

மனிதன் மீதும் வானரங்கள் மீதும் நேரே அம்புமாரி பொழிந்துள்ளவன் மேல் வானவர் பூமாரி பொழிந்துள்ளனர். குல விரோதிகளும் உளம் மகிழ்ந்து புகழ இந்திரசித்து அடலாண்மையோடு போர் ஆடல் புரிந்திருப்பது வியந்து சிந்திக்கத் தக்கது.

சூரர் என்பார் துஞ்சும்போது உணர்வில் சோரார்.

போரில் மூண்டு போராடி நின்ற சூரர் அங்கே வெல்ல முடியாமல் அல்லல் அடைந்து சாக நேர்ந்தாலும் தம் உள்ளம் தளரார்; உணர்வு குன்றார்; உறுதியான ஆண்மையோடே சாவை உவந்து கொள்ளுவர் என்பது இதனால் உணர வந்தது.

தீரம், சூரம், வீரம் என்னும் மொழிகள் நேரே வீரத்திறல்களையே விளக்கி வருகின்றன; வரினும் தம்முள் வேறுபாடுகள் மருவி உள்ளன. வீரப் பேர்கள் சீரைச் சேர்ந்தன.

தீரன் = யாண்டும் அஞ்சாத ஆண்மையாளன்.

சூரன் = எதிரி அஞ்சி அயர அடலாண்மை புரிபவன்.

வீரன் = பெருந்தன்மை நிறைந்த அருந்திறலாளன்.

சூரத் தனத்தில் இந்திரசித்து பேர்மிகப் பெற்றவன்; வில் வீரத்தில் எல்லையில்லாத வல்லமை யுடையவன்; யாரிடத்தும் தோல்வி கண்டறியாதவன்; எங்கும் வெற்றியே பெற்று வந்தவன்; அழிவு காலம் மூண்டமையால் இங்கே அல்லல் அடைய நேர்ந்தான்; நேர்ந்தாலும் நெஞ்சம் கலங்கவில்லை; அஞ்சாத தீரத்தோடே அடலாண்மைகள் புரிந்து வருகிறான். அவனுடைய அதிசய நிலையை நோக்கி இலக்குவனும் வியந்தான். இவ் வீரக் குரிசிலின் வியப்புகள் அத் தீரன் செய்துள்ள அருந்திறலாண்மைகளைத் துலக்கி அற்புதங்களை விளக்கி நின்றன.

"நான் எய்த அம்புகளைத் தன் உடலில் இருந்து பறித்து என்மேல் வீறோடு அவன் மாறி வீசுகின்றான்; எறிகின்ற குறிப்பு யாதும் தவறவில்லை; உள்ளம் கலங்காமல் ஊக்கியே போராடுகின்றான்; தேகம் முழுவதும் சல்லடைக் கண்களாகப் பாணங்கள் ஊடுருவிப் போயுள்ளன; போயினும் மானவீரம் குன்றாமல் மூண்டு முனைந்து மீண்டும் மீண்டும் வென்றுவிட வேண்டும் என்றே நீண்டு வருகிறான்; எத்துணை வீரம் இச்

சுத்த வீரனிடம் தோய்ந்து துதிகொண்டு நிற்கின்றது!" என இன்னவாறு இளைய பெருமாள் எண்ணி எண்ணி இந்திரசித்தை வியந்திருத்தலால் அவனுடைய வீரத் திறல்களையும் வில்லாடல்களின் வேகங்களையும் நாம் யூகித்து உணர்ந்து கொள்ளுகிறோம்.

மொய்கணை கோடி கோடி
மொய்க்கவும் இளைப்பு ஒன்று இல்லான்.

மேகநாதனுடைய தேகம் இருந்த நிலையையும், அவனது வீர வேகத்தையும் இது விளக்கியுள்ளது. பகழிகள் உடல் முழுவதும் அடலோடு பாய்ந்துள்ளன; அப்படியிருந்தும் யாதும் கலங்காமல் ஏதும் எவ்வழியும் தளராமல் மோதி முனிந்து மூண்டு போராடியிருக்கிறான். மானம் வீரம் குன்றாத அந்த மன நிலையை நினைந்து நினைந்து இலக்குவன் வியந்தான்

ஆண்தொழில் ஆற்றல் இவனோடு அஞ்சும்.

தன்னோடு மூண்டு போராடி வந்த இந்திரசித்து ஆயுத பலங்களை இழந்தும் இழிந்து இளையாமல் உள்ளத்திறலோடு ஊக்கி உஞற்றி வருதலை நோக்கி இலட்சுமணன் இவ்வாறு புகழ்ந்திருக்கிறான். அஞ்சாத ஆண்மை அசையாத ஆற்றல் சிறந்த போர் வீரம் உயர்ந்த வீரத்திறல் அவனிடம் ஒளிபுரிந்து மிளிர்வதையும், அத்தகைய அதிசய வீரன் அழிவடைய மூண்டுள்ளதையும் நினைந்து பரிந்து நெஞ்சம் இரங்கி இக்குலமகன் கூறியிருப்பது உயர் பெருந்தகைமையாய் ஒளி வீசியுள்ளது.

இந்திரசித்து செத்தால் சுத்த வீரமும் அவனோடு செத்ததாம் என இவ்வுத்தம வீரன் சித்தம் வியந்து தன் உள்ளேயே விளம்பியிருத்தலால் மூண்டுள்ள முடிவுகளைக் கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம். வீரக் குரிசிலின் பரிவுரை வியப்பில் விளைந்தது.

இனி மேகநாதன் மீண்டு போக முடியாது; மாண்டே விழுவான் என்று இந்த ஆண்டகை உறுதி செய்து ஊக்கி உருத்தாலும் அவனது பொருதிறலையும் பரிபவ நிலையையும் நோக்கி மறுகி நின்றான். பெருந்தன்மை பெருங்கருணையாய் விரிந்தது.

தெவ்வின் திறலை வியந்து நோக்கி அவ்வாறு இளையவன் அயர்ந்து நிற்குங்கால் வீடணன் அருகே வந்தான். வெற்றியை விரைந்து பெற வேண்டும் என்று உற்ற உளவுகளை உறுதிபெற

உரைத்து ஊக்கி நின்றான்: "வீர நாயகா! எதிரியின் போராடலை வியந்து காலம் கடத்தி நின்றால் சாலவும் பிழையாம்; மாய வஞ்சங்களில் எதிரி அதிசய ஆற்றலுடையவன்; தேரைக் கடாவி வானில் செல்லினும் செல்லுவன்; போர்க்களத்திலிருந்தபடியே விரைந்து மறைந்து போய்க் கொடிய மாய வேலைகளைக் கடிது செய்யினும் செய்வன்; மேக மண்டலத்தில் ஒளிந்து நின்று கொண்டு நம்மை ஒழித்து விடும்படி தீய மாயத் தீமைகளைச் சீக்கிரம் விளைத்து விடுவன்; வெளியே தப்பிப் போகாதபடி இவனை உடனே அழித்து விடுவதே நலம்; இரவில் இவன் சாகான்; விடியும் சமையம் நேர்ந்துள்ளது; பகலவன் தோன்றிய வுடனே இவனைத் தொலைத்து வீழ்த்த வேண்டும்; அதுவே நீ தோன்றிய பயனும் தோன்றலே!" என இன்னவாறு விபீடணன் கூறவே வீர இளவலும் விரைவுநிலையை விழைந்து கூறினான்.

இலக்குவன் குறித்தது.

"முடிவாக வந்து மூண்ட இவன் இனி மீண்டு போகான்; இந்தப் போர்க்களத்தை விட்டு யாண்டுப் போனாலும் மாண்டே படுவான்; மாயமாய் மறைந்து போகும் இடம் எல்லாம் என் தூய பகழிகள் தொடர்ந்து போய் இவன் உயிரைப் பருகி வருமேயன்றி வறிது போகா; இந்த உண்மையை நீ விரைவில் நேரே காணலாய்" என இவ் வீரக் குரிசில் இங்ஙனம் கூறி முடித்துப் போரைத் தொடங்க நேர்ந்தான். பொழுதும் விடிய நேர்ந்தது. கதிரவன் உதயம் கதி தர வந்தது.

சூரியன் தோன்றியது.

சிவந்த கிரணங்களை வீசிச் சூரியன் கீழ் வானத்தில் கிளர்ந்தது வீரிய ஒளியாய் அன்று விளங்கி நின்றது. அவன் தேரில் தோன்றிய தோற்றம் போரில் தோன்றியவன் போலவே பொலிந்து விளங்கியது. அரிய வீரனாய் அவன் தெரியலானான்.

அரக்கனோடு ஒத்து அருக்கன் உதித்தனன்.

இந்திரசித்தையும் சூரியனையும் நேர் நிறுத்திக் கவி இங்ஙனம் சுவையாக் காட்டியிருக்கிறார். காட்சியைக் கருதிக் காண்பவர் உருவ நிலைகளைக் கூர்ந்து ஓர்ந்து உவந்து கொள்வர். அருக்கன் = சூரியன். இருளை ஒழிப்பவன்; ஒளிபுரிந்து அருளைச்

செய்பவன் என்னும் பொருளைப் பொதிந்து இப் பெயர் போந்துள்ளது. அரக்கன் என இந்திரசித்தை இங்கே குலத்தின் பெயரால் குறித்தது அமரர் குலத்தை அடக்கி ஆண்ட அவனது அதிசய நிலையைக் கருதியுணர்ந்து உறுதி காண வந்தது.

தேவர் குலத்தை வென்று கீர்த்தியோடு சிறந்து நின்றவன் சூரிய தேவனேடு சேர்த்து எண்ண நேர்ந்தான். உடல் முழுதும் சிவந்த இரத்தம் ஒழுகி ஓட இந்திரசித்து தேரில் நிற்கின்ருன்; வானவீதியிலும் செல்ல வல்லவன் ஆதலால் சிவந்த கிரணங்களை வீசித் தேர் மேல் தோன்றுகின்ற சூரியன் என அவ் வீரியன் விளங்கலானன். போரில் பொருது குருதி நீர் பெருக நின்றவன் தேரில் வருகின்றவனை நேர் என நேர்ந்தான். உற்ற பொழுது உரிமை தழுவி வந்தது. வெற்றி வீரமும் வெளியறிய நின்றது.

உதய கால வருணனை காவியக் கதையோடு மருவி இந்திரசித்தின் நிலைமையை ஓவிய உருவமா உணர்த்தியிருக்கிறது. உணர்வின் ஆட்சி உவகைக் காட்சியாய் நிலவியுள்ளது.

பொழுது விடிந்தது; விடியவே இலங்கை வேந்தன் மகன் முழுதும் முடிந்தான் என அமரர்கள் குழுமி நின்று பொருகளத்தை நோக்கிப் பெருமித நிலைகளில் ஆரவாரங்கள் புரிந்தனர். வானத்தில் உறைந்து இன்ப போகங்களை நன்கு நுகர்ந்து இனிது வாழ்ந்து வந்த தங்கள் மானத்தைக் கெடுத்துத் துன்பக் கடலில் ஆழ்த்தியுள்ளவன் அன்று அழிந்து படுவான் என்று தெளிந்து கொண்டமையால் அமரர் யாவரும் தமர்களோடு உவந்து அமரை நோக்கி ஆவலோடு நின்றனர்.

போராட மூண்டு இந்திரசித்து அன்று ஏறிவந்த தேரும், எடுத்து வந்த வில்லும் அதிசய நிலைகளில் அமைந்திருந்தன ஆதலால் அவை நிலையாயிருக்கும் வரையும் அவன் தொலையான் என்று வீடணன் கூறவே இளையவன் அதிவிநயமாய் நாடி யாவும் வீடி ஒழியுமாறு வினையாடலை விரைந்து புரிந்தான். வீரக் குரிசில் செய்த வில்லாடல் வித்தகத்திறல்களை விளைத்து நின்றது.

ஆர்அழியாத குலத்து அண்ணல் தன் அருளின் ஈந்த
தேர்அழியாத போதும், சிலைகரத்து இருந்த போதும்,
போர்அழியான் இவ் வெய்யோன்; புகழ் அழியாத பொற்ருேள்
வீர! இது ஆணை என்ருன் வீடணன் விளைவது ஓர்வான். (1)

பச்சைவெம் புரவி வீயா; பல்லியச் சில்லி பாரில்
நிச்சயம் அற்று நீங்கா என்பது நினைந்து வில்லின்
விச்சையின் கணவன் ஆனான் வின்மையால் வயிரம் இட்ட
அச்சினோடு ஆழி வெவ்வேறு ஆக்கினான் ஆணி நீக்கி. (2)

மணிநெடுந் தேரின் தட்டு விட்டது மறிதலோடும்
அணிநெடும் புரவி எல்லாம் ஆற்றல வாய அன்றே
திணிநெடு மரம் ஒன்று ஆழி வாள்மழுத் தாக்கச் சிந்திப்
பணை நெடு முதலும் நீங்கப் பாங்குறை பறவை போல. (3)

அழிந்ததேர்த் தட்டில் நின்றும் அங்குள்ள படைகள் அள்ளிப்
பொழிந்தனன் இளையவள்ளல் கணைகளால் துணித்துப் போக்க
மொழிந்திரு வகையில் விண்ணை முட்டினான் உலகம் மூன்றும்
கிழிந்தன என்ன ஆர்த்தான் கண்டிலர் ஓசை கேட்டார். (4)

மல்லின்மா மாரி அன்ன தோளினான் மழையின் வாய்ந்த
கல்லின்மா மாரி பெற்ற வரத்தினால் சொரியும் காலைச்
செல்லுவான் திசைகள் ஓரார் சிரத்தினோடு உடல்கள் சிந்தப்
புல்லினார் நிலத்தை நின்ற வானர வீரர் போகார். (5)

நாண்கிலன் கல்லின் மாரி அல்லது காளை வீரன்
சேண் கலந்து ஒளித்து நின்ற செய்கையால் திசைகள் எங்கும்
மாண்கலந்து அளந்த மாயன் வடிவென முழுதும் வெளவ
ஏண்கலந்து அமைந்த வாளி ஏவினான் இடை விடாமல். (6)

மறைந்தன திசைகள் எங்கும் மாறுபோய் மலையும் ஆற்றல்
குறைந்தனன் இருண்ட மேகக் குழாத்திடைக் குருதிக் கொண்மூ
உறைந்துளது என்ன நின்றான் உருவினை உலகம் எல்லாம்
நிறைந்தவன் கண்டான் காணா இளையதோர் நினைவதானான்.

போரில் முடிவாக நேர்ந்துள்ள அபாய நிலைகளை நெடிது நோக்கி நாம் நெஞ்சம் வியந்து நிற்கிறோம். சிவபெருமான் அருளால் கிடைத்த அந்த அருமைத் தேரில் அமர்ந்திருக்கும் வரையும் இந்திரசித்தை வெல்ல முடியாது என்று வீடணன் சொல்லவே இலக்குவன் ஒல்லையில் அதன் உருவைக் குலைத்தான்; ஆதாரமாய்த் தாங்கி நின்ற அச்சை வேறு ஆக்கினான்; உருளைகள் அயலே உருண்டு ஓடின; உச்ச நிலையில் கதிவேகமாய் ஊக்கி நின்ற பச்சைப் புரவிகள் பரிந்து போயின; அழி

யாத தேர் இவ்வாறு அழிந்து போகவே இந்திரசித்து சிந்தை தளர்ந்து அந்தரத்தில் பாய்ந்து மறைந்து போயினன்.

விரைந்து வேகமாய்த் தாவி மேகமண்டலத்தில் உறைந்து நின்றவன் விரைந்து மாயப் போர் புரிந்தான். சுடு கணைகள் கோடி கோடியாய் வானிலிருந்து யாண்டும் கடிது பாய்ந்தன; கல்லின் திரள்களும் கால மாரி போல் கலந்து வீழ்ந்தன; அவற்றால் வானர சேனைகள் மடிந்து மாய்ந்து மண்ணில் சாய்ந்தன.

கண்ணுக்குத் தெரியாமல் நின்று கொண்டு கடும் போர் புரிந்து நெடுங்கொலைகளை விளைக்கின்ற அந்தக் கொடுஞ் செயல்களைக் கண்டு இளையவன் உள்ளம் கொதித்தான்; உருத்து மூண்டு உறுதியா முடிவு செய்ய விரைந்தான். கொடிய பகைவனது அடுதிறல் நிலைகளை அடியோடு விலக்கிக் கடிது குறி செய்த இக்குலவீரன் கருதி நின்றது உறுதியான வெற்றியாய் ஒளி செய்து விளங்கியது. வெல்லும் திறல் வெளியறியநின்றது.

வில்லின் விச்சையின் கணவன்.

இலக்குவனை இங்கே இவ்வாறு குறித்திருக்கிறார்.

வில்வித்தைக்குத் தனி முதல் நாயகன் என இவ்வீரக் குரிசிலை விளக்கியிருப்பது வியந்து சிந்திக்கத்தக்கது. தனு வேதத்தின் மனுவே! என்று மண்ணும் விண்ணும் புகழ இராமன் மகிமை பெற்றிருப்பது போல் இராமானுசனும் அதில் தலைமை பெற்றிருக்கிறான். அந்த நிலைமை இங்கே நன்கு தெரிய வந்தது.

உரிய கணவனைப் பிரியமா மருவி மகிழும் பதிவிரதைபோல் வில்லின் விஞ்சை இலக்குவனை இனிது தழுவி இன்புற்று வருகிறது. கணவன் சொல்வழி ஒழுகும் கற்புடையவள் போல் வில் வித்தை இக்குலமகன் கருதிய படியே தொழில் புரிந்து வருகின்றது என்பதை இந்த உருவக மொழியால் உணர்ந்து கொள்ளுகிறோம். அரியவில்லாண்மை உரிய இல்லாளாய் உவகைதருகிறது.

அதிசய வில் வீரனை இந்திரசித்தும் துதி செய்து போற்றும் வில்லாளியாய் இவ்வீரக் குரிசில் விளங்கி நிற்றலைக் கவி இங்ஙனம் விளக்கியருளினர். வீர தேவதை ஆர்வம் மீதூர்ந்து நோக்கும் அற்புத வீரன் எதிரியின் மாயப்போர் நிலையைக் கூர்மையா நோக்கி நேரே ஓர்மையோடு குறி செய்து நின்றான்.

சிவந்த தேர் முதலியன யாவும் இழந்து நேரே வானில் மறைந்தவன் மான வீரமாய் மீண்டு மாயவேலைகளை மூண்டு புரிந்தான். திரண்டு உருண்ட சிறிய கல்லுகள் எங்கும் விரைந்து பாய்ந்தன. பாயவே அவற்றால் வானரங்கள் மாய்ந்து மடிந்தன. மறைந்து நின்று கொண்டு கல் மாரி பொழிகின்ற அவனை விரைந்து கொல்ல வேண்டும் என்று இளையவன் வெகுண்டு மூண்டாலும் உருவம் தெரியாமையால் உள்ளம் கருதிச் சிறிபோது மறுகி நின்றான். காயம் காணாத மாயம் கடுந்துயராயது.

கல்லின் மாரி அல்லது காண்கிலன்.

ஆகாயத்திலிருந்து அடலோடு வந்து பாய்கிற கல்லின் மழைகளைக் கண்டானே அன்றி வேறு யாதும் காணவில்லை என்பதை இது காட்டியுள்ளது. அந்த மாயப் போரில் மறுகியுள்ளதை இதனால் அறிந்து கொள்ளுகிறோம். யாண்டும் மூண்டு பாய்ந்து கல்லுகள் கொல்லும் கொலைகளைக் கண்டு உள்ளம் துடித்தவன் உருத்துக் கணைகளைத் தொடுத்தான். வானவீதி எங்கணும் பாணங்களை வாரி வீசினான்.

வாளி ஏவினான் இடைவிடாமல் என்றது எதிரியைக் குறி பார்த்து எய்யாமல் ஆகாயத்தை நோக்கி அம்புகளைக் கடுத்துத் தொடுத்தமையை விளக்கி நின்றது. வாயு அக்கினி முதலிய தெய்வ மந்திரங்களோடு எய்த பாணங்கள் வானில் நீண்டு பாயவே மேகநாதன் புரிந்து நின்ற மாயப்போரின் வேகம் குறைந்தது. அவனது தேகமும் தெரிய நேர்ந்தது.

இந்திரசித்தின் நிலை.

தனது மேனியிலிருந்து குருதி நீர் சோர மேக மண்டலத்தில் அவன் மறைந்து நின்றான். கையில் அரிய வில் இருந்தாலும் எய்வதற்கு உரிய அம்புகள் இல்லாமையால் செயல் இழந்து துயருழந்தான். குன்றி நின்றாலும் எப்படியாவது எதிரியை வென்று தொலைக்க வேண்டும் என்று வீறு கொண்டு விரகுகள் சூழ்ந்து கரவுகள் ஓர்ந்து கடுமையாய் மூண்டு நின்றான்.

இலக்குவன் இயற்றியது.

இருண்ட மேகங்கள் இடையே இரத்தம் தோய்ந்த சிவந்த மெய்யனாய் இந்திரசித்து மறைந்து நிற்பதை இலக்குவன் நேரே

போய்த் தடுத்து நிறுத்தவே மீண்டு வந்து ஓர் இடத்தில் அமர்ந்து கொண்டு தாங்கள் ஓடி ஒளிந்தமைக்குக் காரணத்தை எடுத்துக் காட்டிப் பூரணமாக விடுதலை செய்யும்படி மன்றாடி வேண்டு கின்றன. வேண்டுகோள் நீண்ட குறிப்போடு நேரே வந்தது.

இருவர் விற்பிடித்து யாவரைத்
தடுத்து நின்று எய்வார்?

தங்கள் நிலைமையையும் எதிரிகளின் வலிமைகளையும் இங்ஙனம் குறித்திருக்கின்றனர். இராமன், இலக்குவன் என்னும் இருவரே நமக்குத் தலைவர். இரண்டு பேரும் சிறந்த வில்லாளிகள்; உயர்ந்த போர் வீரர்கள்; அரிய பல வெற்றிகளைச் செய்து காட்டியிருக்கின்றனர்; ஆயினும் இப்பொழுது மூண்டு வருகிற சேனை சமுத்திரங்களின் எதிரே இவர் என்ன செய்ய முடியும்? என இன்னலுழந்து பன்னியிருப்பது உன்னியுணர வந்தது.

கடல்கள் கொந்தளித்துக் கொதித்து வருவனபோல் படைகள் அடல் கொண்டு யாண்டும் நீண்டு எல்லை மீறி மூண்டு வருகின்றன; அவற்றின் எதிரே தேவர் முதல் யாவரும் யாதும் செய்ய முடியாது; தேவதேவரான மூவருமே வெல்ல முடியாது; அப்படியிருக்க மனிதர் இருவர் என்ன செய்ய முடியும்? என்று இப்படி நிலைகுலைந்து பேசியிருக்கின்றனர். வாய்மொழிகள் அவருடைய உள்ளத்திகில்களை நன்கு விளக்கியுள்ளன.

அரக்கரைக் கடப்பார் மானுடர் கொல்?

தேவர்களை வென்று யாவரையும் அடக்கி எல்லா உலகங்களையும் தம் ஆளுகைக்குள் ஆக்கித் தலைமையோடு வாழ்ந்து வருகிற நிருதரை மனிதர் வெல்ல முடியுமா? புல்வாய் புலியினங்களை வெல்லப் போனது போல் மனிதர் அரக்கரை வெல்ல வந்துள்ளனர்; வீணே சாக மூண்டது போல் இது விவேகம் இல்லாத செயலேயாம் என மயலோடு மயங்கி உயங்கியுள்ளனர்.

ஊழிக்காலத்தில் உலகங்களையெல்லாம் ஒருங்கே அழித்து ஒழிக்கின்ற உருத்திர மூர்த்தியும் இந்த மூலபலத்தில் வருகின்ற ஒரு அரக்கனைக் கொல்ல வேண்டும் ஆனால் ஆயிரம் ஆண்டுகள் செல்லுமே! அத்தகைய கொடிய நெடிய அரக்கர்கள் கோடானுகோடியாய்க் கடல்போல் கொதித்து வருகின்றனரே!

இவரோடு எதிர்த்து நிற்பது யார்? குரங்குகளாகிய நம்மைத் துணை சேர்த்துக் கொண்டு மனிதர் இருவர் போராட வந்திருப்பது யாரும் எள்ளி இகழ்ந்து சிரிப்பதற்கே ஏதுவாய் நின்றது. இந்திரசித்து, கும்பகன்னன், அதிகாயன் முதலானவர்களை வென்றதை நினைந்து கொண்டு நாம் வீரம் பேசலாகாது; முன்னம் நடந்தது போல் இனிமேல் நடக்கும் போர் எளிதா முடிந்து விடும் என்று எண்ணுவது முழு மடமையாம்; முன்பு மாண்டு போன வீரர்களை விட இப்பொழுது மூண்டு வருபவர் எவ்வளவோ மடங்கு நீண்ட அதிசய வலியினர்; அவர்களுடைய உருவ நிலைகளை எண்ணுந்தோறும் எங்கள் உள்ளங்களில் அச்சமும் திகில்களும் ஓங்கி நிற்கின்றன. ஆவிகள் அலமந்து அயர்கின்றன.

இதுவரை யாண்டும் அஞ்சாமல் மூண்டு போராடி வந்த நாங்கள் இப்பொழுது இப்படி மீண்டு விலகி ஓடியதற்குக் காரணத்தைத் தாங்கள் பூரணமாக் கருதியுணர வேண்டும்.

அரசிளங்குமரன்; வாலிப வயது, இளமறி பயம் அறியாது என்பது பழமொழி. அந்த நிலைமையில் சிந்தை துணிந்து எங்களை அழைக்க வந்திருக்கின்றீர்; உலக நிலையைச் சரியாகத் தெரிந்தால் இந்தக் கலக நிலையில் நாம் தலையிடக் கூடாது என்று நன்கு தெளிந்து கொள்வீர்; அத்தகைய தெளிவோடு எங்கள் உயிர் வாழ்வுக்கு வழி கோலி யருளுக என்று மொழியாடி நின்றார்.

என்னப்பா! இவ் எழுபது வெள்ளமும் ஒருவன்
தின்னப் போதுமோ?

மூலபலச் சேனையில் மூண்டு வருகிற அரக்கர்களைக் கண்டு வானரத் தலைவர் அஞ்சியிருக்கும் அச்சத்தை இது உச்சமா வடித்துக் காட்டியுள்ளது. எழுபது வெள்ளம் குரங்குகளையும் ஒருவன் எளிதே பிடித்து வாயில் போட்டு மென்று தின்று விடுவான் என்று அஞ்சி நடுங்கினமையால் அயலே ஓட நேர்ந்தனர்.

உடல் நிலையிலும் அடல் வலியிலும் நெடியராயும் கொடியராயும் நீண்டு வருகிற கோர வடிவினர்; கொலை நிலையினர் எனக் கலை நடுங்கியுள்ளனர்; மரண பயத்தால் மருண்டு மறுகியிருக்கின்றனர்; அவ்வுண்மை இவ்வுரையால் உணர வந்தது.

என்னப்பா! என அங்கதனை இங்கு விளித்திருப்பது இயல்பான பேச்சு வழக்காய் எழுந்தது. என் அப்பனே! என்ற மரியாதையும் இதில் மருவியுள்ளது. தாங்கள் எப்படியாவது தப்பிப்போய் விட வேண்டும்; தங்களைத் தடுத்து நிறுத்தாமல் வெளியே அனுப்பிவிட வேண்டும் என்று அவர் மூண்டு முனைந்து நிற்றலை உரைகள்தோறும் கூர்ந்து ஓர்ந்து உணர்ந்து வருகிறோம்.

பிரளய கால வெள்ளம் போல் நிருதர் சேனைகள் எல்லை மீறி வருகின்றன. இதில் எதிர் நின்று யாரும் யாதும் செய்ய முடியாது; எல்லாரும் ஒருங்கே ஒல்லையில் மாண்டுபடவே நேரும்; வீணே செத்து மடிவதால் யாது பயன்? தப்பிப் பிழைப்பதே நல்லது; பிழைக்கும் வழியை நாடி நாங்கள் ஓடுகின்றோம்; எங்களைத் தடுத்து நிறுத்திச் சாகும்படி சொல்வது பாவம்; வேகமாய் வெளியே போய் விட வேண்டும் என இன்னவாறு வேண்டி நின்றனர். இறுதியில் கூறியது இளிவரவாய் வந்தது.

மனிதர் ஆளின் என்?
இராக்கதர் ஆளின்என் வையம்?

வானர வீரர்கள் முடிவில் இவ்வாறு முடிவு செய்து கூறியுள்ளனர். இராமன் பால் மிகவும் பிரியமாய் உரிமையோடு உறுதி பூண்டு வந்தவர் இப்படி மருண்டு மாறி வெருண்டு நிற்பது வியப்பை விளைத்து அவரது பயத்தை விளக்கியுள்ளது.

நெஞ்சத்திகில் நெடிது கலக்கியுள்ளமையால் நிலைகுலைந்து பேசினர். பேச்சு அவரது அவல நிலையைக் காட்சிப்படுத்தி நின்றது. உள்ளம் கலங்கி உணர்வழிந்து உரையாடியுள்ளனர்.

இராமன் ஆண்டால் என்ன?
இராவணன் ஆண்டால் என்ன?

என்று உலகில் இன்று வழங்கி வருகிற பழமொழி அன்று அவர் வாய்மொழியாய் வந்துள்ளமை இங்கே நன்கு சிந்திக்கத் தக்கது. அபிமானம் இல்லாமல் அவமான மொழி எழுந்தது.

கலக நிலையில் கதி கலங்கி ஓடிய வானரர் வாயிலிருந்து வந்த சொல் உலகப் பழமொழியாய் நின்று நிலவுகின்றது. அணி இலக்கணத்தில் உலகநவிற்சி அணி என இதனை வழங்கி வருகின்றனர். இலக்கிய வரவுக்குத் தக்கபடி இலக்கணம் வந்து விடுகிறது.

மொழி வழக்குகள் வெளி விளக்குகளாய் விளங்குகின்றன.

வாக்குமூலத்தால் வானரர்களுடைய போக்கும் புலையும் தெரிய வந்தன. நாட்டுப் பற்றும் சுதந்திர வுரிமையும் மான வுணர்ச்சியும் இல்லாமல் ஈன நிலையில் வாழ்ந்து வருகிற காட்டு மாக்கள் போலவே பேசியிருக்கின்றனர். பூமியை யார் ஆண்டால் என்ன? நமக்கு வேண்டியது வயிற்றுக்கு உணவு; நம் பாட்டை நாம் பார்த்துக் கொண்டு ஒதுங்கி யிருக்க வேண்டும்; சமுதாய சேவை, உபகாரம், ஊழியம், ஆதரவு என விரிந்துள்ள ஏதங்களில் நுழைந்துகொண்டு வீணே நாம் அல்லலடையலாகாது என்னும் குறிக்கோளோடு தானைத் தலைவர் கூறவே அங்கதன் மான வீரமாய் மனம் நொந்து வருந்தினான். சிறந்த இராச குமாரன் ஆதலால் நிறைந்த பெருந்தன்மையோடு உயர்ந்த உணர்வு நலங்களை நேரே நேசமாய்ப் பேச நேர்ந்தான்.

அந்தத் தலைவர்களில் அறிவிலும் வயதிலும் முதியவனாயிருந்த சாம்பவனை நோக்கினான். "தாங்கள் பெரிய மேதை; அரிய ஆற்றலுடையவர்; கலையறிவோடு உலக அனுபவங்களையும் நன்கு தெளிந்தவர்; நமக்கு ஆண்டவனாய் அமைந்துள்ள இராமபிரானைக் குறித்து முன்னம் நீங்கள் புகழ்ந்து கூறியுள்ள நிலைகளையெல்லாம் கேட்டு நான் உள்ளம் தேறி உறுதி பூண்டு உவகை மீதூர்ந்திருக்கிறேன்; அவதார மருமங்களையும் பெருமைகளையும் அன்று அவ்வாறு வியந்து மகிழ்ந்து பேசிய தாங்கள் இன்று இவ்வாறு இழிந்து ஓடியிருப்பது எனக்கு வியப்பை விளைத்து வெறுப்பையும் கொதிப்பையும் வளர்த்து நிற்கிறது" என இங்ஙனம் இடித்து மொழிந்துமேலும் அடுத்துவிளம்பினான்.

அங்கதன் சாம்பனோடு பேசியது.

சாம்பனை வதனம் நோக்கி வாலிசேய் அறிவு சான்றோய்!
சாம்பனே அமலன்மற்றிவ் இராமன்என்று எமக்குப் பண்டே
...ல்வந் துற்ற காலத்து இயம்பினாய் அல்லையோ நீ
...லம் பகைஞன் தன்னோடு அயிந்திரம் அமைந்தோன் அன்னாய்!

...றுவாய் தெரிந்த சொல்லால் தெருட்டுவாய் தெளிவிலோரை
...றுவாய் அல்லை நீயும் அஞ்சினை போலும் ஆவி
...றுவாய் என்றபோது புகழ்என்னாம்? புலமை என்னாம்?
...றின்வாய் உற்றால்வீரம்குறைவரோ இறைமைகொண்டார்.

அஞ்சினும் பழியும் பூண்டாம் அம்புவி யாண்டும் ஆவி
துஞ்சுமா றன்றி வாழவெண்ணுமோ நாள்மேல் தோன்றின்
நஞ்சினை இட்டா லன்ன அமிழ்தன்றே நம்மை அம்மா
தஞ்சமென்று உணர்ந்த வீரர் தனிமையில் சாதல் நன்றே. (3)

தானவ ரோடும் மற்றைச் சக்கரத் தலைவ ரோடும்
வானவர் கடைய மாட்டா மறிகடல் கடைந்த வாலி
ஆனவன் அம்புஒன்றாலே அழிந்தமை அயர்த்தது என் நீ
மீனலர் வேலைபட்டது உணர்ந்திலை போலும் மேலோய்! (4)

எத்தனை அரக்கர் ஏனும் தருமம்ஆண் டில்லை அன்றே
அத்தனை அறத்தை வெல்லும் பாவமென் றறிந்த துண்டோ?
பித்தரைப் போல நீயும் இவரோடும் பெயர்ந்த தன்மை
ஒத்திலது என்னச் சொன்னான் அவன் இவன் உரைப்பானானான்.

சாம்பனை நோக்கி அங்கதன் இங்ஙனம் பேசியிருக்கிறான். உரைகளில் அவனுடைய உறுதி நிலையும் உணர்வு நலனும் பரிவும் பண்பும் ஒளி வீசி வந்துள்ளன. வயது முதிர்ந்து அரிய பல கலைகளையுணர்ந்து எவர்க்கும் தெளிவு கூறி வந்த கிழவன் அன்று இளிவு கூர ஓடியது பெரிய அவமானம் என்று இக் குலமகன் மறுகியிருத்தலால் இவனுடைய மன நிலையையும் ஞான நிலையையும் வீர தீரங்களையும் தெளிந்து உவந்து கொள்கிறோம்.

சிறந்த மதிமான் என்று சாம்பனை மதித்து மரியாதை செய்து வந்தவன் ஆதலால் உரிமையோடு உறுதி கூர்ந்து உரையாடினான்: "அறிவு நிறைந்த பெரியோய்! நீ அதிசய நிலையினன்; நம் சேனைத் திரளுக்கு நீ ஒரு வான ஒளியாய் வயங்கியுள்ளாய்! தளர்ச்சியுற்ற போதெல்லாம் கிளர்ச்சியை யூட்டி வளர்ச்சி தந்து வந்தாய்; போரில் யாவரும் மடிந்து சாய்ந்தபோது சஞ்சீவியைக் கொண்டு வரும்படி அனுமானுக்கு அறிவு கூறி ஊக்கி விடுத்து உயிர் உதவி புரிந்த அந்த உபகார நிலையை நினைந்து வியந்து நெஞ்சம் களித்து வருகிறேன். நேர்ந்த அபாயங்கள் யாவும் உனது மதியூகமான உபாயங்களால் ஒழிந்து போயின. ஆண்மையோடு அதி விவேகமாய் அருந்திறல் புரிந்து யாண்டும் நம் மரபுக்கு மேன்மை தந்து வந்த நீ ஈண்டு இவ்வாறு பான்மை திரிந்து மீண்டது பழியிழிவுகளாய் நீண்டது. நம்மை உரிமையான உறுதித் துணை என நம்பி எவ்வழியும் பெருமை

செய்து வருகிற அப்பெருமானை வெவ்விய போரில் தனியே விட்டு ஓடியது உலகம் உள்ள அளவும் விலகாத பழியாய் விரிந்து நின்றது. அவரோடு கூடநின்று செத்தால் அது ஊழியும் தேயாத உயர் புகழாய் ஒளி வீசி நிற்கும்; அழியாத புகழை அடையாமல் இழிவான பழியை அடையலாமா? இதனைத் தெளிவோடு சிந்திக்க வேண்டும். வீர மூர்த்தியான இராம பிரானது வெற்றித் திறங்களை நன்கு தெரிந்திருந்தும் நீ இங்கே நெஞ்சம் திரிந்து நிலை மாறியது நெடிய வியப்பாயுள்ளது; அமரரும் அசுரரும் அதிசயம் மீதூர்ந்து துதிசெய்து வர உயர் வீரனாய் ஒளிசெய்து நின்ற என் தந்தையை ஒரே அம்பால் கொன்று தொலைத்த வெற்றி வீரனுக்குப் போரில் வேறு யாரும் துணை வேண்டியதில்லை; ஆயினும் நம்மைச் செம்மையான துணையாக நம்பி ஆதரித்து வந்த அந்த நம்பியைச் சமையத்தில் கைநழுவவிட்டு அயலே ஓடுவது அவமானமான கொடிய வசையாம். எவ்வளவு அரக்கர்கள் திரண்டு வந்தாலும் அங்கே கருமம் இல்லை; நெடிய இருள் நீண்டு படர்ந்து மூண்டு அடர்ந்தாலும் ஒளியின் எதிரே யாவும் ஒருங்கே விரைந்து ஒழிந்து போம்; அதுபோல் இராமன் எதிரே நிருதர்குழாம் அடியோடு அழிந்து போம்; உறுதி நிலைகளைத் தெளிந்து யாவரும் உடனே மீண்டு வாருங்கள்" என இன்னவாறு அங்கதன் வேண்டினன்.

அவனுடைய உரைகள் மான வீரங்களைக் காட்டி ஞான நலங்களை ஊட்டி உறுதி ஊக்கங்களை உணர்த்தி நின்றன. அறிவு சான்றோய்! என்று சாம்பனை விளித்தது பெரிய மேதையான நீ சிறிய பேதைபோல் பிழை செய்ய நேர்ந்தாயே! என்று செய்த செயலைக் குறித்து வைதபடியா வந்தது. வயதிலும் அறிவிலும் பெரியவன் ஆனாலும் பிழை வழியில் இழிந்தமையால் அதனை அவன் உணர்ந்து திருந்துமாறு இளவரசன் இதமாமொழிந்தான்.

பழிபடியாமல் காத்துப் புகழ் அடையச் செய்வதே ஒருவனுடைய அறிவுக்குப் பயனாம்; அந்த அறிவு நன்கு நிறைந்திருந்தும் நிந்தை வர இங்கு நடந்தது விந்தையாயது என விநயமா விளம்பினன். பெரியவனிடம் மதிப்பும் மரியாதையும் பெரிதுமுடையவன் ஆயினும் பிழையை நினைந்து உளைந்து உறுதியை வலியுறுத்தி உரைத்தான். சிறந்த மதிமான் உயர்ந்த நிலையில் நில்லாமல் இழிந்து நடந்தது மிகுந்த இழுக்கு என வருந்தி நின்றான்.

ஆம்பலம் பகைஞன் என்றது சூரியனை. ஆம்பல் = நீர்ப்பூ, அல்லி, குமுதம் எனச் சொல்லப்படுவது. சூரியன் தோன்றினல் இப் பூ கூம்பும்; சந்திரனைக் கண்டால் பலர்ந்து நிற்கும்; அதனல் சந்திரனுக்குக் குமுத நண்பன் என ஒரு பெயரும் வந்தது. இரவொளியில் இனிது அலர்ந்தும் பகல் ஒளியில் கடிது குவிந்தும் வருதலால் ஆப்பலுக்கு ஆதவன் பகைவன் என வந்தான். பகைமைக் குறிப்பு தகைமை காண வந்தது.

தேம்பெய் கற்பகத் தாரவன் சேர்தலும்
பூம்பெய் கோதைப் புரிசைக் குழாம்நலம்
ஓம்பு திங்கள் உலந்து சுடர் கண்ட
ஆம்பல் ஆய்மலர்க் காடுஒத்து அழிந்ததே.

(சிந்தாமணி 2336)

சூரியனைக் கண்டு ஆப்பல் மலர் அழிந்தது போல் சீவகனைக் கண்ட பகைவனுடைய மகளிர் அழகு ஒழிந்தது என இது உணர்த்தியுள்ளது. இயற்கைக் காட்சிகளை மனித வாழ்க்கைகளோடு இணைத்துக் கவிகள் உரைத்து வருவது உவகை சுரந்து வருகிறது. தாவரங்களின் சீவிய நிலைகள் தெரிய வந்தன.

சூரியனிடமிருந்து அரிய பல கலைகளை அனுமான் கற்றுத் தெளிந்துள்ளான்; அந்த அதிசய மேதையை ஒத்தவன் எனச் சாம்பவனை அங்கதன் இங்கே உவந்து மொழிந்தான். அயிந்திரம் என்பது தெய்வ மொழியிலுள்ள வியாகரணம். இந்திரனது சம்பந்தம் உடையது ஆதலால் அயிந்திரம் என வந்தது. அந்த இலக்கணக் கலையில் அனுமான் அதிசய நிபுணன்; சகலகலா வல்லவன்; வியாகரணபண்டிதன் எனத் தேவகுருவான வியாழ பகவானும் வியந்து புகழ மாருதி சிறந்து விளங்கி நிற்கின்றுன்.

"அயிந்திரம் நிறைந்தவன்" (விபீடணன் அடைக்கலம் 42)

என அனுமானை முன்னரும் குறித்திருப்பது இங்கே உன்னியுணர வுரியது. அத்தகைய வித்தகனேடு கல்வியறிவில் ஒத்தவன் எனச் சாம்பவனை ஈண்டு உரைத்தது அவனது மேதா விலாசத்தை ஓர்ந்து மேன்மைகளை உணர்ந்து கொள்ள வந்தது.

கல்லாதவர் மூடராய் இழிந்து நிற்கின்றூர்; கற்றவர் மேன்மையாளராய் உயர்ந்து வருகின்றூர். எல்லா மேன்மைகளை

யும் தரவல்ல சிறந்த கல்வியைத் தெளிவாகப் பெற்றிருந்தும் கடமையை உணர்ந்து உற்றவனுக்கு உதவியாய் உறுதி பூண்டு நில்லாமல் வறிதே மீண்டு ஓடியது நீண்ட குற்றம் என அவன் நினைந்து நிருந்த இக் குலமகன் இங்ஙனம் வனைந்து கூறினன்.

எங்களுடைய அறியாமை நீங்க அரிய பல உறுதி நலங்களை என்றும் உரிமையோடு போதித்து வந்த நீ இன்று இவ்வாறு சிறுமையாய் ஓடலாமா? என்பான் கல்வி நிலையைக் கூடமாச் சொல்லிக் காட்டினன். பிறருடைய மடமையைப் போக்கப் போதிக்கின்றாய்; உன்னுடைய கடமையை நோக்கி நீ கருமம் செய்ய வில்லையே! என்று மருமமா அங்கதன் இங்கே கிழவனை வைதிருக்கிறான். வைத வைவில் கல்வி எய்த வந்தது.

Education does not mean teaching people to know what they do not know; it means teaching them to behave as they do not behave. (Ruskin)

"சனங்களுக்குத் தெரியாததைத் தெரியும்படி போதிப்பது கல்வி ஆகாது; நல்ல வழியில் செல்லாதவரைச் செல்லும்படி திருத்தி நேரே அவரை ஒழுகச் செய்வதே கல்வியாம்" என ரஸ்கின் என்னும் ஆங்கிலப் புலவர் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

அறிவு நலங்களை அழகாகப் பேசுவதோடு ஒழியாமல் நல்ல நெறியில் நடந்து எவ்வழியும் செவ்வியனாய் நின்று எல்லாருக்கும் ஒளி நீட்டி வழி காட்டுகின்றவனே உண்மையான கல்வியாளன்; அவனே சிறந்த மேன்மையாளனாய்த் திகழ்கின்றான்.

மனப் பண்பும் உணர்ச்சிப் பெருக்கும் உயர்ந்த நீர்மைகளாம்; அவை அமைந்த அளவு அந்த மனிதன் விழுமியோனாய் விளங்குகிறான். உள்ளமே சான்றாய் ஒழுகி வருகிறவன் ஒளி மிகப் பெறுகிறான். அந்த நிலையை இழந்த பொழுது எந்த மனிதனும் இழிந்து விழுகிறான். இழிவு கீழ்மை என்பன எல்லாம் பழி நிலைகளால் வளர்ந்து அழி துயரங்களாய் வருகின்றன.

"அச்சமே கீழ்களது ஆசாரம்" (குறள். 1075)

கயவர்களுடைய இயல்பினைத் தேவர் இப்படி நயமா விளக்கி யிருக்கிறார். அரச தண்டனைக்குப் பயந்து, அடி உதைகளுக்கு அஞ்சிக் கொஞ்சம் ஒழுங்கா நடப்பரே அன்றி நெஞ்

சம் நேர்மையாய்க் கீழ்மக்கள் யாண்டும் நடவார் என்றதனுல் அவரது புலை நிலை புலனய் நின்றது. உரிய இதயம் பழிபோன மையால் சிறிய புலைகள் சூழ்ந்து கொண்டன; கொள்ளவே தாழ்ந்து உழல நேர்ந்தார். இழிவான தாழ்வு ஈன வாழ்வாயது.

அச்சம் ஆசை ஏவல் ஊழியம் என்னும் இவை கொச்சை மக்களை ஆட்டி வருகின்றன; உள்ளமே சாட்சியாய் ஓர்ந்து ஒழுகி வருபவர் உச்ச நிலையில் ஒளி பெற்று உயர்கதியடைகின்ருர். மனச்சான்று மருவிவர மகிமை பெருகி வருகிறது.

"It is by education I learn to do by choice what other men do by the constraint of fear." (Aristotle)

"அச்சத்தால் பிறர் வலிந்து செய்வதை நான் பிரியத்தோடு உவந்து செய்யக் கல்வியால் தெரிந்திருக்கிறேன்" என அரிஸ்டாட்டல் என்னும் பெரியார் இங்ஙனம் கூறியிருக்கிருர்.

உள்ளத் தெளிவும் நேர்மையும் மனிதனை மேன்மையா உயர்த்தி யருளுகிறது. சிறந்த கல்வியும் தெளிந்த அறிவும் முதிர்ந்த அனுபவமும் நிறைந்திருந்தும் சாம்பவன் அயர்ந்து நடந்ததை அங்கதன் வியந்து நயந்து விவேகங்கள் பகர்ந்தான்.

புகழ் என்னும்? புலமை என்னும்?

இதுவரை நீ அடைந்து வந்த புகழும், தெளிந்து நின்ற புலமையும் இன்று ஓடிய இந்த ஓட்டத்தால் ஒழிந்து போயினவே என்று உள்ளம் வருந்தி இரங்கி நின்ருன். வினவிய வினக்கள் தனது நிலைமையை அவன் நினைந்து சிந்திக்க வந்தன. சேனைத் தலைவனைச் சிறந்து மான வீரனெடு மருவி வந்தும் ஈனமாய் நடந்து கொண்டது என்றும் குன்ருத இழிவாம் என்று தெளிவுறுத்தினன். ஆற்றல் ஆண்மைகள் தோன்ற ஏற்றங்கள் கூறினன்.

கூற்றின்வாய் உற்ருல் வீரம்
குறைவரோ இறைமை கொண்டார்?

தலைமைத் தன்மையை அடைந்து வந்தவர் எவ்வழியும் நிலைமை குலையாமல் நிற்கவேண்டும் என்பதை நேரே இவ்வாறு வலியுறுத்தினன். எமன் வாயில் சிக்கிச் சாக நேர்ந்தாலும் உள்ளம் கலங்காமல் உறுதி குலையாமல் வீரர் ஊக்கி நிற்பர் எனச் சுத்த வீரருடைய உத்தம நிலையை உய்த்துணர வுரைத்தான்.

கூற்றுவன் எதிர்ந்தாலும் அஞ்சாமல் நின்று ஆற்றலோடு போராடி ஆவி நீப்பின் அந்த வீரனைத் தேவர் யாவரும் போற்றிப் புகழ்வர்; திவ்விய சுவர்க்க பதவி அவனுக்கு எவ்வழியும் உரிமையாம்; இந்த உண்மைகளைச் செவ்வையாகத் தெரிந்திருந்தும் இவ்வழி மயங்கியது எனக்கு எவ்வளவோ வியப்பாய்த் தோன்றுகிறது. நெஞ்சம் நிலை குலைந்தது நெடிய பழியாயது.

தஞ்சம் என்று உணர்ந்த வீரர்
தனிமையில் சாதல் நன்றே.

நம்மை உரிமைத் துணையா நம்பி யாண்டும் உறவு கொண்டாடி வருகிற அந்த வீரக் குரிசிலரைப் போரில் தனியே விட்டு ஓடிப் போய்ப் பிழைப்பது பேடிப் பிழைப்பாம்; கோடி கோடியான பழி அதனால் நீடி எழுந்து நீசப்படுத்தும்; அவ்வாறு வாழ்வதை விட உடனே செத்துப் போவதே நல்லது என அங்கதன் இவ்வாறு உள்ளம் கடுத்து உரையாடி யிருக்கிறான். நேர்மையான வீரன் ஆகலால் நிலைமையை நொந்து தலைமையோடு துணிந்து பேசினான். உரைகள் அந்த உள்ளத்தை உணர்த்தின.

சேனாதிபதிகளை அது வரை பெரிதா மதித்திருந்தான்; அன்று போரில் உடைந்து போகவே தன் மரபுக்குக் கொடிய இழுக்கு என்று நெடிது வருந்தி அவ்வீரன் கடிது இகழ்ந்தான்.

மனிதனுடைய ஆண்மைத் திறத்தையும் வீரத்தையும் சரியா அளந்து அறிதற்குப் போர்க்களம் நல்ல உரை கல்லா யுள்ளது. வீரரைப் போர்க்களம் விளக்கிக் காட்டுமே என்றதனால் அதன் காட்சியும் ஆட்சியும் மாட்சியும் கருதிக் காணலாம்.

[illegible]டவர் ஆண்மை தோற்றும் அணிகிளர் பவளத் திண்கை
[illegible]டரி நிலைக்கண்ணுடைப் போர்க்களத்து உடைந்த மைந்தர்
[illegible]டரி கவரக் கல்லென் கவரிமா இரிந்த வண்ணம்
[illegible]க்கண்டு உருவப்பைந்தார் அரிச்சந்தன் உரைக்கின்றானே. (1)

[illegible]வர் மின்னன்னார் தம் வாலரிச் சிலம்பு சூழ்ந்து
[illegible]கொண்டு எழுதப்பட்ட சீறடிப் பாய்தலுண்ட
[illegible]யங் குமரர் தங்கள் மறம்பிறர் கவர்ந்து கொள்ள
[illegible]விட்டு ஓடிப்போகின் ஆண்மையார் கண்ணதம்மா! (2)

[illegible]றந் தந்துவைத்த தலைமகற்கு உதவி வீந்தால்
[illegible] மாலை சூடிக் கடியர மகளிர்த் தோய்வர்;

பொற்றசொல் மாலை சூட்டிப் புலவர்கள் புகழக் கல்மேல்
நிற்பர்தம் வீரம் தோன்ற நெடும்புகழ் பரப்பி என்றான். (3)

(சீவக சிந்தாமணி)

ஆடவரது ஆண்மை நிலையை நேரே தெரிதற்குப் போர்க் களம் நிலைக்கண்ணாடி போலுள்ளது; போரில் புறங்காட்டி ஓடினால் பேடியராய் இழிவர்; தன்னை ஆதரித்த தலைவனுக்கு உதவியாய் நின்று பொருது போரில் இறந்தால் அவன் வீர சுவர்க்கத்தை அடைகிறான்; புலவர் பாடும் புகழுடையனாய் இங்கே நெடிது நிலவி நிற்கின்றான் என இவை உணர்த்தி யுள்ளன.

உரிய அரசன் உள்ளம் உருகுமாறு பொருது மாண்டால் அச் சாவு பெரியஒரு பிறவிப் பேறாம். உயர்ந்த அந்த இறப்பைச் சிறந்த வீரரே யாண்டும் விரைந்து அடைந்து கொள்ள நேர்வர்.

புரந்தார்கண் நீர்மல்கச் சாகற்பின் சாக்காடு
இரந்துகோட் டக்க துடைத்து. (குறள், 780)

தன்னை ஆதரித்த அரசன் கண்ணீர் சொரிந்து அழுது உருகுமாறு போரில் ஒருவன் சாவான் ஆயின் அவனைத் தேவரும் வியந்து மகிழ்வர்; அந்தச் சாவு மிகவும் மகிமை யுடையது; அதனை உரிமையோடு உவந்து பெறுவது சிறந்த பெருமையாம் என்னும் இது இங்கே ஊன்றி உணர்ந்து கொள்ள வுரியது.

பிறந்த மனிதர் எவரும் இறந்து படுதல் உறுதி. அந்த இறப்பைச் சிறந்ததாக அடைந்து கொள்ள வேண்டும். சாதலை யாரும் அஞ்சுவர்; வீரனும் ஞானியும் அதனை உவந்து கொள்ளுவர். நேர்மையும் புனிதமும் நேர்ந்து வாழ்ந்து வருபவரே சாவு நேரும் போது யாதும் கலங்காமல் நேரே மகிழ்ந்து நிற்கின்றார். அந்த நிலை அவரது வாழ்வின் மேன்மையை வரைந்து காட்டுகிறது. பிறந்தபேறு அடைந்தவர் இறந்து சீரடைகின்றார்.

பிறப்பின் பயனைப் பெற்றுக் கொண்டவன் எவனோ அவனே இறப்பினை அஞ்சாமல் எதிர் விழைந்து நிற்கின்றான். அவ் விழைவில் ஞானமும் வீரமும் மோனமாய் விளங்கியுள்ளன. புனித நிலைகள் மனித வாழ்வினை இனிமை செய்து வருகின்றன. வாழ்வின் மகிமை சாவில் மருவி மிளிர்கிறது.

இரப்பு எவ்வழியும் இழிவாம் என்று யாண்டும் வெறுப்

போடு உரைத்து வந்த தேவர் புகழோடு அமைந்த வீரச் சாக்காடு அமையின் அதனை விரைந்து இரந்து கொள்ளுக என ஈண்டு உவந்து கூறியுள்ளார். சாதலை வியனுக வரைந்து காட்டி அதனை விழைந்து கொள்ளும்படி விளக்கியிருப்பது வித்தக விநயமாய் விளங்கியுளது. பிறப்பின் பயன் இறப்பின் நயனை நோக்கியது.

"Be still prepared for death: and death or life shall thereby be the sweeter." (Shakespeare)

'மரணத்துக்குத் தயாராயிரு; சாவோ, வாழ்வோ அதனால் மிகவும் இனிமையாம்'' எனப் பெரிய ஆங்கிலக் கவிஞர் ஆகிய ஷேக்ஸ்பியர் இவ்வாறு சாவின் மேன்மையைக்குறித்திருக்கிறார்.

பொதுவான உலக வாழ்விலேயே சாவுக்கு அஞ்சலாகாது; அங்ஙனம் இருப்பச் சிறப்பான போரில் சாக அஞ்சிப் புறம் போவது அறம்போனபடியாய்ப் பெரும் பழிமண்டிப் பேரிழிவு கொண்டு நின்றது. செருமுகத்தில் சீர் அழிந்தவனை ஒரு முகமும் உவந்து பாராது; எவ்வழியும் எம்முகமும் இகழ்ந்து விலகும்.

போரில் இறந்தவனை உயர்ந்த வீரன் என்று யாரும் வியந்து புகழ்கின்றார்; புறங்காட்டி ஓடினவனை இழிந்த பேடி என்று எல்லாரும் இகழ்ந்து பழிக்கின்றார். இழி பழிகளுள் பேடித் தனமும் ஒன்றாய்க் கூடி என்றும் யாரும் இகழ நின்றது.

கன்றுண விடாமல் ஆன்பால் கறந்துகொள் பவனும், செய்த
நன்றிகொல் பவனும், கோடி நடுநிலை தவறு வானும்,
மான்றுயிர் பதைப்ப நோக்கும் கொடியனும், போர்க்களத்தில்
தன் தலை வனைவிடுத்துச் சாய்ந்துபோம் மடமை யானும்.

(பிரபுலிங்க லீலை)

உற்ற தலைவனைப் போர்க்களத்தில் விட்டு அயலே ஓடிப் போகிறவன் பேடி பேதை மடையன் என இழிந்து பாவிகளுள் ஒருவனும் ஒருவனாய் மேவியுள்ளமையை இது விளக்கி யுள்ளது.

இவ்வாறான இழிபழியைச் செய்து உயிர்வாழ்வதை விட விழுமிய நிலையில் நின்று அழிவதே நல்லது என்பான் சாதல் நன்றே என்றான். ஏகாரம் அந்த நன்மையை வலியுறுத்தி நின்றது.

தங்களைத் தஞ்சம் என்று அஞ்சனவண்ணன் நம்பி யிருப்பது இவன் நெஞ்சை உருக்கியுள்ளது. அவ்வுண்மை உரையின்

தொனியால் உணர வந்தது. இராமனது குண நீர்மைகளையும் வீர பராக்கிரமங்களையும் பலவகையிலும் உணர்ந்து மகிழ்ந்து உரிமை மீதூர்ந்து வந்தவன் ஆதலால் அப் பெருமான்பால் பேரன்பு பூண்டு ஓரம் பாராமல் தீரமாய்ப் பேசினன்.

வாலி அழிந்தமை அயர்த்தது என் நீ ?

சாம்பவனிடம் அங்கதன் இங்ஙனம் வினவியிருக்கிருன். என் தந்தை என்று உரிமை பாராட்டி உரையாமல் வாலி என இவ்வாறு பொது நோக்கோடு கூறியிருக்கிருன். இராமபாணம் பாய்ந்து அந்த வீரத்தந்தை இறக்கும்போது இராமனைக் குறித்து இந்த மைந்தனிடம் உரைத்த * உரைகள் உள்ளத்தில் நன்கு பதிந்திருத்தலால் இக் குலமகன் யாண்டும் அக் கோமகனை ஆர்வம் மீதூர்ந்து போற்றி வருகிருன். மனித நிலையை மறந்து புனிதமான தெய்வ பாவனையே செய்து எவ்வழியும் ஆண்டவனை அன்பு கனிந்து பேணி வருகிற நிலை உரைகள் தோறும் காண வருகிறது. திண்மையும் தெளிவும் மொழிகளில் ஒளிவீசுகின்றன.

“தேவர் முதல் யாவரும் யாதும் வெல்ல முடியாத வல்லமையோடு வீறுகொண்டு விளங்கி நின்ற வாலியை ஒரே அம்பால் ஒழித்துக் கடலைக் கலக்கி அதிசய ஆடல்கள் புரிந்து இலங்கை புகுந்து கும்பகன்னன் முதலிய கொடிய நிருதர் திரளைக் கொன்று வீழ்த்தி வெற்றி நிலையில் விளங்கி நிற்கும் கோதண்ட மூர்த்தி குரங்குகளாகிய நம்மைக் கூட அழைத்து வந்திருப்பது ஒரு விநோதமான விளையாட்டே; உற்ற துணையாய் உடன்நின்று நாம் அவனுக்கு வெற்றி விளைப்போம் என எண்ணின் அது பெரிய பித்தமயக்கேயாம்; அயலே ஓடிப் போன வானரங்கள் அரக்கர்களால் செத்துப் போகலாகாதே என்ற கருணையினலே யே யாவரையும் அழைத்து வரும்படி என்னை அனுப்பியருளினன். பேடியராய் ஓடிப் போய்ப் பழியோடு சாகாமல் வீரராய் மீண்டு வந்து புகழோடு வாழுங்கள்; விரைந்து மீண்டு திரும்புங்கள்!” என்று அங்கதன் இங்கிதமாயியம்பினன். அஞ்சி அலமந்த அவர்தம் நெஞ்சங்களை நிலையாகத் தேற்றினன்.

எத்தனை அரக்கர் ஏனும் தருமம்
ஆண்டு இல்லை அன்றே.

---

* இந்நூல் பக்கம் 2596 வரி 8 பார்க்க.

கடல்கள் போல் பொங்கி வருகிற மூலபலப்படைகளைக் கண்டு சாலவும் பயந்த சேனைத் தலைவர்க்கு இம் மான வீரன் இவ்வாறு ஞான போதனையைச் செய்திருக்கிறான். "அரக்கர் திரள் வெள்ளமாய் எல்லைமீறி நின்றாலும் அங்கே தருமம் இல்லை ஆதலால் அந்தப் பாவக் கூட்டங்கள் புண்ணிய மூர்த்தியான இராமன் எதிரே அடியோடு நாசமாய் அழிந்தே போகும்; இந்த உண்மையைத் திண்மையாய்த் தெளிந்து கொண்டு விரைந்து மீண்டு வருங்கள்" என்று அங்கதன் இங்ஙனம் கூறவே சாம்பன் ஏம்பலோடு இசைந்தான். அஞ்சி ஓடியதை நினைந்து நெஞ்சம் நாணினான். மீண்டு போய் இராமன் முகத்தில் எப்படி விழிப்பது? என்று யாவரும் இலச்சையுழந்து நொந்தனர். அவருடைய உள்ளங்கள் தேறவும், அங்கதன் ஓர்ந்து தெளியவும் சாம்பன் சில கூறினான். அவனுடைய உரைகள் உலக சரிதங்களையும் பலவகை நிலைகளையும் கால கதிகளையும் காட்டி வந்தன.

சாம்பன் கூறியது.

நாணத்தால் சிறிது போழ்து நல்கினன் இருந்து பின்னர்
தூண்ஒத்த திரள்தோள் வீர! தோன்றியஅரக்கர் தோற்றம்
காணத்தான் நிற்கத்தான்அக் கறைமிடற் றவற்கும் ஆமே
கோணற்பூ உண்ணும்வாழ்க்கைக்குரங்கின்மேல்குற்றம்உண்டோ?

தேவரும் அவுணர் தாமும் செருப்பண்டு செய்த காலை
ஏவரே என்னால் காணப் பட்டிலர்? இருக்கை ஆன்ற
மூவகை உலகின் உள்ளார் இவர்துணை ஆற்றல் முற்றும்
பாவகர் உளரே கூற்றும் இவருடன் பகைக்க வற்றோ? (2)

மாலியைக் கண்டேன் பண்டை வாலியவானைக் கண்டேன்
காலநேமியையும் கண்டேன் இரணியன் தனையும் கண்டேன்
ஆலமா விடமும் கண்டேன் மதுவினை அனுசனோடு
வேலையைக் கலக்கக் கண்டேன் இவர்க்குளமிடுக்குமுண்டோ?

வலியிதன் மேலே பெற்ற வரத்தினர்; மாயம் வல்லர்;
ஒலிகடல் மணலின் மிக்க கணக்கினர்; உள்ளம் நோக்கின்
வலியினும் கொடியர்; கற்ற படைக்கலக் கரத்தர்; என்றால்
மெலிகுவ தன்றி உண்டோ விண்ணுற வெருவல் கண்டாய்.

..இனும் ஐயம் உண்டா ஆர்க்கேனும் அமரின் அஞ்சிச்
..இனும் பெயர்ந்த தன்மை பழிதரும் நரகில் தள்ளும்

ஏகுதும் மீள இன்னும் இயம்புவது உளதால் எய்தி
மேகமே அனையான் கண்முன் எங்ஙனம் விழித்து நிற்றும்?

சாம்பன் இங்கே யூக விவேகமாய்ப் பேசியிருக்கிறான். நிலைமையை நினைந்து நெஞ்சம் நாணிச் சிறிது போது மௌனமா யிருந்தவன் பின்பு உறுதியோடு ஊக்கி உரையாடியுள்ளான்: "அங்கதா! நேர்ந்துள்ள சிறுமைக்கு இரங்குகிறேன்; வெட்கமும் துக்கமும் பக்கம் எங்கும் வளைந்து எங்களைப் பரிகசித்து நிற்கின்றன; அஞ்சாத தீரராய் அமரில் மூண்டு யாண்டும் அடலாண்மை புரிந்து வந்தவர் ஈண்டு மிடல் சாய்ந்து மீண்டது நீண்ட அவமானமாய் நெஞ்சை வருத்துகின்றது; சிரஞ்சீவி போல் நான் நெடிய வயதினன்; அரிய பல அசுர வேந்தர்களையும் பெரிய சூரர்களையும் நேரே கண்டிருக்கிறேன்; காலநேமி, இரணியன், மதுகைடவர், மாலி முதலிய அதிசய வீரர்கள் யாவரையும் பார்த்திருக்கிறேன்; ஆயினும் இன்று கண்ட அரக்கர்களைப் போல் நான் என்றும் யாதும் கண்டிலேன்; விண்ணும் மண்ணும் மருள வந்த அந்தப் படைகளைக் கண்டதும் எங்கள் கண்ணும் மனமும் கலங்க நேர்ந்தன; யாதும் கருதி யுணராமலே எங்கள் கால்கள் ஓட நேர்ந்தன. கூற்றும் குலை நடுங்கும் நிலையில் ஆற்றலோடு பிரளய கால வெள்ளம் போல் நிருதர் படைகள் தோற்றி வரவே எங்களை அறியாமலே இழிந்து ஓடி ஒழிந்து வந்துள்ளோம்; இது மிகுந்த பழியே; போரில் மாண்டவர் புகழும் இன்பமும் பெறுகின்றார்; புறங்காட்டி மீண்டவர் பழியும் துன்பமும் அடைகின்றார்; அந்த இழி துயரங்களை எய்தும்படி ஈனமாய் வந்தது மானக் கேடே; இனி மறுகி வருந்துவதால் யாதும் பயன் இல்லை; யாவரும் விரைந்து திரும்ப வேண்டும்; மீண்டுபோய் எப்படி அந்த ஆண்டகை முகத்தில் விழிப்பது? அதிசய வீரனை அணுகியிருந்தும் மதி கெட்டு மானங்கெட்டோம்; கதி கெட்டபடியாய் விதிவசப்பட்டோம்" என இப்படி அம் முதியவன் மறுகி மொழிந்தான்.

இங்கே அவன் பேசியுள்ள வார்த்தைகளால் அவனுடைய சீவிய சரித்திரம் ஓரளவு வெளியாய் நின்றது. நீண்ட வாழ்நாளையும் நெடிய வர பலங்களையும் அவன் அடைந்துள்ளமையை ஈண்டு நாம் அறிந்து கொள்கிறோம். தனது வாழ்நாளில் யாண்

டும் காணாத பயங்கரமான கோர வுருவங்களையும் கொடிய நெடிய அடல் வலிகளையும் அன்று காண நேர்ந்தது அதிசய மான மதி மயக்கமாயது. ஆகவே வேகமாய் வெளியேற நேர்ந் தான். தன்னை மறந்த நிலையில் தவறுகள் விளைந்துள்ளன. நெஞ் சம் தெளிந்தபின் அஞ்சி ஓடிய பிழைகள் அவமானமாய்த் தோன்றின. மீண்டுவந்து ஆண்டவனைக்காண மிகவும் நாணினான்.

> மேகமே அனையான் கண்முன் எங்ஙனம்
> விழித்து நிற்றும்.

இராமபிரான் எதிரே இனி எப்படிப் போவது? என அவன் வெட்கி மறுகியுள்ளமையை இதனால் உய்த்து உணர்ந்து கொள் கிறோம். மேகம் என்றது வையம் உய்ய வந்துள்ள வகைமை தெரிய வந்தது. பசிய மாமுகில் போல் மேனியும் பவளவாயும் கமலச் செங்கண்ணும் இவனுடைய கண்ணிலும் கருத்திலும் நிலைத்திருத்தலை உரை விளக்கி நின்றது. அதிசய அழகனைத் துதி செய்திருந்தவன் மதியழிந்து போனான். சேனைத் தலைவர் யாவ ரும் நேர்ந்த மானக்கேட்டை நினைந்து இனைந்து நெடிது கவன்றார்.

யாண்டும் உரிமை கூர்ந்து எவ்வழியும் விசுவாசமாய் உறுதி பூண்டு நின்ற தலைவர்கள் அச்சத்தால் அலமந்து போயி னர்; அது கொச்சையாய் முடிந்தது; முடிவு தெரிந்ததும் இலச்சையடைந்தனர். மனம் மொழி செயல்களால் இராம னுக்கு இனியராயிருந்தவர் பயத்தால் பதறிச் சிதறியது கொடிய துரோகமாய் நெடிது தோன்றியது. நிலைமையை நாணி நொந்து நெஞ்சம் இரங்கினர் அஞ்சியது அவலமாய் நின்றது.

"Our fears do make us traitors" (Shakespeare)

"நமது பயம் நம்மைத் துரோகிகளாச் செய்து விட்டது" என்னும் இந்த ஆங்கில வாசகம் ஈங்கு அறிய வுரியது. மனமார யாதொரு மாறுபாடும் கருதாதவர்; கொடிய படைகளைக்கண்டு மருண்டு சிதறினர்; நெஞ்சம் தெளிந்த பின்பு அஞ்சன வண் ணன் எதிரே வர அஞ்சினர். சாம்பன் முதலிய வானரத் தலை வர்கள் அவ்வாறு தேம்பி வருந்துவதை அறிந்ததும் அங்கதன் அவர்க்கு ஆறுதலாக உறுதி நலங்களை உரிமையா உணர்த்தினான்.

அங்கதன் உணர்த்தியது.

எடுத்தலும் சாய்த்தல் தானும் எதிர்த்தலும் எதிர்ந்தோர் தம்மைப்
படுத்தலும் வீர வாழ்க்கை பற்றினர்க்கு உற்ற மேனாள்
அடுத்ததே அஃது நிற்ப அன்றியும் ஒன்று கூறக்
கடுத்தது கேட்மின் நீரும் கருத்துளீர் கருதி நோக்கின். (1)

ஒன்றும்நீர் அஞ்சல் ஐய யாமெலாம் ஒருங்கே சென்று
நின்றும்ஒன் றியற்றல் ஆற்றும் நேமியான் தானே நேர்ந்து
கொன்றுபோர் கடக்கும் ஆயின் கொள்ளுதும் வென்றியன்றேல்
பொன்றுதும் அவனோடுஎன்றான் போதலோ புகழன்று என்றான்.

மறுகி நின்ற தலைவர்க்கு இவ்வாறு அங்கதன் உறுதி கூறித் தேற்றியிருக்கிறான். "புறத்தே ஓடி வந்ததை நினைந்து அகத்தே நாண வேண்டாம்; போர் புரிகிற வீரர்கள் பகைவரோடு போராடுங்கால் மேல் ஏறிச் செல்லுதலும், கீழே இறங்கி ஒதுங்குதலும், ஒரு முறை வெல்லுதலும், மறுமுறை தோற்றலும், மீண்டும் மூண்டு பொருது வெற்றி காண்டலும், ஒற்றி அறிதலும், காலம் நோக்கி விலகி நிற்றலும், பம்மலும், பதுங்கலும், பாய்தலும், காய்தலும், ஆய்தலும், ஒய்தலும் அமர் முறைகளின் இயல்புகளாம் ஆதலால் நீங்கள் யாதும் கவலையுற வேண்டியதில்லை. மூண்டுவந்துள்ள கொடியநெடிய மூலபலங்களோடு யாரும் யாதும் செய்ய முடியாது. நாம் எல்லோரும் ஒருங்கே திரண்டு அடலாண்மையோடு போராடினாலும் அது புலியாட்டமாய்ப்பொன்றி முடியுமே அன்றி வென்றி ஒன்றும் விளையாது; ஊழிக்கடல் என உருத்து வந்துள்ள இந்தச் சேனைக் கடலை நம் ஆண்டவன் ஒருவனே அழித்து ஒழித்து அதிசய வெற்றியை அடைய வல்லவன்; உற்ற துணையாய் வந்துள்ளமையால் நாம் ஒப்புக்குப் புடை சூழ்ந்து ஒதுங்கி நிற்போம்; நம் பெருமான் வெற்றி பெற்றால் உயிரோடு உவந்து வாழுவோம்; வெல்லவில்லையானால் எல்லாரும் ஒருங்கே செத்துப் போவோம்; நாம் இருப்பதும் இறப்பதும் கோதண்ட வீரன் பொறுப்பில் உள்ளன. வேறு மாறாக எண்ணுவது விபரீதமான பழியாம்; விரைந்து போவோம்; எழுந்து வாருங்கள்" என இவ்வாறு அவ்வீரமகன் கூறவே யாவரும் தேறி எழுந்து செருமுகம் வந்தார்; அவர் அவ்வாறு அங்கதனோடு மீண்டு வந்து கொண்டிருக்கும்

கால் இராமன் இலக்குவனை நோக்கி உக்கிர வீரம் ஒளி வீச உரையாடி நின்றான். உள்ளத் துணிவு உலகம் தெளிய வந்தது.

வீரத் தம்பியோடு விளம்பியது.

"தம்பி லட்சுமணா! இதுவரையும் நேராத பெரும்போர் இப்பொழுது நேர்ந்துள்ளது. வருகின்ற நிருதர் திரள்களைக் கண்டு நம் உரிமையாளர்கள் ஓட நேர்ந்தனர். நாம் பொறுமையாய் நின்று போராட வேண்டும். எனது தனிமையை நினைந்து நீ கவலையுறாதே; எனக்கு யாரும் துணை வேண்டியதில்லை; என் கையில் உள்ள கோதண்டம் ஒன்றே போதும்; விலகி ஒதுங்கியுள்ள நம் சேனையை நீ போய்ப் பாதுகாத்து நிற்க வேண்டும்; கொடிய நெடிய படைக் கடலை நம் மீது ஏவி விட்டுத் தனியே கபடமாய்ச் சென்று இராவணன் நமது வானரங்களைக் கொன்று தொலைக்கக் கொடுஞ் சூழ்ச்சி புரிவான்; தனது தலைமகனை இழந்திருத்தலால் இந்தமுறை கொலை பாதகங்களைக் கொடுமையாச் செய்து வெற்றி காண வேண்டும் என்று விரகு சூழ்ந்து வீறுகொண்டு வேலை செய்வான்; புலையான அவனது கொலை நிலைக்கு நாம் இடங்கொடுக்கலாகாது; நம் வானர சேனையுள் யாதொரு கேடும் புகாதபடி நீ நாடிக் காத்து ஆதரிக்க வேண்டும். நான் தன்னந்தனியே நிற்பதாக என்னை நினைந்து இங்கே நீ தயங்கி நின்றால் இன்னல் விளைந்து விடும்; நான் சொன்னபடி விரைந்து செய்; கொடுமையாய்க் கொதித்து வருகிற நிருதர் படைகளை அழித்து ஒழிப்பது என்கடன்; உரிமையாய் மருவியுள்ள நமது படைகளைக் காத்தருளுவது உன்கடன். எனது உடன் பிறப்பான நீ உனது கடமையை உணர்ந்து செய்; என்னுடைய கடமையை நான் செய்து முடிக்கிறேன். நல்லாரைக் காப்பதும் அல்லாரை அழிப்பதும் நம் கடமைகளாம். ஒன்றை நீ ஏற்றுக்கொள்; மற்றதைநான்செய்கிறேன்; உற்றதை ஓர்ந்து போ" எனக் கொற்றக் குரிசில் இன்னவாறு குறித்தருளினான்.

இராமன் இசைத்தது.

காக்குநர் இன்மை கண்ட கலக்கத்தால் கவியின் சேனை
போக்கறப் போகித் தத்தம் உறைவிடம் புகுந்தது உண்டேல்
தாக்கிய படையை முற்றும் தலைதுமிப் பளவும் தாங்கி
நீக்குகி நிருதர் ஆங்கு நெருக்குவார் நெருக்கா வண்ணம். (1)

இப்புறத்து இனைய சேனை ஏவி ஆண்டிருந்த தீயோன்
அப்புறத்து அமைந்த சூழ்ச்சி அறிந்தவன் அயலே வந்தால்
தப்பறக் கொன்று நீக்கும் அவனையார் தடுக்கத் தக்கார்?
வெப்புறு கின்றது உள்ளம் வீரநீ அலது வில்லோர். (2)

மாருதி யோடு நீயும் வானரக் கோனும் வல்லே
பேருதிர் சேனை காக்க என்னுடைத் தனிமை பேணிச்
சோருதிர் என்னின் வெம்போர் தோற்றும் நாம் என்னச் சொன்னான்
வீரன்மற் றிதனைக் கேட்ட இளையவன் விளம்பல் உற்றான். (3)

இலக்குவன் இசைந்தது.

அன்னதே கருமம் ஐய அன்றியும் அருகே நின்றால்
என்னுனக் குதவி செய்வது இதுபடை என்றபோது
சென்னியில் சுமந்த கையர் தேவரே போல யாமும்
பொன்னுடை வரிவில் ஆற்றல் புறநின்று காண்டும் என்றான்.
(மூலபலவதை 60-63)

இங்கே நிகழ்ந்துள்ள நிலைகளை நேரே காண்கின்றோம். நெஞ்சம் வியந்து நெடிது சிந்திக்கின்றோம். உரிமைத் தம்பியிடம் உறுதியோடு பெரியவன் உரையாடியிருப்பது அருமைப் பாடுகளாய் அறிய வந்துள்ளது. காரிய சாதனைகளைக் கூரிய நோக்கோடு குறித்து வீரியமாய் விளக்கியிருக்கிறான்.

நெடிய சேனைகளைப் போருக்கு ஏவி விட்டு இலங்கை வேந்தன் வேறு ஒரு வழியில் கொடிய சதி செய்வான் என இளவலிடம் உளவு தெரிய உரைத்தான். தன்னை நம்பி வந்துள்ள வானரங்களைக் காப்பதில் இந் நம்பி கொண்டுள்ள ஆர்வம் பேரருள் தோய்ந்து பெருந்தன்மை பெருகியுளது. பெற்ற தாய் பிள்ளையைப் பேணும் பேரன்பை இவ் வெற்றி வீரனிடம் வியந்து காண்கின்றோம். உற்ற குரங்குகளை உரிமையாய் ஓம்பி வருவது பற்றிய அடியவரைப் பரமன் காக்கும் பான்மையை மேன்மையாக் காட்டி ஆண்மை அருள்களை விளக்கி நின்றது.

எல்லை மீறிய படைகள் கொல்லும் கொடுமையோடு கொதித்து வருவதைக் கண்டும் உள்ளம் யாதும் தளராமல் இவ் வீர வள்ளல் ஊக்கி நின்று உரைத்திருப்பதை ஊன்றி நோக்கி உவந்து நிற்கின்றோம். தன் அருகே யாரும் நிற்கக் கூடாது; தனக்கு எவரும் எவ்வகையிலும் துணை வேண்டாம்

னை இந்த ஆண்டகை ஈண்டு வேண்டியிருப்பது அதிசய வியப்பாய் நீண்டுநிலவுகிறது. வெற்றித்திறல்வெளியறிய வந்தது.

மூராளுய் மூண்டு வந்துள்ள நிருதர் குழுவைத் திரண மாகவே எண்ணியிருக்கிறான். வலிய சூறாவளி எதிரே செத்தை கள் சிதறி அழிவது போல் தனது வீரப்பகழி முன் யாவரும் விரைந்து செத்து ஒழிவர் எனச் சித்தம் துணிந்து யுத்த வீரோடு இச்சுத்த வீரன் ஊக்கி நிற்பது உக்கிர வீரமாய் ஓங்கி ஒளி வீசி மிளிர்கின்றது. உள்ளத் துணிவு உறுதி தோய்ந்து நின்றது.

முற்றும் தலை துமிப்பளவும் தாங்கி நீக்குதி.

யுகாந்த காலக் கடல் போல் பொங்கி வந்துள்ள படைகளை அடியோடு நொடியில் ஒழித்து விடலாம் என்று இராமன் உறுதி பூண்டு நிற்பதை இவ்வுரை உணர்த்தியுள்ளது. மூலபலங்களை நான் நிர்மூலம் செய்யும் வரையும் நீ நம் கூலங்களைக் காத்து நில்! என்று இவ்வீர மூர்த்தி தம்பிக்கு உத்தரவு தந்திருக்கிறான். தலை துமித்தல் என்றது கொலை விளைக்கும் நிலையைக் குறித்து வந்தது. (மூண்டு வந்தவர் ஒருவராவது மீண்டு போக முடியாது என்பதை முற்றும் என்ற சொல்லால் உய்த்து உணர்ந்து கொள் கிறோம். விரைந்து வெற்றி பெறுவது உறுதி என்பதை இது விளக்கி நின்றது. வீரநாதன் நிலை விசித்திரமாய் விளங்கியது.

தான் தனியே நிற்பதை குறித்துத் தன் தம்பி யாதொரு சஞ்சலமும் கொள்ளாமல் நெஞ்சம் துணிந்து அயலே போம் படி இக்கோமகன் உரைத்திருப்பது கூர்ந்து சிந்திக்கத்தக்கது. அதிசய வீர பராக்கிரமம் அமரரும் துதி செய்ய வந்தது.

இங்கே சேனைகளைச் செலுத்தி விட்டு வேறு வழியாய்ச் சதி புரிந்து வானரங்களை வன் கொலையா இராவணன் வதைக்க நேர்வான்; அந்தக் கேடு நேராமல் முன் எச்சரிக்கையாய் நாடி நின்று நன்கு பாது காத்தருள் என்று இளவலை உய்த்திருப்பது இந்த அழகனது யூக விவேகத்தை உணர்த்தி நின்றது. ஈண்டு இக்குல மகன் குறித்த படியே ஆண்டு அவன் கொடிய சதி சூழ்ந்து கொலை புரிய வருவதைப் பின்னே காணலாம்.

அதிசய வீரமும் மதி யூகமும் சதுரப்பாடும் சாதுரிய சாகசமும் இவ் வுத்தமனிடம் தத்தம் எல்லையில் ஒத்து ஒளி வீசி

புள்ளன. அவ்வுண்மைகளை இடங்கள் தோறும் காரியங்களில் கண்டு வருகிறோம். எவ்வழியும் எச்சரிக்கைகள் எய்துகின்றன.

தனது தனிமையை நினைந்து தயங்கி நிற்கலாகாது; விரைந்து அயலே போய் வானரங்களைக் காத்து நில் என்று தன் தம்பியை நோக்கி இந்நம்பி சொல்லியுள்ளதில் வீர கம்பீரம் ஒளி வீசி நிற்கின்றது. போரில் பிறருடைய சகாயத்தை விரும்பாதவனை அசகாய சூரன் என வீர வுலகம் வியந்து பாராட்டி வரும். வியனான அந்த வீர நிலையை இக்குல மகனிடம் இங்கே உவந்து காணுகின்றோம். கூட்டு ஒருவரையும் வேண்டாக் கோற்றவ! என வாலி முன்னம் இராமனை நோக்கிச் சொன்ன வாய்மையை இக் கொற்றவன் ஈண்டுத் தூய்மையாக் காட்டியிருக்கிறான். கூட்டு யாரும் வேண்டாம் என்று குறித்திருப்பது இவ்வீரனது உள்ளத் துணிவையும் உறுதி நிலையையும் தன் நம்பிக்கையும் நன்கு உணர்த்தி நின்றது. தனக்குத் தானே துணை என்று தன்னையே கருதி உறுதி பூண்டுள்ளமை தனி முதல் தலைமையாய் இனிது மிளிர்கிறது. மனத்திண்மை மகிமை வீரமாய் நின்றது.

"True valour lies in the mind." [Thomson]

"உண்மையான வீரம் உள்ளத்தில் உள்ளது" என இது உரைத்துள்ளது. அவ்வுண்மையை இவ்வீர வள்ளல் இங்கே உணர்த்தியுள்ளான். தனிமை நிலை தகைமை காண வந்தது.

சுத்த வீரம் உத்தம ஆத்தும தத்துவமாய் ஒளி புரிகின்றது. சத்தியம் நீதி தருமம் முதலிய புனித நீர்மைகள் உடையவன் ஆதலால் இராமபிரானிடம் அதிசய வீரம் குடிகொண்டுள்ளது. உள்ளத்தில் நல்ல தன்மைகள் நிறைந்த பொழுது அங்கே உறுதியும் ஊக்கமும் உயர்ந்த வீரமும்ஒளிமிகுந்துஓங்கி வளர்கின்றன.

"The best hearts are ever the bravest." (Sterne)

"நல்ல இருதயங்கள் என்றும் உயர்ந்த வீரமாயுள்ளன" என ஸ்டேர்னி என்னும் ஆங்கிலப் பெரியார் இங்ஙனம் கூறியிருக்கிறார். புனிதமான நல்ல மனம் எல்லாம் வல்லதாகிறது.

தனக்குத் துணையாய் அருகு நில்லாமல் அயலே போய் வானரங்களைக் காக்க வேண்டும் என்று இந்நம்பி கூறியபோது தம்பி அவ்வாறே இசைந்தான். அண்ணனைக் கண் எனக் கருதிக்

காத்து நின்றவன் அக்காப்பு நிலை நீங்கி வானரங்களைக் காக்க நேர்ந்தான். நெஞ்சம் நேர்ந்த நிலை ஓர்ந்து கொள்ள வந்தது.

இது படை என்றபோது உதவி என்?

அயலே போ என்று அண்ணன் கூறியபோது தம்பி இவ்வாறு கூறியிருக்கிறான். "எல்லையில் அடங்காத படைகள் வெள்ளமாய் விரிந்து வருகின்றன; இதில் யாருடைய உதவியும் பயன் படாது; நான் அருகே நின்று என்ன போர் செய்தாலும் அது உனக்கு உதவி செய்ததாகாது; அயலே போய் ஒதுங்கி நின்று உனது அதிசய வில்லாடலைக் கண்டு களிப்பதே இது பொழுது எனது கடமையாம்; ஐயனே! உன் ஆணையின்படியே போகின்றேன்" என்று தொழுது வில்லோடு வெளி ஏறினான்.

அண்ணனுடைய அற்புத வீரத்தை நன்கு அறிந்துள்ளவன் ஆதலால் இளையவன் இங்ஙனம் உள்ளம் துணிந்து ஒதுங்கினான்.

அனுமன் அமைந்தது.

அவன் போகவே அனுமான் வந்து அடி வணங்கி நின்றான். தன்னையும் அயலே போகும்படி பணிக்கலாகாது என்னும் குறிப்போடு பணிந்து மொழிந்தான். "ஆண்டவா! மூண்ட போரில் தனியே விட்டு அடியேன் யாண்டும் அடி பெயரேன்; வேண்டிய உதவிகளை விரைந்து செய்வேன்; தோளில் தாங்கி ஊழிக்காற்று என உலாவி வருவேன். கடல்கள் போல் அடல்கள் மீறி வருகிற படைகளின் உடல்கள் உடையத் தலைகள் உருள உயிர்கள் ஒழிய ஏழை ஊழியம் புரிவேன்; என்னை வெளியே தள்ளாமல் அருகே நிற்கும்படி அருள் புரிந்தருள்" என்று பொருள் பொதிந்த மொழிகள் புகன்று வேண்டினான்.

மாருதி இவ்வாறு மறுகி வேண்டவே இராமன் அவனை உரிமையோடு உவந்து நோக்கி உறுதி நலங்களை உணர்த்தினான். அந்த உணர்வுரைகள் அனுமனுடைய அடலாண்மைகளை நன்குவிளக்கி அவனது உயர் நிலைகளை நேரே துலக்கி வந்தன.

இராமன் உரைத்தது.

ஐயமிற்கு இயலா துண்டே இராவணன் அயலே வந்துற்று எய்யும் விற் கரத்து வீரன் இலக்குவன் தன்னோடு ஏற்றால்

மொய்யமர்க் களத்தின் உன்னைத் துணைபெறாது ஒழியின் மொய்ம்ப
செய்யுமா வெற்றி யுண்டோ? சேனையும் சிதையு மன்றே .(1)

ஏரைக்கொண் டமைந்த குஞ்சி இந்திர சித்துஎன்பான் தன்
போரைக் கொண்டிருந்த மேனாள் இளையவன் தன்னைப் போக்கியது
ஆரைக் கொண்டு உன்னாலன்றே வென்ற தங்கவனை இன்னும்
வீரர்க்கு வீர நின்னைப் பிரிகிலன் வெல்லும் என்பேன். (1)

சேனையைக் காத்து, என்பின்னே திருநகர் தீர்ந்து போந்த
யானையைக் காத்து, மற்றை இறைவனைக் காத்து, எண்தீர்ந்த
வானையித் தலத்தினோடு மறையொடும் வளர்த்தி என்றான்
ஏனமற்று உரைக்கி லாதான் இளவல்பின் எழுந்து சென்றான். (3)

(மூலபலவதை, 65-67)

தன்னை விட்டுப் பிரிய மனம் இல்லாமல் மறுகி உருகி நின்ற அனுமானை உரிமையோடு பார்த்து இராமபிரான் உரைத்துள்ள உரைகள் பரிவு தோய்ந்து அறிவு நலம் கனிந்து உறுதி நிலைகளை உணர்த்தி வந்துள்ளன. தனக்கு உதவி புரிய நேர்ந்ததை விலக்கித் தன் தம்பிக்கு உதவி செய்யும்படி மாருதியை இவ் வீரன் ஏவியிருப்பதில் சீரிய காரிய சாதனைகளை விளக்கியருளினான். "அப்பா, அனுமா! நீ என் பக்கம் நிற்பது எனக்கு மிக்க உதவியே; ஆயினும் இப்பொழுது நீ என் தம்பிக்கே துணையாய் உதவி புரிய வேண்டும்; எதிரிகளால் நம் சேனைகளுக்கு இடையூறுகள் நேராதபடி இளையவன் பாதுகாக்கப் போயிருக்கிறான்; நீயும் கூடப்போய் நில்; உன்னை நம்பியே பலமுறையும் அவனைத் தனியே போருக்கு அனுப்பியிருக்கிறேன். இங்கே நிருதர் திரள்களைச் செலுத்தி விட்டு இலங்கை வேந்தன் கரவாய் வந்து நம் வானரங்களை அழிக்கத் துணிவன்; அந்தப் பழிகாரனோடு இளையவன் போராட நேர்ந்தால் உனது உதவி அவனுக்கு அவசியம் தேவை; நீ அங்கே இல்லையானால் அல்லலேயாம்; நிகும்பலையில் முன்பு இந்திரசித்தோடு என் தம்பியைப் போருக்கு அனுப்பியது உன்னை நம்பியேயாம்; நீ கூடப்போய் நின்று பாடு பட்டதனாலேயே மகா மாயாவியான அந்த வில்லாளியை வெல்ல முடிந்தது; சிறந்த மதி யூகமும் உயர்ந்த தீரமும் அதிசய ஆற்றலும் உடைய நீ இளையவனுக்கு உதவியாய் நின்று எவ்வழியும் துணைபுரிய வேண்டும்; உனது வீர பராக்கிரமம் அரக்கர் குலத்தைக் கருவறுத்து வருகிறது; நீ ஆற்றி வருகிற

ஆதரவால் அமரர் குலம் ஏற்றம் பெற்று மகிழ்கிறது; உன் குலம் உயர் நிலையில் ஓங்கி ஒளி பெற்று மிளிர்கிறது; நம் சேனைக்கு நீ உயிர் நிலையாய் நிற்கின்றாய்; ஆகையால் இளவலை ஆதரித்துச் சேனையைப் பாதுகாத்து வானையும் வையத்தையும் மறைகளையும் துறைகள் தோறும் காத்து நிறை புகழோடு நிலவி நில்'' என்று இன்னவாறு இராமன் கூறவே அனுமான் யாதும் மாறு கூறாமல் அடி வணங்கி அயலே போனான்; அங்ஙனம் போகும்பொழுது அவனுடைய கண்களில் நீர் பெருகி நின்றது. தன்னைக் குறித்து ஆண்டவன் சொன்ன புகழ் மொழிகளும் அவனது தனிமையும் உள்ளத்தை உருக்கி நின்றமையால் விழி களில் நீர் வெளிவரலாயது. உழுவலன்புடையவன் அழுது கொண்டே இளவலைத் தொடர்ந்து சென்றான். முன்னவன் மொழியும் பின்னவன் வழியும் விழி எதிர் விளங்க விரைந்து நடந்தான். அஞ்சனவண்ணனை நெஞ்சில்நினைந்துநேரேபோனான்.

என் பின்னே திருநகர் நீர்ந்து போந்த யானை.

இலக்குவனை இராமன் இன்னவாறு இங்கே குறித்திருக் கிறான். உழுவலன்பு உரையில் ஒளி புரிந்துள்ளது.

தன்னைத் தொடர்ந்து தன் பின் வந்து தனக்காகத் தமபி படுகிற துன்பப்பாடுகளை இந்நம்பி அடிக்கடி நினைந்து உள்ளம் உருகி வருவதை இடங்கள் தோறும் உணர்ந்து வருகிறோம். இனிய போகங்களை அனுபவித்து இன்ப நகரில் இனிது இருக்க வுரியவன் தன் பொருட்டுத் துன்பம் உழந்து வருகிறானே! என்ற அன்புப் பாசம் இந்த அண்ணலை மருமமா உருக்கி வருகிறது. அயோத்தி நகரின் செல்வ வளங்களும் செழிப்பும் அழகும் நினைப்பில் நிலைத்து வருதலால் திருநகர் என்றான். துறவியாய் வனம் புகுந்தாலும் பிறவி நகரில் பேரன்பு பெருகியுளது. யானை என்றது கம்பீர நிலை கருதி. இருகை யானை என இராமனைக் காவிய வுலகம் ஆவலோடு கூறி வருகிறது. தன் தம்பியை யானை என அந்த உரிமையில் இந்த நம்பி ஈண்டு நவின்றுள்ளான்.

தன் தம்பிக்குத் துணையாய்ப் போகும்படி அனுமானை அனுப்பியதோடு உடனே வீடணனையும் அனுப்பினான். இலங்கைத் தம்பியை அழைத்து அயோத்தித் தம்பிக்கு ஆதரவு புரியுமாறு நேரே உரைத்து விடுத்தது உரிமை சுரந்து வந்தது.

வீடண நீயும் மற்றுன் தம்பியோடு ஏகி வெம்மை
கூடினர் செய்யு மாயம் தெரிந்தனை கூறிக் கொற்றம்
நீடுறு தானை தன்னைத் தாங்கினை நில்லாய் என்னின்
கேடுள தாகும் என்ருன் அவனது கேட்ப தானுன். (1)

சூரியன் சேயும் செல்வன் சொற்றதே எண்ணும் சொல்லன்
ஆரியன் பின்பு போனுன் அனைவரும் அதுவே நல்ல
காரியம் என்னக் கொண்டார் கடற்படை காத்து நின்ருர்
வீரியன் பின்னர்ச் செய்த செயல்எலாம் விரிக்க லுற்ரும். (2)

தனக்கு உரிமையாகத் தன் அருகே நின்ற விபீடணன் சுக்கிரீவன் முதலிய தலைவர்கள் யாவரையும் இலக்குவனேடு போய்ச் சேர்ந்து நின்று வானர சேனைகளைப் பாதுகாக்கும்படி பணித்து விடுத்திருப்பதை நுனித்து நோக்கி இராமனது தனித்த நிலைமையைக் குறிப்போடு பார்த்து நாம் வியப்புற்று நிற்கிருேம்.

வீடண! உன் தம்பியோடு ஏகி நில்.

இந்த நம்பி பேசி வந்த நளின மொழிகளில் இந்த வாசகம் இனிமை சுரந்து விநயம் மிகுந்து நனி நயமா விளங்கி யுள்ளது. தம்பி என்று பொதுவாகச் சொல்லாமல் உன் தம்பி என உரிமை அன்பு கனிய உரைத்திருக்கிருன். வீடணனைத் தம்பி என்று முன்பு இராமன் தழுவிக் கொண்டான் ஆதலால் அந்தக் கிழமையும் கெழுதகைமையும் வளமையாய்த் தெரிய விளம்பினுன் அன்பு கனிந்த இந்த அருமை மொழி அவனை இன்பக் கடலில் ஆழ்த்தியது. ஆண்டவனுடைய பெருந்தன்மையை வியந்து மகிழ்ந்து அவன் விரைந்து போனுன். சுக்கிரீவன் முதலானவர்களையும் பக்கத் துணைக்கு அனுப்பி யருளினுன்.

வியப்பு நிலை.

நெடிய கடல்போல் பெரிய படைகள் தன்மேல் போருக்கு வருகின்றன. கொடிய கொலைக் கருவிகளோடு கோர வடிவங்களில் நீண்டு மூண்டு அரக்க வீரர்கள் யாண்டும் ஆர்த்து அடர்ந்து ஆரவாரங்கள் புரிந்து அடலோடு அமராடப் புகுந்தன.

இந்தச் சமையத்தில் தன் அருகே நின்ற அருமைத் தம்பி முதலிய உத்தம வீரர்களை அயலே போய்விடும்படி பணித்தது இச்சுத்த வீரனுடைய அதிசய ஆற்றலையும் மதியூகத்தையும் அதி

நயமா விளக்கி நின்றது. தனக்கு உதவியாய் நின்ற வானர சேனைகள் அச்சத்தால் கலங்கி ஒதுங்க நேர்ந்தன; அயலே தனியே நிற்கின்ற அப்படைகளை இராவணன் உபாயமாய் வந்து படுகொலை செய்ய நேர்வான் என்று இந்த ஐயன் யூகமாயுணர்ந்தான்; உணரவே அவ்வானரக் குழுவைப் பாதுகாத்து நிற்கும் படி இலக்குவனை அனுப்பினான்; அவனோடு துணைக்கு யாவரையும் ஒதுக்கி விடுத்தான். தனுவே துணையாய்த் தனித்து நின்றான்.

தனக்குத் துணையாய் நின்ற வீரர்களை அமர் மூண்ட அமையம் அயலே விலக்கி விடுத்தது நமக்கு வியப்பை விளைத்துள்ளது. வினைவை நுணுகி உணர்ந்து இக்கோமகன் அவ்வாறு வேலை செய்ய நேர்ந்தான். பகையாளியின் மாய வஞ்சகங்களையும் படுமோசங்களையும் தொகையா அறிந்து வந்திருத்தலால் அவனது அபாயத்தைத் தடுக்க வகையா வகுத்து விடுத்தான். முன் எச்சரிக்கையாய் உன்னி ஓர்ந்து உறுதி புரிந்துள்ளான். சமரின் சாதுரிய சாகசமும் யூக விவேகமும் இவ்வீரக் குரிசிலிடம் ஒருங்கே நிறைந்து ஒளி வீசி நிற்கின்றன. வீரத் திறனும் மதி யூகமும் வினைய விநயமும் ஈண்டு வீறு கொண்டு விளங்குகின்றன. அருந்திறலாண்மை திருந்திய அறிவால் திகழ்கிறது.

"The better part of valour is discretion." [Shakespeare]

"வீரத்தின் சிறந்த பாகம் உயர்ந்த யூகமே" எனத் தெளிந்த ஆங்கிலக் கவிஞர் இங்ஙனம் வரைந்து கூறியிருக்கின்றார்.

அதிசய வீரமும் மதிமாண்பும் இராமனிடம் மருவி நின்று விதி முறைகளைச் செய்து வெற்றி நலங்களை விளைத்து வருகின்றன. உயர்ந்த அரச குலக் குரிசில்கள் போர் முனையில் ஊக்கி நின்று வினை ஆற்றி வருவதை வியந்து நோக்கி நாம் உவந்து நிற்கின்றோம். அயலே போ என்று அண்ணன் சொன்னவுடனே தம்பி அவ்வாறே விரைந்து போனான். தமையன் சொல்வது எதுவோ அதைச் செய்வதே தனது தலைமையான கடமை என இளையவன் எவ்வழியும் இயற்றி வருகிறான். உறுதியும் ஊக்கமும் பொருதிறலும் உடையவன் உரிய கடமைகளை உணர்ந்து செய்வதால் அரிய காரிய சித்திகளை அடைந்து பெரிய வீரனாய்ப் பேர் பெற்று விளங்குகிறான். கடன் அறிந்து கருமம் புரிகின்றான்.

Dare to do your duty always; this is the height of true valor. [Simmons.]

"உன் கடமையைச் செய்ய எப்பொழுதும் துணிந்து நில்; அதுதான் உண்மையான உயர்ந்த வீரம்" என்னும் இந்த ஆங்கில வாசகம் ஈங்கு ஊன்றி உணர்ந்து கொள்ள வுரியது.

அண்ணன் குறித்த குறிப்பின்படியே இலக்கோடு சென்ற இலக்குவனோடு அனுமான் முதலிய யாவரும் நேரே போயினர்.

போர்க் கோலம்.

தன் பக்கல் நின்ற அனைவரும் ஒக்க நீங்கிய பின் இராமன் யுத்த சன்னத்தனாயினன். கவசத்தை மார்பில் இறுக்கிக் கட்டி அம்புப் புட்டிலை முதுகில் இணைத்துப் பிணித்து வில்லைக் கையில் ஏந்தி வீர கம்பீரமாய் எழுந்தான். உக்கிர வீரங்கள் ஒளி வீசி வர வெளியேறி வந்த இவ்வீரக் குரிசிலின் வித்தகநிலை வியத்தகு கலையாய் விளங்கி வெற்றித் திறல்களை விளக்கி நின்றது.

நெடிய கடல்போல் அடல்கொண்டு விரிந்து பரந்து நின்ற சேனைத் திரள் எதிரே இம் மானவீரன் சென்றபோது வானத்தவர் யாவரும் மறுகி இரங்கினர். யாண்டும் எல்லை காண முடியாதபடி அடல் மீறி நிற்கிற படைகளின் பரப்பையும், ஒரு வில்லோடு தனியே வருகிற இராமனது தனிமையையும் கண்டு மண்ணும் விண்ணும் கண்ணீர் விட்டுக் கலங்கின. அப்பொழுது விண்ணோர் எண்ணித் துதித்து ஏத்தித்தொழுதனர்; விழுமிய நிலையிலுள்ள அவர்போற்றியது பேரன்பின் பரிவுகளாய்ப்பெருகியது.

இமையவர் ஏத்தியது.

கண்ணனே! எளியேம் இட்ட கவசமே! கடலே அன்ன
வண்ணனே! அறத்தின் வாழ்வே! மறையவர் வலியே! மாறு து
ஒண்ணுமோ நீ அலாதோர் ஒருவர்க்கு இப்படைமேல் ஊன்ற
எண்ணமே முடித்தி என்று ஏத்தினர் இமையோர் எல்லாம். ௭

முனிவர் வாழ்த்தியது

முனிவரே முதல்வர் ஆய அறத்துறை முற்றினோர்கள்
தனிமையும் அரக்கர் தானைப்பெருமையும் தரிக்க லாதார்
பனிவரு கண்ணர் விம்மிப் பதைக்கின்ற நெஞ்சர் பாவத்து
அனைவரும் தோற்க அண்ணல் வெல்கஎன்று ஆசி சொன்னார்

மூலபலப் படைகள் மேல் இராமன் மூண்டு போருக்கு வந்த போது ஆண்டு நிகழ்ந்த நிலைகளை இவை காட்டியுள்ளன. அளவிடலரிய கொடிய நெடிய சேனைகள் இடையே இவ்வீரன் தனியே நேர்ந்ததை நினைந்து யாவரும் திகிலடைந்தனர். தேவரும் தியங்கி மயங்கினர்; தேவதேவனை எண்ணி ஆவலோடு துதித்தினர். இக் கோமகனுக்கு வெற்றி யுண்டாக வேண்டும் என்று மாமறைகளை ஓதி நேமமாய் நேரே உரிமை கூர்ந்து போற்றியிருப்பதில் இவனது பெருமகிமைகள்தோன்றிநின்றன.

இராமனைக் கண் என எண்ணி விண்ணோர் விழைந்து மகிழ்ந்து வருவது கண்ணனே! என்றதனால் இங்கே காண வந்தது. அரக்கரால் தங்களுக்கு நேர்ந்துள்ள துயர்களை நீக்கி உயர் வாழ்வுகள் அருள் வந்துள்ள பெருமான் என்று தேவர் யாவரும் இவ்வீரனை உவந்து புகழ்ந்து வருவதைக் காவியம் முழுவதிலும் கண்டு வருகிறோம். அமரருடைய ஆர்வமொழிகள் சீரிய கூரிய பொருள்களோடு நீர்மை ஒளிகள் நிலவி வருகின்றன. "இராமநாதா! கருணைக் கடலே! யாவர்க்கும் கண் என மருவியுள்ள கண்ணா! அரிய மரகத வண்ணா! எளியவர்க்கு எவ்வழியும் இனிய ஆதாரமாயுள்ள ஏழை பங்காளா! எங்களைச் செவ்வையாய்க் காத்தருள வந்த திவ்விய வீரா! நீதி நிலையமே! வேத போதமே! தரும மூர்த்தியே! உனது அரிய அதிசய நிலை யாரும் சரியாய் அறிய முடியாதது; ஊழிக் கடல்போல் உருத்து வந்துள்ள இந்தக் கொடிய படைகள் எதிரே உன்னைத் தவிர வேறு எவர் எதிர்த்து நிற்க வல்லார்? உனது வீர பராக்கிரமம் விழுமிய வியப்புகளை விளைத்து வருகிறது; ஆண்டவா! நீ விரைவில் வெற்றி பெற வேண்டுமே! என அகில வுலகங்களும் ஆவலோடு வேண்டி நிற்கின்றன; தசரதன் மதலையாய் வந்துள்ள நீ சராசரங்களுக்கும் மதலையாய் நின்று இதம் புரிந்தருள்" என்று முன்னவாறு விண்ணவர் விதி முறையோடு துதித்து நின்றனர்.

அறத்தின் வாழ்வே!

இராமனை அமரர் இவ்வாறு குறித்திருக்கின்றனர்.

தருமம் வாழ்ந்து வருவது இராமன் புரிந்து வருகிற கருமத் தாலேயாம். பாவங்களை நீக்கிப் புண்ணியங்களை வளர்க்கவே

கண்ணியமான அரசர் குடியில் கண்ணன் மணி வண்ணனாய் மருவி வந்துள்ளான். அவனது வரவு அரிய மருமங்களுடையது.

அறத்தின் மூர்த்தி வந்து அவதரித்தான்.
(இராமா, மந்திர, 39)

தோன்றிய நல்லறம் நிறுத்தத் தோன்றினன்.
(நகர்நீங்கு, 169)

அறம் என நின்ற நம்பன். (கும்பகருணன், 132)

தாதைசொல் தலைமேல் கொண்ட தாபதன்; தருமமூர்த்தி.
(நாகபாசம், 275)

தரும சொரூபி, தருமத்தை நிலைநிறுத்த வந்தவன் என இராமனை இவை குறித்துள்ளன. குறிப்புகள் கூர்ந்து நோக்க வுரியன. அறம் இனிது வாழ அரிய காரியங்களை ஆற்றி வருகிற புண்ணிய மூர்த்தி ஈண்டு மூண்டுள்ள பாபக் கூட்டங்களைப் பாழ்படுத்த நேர்ந்து நிற்கின்றான்; அந்நிலையை நேரே தெரிய அறத்தின் வாழ்வே! என அமரர் ஆர்வமாய் ஆர்த்து மொழிந்தனர். உம்பர் உவந்து கூறிய மொழிகள் உறுதி யுண்மைகளை உணர்ந்து இம்பர் யாவரும் இனிது தெளிந்து கொள்ள வந்தன.

ஒளி முன் இருள் ஒழியும்; அறத்தின் முன் பாவம் அழியும்; அதுபோல் இராமன் எதிரே அரக்கர் திரள் யாவும் விரைந்து அழிந்துபடும் என்பதை இங்கே குறித்த குறிப்பால் கூர்ந்து ஓர்ந்து முடிவுகளை முன்னதாகவே தேர்ந்து கொள்ளுகிறோம்.

பாவத்து அனைவரும் தோற்க; அண்ணல் வெல்க.

முனிவர்கள் இவ்வாறு வாழ்த்தியிருக்கின்றனர். உலகப் பற்று அற்றுப் பரமனையே பற்றி எவ்வழியும் யோக நிலையிலுள்ள இருடிகள் இராமபிரானுக்கு வெற்றியுண்டாக வேண்டும் என்று இப்படி உள்ளம் துணிந்து ஆர்வமாய் வேண்டி யுள்ளனர்.

அரக்கர் தொலைக என வெளிப்படையாய்ச் சொல்லாமல் பாவத்து அனைவரும் ஒழிக என்று சபித்திருப்பது அவரது புண்ணிய நீர்மையை உணர்த்தி நின்றது. பாவம் உயிர்களைத் தாழ்த்தித் துயர்களில் தள்ளும்; புண்ணியம் சீவர்களை உயர்த்தித் திவ்விய இன்ப நிலைகளில் செலுத்தும். மடமையான பழக்கங்களால் தீய காரியங்களைச் செய்து பாவிகளாயிழிந்து யாழ்

படுவது யாண்டும் துன்பமேயாம் ஆதலால் அந்தத் துயர நிலையிலிருந்து உயிர்கள் உய்ய வேண்டும் என்றே உயர்ந்தோர் ஓதி வருகின்றனர். மாதவர் வாய்மொழி மகிமை தோய்ந்து வந்தது.

உள்ளத்தில் இரக்கம் இன்றி உலகத்தில் பலருக்கும் அல்லல் புரிந்து வருதலால் அரக்கர் பாவகாரிகளாய் எள்ளப்பட்டனர். பாபிகளான அவர் பாழாய் முற்றும் அற்று ஒழியவும் புண்ணிய மூர்த்தியான இராமன் வெற்றி பெற்று வரவும் வேத மந்திரங்களை ஓதி நீதிகளைச் சிந்தித்து மாதவர் ஆசி கூறி நின்றார்.

"பனிவரு கண்ணர் விம்மிப்
பதைக்கின்ற நெஞ்சர்."

இராமன் கோதண்டம் ஏந்தி மூல பலத்தோடு போருக்கு மூண்டபோது முனிவர் மறுகி வருந்தியுள்ள நிலையை இது உணர்த்தியுள்ளது. நெஞ்சையும் கண்ணையும் நேரே காட்டி மாதவரது மறுக்கத்தையும் உருக்கத்தையும் விளக்கியிருப்பது விழைந்து சிந்திக்கத்தக்கது. உள்ளம் பதைத்துக் கண்ணீர் சொரிந்து உருகியுள்ளமையால் அவரது உரிமை தெரிய வந்தது.

பாசபந்தங்கள் யாவும் ஒழிந்து ஈசனையே யாண்டும் நேசித்து வருபவர் ஈண்டு இராமனிடம் இவ்வாறு பரிவு கொண்டு உருகியிருக்கின்றார்; ஆகவே இவனது பரமநீர்மையை நாம் கூர்மையா அறிந்து கொள்கிறோம். இவ் வீரனது தனிமையை நினைந்தே முனிவர் துனியுழந்து இரங்கியுள்ளனர்.

கருங்கடல் போல் படைகள் எங்கும் பொங்கி நீண்டுள்ளதையும், இராமன் தனியே செல்வதையும் கண்டபொழுது தேவர் முதல் யாவருக்கும் பெரிய திகில் உண்டாகியது. அந்த நிலையில் உள்ளம் உருகி உரிமை மீதூர்ந்து இந்த வள்ளலுக்கு வெற்றி உண்டாகவேண்டும் என்று எல்லாரும் வேண்டிநின்றார்.

சேனைத் தலைவர் திகைத்தது.

தங்கள் படைகள் வந்ததைக் கண்டதும் வானர சேனைகள் கதறி ஓடியதையும் அதன் பின் ஒவ்வொருவராய் அயல் அகன்று போனதையும் கண்டு களித்துத் தம் தோற்றத்திலேயே எதிரிகள் அடியோடு தொலைந்தார் என்று முடிவு செய்து நெடிது செருக்கிச் சேனாதிபதிகள் எல்லாரும் சிரித்து நின்றார். அவ்வாறு அவர்

தருக்கி நிற்கும்போது இராமன் வில்லோடு வீர கம்பீரமாய்ச் செருமுனையில் ஏறினன். பசிய கோலத் திருமேனியனாய்த் தனியே எதிர்ஏறிவருகிற இவ்வீரனைக் கண்டதும் முன் அணியில் முதன்மையாய் நின்ற சிறந்த சேனைத் தலைவர்கள் யாவரும் திகைத்து வியந்தார். அந்த வியப்பினால் பலவும் விளம்பினர்.

வியந்து மொழிந்தது.

இரிந்த சேனை சிந்தி யாரும் இன்றிஏக நின்றுநம்
விரிந்த சேனை கண்டு யாதும் அஞ்சலின்றி வெஞ்சரம்
தெரிந்து சேவகம் திறம்ப லின்றி எய்து செய்கையான்
புரிந்த தன்மை வென்றி மேலு நன்றுமாலி பொய்க்குமோ? (1)

புரங்கள் எய்த புங்கவற்கும் உண்டுதேர் பொருந்தினர்
பரந்த தேவர் மாயன்நம்மை வேர் அறுத்த பண்டைநாள்
விரைந்து புள்ளின் மீதுவிண்ணு ளோர்களோடு மேவினன்
கரந்திலன் தனித்து ஒருத்தன் நேரும் வந்து காலினன். [2]

தேரும் மாவும் யானை யோடு சீயம் யாளி ஆதியா
மேரு மானும் மெய்ய நின்ற வேலை ஏழின் மேலவா
வாரும் வாரும் என்றழைக்கும் மானுடர்க்கிம் மண்ணிடைப்
பேரு மாறும் நம்முழைப் பிழைக்கு மாறும் எங்ஙனே? (3)

(மூலபலவதை, 75-77)

தனியே போர்க்களம் புகுந்த இராமனது வீரத்திறலை நோக்கித் தானைத் தலைவர் வியந்து பேசியிருக்கும் நிலைகளை இங்கே உவந்து பார்க்கிறோம். வானரங்கள் யாவும் ஓடிப் போயின; துணையாய் நின்ற எல்லாரும் பிரிந்து போயினர்; ஒரு வில்லை மாத்திரம் இடது கையில் வைத்துக்கொண்டு இந்த மனிதன் தன்னந்தனியனாய் வருகிறான்; கடல்போல் புடை சூழ்ந்து அடல் கொண்டுள்ள நம் படை வீரர்களைக் கண்டு யாதொரு கவலையும் கொள்ளாமல் யாவும் துச்சமாக எண்ணி உச்ச நிலையில் ஊக்கி நிற்கிறான்; ஊர்தி ஒன்றும் இல்லை; பாதசாரியாகவே நடந்து வருகிறான்; முன்பு திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும் தேர் முதலிய துணைகளைக் கொண்டு சென்றான்; பக்க வசதி யாதும் கருதாமல், ஏதொரு உதவியும் இல்லாமல் உள்ளமே துணையாய் இவன் ஊக்கி நேர்ந்துள்ளான்; யானை யாளி சிங்கம் முதலிய நமது படைத் திரள்களையும் நெடிய வீரர்களையும் கடுகளவும்

மதிக்கவில்லை; எவரையும் படுகொலைகள் செய்ய வல்ல கொடிய திறலினர் என அமரரும் நமரை அஞ்சி நடுங்குகின்றனர்; இவன் கொஞ்சமும் அஞ்சாமல் நெஞ்சம் துணிந்து நேரே வந்து போருக்கு அறைகூவி நிற்கின்ருன். இந்த நிலையே இவனது வெற்றிச் சின்னமாய் விளங்கி நிற்கிறது. செத்து விழுவோம் என்ற அந்த நிலையை அறவே மறந்து பித்தம் பிடித்தவனைப் போல் மடமையாய் ஈண்டு மூண்டு வந்துள்ளான்; ஒரு மனிதன் என்ன செய்ய முடியும்? நம்மிடமிருந்து இவன் எப்படித் தப்பிப் பிழைப்பான்? இது வியப்பான விசித்திரமாய்த் தோன்றுகிறது'' என இன்னவாறு சேனுதிபதிகள் ஆறுதை அதிசயமடைந்து விரைந்தனர். திகைப்புகளில் திகில்கள் செறிந்து நின்றன.

புரங்கள் எய்த புங்கவற்கும் உண்டு தேர்.

தேவதேவரும் பகையாளிகளை வெல்லச் செல்லும்பொழுது தேர் முதலிய வாகனங்களோடும் சீரிய படைத் துணைகளோடுமே போயுள்ளனர். புங்கவன் என்றது சிவபெருமானை. யாவரினும் தலைமையாய் உயர்ந்தவன் என்பதை இப்பெயர் விளக்கியுள்ளது. புங்கம் = உயர்ச்சி. விமானம் போல் ஆகாயத்தில் பறந்து செல்ல வுரிய மூன்று நகரங்களில் இருந்து கொண்டு அசுர வேந்தர் மூவர் உலகத்துக்கு இடையூறு செய்து வந்தனர். குலத்தோடு அவரை அழித்து ஒழிக்கச் சிவபெருமான் சென்ருர்; போர்மேல் அங்ஙனம் செல்லும்பொழுது தேவர் முதலிய துணைகளும் பஞ்ச பூதங்களும் ஆதரவாய் உடன் சென்றன. ஞாலமே மேலான தேர் ஆய் மேவி நின்றது. திரிபுரம் எரித்த அந்தச் சரித நிகழ்ச்சியை இங்கே நிருதர் நினைத்திருக்கின்றனர்.

அரிய பரமனும் அமரில் ஆயத்தங்களோடு சென்றிருக்கிருன். இந்தச் சிறிய மனிதன் ஒரு துணையும் வேண்டாமல் ஈண்டு மூண்டு வந்து நிற்கின்ருன்; மாண்டு படு வதை எண்ணுமல் மதி கெட்டுநேர்ந்தான் என நீண்ட வியப்பை அவர் அடைந்துள்ளார்.

போர் மூண்டது.

தனிமையாய் வந்து எதிர்ந்துள்ள இராமனது நிலைமையை நினைந்து வியந்து நின்றவர் விரைந்து வெகுண்டு கொல்ல மூண்டு கொலைக் கருவிகளைக் கொடுமையாய் வீசினர். வளைத்த வில்

லோடு நின்ற இராமன் அம்புகளை ஒல்லையில் உருத்துத் தொடுத்தான். பாணங்கள் யாண்டும் மூண்டு பாய்ந்தன. அவை பாய்ந்த இடந்தோறும் படைகள் மாய்ந்து விழுந்தன. தேர் யானை முதலாக நால்வகை நிலைகளில் கால் வகுத்து நின்ற சேனைகள் எங்கணும் நெருப்பு வாணங்கள் போல் பாணங்கள் சீறிப் பாயவே யாவும் சின்ன பின்னமாய்ச் சிதைத்து செத்து மடிந்தன. ஊழிக் காற்று என வாளிகள் யாண்டும் ஊடுருவி ஓடுவதும், கூடவே உயிர்கள் மடிந்து விழுவதும் அதிசய வியப்புகளாய் விளைந்தன. அடலாண்மைகளோடு ஆர்த்து வந்தவர் மிடல்கள் தேய்ந்து உடல்கள் ஒய்ந்து படர்களோடு மாய்ந்தனர்.

வாடை நாலு பாலும் வீச மாக மேக மாலைவெங்
கோடை மாரி போல வாளி கூட ஓடை யானையும்
ஆடல் மாவும் வீரர் தேரும் ஆளும் மாள்வ தாயவால்
பாடு பேரு மாறு கண்டு கண்செல் பண்பும் இல்லையால். (1)

விழித்த கண்கள் கைகள் விற்கள் வேல்கள் வாள்கள் விண்ணினுள்
தெழித்த வாய்கள் செல்ல லுற்ற தாள்கள் தோள்கள் செல்லிணைப்
பழித்த வாளி சிந்த நின்று பட்ட தன்றி விட்ட கோல்
கழித்த ஆயு தங்கள் ஒன்று செய்த தில்லை கண்டதே. (2)

தொடுத்த வாளி யோடுவில் துணிந்துவீழும் முன்துணிந்து
எடுத்த வாள்க ளோடு தோள்கள் இற்று வீழும் மற்றுடன்
கடுத்த தாள்கள் கண்டமாகும் எங்ஙனே கலந்து நேர்
தடுத்த வீரர் தாமும் ஒன்று செய்யுமா சலத்தினால். (3)

பிடித்த வாள்கள் வேல்களோடு தோள்கள் பேரரா எனத்
துடித்த; யானை மீதிருந்து போர்தொடங்கு சூரர்தம்
மடித்த வாய்கள் செந்தலைக்குலம் புரண்ட வானின்மின்
இடித்த வாயின் இற்றமா மலைக்குலங்கள் என்னவே. (4)

கோர வாளி சீய மீளி கூளியோடு ஞாளியும்
போர வாளி ளோடு தேர்கள் நூறுகோடி பொன்றுமால்
நார வாளி ஞால வாளி ஞான வாளி நாந்தகப்
பார வாளி வீர வாளி ஏக வாளி பாயவே. (5)

இராமன் ஏவிய பாணங்களால் படைகள் இவ்வாறு எவ்வழியும் அழிந்து மடிந்திருக்கின்றன. போர் நிலைகளிலேயே பழகிக் கொலைத் தொழில்களிலேயே பெருகி யாண்டும் கொடிய

சூரராய் நெடிது ஓங்கி நின்ற அரக்கர்கள் ஈண்டு யாதும் செய்ய முடியாமல் வெய்ய வாளிகளால் துடித்துப் பதைத்துப் படித் தலத்தில் உருண்டு புரண்டு மருண்டு வெருண்டு இடங்கள் தோறும் இறந்து படுகின்றனர். வில் வீரர்கள், வேல் வீரர்கள், வாள் வீரர்கள், தேர் வீரர்கள் எனத் திரண்டு வந்த போர் வீரர் கள் யாவரும் நேரேறி வரு முன்னரே நிலை குலைந்து நிரை நிரையே பொன்றி வீழ்ந்தனர். விழித்த கண்களிலும், தெழித்த வாய்களிலும் வாளிகள் ஊடுருவி ஓடவே யாளிகள்போல் அடல் கொண்டு வந்த அரக்கர் உயிர்களும் கூடவே ஓடின. புடை சூழ்ந்து நின்று பொங்கி வீசுகின்ற படைக் கலங்கள் அனைத் தையும் பாழாக்கித் தொடுத்தவர் அனைவரையும் பகழிகள் கடுத்து அழித்தன. ஒரு வில்லிலிருந்து வெளிவருகிற கணைகள் பல்லுயி ரையும் பாழ்படுத்தி வீழ்த்தி வான வீதியில் பறந்து திரிவது மாயாசாலங்களாய் மருவி நின்றது. விழித்து நோக்கினால் விழிகள் கீழே விழுகின்றன; தெழித்துச் சீறினால் தலைகள் உருளுகின்றன; வேல்களை வீசினால் கைகளோடு அவை கடிது துணிபடுகின்றன; வாள்களை ஓச்சினால் தோள்களோடு அவை தொலைந்து போகின்றன; செயிர்த்து முன்னேறி வந்தால் தாள் கள் தறிபடுகின்றன; தேரைக் கடாவிவரின் செத்து விழுகின்ற னர்; வாசிகளை வாவி வந்தால் நாசமடைந்து சாகின்றனர்; அட லோடு யானைகளைச் செலுத்தி ஊண்டால் அவற்றின் உடல் களோடு மாண்டு உருளுகின்றனர். கால் இழந்தும், தோள் ஒழிந்தும், கை ஒடிந்தும், தலை அழிந்தும், குடல் சரிந்தும், உடல் சிதைந்தும், மூளைகள் பிதுங்கியும், நிணங்கள் நெளிந்தும் உதிர வெள்ளங்களில் பிணக்குவியல்கள் யாண்டும் பெருகி எழுந்தன.

கோதண்ட வீரன் தொடுத்த கணைகள் கடுத்துப் பாய்ந்து அரக்கர் திரள்களை அழித்துச் சென்ற காட்சிகள் அதிசய வியப் புகளை விளைத்துத் தேவர் முதல் யாவரையும் திகைக்கச் செய்தன. கொடிய வீரர்கள் என நெடிய பேர்பெற்ற இராக்கதர் தலைகள் வான வீதிகளில் துள்ளி எழுந்து மண்ணில் விழுந்து துடித்தன.

அற்று மேல்எழுந்த வன் சிரங்கள் தம்மை அண்மிமேல்
உற்றும் என்ன அங்குமிங்கும் விண்ணுளோர் ஒதுங்குவார்;
அற்றும்வீழ் தலைக்குலங்கள் சொல்லு கல்லின் மாரிபோல்
எற்றும் என்று பாரின் எங்கும் வாழுவார் இரங்குவார்.

அறுபட்டு மேலே வருகிற அரக்கர் தலைகளைக் கண்டு விண்ணும் மண்ணும் மருண்டு வெருண்டுள்ளமையை நம் கண்ணும் கருத்தும் காண இது நன்கு காட்டியுள்ளது. நேர்ந்துள்ள கொலை நிலைகளை ஓர்ந்து உணர்ந்து கொள்ளத் தலைகள் இங்ஙனம் சார்ந்து வந்தன. வீறோடு மூண்டு சீறிப் போராடினவர் பாரோடு மாண்டு படிந்து மடிந்தனர். முன்னதாக வந்து வளைந்து பொருத நிருதர் திரள்களை இராமன் பாழாக்கி ஒழித்தான். ஒழிக்கவே பல தீவுகளிலுமிருந்து வந்திருந்த பெரிய படைத் தலைவர்கள் எல்லாரும் நெடிது கொதித்தார். தேர்களை ஊர்ந்து சேனைகளைச் செலுத்தி யாண்டும் வளைந்து வன்சமர் புரிந்தார். யானைச்சேனைகளும் குதிரைப் படைகளும் கூடத் தொடர்ந்து கொடும் போர் புரிந்தன. வில்லாடல்களில் வல்லாளராய் நின்ற சிறந்த வில் வீரர்கள் யாவரும் ஒருங்கே திரண்டு மருங்கு சூழ்ந்து மனிதனை விரைந்து கொன்று வீழ்த்த வேண்டும் என்று வீரவாதம் கூறி ஆரவாரமாய் அடலமர் ஆற்றினர். வில் வேல் வாள் சூலம் தண்டு வல்லயம் முதலிய பல்வகை ஆயுதங்களையும் கொண்டு அடுதிறலோடு படு சமராடினர். தன் மேல் எய்த படைகளை எல்லாம் கொய்து வீழ்த்தி எதிரிகளை இவ்வீரன் நாசம் செய்தான். அழிவு செய்த வகை அதிசயமாயது. அயலே வருவன காண்க.

அரக்கர் செய்தது.

தெய்வநெடும் படைக்கலங்கள் விடுவர்சிலர்;
சுடுகணைகள் சிலையில் கோலி
எய்வர்சிலர்; எறிவர்சிலர்; எற்றுவர்சுற்
றுவர் மலைகள் பலவும் ஏந்திப்
பெய்வர்சிலர்; பிடித்தும்எனக் கடுத்துறுவர்;
படைக்கலங்கள் பெறாது வாயால்
வைவர்சிலர்; தெழிப்பர்சிலர்; வருவர்சிலர்;
திரிவர்சிலர்; வயவர் மன்னோ! (1)

ஆர்த்து ஆற்றியது.

ஆர்ப்பர்பலர் அடர்ப்பர்பலர் அடுத்தடுத்தே
படைக்கலங்கள் அள்ளி அள்ளித்
தூர்ப்பர்பலர் மூவிலைவேல் துரப்பர்பலர்
கரப்பர்பலர் சுடுதீத் தோன்றப்

பார்ப்பர்பலர் நெடுவரையைப் பறிப்பர்பலர்
பகலோனைப் பற்றிச் சுற்றும்
கார்ப்பருவ மேகம்என வேகநெடும்
படைஅரக்கர் கணிப்பி லாதார். (2)

இராமன் எய்தது.

எறிந்தனவும் எய்தனவும் எடுத்தனவும்
பிடித்தனவும் படைகள் எல்லாம்
முறிந்தனவெங் கணைகள்பட முற்றினசுற்
றினதேரும் மூரி மாவும்
நெறிந்தனகுஞ் சிகளோடும் நெடுந்தலைகள்
உருண்டனபே ரிருளின் நீங்கிப்
பிறிந்தனவெய் யவன்என்னப் பெயர்ந்தனன்மீ
துயர்ந்ததடம் பெரிய தோளான். (3)

சரம் அறுத்தது.

சொல்அறுக்கும் வலியரக்கர் தொடுகவசம்
துகள்படுக்கும் துணிக்கும் யாக்கை
வில்அறுக்கும் தலையறுக்கும் மிடலறுக்கும்
அடலறுக்கும் மேன்மேல் வீசும்
கல்அறுக்கும் மரம்அறுக்கும கையறுக்கும்
செய்யமள்ளர் கமலத் தோடு
நெல்அறுக்கும் திருநாடன் நெடுஞ்சரம்என்
றலெவர்க்கும் நிற்க லாமோ? (4)

யானைகள் அழிந்தது.

காலிழந்தும் வாலிழந்தும் கையிழந்தும்
கழுத்திழந்தும் பருமக் கட்டின்
மேலிழந்தும் மருப்பிழந்தும் விழுந்தனஎன்
குவஅல்லால் வேலை அன்ன
மாலிழந்தும் மழையனைய மதமிழந்தும்
வலியிழந்தும் மலைபோல் வந்த
தோலிழந்த தொழில்ஒன்றும் சொன்னார்கள்
இல்லைநெடுஞ் சுரர்கள் எல்லாம். (5)

(மூலபலவதை, 99-103)

மூண்டு நீண்டு நடந்த போராட்டங்களையும் அரக்கர் மாண்டு மடிந்துள்ள நிலைகளையும் இவை காட்டியுள்ளன. அரிய வர பலங்களுடைய பெரிய நிருதர்கள் இங்கே போராடியிருக்கின்றனர். எவ்வழியும் அடர்ந்து தொடர்ந்து பல வகையான கொலைக் கருவிகளைக் கொதித்து வீசி யிருக்கின்றனர். எய்தும் எறிந்தும் எற்றியும் சுற்றியும் அவர் அள்ளிச் சொரிந்த படைக் கலங்களையெல்லாம் இந்த வீர வள்ளல் அழித்து ஒழித்து யாவரையும் கொன்று தொலைத்து வென்றி வீரோடு வீர விளையாடல் செய்து வருவதை நாம் வியந்து நோக்கி வெற்றித் திறலை உவந்து நிற்கிறோம். இக்குல மகனுடைய வில்லில் நின்று விளைந்து வெளி வருகிற அம்புகள் சென்ற இடமெல்லாம் அரக்கர் தலைகள் துள்ளி விழுவதும், யானைகள் அழிந்து சாய்வதும், குதிரைகள் மடிந்து மாய்வதும், தேர்கள் உடைந்து உருள்வதும் தொடர்ந்த கொலைகளாய் நிகழ்ந்து வந்தன. உள்ளம் கடுத்து உருத்து மூண்டு கொதித்து அமராடிய அரக்கர் தலைவர்கள் காட்டுத்தீயுள் அகப் பட்ட கொடிய விலங்குகள் போல் நிலைகுலைந்து மாண்டனர். ஒரு பகழி பல தலைகளை அறுத்து வீழ்த்தி ஆகாயத்தில் ஓடுதலால் மலைகள்போல் தலைகள் எங்கணும் குவிந்து விரிந்து கிடந்தன.

> வில் அறுக்கும்; தலை அறுக்கும்;
> மிடல் அறுக்கும்; அடல் அறுக்கும்.

என்றதனால் இராமசரங்கள் அறுத்து அழித்திருக்கும் அழிவு நிலைகளைத் தெளிவா அறிந்து கொள்ளுகிறோம். யாண்டும் தோல்வி காணுமல் எவ்வழியும் வெற்றியே கண்டு வந்த வீர இராக்கதர்கள் திரள் திரளாய் ஈண்டு மாண்டு மடிந்துள்ளனர். எய்ய எடுத்த வில் கையோடு கழிந்து விழுகிறது; வீச எடுத்த வேல் தோளோடு தொலைந்து போகிறது; அடுத்து வந்த தாள் கடுத்து அழிகின்றது; சீறிப் பார்த்த கண் சிதறி விழுகிறது; மீறிப் பேசிய வாய் நாக்கோடு நாசமாகிறது; கொலை கருதிய நெஞ்சம் நிலை குலைந்து குலை துடித்து அழிகிறது; மேலேறி வந்த நால்வகைச் சேனைகளும் நாசமடைந்து வீழ இவ்வீரனது வில் அம்புகளை வீசி நின்றது. வீரப் பகழிகள் விளைத்து வந்த வெற்றித் திறங்கள் யாவருக்கும் வியப்புகளையே விரித்து நின்றன.

> செய்ய மள்ளர் கமலத்தோடு

நெல் அறுக்கும் திருநாடன்.

இராமனை இங்கே கவி இவ்வாறு குறித்திருக்கிறார்.

சொல் அறுக்கும், வில் அறுக்கும், கல் அறுக்கும், மரம் அறுக்கும் என்று சொல்லி வந்த கவி அங்ஙனம் அறுத்தவன் யார்? என்பதைச் சிறப்பாக விளக்க இங்ஙனம் குறிப்போடு குறித்தருளினர். அறுப்பு நிலைகள் விருப்பாய் அறிய வந்தன.

வயல்களில் மள்ளர்கள் தாமரைகளோடு நெல்லை அறுக்கும் நாடன் ஆதலால் இராமனது சரம் இவ்வாறு அரக்கரை இங்கே அறுத்துக் குவித்தது. கோசலா தேசம் நீர் வளமும் நில வளமும் நன்கு நிறைந்தது. வயல்களில் எப்பொழுதும் நீர் நிறைந்திருத்தலால் அங்கே தாமரை அல்லி குவளை முதலிய நீர்ப் பூக்கள் பூத்திருக்கும்; விளைந்து முதிர்ந்த நெல்லை அறுக்கும் போது உழவர்கள் கமலங்களையும் சேர்த்து அறுத்து விடுவர். அத்தகைய செல்வம் நிறைந்த திருநாட்டை ஆளும் உரிமையுடையவன் ஈண்டு அப்பழக்கத்தால் எதிரிகளை எளிதே அறுக்க நேர்ந்தான். அரக்கரைக்கருவறுக்க வந்தவன் கடிது அறுக்கிறன்.

பகைமைக் காய்ச்சலோடு மூண்டு வந்த அரக்கரை மாத்திரம் குறிப்போடு அறுத்து ஒழிக்காமல் அயலே செறுத்து நின்ற யானைகளையும் குதிரைகளையும் தேர்களையும் சேர்த்து அறுத்து ஒழித்தான் ஆதலால் கமலத்தோடு நெல் அறுக்கும் மள்ளரை நேரே சுட்டிக் காட்டினர். தன் நாட்டு மள்ளர் வயலில் செய்வதை நாடாளும் மன்னனும் அயலே களத்தில் செய்தருளினன்.

வயல், போர்க்களம்; நெல், இராக்கதர்; கமலம், கசரததுரகங்கள்; அரிவாள், சரம்; மள்ளர், இராமன்: இந்த உவமான நிலைகளை உய்த்து உணர்ந்து கொள்ள வேண்டும். செய்யும் தொழில், செயப்படு பொருள், செய்பவன் நிலை சிந்தனைக்கு வந்தன. கருமக் காட்சிகள் அரிய பல தருமங்களைக் காட்டுகின்றன.

ஏர் உழவர் நெல் அறுப்பது போல், வீர உழவன் ஆன இராமன் அரக்கரை அறுத்துக் குவித்திருக்கிறன். அறுவை இயல்பாகவும் எளிமையாகவும் உரிமையாகவும் நடந்துள்ளது. உயிர்களின் உணவுக்காக நெல் அறுப்பு நிகழ்வது போல் உலக நன்மைக்காக அரக்கர் அறுப்பு ஈண்டு நிகழ்ந்திருக்கின்றது.

போர் முகத்தில் இராமன் புரிகிற அதிசய வீரத்திறல்களைக் கூறி வரும்பொழுது அவனுடைய நாட்டு வளத்தைக் கவி சுவையாக் காட்டியிருக்கிருர். வயல் வளமும் நீர் நிலையும் நெல் விளைவும் நேரே தெரியலாயின. இயற்கை நிகழ்ச்சிகளை விளக்கி வருவது இனிய வித்தகக் காட்சிகளாய் விளங்கி வருகின்றன.

நம் கவிஞர்பிரான் பிறந்த நாடு சிறந்த நீர் வளமுடையது; சாலி விளைவுகள் சாலவும் பெருகியது; மாலையில் அயலே உலாவி வரும்போது வயல்களில் மள்ளர்கள் நெல்லுகள் அறுப்பதை நின்று பார்த்தார்; இனிய நீர்ப் பூக்களோடு பயிர்கள் அறுபடுவதை நோக்கிச் சென்ருர். வயலில் அன்று கண்ட காட்சி இங்கே போர் இயலில் சொல்ல நேர்ந்தது. நேரே அறிந்து வந்த அனுபவங்கள் நெறியே மொழிகளில் வெளிவருகின்றன.

வலியுடைக் கைகளால் மலர்ந்த தாமரை
மெலிவெய்தக் குவளைகள் வாடக் கம்பலம்
பொலிவெய்தப் பூம் பொய்கை சிலம்பிப் பார்ப்பெழ
மலைபட அரிந்து கூன் குயம்கை மாற்றினுர்

(சீவகசிந்தாமணி, 56)

தாமரை குவளைகளோடு மள்ளர் நெல் அரிந்த நிலையை இதுவும் குறித்துள்ளது. குயம்=அரிவாள். நாட்டு வளங்களோடு கவிகள் சுவையாக நலம் பல காட்டுகின்றனர்.

துஞ்ச வந்தநாள் தோழரைவிட்டு அயல் துறக்கும்
வஞ்ச நெஞ்சர்போல் அலாதுவண்டு அணிகுழல் மாதே
அஞ்சலாது நின்று அவருடன் இறந்த நல்லவர்போல்
கஞ்சம் நெல்லுடன் அறுப்புண்டு கிடப்பன காணுய்!

(அரிச்சந்திர சரிதம்)

நெல்லோடு தாமரை அறுப்புண்டு கிடப்பதை இதன் கண்ணும் காண்கின்ருேம். கஞ்சம்=தாமரை. பழகிய பயிரைப் பிரியாமல் கமலம் மருவிக் கிடப்பது உண்மைத் தோழமைக்கு உவமையாய் வந்தது. உரிமைகள் ஓர்ந்து உணர வுரியன.

கூறுகள் பகுத்துச் சாலி கொய்யுநாள் செய்யில் சேல்கள்
ஊறுநீர்க் கேணி தாவும்; உடனரிந் துணங்கும் காவி;
பேறுகண்டு உவப்பர் வாழ்வு பிரியுநாள் பிரிவர் கீழோர்;
வீறுநாள் கூடி வாழ்ந்து மெலியுநாள் மெலிவர் மேலோர்.

(திருக்குற்ருலத்தல புராணம்)

செங்நெல்லோடு கருங்குவளைகள் அறுப்புண்டு கிடந்தன; வாழ்விலும் தாழ்விலும் பிரியாமல் உடன் மருவி இருக்கும் மேலோர் நிலையை அக்காவிகள் காட்டியன என இது காட்டியுள்ளது.

ஒருவருக்கு ஒரு செல்லல் உற்றால் அஃது
அருகு ளார்க்கும் அடுப்பது திண்ணமே;
கருவி மள்ளர் கதிர்க்குலை தன்னொடும்
பருமென் பூக்களும் பற்றி அரிகுவார். (காஞ்சிப் புராணம்)

நெல் கதிரோடு பூக்களையும் மள்ளர் அரிகுவார்; ஒருவர் அல்லல் அடைய நேர்ந்தால் அவரை அடுத்து நின்றவரும் அதனை அடைவர் என்பதை அவை காட்டி நின்றன. இதுவும் இங்கே காணவுரியது. புலநிகழ்ச்சிகள் புலமையால்பொலிந்துவிளங்கின.

செய்ய மள்ளர் கமலத்தோடு நெல் அறுக்கும் திருநாடன் என நம் கவிஞர் பெருமான் கூறியருளியது காவியங்களில் இவ்வாறு பரவியுள்ளது. கொடிய கொலைகள் குவிகின்ற நெடிய போரைக் குறித்து ஆவேசமாய்ப் பேசி வருங்கால் நெல்லறுப்பு நிலையை உல்லாச விநோதமாக் கவி இங்ஙனம் சொல்லியிருக்கிறார்.

தென்கோடியிலுள்ள இலங்கையில் போராடுகின்றவன் வடகோடியிலுள்ள கோசலை நாட்டு வேந்தன் என்பதை நினைந்து கொள்ள வந்தது. பெரிய திருவையுடைய நாடன் ஆதலால் உலக முழுவதும் திருவடைய உழைத்து வருகிறான். மூண்ட கலகத்தில் ஆண்டகை அமராடி வருவது அமரர் முதல் யாவரும் நீண்ட மகிழ்வோடு நிலைத்து வாழவேயாம். இன்னவாறு அரிய பல பொருள்களை நுணுகி யுணருமாறு கவிநாயகன் அதிசய விநோதமாய் விதிமுறைகளை நெறியே உரையாடிப் போகின்றார்.

"Poets utter great and wise things which they do not themselves understand." (Plato)

"தாம் அறியாத பெரிய ஞான நிலைகளை கவிஞர் எளிதாச் சொல்லி விடுகின்றனர்" என பிளாட்டோ என்னும் கிரீஸ் தேசத்துப் பெரியார் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

"The true poet is very near the oracle." (Chapin)

"உண்மைக் கவிஞன் தெய்வீக வாக்காயிருக்கிறான்" என்னும் இது இங்கே அறியவுரியது பயங்கரமான போரிலும்

கலை நயங்களை நன்குவிளக்கி உலகம் நலமுற உறுதி நலங்களை உணர்த்தி அரிய பல தருமங்களை இனிது விளக்கியருள்கிருர்.

கால் இழந்தும் வால் இழந்தும் கை இழந்தும் என்றது யானைச் சேனைகள் அழிந்து பட்டபாடுகளைத் தெளிந்து கொள்ள வந்தது. தோல்=யானை. கரிய பெரிய மதயானைகள் இராம பாணங்களால் பரிதாபமாய் அழிந்து விழுந்தன. இரண்டா முறை மூண்டுவந்து வளைந்து போராடிய படைகள் மாண்டு விழுவே மீண்டும் வில் வீரர்கள் எல்லாரும் தேர்களை விரைந்து செலுத்தி வீருேடு சீறிப் போரில் ஏறிஞர். யாரும் நேரில்லாத தீரர் என யாண்டும் பேர்பெற்று வந்த வில்லாளிகள் ஈண்டு நீண்டு நிறைந்து நெடும் போர் புரிந்தார். அரிய பெரிய குறிகாரர்கள் ஒருங்கே சூழ்ந்து கொண்டு அம்புகளைப் பொழிந்தனர். கொலை நோக்கோடு அடலாற்றல் புரிகிற நெடிய கொடிய நிருத வீரர்கள் இடையே தனியே நின்று இவ்வீர வள்ளல் செய்த வித்தக வில்லாடல்கள் எதிர்ந்தவர் எவரையும் செத்தவர்களாக்கி எத்திசைகளிலும் வெற்றிகளை விளைத்துச் செழித்தன.

ஒருவில்லியை ஒருகாலையின் உலகேழையும் உடற்றும்
பெருவில்லிகள் முடிவில்லவர் சரமாமழை பெய்வார்;
பொருவில்லவர் கணைமாரிகள் பொடியாம்வகை பொழியத்
திருவில்லிகள் தலைபோய்நெடு மலைபோல் உடல் சிதைவார். (1)

நூருயிர மதயானையின் வலியோர்என நுவல்வோர்
மாருயினர் ஒருகோல்பட மலைபோல்உடன் மறிவார்;
ஆருயிரம் உளதாகுதல் அழிசெம்புனல் அவைபுக்கு
ஏருதெறி கடல்பாய்வன சினமால்கரி இனமால். (2)

மழுவற்றுகும் மலையற்றுகும் வளையற்றுகும் வயிரத்து
எழுவற்றுகும் இலையற்றுகும் அயிலற்றுகும் எழுவேல்
பழுவற்றுகும் மதவெங்கரி பரியற்றுகும் இரதக்
குழுவற்றுகும் ஒருவெங்கணை தொடைபெற்றதோர் குறியால்! (3)

பட்டாருடல் படுசெம்புனல் திருமேனியில் படலால்
கட்டார்சிலைக் கருஞாயிறு புரைவான் கடையுகநாள்
சுட்டாசறுத் துலகுண்ணுமச் சுடரோன்எனப் பொலிந்தான்
ஒட்டாருடல் குருதிக்குளித் தெழுந்தானையும் ஒத்தான். (4)

தீயொத்தன உருமொத்தன சரம்சிந்திடச் சிரம்போய்
மாயத்தவர் படுகின்றனர் எனவும்மறம் குறையார்

காயத்திடை உயிருண்டிட உடன்மொய்த்தன களியால்
ஈயொத்தது நிருதக்குலம் நறவொத்தனன் இறைவன். (5)

பிரிந்தார்பலர் இரிந்தார்பலர் பிழைத்தார்பலர் உழைத்தார்
புரிந்தார்பலர் நெரிந்தார்பலர் புரண்டார்பலர் உருண்டார்
எரிந்தார்பலர் கரிந்தார்பலர் எழுந்தார்பலர் விழுந்தார்
சொரிந்தார்குடல் துமிந்தார்தலை தொலைந்தார்எதிர் தொடர்ந்தார். (6)

முன்னேயுளன் பின்னேயுளன் முகத்தேயுளன் அகத்தின்
தன்னேயுளன் மருங்கேயுளன் தலைமேலுளன் மலைமேல்
கொன்னேயுளன் நிலத்தேயுளன் விசும்பேயுளன் கொடியோர்
என்னேஒரு கடுப்பென்றிட இருஞ்சாரிகை திரிந்தான். (7)

என்னேரினன் என்னேரினன் என்றியாவரும் எண்ணப்
பொன்னேர்வரு வரிவிற்கரத்து ஒருகோளரி பொருவான்
ஒன்னார்பெரும் படைப் போர்க்கடல் உடைக்கின்றனன் எனினும்
அன்னேரவர் உடனேதிரி நிழலேஎன லானான். (8)

பள்ளம்படு கடல்ஏழினும் படிஏழினும் பகையின்
வெள்ளம்பல உளவென்னினும் வினையம்பல தெரியாக்
கள்ளம்படர் பெருமாயையின் கரந்தார்உருப் பிறந்தார்
உள்ளன்றியும் புறத்தேயுமுற் றுளனாமென வுற்றான். (9)

மாறுவிதப் பெருஞ்சாரிகை திரிகின்றது நவிலார்
போறுனிடை புகுந்தானெனப் புலன்கொள்கிலர் மறந்தார்
தாறுவதும் உணர்ந்தான் உணர்ந்துல கெங்கணும் தானே
ஆறுன்வினை துறந்தானென இமையோர்களும் அயிர்த்தார். (10)

சண்டக்கடு நெடுங்காற்றிடை துணிந்தேற்றிடத் தரைமேல்
கண்டப்படு மலைபோல்நெடு மரம்போல் கடுந்தொழிலோர்
துண்டப்படு கடுஞ்சாரிகை திரிந்தான்சரம் சொரிந்தான்
அண்டத்தினை அளந்தான் எனக் கிளர்ந்தானிமிர்ந் தகன்றான். (11)

களியானையும் நெடுந்தேர்களும் கடும்பாய்பரிக் கணனும்
தெளியாளியும் முரட்சீயமும் சினவீரர்தம் திறமும்
வெளிவானகம் இலதாம்வகை விழுந்தோங்கிய பிழம்பால்
மணிமாமலை மலைதாவினன் நடந்தான்கடல் கிடந்தான். (12)

இந்தக் கவிகளைக் கண் ஊன்றிக் கவனித்துப் பார்ப்பவர் அங்கே நடந்துள்ள போராடல்களையும் அடலாண்மைகளையும் அழிவு நிலைகளையும் நேரே தெளிவாக அறிந்து கொள்வர்.

நெடிய திறலோடு சூழ்ந்து கொடிய படைக்கலங்களைக் கொதித்து வீசி யாண்டும் கடுத்து அமராடிய அரக்கர் குழாங்

கள் சின்னபின்னமாய்ச் சிதைந்து இன்னலுழந்து அழிந்துள்ளன. குறிதவருமல் எதையும் கொய்து வீழ்த்த வல்ல கொடிய வில்லாளிகள் எல்லாரும் இவ்வீர வில்லியின் எதிரே ஒளி முன் இருள் போல் ஒழிந்து போயிருப்பது உணர்வு கடந்த வியப்பாய் ஓங்கி நின்றது. நூருயிரம் மதயானைகளின் வலியினையுடையவன் என்று தேக பலத்திலும் போர் வலத்திலும் பேர் பெற்று நின்ற ஒவ்வொரு சேனைத் தலைவனும் உலகத்தை வெல்ல வல்லவன்; அத்தகைய தலைவர்கள் பல்லாயிரம் பேர் திரண்டு வந்து அடுதிறலோடு படுபோர் புரிந்தனர். புரிந்த யாவரும் அரை நாழிகையுள் அடியோடு அழிந்து வீழ்ந்தனர். கைகளில் கடுத்து எடுத்த வில் வேல் வாள்களோடு அடுத்து வந்து பொருகின்ருர்; உடனே அவை யாவும் துணிபட்டு ஆகாய வீதியில் சுற்றித் திரிகின்றன. சூறைக் காற்றில் செத்தைகள் பறப்பதுபோல் இராம சரங்களால் இராக்கதர்கள் இறந்திருக்கின்றனர். மரண துன்பம் தெரியாமலே எல்லாரும் ஒல்லையில் மாண்டு மடிந்தனர். இராமனுடைய வில்லில் இருந்து வெளிவருகிற ஒரு பாணம் பல்லாயிரம் அரக்கரைப் பாழாக்கிப் போதலால் யாரும் யாதும் செய்ய முடியாமல் செத்து முடிந்தனர். போர்களிலேயே பழகி வளர்ந்த வீரர்கள் ஆதலால் அழிவு நிலைகளை விழி எதிரே கண்டும் யாதும் தளராமல் மேலும் மேலும் மூண்டு வந்து இவ்வீரனை வளைந்து கொண்டு கோரமான போரை நிருதர் விரைந்து செய்தனர். யாண்டும் சுற்றி மொய்த்து எற்றி ஏறினர்.

ஈ ஒத்தன நிருதக் குலம்;
நறவு ஒத்தனன் இறைவன்.

யுத்தகளத்தில் இராமனைச் சுற்றி வளைந்து அரக்கர் பொருதிருக்கும் நிலையை இது உணர்த்தியுள்ளது. தேனை மொய்த்திருக்கும் ஈக்களைப் போல் இம்மான வீரனை அவர் மொய்த்து நின்றனர். இருதிற நிலைகளும் தெரிய நேர்ந்தன. நறவு = தேன்.

ஈ என்றது நிருதாது இழியும் ஈனமும் தெரிய வந்தது. எவ்வளவு கூட்டம் மொய்த்தாலும் விரைவில் செத்து ஒழியும் என்பதை உவமை உய்த்துணரச் செய்தது. கருடன் எதிரே ஈக்கள் கூட்டம் போல் இராமன் எதிரே இராக்கதர் கூட்டம் நீட்டமாய் நின்றது. அந்தக் குலத்தின் அழிவும் இந்தக்

குலமகன் நிலையும் உணர நேர்ந்தன. நறவு என்றதனல் இனிய நீர்மைகள் எதிரே தெரிய வந்தன. அமிர்தகுண நிலையம் என அமரிலும் மதுரமயமான அதிசய இனிமை அறிய நேர்ந்தது.

பரமனே இங்கு இராமனய் வந்துள்ளமையால் இறைவன் என்ருர். சக்கரவர்த்தித் திருமகன் என அரச மரபையும் வரிசை யாய் அது உணர்த்தி நின்றது. தீமைகளை நீக்கி நன்மைகளைக் காப்பது இராச தருமம்; அந்த முறைமையை மூண்டு செய்கின் ருன். ஆகவே அக்கருமமும் தருமமும் கருதியுணர இறைமை ஈண்டு உரிமையாய் வந்தது. வீரமும் வெளியே தெரிய நின்றது.

தேன் கூட்டை மொய்த்திருக்கும் ஈக்கூட்டம் போல் இம் மானவீரனைச் சுற்றி நின்று சுடுகணைகளையும் அடுபடைகளையும் கடுமையாகவும் கொடுமையாகவும் வீசி வந்த அரக்கர் கூட் டத்தை அதிவிரைவில் இந்த இறைமகன் அழித்து ஒழித்தான். அம்புகள் ஊடுருவி ஓட ஓட உயிர்களும் கூடவே ஓடின ஆதலால் உடல்கள் மலைகள்போல் குவிந்து நின்றன. வீருேடு சீறி வந்த இராக்கத சேனைகள் நேரே யாதும் ஆற்ற முடியாமல் மாருய் மண்ணில் வீழ்ந்து மறுகி யிழந்து மடிந்து மாய்ந்தன.

மூண்ட படைகள் யாண்டும் நீண்டு போராடவே இந்த ஆண்டகை எங்கும் சாரி திரிந்து சரங்களைத் தொடுத்தான். கர வேகமும் சர வேகமும் கால் வேகமும் மேல் வேகமும் யாரும் நிலைகாணுத நிலையில் எவ்வழியும் நெடிது நிகழ்ந்தன.

முன்னே உளன்; பின்னே உளன்;
முகத்தே உளன்; அகத்தே உளன்.

போராடி வருகிற இராமனை நிருதர் இவ்வாறு பேராடியுள் ளனர். பூட்டிய வில்லோடு கோதண்ட வீரன் எதிரிகளை மாட்டி மடித்து விரைந்து வந்துள்ள கதி நிலையை இது காட்டி நின்றது. அரக்கர் விழித்து நோக்கிய இடமெல்லாம் இந்த அழகனைக் களித்து நோக்கித் தெழித்து வந்துள்ளமையை அவருடைய வாய் மொழிகள் இங்கே நன்கு வெளிப்படுத்தி யுள்ளன.

கொடிய போர்முனைகளில் நெடிது போராடிக் கொலைத் திறங்களையே குலத் தொழில்களாக் கொண்டுள்ள பொல்லாத பழிக்கூட்டம் கோப வெறி நீண்டு மூண்டு வளையும் தோறும்

மாண்டு மடிகின்றன; செத்து மடியினும் சேனைத் திரள்கள் மேலும் மேலும் மொய்த்து வருகின்றன; கொடியராய் நெடிது நெருங்கி வருகிற அனைவரும் இக்கோமகன் எதிரே வருமுன் இறந்து படுகின்றனர். எதிரிகள் பெருகி ஏறி வரும்போதெல் லாம் இவ்வீரனுடைய வில்லிலிருந்து பாணங்கள் சீறி விரை கின்றன. பகழிகள் விரைந்து பாயவே படுநாசங்கள் யாண்டும் நெடிது ஓங்கின. மூண்ட படைகள் முனைந்து புகுந்து கொடிய துயரங்களைச் செய்யச் செய்ய இந்த ஐயன் வில் அதிசய வேலை களைச் செய்தது. தெவ்வர் அரணாய்த் திரண்டு செறிந்த அளவு இறந்து விழுவது இந்திரசாலமாய் விளங்கி நின்றது. பக்கம் எங் கும் பகைவர் சுற்றி அடர்ந்து தொடருந்தோறும் இவ் வீரன் உள்ளத்தில் உக்கிர வேகம் ஓங்கி எழுந்தமையால் காட்டுத் தீயில் பாய்ந்த செத்தைகளைப் போல் அவர் செத்து ஒழிந்தனர்.

A true knight is fuller bravery in the midst, than in the beginning of danger. [Sidney]

"அதிகமான அபாயத்தினிடையேதான் உண்மையான வீரத் தலைவன் நிறைந்த தைரியத்தை யடைந்து நிற்கிறான்" என்னும் இது இங்கே நினைந்து சிந்தித்து நேரே அறிய வுரியது.

வெள்ளம் போல் படைகள் பொங்கி வர வர இவ்வீர வள்ளல் வென்றி வீறோடு கொன்று குவித்தான். காற்றையே கடாவினனோ, காலனை ஊர்கின்றானோ, என்று இலங்கை வேந் தனும் கலங்கி அஞ்ச முன்னம் அனுமான் வாகனமாய் அமைந் திருந்தது போல் இப்பொழுது யாதொரு ஊர்தியும் இல்லையாயி னும்யாண்டும் அதிவேகமாய்க் கதிவேகம் காட்டிச் சாரிதிரிந்து வந்தான்; வில்லோடு பசிய ஒரு உருவம் எங்கும் பரவித் தோன் றியது. முன் பின் மேல் கீழ் பக்கம் என எவ்வழியும் ஏக காலத் தில் ஒக்க உலாவி வந்தது உலக அதிசயமாய் நின்றது. அங்கும் இராமன், இங்கும் இராமன், எங்கும் இராமன் என்று இராக் கதர் பேரொலி செய்து பெருந்திகிலடைய இவ்வீர வில்லி வினை யாடி யாதும் இளையாமல் யாண்டும் போராடினான். பொரு கின்ற திறலும், வருகின்ற வரவும், செல்கின்ற செலவும், கொல் கின்ற கொலையும், வெல்கின்ற வினையும் வித்தகக் காட்சியாய் விளங்கி நின்றன. வெற்றி ஒளி வீறோடு வீசி எழுந்தது.

ஒரு தனி மனிதன் கண்ட இடமெல்லாம் அங்கே காணநேர்ந்தது சேனைகளுக்கெல்லாம் திகிலாய் நிண்டது. ஓர் இடத்தில் நில்லாமல் விரிந்த போர்க்களம் எங்கும் கதிவேகமாய்க் கலந்து திரிந்து அம்புகளைச் சொரிந்து வந்துள்ளான். போர் முறையில் சாரிகை திரிந்த அந்த வீர வேகம் யாரும் வியந்து புகழ வந்தது.

உலகு எங்கணும் தானே ஆனான் என
இமையோர்களும் அயிர்த்தார்.

இராமனது வேக நிலையை வியந்து தேவரும் இவ்வாறு புகழ்ந்திருக்கின்றனர். அருவமாய்க் கடவுள் எங்கும் மருவியிருப்பதுபோல் உருவ நிலையில் இவ் ஒருவன் அவ்வாறு ஆனான் என ஆனதை வியப்போடு அமரர் தமரோடு நோக்கி உரையாடி நின்றார். போர் வீர நிலை புகலரிய கலையாய் நிலவியது.

அவதார நிலையில் மனிதனாய் வந்துள்ளவன் ஆதிமூல நிலையில் ஓதி உணர நேர்ந்தான். காரியம் கருதி உருமாறி வந்தாலும் சமையம் நேரும்போது பரமநீர்மையே மருவி மிளிர்கின்றது. அரக்கரோடு போராடுகின்றவன் அற்புத நிலையினன் ஆதலால் அதிசய ஆடல்கள் ஆடி வருகிறான் எனக் கவி துதி செய்து தொழுது உழுவலன்போடு பாடியிருப்பது நாடி அறிய வுரியது.

அண்டத்தினை அளந்தான் எனக் கிளர்ந்தான்.

சண்ட மாருதம் போல் யாண்டும் மூண்டு அடல் புரிந்து வருபவன் உலகளந்த பெருமாளே என்பதை இது உணர்த்தி நின்றது. மாவலியிடம் வாமனனாய் வந்து பின்பு அண்டமுகடும் கண்டமாம்படி வளர்ந்து நின்ற அந்த நெடியவன் போலவே இந்தப் பெரியவன் கொடிய நிருதர் எதிரே தோன்றி முடிய நூறினான். அளிப்பவன் அரக்கரை அழித்தான்.

யாண்டும் அதிவேகமாய் உலாவி நின்று மூண்டு முனைந்தவர் யாவரும் மாண்டு மடிய அம்புகளைப் பொழிந்தான் ஆதலால் ஊழிக்காற்றும் நெருப்பு மழையுமாய் அவை உயிர்களை அழித்தன. யுகத்தின் அழிவுகள் களத்தில் நிகழ்ந்தன.

கடுஞ்சாரிகை திரிந்தான்; சரம் சொரிந்தான் என்றதனால் கதிவேகமும் கணைகளை வாரி வீசியுள்ள அதிசய ஆடலும் அறிய வந்தன. சாரிகை திரிதலாவது போரியலில் உலாவிப் பொரும்

வீரிய வகை. ஒரு நிலையில் நில்லாமல் யாண்டும் கால் பெயர்ந்து விரைந்து கடும்போர் புரிந்துள்ள வீர வேகம் காண வந்தது.

சாரிகை திரியும் யானை யுழக்கலின் தரணி தன்மேல்
ஆர்கலிக் குருதி வெள்ளம் அருந்துகள் கழுமி எங்கும்
வீரியக் காற்றில் பொங்கி விசும்பு போர்த்து எழுதப்பட்ட
போர்நிலைக் களத்தை ஒப்பக் குருதிவான் போர்த்ததன்றே.

(சீவக சிந்தாமணி)

யானைகள் சாரிகை திரிந்து போர்க்களத்தில் புரிந்துள்ள நிலைகளை இது வரைந்து காட்டியுள்ளது. பாதசாரிய்ப் பரந்து சரித்தது சாரிகை என வந்தது. விரைந்த வேகத்திறல் வித்தகக் காட்சியாய் விளங்கி வெற்றி நிலையைத் துலக்கி நின்றது.

தெவ்வர் திரள்களோடு எவ்வழியும் சீறி ஏறி வீர வெறியோடு இவ்வீர மூர்த்தி போராடி வரவே நின்ற இடங்கள் தோறும் நிருதர்கள் பொன்றி மடிந்தனர். குருதி வெள்ளங்கள் பெருகி ஓடின. பிணங்களும் நிணங்களும் குன்றங்களாய் நெடிது ஓங்கி நின்றன. கடல்போல் கலித்து வந்த அரக்கர் திரள்கள் அழிந்துபடவே உடல்கள் மலைகளாய் ஓங்கி உயிர்களின் அழிவு நிலைகளைத் தெளிவா விளக்கின. அந்தக் குன்றுகள் தோறும் நடந்து தொடர்ந்து இவ்வென்றி வீரன் மேலும் மேலும் கொன்று குவிந்தான். கொலை வேலை நிலையாய் நிகழ்ந்தது.

மலை தாவினன் நடந்தான் கடல் கிடந்தான்.

பிணமலைகள் குவிந்துள்ள நிலைகளையும் அவற்றின் மேல் தாவி நடந்து இக் கோமகன் போராடியிருக்கும் திறல்களையும் இங்கே கூர்ந்து ஓர்ந்துகொள்கிறோம். நிருதர் குலங்களைப் பொருது அழித்து விருது வெற்றியோடு விரைந்து வருகிற வீரனுக்குக் கவி இங்கே பேரிட்டுக் குறித்திருக்கும் சிறப்பு வீர நீர்மையில் செழித்து வியப்பினை விளைத்திருக்கிறது.

செத்த அரக்கர்களின் உடல்களாகிய மலைகளின் மேல் தாவி நடந்தவன் யார்? இந்தக் கேள்விக்கு நேரே இராமன் என்று பதில் கூறாமல் வேறொரு பேரால் கூறியிருக்கிறார்.

பால் கடலில் பள்ளி கொண்டிருந்த அந்தப் பரமனே இராமனாய் வந்து இராக்கதரை அழிக்கின்றான் ஆதலால் அம் மூல முதலை நினைந்து கொள்ளக் கடல் கிடந்தான் என்றார். நெடிய கடலில் சுகமாய்ப் படுத்திருந்தவன் கொடிய மலைகளி

டையே வேகமாய்த் தாவி நடந்தான் என்றது பழைய தலைமையும் புதிய நிலைமையும் ஒருமுகமாய் நேரே அறிய வந்தது.

அரக்கர் புரிகின்ற அழிதுயரங்களைப் பொறுக்க முடியவில்லை என்று அமரர் வந்து தொழுது வேண்டும்பொழுது திருமால் எந்த நிலையில் இருந்தாரோ, அந்த நிலையைச் சிந்தனை செய்து கொள்ளும்படி இந்த வாசகம் இங்கே இசைந்து நின்றது. அவதாரம் தோன்றிய நிலை ஊன்றி யுணர வந்தது.

அலைகடல் நடுவண்ஓர் அனந்தன் மீமிசை
மலைஎனா விழிதுயில் வளரு மாமுகில்
கொலைதொழில் அரக்கர்தம் கொடுமை தீர்ப்பன் என்று
உலைவுறும் அமரருக்கு உரைத்த வாய்மையை.
(இராமா, திருஅவதாரம் 6)

கடல் நடுவண் இருந்து அமரருக்கு அபயம் அருளி வாக்களித்தபடியே அரக்கரை அரி அழித்து வருகிறான்; அவ்வரவின் உறவை ஊன்றியுணர அவன் நீர்க்கடல் கிடந்ததும், போர்க்கடல் நடந்ததும் இங்கே சீர்க்கடலாத் தோன்றி நின்றன. சரித நிகழ்ச்சிகள் அரிய வுணர்ச்சிகளை அருளி வருகின்றன. பல்லாயிரம் பாடல்களுக்கு முன்னம் உரைத்ததை நன்னயமாகப் பின்னரும் குறிப்பது கவியின் வித்தக விநயத்தை விளக்கி வருகிறது. எதையும் உய்த்துணரும்படி உரைகளை வைத்தருளுகிறார்.

அன்று தேவருக்கு நேரே சொன்ன வாக்கைச் சத்திய விரனை இராமன் ஈண்டு நிறைவேற்றி யருளுகிறான். அவன் வாய்மை குன்றாமல் வருவதில் தீமை பொன்றி ஒழிகின்றது.

கொடிய போராடலைக் குறித்து வரும்போதே அறத்தையும் நீதியையும் அவதார மருமத்தையும் கரும விளைவுகளையும் நயமாக் காட்டி அரிய பல உறுதி நலங்களை நம் கவிஞர் பெருமான் உணர்த்தி உயர்ந்த உவகைகளை ஊட்டி வருகின்றார். அரிய கலை ஞானமும் பெரிய பண்பாடுகளும் இவரிடம் பெருகி நின்று மெய்வழியும் திவ்விய ஒளிகளை வீசிச் செவ்வையாய் மிளிர்கின்றன. திருந்திய நீர்மைகள் தெளிந்த அறிவோடு திகழ்கின்றன.

"Character is perfectly educated will." (Noualis)

சிறந்த கல்வி தோய்ந்த உள்ளம் நிறைந்த பண்பு வாய்ந்

துள்ளது" என்னும் இது இங்கே அறியவுரியது. கதாநாயகனுடைய சீவிய காவியத்தில் கவிநாயகனுடைய ஞான போதனைகள் வானசோதிகளாய் வயங்கிச் சீவகோடிகளுக்கு தெய்வீக இன்பங்களை அருளுகின்றன. கொலை விளைவுகளிலும் கலை விளைவுகள் நிலவி மிளிர்கின்றன. போராடல் புரிந்துவருவது வீரக் கலையாய் விளங்கி விவேக நிலைகளை விளக்கி வருகின்றன.

இம் மானவீரனுடைய பாணப் பிரயோகங்கள் சேனைத் திரள்களை எவ்வழியும் பாழாக்கி அழித்தன. படைகள் மாண்டு மடியுந்தோறும் மீண்டும் மீண்டும் மூண்டு மேமேலேறி யாண்டும் அழிந்து குவிந்தன இறந்துபடுவதை நினைந்து யாதும் கவலாமல் அடலோடு போராடி அரக்கர் மடிந்து மாய்ந்தது வியப்பு வீரங்களை விளக்கி நின்றது. எண்ணிட அரியனவாய் வந்தன மண்ணிடை மரிந்து விரிந்தன. விண்ணிடை உயிர்கள் நிறைந்தன.

விண்ணிறைந்தன மெய்யுயிர்; வேலையும்
புண்ணிறைந்த புனலின் நிறைந்தன;
மண்ணிறைந்தன பேருடல்; வானவர்
கண்ணிறைந்தன வில்தொழில் கல்வியே. (1)

குறித்தெறிந்தன எய்தன கூறுறத்
தறித்த தேரும் களிறும் தரைப்பட
மறித்த வாசி துணித்தவர் மாப்படை
தெறித்துச் சிந்தச் சரமழை சிந்தினன். (2)

ஒன்று மேதொடை கோல்ஒரு கோடிகள்
சென்று பாய்வன திங்கள் இளம்பிறை
அன்று போலென ஆகியது! அச்சிலை
என்று மாள்வர் எதிர்த்த இராக்கதர். (3)

போராட மூண்டு வந்த நிருதர் மாண்டு மடிந்துள்ள நிலைகளை ஈண்டு வியந்து கண்டு வீரனது வில்லாடலை உணர்ந்து கொள்கிறோம். படுகொலை செய்ய வேண்டும் என்று அடலோடு பாய்ந்து பொருத நிருதர் எல்லாரும் பட்டு மாய்ந்து பாழாய் முடிந்தனர். ஆவிகள் பிரிந்துபோய் ஆகாயம் நிறைந்தன; உடல்கள் கிடந்து உலகம் நிறைந்தன என்றது இறந்து ஒழிந்தவரது அழிவுகளை அளந்து அறிந்து கொள்ள வந்தது. கோதண்ட வீரனுடைய வில்வேக சரவேகங்களைக் கண்டு தேவர் யாவரும்

தியங்கி மயங்கி நின்றனர். வில் தொழில் கல்வி என்று வியந்து குறித்தது தனுவேதத்தின் அரிய கலை நிலையைக் கருதியுணர வந்தது. சிலையின் கலையில் இக்குலமகன் எவரும் எவ்வகையிலும் யாதும் நிகரில்லாத தலைமையில் என்றும் நிலையாய் நிலவிநிற்கிறான்.

அத்திர வித்தைகளை மந்திர முறையோடு நன்கு பயின்று தெளிந்திருத்தலால் இவ்வீரனுடைய வில்லாடலில் வீரசத்தி அதிசய உல்லாசமாய் விளையாடியிருக்கிறாள். அம்புகளை எடுத்துத் தொடுப்பதில் அற்புதங்கள் விளைந்திருக்கின்றன. ஒரு தொடையில் பல்லாயிரக் கணக்கான பாணங்கள் பரந்து விரிந்துள்ளன.

ஒன்றுமே தொடை கோல் ஒரு கோடிகள்
சென்று பாய்வன.

இந்த வென்றி வீரனுடைய வில்லாடலை இது நன்கு விளக்கியிருக்கிறது. ஒரு அம்பை வில்லில் தொடுக்கின்றான்; அதிலிருந்து எல்லையில்லாதபடி கணைகள் பெருகி எங்கும் ஒல்லையில் பரந்து ஊழித் தீ போல் உருத்து அழிக்கின்றன. தொடை ஒன்று கோல் கோடி என்றதனால் அந்தத் தொடுப்பையும் விடுப்பையும் கடுப்பையும் எடுப்பையும் விரிப்பையும் அழிப்பையும் நாம் உணர்ந்து வியந்து கொள்கிறோம். கோல் = அம்பு. ஒன்று நூறுலட்சமாய்ச் சென்று கொன்றிருப்பது வென்றியின் நிலையை விளக்கியுள்ளது. எடுக்கும்போது படைக்கருவிபோல் தோன்றுகிறது; விடுத்த பின் வடவைத் தீயை வாரி வீசி யாண்டும் நாசமாக்குகின்றது. இராமன் வில்லிலிருந்து கணைகள் வெளியேறிய பொழுது எங்கும் தலைகள் துள்ளுகின்றன; உடல்கள் உருளுகின்றன; குதிரைகள் கதறிச் சாகின்றன; யானைகள் வீறிட்டு விழுந்து அழிகின்றன; தேர்கள் உடைந்து சிதறுகின்றன; எவ்வழியும் வெவ்விய கொலைகளே விரைந்து நிறைந்து விழுகின்றன.

போராட மூண்டு புகுந்த நிருதர் எவரும் மாண்டு மடிந்ததோடு அயலே நீண்டு நின்ற சேனைகளும் நிலை குலைந்து அழிந்தன. இவ்வீரன் வில்லில் அம்பு தொடுப்பதையும் விடுப்பதையும் நேரே பொருத யாரும் சரியா அறிய முடியவில்லை; அயலே நிகழுகிற கொலைகளையே எல்லாரும் கண்டு உள்ளம் கலங்கினர். ஒன்று கோடியாய் ஓடிக் கொன்று குவிப்பதால் அதன் தெய்வீக நிலையை வியந்து புகழ்ந்து விழி மயங்கி நின்றனர்.

உற்பத்தி அயனே ஒக்கும்; ஓடும்போது அரியே ஒக்கும்;
கற்பத்தின் அரனே ஒக்கும் பகைஞரைக் கலந்த காலை.

இராம பாணத்தின் அற்புத ஆற்றலை வியந்து இராவணன் இவ்வாறு *முன்னம் புகழ்ந்து போற்றியிருப்பது ஈண்டு ஊன்றி உணர்ந்து கொள்ள வுரியது. கற்ப காலத்தில் உருத்திர மூர்த்தி உலகங்களை அழிப்பதுபோல் இராமபாணம் இராக்கதர்களை அழித்திருக்கிறது. அந்த அழிவு நிலையை அக்குல முதல்வனே விழி எதிரே கண்டு வெருவியிருக்கிறான். யாண்டும் யாதும் கலங்காத கண்டனை இலங்கை வேந்தன் கலங்கி மறுகக் கோதண்ட வீரன் அரக்கரை அழித்து வருகிறான்; மூண்ட அழிவுகள் நீண்டு படர்ந்து நெடிது ஓங்கி நிமிர்ந்து வருகின்றன.

அடுதொழில் ஆற்றியது.

வெள்ளமாய்ச் சூழ்ந்து வளைந்த படைகள் துள்ளித் துடித்து மடிய இவ்வீர வள்ளலின் வில் வெரு வேகமாய் வேலை செய்தது. மூண்டு முனைந்த சேனைத்திரள்கள் பூண்டோடு மாண்டு மடிந்து நீண்ட பிணங்களாய் நிமிர்ந்து நிலவ இந்த ஆண்டகை அடலாண்மை புரிந்தது அதிசய வெற்றிகளாய் யாண்டும் விளங்கியது. கடல் அலைகள் போல் பொங்கிக் கடுத்து வந்தவர் அடுத்த நிமிடத்தில் உடல்கள் மலைகளாய் ஓங்க உயிரழிந்தனர்.

எடுத்தவர் இரைத்தவர் எறிந்தவர் செறிந்தவர் மறங்கொடு எதிரே
தடுத்தவர் அடுத்தவர் சரிந்தவர் பிரிந்தவர் தனிக்களிறு போல்
கடுத்தவர் கலித்தவர் கறுத்தவர் செறுத்தவர் கலந்து சரமேல்
தொடுத்தவர் துணிந்தவர் தொடர்ந்தனர் கிடந்தனர் துரந்த கணையால்.

தொடுப்பது சுடர்ப்பகழி ஆயிர நிரைத்தவை துரந்து துறைபோய்ப்
படுப்பது வயப்பகழி ஆயிரரை அன்று பதினாயிரவரைக்
கடுப்பது கருத்துமது கட்புலன் மனம்கருதல் கையின் அயில்வேல்
எடுப்பது படப்பொருவ தன்றி அவர் செய்வதொரு நன்றியுளதோ.

தூசியொடு நெற்றியிரு கையினெடு பேரணி கடைக்குழை தொகுத்து
ஊசிநுழை யாவகை சரத்தணி வகுக்குமவை உண்ணும் உயிரை
ஆசிகளை யுற்றுருவும் அப்புறமும் ஓடும் அதன் இப்புறமுளார்
ஈசனெதிர் உற்றுருவ தல்லது இகல்முற்றுவதொர் கொற்றம் எவனோ.

ஊன்கு வடிக்கணைகள் ஊழியனல் ஒத்தன; உலந்த உலவைக்
கானகம் நிகர்த்தனர் அரக்கர்; மலை ஒத்தன களித்த கதமா;

* இந்நூல் பக்கம் 3966 வரி 19 பார்க்க.

மானவன் வயப்பகழி வீசுவலே ஒத்தன வளேப்புனலுள் வாழ்
மீனகுலம் ஒத்தன கடற்படை இனத்தொடும் விளிந்துறுதலால். (4)

ஊழியிறுதிக் கடுகு மாருதமும் ஒத்தனன் இராமன்; உடனே
பூழியென உக்குதிரு மால்வரைகள் ஒத்தனர் அரக்கர்; பொருவார்
ஏழுலகு முற்றுயிர்கள் யாவையு முருக்கி யிறுதிக்கணின் வரும்
ஊழியையும் ஒத்தனன்அம் மன்னுயிரும் ஒத்தனர் அலேக்கு நிருதர்.

முலமுத லாயிடையு மாயிறுதி யாயெவையும் முற்றுமுயலும்
காலமென லாயினன் இராமனவ் அரக்கர் கடைநாளில் விளியும்
ஞாலமில் சராசரம் அனேத்தினேயும் ஒத்தனர் குரைகடல் எழும்
ஆலமெனல் ஆயினன் இராமன்; அவர் மீனம்என லாயினர்களால்.

வஞ்சவினே செய்துநெடு மன்றில்வளன் உண்டுகரி பொய்க்குமறமார்
நெஞ்சமுடை யோர்கள்குலம் ஒத்தனர் அரக்கர்; அறம்ஒக்கும்
[நெடியோன்;
மஞ்சநெடு நீரினேயும் ஒத்தனன்; அடுத்ததனே நக்கினரையும்
பஞ்சமுறு நாளில்வறி யோர்களேயும் ஒத்தனர் அரக்கர் படுவார். (7)

வெள்ளம்ஒரு நூறுபடும் வேலேயினவ் வேலேயும் இலங்கை வெளியும்
பள்ளமொடு மேடுதெரி யாதவகை சோர்குருதி பம்பி எழலும்
உள்ளமதி லும்புறமும் ஒன்றுமறி யாதலறி ஓடினர் களால்
கள்ளநெடு மான்விழி அரக்கியர் கலக்கமொடு கால்கள் குலேவார்.
(மூலபலவதை, 136–146)

அரக்கர் குலம் அலமந்து அழிந்திருக்கும் நிலேகளே இவை விளக்கியுள்ளன. கவிகளேக் கவனித்து நோக்குவார் எவரும் வீரப் போர்க் காட்சிகளே நேரே கண்டு வியப்பு மீதூர்ந்து வீர வுணர்ச்சிகளில் செழித்துக் களித்துத் திளேத்து விளங்குவார்.

கொடிய இராக்கத குழாங்கள் கொதித்து வீசிக் கொலேக் குறிப்போடு கடுத்து எறிந்த படைக்கலங்கள் யாதும் தன்மேல் படாதபடி மந்திர நெறியில் தடுத்து விலக்கி எந்திரம் திரிந்தது போல் இச் சுந்தர வீரன் எங்கும் சாரி புரிந்து சுடுகணேகளேத் தொடுக்கும் தோறும் படுகொலேகள் அடுக்கடுக்காய் நிகழ்ந்திருக்கின்றன. எதிரிகள் சீறி எய்த அம்புகளும் சினந்து எறிந்த வேல்கள் வாள்கள் முதலியன யாவும் பாழாய் நாசம் அடைந்துள்ளன. கூரிய கொலேக் கருவிகள் துண்டங்களாய்ச் சிதறி விழுவதும் சீறிய அரக்கர் திரள்கள் கண்டங்களாய் அழிந்து படுவதும் கொடிய கோரமான அவலக் காட்சிகளாய் நின்றன.

கோதண்டத்திலிருந்துநேரேவெளிவருகிற ஒரு பகழி பதினுயிரம் படை வீரர்களை ஒருங்கே உயிர் வாங்கி மருங்கு எங்கும் நில்லாமல் மேலே செல்லுகின்றது. மூண்டு கொதித்து முனைந்து வந்தவர் எவரும் ஒரு நொடியில் மாண்டு மடிவது யாண்டும் பெரிய அதிசய வியப்பாய் நீண்டது. வீர வெறியோடு வெள்ளம்போல் சீறி வருகிற அரக்கர் அடுத்த கணத்தில் பிணக் குவியல்களாய் மாறி நிற்கின்றனர். மாய்ந்து படுகின்ற கொலைகள் மாயசாலங்களாய்த் தோன்றி விளங்கின. ஊன்றி நோக்கிய அமரரும் ஒரு நிலையும் சரியாய்த் தெரியாமல் பெருமயலாய் மறுகி மயங்கினர்.

வளைத்த வில் நிமிராமல் இராமன் விளைத்து வந்த போராடல் அரக்கர் குழுவை அடியோடு அழித்து வந்தது. எவ்வாறு அழிந்துபடுகின்றோம் என்று அவர் யாண்டும் யாதும் தெரிந்து கொள்ள முடியவில்லை. துள்ளி வருகின்றார்; துடித்து விழுகின்றார்; அடுத்து வந்து சூழ்ந்தவர் யாவரும் மறுத்து ஒன்றும் காணாமல் மாண்டு மடிந்தமையால் நீண்ட பிண மலைகளே யாண்டும் நிமிர்ந்து தோன்றின. தீயில் வீழ்ந்த ஈசல்களாய் மாய்ந்தனர்.

வடிக்கணைகள் ஊழிஅனல் ஒத்தன;
அரக்கர் உலந்த உலவைக் கானகம் நிகர்த்தனர்.

இராம பாணத்தின் வலியையும் இராக்கதர் அழிந்துள்ள நிலையையும் இது உணர்த்தியுள்ளது. உவமானம் இருவகை நிலைகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வந்தது. அனல் = தீ. யுகாந்த காலத்தில் தோன்றி எல்லா வுயிர்களையும் ஒருங்கே எரித்து மருங்கு எங்கும் அழித்து ஒழிப்பது ஊழியனல் என வந்தது.

"தீ செங் கனலியும் கூற்றமும் ஞமனும்
மாசில் ஆயிரம்கதிர் ஞாயிறும் தொகூஉம்
ஊழி" (பரிபாடல், 3)

ஊழிக் காலத்து நிலையை இது விளக்கியுளது. யுகமுடிவில் சரம் அசரம் முதலிய யாவும் அழிந்துபட இறைவனிடமிருந்து எழுந்து வருகிற நெருப்புக் கோளத்தை ஊழித்தீ என்று உலக சரித்திரம் உரைத்து வருகிறது. ஏழு கடல்களையும் ஈரேழு உலகங்களையும் நேரே அது அழிக்க வல்லது; அதன் எதிரே யாதும் எவ்வகையிலும் உருவாய் நிற்க முடியாது.

அதிசயமான அந்த ஊழித் தீயை இராமபாணத்துக்கு இங்கே ஒப்புக் கூறியது அதன் அற்புத ஆற்றலையும் அழிக்கும் திறலையும் நுட்பமா வுணர்ந்து கொள்ள. அடலாண்மையோடு எதிரே சீறி எழுந்த இராக்கத வெள்ளம் கடல் போல் பொங்கி வந்தது; அந்தப் படைக் கடல்களை அடியோடு அழித்து ஒழித்தன ஆதலால் வடிக்கணைகள் ஊழி அனல் ஒத்தன என்று குறித்தார்.

ஊழித்தீ இறைவன் ஆணையால் எழுகின்றது.

வடிக்கணை இராமன் ஏவலால் வருகின்றது.

அது எல்லாவற்றையும் ஒல்லையில் அழிக்கிறது.

இது அரக்கர்திரள் அனைத்தையும் ஒருங்கே ஒழிக்கிறது.

அதன் அழிப்பு புதிய உலகத்தை விளைக்கும்.

இதன் அழிப்பு புனித உலகத்தை வளர்க்கும்.

இத்தகைய ஒத்த நிலைமைகள் பல இங்கே உய்த்துணரத் தக்கவை. அரக்கர் குலத்தை அழிப்பது அறத்தை வளர்ப்பதாயது.

இராமன் உத்தமமான சுத்த வீரன்; அவனோடு நிகரான வீரன் எவரும் எங்கும் என்றும் இலர்; வீர வேகமாய் அவன் விட்ட கொடியபாணம் தெய்வீகத் தீயாய்த் தெவ்வரைத் தீய்த்து அழித்தது. போரின் அதிசய நிலையை உவமையால் துதித்தார்.

செருநடைக் குரிசிலும் சிவந்து அழன்று ஓர் தீத்திரள்
பொருநடைப் பணிக்கடல் சுடுவது ஒத்து உலம்பினன்.
(சீவகசிந்தாமணி, 274)

ஏமாங்கத நாட்டு மன்னன் ஆன சச்சந்தன் பகைவரோடு போராடிய திறலை இது குறித்திருக்கிறது. ஊழித்தீயை அவன் போராட்டத்துக்கு ஒப்புக் கூறியுள்ளமை ஈண்டு உணர வுரியது.

ஊழிக்கனல் ஆழிப்புனலையும் அழிக்க வல்லது; அத்தகைய அற்புதத் தீ உலர்ந்த செத்தைகளை எரித்து ஒழித்தது போல் இராமபாணம் அரக்கர்களை அழித்திருக்கிறது. அந்த அழிவு நிலைமையின் வேகத்தையும் விரிவையும் தெளிவாகத் தெரிந்து கொள்ள அரக்கர் உலவைக் கானகம் நிகர்த்தனர் என்றார். உலந்த உலவை = வெட்டப்பட்ட மரம், கட்டு விறகு. காய்ந்து உலர்ந்த கட்டை களைக் காட்டுத் தீ எரித்தது போல் இராமபாணம் அரக்கரை

அழித்தது என்று கூறியிருக்கலாம். அவ்வாறு கூறவில்லை. ஊழி அனல் எனப் பாழிமை தோன்ற வுரைத்தார். பகழியின் விழுமிய நிலையும், விளிவின் விளைவும், விதியின் வகையும் தெளிவுறவந்தது.

தீயவரைத் தீயெனக் கனன்று தூயவன் தொலைத்து வருகிறான்; அடுத்து வருவார் அனைவரையும் கடுத்து எரித்து வெற்றி வீரோடு வருகிற அந்நிலையினைப் பலவகை உவமைகளால் கவி விளக்கியிருப்பது வித்தகக் கலையாய் விளங்கி வருகிறது. ஒப்புகளை நுட்பமா நோக்கி உரிய பொருள் நயங்களை ஓர்ந்து உணர்ந்து அரிய வீர நிலையை ஆய்ந்து கொள்ள வேண்டும்.

கொடிய சூறைக் காற்றின் எதிரே புழுதிப் படலங்கள் போல் இராமபாணத்தின் எதிரே இராக்கதர் நிலை குலைந்து அழிந்து போயினர். அப்போக்கை நோக்கி அறிய இராமன் ஊழி மாருதம் ஒத்தனன்; அரக்கர் பூழி ஒத்தனர் என்றார்.

ஆலகால விடம் எழுந்த பொழுது கடல் மீன்கள் அலமந்து அழிந்தது போல் இராம சரம் பாய்ந்தபோது அடலாண்மையுடைய அரக்கர் அதிவிரைவில் நாசமடைந்து மாய்ந்தனர். நேர்ந்தவர் எவரும் அயலே பேர்ந்து போகாமல் மாண்டு மடிந்ததை உவமைக் குறிப்பால் ஓர்ந்து கொள்ளுகிறோம். அவங்களே புரிந்து யாண்டும் அடல் மிகுந்து வந்தவர் ஈண்டு உயிர்கள் ஒழிந்து உடல்கள் சிதைந்து சவங்களாய்க் குவிந்தனர்.

கொடிய பாவகாரிகளை முடிய நூறுவதில் கடிய வேகம் காட்டி இந் நெடியவன் நிலவி வந்தது பெரிய அதிசயமாய் நின்றது. உலர்ந்த செத்தைகளைச் சண்டமாருதம் வீசி எறிவது போல் இவ்வீரன் நிருதரை நாசமாக்கி நின்றான். அந்த நாச நிலைகளையெல்லாம் யோசனை செய்து உறுதியோடு தெளிவா உணர்ந்து கொள்ள உவமவாசகங்கள் ஈண்டு நவமாய் வந்தன.

> நெடியோன் அறம் ஒக்கும்;
> அரக்கர் மறம் ஆர் குலம் ஒத்தனர்.

போரில் நின்ற இராமனையும் போராட மூண்டு நேரில் நீண்டு வந்த இராக்கதரையும் இங்கே நேரே நிறை தூக்கி நோக்குகின்றோம். புண்ணிய உருவம் கண் எதிர் நின்றது.

தருமகுண சீலனாய் நெறிமுறையே என்றும் ஒழுகி வருபவன் ஆதலால் அறம் என இவ்வீரன் உயர் புகழோடு ஒளிவீசி நின்றான். புண்ணிய மூர்த்தி, தருமாத்துமா என்று ஆன்றோர் யாவரும் யாண்டும் உவந்து புகழ்ந்துவர இத்தோன்றல் தோன்றி நின்றுள்ளதை ஈண்டு ஊன்றி உணர்ந்து கொள்கிறோம்.

மனம் மொழி மெய்கள் புனிதமாய் ஒழுகி வருவதே தருமம் ஆதலால் அதனை யுடையவன் அதிசய மகிமைகளை அடைந்து கொள்கிறான். இருமையும் இன்பம் தந்து பெருமேன்மைகளை அருளி வருவதால் அது உயிரின் அமுதமாய் ஒளி மிகுந்துள்ளது.

"சிறப்பு ஈனும், செல்வமும் ஈனும்" என அறத்தின் அதிசய விளைவுகளைத் தேவர் இவ்வாறு துதி செய்துள்ளார். தன்னை உரிமையோடு பேணி வருபவனைத் தருமம் உன்னத நிலையில் உயர்த்தியருளுகிறது. மன்னவன் ஆக்கி மகிமை புரிகிறது

"Virtue crowns her worshippers." (Pr)

"தன்னைத் தொழுது வருபவரை அறம் முடிமன்னர் ஆக்குகிறது" என லத்தீன் மொழியில் இப்படி ஒரு பழமொழி வழங்கி வருகிறது. தருமம் இருமையும் ஒருமையே தருகிறது.

அரசராய் அமரராய் அமர்ந்து வாழ்வதும்
பரசுறும் மேன்மைகள படிந்து சூழ்வதும்
புரசைமால் களிற்றின்மேல் பொலிந்துபோவதும்
விரசுறும் அறத்தினால் விளைந்த என்பவே.

இங்ஙனம் அரிய பல மகிமைகளை அருள வல்ல அறம் என இராமனை இங்கே வரைந்து குறித்தது அதிசய வெற்றியை அடைந்து நிற்கும் தகைமை தெரிய. கருதியன யாவும் தருமம் உரிமையாத் தரும் ஆதலால் இத்தரும வீரன் செய்துவரும் கருமமும் அதன் பெருமித விளைவுகளும் மருமமா அறிய வந்தன.

பண்ணிய புண்ணியம் எண்ணிய கண்ணியம்.

என்னும் இது புண்ணியலோக வாசிகள் போதித்து வரும் புனித வாசகம். கருதியபடியெல்லாம் அரிய மகிமைகளை அருள வல்ல தருமம் என இராமன் மருவி நின்றமையால் இத்தூய வீரன் எதிரே தீயவர் திரள்கள் மாயமாய் மாய நேர்ந்தன.

உடல் வலிமைகளும் அடலாண்மைகளும் உறுதி ஊக்கங்களும் தீர தைரியங்களும் உடையராயினும் நெஞ்சம் தீயராய்ப் பாவ காரியங்களைச் செய்து வந்தமையால் யாவும் பாழாயிழந்து அரக்கர் அழியலாயினர். செய்த தீமை சேர அழித்தது.

வஞ்சனை செய்து நெடு மன்றில் வளன் உண்டு
கரி போய்க்கும் நெஞ்சமுடையோர்கள் குலம்.

நாசம் அடைவதுபோல இராக்கதர் அடியோடு அழிந்து மடிந்தனர். கொடிய அழிவுகளின் முடிவு நிலை தெரிய வந்தது.

நியாய சபையில் அநியாயமாய்ப் பொய்ச் சாட்சி சொல்லும் பாதகர் குலம் பாழாய் அழியும் எனக் கவி இங்கே விழி தெரிய விளக்கியிருக்கிறார். நீதி முறைகளில் தீது நேர்வது பெரும்பாலும் பொய்ச் சாட்சிகளால் ஆதலால் அவர் கொடிய பாதகர்களாய் இகழப்பட்டனர். வாதி பிரதிவாதிகளின் வழக்குகள் உரிய சாட்சிகளைக் கொண்டு உறுதி செய்யப்படுகின்றன. கட்சிகள், காட்சிகள், சாட்சிகள், ஆட்சிகள் என்பன வழக்குகளின் கிளைகளாய்த் தொடர்ந்து படர்ந்து வந்துள்ளன.

கண்ணால் கண்டதும் பொய்; காதால் கேட்டதும் பொய்; தீர விசாரித்தது மெய் என்னும் உலக வசனங்கள் நீதி விசாரணையின் நிலைகளை விளக்கி வந்துள்ளன. வழக்காளர் இருவருடைய வாதங்களைக் கேட்ட நீதிபதி அதன் பின் அதற்குத் தக்க சான்றுகளை ஆராய்கின்றார். அங்ஙனம் நேருகின்ற சாட்சி இலஞ்சம் முதலியன வாங்கிக்கொண்டு தன் நெஞ்சறிந்த உண்மையை மறைத்து மாறுபாடாகக் கூறின் வழக்கு வேறாய்ப் பிழைபடும்; நீதிபதியை நிலைகுலைத்து, நேரான வழக்கைப் பாழாக்கி, உரியவனுக்குக் கொடிய துயரங்களை விளைத்து விடுதலால் கரி போய்த்தல் பொல்லாத பாவம் ஆயது; ஆகவே அப்பாவத்தைச் செய்தவன் பழிபடிந்து குடி மடிந்து இருந்த இடமும் தடந்தெரியாமல் அடியோடு அழிந்துபோக நேர்ந்தான். கரி = சாட்சி.

உள்ளங்கை நெல்லிக் கனி போல் உள்ளதை ஒளியாமல் தெளிவாகச் சொல்லுவது எதுவோ அது கரி என வந்தது. அந்த மெய்யை மறைப்பது வெய்ய தீமையாயது. தன்னை வாயில் வைத்தவனை நோயில் வைத்துக் குடியைக் கெடுத்து

அடியோடு அழிப்பது ஆதலால் பொய்ச் சாட்சி பொல்லாத கேடு என உணர்த்தி அதனை ஒழித்து ஒழுகும்படி மனித சமுதாயத்துக்கு இனிய போதனையைக் கவி இங்கே தெளித்தருளினர்.

"அறி கரி பொய்த்தல் ஆன்றோர்க்கு இல்லை."

(குறுந்தொகை, 184)

கரி பொய்ப்பவர் இழி மக்களே என்பதை இது காட்டியுள்ளது. மொழி செயல்கள் இழிவுறின் பழியராயழிகின்றனர்.

போய்க்கரி புலைப்பழி எனக் காவியத்தில் பல இடங்களில் குறித்திருக்கிறார். முன்னமும் * வந்துள்ளது. பரிதானமாக ஏதேனும் பொருளை வாங்கிக் கொண்டு மருளோடு பொய் கூறும் மாபாதகர் என்பார் வளன் உண்டு போய்க்கும் மறவோர் என்றார். இலஞ்சம் வாங்குவது இழிவு; வஞ்ச நெஞ்சினர் அந்த நஞ்சினை அருந்தி நாசம் அடைகின்றார் எனப் பரிதாபமாய் இரங்கியிருக்கிறார். நல்ல மனிதன் அல்லலாயழிவது அவலமாம்.

மன்று என்றது பலர் கூடும் வெளியிடத்தை. நாலு தெருக்களும் சந்திக்கின்ற பொதுவான வெளியிடத்தில் பஞ்சாயத்து முறையில் ஊர் வழக்குகளைத் தீர்ப்பது பண்டைக் காலத்து வழக்கம். நியாயம் வழங்கும் நிலையம் ஆதலால் அது நீதி மன்றம் என நிலவி நின்றது. ஊர் வழக்காய்க் குடிகளிடம் தோன்றி நின்ற அது பின்பு முடி அரசு நீதிக்கு வரிசையாய் வந்தது.

மன்று நிலை.

மன்றாடி எனச் சிவபெருமானுக்கு ஒரு பெயரமைந்துள்ளது; ஆகவே மன்றின் மகிமை நன்கு புலனும். எல்லாருக்கும் பொதுவாய் நீதி புரியும் இடம் ஆதலால் அதில் தீது புரியலாகாது. நெறியும் நேர்மையும் மருவி வரும் அளவே மன்று மாண்பு புரிகிறது. நீதி மன்றில் தீது புரிவது நெடிய பாவமாம்.

"மன்று பறித்து உண்ணேல்."

என்று ஒளவையார் இவ்வாறு குறித்திருக்கிறார். மன்றில் வளன் உண்டு போய்க்காதே! என்றதனோடு இது ஒத்து வந்துள்ளமை ஈண்டு உய்த்துணரத்தக்கது. நடுவு நிலைமை குன்றி

---

* இந்நூல் பக்கம் 1862, வரி 14 பார்க்க.

மன்றில் ஓர வஞ்சகம் பேசின் அது கோரமான குடி கேடாம்; நாசமான அந்த நீசம் பேசலாகாது என்பது தெரிய வந்தது.

வேதாளம் சேருமே வெள்ளெருக்கும் பூக்குமே
பாதாள மூலி படருமே---மூதேவி
சென்றிருந்து வாழ்வளே சேடன் குடிபுகுமே
மன்றோரம் சொன்னார் மனை. (நல்வழி, 23)

உள்ள வழக்கிருக்க ஊரார் பொதுவிருக்கத்
தள்ளி வழக்கதனைத் தான்பேசி---எள்ளளவும்
கைக்கூலி தான்வாங்கும் காலறுவான் தன்கிளையும்
எச்சமறும் என்றால் அறு. (1)

வழக்குடையான் நிற்ப வலியானைக் கூடி
வழக்கை அழிவழக்குச் செய்தோன்---வழக்கிழந்தோன்
சுற்றமும் தானும் தொடர்ந்தழுத கண்ணீரால்
எச்சமறும் என்றால் அறு. (ஔவையார்) (2)

பொய்யுடை ஒருவன் சொல்வன்மையினால்
மெய்போ லும்மே மெய்போ லும்மே;
மெய்யுடை ஒருவன் சொலமாட்டாமையால்
பொய்போ லும்மே பொய்போ லும்மே.
இருவர் தம் சொல்லையும் எழுதரம் கேட்டே
இருவரும் பொருந்த உரையார் ஆயின்
மனுமுறை நெறியின் வழக்கிழந் தவர்தாம்
மனமுற மறுகிநின்று அழுத கண்ணீர்
முறையுறத் தேவர் மூவர் காக்கினும்
வழிவழி ஈர்வதோர் வாள் ஆகும்மே .(நறுந்தொகை)

மன்றுபறித் துண்டோரும் வழக்கல்லா
துரைத்தோரும் மனையாள் தன்னோடு
ஒன்றியுடன் வாழாதே ஓராதே
பரதாரம் உவந்துள் ளோரும்
கொன்றுடலம் தின்றோரும் கோட்சொல்லித்
திரிவோரும் கோலிச் செய்த
நன்றிதனை மறந்தோரும் நரகத்தின்
இடைக்கிடந்து நடுங்கக் கண்டான்.

(உத்தரகாண்டம்)

நெஞ்சம் பொய்யராய் நின்று மன்றில் வஞ்சம் செய்வோர் குடி யோடழிந்து கொடுநரகடைவார் என இவை குறித்துள்ளன. குறிப்புமொழிகள் கூர்ந்து சிந்தித்து ஓர்ந்து உணர வுரியன.

தீய நெஞ்சர் மாய நேர்ந்தது.

நெஞ்சம் தீயராய் நெறிகேடு செய்பவர் குடியோடு அழிதல் போல் அரக்கர் அடியோடு அழிந்து பட்டனர். இராமனோடு போராடிய இராட்சதர் பொன்றி மடிந்த நிலையை உரைத்து வரும்போது மன்றில் மாறுடி மோசம் புரிகிறவர் நாசம் அடைவதை உவமை கூறி உலகம் அறிய உணர்த்தி யருளினார்.

வஞ்சவினை செய்யாதே; மன்று பறித்து உண்ணாதே; பொய்ச் சாட்சி சொல்லாதே! என்னும் போதனைகள் இங்கே பொருந்தி வந்துள்ளன. பிறர்க்கு அழிகேடு செய்தால் நீ கெடுவாய்; உன் குடி அழிந்துபோம்; பழிதுயரங்களோடு இழி நரகில் விழுந்து ஒழிவாய் என ஒரு தனி மனிதனை நோக்கிச் சொன்னபடியாய் மனித சமுதாயத்துக்கு நன்னயமான அரிய நீதிகளை இங்கே உரைத்திருப்பது உன்னியுணர வுரியது.

அரக்கர் சிறந்த வலியுடையராய்ச் செழித்திருந்தும் நெஞ்சம் தீயராய் நின்றமையால் நிலைகுலைந்து மாண்டார். புனித நெஞ்சமும் புண்ணியமும் உடைமையால் இராமன் வெற்றிபெற்று வீர சோதியாய் விளங்கி நின்றான். தருமம் தழுவி நின்றார் எவ்வழியும் பெருமையுடையராய்ப் பேரொளி செய்து விளங்குவார்; பாவம் படிந்தவர் யாண்டும் இழிந்து பாழாய் அழிந்து போவர் என்னும் உண்மைகள் ஈண்டு ஊன்றி உணர வந்தன.

சூரியன் எதிரே இருள்போல் தருமமூர்த்தியான இராமன் எதிரே நிருதர் விரைந்து ஒழிந்து போயினர்; அறத்தை நிலை நிறுத்த அமராடி வருகிறான் ஆதலால் நீதி உலகில் இம்மகா வீரன் நித்திய சோதியாய் நிலவி நிற்கின்றான். மனித சாதி இப் புனிதனால் மகிமை அடைந்துள்ளது. வீர வுலகமும் ஞான வுலக மும் மானவுலகமும் தேவவுலகமும் இவ்வீரக் குரிசிலை ஆர்வ மோடு வியந்து போற்றி வருகின்றன. இத்தோன்றல் மறைந்து பல்லாயிரம் ஆண்டுகளாயின; ஆனாலும் இன்றும் எல்லா நாடு களிலும் எவ்வழியும் புகழ்ஒளி வீசிப் பொலிந்து விளங்குகிறான்.

The heroes of mankind are the mountains, the high lands of the moral world. (Stanley)

"வீரர்கள் நீதியுலகில் உயர்ந்த மலைகளாய் மேலான நிலைகளில் ஓங்கி நிற்கின்றார்" என்னும் இந்த ஆங்கில வாசகம் ஈங்கு அறியவுரியது. மானவீரர் வானசோதிகளாய் வயங்கியுள்ளனர்.

இலங்கை கலங்கியது.

நெடிய வெள்ளமாய் நேரே துள்ளி வந்த படைகள் கடிது அழிந்தன; உதிர வெள்ளங்கள் பெருகி நின்றன; அரக்கருடைய அழிவு நிலைகளை அறிந்து இலங்கை நகரம் நெடிது கலங்கியது; பெண்கள் கண்கள் கலங்கிக் கால்கள் தடுமாறி மருண்டு மறுகி வெருண்டு மயங்கி வெய்துயிர்த்து நொந்தனர். சீதாதேவி சிந்தை நொந்ததால் இந்த அழிவுகள் வந்தன என்று விழி நீர் சொரிந்து மங்கையர் பலர் அங்கங்கே அழுது புலம்பினர். தங்கள் கொழுநர்களை முன்னரே இழந்தவர் அன்று பிள்ளைகளையும் இழந்தமையால் உள்ளம் கலங்கி யாண்டும் உருகியழுதனர். அவலத் துயரங்கள் பெருகின. யாவரும் கவலைக் கடல்களுள் அழுந்தினர். இன்ப நகரம் துன்ப நிலையமாய்த் துளங்கி நின்றது.

தலைமை நிலைமை.

மூலபலப் போர் முடிவுகாணு முன்னரே ஊரார் முடிவு கண்டு உள்ளம் உடைந்து தள்ளருந் துயரோடு தவித்து உழன்றார். மூண்டு வந்த சேனைகளுள் மூன்று பாகங்கள் அழிந்து போயின. பதினாயிரம் கோடி பேர் நீண்ட தலைவர்களாய் நிலைத்து நின்றனர். தீவுகள்தோறும் ஆண்டுவந்த சிறந்த மண்டலாதிபதிகள் ஆதலால் தேர் யானை குதிரை முதலிய சேமப்படைகளும் திமைத்திரள்களாய் அவரோடு சேர்ந்து நின்றன.

ஒரு வில்லோடு வந்த மனிதன் எல்லாரையும் கொன்று குவித்து வென்றி வீறோடு நிற்கின்றானே! என்று நெஞ்சம் கனன்று நெடிது சினந்து கடிது விரைந்து யாவரும் ஒருங்கே ஆரவாரமாய் எழுந்தனர். எழுச்சி நிலை கிளர்ச்சியாய் வந்தது.

உக்கிர வீரமாய் உருத்து வந்து பக்கம் எங்கணும் படர்ந்து தொடர்ந்து அடர்ந்து பொருதார். பெரிய மதயானைத் திரள்களும் அரிய வேகமுடைய குதிரைப் படைகளும் அணி அணி

யாய் மூண்டு அடலோடு போராடின. யாண்டும் கோரமாய்க் கொதித்து நீண்டு கொலைக் கருவிகளோடு கடுத்து முனைந்து பொருத நிருத சேனைகளின் நிலைகளை நோக்கி இராமன் சிறிது வியந்து பெரிதும் சினந்தான். எத்திசைகளிலும் ஏறி வந்தவர் கொத்தோடு செத்து மடிவதைக் கண்டிருந்தும் யாதும் அஞ்சாமல் ஏதும் கவலாமல் மேலும் மேலும் வெகுண்டு வருகிற வீரக் குலங்களை நீருக்கி நிலத்தில் சாய்த்தான். சாய்ந்து படுவதைக் காணவே ஏதோ மாயப் போர் புரிகிறான்; ஈண்டு உள்ளவர் எல்லாரும் ஒருங்கே மூண்டு பாய்ந்து இந்த மனிதனைக் கொன்று நின்றுவிட வேண்டும் என்று கோபவெறி மண்டி யாவரும் யாண்டும் நீண்டு சூழ்ந்து அடுசமராடினர். கல்மாரி பொழிவது போல் பல்வகை ஆயுதங்களையும் ஒல்லையில் உருத்து வீசி எல்லாரும் வளைந்தபோது இமையவர் வெருவினர். கரிய மேகங்கள் இடையே மறைந்த சந்திரன் போல் கொடிய இராக்கத சேனைகள் நடுவே இராமன் அகப்பட்டு நின்றதை நோக்கி அமரர் யாவரும் அஞ்சி அலமந்தனர். நெடுந்திகிலாய் நெஞ்சம் கலங்கி நிலைகுலைந்த அவர் செஞ்சடைக் கடவுளிடம் தஞ்சம் புகுந்து "ஐயகோ! ஆண்டவா! அஞ்சன வண்ணனைக் காணோமே; கொலைபாதகரான கொடியவர் கொன்று விடுவாரோ?" என்று குலை நடுங்கி அலறி நிலைகுலைந்து புலம்பினர். அப்பொழுது சிவபரம் பொருள் அவர்க்கு ஆறுதலாக அருள் புரிந்து பொருள் பொதிந்த மொழிகளை அவர் தெருளும்படி தெளித்துக் கூறினர்.

சிவபெருமான் தேளிவு கூறியது.

அஞ்சி அய ரன்மின் அவர் எத்தனையர் ஆயிடினும் அத்தனைவரும்
பஞ்சின்எரி யுற்றதென வெந்தழிவர்; இந்தவுரை பண்டும் உளதால்
வஞ்சம்அமிழ் தத்தைநனி வென்றிடினும் நல்லறம் நடக்குமதனை
வஞ்சவினை பொய்க்கருமம் வெல்லினும் இராமனை அம் மாயர்கடவார்.

ஆக்கர்உள ரார்சிலர்அவ் வீடணன்அலாது உலகின் ஆவியுடையார்
ஆக்கமுள தாகினது நல்லறம் எழுந்து வளர்கின்ற தினிநீர்
காக்கமுறை தேடியுழல் கின்றிலிர்க ளின்று ஒரு கடும்பகலிலே
தாக்கின்முதல் நாயகனை ஆளுடைய கோளுழுவை கொல்லும்இவரை.'

என்றுபர மன்பகர நான்முகனும் அன்னபொருளே இசைதலும்
நின்றுநிலை ஆறினர்கள் வானவரும் மானவனும் நேமிஎன்லாத்

துன்றுநெடு வாளிமழை மாரியினும் மேலன துரந்து விரைவில்
குன்றுகுல மால்வரைகள் மானுதலை மாமலை குவித்தன னரோ. (3)
(மூலபலவதை, 153-155)

தேவதேவன் கூறிய அறிவுரைகளைக் கேட்டுத் தேவர் யாவரும் உள்ளம் தேறி உறுதி பூண்டு ஒரு சிறை ஒதுங்கி நின்று நிருதரிடை நிகழுகிற பொருதிறங்களைக் கருதி நோக்கினர்.

பரமன் அருள் மொழி பலவும் தெளிய வந்தது; "நீவிர் யாதும் அஞ்ச வேண்டா; செய்யோன் ஒளி முன் வெய்ய இருள் ஒழிவதுபோல் இராமன் எதிரே இராக்கதர் அழிந்து தொலைவர்; தருமத்தைப் பாவம் வென்றாலும் இராமனை இராக் கதர் வெல்ல முடியாது; நிருதர் குலத்தை அடியோடு கருவறுக் கவே அவன் உருவெடுத்து வந்துள்ளான்; வந்த காரியம் முறையே முடிந்து வருகிறது; விபீடணன் ஒருவனைத் தவிர அரக்கர் இனத்தில் யாரும் எஞ்சி இருக்க முடியாது; தஞ்சம் என்று அடைந்த அவனைக் காத்தருளுவது தருமத்தை நிலை நிறுத்தியபடியாம்; தீயோரைப் போக்கவும் நல்லோரைக் காக்க வும் வில் ஏந்தி வந்த அந்த வினையாண்மையை யாண்டும் விளக்கி வருகிறான்; இன்று பொழுது சாயுமுன் மூலபலம் முழுவதும் பாழாய் அழிந்துபோம்" என இறைவன் அருளிய இம்மொழி கள் இமையவர்க்குத் தெளிவுதவி உறுதிகளை அருளி நின்றன.

அறம் எழுந்து வளர்கின்றது.

பொல்லாத அரக்கர் கூட்டத்தால் தருமம் தலைசாய்ந்து தாழ்ந்திருந்தது; இப்பொழுது அந்தத் தீய இனம் அழிந்து வருத லால் அறம் எழுந்து தலைநிமிர்ந்து வரலாயது. இரக்கம் நீதி கருணை நெறிமுறைகள் முதலிய புனித நீர்மைகள் எல்லாம் இனி இனிது விளங்கி வரும் என்பது இங்கே தெளிய வந்தது.

பாப இனங்கள் பெருகி வந்தமையால் தரும குணங்கள் அருகி நின்றன; அவை அழிய நேரவே இவை வெளியே வளர நேர்ந்தன. புண்ணிய விளைவுகள் எண்ணியுணர வந்தன.

சிறந்த பலசாலிகளாயிருந்தும் பாவத் தீமைகளால் அரக்கர் அடியோடு அழிந்து வீழ்ந்தனர்; தருமம் தழுவி நின்றமையால் இராமன் தன்னந்தனியனாயிருந்தும் கொடிய நெடிய நிருதரைப் பொருது வென்று அரிய பெரிய புகழோடு மருவி விளங்கினன்.

அதருமம் எவ்வழியும் அழிதுயரங்களையே செய்யும்; தருமம் யாண்டும் விழுமிய மேன்மைகளை இனிதே விளைத்து வரும்

அதர்மோ நஷ்ட ஸந்தானோ தர்ம ஸந்தாந வர்த்தந:

“தருமத்தால் சந்தானம் விருத்தி ஆகிறது; அதருமத்தால் அது நாசமடைகிறது” என்னும் இது இங்கே சிந்திக்கத்தக்கது. பாவம் புகுந்தால் அந்தக் குடி படுதுயரங்களை அடைந்து பாழாய் அழிந்து போகிறது. அழிவு நிலைகள் விழிதெரிய வந்தன.

பெரிய செல்வங்கள் நிறைந்து அரிய திறல்களோடு அமைந்திருந்தாலும் பாவம் படின் அவை யாவும் விரைந்து நாசமடைகின்றது. துளி அளவு நஞ்சு உயிரைக் கொல்லும்; அணு அளவு பாவம் அரச குடியையும் அடியோடு கெடுத்து விடும்.

“One leak will sink a ship; and one sin will destroy a sinner.” [Bunyan]

“ஒரு சிறு கீறல் பெரிய கப்பலைக் கடலில் தாழ்த்தி விடும்; அதுபோல் ஒரு பாவம் எவனையும் பாதகனுக்கிப் பாழா அழித்து விடும்” என்னும் இந்த ஆங்கில வாசகம் ஈங்கு ஊன்றி உணரவுரியது. ஜாண் பனியன் என்பவர் பாவத்தின் நாச நிலையை அவர் அறிந்த உவமையில் இவ்வாறு தெளிவாக விளக்கியிருக்கிறார். எந்த நாட்டில் இருந்தாலும் அறிஞர்கள் பாவத்தை அஞ்சி வெறுக்கின்றார்; புண்ணியத்தை எண்ணி மகிழ்கின்றார்.

தீயினும் தீயது; நஞ்சினும் கொடியது எனத் தீமையை மேலோர் அஞ்சுவதெல்லாம் நீசமான அதன் நாச நிலையை உணர்ந்தேயாம். குடிகுலங்களை அழிப்பது குலைநடுங்க நின்றது.

நஞ்சம், வஞ்சம், பொய், பாவம் என அரக்கரையும், அமிழ்தம் அறம் என இராமனையும் இறைவன் இங்கே குறித்திருப்பது கூர்ந்து சிந்திக்கத்தக்கது. உம்பர் உணர்ந்து தெளிய இன்பமொழிகளால் நம்பன் நயமா உணர்த்தியருளினன்.

பொல்லாத தீயர்கள் புலையாய் அழிகின்றனர்; நல்ல தருமவீரன் எல்லாரையும் வென்று யாண்டும் வெற்றித்திருவோடு விளங்கி நிற்கிறான். தருமம் அரிய பெரிய ஆற்றல்களுடையது ஆதலால் அதனை மருவியுள்ளவன் எவ்வழியும் பெருமிதமை பெற்று வருகிறான். திவ்விய வலிமை தெரிய நின்றது.

"Virtue is a thousand shields." (Latin)

"தருமம் ஆயிரம் அரண்கள் போல் அரிய வலியுடையது"

என்னும் இது ஈண்டு அறியவுரியது. அறம் தெய்வ நீர்மை ஆதலின் அதனையுடையவர் அற்புத ஆற்றல்கள் அமைந்து நிற்கின்றார். எல்லாம் வல்ல நிலையை அது இனிது அருளுகிறது.

"Virtue joins man to God." (Cicero)

"தருமம் மனிதனைக் கடவுளோடு சேர்க்கிறது." என ஸிஸரோ என்பவர் இவ்வாறு செவ்வையாக் கூறியிருக்கிறார்.

"He who has virtue has all things that are good attending him." [Plautus]

"அறம் உடையவன் எல்லாம் உடையவன்; நன்மைகள் யாவும் அவனை அடைந்து நிற்கின்றன" என பிளாட்டஸ் என்னும் பெரியார் அறத்தின் நலனை இங்ஙனம் உரைத்திருக்கிறார்.

"Virtue alone ennobls." (Motto)

"தருமம் ஒன்றே மனிதனை உன்னத நிலையில் உயர்த்துகிறது."

என அறத்தின் அதிசய மேன்மையை இது உணர்த்தியுளது. தெய்வத் திருவாய்த் தருமம் உய்வைத் தருகின்றது.

"Virtue conquers envy." (Pr.)

"எந்தத் தீமையையும் தருமம் வெல்லுகிறது."

என்னும் இது ஈண்டு உரிமையோடு கருதியுணர வுரியது.

கொடிய பேராற்றலோடு நெடியராய்ப் பெருகி நின்ற இராட்சச சேனைகளை இராமன் கொன்று குவித்து வென்றி வீறோடு விளங்கி வருகிறான். தரும மூர்த்தி ஆதலால் பாவத் திரள்களைப் பாழாக்கி வீர சோதியாய் ஒளி வீசி வில்லோடு சாரிதிரிந்து எவ்வழியும் பொருது போரில் உலாவினன்.

யாண்டும் வெற்றியே கண்டு வீரச் செருக்கோடு வீறு கொண்டு வாழ்ந்து வந்த சூரத்திரள்கள் சுற்றிச் சூழ்ந்து சுடு கணைகளை ஏவிக் கொடிய படைக்கலங்களைக் கொதித்து வீசிப் படுகொலை கருதி அடுதொழில் ஆற்றினர். பக்கம் எங்கணும் உக்கிர வீரங்களாய் அடலாண்மைகள் புரிந்த அவரைக் கோதண்டவீரன் கொன்று குவித்தான். கொலைகளின் நிலைகளை

இடங்கள் தோறும் குவிந்து நின்ற தலைகளின் மலைகளும் உடல்களின் திடல்களும் உதிரங்களின் பெருக்கும் நன்கு விளக்கின.

வாளி மழை மாரியினும் மேலன;
தலைமலை குன்று குலமால் வரைகள்.

கோதண்டவீரனுடைய பாணப் பிரயோகங்களையும், அரக்கர்களுடைய சாக்காடுகளையும் இவை அளந்து காட்டியுள்ளன.

ஒரு வில்லில் இருந்து எல்லையில்லாத பகழிகள் ஒளி வீசி வெளிவருவதும் அரக்கர்கள் அணி அணியாய் அழிந்து மடிவதும் நமக்கு அதிசய வியப்புகளை விளைத்து நிற்கின்றன. தனுவேதம் அரிய பெரிய கலை; தெய்வீகமான மந்திர முறைகள் மருவியது; அத்திர சத்திரங்கள் வித்தக நிலையில் விளங்கியுள்ளன; அந்த வீரக் கலையில் தனி முதல் தலைவனாய் இராமன் நிலவி நிற்கின்றான்; சத்திய பராக்கிரமம் இந்த உத்தம வீரனிடம் உரிமை பூண்டுளது; ஆகவே இக்கோமகனது வில்லாடல் வீர தேவதையின் விளையாடலாய் வெற்றித் திருவின் நிலையமாய்க் கொற்றம் குலாவி யாண்டும் தலைமையோடு மிளிர்கின்றது.

வானவர் தானவர் முதலாகப் பல வீரக் குலங்களையும் வென்று எவ்வழியும் வெற்றிகளையே அடைந்து வீறோடு வெய்ய செருக்கேறி நின்ற அரக்கர் அதிபதிகள் இவ்வீரன் எதிரே யாதும் செய்ய முடியாமல் கை கால்களை இழந்து கடுமையாய்ச் செத்து விழுந்தது எவர்க்கும் எங்கும் நெடிய வியப்பாய் நின்றது. இராமனது பூரணமான கரவேகமும் சரவேகமும் இந்த மூலபலப் போரிலேதான் முற்றும் தெரிய நேர்ந்தது.

இந்திரன் முதலிய இமையவர் யாவரும் அந்தரத்தில் குழுமி நின்று இச்சுந்தர வில்லியின் அதிசய அமராடலை நோக்கித் துதி செய்து வியந்தனர். சேனைத் திரள்கள் நின்ற இடமெல்லாம் சென்று சென்று தாக்கிக் கொன்று குவித்து வென்றி வீறோடு வேகித்து வந்தான். குலால சக்கரம் போல் யாண்டும் உக்கிர வீரமாய்ச் சுற்றி உருத்து அமராடியது தேவதேவர்க்கும் வியப்பை விளைத்தது. யாரிடமும் என்றும் காணாத வில்லாடலும் வீர வேகமும் வெற்றிப் பிரதாபமும் அற்புதக் காட்சிகளாய் நின்றன. அந்த அதிசய நிலைகளை நோக்கித் தேவர் முதல் யாவரும் பரவசமாய் வியந்து புகழ்ந்து துதி செய்ய நேர்ந்தனர்.

அருகு கடல்திரிய அலகில் மலைகுலைய
உருகு சுடர்களிடை திரிய உரனுடைய
இருகை ஒருகளிறு திரியவிடு குயவர்
திரிகை எனவுலகு முழுதும் முறைதிரிய. (1)

சிவனும் அயனும்எழு திகிரிஅமரர் பதி
அவனும் அமரர்குலம் எவரும் முனிவரொடு
கவனம் உறுகரணம் இடுவர் கழுகினமும்
நமனும் வரிசிலையும் அறனும் நடனவில. (2)

தேவர் திரிபுவன நிலையர் செருவிறலை
ஏவர் அறிவுறுவர் இறுதிமுதல் அறிவின்
மூவர் தலைகள்பொதிர் எறிவர் அறமுதல்வ!
பூவை நிறவ! என வேதம் முறைபுகழ. (3)

எய்யும் ஒருபகழி ஏழு கடலும் இடு
வெய்ய களிறுபரி ஆளொ டிரதம் விழ
ஒய்ய ஒருகதியின் ஓட வுணரமரர்
கைகள் என அவுணர் கால்கள் கதிகுலைய. (4)

பிரசண்டவேகமாய் இராகவன் போராடியிருக்கும் அதிசய தீர நிலைகளை இக்கவிகள் சுவையாக் காட்டியுள்ளன. பேரழகும் பெரு வீரமும் நேரே ஒளி வீசி வர இக்கோமகன் வீர விளையாடல் புரிந்து வருவதை மூவரும் தேவரும் யாவரும் ஆவலோடு பார்த்து அதிசய பரவசராய்த் துதி செய்து நின்றுள்ளார். அஞ்சன வண்ணனுடைய அடலாடலில் கடல் மலை முதலாகப் பஞ்ச பூதங்களும் உடன் ஆடி யிருக்கின்றன.

கார்மேகம் ஒன்று கார்முகம் தாங்கி நேர்முகமாய் நின்றது போல் நிருதர் எவருக்கும் ஓர் முகமாய்த் தோன்றி இவ்வீர வில்லி போர் புரிந்திருப்பது வித்தக மாயமாய் விரிந்து நின்றது. எங்கும் தடையின்றி எவ்வழியும் வென்றியே கண்டு வீறோடு வந்தமையால் நேர்ந்த அரக்கர் யாவரும் பொன்றி வீழ்ந்து புலையாய் மடிந்தனர். நெஞ்சங் கலங்காத நெடுந்திறலாளர் என யாண்டும் சூரராய் நீண்டு நின்றவர் ஈண்டு அலமந்து வீழ்ந்து அவலமாய் மாண்டு மடிந்தனர். பொல்லாத அரக்கர்கள் நின்ற நிலை எங்கும் கூட்டம் கூட்டமாய்ப் பொன்றி விழுந்தோறும் இவ் வென்றி வீரனிடம் வீர கம்பீரம் மேலும் மேலும் வீறிட்டு வந்தது. நேரே வந்தவர் எவரும் நீறாய் வீந்துமாறாய் நின்றனர்.

இருகை ஒரு களிறு.

இந்த உருவக வுருவில் இராமனை இங்கே கவி நயமாக் காட்டி யிருக்கிறார். உரிய இடத்தில் அரிய பெயர் தெரிய வந்தது.

ஒரு பெரிய மதயானையின் காலில் மிதிபட்ட காட்டுப் புதர்கள் போல் இராக்கதர் கூட்டங்கள் இராமன் எதிரே சின்னா பின்னமாய்ச் சிதைந்து யாண்டும் இன்னலுழந்து இழிந்து செத்தன என்பதை உய்த்துணர இங்ஙனம் உரைத்தருளினார்.

உலக யானைகள் எவையும் ஒரு கையே உடையது; இந்த யானை இரண்டு அழகிய கைகள் உடையது. அது ஒன்றும் கொடுக்க இயலாத வெறுங்கை; இவை எல்லாம் கொடுக்கவல்ல செல்லக் கைகள். யாவும் யாண்டும் யாருக்கும் அள்ளிக் கொடுத்து வந்த வள்ளற் கைகள் ஈண்டு அரக்கர்களைத் துள்ளத் துடிக்கக் கொல்லுகின்றன. இக் கொலையும் தலையாய கொடையாய் நிலவி நின்றது. வெய்ய துயரங்களிலிருந்து நீங்கி வையமும் வானமும் உய்ய வழி செய்து வருதலால் உயர்தர வண்மையாய் இது ஒளி செய்துள்ளது. வீரக்கோடை விழிதெரிய வந்தது.

கொலை நிலை.

பொல்லாத களைகளை நீக்கி நல்ல பயிர்களை வளர்க்கும் ஏர் உழவன் போல் இவ் வீர வுழவன் அரக்கரை அடியோடு களைந்து எறிந்து வருகிறான். உயர்ந்த குறிக்கோளோடு போர் நடந்து வருகிறது. தரும நீதிகளுக்காக அநீதிகளை அழித்து வருதலால் இந்த அழிவுகளைச் செய்பவன் விழுமிய வீரனாய் விளங்கி நிற்கின்றான். அதிசயமான வீர வினை துதி கொண்டு நின்றது.

ஒரு சிறு பிராணியைக் கொன்றாலும் கொலை என்று குலை நடுக்கின்றோம்; அங்ஙனம் கொன்றவனைக் கொலைஞன் என்று கொதித்து வைகின்றோம்; கோடிக் கணக்கான அரக்கர் திரள்களை இராமன் இங்கே கொன்று குவிக்கின்றான். அந்தக் கொலை நிலைகளைக் கண்டு நாம் உள்ளம் உவந்து மேலும் மேலும்வியந்து வருகின்றோம்; கொடி செடிகளிடமும் கருணை புரிந்து பசும் புல்லும் நோக மிதியாத அருந்தவர்களும் இந்தப் பெருங் கொலைகளை விரும்பி நோக்கி வீர மூர்த்தி என இராமனை வியந்து புகழ்ந்து உவந்து கொண்டாடி வருகின்றார். கொலையின் மருமம்

கலையின் தருமமாய் மருவி அரிய பல உறுதிநலங்கள் தோன்ற வருவது அதன் நிலையை ஊன்றி உணரச் செய்கின்றது.

"One murder made a villain,
Millions a hero. Princes were privileged
To kill, and numbers sanctified the crime." (Porteus)

"ஒரு கொலை செய்தவன் கொடிய கொலைஞனாய்ப் பழிக்கப் படுகிறான்; கோடிக்கணக்கான கொலைகளைச் செய்தவன் பெரிய வீரன் என்று புகழ் பெறுகிறான். தீயவர்களைத் தூய்மையாக்கும் பொருட்டுக் கொல்லுவது அரசர்க்குத் தனியுரிமையான கடமையாய் நின்றது" என்னும் இது இங்கே அறியவுரியது. உலகம் காக்கும் அரசனது நிலையும் நீதியும் தலைமையான தருமங்கள் தோய்ந்தன. அவை தெளிவாய்த் தெரிந்தன.

"கொடியாரைக் கொலையின் ஒறுத்தல் வேந்தின் தருமம்"

என வள்ளுவப்பெருமான் குறித்துள்ளதும் ஈண்டு உள்ளம் கூர்ந்து ஓர்ந்து வேந்து முறை தெளிந்து கொள்ளத் தக்கது.

மதயானைபோல் வீரகம்பீரமாய் யாண்டும் திரிந்து நிருதரை நெட்டு நெட்டாத் தட்டழித்து நாசப்படுத்தி இராமன் உலாவி வந்தான். ஒரு களிறு என்றது எந்த வகையிலும் யாரும் நிகரில்லாத அற்புத நிலையோடு அரிய கம்பீரமும் அறிய வந்தது.

சமர பூமியில் நின்று அமராடி வென்ற அதிசய ஆண்மையைக் கண்டு அமரரும் துதிசெய்து தமரோடு தொழுது போற்றியிருத்தலால் இராம பிரானது விழுமிய நிலைமைகளை வியந்து உவந்து கொள்ளுகிறோம். தரும நீதிகள் தழைத்து மண்ணும் விண்ணும் புனித நிலையில் உயர்ந்து வர உழைத்து வருகின்றான் ஆதலால் புண்ணிய மூர்த்தி என யாரும் எண்ணித் துதித்து ஏத்தி நின்றனர். அறமும் திறமும் நிறமும் பிறவும் அவருடைய மொழிகளில் ஒளிவீசி உறுதியுண்மைகளை வெளிசெய்து வந்தன.

அற முதல்வ! பூவை நிறவ!

நிருதரை நீறுக்கிப் போராடி வருகின்ற இராமனை நோக்கி மாதவரும் வானவரும் இவ்வாறு புகழ்ந்து துதித்துப் போற்றியிருக்கின்றனர். கோடிக் கணக்கான கொலைகளைச் செய்து வீர

வெறியோடு திரிகின்றவனைத் தரும நாயகா! புண்ணிய முதல்வ! கருணாகரா! என்று போற்றியிருப்பது எண்ணி யுணர வுரியது.

அறத்தை நிலை நிறுத்த அயோத்தி மன்னன் மகனாய் வந்தவன் ஆதலால் அந்தக் காரிய சாதனையின் சீரிய நிலைமையும் தலைமையும் சிந்தனை செய்து தெளிய வந்தது. இவ் வீரனது செயல் இயல்கள் யாவும் தருமங்களை விளைத்து வருகின்றன அந்த மருமங்களை அற முதல்வ! என்றதனால் அறிகின்றோம்.

மணிமுடி துறந்து இராமன் கானகம் வந்தபோதுதான் தருமம் முகம் மலர்ந்து நின்றது; அரியணையில் அமர்ந்திருந்து அயோத்தி வேந்தனாய் இவன் அரசு புரிந்திருந்தால் அரக்கர் குலம் அழிந்திராது; வெளியேறி வந்ததே தருமம் களியேற நேர்ந்தது. புனித தருமம் இனிது மகிழ இந்த மனித தெய்வம் வினை புரிந்து வருகிறது; அந்தக் கருமத்தின் விளைவையும் தருமத்தின் நிலையையும் கருதியுணர உறுதிமொழிகள் ஈண்டு உருவாகி வந்தன. அறம் தழைத்து வரவே வீரன் உழைத்து வருகிறான்

இராமன் இதுபொழுது மரகத வண்ணனாய் மருவியிருந்தாலும் பழைய பரமநிலை நீலநிறம் ஆதலால் அக்கோலம் தெரியப் பூவை நிறவ! என்றார். பூவை = ஒரு பூ. கருமை நிறமும் ஒளியும் அழகும் உடையது; காயாம்பூ என்று அது கூறப்படும்.

பூவை அஞ்சனி அல்லிபுன் காலி
காசை வச்சி காயா வாகும். (பிங்கலந்தை)

காயாவுக்கு அமைந்துள்ள ஆறு பெயர்களுள் பூவை முதன்மையாய் நின்றது. மென்மையும் தண்மையும் மேன்மையும் உணரப் பூவை நிறம் தேவதேவனுக்கு உரிமையாய் வந்தது.

“எரிமலர் சினைஇய கண்ணை! பூவை
விரிமலர் புரையும் மேனியை! மேனித்
திருஞெமர்ந் தமர்ந்த மார்பினை! மார்பில்
தெரிமணி பிறங்கும் பூணினை! மால்வரை
எரிதிரிந் தன்ன பொன்புனை உடுக்கையை!” (பரிபாடல் 1)

திருமாலின் மேனி கண் மார்பு பூண் உடைகளைக் குறித்து வந்துள்ள இவை ஈண்டு உணர வுரியன. அந்த மாயவனே இந்தத் தூயவனாய் இங்கே தோன்றியிருத்தலால் காயம் காயாம்பூ

வண்ணம் என்று காணநேர்ந்தது. பசியகோலத் திருமேனியனைப் மருவி நின்றாலும் பூர்வநிலையின் பூவை நிறம் புனைந்துகூறவந்தது.

"பூவைபோல் நிறத்தினுற்குப் புறத்தொழில் புரிந்த."
(இராமா, வேள்வி, 3)

அஸ்திர தேவதைகள் இராமனுக்கு ஏவல் செய்து நின்ற நிலையை இது குறித்துள்ளது. பூவை நிறம் இதில் மேவி வந்துள்ளமையை ஆவலோடு அறிந்து அழகு நிலையைத் தெரிகின்றோம்.

தெய்வாஸ்திரங்களும் அவற்றின் அதி தேவதைகளும் இவ் வீரன் கருதியபடியெல்லாம் உறுதியாய் ஊழியம் புரிந்து வருதலால் வெற்றி விருதுகள் யாண்டும் நீண்டு விளைந்து வந்தன. இக் கோமகனுடைய பாணங்கள் உக்கிர வீரமாய் ஓடிப் பாய்ந்து எங்கும் அரக்கர் குலத்தைக் கொன்று குவித்த கொலை நிலையை நேரே கண்டு நின்ற தேவ கணங்கள் நெஞ்சம் கலங்கி நெடுந் திகில் கொண்டு கைகால்கள் நடுங்கிச் செய்வகை தெரியாமல் தியங்கி மயங்கி உயங்கி எங்கும் ஓட நேர்ந்தனர்.

அமரர் கைகள் என
அவுணர் கால்கள் குலைய.

இராமனது போராடலைக் கண்டபோது தேவர்களும் அசுரர்களும் அஞ்சி அலமந்து அயலே பட்ட பாடுகளை இவை காட்டியுள்ளன. இம்மான வீரன் அரக்கர் குலத்தை அழித்து வரும் அடலாண்மையைப் பார்த்த பொழுது வானவர்களுடைய கைகளும் மெய்களும் கடுக நடுங்கின; தானவர்களுடைய கால்கள் போன வழிதெரியாமல் புலனழிந்து ஓடின. அமரரது நடுக்கமும், அசுரரது ஓட்டமும் அரக்கருடைய அழிவு நிலைகளைத் தெளிவாக விளக்கின. யாவரும் வெருவ அடலமர் மருவியது.

பண்டு நரசிங்கம் கொன்று தொலைத்த இரணியனைப் போன்ற பல்லாயிரம் கோடி இராக்கதர்களைக் கோசலைச் சிங்கம் அன்று வேகமாய் அழித்து ஒழித்தது ஆதலால் அந்தக் கொடிய அழிவுக் காட்சி யாவருக்கும் நெடிய திகிலை விளைத்தது. தங்கள் பகையினம் பாழாவதை எண்ணிக் களித்தாலும் படுகொலைகளின் நிலைகளைக் கண்டு தேவரும் அஞ்சி நடுங்கினர். அச்சம் யாண்டும் நீண்டு பரவ அழிசாவுகள் உச்ச நிலையில் ஓங்கி வளர்ந்தன, பாவத்திரள்கள் பாழாய் மாய்ந்து மடிந்தன.

இந்த வீர வில்லியின் அடுதொழில் ஊழிக்காலத்து உருத்திர மூர்த்தியின் உக்கிர வேகமாய் ஓங்கி நின்றது. மூண்டு வளைந்த சேனைக் கடலை வடவைத் தீபோல் வற்ற அழித்தான்; அயலே எஞ்சி நின்ற படைகள் வெளியே மீண்டு போகாதபடி சரக் கூடம் வகுத்தான். பொருகளம் முழுவதும் பேரரண் ஆயது.

அமர் அமர்ந்து நின்றது.

நேரே எதிர்ந்த படைகளை யெல்லாம் கொன்று குவித்து வென்றி விறலோடு வில் ஏந்தி இவ் வீரக் குரிசில் நிற்கும் தீர நிலையை நிருதர் அதிபதிகள் கண்டு நெடிது வியந்தார். பின்னே புடை சூழ்ந்து அடலோடு வளைந்து நிற்கின்ற அம்பின் அரண் அவர்க்கு அதிசய வியப்பையும் அச்சத்தையும் ஒருங்கே விளைத்தது. கூரிய பாணங்களால் பின்னப்பட்டு வானுற ஓங்கி வளர்ந்துள்ள அந்த வலிய இரும்பு அரணைப் பலமுறையும் கூர்ந்து நோக்கி நிலைமை யாதும் தெரியாமல் நெடுந்திகில் பூண்டனர். மாண்டவர் யாவரும் பிணமலைகளாய் யாண்டும் நீண்டு கிடக்கமாள நேர்ந்துள்ளவர் யாதும் எவ்வழியும் மீளா வகை செய்துள்ள வித்தக வில்லாண்மையை வியந்து வியந்து புகழ்ந்தார். பொல்லாத செயலினராயினும் நல்ல வீரர்கள் ஆதலால் இவ் வில் வீரனது அற்புத ஆற்றலை நினைந்து அதிசயம் மீதூர்ந்து துதி செய்ய நேர்ந்தார். உள்ளம் வியந்து தம்முள்ளே அவர் உரைத்த உரையாடல்கள் உணர்வு நலங்கள் சுரந்து உறுதிநிலைகள் பரந்து வந்தன. மூண்ட பகைவர் ஓகை கூர்ந்தது நீண்ட வாகையாயது.

தெவ்வர் வியந்தது.

புரஞ்சுடு கடவுளும் புள்ளின் பாகனும்
அரஞ்சுடு குலிசவேல் அமரர் வேந்தனும்
உரஞ்சுடு கிற்கிலர் ஒருவன் நாமுடை
வரம்சுடும்; வலிசுடும்; வாழுநாள் சுடும். (1)

ஆயிர வெள்ளம்உண்டு ஒருவர் ஆழிசூழ்
மாயிரு ஞாலத்தை மறிக்கும் வன்மையோர்
மேயின பெரும்படை அதனை ஓர் வில்லால்
ஏயெனும் மாத்திரத்து எய்து கொன்றனன். (2)

இடைபடும் படாதன இமைப்பி லோர்படை
புடைபடு வலங்கொடு விலங்கிப் போகுமால்

படைபடும் கோடிஓர் சரத்தினுல் பழிக்
கடைபடும் அரக்கர்தம் பிறவி கட்டமால் (3)

பண்டுல குய்த்தவ ஞேடும் பண்ணமை
குண்டையின் பாகனும் பிறரும் கூடினர்
அண்டர்கள் விசும்பில் நின்று ஆர்க்கின்ருருமைக்
கண்டிலப் இவன்நெடு மாயக் கள்வனல். (4)

கொன்றனன் இனிஒரு கோடி கோடிமற்று
அன்றெனின் பதுமமென் ருயின் வெள்ளமா
நின்றது நின்றினி நினைவது என்பிற
ஒன்றென நினைகென வன்னி ஓதினுன். (5)

விழித்துமோ இராவணன் முகத்து மீண்டுயாம்
பழித்துமோ நம்மைநாம் படுத்தல் அஞ்சினும்
அழித்தும்ஓர் பிறப்புரு நெறிசென் றண்மயாம்
கழித்துமிவ் யாக்கையைப் புகழைக் கண்ணுற (6)

இடுக்கினிப் பெயர்ந்துற எண்ணுவோம் எனின்
அடுத்தகூர் வாளியின் அரணம் நீங்கலோம்
எடுத்தொரு முகத்தினுல் எய்தி யாமினிக்
கொடுத்துநம் உயிரென ஒருமை கூறினுன். (7)

இளக்கரு நெடுவரை ஈர்க்கும் ஆறெலாம்
அளக்கரில் பாய்ந்தெனப் பதங்கம் ஆரழல்
விளக்கினில் வீழ்ந்தென விதிகொண் டுந்தலால்
வளைத்திரைத் தடர்த்தனர் மலையின் மேனியார். (8)

மழுஎழுத் தண்டுகோல் வலயம் நாஞ்சில்வாள்
எழுவயிற் குலிசவேல் ஈட்டி தோமரம்
கழுமுதல் கப்பணம் முதல கைப்படை
தொழுவினில் புலியனுன் உடலில் தூவினுர். (9)

எவரையும் மதியாமல் இறுமாந்து வாழ்ந்து வந்த அரிய பெரிய போர் வீரர்கள் உள்ளம் கலங்கி உறுதி குலைந்து இறுதி மூண்டது என்று முடிவு செய்து கொண்டு ஈண்டு உரையாடியுள்ளனர். இராமனது உக்கிர வீரத்தையும் வெற்றித் திறலையும் வியந்து பேசியிருப்பதில் அவரது வியப்பு நிலையும் வெருவியுள்ளவகையும் இறுதிமுடிவும் வெளியே தெளிவாய்த்தெரியவந்தன.

தங்களுடைய சாதிச் செருக்கும் தறுகண்மையும் உரைகள் தோறும் ஒளி வீசி வரினும் அவை யாவும் அடியோடு அழிய நேர்ந்தன என்று தெளிவு கூர்ந்து திகிலடைந்து நின்றனர்; அந்த நிலையை வார்த்தைகள் வார்த்துக் காட்டின: "திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், கருட வாகனனான திருமாலும், வச்சிரபாணியான இந்திரனும் நம்மை யாதும் செய்ய முடியாமல் அயல் ஒதுங்கி நின்றனர்; நீண்ட காலமாக நெடிய வர பலங்களோடு யாண்டும் நாம் தலைமை அதிபதிகளாய்த் தழைத்து வாழ்ந்தோம்; செல்வச் செழிப்பும் வீரத் தருக்கும் நம் மரபினரிடம் வீறுகொண்டு வந்தன; யாரும் அஞ்சி அடங்க அடலாண்மைகளில் மிஞ்சியிருந்த நம்மை இன்று ஒரு மனிதன் பஞ்சுபடாதபாடு படுத்தினன்; பல்லாயிரம் கோடி பேர் பாழாய் மாண்டனர்; அவனுடைய பாணங்கள் ஊழிக்கனல் போல் உயிர்களை உண்டு போகின்றன; நாம் ஏவுகிற தெய்வாஸ்திரங்கள் அவனிடம் யாதும் அணுகாமல் அயலே வளைந்து செயலிழந்து வீழ்கின்றன; வேல் வாள் முதலியன யாவும் பாழாயழிந்தன; வெள்ளக் கணக்கில் வந்தவர் துள்ளித் துடித்து மாள உல்லாச விநோதமாய் ஒரு வில்லோடு அவன் சாரிதிரிந்து வருவது வீர தேவதை போல் மேலான தேசு வீசி வருகிறது. சமர பூமியில் அமராடி வருகிற அவனை நோக்கி எவ்வழியும் இமையவர் ஏத்தி வருகிறார்; ஆகவே தேவதேவனே மனித வுருவில் இந்த வாறு வந்திருப்பதாக நாம் சிந்தனை செய்ய நேர்கின்றோம்; ஆதி முதல் நமது குலத்துக்கு நாசகாலனாயுள்ள அம் மாயவனே இப்படி மருவி வந்து நிருதரைக் கருவறுக்கின்றான் என்று நான் உறுதியாக் கருதுகின்றேன்; கடல் போல் கடுத்துவந்த படைகள் பெரும்பாலும் அழிந்து போயின; மீதமாயுள்ள நாம் மீண்டு போகாதபடி யாண்டும் சரக் கூடம் அமைத்திருக்கின்றான்; கலங்கி ஓடி இலங்கை வேந்தன் முகத்தில் விழிப்பதைவிட இங்கேயே அழிந்து போவதே மேல்; நமது உடல் வலியும் அடலாண்மையும் வர பலங்களும் கொண்டு ஆனவரையும் போராடி மான வீரமாய் மடிவதே நல்லது ஆதலால் ஒல்லையில் யாவரும் ஒருங்கே திரண்டு ஒருமுகமாய் ஊக்கி எழுங்கள்'' என இன்னவாறு வன்னி கூறவே தலைவர்கள் எல்லாரும் உன்னி விரைந்தனர். உரிய சேனைகளும் உருத்து மூண்டு கடுத்து எழுந்தன.

தங்கள் இனங்கள் அழிந்து போயுள்ளதை நினைந்து தளபதிகள் அனைவரும் வருந்தி யுளைந்தனர். காட்டுத் தீ செத்தைகளை எரித்து ஒழித்தது போல் இராம சரங்கள் அரக்கர்களை அழித்திருத்தலால் அந்த அழிவு நிலை எல்லாருக்கும் கழிபெருந் துயரமாய் விழிதெரிய நின்றது. அவல அழிவுகள் கவலைகளை விளைத்தன.

வரம் சுடும்; வலிசுடும்; வாழும் நாள் சுடும்.

இராமபாணம் சுட்டு எரித்திருக்கும் நிலையை இங்ஙனம் சுட்டி உரைத்திருக்கின்றனர். அம்பின் அடுதிறலையும் அரக்கரின் அழிவு நிலைகளையும் சுடும் என்ற குறிப்பினல் கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம். கடினமான தவங்கள் புரிந்து அரக்கர் அடைந்திருந்த வரபலங்களும், தேக பலங்களும், ஆயுத பலங்களும், அடியோடு நாசமாய் அழிந்து போயுள்ளமையை அவருடைய வாய்மொழிகள் தெளிவாக்கி இங்கே நன்கு வெளிப்படுத்தின.

இறுதிப் போர்.

வன்னி முதலிய அதிபதிகள் நிருதரது அழிவு நிலைகளை நினைந்து இனைந்து நெஞ்சம் கொதித்து ஒருமுகமாய்ப் போராட உன்னி மூண்டு உருத்து நீண்டனர். அவருடைய சேனைகளும் அடலாண்மைகளோடு ஆர்த்து வந்தன. எழு மழு தண்டு அம்பு வேல் வாள் வல்லையம் முதலிய பொல்லாத கொலைக் கருவிகளை நான்கு புறமும் சூழ்ந்து நின்று கொண்டு இராமனைக் கொன்று தொலைக்க வேண்டும் என்று கோப வெறி மண்டிக் கொடுமையாக வீசி எறிந்து யாவரும் நேரே கடுமையாய்ப் போராடினர்.

தொழுவினில் புலி அனன் உடலில் தூவினர்.

இராமன் நின்ற நிலையையும் இராக்கதர் செய்த செயல்களையும் இங்ஙனம் குறித்துள்ளார். தொழு = மாடுகளை அடைக்கும் இடம். மாட்டுத் தொழுவில் புலி புகுந்தது போல் இராமன் அரக்கர் இடையே புகுந்து நிற்கிறான். மாடுகள் வெளியேறிப் போகாதபடி நாலு புறமும் சுவர்கள் இருத்தல் போல் அங்கே சரக்கூடம் அமைந்து நின்றது ஆதலால் உள்ளிடம் தொழு என நின்றது. அரக்கர் எவ்வகையிலும் தப்பி அயலே ஓடிப் போக முடியாதவாறு அம்பின் அரண் அடல்கொண்டுள்ளமையால் தொழுவுள் அகப்பட்ட மாடுகள் போல் அவர் கூடி நின்றனர்.

இராமன் புலி என்றதனால் இக்கோமகனுடைய அடலாண்மையும் வீரத்திறலும் விளங்கி நின்றன. மாடுகள் என்ற குறிப்பால் அரக்கருடைய பாடுகளும் தெரிய வந்தன. பருத்த உடம்பும் முரட்டுத்தனமும் மூர்க்கமும் கூரிய வேல்கள் முதலிய ஆயுதங்களும் உடையராயினும் இராமன் எதிரே அஞ்சி அழிய நேர்ந்துள்ளனர். அவ்வுண்மை ஈண்டு நுண்மையா யுணரவந்தது.

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். (குறள் 599)

கூர்மையான கொம்பும் பேருடம்பும் உடையதாயினும் யானை புலியைக் கண்டால் அஞ்சும் எனத் தேவர் இங்ஙனம் கூறியிருக்கிறார். உள்ளத்தில் ஊக்கமும் வீரமும் உடையவன் உருவத்தில் சிறியனாயினும் எவரையும் வெல்ல வல்லவனாய் வீறோடுவிளங்குவான் என்பது இங்கே நன்கு விளங்கி நின்றது.

ஒரு சிறு மனிதன் என எளிதாக எண்ணி வந்த இராக்கத சேனைகள் இராமன் எதிரே நாசமடைந்து மடிந்தன. எஞ்சி நின்ற தளபதிகள் நெஞ்சத் துணிவோடு நீண்டுவளைந்து மூண்டு பொருதாலும் இந்த அஞ்சன வண்ணனுடைய அடலாண்மையைக் காணுந்தோறும் கடுந்திகிலும் நெடும்பயமும் கண்டு கலங்கி வருகின்றனர். வீர வேகம் அவரை வெருவச் செய்தது.

உக்கிர வீர பராக்கிரமமாய் இராமன் புரிந்து வருகிற அற்புதப் போரை நோக்கி அதிசய மடைந்து அலமந்து வந்துள்ளமையை அவருடைய வாய்மொழிகள் இடங்கள்தோறும் தெளிவாக்கி யுள்ளன. அஞ்சா நெஞ்சினர் அஞ்சி அலமரலாயினர்.

இவன் நெடு மாயக் கள்வன்.

என இராமனை இவ்வாறு நிருதர் கருதியிருத்தலால் இவனது அதிசய ஆண்மையும் அவரது அச்சமும் அவலமும் உச்சமா அறிய வந்தன. இன்னவாறு வியந்து மயங்கி வெருண்டு நின்றவர் பின்னர் வெகுண்டு திரண்டு ஒருங்கே மூண்டு பொருதார்.

நாம் பொன்றி மடிந்தாலும் இவனைக் கொன்று தொலைத்து விட வேண்டும் என்னும் கொதிப்போடு அவர் கோர யுத்தம் புரியவே இவ் வீரக் குரிசில் வில்லாடலை எல்லையில்லா வகையில் எதிரே விளைத்தான். காந்தர்ப்பம் என்னும் தெய்வீக அஸ்திரத்தை

மந்திர முறையோடு தொடுத்தான். அது வடவைத் தீபோல் பல வடிவங்கள் கொண்டு பாய்ந்து யாண்டும் கொடிய கொலை களை விளைத்து நெடிய தலைகளை மலைகளாக் குவித்தது. முன்னே மூண்டவர் மாண்டு மடியுந்தோறும் பின்னே நீண்டு நின்றவர் நேரே எதிரேறி நெடும்போர் புரிந்தனர். அரிய வர பலங்களை யுடைய பெரிய போர் வீரர்கள் யாவரும் ஒருங்கே சேர்ந்து மருங்கு எங்கும் மூண்டு முனைந்து ஊக்கி அமராடினர்.

எல்லாரும் இராவணனே அனையார்
வெல்லா வுலகில்லவர் மெய் வலியார்
தொல்லார்படை வந்து தொடர்ந்தது என
நல்லானும் உருத்தெதிர் நண்ணினனால். (1)

ஊழிக்கனல் போல்பவர் உந்தின போர்
ஆழிப்படை அம்பொடு மற்றகலப்
பாழிக்கடை நாள்விடு பன்மழை போல்
வாழிச்சுடர் வாளி வழங்கினனால். (2)

சூரோடு தொடர்ந்த சுடர்க்கணை தான்
தாரோடு அகலங்கள் தடிந்திடலும்
தேரோடு மடிந்தனர் செங்கதிரோன்
ஊரோடு மடிந்தனன் ஒத்துரவோர். (3)

நிலைகோடலின் வென்றி அரக்கரை நேர்
கொலைகோடலின் மன்குறி கோளுறு மேல்
சிலைகோடிய தோறு சிரத்திரள் வன்
மலைகோடியின் மேலும் மறிந்திடு மால். (4)

இங்கே யுளன் இங்குளன் இங்குளன்என்று
அங்கேயுணர் கின்ற அலந்தலை வாய்
வெங்கோப நெடும்படை வெஞ்சரம் விட்டு
எங்கேனும் வழங்குவர் ஏகுவரால். (5)

ஒருவன்என உன்னும் உணர்ச்சி யிலார்
இரவன்றிது ஓர் பகல்என் பர்களால்
கரவன்றிது இராமர் கணக்கில ரால்
பரவை மணலிற் பலர்என்பர்களால். (6)

தேர்மேலுளர் மாவொடு செந்தறுகட்
கார்மேலுளர் மாகடல் மேலுளரிப்

பார்மேலுளர் உம்பர் பரந்துளரால்
போர்மேலர் இராமர் புகுந்தடர்வார். (7)

என்னும்படி எங்கணும் எங்கணுமாய்த்
துன்னும்சுழ லுந்திரி யும்சுடரும்
பின்னும் அருகும் உடலும் பிரியான்
மன்னன்மகன் வீரர் மயங்கினரால். (8)

முடிவில் எஞ்சி நின்ற படைகள் மூண்டு போராடியுள்ள நிலைகளை இங்கே நேரே கண்டு நெஞ்சம் வியந்து நிற்கின்றோம். ஆங்காரமும் கோபமும் ஓங்கி அரக்கர் அதிபதிகள் பாங்கெங்கும் சூழ்ந்து பலவகை ஆயுதங்களையும் வாரி வீசிச் சீறி ஏறிப் பொருதிருக்கின்றனர். வீரோடு வெகுண்டு வருந்தோறும் தலைகள் உடைந்து உடல்கள் சிதைந்து உருண்டு விழுகின்றனர். எறிவந்த தேர்களோடு நீறாய் நிலத்தில் வீழ்ந்து மாறாய் மடிந்து குவிவது மாயாசாலமாய் மருவி நின்றது. இராம பாணங்கள் யாண்டும் மூண்டு பாய்ந்தன ஆதலால் நீண்டு நின்ற நிலைகள் தோறும் மாண்டு மடிந்தனர். சீறி எழுவதும் செத்து விழுவதும் மாறி வருவதும் நிருதர் திரள்கள் எங்கணும் பெருகி நின்றன.

அம்புகளை அதிவேகமாய்த் தொடுத்து யாண்டும் சாரி திரிந்து வந்தமையால் எங்கும் இராமன் தோன்றி விளங்கினான். தாங்கள் பார்த்த இடமெல்லாம் இராமனை நேரே காணவே போராடின யாவரும் பல்லாயிரம் இராமர்கள் போந்து பொருகின்றார் என்று மறுகி மயங்கினார். வீரச் சிலையோடு எங்கும் இராமன் எதிரே தோன்றவே எல்லாரும் நெஞ்சம் கலங்கி நெடுந்திகிலடைந்து நேரே கூவி நெடிது தாவிப் போராடலானார்.

இங்கே யுளன் இங்கு உளன் இங்கு உளன்.

என்றது நிருதர் அங்கங்கே கூவி அலமந்து பொருத நிலை தெரிய வந்தது. தம்மோடு எதிரியாய் மூண்டு பொருகின்றவன் ஒருவன் அல்லன்; பல்லாயிரம் கோடி இராமர்களே என்று நிருதர் எல்லாரும் அல்லல் உழந்திருத்தலால் இவ் வில் வீரனது வித்தகத்திறலையும் வினையாண்மையையும் வேகத்தின் சாகசத்தையும் மோகத்தோடு உணர்ந்து வியந்து கொள்கிறோம். யாண்டும் அதிவேகமாய்ச் சாரிதிரிந்து கோதண்ட வீரன் கொன்று

குவித்து வருவதை ஒன்றும் உணர முடியாமல் யாவரும் பொன்றி மடிந்தனர். மூண்டு போராட வந்தவர் மாண்டு மடிந்த நிலை யாண்டும் மாயமயக்கமாய்நீண்டு மருமசாலமாய்நிலவியது.

தேர்மேலும் யானை மேலும் குதிரை மேலும் பார்மேலும் நின்று போர்மேல் மூண்ட நால்வகைச் சேனைகளும் நாசம் அடைந்தன. கடல் போல் கலித்து வந்த படைகள் அடலோடு இடங்கள் தோறும் தொடர்ந்து போராடின. பொருமுகம் புகுந்தன யாவும் ஒரு முகமும் காணுமல் உயிர்கள் அழிந்து ஒழிந்தன; உடல்கள் யாண்டும் மலைகளாய் நீண்டு நிலைகள் ஓங்கி நின்றன.

அமரின் அதிசயம்;

ஒரு வில்லே கையில் உள்ளது; வேறு யாரும் துணையில்லை; எல்லை கடந்த படைகள் வெள்ளமாய் விரிந்து வந்தன; தன்னந்தனியனாய் நின்ற இராமன் போரில் ஏறவே அவை யாவும் நீருய் மாய்ந்து நெடிது குவிந்தன. இந்தச் சுத்த வீரன் செய்த போரும், நிருதர் திரள்கள் செத்து விழுந்த சீரும் அதிசய விசித்திரங்களாய்த் தோன்றின. மாயமே என யாவரும் மயங்கினர்.

காயிருஞ் சிலைஒன்றேனும் கணைப்புட்டில் ஒன்ற தேனும்
தூயெழு பகழிமாரி மழைத்துளித் தொகையின் மேல
ஆயிரம் கைகள் செய்த செய்தன அமலன் செங்கை
ஆயிரம் கையும் கூடி இரண்டுகை ஆய வன்றே. (1)

கண்ணுதல் மூர்த்தி தானும் நான்முகக் கடவுள் தானும்
எண்ணுதும் தொடர எய்த கோல்என எண்ணல் உற்ருர்
பண்ணையால் வகுக்க மாட்டார் தனித்தனிப் பார்க்கலுற்ருர்
ஒண்ணுமோ கணிக்கஎன்பார்உவகையின் உயர்ந்ததோளார்.

வெள்ளம் ஈரைந்துநூறே விடுகணை அவற்றின் மெய்யே
உள்ளவாறுளவாம்என்றே உரைக்கணக்கு உணர்துமேனும்
கொள்ளையோர் உருவுஐநூறு கொண்டன பலவால்கொற்ற
வள்ளலே வழங்கி ஞனே என்றனர் மற்றை வானோர். (3)

கொடைக்கெலாம்கொடிகட்கெல்லாம்கொண்டனகுவிந்த கொற்றப்
படைக்கெலாம் பகழிக்கெல்லாம் யானைதேர் பரிமா வாதிக்
கடைக்கெலாம் துரந்தவாளிக் கணித்ததற்கு அளவைகாட்டி
அடைக்கலாம் அறிஞர்யாரே என்றனர் முனிவர் அப்பால்.(4)

இராமபிரான் போராடியுள்ள நிலையும் அம்புகளைத் தொடுத்திருக்கும் திறலும் உம்பர் எவரும் புகழ்ந்து போற்ற இங்ஙனம் உயர்ந்திருக்கின்றன. இரண்டு கைகளையுடைய மனிதன் பல்லாயிரம் கைகளுடைய பரமன் போல் வில்லாடியிருக்கிறான். எய்த அம்புகள் எவ்வழியும் பெய்யும் மாரிபோல் பெருகிவிரிந்து வெய்ய நிருதரை வேரோடு அழித்து நேரே ஒழித்திருக்கின்றன.

ஆயிரம் வெள்ளம் படைகள் வந்துள்ளன; யானை குதிரை காலாள் முதலிய ஒவ்வொரு உடலையும் பலநூறு பாணங்கள் ஊடுருவி ஓடியிருக்கின்றன. ஆகவே பல்லாயிர வெள்ளங்களாய்ப் பாணங்கள் வெளியே துள்ளி வந்துள்ளமை தெரிய வந்தது. இருகைகளையுடைய ஒரு மனிதன் இவ்வாறு எய்திருப்பது அதிசய மாயம் என யாவரும் துதி செய்ய நேர்ந்தனர். தேவரும் தேவதேவரும் இராம சரங்களை வியந்து திகைத்திருப்பது அவற்றின் திவ்விய மகிமைகளைத் தெளிவாவிளக்கிநின்றது.

இத்தகைய அற்புதப் போரையும் அதிசய அம்புகளையும் என்றும் யாண்டும் கண்டதில்லை என்று கண்ணுதல் கடவுளே எண்ணி வியந்திருத்தலால் கோதண்ட வீரனுடைய வில்லாடலின் எல்லைகளை யார் அளந்து சொல்ல வல்லார்? இந்திரசாலமாய் மாயா விநோதங்கள் யாதும் செய்யவில்லை; நேர்மையாய் நின்று வில்லாடலையே கூர்மையாய்ச் செய்திருக்கிறான். அந்தக் கோதண்டத்தின் வீர வேலை மூதண்டங்களையும் கலக்கியிருக்கிறது. கொடிய நிருதரோடு பொருததிறல் நெடிய வியப்பாயது.

சமர பூமியில் சாரிதிரிந்து இவ் வீரக்குரிசில் அமராடியுள்ள அதிசய நிலையை அமரர் யாவரும் வியந்து துதி செய்துள்ளமையால் அந்தப் போரின் கலை பொருவரு நிலையில் பெருகி விரிந்து ஒருவரும் புரியாத ஒளியோடு உலாவியிருப்பதை உணர்ந்து கொள்கிறோம். அற்புத வீரம் கற்பனை கடந்து நின்றது.

ஒரு மனிதன் இவ்வாறு செய்ய முடியுமா? ஒருகை வில்லைப் பிடித்திருக்கிறது; ஒரு கை அம்பைத் தொடுத்து வருகிறது; இந்த இரண்டு கைகளும் செய்த வேலையில் ஆயிரம் வெள்ளம் அரக்கர் சேனைகள் அடியோடு நாசம் அடைந்திருக்கின்றன.

மூலபலப் படையில் சேர்ந்து வந்துள்ள நிருதர் யாவரும் பொரு திறல்களில் அதிசய நிலையினர்; ஒரு அரக்கன் ஆயிரம் அமரர் களை எளிதே வெல்ல வல்லவன்; அத்தகைய பேராற்றலுடைய அரக்கர்கள் பல்லாயிரம் கோடிபேர் கடல்போல் திரண்டு அடலோடு ஆர்த்து வந்துள்ளனர்; யாண்டும் வெகுண்டு வீர வெறியோடு மூண்டு கோரமாய்ப் போராடினர்; போரில் ஏறி வந்த யாவரும் நீருய் மாய்ந்து நிலத்தில் குவிந்தனர்; பிண மலைகளும் இரத்த வெள்ளங்களும் யாண்டும் பெருகி நீண்டு நின்றன.

பொல்லாத அரக்கர் குலங்கள் இவ்வாறு பொன்றி முடிய இவ்வென்றி வீரன் வில்லாடல் புரிந்தது எல்லாருக்கும் எல்லை மீறிய வியப்பை விளைத்தது. அவ் வியப்புக்கு நயப்பாய் ஓர் விளக்கம் வந்தது. குறிப்புகள் கூர்ந்து சிந்திக்க நேர்ந்தன.

ஆயிரம் கையும் கூடி இரண்டு கை ஆய.

இராமன் ஒரு மனிதன்; இரண்டு கைகளை யுடையவன்; பல்லாயிரம் பகழிகளை ஒல்லையில் தொடுத்து எல்லையில்லாத அரக்கர்களை அழித்திருக்கிறுனே! என்று உள்ளம் வியப்படைந்து நிற்பவர்க்கு உண்மை நிலையை உணர்த்த இவ்வாசகம் ஈண்டு உருவாகி வந்துள்ளது. கைசெய்தவேலைமெய்தெளியச் செய்தது.

திருமால் எல்லாம் வல்லவன்; அதிசய ஆற்றல்கள் உடையவன்; பல்லாயிரம் அவுணர்களையும் ஒருங்கே ஒல்லையில் கொல்ல வல்லவன் ஆதலால் ஆயிரம் தோளன் என வானேர் அவனை வாழ்த்த நேர்ந்தனர். தோள்களின் அளவுகள் துதிகளாயின.

மாயிருங் குன்றம் ஒன்று மத்தாக
　　மாசுணம் அதனெடும் அளவி
பாயிரும் பௌவம் பகடுவிண்டலறப்
　　படுதிரை விசும்பிடைப் படர
சேயிரு விசும்பும் திங்களும் சுடரும்
　　தேவரும் தாமுடன் திகைப்ப
ஆயிரம் தோளால் அலைகடல் கடைந்தான்
　　அரங்கமா நகரமர்ந் தானே. (1)

ஆயிரம் குன்றம் சென்றுதொக் கனைய
　　அடல்புரை எழில்திகழ் திரள்தோள்

ஆயிரம் துணிய அடல்மழுப் பற்றி
மற்றவன் அகல்விசும் பணைய
ஆயிரம் பெயரால் அமரர்சென் றிறைஞ்ச
அறிதுயில் அலைகடல் நடுவே
ஆயிரம் சுடர்வாய் அரவணைத் துயின்ருன்
அரங்கமா நகர் அமர்ந்தானே. (பெரிய திருமொழி)

திருமங்கையாழ்வார் திருமாலை இவ்வாறு துதித்திருக்கிருர். ஆயிரம் தோள், ஆயிரம் பெயர் என்றது எல்லையில்லாத உருவும் பேரும் உடையவன் என இறைவனை வாழ்த்தியபடியாம். அதிசயமான அற்புத நிலையினன்; எவ்வகையிலும் யாரும் யாதும் தெரிய முடியாத அரிய பெரியவன் என்பதைக் கைகால் முதலிய அவயவ அளவுகளால் மேலோர் காட்டியருளினர்.

"இருகை மா அல்!
முக்கை முனிவ! நாற்கை அண்ணல்!
ஐங்கைம் மைந்த அறுகை நெடுவேள்
எழுகை யாள எண்கை ஏந்தல்
ஒன்பதிற்றுத் தடக்கை மன்பே ராள
பதிற்றுக்கை மதவலி நூற்றுக்கை ஆற்றல்
ஆயிரம் விரித்தகைம் மாய மள்ள!
பதிஞ யிரம்கை முதுமொழி முதல்வ!
நூரு யிரம்கை ஆறறி கடவுள்
அனைத்தும் அல்ல பலஅடுக்கு ஆம்பல்
இனைத்தென எண்வரம்பு அறியா யாக்கையை.'
(பரிபாடல், 3)

திருமாலை இது குறித்திருத்தலைக் கூர்ந்து நோக்குக. கடுவன் இளஎயினனர் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் பாடியிருக்கிருர். பாடலின் பொருள் நயங்கள் நாடியுணர வுரியன.

ஆயிரம், பதிஞயிரம், நூருயிரம் என்னும் கைகளை யுடையவன்; யாரும் வரப்பு காண முடியாத உருவினன் எனத் துதித்திருப்பது அவனது பெரு மகிமையை உணர்ந்து உருகி வழிபட வந்தது. எல்லாம் செய்ய வல்லவன் என்பது தெரிய நின்றது.

இவ்வாறு ஆயிரம் ஆயிரமாய் விரிந்துள்ள கைகளைக் கொண்டு பண்டு திருமால் அசுரர்களைப் பொருதழித்தது போல்

இரண்டு கைகளால் இராமன் இங்கே மூலபலங்களைக் கொன்று முடித்தான் என்பார் ஆயிரம் கைகள் செய்த செய்தன அமலன் செங்கை என்றார். பொருகையில் இருகை செய்த செயலை இவ் வகையில் செவ்வையாக விளக்கினார். ஆயிரம் என்றது பத்து நூறு என்ற எண்ணலளவையில் அமையாமல் எல்லையின்மை யை எண்ண வந்தது. அளவிடலரியவன் அளவாய் நின்றான்.

பல்லாயிரம் கைகளையுடைய திருமாலே இருகைகளோடு இராமனாய் ஈங்கு வந்துள்ளான்; ஆகவே புதுமையான அந்த இரண்டு கைகள் பழமையான அனந்தகோடிகைகள் செய்யும் அதிசய வேலையைச் செய்தது என்று துதிசெய்து நின்றார்.

இராமனை இங்கே அமலன் என்றது நிலைமை நீர்மை தலை மைகளைக் கருதியுணர வந்தது. மலம் = அழுக்கு. அது இல்லாத வன் அமலன் என்க. மலரகிதன் எனக் கடவுளைக் குறித்து வட மொழியாளர் வழங்கிவருவது ஈண்டு உணர்ந்துகொள்ளவுரியது.

பரம பரிசுத்தன் என இறைவனைச் சுட்டி வரும் பெயரை இங்கே இராமனுக்கு இட்டிருக்கிறார். பலகோடி அரக்கர்களைக் கொலை செய்து வருகிறவனை அமலன் என்று குறித்தது நிலைமை களை நேரே ஓர்ந்து கூர்மையாய் ஆய்ந்து கொள்ள வந்தது.

பாபக் குப்பைகளை அழித்து ஒழித்துப் பரிசுத்த வாழ்வுகள் உலகில் தழைத்து வர உழைத்து வருகிறான் ஆதலால் அந்த உரி மையும் உண்மையும் தெரிய அருமைப் பெயர் மருமமாய் மருவி நின்றது. புண்ணியங்கள் யாண்டும் தலையெடுத்து வரும்படி பாவிகளை ஈண்டு அழிக்கின்றான்; அவ்வாறு அழிப்பவன் புண் ணிய மூர்த்தியே என்பதை எண்ணியுணரப் புனித நாமம் இனி தே நண்ணி வந்தது. தூயவனது மாய நிலை நேயமாய் நின்றது.

ஆயிரம் கைகளையுடைய அந்த அமலனே மாயிரு ஞாலம் உய்ய இரண்டு கைகளை யுடையனாய் ஈண்டு வந்திருக்கிறான்; ஆயினும் அவன் செய்ய முடியாததை இவன் செய்து வருகிறான்.

அந்த ஆதி மூலப் பெருமானுக்கு இராவணன் அஞ்ச வில்லை; அவனை எளிதாகவே எண்ணி இகழ்ந்து வந்தான். ஆழி யான் ஆழியான் எனக் கேலி செய்வது இலங்கை வேந்தன் வழக்கம். சக்கரபாணியான திருமால் நிருதர்பதியின் உக்கிர

வீர நிலைக்கு அஞ்சிக் கடலில் ஒளிந்துள்ளான் என்பது அதன் பொருள். இங்ஙனம் மாயனை மதியாமல் யாண்டும் மதத்து செருமாந்து நின்றவன் இராமனை வியந்து மதிக்க நேர்ந்தான்.

* "மாயிரு ஞாலம் முற்றும் வயிற்றிடை வைத்த மாயன்
ஆயிரம் தோளும் அன்னான் விரல் ஒன்றின் ஆற்றல் ஆற்ரு"

மாயனையும் இராமனையும் நிறைதூக்கிக் காட்டியிருக்கும் இது ஈண்டு நினைந்து சிந்திக்கத்தக்கது. முதல் நாள் இராமனோடு போராடித் தோல்வியடைந்து மீண்டு வந்து அரண்மனை புகுந்து வருந்தியிருந்த இராவணன் மாலியவானிடம் இவ்வாறு கூறியிருக்கிருன். இராமனது வில்லாடலையும் உக்கிர வீர நிலையையும் நேரே நன்கு அறிந்தவன் ஆதலால் இங்ஙனம் உள்ளம் திறந்து உண்மையை ஒண்மையாய் உரைக்க நேர்ந்தான்.

மாயன் ஆயிரம் தோளும்
இராமன் விரல் ஒன்றின் ஆற்றல் ஆற்ரு.

என்றது எவ்வளவு ஏற்றம்! மாயனுடைய ஆயிரம் தோள்களுக்கு அஞ்சாதவன் இராமனுடைய இரண்டு தோள்களுக்கு அஞ்சியிருக்கிருன். பல்லாயிரம் சேனைகளும் பாழாகித் தானும் அல்லல் அடைந்து அலமந்து மறுக அம்புகள் தொடுத்தது வலது கை விரல் ஆகலால் அதன் விறலை வியந்து புகழ்ந்தான். இராமன் கையிலுள்ள ஒரு விரலுக்கு மாயனுடைய ஆயிரம் கைகளும் ஈடாகா என்றது அதனல் ஈடழிந்து இழிந்துள்ளவனது பாடு தெரிய வந்தது. அனுபவ அறிவு அதிசயமாய்த் துதி செய்தது.

அந்த விரல் செய்த வேலையால் தனது விறலும் வீரமும் குன்றி அரிய வர பலங்கள் யாவும் பொன்றி உயிர் தப்பி வந்துள்ளான்; அந்த வரவில் நன்றியறிவோடு ஒன்றிய நிலையை உலகம் என்றும் தெளிவாக அறிய ஒளியாமல் உரைத்தான்.

இராமனுடைய விரல் அசைய அம்புகள் விசையாய் வெளியேறி இராவணனைச் சித்திரவதை செய்துள்ளன; அந்த உண்மையை இங்கே உய்த்துணர்ந்து கொள்கிருேம். இராமன் என்று பேரை நேரே கூருமல் அன்னான் என்று சுட்டிச் சொன்னது அரிய பல வுறுதி நிலைகளை உறுதியாக் கருதியுணர வந்தது.

* முன்நூல் பக்கம் 3966, வரி 9 பார்க்க.

மனிதன் என முன்னம் எளிதாக எண்ணி இகழ்ந்திருந்தான்; பின்னர் அவனது அரிய திறலை அறிந்தான்; அறியவே அன்னன் எனப் பண்டறி சுட்டில் சொன்னன். விபீடணன் மாலியவான் முதலானோர் முன்னம் வியந்து புகழ்ந்து சொன்ன அம் மன்னவன் என்பான் அன்னவன் என்றான். தேவ தேவரையும் மதியாதவன் தனக்கு ஆவி நல்கி விடுத்த எதிரியை இவ்வாறு மதித்துத் துதித்திருக்கிறான். துதிமொழி வீரப்பரிசாய் ஒளி வீசியுள்ளது.

மூல மூர்த்தி ஆற்ற முடியாததை இராமமூர்த்தி ஆற்றி வருகிறது; அந்த ஆற்றலை அரக்கர் முதல் யாவரும் பார்த்து அதிசயித்து வருகின்றார். கண்ணுதல் மூர்த்தியும் கமலநாதனும் அவனுடைய பொருதிறல்களையும் பாணங்களின் அதிசய நிலைகளையும் வியந்துள்ளமையால் அமரின் அற்புதங்களை நுட்பமா அறிந்து கொள்கிறோம். வெற்றி வீரன் வேலை வியப்பாயது.

கொற்ற வள்ளல்.

என இராமனை இங்கே இங்ஙனம் குறித்தது வெற்றி நிலையையும் விளைவையும் உய்த்துணர வந்தது. ஆயிர வெள்ளம் சேனைகள் அழிந்து ஒழிந்தன; அந்த அழிவினால் உலகத்துக்கு நல்ல ஆக்கங்கள் பொங்கி எங்கும் நலங்கள் பல விளைந்தன.

பொல்லாத புலைகளைப் போக்கி நல்ல நிலைகளை ஆக்கி ஞாலம் மேலான மேன்மைகளை அடையத் தனது வெற்றித் திறத்தால் இராமன் அருள் புரிந்துள்ளமையால் அந்த அரிய கொற்றமும் பெரிய வண்மையும் ஈண்டு உரிமையோடு தெரிய வந்தன. வீர வில்லியாய் விளங்கி வந்தவன் வெற்றி வள்ளலாய்த் துலங்கி நின்றான். உலகம் நலமுற உறுதிநலங்களை உதவியருளினன்.

படைகள் யாவும் மாண்டு மடிந்தபின் எஞ்சி நின்ற தலைவர்களும் தெய்வாஸ்திரங்களைத் தொடுத்து மூண்டு போராடினர். நூறுகோடியர் என நீண்டு வந்த அவர் யாவரும் இவ் வீரனது வீரப் பகழிகளால் விரைந்து வெந்து நீறாய் அவிந்தனர்.

பூமி தேவி பொலிவடைந்தது

சீவ கோடிகளுக்கு யாண்டும் துயரங்களே செய்து வந்த பாவத்திரள்கள் ஒருங்கே பாழாயழிந்தன என்று உள்ளம் உவந்து பூமிதேவி ஒளிமிகுந்து உயர்ந்து விளங்கினள். மலைகடல்

கள் முதலாக யாவும் பொறுத்து எவர்க்கும் அருள் புரிந்து வரும் நில மடந்தைக்குப் பாவச்சுமைகள் கொடிய பாரங்களா யிருந்தன; அவை அடியோடு அழியவே பெருமகிழ்ச்சியடைந்து பெருகி எழுந்தாள். பூதலம் மீதலம் ஆயது; ஆனதை அறிவித்தது.

ஆயிரம் வெள்ளத்தோரும் அடுகளத்து அவிந்து வீழ்ந்தார்
மாயிரு ஞாலத்தாள் தன் வன்பொறைப் பாரம் நீங்கி
மீயுயர்ந்து எழுந்தாள் அன்றே விங்கொலி வேலை நின்றும்
போயொருங்கு அண்டத்தோடும் கோடியோசனைகள் பொங்கி.

மூலபலச் சேனைகள் முழுதும் அழிந்து பட்டபொழுது உலகமாதா உவந்துள்ள நிலையை இதனால் உணர்ந்து கொள்கிறோம். புண்ணியங்களையே எவ்வழியும் விழைந்து வருபவள்; பாவங்களை யாண்டும் அருவருத்து வெறுப்பவள்; அரக்கர் புரிந்து வருகிற பாவச் செயல்களைப் பொறுக்க முடியாமல் மறுகியிருந்தாள்; நீண்ட காலமாக நெஞ்சு நொந்து வந்தாள் ஆகலால் அன்று மாண்ட சேனைகளைக் கண்டதும் மகிழ்ச்சி மீக்கூர்ந்தாள்; பெரிய சுமையைக் கடுமையாக நெடிது சுமந்து நிலைதளர்ந்து நின்ற ஒரு தருணமங்கை அந்தப் பாரத்தை ஒரு கருணையாளன் வந்து இறக்கி வைத்து ஆறுதல் புரிந்தால் எவ்வளவு ஆனந்தம் அடைவாளோ அவ்வாறே அன்று இராமபிரான் இருதளை நீருக்கி ஒழித்த பொழுது பூமிதேவி பேரானந்தம் அடைந்தாள். இன்பநிலை முன்பிருந்த துன்பநிலையைத் துலக்கியது.

வன்பொறைப் பாரம் நீங்கி ஞாலத்தாள் எழுந்தாள்.

நிலமகள் தலை நிமிர்ந்து நிலையுயர்ந்து நிற்கும் நிலையை விழி தெரிய இது விளக்கியுள்ளது. நெடுங்காலம் அவலமாய்த் தாழ்ந்திருந்தவள் கவலை நீங்கவே களித்து எழுந்தாள். வன்பொறைப் பாரம் என்றது அந்தப் பாவச் சுமையின் கனத்தையும் இனத்தையும் கருதி யுண்ர வந்தது. இரக்கம் இல்லாத நெஞ்சராய் யாரும் உயிர்களுக்கு இடர் செய்து வந்தமையால் அரக்கர் பாவம் அடுக்கடுக்காய்ப் பெருகி நீண்டது. கொடுமையான அந் நெடிய சுமை கடுமையாய் நின்றது; பல்லாயிரம் கோடி பாவகாரிகள் அன்று மாண்டு மடிந்தனர்; மடியவே பாபச் சுமைநீங்கியது; நீங்கவே பார்மகள் உள்ளம் உவந்து ஓங்கினாள்.

கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
இல்லை நிலக்குப் பொறை. (குறள், 570)

கொடுங்கோல் அரசன் கல்லாத தீய கூட்டங்களையே தனக்குத் துணையாக் கூட்டிக் கொள்வன்; அந்தப் பொல்லாத கூட்டம் போல் பூமிக்குப் பாரம் வேறு யாதும் இல்லை எனத் தேவர் இவ்வாறு தீமைச் சுமைகளைத் தெளிவாக் கூறியுள்ளார்.

பாவம் படிந்த அளவு பார் இழிந்து படுகிறது; புண்ணியம் பொருந்திய பொழுது அது உயர்ந்து திகழ்கிறது. பாவிகள் இருக்கும் இடம் நரகம் ஆகிறது; புண்ணியர்கள் உள்ள நிலம் சுவர்க்கம் ஆகின்றது. இழிவும் உயர்வும் தெளிவாய் நின்றன.

தீவினைகளைச் செய்கின்ற பாவிகள் தமக்கு அழிதுயரங்களை விளைத்துக் கொள்வதோடு பூமிக்கும் இழிபழிகளைத் தருதலால் அவர் அடியோடு அழிந்து ஒழிவதையே பூமிதேவி விழைந்து நிற்கின்றாள். புண்ணியத்தாய்நிலை எண்ணியுணரவந்தது.

பாவம் மனிதனைப் பாழாக்குகின்றது; பாவி என அவன் இழிந்து படுகிறான்; ஒழிந்து தொலையானா என்று வையம் அவனை வைது வெறுக்கிறது; தன் சீவனுக்கே நாசத்தை விளைத்துக் கொள்வதால் மோசமான மூடனாய் அவன் நீசம் அடைகின்றான்.

"There is no fool equal to the sinner, who every moment ventures his soul." [Tillotson]

"பாவிக்கு நிகரான மூடன் யாண்டும் இல்லை; ஒவ்வொரு நிமிடமும் தன் உயிரைத் துயரா அவன் துணிக்கின்றான்" என்னும் இந்த ஆங்கில வாசகம் ஈங்கு அறிய வுரியது. பாவம் படிந்த பொழுது உயிர் ஒளி இழந்து துயராய் இழிவுறுகின்றது.

"He that hath slight thought of sin never had great thoughts of God." (Owen)

"பாவ எண்ணம் சிறிது மருவினும் தெய்வீகமான பெரிய எண்ணங்கள் அவனிடம் ஒருபோதும் உளவாகா" என ஜாண் ஓவன் என்பவர் இங்ஙனம் உறுதியாய் உரைத்திருக்கிறார்.

மாசு படிந்த கண்ணாடி ஒளி இழந்து போதல் போல் பாவம் படிந்த மனம் இருளடைந்து போகிறது. போகவே பழி துயரங்கள் வேகமாய் வளர்ந்து உயிரைப் பாழ்படுத்துகின்றன.

தீய பாவிகள் ஒருங்கே மடிந்து போனமையால் பூமிதேவி தூயளாய் உவந்து உயர்ந்தாள். மூண்டு வந்த மூலபலப் படைகள் ஆயிரம் வெள்ளம் எனத் தொகை அமைந்திருந்தாலும் எல்லையில்லாத வகையில் அவையாவும்முடிவாய் இறந்துதொலைந்தன.

செத்த சேனைகள் எவ்வளவு இருக்கும்? என ஓரளவு மொத்தமாக அறிய உலகம் விரும்பும் ஆதலால் அந்த அளவு நிலையைக் கவி விநய சாதுரியமாய் முடிவில் நன்கு விளக்கியருளினர்.

அழிவுன் அளவு.

ஆனை ஆயிரம் தேர்பதி னாயிரம் அடர்பரி ஒருகோடி
சேனை காவலர் ஆயிரம் பேர்படின் செழுமணிக் கவந்தம்ஒன்றுஆடும்
கானம் ஆயிரம் ஆயிர கோடிக்குக் கவின்மணி கணீல் என்னும்
ஏனை அம்மணி ஏழரை நாழிகை ஆடியது இனிதன்றே.

(மூலபலவதை, 228)

இந்தக் கணக்கைக் கருதி நோக்குகின்றோம்; பெரிதும் வியக்கின்றோம். ஆயிரம் யானைகள், பதினாயிரம் தேர்கள், ஒரு கோடி குதிரைகள், ஆயிரம் சேனாதிபதிகள் ஆகிய இந்த நான்கு இனங்களும் ஒருங்கே அழிந்தால் அங்கே ஒரு கவந்தம் எழுந்து குதித்து ஆடும்; அவ்வாறு பத்து லட்சம் கோடி கவந்தங்கள் எழுந்து கூத்தாடினால் கோதண்டத்தின் நுனியில் உள்ள மணி கணீர் என்று ஒரு ஒலி ஒலிக்கும்; அத்தகைய மணி ஏழரை நாழிகை வரை இடைவிடாமல் கண கண கண என்று ஒலித்தது; ஆகவே அழிந்தவர் அளவுகளை யூகமாய்ப் பெருக்கி உணர்ந்து கொள்ளுக என இங்ஙனம் உணர்த்தியருளினர்.

இந்தக் கணித முறையைக் காவியக் கவிகள் பலரும் கருதி வியந்திருக்கின்றனர். வில்லிபுத்தூராழ்வார் இதனை அடியொற்றிப் பாடியுள்ளார். அந்தப் பாடல் அயலே வருகிறது.

அநேகமாயிரம் பேர்படக் கவந்தம்ஒன்று
ஆடும்; அக் கவந்தங்கள்
அநேகமாயிரம் ஆடவெஞ் சிலைமணி
அசைந்துஒரு குரல் ஆர்க்கும்;
அநேகநாழிகை அருச்சுனன் சிலைமணி
ஆர்த்தது அக் களம்பட்ட

அநேகமாயிரம் விருதரை அளவறிந்து
ஆர்கொலோ உரைக்கிற்பார்? (பாரதம், 14ம்போர் 48)

இராமன் நிருதரை அழித்தபடியே விசயன் விருதரை அழித்திருக்கிருன். அந்த அழிவு நிலையை அவ்வாறே இது விளக்கியுள்ளது. அழிவின் அளவு அதிசய விளைவாய் வந்தது.

பேரொத்த ஆயிரம் பேர்மடிந்தால் பிறக்கும் கவந்தம்
நேரொத்த ஆடும் அது ஆயிரம் ஆடின் நெடுஞ்சிலையின்
ஏர்ஒத்த கிண்கிணி சற்றேலிடும் அதுஓர் யாமம் நின்று
கார்ஒத்த மேனி அரங்கர்தம் போரில் கறங்கியதே.
(திருவரங்கத்துமாலை, 44)

இராமபிரான் மூலபலத்தைக் கொன்று குவித்த நிலையை இதுவும் குறித்திருக்கிறது. கடல்போல் மூண்டு வந்த அந்தச் சேனைகளை அழித்து ஒழிக்க ஏழரை நாழிகை பிடித்திருக்கிறது. போர் தொடங்கியதிலிருந்து கொலைகள் குவிந்துள்ளன. மேலே குறித்த அளவு அழிவு அமைந்தவுடனே சிலையிலிருந்த மணி ஒலிக்க நேர்ந்தது; அந்த ஒலி முடிவுவரையும் முழங்கி நின்றது.

மிடல்கொள் மூலமா பலம்எனும் வீரரை விடுத்தான்
கடிகை ஏழினில் இராகவன் அவருயிர் கவர்ந்தான்;
கொடிய ராவணன் தேரிவர்ந்து அயிற்படை கொண்டு
படைகள் சூழ்வரப் படுகளத்து எதிர்ந்தனன் படர்ந்தே.
(பாகவதம்)

மூலபலச் சேனைகளை இராகவன் அழித்திருக்கும் கால அளவை இதுவும் காட்டியுள்ளது. அளவிடலரிய படைகள் மாண்டு மடிந்துள்ள நிலைகளை ஈண்டு தெரிந்து வியப்பும் விம்மிதமும் அடைந்து இராமனது வெற்றித்திறலைப் புகழ்ந்து நிற்கிறேம்.

தேவர் உவந்தது.

யாவராலும் வெல்ல முடியாத பொல்லாத அரக்கர்குலம் எல்லை மீறி வந்ததைக் கண்டதும் நெடுந்திகில் கொண்டு நெஞ்சம் கலங்கி நிலைகுலைந்து நின்ற தேவர்கள் மூலபலம் முழுதும் அழிந்ததைத் தெளிவாய் அறிந்து ஆனந்தம் அடைந்தனர்.

நினைந்தது முடித்தேம் என்னு வானவர் துயரம் நீத்தார்;
புனைந்தனென் வாகை என்னு இந்திரன் உவகை பூத்தான்;

வணைந்தன வல்ல வேதம் வரம்பு பெற் றுயர்ந்த மாதோ
அனந்தனும் தலைகள் ஏந்தி அயர்வுயிர்த்து அவலம் தீர்ந்தான்.

வானவரும் இந்திரனும் வேதங்களும் ஆதிசேடனும் ஆனந்தம் அடைந்துள்ள நிலைகளை இது வரைந்து காட்டியுளது.

அரக்கர்களால் நெடுங்காலம் அல்லல் உழந்து அலமந்து இருந்தவர் ஆதலால் அவர் அழிந்து ஒழிந்தது இவர்க்கு மிகுந்த உவகையாய் விளைந்தது. துன்பங்கள் தொலைந்தன என்று நினைந்தமையால் இன்பங்கள் வளர்ந்து வந்தன. அரிய பெரிய மூல பலங்கள் மடிந்து போனமையால் இனி இராவணன் ஒழிந்து போவான் என்று தேவராசனான இந்திரன் துணிந்து கொண்டான்; கொள்ளவே உள்ளம் களித்து உவகை மீதூர்ந்தான்.

வாகை புனைந்தேன் என்று வானவர்கோன் ஓகைகொண்டுள்ளமையால் இம்மான வீரனது போர் வினையால் விளைந்துள்ள திவ்விய நிலைமைகளை உணர்ந்து கொள்கிறோம்.

வாகை = வெற்றிமாலை. உம்பர்கோன் ஓகைநிலை தெரிந்தது.

இராவணனது அதிகார ஆற்றலால் நிருதருக்கு அடங்கிப் பரிதாபமாய் வாழ்ந்து வந்தான்; அந்தப் பகைக்கூட்டம் அன்று அழிந்துபட்டது; படவே இனிமேல் தலைமையோடு வாழலாம் என்று இந்திரன் சிந்தை மகிழ்ந்தான்; உள்ளக் கிளர்ச்சியும் உணர்ச்சிப் பெருக்கும் அந்த மகிழ்ச்சியில் ஓங்கி எழுந்தன.

வேதம் வரம்பு பெற்று உயர்ந்த.

சீவகோடிகள் உறுதி நலங்களை உணர்ந்து உய்யும் வழிகளை உரிமையோடு வேதங்கள் போதித்து வருகின்றன. அந்த நீதி நெறிகளை நிலைகுலைத்து யாண்டும் அழிசெயல்களை அரக்கர்கள் ஆற்றி வந்தனர்; அதனால் மறைகள் தலை தடுமாறி மறுகி நின்றன; வேத விரோதிகளான நிருதர் குழாங்கள் அன்று மாண்டு மடியவே அவை நீண்ட மகிழ்ச்சியால் நேரே உயர நேர்ந்தன.

பாவச் சுமைகளைத் தாங்க மாட்டாமல் பரிந்து வருந்தியிருந்த சேடன் தீய கூட்டங்கள் தொலைந்து ஒழிந்தமையால் எல்லையில்லாத காலம் தானடைந்து வந்த அல்லல் எல்லாம் நீங்கி உள்ளம் உவந்தான். உவகைநிலை உற்ற வகையை உணர்த்தியது.

அனந்தனும் அவலம் தீர்ந்தான் என்றதனால் நெடுங்காலம் கடுந்துயரோடு அவலக் கவலைகளில் உழந்து அவன் மறுகியிருந் தமை தெரிய வந்தது. தீராத அல்லல் தீர்ந்திருப்பது பேரானந் தமாய்ப் பெருகி ஓராத உயர்வை உதவி நின்றது.

இமையவர் இந்திரன் வேதம் ஆதிசேடன் முதலாயினோர் உவகை மீதூர்ந்து ஓங்கி யிருப்பதால் உற்றுள்ள நிலைகளை ஓர்ந்து உணர்ந்து கொள்கிறோம். வீரக்குரிசிலின் வெற்றி வினையால் விண்ணும் மண்ணும் வியன்பயன் அடைந்து உவந்து உயர்ந்தன.

வாழ்த்தி வணங்கியது.

தாய்படைத் துடைய செல்வம் ஈகெனத் தம்பிக்கு ஈந்து
வேய்படைத் துடைய கானம் விண்ணவர் தவத்தின் மேவி
தோய்படைத்தொழிலால்யார்க்கும்துயர் துடைத்தானைநோக்கி
வாய்படைத் துடையார் எல்லாம் வாழ்த்தினர் வணக்கம் செய்தார்.

தீமொய்த்த அனைய செங்கண் அரக்கரை முழுதும் சிந்திப்
பூமொய்த்த கரத்தர் ஆகி விண்ணவர் போற்ற நின்றான்
பேய்மொய்த்து நரிகள் ஈண்டிப் பெரும்பிணம் பிறங்கித் தோன்றும்
ஈமத்துள் தமியன் நின்ற கறைமிடற் றிறைவன் ஒத்தான். (2)

அண்டமாக் களமும் வீந்த அரக்கரே உயிரும் ஆகக்
கொண்டதோர் உருவம் தன்னால் இறுதிநாள் வந்து கூட
மண்டுநாள் மறித்தும் காட்ட மன்னுயிர் அனைத்தும் வாரி
உண்டவன் தானே ஆன தன்னொரு மூர்த்தி ஒத்தான். (3)

ஆகுலம் துறந்த தேவர் அள்ளினர் சொரிந்த வெள்ளச்
சேகறு மலரும் சாந்தும் செருத்தொழில் வருத்தம் தீர்க்க
மாகொலை செய்த வள்ளல் வாளமர்க் களத்தைக் கைவிட்டு
ஏகினன் இளவ லோடும் இராவணன் ஏற்ற கைம்மேல். (4)

(மூலபலவதை, 230-233)

மூண்டுவந்த மூலபலச் சேனைகளை அடியோடு கொன்று தொலைத்து வென்றி மீதூர்ந்து விண்ணவர் யாவரும் வியந்து புகழ்ந்து உவந்து வாழ்த்த இராமன் சென்றிருக்கும் நிலையை ஈண்டு நம் உள்ளக் கண்களால் ஓர்ந்து நோக்கி உவகை கூர்ந்து நிற்கின்றோம். கவிகளின் பொருள்களும் தொனிகளும் சுவைக ளும் கருதியுணர வுரியன யாவும் கூர்ந்து சிந்தித்து ஓர்ந்து உண ருமாறு குறிப்புகள் யாவும் சிறப்பாய் நேர்ந்து வந்துள்ளன.

ற்றிய தாயான கைகேசி கடிந்து சொன்னபடி தனது அரியபெரிய அரசுரிமையை உரிய தம்பிக்கு உவந்து கொடுத்துவிட்டு இனிய மனைவியோடு இராமன் கொடிய கானகம் புகுந்தான். யாவும் துறந்து காட்டுக்கு வந்தவன் கண்ணை மூடிக் கடுந்தவம் புரிந்து தன்னுயிர்க்கு மாத்திரம் இதத்தை நாடாமல் விண்ணையும் மண்ணையும் மூடியுள்ள வெய்ய துயரங்களை நீக்க விரைந்தான்; யாண்டும் அல்லல்களை விளைக்கின்ற பொல்லாத அரக்கர்களைத் தன் வில்லின் வலியால் கொன்று தொலைத்தான்; முடிவில் மூண்டு வந்த மூலபலச் சேனைகளை அடியோடு அழித்தான்; அந்த அழிவு நிலையை விழியூன்றி நோக்கி வையமும் வானமும் வியந்து புகழ்ந்து மகிழ்ந்து வாழ்த்தி மலர்மாரிகள் பொழிந்தன. வெற்றி ஒளி வெளி வீசக் கோதண்டத்தோடு வீர கம்பீரமாய் விளங்கி நின்ற இக் கொற்றக் குரிசிலின் காட்சி அதிசய அற்புதமாய் நிலவி உலாவியது. அகில உலகங்களையும் அண்டசராசரங்களையும் ஒருங்கே அழித்து ஒழித்து ஊழிக்காலத்தில் தன் தனியே நிற்கும் உருத்திர மூர்த்திபோல் ரகு வீரன் உக்கிர வீரமாய் ஒளிமிகுந்து நின்றான். யுக முடிவில் எல்லா உலகங்களையும் தன்னுள் அடக்கித் தனி நிலையில் நிற்கும் பெருமாயன் போல் இப் பேராண்மையாளன் போராண்மை தோன்றப் பொலிந்துவிளங்கினான். கருமதருமங்கள் மருமங்களாய்மருவின.

சங்கார கர்த்தாவான கண்ணுதல் கடவுளும் காத்தற்கடவுளும் தனித்தனி நண்ணி நின்று எண்ணிச் செய்கின்ற அழித்தலையும், அளித்தலையும் இக் குல வீரன் ஒருங்கேசெய்து ஒளிபெற்று நின்றான். வீர பராக்கிரமங்களால் வீறுகொண்டு நின்ற இவனது வெற்றிக்கோலத்தைத் தேவர் யாவரும் ஆவலோடு நோக்கி மந்தாரம் பாரிசாதம் முதலிய தெய்வீக மலர்களை வாரிச்சொரிந்து வாழ்த்தி ஏத்தி வரிசை தோய்ந்து நின்றார். அதிசயமான பரவச வசனங்கள் விழுமிய துதிமொழிகளாய் ஒளி வீசி வந்தன.

வாய் படைத்துடையார் எல்லாம் வாழ்த்தினர்.

மூலபலங்களை வென்று வெற்றிக் கோலமாய் விளங்கி நின்ற இராமபிரானை விழைந்து நோக்கி உள்ளம்உவந்து புகழ்ந்து போற்றி நின்றார் தொகையை வகையோடு இது வரைந்து காட்டியுள்ளது. வாயுடைமையின் வாய்மை தெரிய வந்தது.

வாய் பேசும் வாய்ப்பினாலேயே மனிதரும் தேவரும் மகிமை பெற்றுள்ளனர். பேச்சு வழக்கை இழந்தன மிருகங்களாய் இழிந்தன; பேசுந்திறமுடையவர் மாந்தராய் மாண்பு தோய்ந்து வந்தனர். அத்தகைய மாட்சிமை வாய்ந்த வாய் படைத்தவர் யாவரும் இந்த வீர மூர்த்தியை ஆர்வம் மீதூர்ந்து போற்றினர்.

தாய் படைத்த பணியைத் தலைமேல் கொண்டு வேய் படைத்த கானம் வந்து யார்க்கும் நோய் துடைத்து நின்றானை வாய்படைத்தார் எல்லாரும் வாழ்த்தி மகிழ்ந்தார். வேய்=மூங்கில். அரிய இனிய இராச போகங்களில் உல்லாசமாய் வாழவுரியவன் நில்லாத நெடிய மூங்கில்களும் பொல்லாத கொடிய விலங்குகளும் பெரிய கல்லுகளும் கரிய முள்ளுகளும் கடுமையாய் நிறைந்துள்ள காட்டில் வந்து அல்லல் வாழ்க்கை செய்ய நேர்ந்தது எல்லா உலகங்களுக்கும் நல்லது செய்யவேயாம் என்பது இங்கே எல்லாரும் உரிமையோடு நன்கு தெரிய வந்தது.

தீமைகளைக் களைந்து ஒதுக்கி உலகுக்கு நன்மைகளைச் செய்து வருகிறான் ஆதலால் அந்த நன்றியறிவினால் இந்த வென்றி வீரனை யாவரும் வாழ்த்த நேர்ந்தனர். சுகமாய் வாழ வந்தவர் தமக்கு இனிய வாழ்வு தந்தவனை வாழ்த்த வந்தனர்.

இராமனை வாழ்த்துவதே வாய்படைத்த பயன் ஆம்; அவனுடைய புகழ்களைக் கேட்பதே செவிபடைத்த பயனும்; அவனது திருவுருவைக் கண்டு களிப்பதே கண்பெற்ற பயனும்.

உரிமையோடு உவந்து கற்கவும், பிரியமாய் விழைந்து கேட்கவும் உரியது அவனது அரிய பெரிய அற்புத சரிதமே.

கற்பார் இராம பிரானை அல்லால் மற்றும் கற்பரோ?
புற்பா முதலாப் புல்எறும்பாதி ஒன்று இன்றியே
நற்பால் அயோத்தியில் வாழும் சராசரம் முற்றவும்
நற்பாலுக்கு உய்த்தனன் நான்முகனார் பெற்ற நாட்டுளே.

நாட்டில் பிறந்தவர் நாரணற்கு ஆளன்றி ஆவரோ?
நாட்டில் பிறந்து படாதனபட்டு மனிசர்க்கா
நாட்டை நலியும் அரக்கரை நாடித் தடிந்திட்டு
நாட்டை அளித்து உய்யச்செய்து நடந்தமை கேட்டுமே. (2)

(திருவாய்மொழி)

நம்மாழ்வார் இராமபிரானை நினைந்து மறுகி இவ்வாறு உருகிப் பாடியிருக்கிறார். அரக்கரை நாடித் தடிந்து நாட்டை உய்யச் செய்தவன் என்றது இந்த வீர மூர்த்தி செய்திருக்கும் உபகார நிலைகளை ஓர்ந்து உணர வந்தது. படாதனபட்டு என்றது கருதவுரியது.

பிறந்த பிறப்பும் இருந்த இருப்பும் நடந்த நடப்பும் செய்த செயலும் சீவகோடிகள் உய்யவே என்றதனால் இவனது அவதார மகிமையும் மருமமும் தெளிவா வெளியாய் நின்றன. மானவனாய் வந்துள்ள இவனை வானவரும் வணங்கி வாழ்த்துகின்றார். அன்பு மீதூர்ந்து தன்னை நினைந்து வருபவர் இன்ப நிலைகளை இனிதே அடைந்து விழுமியராய் உயர்ந்து கொள்கின்றார்.

சிறிய தாய் கொடுமை செய்தும் அவளுடைய சொல்லைக் கேட்டு உரிமையோடு நடந்தமையால் நல்ல குலமகன் என உலக வுள்ளங்கள் இராமனை உவந்து புகழ்ந்து வருகின்றன.

தொத்தலர்பூஞ் சுரிகுழல்கை கேசிசொல்லால்
தொன்னகரம் துறந்து துறைக் கங்கைதன்னை
பத்தியுடைக் குகன்கடத்த வனம்போய்ப் புக்குப்
பரதனுக்குப் பாதுகமும் அரசும் ஈந்து
சித்திரகூடத் திருந்தான் தன்னை இன்று
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந்தன்னுள்
எத்தனையும் கண்குளிரக் காணப் பெற்ற
இருநிலத்தார்க்கு இமையவர்நேர் ஒவ்வார்தாமே.
(பெருமாள் திருமொழி)

தாய்சொல்லைத் தட்டாமல் தம்பிக்குத் தன் அரசை ஈந்த எம்பெருமான் ஆன இராமனைத் தரிசித்தவர் இமையவரினும் உயர் மகிமை பெறுவர் எனக் குலசேகரமன்னன் இன்னவாறு கூறியிருக்கிறார். கண்களும் வாய்களும் படைத்த பயன் இராமனைக் கண்டு வாழ்த்துவதேயாம் என மேலோர் காட்டியுள்ள காட்சியால் அவனது மாட்சிகளை உணர்ந்து கொள்ளுகிறோம்.

ஈமத்துள் நின்ற இறைவன் ஒத்தான்.

நிருதர் சேனைகளை நிர்மூலமாக்கிச் சமரபூமியில் வெற்றிக் கோலமாய் நின்ற கோதண்ட வீரனை ஊழிக்காலத்து உருத்திர மூர்த்தியோடு ஒப்புக் கூறி இவ்வாறு உணர்த்தியிருக்கிறார்

அழிவு நிலைகளையும் அழித்தவனையும் அதனால் விளைந்த பயன்களை யும் தெளிவாகத் தெரிய இவ்வழியில் இனிது விளக்கியருளினர்.

யுக முடிவு.

ஊழி முடிவில் உயிரினங்களை ஒருங்கே அழிப்பது சங்கார மூர்த்தியின் தொழில். அழிபட்டன முற்றும் நெற்றி நெருப்பால் எரிக்கப்படுகின்றன. படவே ஞாலம் முழுதும் மயான பூமியா கிறது; ஆகவே அப்பொழுது வெற்றிக் களிப்போடு தன்னந் தனியே உருத்திரமூர்த்தி உக்கிர வீரமாய் நிற்கின்றது; அந்த நிலையில் மூலபலங்களைக் கொன்று குவித்த இராமன் அன்று அங்கே நின்றான் என்பார் ஈமத்துள் தனியே நின்ற கறைமிடற்று இறைவன் ஒத்தான் என்றார். ஈமம் = சுடுகாடு. சுடலையாடி, பே யோடாடி எனச் சிவபெருமானுக்கு இப்படிப் பெயர்கள் வந் திருக்கின்றன. அகிலமும் அழித்துச் சர்வ சங்கார மூர்த்தியாய் வீரக் களிப்பில் விளையாடி நிற்கும் நிலைகளை இவை விளக்கின.

ஈம இறை.

கோயில் சுடுகாடு கொல்புலித்தோல் நல்லாடை
தாயும்இலி தந்தைஇலி தான்தனியன் காணேடீ
தாயும்இலி தந்தையிலி தான்தனியன் ஆயிடினும்
காயில் உலகனைத்தும் கற்பொடிகாண் சாழலோ.

(திருவாசகம்)

விண்ணோர் தலைவர் வெண்புரிநூல் மார்பர் வேத கீதத்தர்
கண்ணார் நுதலர் நகுதலையர் கால காலர் கடவூரர்
எண்ணார் புரமூன்று எரிசெய்த இறைவர் உமையோர்ஒருபாகம்
பெண்ஆண் ஆவர் மயானத்துப் பெரிய பெருமானடிகளே.

(சுந்தரமூர்த்தி தேவாரம்)

நிணந்தான் உருகி நிலந்தான் நனைப்ப நெடும்பற் குழிகட்பேய்
துணங்கை எறிந்து சூழுநோக்கிச் சுடலை நவிழ்ந் தெங்கும்
கணங்கள் கூடிப் பிணங்கள் மாந்திக் களித்த மனத்தவா
அணங்கு காட்டில் அனல்கை ஏந்தி அழகன் ஆடுமே. (1)

செத்த பிணத்தைத் தெளியாது ஒருபேய் சென்றுவிரல் சுட்டிக்
கத்தி யுறுமிக் கனல்விட்டெறிந்து கடக்கப் பாய்ந்து போய்
பத்தல் வயிற்றைப் பதைக்க மோதிப் பலபேய் இரிந்தோடப்
பித்தவேடம் கொண்டு நட்டம் பெருமான் ஆடுமே. (2)

முள்ளி தீந்து முளரி கருகி மூளை சொரிந்துக்குக்
கள்ளி வற்றி வெள்ளில் பிறங்கு கடுவெங் காட்டுள்ளே
புள்ளியுழைமான்தோல்ஒன்றுடுத்துப் புலித்தோல்பியற்கிட்டுப்
பள்ளி யிடமும் அதுவே யாகப் பரமன் ஆடுமே. (3)

(காரைக்காலம்மையார்)

கள்ளி முதுகாட்டில் ஆடி கண்டாய்
காலனையும் காலால் கடந்தான் கண்டாய்
புள்ளி யுழை மானின் தோலான் கண்டாய்
புலியுரிசேர் ஆடைப் புனிதன் கண்டாய்
வெள்ளிமிளிர் பிறைமுடிமேல் சூடி கண்டாய்
வெண்ணீற்றான் கண்டாய் நம்செந்தில் மேய
வள்ளி மணாளற்குத் தாதை கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே. (அப்பர்தேவாரம்)

பேய்கள் பாடப்பல் பூதங்கள் துதிசெயப் பிணமிடு சுடுகாட்டில்
வேய்கொள் தோளிதான் வெள்கிட மாநடம் ஆடும் வித்தகனார் ஒண்
சாய்கள் தான்மிக வுடையதண் மறையவர் தருசிர புரத்தார்தாம்
நாய்கள் ஆயினர் பல்லுயிர்க் குந்தமைத் தொழுமவர் தளராரே.

(சம்பந்தர் தேவாரம்)

ஈமத்து இறைவன் எனப் பரமனைக் குறித்து இவை வந்துள்ளன. பொருள் நிலைகளைக் கூர்ந்து ஓர்ந்து பர நிலையைத் தேர்ந்து கொள்ள வேண்டும். அழிப்பவன் அளிப்பு விழிப்புற வந்தது.

'காஅய் கடவுள்'' (பரிபாடல் 5)

உலகத்தை அழிக்கும் கடவுள் எனச் சிவபெருமானைக் குறித்து வந்துள்ள இதுவும் ஈண்டு ஊன்றி உணர வுரியது.

தன் ஒரு மூர்த்தி ஒத்தான்.

மூலபலங்களை வென்ற இராமன் ஊழிமுதல்வனை ஒத்து நின்றான் என முன்னம் குறித்தார்; இதில் திருமாலை நிகர்த்தான் என்கின்றார். அளவிடலரிய அரக்கர்களை அழித்து ஒழித்தான் ஆதலால் உலகம் உண்ட பெருவாயனை ஒத்தான் என்றார். ஆதிமூலத்தின் செயல் அவதார கோலத்திலும் அறிய வந்தது.

கைலாசபதி, வைகுந்தவாசன் என ஈசனையும் மாயனையும் நேரே குறியாமல் வேறே ஊழி உருத்திரத்தையும், உலகம்

ஒடுக்கும் திறலையும் உரைத்தது இவ் வீரமூர்த்தியின் உக்கிர வீர நிலையை உய்த்துணர. தக்க இடத்தில் தகுதியாய் விளக்கினர்.

ஒரு சக்கரவர்த்தித் திருமகன், அற்புத அழகன், உயர்ந்த போர்வீரன் என்று மாத்திரம் இராமனை நினைந்து கொள்ளாதீர்! தேவாதி தேவனே மனித வுருவில் மருவி அரிய காரியங்களை ஆற்றி வருகிருன் எனத் தமது காவிய நாயகனை நமது கவிஞர் பிரான் போற்றி வருவதை இடங்கள் தோறும் பார்த்து வருகிறேம். உரியவன் மீது பிரியம் மீதூர்ந்து பேரன்பு பொழிகிருர்.

பூமாரி பொழிந்தது.

அதிசய வெற்றியைக் கண்டு அமரரும் துதிசெய்து நிற்றலால் இராகவனது மகிமையை உணர்ந்து கொள்கிறேம். நறுமணம் கமழுகின்ற மலர்களையும் சந்தனம் சவ்வாது முதலிய கந்தங்களையும் மங்கலப் பொருள்களையும் மணிகளையும் வரிசை வரிசையாய் வாரி வீசினமையால் வானிலிருந்து மாரிபோல் அவை வந்து குவிந்தன. பிணங்களாய்க் கிடந்த போர்க்களம் எங்கும் தேவர்கள் சொரிந்த மலர்கள் மணங்களை வீசி நிலவின.

மகிழ்ச்சி மீதூர்ந்து அந்த வானவர் கொண்டாடிய களிப்பும் கலிப்பும் இம்மான வீரனல் தமக்கு நேர்ந்துள்ள உயர்ச்சி நிலைகளை உணர்த்தி நின்றன. துன்பத் தொடர்புகள் தொலைந்தன என்று இன்பக் களிப்புகள் யாண்டும் எழுந்தன. வெள்ளக் கணக்காய் அரக்கர் அழிந்தது அமரர்க்கு உள்ளக் களிப்பாய் ஓங்கி வந்தது. அல்லல் நீங்கினமையால் ஆனந்தம் ஓங்கியது.

மா கொலை செய்த வள்ளல்.

இராமனை இங்கே இந்தப் பேரால் கவி குறித்திருக்கிருர்.

எல்லையில்லாத கொலைகளைச் செய்தவனை வள்ளல் என்றது உள்ளி உணர வந்தது. தம்பால் உள்ள பொருள்களை ஏழைகளுக்கு உள்ளம் உவந்து கொடுப்பவரே வள்ளல் என வான் பெயர் பெற்றுள்ளார். இராமன் இங்கே யாருக்கு எதை அள்ளிக் கொடுத்தார்? வள்ளல் என்று எப்படிச் சொல்லலாம்? இப்படி ஒரு கேள்வி ஈண்டு ஒப்படியாய் எழுவது இயல்பு.

ஒரு வள்ளலுடைய கொடையால் பிறருடைய வறுமைத் துயர் நீங்குகிறது; இந்த வள்ளல் இங்கே செய்துள்ள கொலை

யால் வானும் வையமும் ஒருங்கே அல்லல் நீங்கி நல்ல சுக வாழ்வுகளை அடைந்துள்ளன. அவ்வுண்மை ஈண்டு உணரவந்தது.

பொல்லாத கலக மாக்களால் உலக மக்கள் அடைந்து வந்த அவலத் துயரங்கள் அடியோடு நீங்கின ஆதலால் மூல பலங்களை முடிய நூறிய இவ் வீரனை வள்ளல் என்று உள்ளம் உவந்து வாழ்த்திநின்றார். உரியபெயர் அரியசெயலை அறியவந்தது.

கொடிய பல களைகளை அகழ்ந்து எறிந்தது போல் அள விடலரிய நிருதர்களை அழித்து ஒழித்து அமரர் முதல் எவர்க்கும் இனிய வாழ்வுகளை அருளி உயர்தரமான உயிர் உதவி புரிந்துள் ளான். வண்மை தோய்ந்த அந்த உண்மையை நுண்மையா உணர்ந்து கொள்ள உரிமையோடு கோலை செய்த வள்ளல் என் றார். மா என்னும் அடை எல்லையில்லாத நிலையில் கொலை நடந் துள்ளமை தெரிய வந்தது. கொன்றது கொடை வென்றியாயது.

தலையளி செய்து கொடுக்கும் தலைக் கொடையாய் இக் கொலை விளைந்துள்ளமையைக் கலைக் கண்ணோடு கருதிக் காண நன்கு காட்டி உறுதியுண்மைகளை இங்ஙனம் உணர்த்தியருளினர்.

மாண்டு மடிந்த அரக்கர்களும் இராமனால் நீண்ட உதவி யை அடைந்துள்ளனர். உடலோடு நின்று மேலும் பாவங்களைச் செய்து பாழாகாமல் அந்த ஊன உடல்களை நீக்கி வீர சுவர்க் கத்தை அரக்கர்க்கு இராமன் கொடுத்திருக்கிறான் ஆகவே எல் லார்க்கும் இனிது உதவிய தனிமுதல் வள்ளலாய்க் கோதண்ட வீரன் குலாவி நின்றான். அரிய பெரிய இந்த அதிசய வண்மை வீரத்தால் விளைந்திருத்தலால் வீர வள்ளல் என இராமன் விருது பெற்று விழுமிய சீரோடு மேன்மையாய்க் கெழுமி விளங்கினன்.

வள்ளலை வணங்கிப் பல்கால் வழுத்தியே தொழுது தத்தம்
உள்ளமும் புறத்தில் என்பும் உருகிட விழியில் தூநீர்
தள்ளுற உரைகள் முற்றும் தவறிடப் பொடிப்ப யாக்கை
கள்ளுண வுற்ற வண்டிற் களிமகிழ் சிறந்து நின்றார். (1)

வீசுறு சுடர்வேல் ஐயன் வெய்யசூர் முதலைச் சாடித்
தேசுறு மஞ்ஞை யூர்ந்து வந்தது தெரிந்து போர்செய்
காசினி யிடையே நின்ற கணங்களும் வீரர் யாரும்
ஆசறும் இளவலுஞ் சென்று அடிதொழுது ஆர்த்துச்சூழ்ந்தார்.
(கந்தபுராணம், சூரன்வதை 506-507)

அசுரர்களை அடியோடு தொலைத்து வேல் ஏந்தி வென்றி வீரனாடு முருகக் கடவுள் நின்றபோது அம் மூர்த்தியை வள்ளல் என்று இவ்வாறு உலகம் வாழ்த்தி வணங்கியுள்ளது. அரிய பல நன்மைகளை அருளியுள்ளமையால் அந்தப் பெரிய வண்மையின் உண்மை உரிமையாய் உணரவந்தது. தெய்வீக உதவிகள் சிந்திக்கத்தக்கன.

கறங்குதிரைக் கருங்கடலும் காரவுணப்
பெருங்கடலும் கலங்கக் கார்வந்து
உறங்குசிகைப் பொருப்பும்சூர் உரப்பொருப்பும்
பிளப்பமறை யுணர்ந்தோர் ஆற்றும்
அறங்குலவு மகத்தழலும் அவுணமட
வார்வயிற்றின் அழலும் மூள
மறங்குலவு வேல்எடுத்த குமரவேள்
சேவடிகள் வணக்கம் செய்வாம். (திருவிளையாடல்)

தீயவர்களை அழித்து நல்ல தருமங்களை வளர்க்கவே குமர. வேள் வேலாயுதத்தை ஏந்தியருளியது என இது ஏத்தியுள்ளது.

முருக மூர்த்தி வேல் எடுத்தது போல் இராமமூர்த்தி வில் எடுத்தது. அந்த வீரக் கடவுள் அவுணரை அழித்து அறத்தை விளைத்தது; இந்த வீர வள்ளல் அரக்கரை மாய்த்து அறத்தை வளர்த்தது. பொருட் கொடையினும் வீரக்கொடை அதிசய மகிமையுடையது ஆதலால் அந்த நிலைமை தலைமைகளை நினைந்து தெளிய வள்ளல் என வனைந்து கூறினர். குறிப்பு மொழிகளைக் கூர்ந்து சிந்தித்துச் சிறப்பு நிலைகளை ஓர்ந்து கொள்ள வேண்டும்.

உயர்ந்த சுத்த வீரனுடைய யுத்த வினைகளால் உலகம் அடைந்து வரும் நன்மைகளை உய்த்துணர்ந்து கொள்கிறோம். உள்ளத் தூய்மையும் வீரமும் கருணையும் ஒருங்கே வாய்ந்த தீரனது செயல் வானமும் வையமும் வளம்பெற வளர்ந்து வருவதை யாவரும் வியந்து நோக்கி உவந்து புகழ்ந்து நின்றனர்.

இளவலை நினைந்தது.

மூலபலம் மடிந்து முடிந்ததும் வெற்றிக் களிப்புடன் இராமன் அங்கே விளங்கி நின்றான். வீர கோதண்டத்தைக் கையில்தாங்கி இராச கம்பீரமாய் நின்ற இவ் வெற்றிக் குரிசில் சமர பூமி முழுவதையும் அமைதியாய் விழைந்து நோக்கினான்; யுக முடிவின் நெடு மயானம் போல் விரிந்து பரந்து கிடந்ததைப் பரிந்து கண்டான். விரைந்து இளவலை நினைந்தான்; வெளிஏறநேர்ந்தான்.

தன்மேல் நெடிய படைகளைச் செலுத்தி விட்டு வேறு ஒரு வழியாய்ச் சென்று "வானர சேனைகளை இராவணன் சதியாய் வதை செய்ய நேர்வன்; அத்தீயவனுக்கு இடம் கொடாமல் நம் வானரங்களைக் காத்து நில்!" என்று தம்பியை முன்பு* இந் நம்பி அயலே அனுப்பிவைத்தான் ஆதலால் இங்கே வேலை முடிந்ததும் போர் பூமியை நீங்கி அங்கே போக விரைந்தான்.

அமர்க் களத்தை விட்டு ஏகினன்.

காரிய சாதனைகளில் இக் கோமகன் புரிந்து வருகிற வேகமும் விவேகமும் சீரியநீர்மைகள் சிறந்து விளங்குகின்றன. எதிரிகளைப் பொருது வெல்லும் போர் வீரத்தோடு அரிய பல உறுதி நலங்களும் மதியூகங்களும் இவனிடம் உரிமையாய் மருவியிருக்கின்றன. உண்மையான உயர்ந்த வீரன் ஆதலால் சிறந்த தன்மைகள் யாவும் நிறைந்து அதிசய வீர சோதியாய் யாண்டும் இந்த ஆண்டகை ஒளி வீசி நிற்கின்றான்.

"True bravery proposes a just end; measures the dangers, and meets the result with calmness and unyielding decision."
[Lanone]

"உண்மையான வீரம் செம்மையான முடிவை உடனே தெரிகிறது; அபாயங்களை அளந்து அறிகிறது; உறுதியான தீர்மானத்தோடு அமைதியாய்க் கருதிய பலனைக் காண்கிறது." என்னும் இது இங்கே ஊன்றி உணர்ந்து கொள்ளவுரியது.

தம்பியை நோக்கிச் சென்றது.

இலங்கைவேந்தன் அபாயமான சதி செய்யக்கூடும் என்று முன்னதாகவே யூகித்து உணர்ந்து தனது அருமைத் தம்பியை வானரங்களைப் பாதுகாக்கும்படி அனுப்பியிருந்தான் ஆதலால் இந்த வீரக்குரிசில் அந்தச் சேனையிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றான். இளையவன் நிலையையும் எதிரியின் தீய மாயங்களையும் நினைந்து கவன்று இத்தூயவன் நேயமாய்விரைந்து போனான்.

சதியின் விளைவு.

மூலபலச் சேனைகளை இராமன் மேல் ஏவிய உடனே இராவணன் விரைந்து வஞ்சவேலை செய்தான். கடல் போன்ற

* இந் நூல் பக்கம் 4904, வரி 1 பார்க்க.

தனது படைகளைக் கண்டவுடனே குரங்குகள்பயந்து ஓடிவிடும்; அவ்வாறு அஞ்சி ஒதுங்கி நிற்கும் படைகளை அடியோடு கொன்று தொலைத்து விட வேண்டும் என்று நெஞ்சம் துணிந்து தேர் மேல் ஏறி உரிய சில சேனைகளோடு நிருதர்பதி நேரே போனான். பகை வகையை ஒல்லையில் ஒழிக்கலாம் என உறுதி பூண்டு எல்லை தெரிந்து வல்லமையோடு ஒல்லையில் சென்றான்.

சில்லி ஆயிரம் சில்லுளைப் பரியொடும் செறிந்த
எல்லி வான்கதிர் மண்டிலம் மாறுகொண் டிமைக்கும்
செல்லும் தேர்மிசைச் சென்றனன் தேவரைத் தொலைத்த
வில்லும் வெங்கணைப் புட்டிலும் கொற்றமும் விளங்க. (1)

அரக்கர் சேனைஓராயிர வெள்ளத்தை அமரில்
துரக்க மானுடர் தம்மைஎன்று ஒருபுடை துரந்து
வெருக்கொள்வானரச் சேனைமேல் தான்செல்வான்விரும்பி
இருக்கும் தேரொடும் போயவண் இராவணன் எதிர்ந்தான்.
(வேல் ஏற்றபடலம்)

மாயவஞ்சமாய் இராவணன் சென்றிருக்கும் தீய நிலையை இங்கே பார்த்து நிற்கிறோம். ஏழு தீவுகளிலுமிருந்து தனக்கு ஆதரவாக வந்த நிருதர் சேனைகளோடு மூலப் படைகளையும் சேர்த்து அனுப்பியிருத்தலால் இராமனும் இலக்குவனும் தப்பாமல் அழிந்து போவர்; அவரை அங்ஙனம் அழிக்குமுன் வானர சேனைகளைத் தான் அழித்து விடவேண்டும் என்று களித்துச் சென்றுள்ளான். கபட வஞ்சனை கடுகி வேலை செய்துளது.

ஆழிபோல் அடல் மண்டி ஆர்த்துவந்த அரக்கர் குலங்களைக் கண்டு அஞ்சி ஓடின ஆதலால் வெருக் கொள் வானரச் சேனை என அதன் அச்சமும் அவலமும் தெரிய வந்தன. ஓடிய படைகளை அங்கதன் போய் உறுதிகூறி மீட்டு வந்தாலும் பொருகளம் அடையாமல் அயலே அவை ஒரு தொகையாய் நின்றன. அந்த நிலையில் அவற்றைக் கொன்று தொலைக்க மூண்டு இலங்கை வேந்தன் திரண்டசேனைகளோடு தேர்ஏறிச் செயிர்த்து வந்தான்.

இராமன் முன் எச்சரிக்கையாக இலக்குவனைப் பாதுகாப்புக்கு அங்கே அனுப்பி யிருப்பது அவனுக்குத் தெரியாது; ஆதலால் மிகவும் எளிதாகவே அனைவரையும் அழிவு செய்து விடலாம் என்று தெளிவு கூர்ந்து களி மீதூர்ந்து கடுகிச் சேர்ந்தான்.

அந்த நிருதர் படைகள் நேரே சீறி வருவதைக் கண்டதும் வானர வீரர்கள் மானமும் கோபமும் மருவி விரைந்தனர். அரக்கர்கள் மாத்திரம் ஆர்த்து வருகின்றனர் என முதலில் சீறி எழுந்தவர் பின்னே பெரிய தேரில் இராவணன் வருவதைப் பார்த்துமறுகினர்; உடனே பொருதிறலோடுபொங்கிமூண்டனர்.

அனையவாகிய அரக்கர்க்கும் அரக்கனை அவுணர்
வினையை வானவர் வெவ்வினைப் பயத்தினைவீரர்
சினையும் நெஞ்சினைச் சுடுவதோர் நெருப்பினை நிமிர்ந்து
கனையும் எண்ணையும் கடப்பதோர் கடலினைக் கண்டார். (1)

கண்டு கைகளோடு அணிவகுத்து உருமுறழ் கற்கள்
கொண்டு கூற்றமும் நடுக்குறத் தோள்புடை கொட்டி
அண்ட கோளங்கள் அடுக்கழிந் துலைவுற ஆர்த்தார்
மண்டு போரிடை மடிவதே நலன்என மதித்தார். (2)

அரக்கர் சேனையும் ஆருயிர் வழங்குவான் அமைந்த
குரக்கு வேலையும் ஒன்றொடொன்று எதிர் எதிர்கோத்த
நெருக்கி நேர்ந்தன நெருப்பிடை பொடித்தன நெருப்பின்
உருக்கு செம்பென அம்பரத்து ஓடினது உதிரம். (3)

நேர்ந்திருக்கும் நிலைகளை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம். ஆறுதலாய் நின்றவர் அடலோடு அமராட நேர்ந்தனர்.

படைகளோடு இலங்கை வேந்தன் வந்ததைக் கண்டதும் வானரங்கள் வெகுண்டு வீறுடன் போருக்கு மூண்டன: "நமது ஆண்டவனை விட்டு அயலே ஒதுங்கி நிற்கின்ற நம்மைக் கொடுமையாய்க் கொன்று தொலைக்க வேண்டு என்றே அரக்கர் படைகள் கடுமையா ஈண்டு வந்திருக்கின்றன; இனி நாம் வாழ்ந்தாலும் செத்தாலும் தாழ்ந்து நிற்கலாகாது; ஆண்டு மூண்டு வந்த அந்த மூலபலப் படைகளைக் கண்டு நம் ஆண்டவனையும் மறந்து வெளியே வெருண்டு நாம் ஓடி வந்தது இழிந்த பேடித்தனம்; நேர்ந்த அப்பழி ஒழிந்துபோக உறுதியாய் மூண்டு போராட வேண்டும்; சதியாலோசனை யோடு கரவாய்க் கவித்து வந்திருக்கும் இந்த அரக்கர் திரள்களை அடியோடு அழித்து ஒழிக்கவேண்டும்; அல்லது நாம் குடியோடு மாண்டு மடிய வேண்டும்" என இன்னவாறு மானக் கொதிப்போடு வானரத் தலைவர்கள் தம் சேனைகளை ஊக்கவே யாவரும் யாண்டும் சீறி

மூண்டு வீர வெறியுடன் போராட நேர்ந்தனர். உள்ளத் துணிவும் உறுதியும் பெருகி நின்றமையால் பொருகளம் எங்கும் ஒருமுகமாய் ஊக்கி ஏறினர். சாகத் துணிந்து சமரில் விரைந்தார்.

மண்டு போரிடை மடிவதே நலன்.

வானர வீரர்கள் இவ்வாறு எண்ணித் துணிந்திருத்தலால் அவருடைய மானத் துடிப்புகளும் மனக் கொதிப்புகளும் நன்கு தெரிய வந்தன. முன்னம் நிருதர் படைகளைக் கண்டு ஓடியது கடும் பழி என நெடுங்கவலையாய் நொந்து நின்றவர் ஆதலால் இது பொழுது மூண்ட போரில் மாண்டு மடிவதே நலன் என உயிரை வெறுத்து ஊக்கிப்புகுந்தார். ஏகாரம் அவரது உள்ளத் துணிவையும் உறுதி நிலையையும் தெளிவாக உணர்த்தி நின்றது.

வானரர் துணிந்தது.

அமர் நேர்ந்த அபாய சமையத்தில் ஆண்டவனைக் கைவிட்டு அகன்று போனோமே! என்ற அந்த அவலமும் நாணமும் ஒவ்வொருவர் உள்ளத்திலும் ஊன்றி நின்றமையால் உற்ற போரில் உயர்வான துணிவு வானரர்களிடம் தோன்றி நீண்டது. அரக்கரை அடியோடு அழித்து வெற்றி காண்பதில் தத்தம் உயிரைத் தத்தம் செய்ய ஒத்து மூண்டனர்; தங்கள் உயிரைத் தியாகம் செய்ய நேர்ந்த அந்த வீரப்பாடு ஆர் உயிர் வழங்குவான் அமைந்த குரக்கு வேலை என்றதனால் வெளிப்பட்டு நின்றது. உள்ளம் துணிந்த ஊக்கம் உயிரையும் பொருள் செய்யாமல் எதிரிகளை ஒல்லையில் வெல்ல வேண்டும் என்று ஓங்கி எழுந்தது.

தன் உயிரழிவை எண்ணாத போது எதிராளியின் படை அவ்வீரனுக்கு மயிராகத் தோன்றுகிறது. "சாகத் துணிந்தவனுக்குச் சமுத்திரமும் முழங்கால் தண்ணீர்" என்பது பழமொழி.

இறப்புக்கு ஒருவன் அஞ்சவில்லையானால் அங்கே வீரம் சிறப்பாய் விளங்குகிறது என்பதை இம் முதுமொழி உணர்த்தியுள்ளது. மரணத்தை மதியாதவன் மகா வீரன் ஆகின்றான்.

"Be valiant as men despising death, but confident as unwonted to be overcome." (P. Sidney)

"சாகத்துணிந்தவர் போல் வீரமாய் இரு; ஆனால் எதிரிகள் வெல்ல முடியாதபடி தைரியமாய் நில்" என்னும் இந்த ஆங்கில

வாசகம் ஈங்கு நன்கு ஊன்றி உணர்ந்து கொள்ளத்தக்கது.

உறுதியும் ஊக்கமும் பொருதிறலுக்கு அதிசய ஆற்றல்களை அருளுகின்றன. போராட மூண்டபோது வீரர்கள் உலக வாழ்க்கையைமறந்து விடுகின்றனர். எதிரிகளைவிரைந்துவென்று தொலைப்பதையே குறிக்கோளாக் கொண்டு நிற்கின்றனர்.

அடலோடு திரண்டு வந்த இராட்சச சேனைகளைக் கண்டபோதே வீர வெறி கொண்டு வானரச் சேனைகள் யாண்டும் மூண்டு போராட நேர்ந்தன. நிருதர் கடுமையாய் எதிர்ந்து கொடிய கொலைக் கருவிகளை வீசி நெடிது போராடினும் யாண்டும் நிலைகுலைந்து மாண்டனர். மானக் கொதிப்போடு வானரர் முனைந்து பொருது வருவதையும் அரக்கர் திரள் அழிந்து விழுவதையும் கண்டு இலங்கை வேந்தன் நெஞ்சம் கனன்று நெடிது சினந்து தனது தேரைக்கடிது கடாவி நேரே புகுந்தான். வரபலத்தால் பெற்ற அரிய பகழிகளை யாண்டும் எய்து கொண்டே மூண்டு புகுந்து அடலோடு விரைந்து முனைந்து பொருதான்.

இராவணன் பொருதது.

அனைவரையும் எளிதே கொன்று தொலைத்து வெற்றி பெற்றுவிடலாம் என்று சதி சூழ்ந்து வஞ்சமாய் நெஞ்சம் துணிந்து வந்த நிருதர்பதி வானரங்களின் பொருதிறல்களைக் கருதிநோக்கி உள்ளம் கொதித்து உருத்து ஊக்கி உக்கிர வீரமாய்ப் போராடினான். அவனுடைய மனக்கடுப்பும் மானத்துடிப்பும் பகழிகளைக் கடுத்துத் தொடுப்பதில் தெளிவாய்த் தெரிய வந்தன.

கருதித் துணிந்தது.

கண்டு நின்றுஇறைப் பொழுதினிக் காலத்தைக் கழிப்பின்
உண்டு கைவிடும் கூற்றுவன் நிருதர்பே ருயிரை
மண்டு வெஞ்செரு நான்ஒரு கணத்திடை மடித்தே
கொண்டு மீள்குவன் கொற்றம்என்று இராவணன் கொதித்தான்.

ஊதை போல்வன உருமுறழ் திறலன உருவிப்
பூதரங்களைப் பிளப்பன அண்டத்தைப் பொதுப்ப
மாதிரங்களை அளப்பன மாற்றருங் கூற்றின்
தூது போல்வன சுடுகணை முறைமுறை துரந்தான். (2)

தன் படைகள் அழிந்து படுகிற நாசத்தை நேரே கண்டு நெஞ்சம் கொதித்து வீறோடு மூண்டு இராவணன் போராடி

யிருக்கும் நிலைகளை இங்கே நாம் விழியூன்றி நோக்கி வியந்து நிற்கின்றோம். தனது இனத்தின் அழிவு நிலை அவன் மனத்தில் சினத்தையும் துயரையும் சேரமூட்டியது. சுக்கிரீவன் அங்கதன் நீலன் முதலிய மேலான தலைவர்கள் எங்கும் உக்கிரவீரமாய் ஊக்கி ஏவியிருத்தலால் வானர வீரர்கள் யாண்டும் மூண்டு போராடி நின்றனர். அவரோடு நேரே சீறி அடலோடு பொருத நிருதர்கள் உடல் சிதைந்தும் தலைகள் உடைந்தும் தோள்கள் ஒழிந்தும் தாள்கள் இழந்தும் இடங்கள் தோறும் மடிந்து மாய்ந்தனர். அரக்கர் திரள்கள் எங்கணும் இறக்க நேர்ந்தன.

அந்த அழிவு நிலை இலங்காதிபதியைக் கதிகலங்கச் செய்தது. எல்லாரையும் ஒல்லையில் ஒருங்கே வெல்லலாம் என்று உள்ளம் களித்து வந்தான்; அழிவுகளை விழி எதிரே காணவே ஆங்கார மும் அவமானமும் கோபமும் தாபமும் கடிது ஓங்கி எழுந்தன.

இனி இறைப் பொழுது கழிப்பின்
நிருதர் உயிரைக் கூற்றுவன் உண்டுவிடும்.

தன் படைகள் சாவதை நேரே கண்ட இராவணன் இவ் வாறு கருதி விரைந்திருக்கிறான். நிமிட நேரம் தாமதித்தாலும் நிருதர் இனம் அடியோடு அழிந்து ஒழிந்து போம்; ஒருவரையும் உயிரோடு காண முடியாது என்று துயரோடு அவன் துடித் திருப்பதை ஈண்டு நாம் நுனித்து உணர்ந்து கொள்ளுகிறோம்.

வானரங்கள் அரக்கர்களை அடியோடு அழித்து விடுவர் என்று கூறாமல் கூற்றுவன் உயிரை உண்டுவிடும் என்றது அழி வின் விரைவையும் ஒழிவையும் தெளிவாய்த் தெரியவந்தது.

தனது அரிய வீரக்குலத்தை எளிய காட்டுக் குரங்குகள் கொல்லும் என்று சொல்ல அவன் உள்ளம் கூசினமையால் கூற்றுவன் மேல் ஏற்றிக் கூறினான். குலமானமும் வீரமும் அவன் உள்ளத்தில் பலமாய்ப் பதிந்திருத்தலால் உரைகள் தோறும் செருக்குகள் பெருக்கமாய் உரமேறி வருகின்றன.

கணத்திடை மடித்தே மீள்குவன்

இராவணன் மனத்திடை நினைத்து வந்துள்ளதை இது உணர்த்தியுள்ளது. வானரப்படைகளை ஒரு நொடியில் கொன்று தொலைத்து வெற்றிக் களிப்போடு இலங்கைக்கு மீளுவேன்

என்று மீளிமையோடு தேரைச் செலுத்திப் போர்க் களத்துள் அவன் புகுந்திருக்கின்றான். தளராத தீர தைரியம் அவனிடம் விளையாடி வருகிறது. நெஞ்சம் கலங்காத நெடிய தீரம் கடிது ஓங்குகிறது; ஆகவே யாண்டும்வீரகம்பீரமாய்நீண்டுநிலவுகிறான்.

இவ்வாறு மூண்டு புகுந்தவன் திவ்விய மகிமை வாய்ந்த தெய்வாத்திரங்களை எவ்வழியும் வாரி வீசினான். ஊழித்தீயைப் போல் கொடிய கொதிப்பும் பிரசண்ட மாருதத்தைப் போல் கடிய வேகமும் உடைய அரிய பெரிய பாணங்களை எல்லாம் யாண்டும் அள்ளிச் சொரிந்தான். மலைகளையும் துளைத்துச் செல்ல வல்லன; அண்டங்களையும் ஊடுருவிப் போவன என்றதனால் அந்த அம்புகளின் கொலை வேகங்களைத் தெரிந்து கொள்ளலாம்.

பூதரங்களைப் பிளப்பன; அண்டத்தைப் பொதுப்ப

ஆதரவோடு ஆராய்ந்து இந்த முறை இராவணன் அங்கே கொண்டு வந்துள்ள பாணங்களின் அதிசய ஆற்றல்களையும் அற்புதவேகத்தையும் இதனால் நன்கு அறிந்து கொள்ளுகிறோம்.

பூதரம் = மலை. கடிய நெடிய கல் மலைகளையும் பிளந்து அண்டங்களையும் ஊடுருவி ஓட வல்ல பாணங்களை யாண்டும் கடுத்து விடுத்தமையால் வானரங்கள் இடங்கள் தோறும் மாண்டு மடிந்தன. அழிவு நிலைகள் அவலத் துயரங்களாயின

யாதும் செய்ய முடியாமல் சேனைகள் செத்து மடியவே வானரத் தலைவர்கள் மறுகி மயங்கினர். மானத்துடிப்புகளோடு பலர் நொந்து தியங்கினர்; சிலர் அலமந்து அயல் ஒதுங்கினர்.

இலக்குவன் எழுந்தது.

முன்னே முனைந்து மூண்டு பொருது நிருதரை நெட்டு நெட்டாத் தட்டழித்து நிலைகுலைத்துக் கொன்று குவித்து வென்றி வீறோடு விருது கொண்டு நின்ற வானர சேனைகள் இராவணனால் அழிந்து படுவதை அறிந்ததும் இளைய பெருமாள் உள்ளம் கனன்று உருத்துக் கொதித்துக் கடுத்து நேரே விரைந்தான்.

வளைத்த வில்லோடு ஒல்லையில் புகுந்த எல்லையில் அனுமான் எதிர்வந்து வணங்கி "ஆண்டவா! எதிரி தேர் மேல் உள்ளான். நீங்கள் என் தோள் மேல் ஏறிக் கொள்ளுங்கள்" என்று தொழுது வேண்டினான். அந்த வேண்டுகோளை விலக்க முடியாமல்

இலக்குவன் இசைந்தான். மாருதி தோள் மேல் ஏறிய வீரன் தனது வலது கையை உயரத் தூக்கி அசைத்து வானர சேனைகளுக்கு ஆறுதலளித்துத் தேறுதல் தெளித்து ஆதரவு குறித்தான்.

எதிர்ந்து புகுந்தது.

அபாயத்தை நோக்கி யாதும் அஞ்ச வேண்டாம் என்று உபாயமாய் அபயம் குறித்த அந்த வீரக் காட்சி அதிசய கம்பீரமாய்த் தோன்றியது. மறுகிய படைகளுக்கு உறுதியூட்டி எதிரிக்கு இறுதி காட்டி அடுகணை பூட்டி அமரிடை ஏறினன்.

இரியல் போகின்ற சேனையை இலக்குவன் விலக்கி
அரிகள் அஞ்சன்மின் அஞ்சன்மின் என்றருள் வழங்கித்
திரியும் மாருதி தோள்என்னும் தேர்மிசைச் சென்றான்
எரியும் வெஞ்சினத்து இராவணன் எதிர்புகுந்து ஏற்றான்.

ஏற்றுக் கோடலும் இராவணன் எரிமுகப் பகழி
நூற்றுக் கோடியின் மேற்செலச் சிலைகொடு நூக்கக்
காற்றுக்கு ஓடிய பஞ்சுஎனத் திசைதொறும் கரக்க
வேற்றுக் கோல்கொடுவிலக்கினன் இலக்குவன்விசையால்.

விலக்கி னான்தடந் தோளினும் மார்பினும் விசிகம்
உலக்க உய்த்தனன் இராவணன் ஐந்தொடம் துருவக்
கலக்கம் உற்றிலன் இளவலும் உள்ளத்திற் கனன்றான்
அலக்கண் எய்துவித் தான்அட லரக்கனை அம்பால். (3)

காக்க லாகலாக் கடுப்பினில் தொடுப்பன கணைகள்
நூக்கி னான்கணை நுறுக்கினன் அரக்கனும் நூழில்
ஆக்கும் வெஞ்சமத் தரிதிவன் தனைவெல்வ தம்பால்
நீக்கி என்இனிச் செய்வதென்று இராவணன் நினைந்தான்.

(வேல்ஏற்ற படலம் 18--21)

இலக்குவன் ஒரு வில்லோடு செருவில் மூண்டு இராவணனோடு போராடி யிருக்கும் வீரப் பாடுகளை ஈண்டு விழைந்து நோக்கி வியந்து நிற்கிறோம். தன்னுடைய பாணப் பிரயோகங்களால் வானர சேனைகள் அழிந்து ஒழிந்தன என்று உள்ளம் களித்து ஊக்கி வந்த நிருதர்பதி இளவல் எதிர்ந்ததும் முனைந்து சினந்து மூண்டு பொருதான். வரபலங்களால் அடைந்திருந்த அம்புகளை மந்திர முறையோடு வாரிவீசினன். கூரியபாணங்கள்

ஏறி ஏறின ஆயினும் இலக்குவன் நேரே எய்த கணைகளால் மாறி நீறாய் வேறு வேறு திசைகளில் அவை வீழ்ந்து சிதைந்தன.

இலங்கை வேந்தன் கடுத்துத் தொடுத்த கணைகளையெல்லாம் இலக்குவன் தடுத்துத் தொலைத்தான். வீறோடு சீறி வந்த தெய்வப்பகழிகள் யாவும் யாதும் ஆற்ற முடியாமல் அழிந்து தொலைந்தன. சூறைக் காற்றின் எதிர்ப்பட்ட பஞ்சுத் துய்கள் போலவும் செத்தைகள் போலவும் சிதைந்து ஒழியவே அவன் சினந்து கொதித்துச் சிந்தை திகைத்தான். எந்த வகையிலாவது எதிரியை விரைந்து கொல்ல வேண்டும் என்று வெகுண்டு மூண்டான். நேர்மையோடு போராடினால் இலக்குவனை யாதும் வெல்ல முடியாது என்று அவன் உள்ளம் தெளிந்துகொண்டான்; கொள்ளவே கள்ளம் புரிந்து கொல்லக் கடிது துணிந்தான்

கரவு கருதியது.

"பாசுபதம் முதலிய அதிசய அத்திரங்களை ஏவினாலும் இலக்குவனை வெல்ல முடியாது; அவனிடமும் அரிய தெய்வீக அம்புகள் உள்ளன; மந்திர முறையோடு அவற்றை அவன் ஏவ நேர்ந்தால் கொடிய நாசங்கள் விளைந்து விடும். மாய வஞ்சனையால் அன்றி நேரே போராடி யாராலும் அவனை வென்றுவிட இயலாது; ஆதலால் மோசமான செயல்களினாலே தான் நாசம் செய்ய வேண்டும்" என்று நீசமாய் நிருதர்பதி முடிவு செய்து கொண்டான். கொடுமையா எண்ணிக் கடுமையா மூண்டான்.

கடவுள் மாப்படை தொடுக்கின் மற்றவைமுற்றும் கடக்க
விடவும் மாற்றவும் வல்லனே யாரையும் வெல்லும்
தடவும் ஆற்றலைக் கூற்றையும் தமையனைப் போலச்
சுடவும் ஆற்றும் எவ்வுலகையும் எவனுக்கும் தோலான்.

மோகம் ஒன்று உண்டு முதலவன் வகுத்தது முன்னாள்
ஆக மற்றது கொற்றமும் சிவன்தனை அழிப்பது
ஏக முற்றிய விஞ்சையை இவன்வயின் ஏவிக்
காக முற்றுழல் களத்தினில் கிடத்துவன் கடிதின். (2)

வஞ்சமாய்க் கேடு செய்ய இராவணன் நெஞ்சம் துணிந்து எண்ணி யிருக்கும் எண்ணங்களை இங்கே கண் எதிரே கண்டு கரும விளைவுகளைக் கருதி யுணர்கின்றோம். தேரைச் செலுத்திப்

போரைத் தொடர்ந்து வானரங்களைக் கோரமாய் வதைத்து வந்தவன் இலக்குவன் நேரே எதிர்த்தவுடனே சிறிது கலக்கம் அடைந்தான்; கடுத்துப் போராடினன். அரிய அப்புகளைத் தொடுத்துப் பார்த்தான்; யாதும் பலியாமல் அயர்ந்து நின்றான்; அந்த நிலையில் மாயவேலை செய்ய வேண்டும் என்று தீய யோசனைகள் செய்து தீங்கு புரிய மூண்டு விரைந்தான்.

இளையபெருமாளுடைய அதிசய ஆற்றல்களை வியந்து இலங்கை வேந்தன் கருதி யுளைந்திருக்கும் நிலைகளை இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்கிறோம். போரில் இவனை யாரும் வெல்ல முடியாது. எல்லாரையும் இவனே யாண்டும் வெல்ல வல்லவன் என அவ்வல்லாளன் உள்ளம் துணிந்து உறுதி பூண்டுள்ளான்.

தமையனைப் போல எவ்வுலகையும் சுடும்.

இலக்குவனைக் குறித்து இராவணன் இப்படி முடிவு செய்திருக்கிறான். அண்ணனோடு எண்ணியது அதிசயநிலை கருதி.

இராமனோடு நேரே போராடி நெடிய கொடிய துயரங்களை அனுபவித்தவன் ஆதலால் அவனது அதிசய ஆற்றலையும் அற்புத நிலையையும் கருதி வியந்து அந்தப் பேராண்மை தம்பியிடமும் பெருகியுள்ளது என மறுகி அயர்ந்தான். ஊழித் தீ போல் எல்லாவற்றையும் பாணங்களால் இராமன் எரித்து ஒழித்த அந்த வேகத்தையும் வெப்பத்தையும் நினைந்து நெஞ்சம் கருகியிருந்தான் ஆதலால் சுடவும் ஆற்றும் என்று சுட்டெரிக்கும் சூட்டைச் சுட்ட நேர்ந்தான். இராமபாணத்தால் சுடப்பட்டு உயிர் தப்பிப் பிழைத்திருப்பவன் பேசுகின்றான்; ஆகவே அப்பேச்சில் தீயும் சூடும் தோய்ந்து இடையே நன்கு தெரிய வந்தன.

இந்தத் தம்பி அந்தத் தமையனுக்கு எந்த வகையிலும் குறைந்தவன் அல்லன்; எல்லாவகையிலும் நேர் ஒத்த வல்லவன் என அப் பொல்லாதவன் இந் நல்லவனை எண்ணியிருப்பதை ஈண்டு நாம் எதிரே தெளிவாய்த் தெரிந்து கொள்ளுகிறோம்.

இராமனையும் இலக்குவனையும் உழுவலன்புடைய அருமையான அண்ணன் தம்பிகள் என உலகம் உவந்து எண்ணி வருகிறது. நேர் ஒத்த அதிசயமான போர் வீரர்கள் என்று இராவணன் இங்கே உறுதியாய்க் கருதியிருக்கிறான். முதல் நாள்

மூண்ட போரிலேயே இளையவனுடைய அதிசய வில்லாடலைக் கண்டு உளம் மிக வியந்து * அவன் துதி செய்ய நேர்ந்தான்.

பகைமையால் உள்ளம் கொடுமையாய் நின்றாலும் தகைமையை ஓர்ந்து புகழ்ந்து கொள்வது இலங்கை வேந்தனிடம் விளங்கி யுள்ளது. உண்மையை ஒளியாமல் உவந்து பேசுவதால் அவனது உயர் பெருந் தன்மையை உணர்ந்து மகிழ்ந்து நாம் வியந்து கொள்கின்றோம். அரிய வெற்றி நிலை அறிய வந்தது.

எவனுக்கும் தோலான்.

எம்மையும் வெல்ல வல்லவன்; யாரும் அவனோடு நேரே போராட முடியாது என்று இளவலைப் புகழ்ந்து வந்தவன் முடிவில் இவ்வாறு வியந்து நினைந்துள்ளான். சென்ற இடமெல்லாம் வெற்றியே அல்லது யாண்டும் தோல்வி கண்டறியாதவன் என நீண்ட காலமாக நெடும் புகழ் பெற்று வந்துள்ள இராவணன் ஈண்டு இலக்குவனை இலக்கோடு குறித்திருப்பது சிறப்பான வெற்றியாய்த் திகழ்ந்து நின்றது. எவனுக்கும் தோலான் என ஓர் அற்புதவெற்றி விருதை இலட்சுமணனுக்கு இராவணன் சூட்டியிருக்கிறான். சிவபெருமானையும் கைலாச மலையோடு தூக்கிக் கலக்கினவன் இலக்குவன் எதிரே இப்படிக் கலக்கம் அடைந்திருப்பது இவனது வீரத் திறலை நேரே துலக்கி நின்றது.

மோகனம் தொட்டது.

இவ்வாறு எவ்வழியும் தோலாத இவனை மாய வஞ்சத்தால் தொலைக்க வேண்டும் என்று அவன் நெஞ்சம் துணிந்தான். மோகனாத்திரம் என்னும் தீயமாயப் பகழியைத் தொடுக்க நேர்ந்தான். அதற்கு உரிய விஞ்சை மந்திரங்களை முறையே செபித்து இலக்குவன் மீது கடுத்துத் தொடுத்தான். அந்த மாயப் படையிலிருந்து விடுபடவே எங்கும் பயங்கரமான இருள் மூடி மருளோடி நின்றது. யாண்டும் கரும் புகை மண்டி மதி மயக்கமாய் நெடுந் திகில் விளைந்தது. விளையவே இலக்குவன் உளைந்து "இது என்னே!" என்று கலக்கத்தோடு வீடணனை நோக்கினான். "இது கொடிய ஒரு மாய விஞ்சை; அரியதவத்தால் பெற்றது; மோகனம் என நாமம் அமைந்தது; உக்கிர வேகமான நாச

* இந் நூல் பக்கம் 3964 வரி 9 பார்க்க.

முடையது” என்று இவ்வாறு அவன் கூறி முடிக்கு முன் இவன் திருமாலை நினைந்து சக்கரத்தைத் தொடுத்தான். ஒளிபாய இருள் ஒழிவது போல் ஆழி பாயவே அந்த மாய மோகமும் தீய வேகமும் அடியோடு ஒழிந்தன. யாவரையும் அழிக்க வல்லது என்று அவன் களித்து ஏவிய கொடிய நீசம் கடிது நாசமாகவே நெடிது கனன்று முடிவு வேலையை மூண்டு கருதினன். மால் புரிந்துமாய்க்கமாயப்புரிந்தவன்வேல்எறிந்துவீழ்த்தவிரைந்தான்.

வேல் விட்டது.

அதிசய ஆற்றலுடையது என்று உறுதியோடு கருதி விடுத்த மோகனாத்திரம் ஒழிந்து போகவே உள்ளம் கலங்கி உருத்துக் கொதித்த இராவணன் உயிராதாரமாய் நெடிதுபோற்றிவைந்திருந்த வேலாயுதத்தை வீசத் துணிந்தான். அந்த வேல் சீதன சம்பத்தாய் வந்தது; அற்புதம் அமைந்தது; மயன் தந்தது; அயனையும் அழிக்க வல்லது. எடுத்துத் தொடுத்தபின் எந்த உயிரையும் மாய்த்து வீழ்த்தாமல் மீளாதது; அதனை எடுத்தான்; உரிய பூசனை புரிந்தான்; அங்ஙனம் புரியும் போது விபீடணனைக் கொல்ல வேண்டும் என்றே குறித்தான்; இலக்குவன் மீது அதைத் தொடுக்க விரும்பவில்லை; தனக்குக் கொடிய குல சத்துருவாய் நின்று எதிரிகளுக்கு அரிய மருமங்களை யெல்லாம் தெரிய உரைத்து யாண்டும் அழிவு வேலையை ஒழியாமல் செய்து வருகிற வீடணனை ஒழித்து விட்டால் பின்பு பகைவரை எளிதே அழித்து விடலாம் என்று கருதித்தெளிந்து உறுதி பூண்டு அவன் உருத்து எடுத்தான். அந்த வேல் அதிசய நிலையினை யுடையது; அதன் வலியையும் நிலையையும் அயலே காண வருகிறோம்.

மயன் கொடுத்தது மகளொடு வயங்கனல் வேள்வி
அயன் படைத்துளது ஆழியும் குலிசமும் அனையது
உயர்ந்த கொற்றமும ஊழியும் கடந்துளது உருமிற்
சயந்தனைப் பொருந் தம்பியை உயிர்கொளச் சமைந்தான்.

விட்ட போதினில் ஒருவனை வீட்டியே மீளும்
பட்ட போதவன் நான்முகன் ஆயினும் படுக்கும்;
வட்ட வேலது வலங்கொண்டு வாங்கினன் வணங்கி
எட்ட நிற்கலாத் தம்பிமேல் வல்விசைத்து எறிந்தான். (2)

விபீடணனைக் கொன்று தொலைக்க வேண்டு இராவணன் வண்டு எடுத்து எறிந்திருக்கும் வேலாயுதத்தை இவை நன்கு விளக்கியுள்ளன. மண்டோதரியைத் தனது அருமை மனைவியாக உரிமையோடு இலங்கை வேந்தன் மணந்து கொண்ட போது இந்த அதிசய வேலையும் அடைந்தான். தன் மகளைக் கைக் கொண்டவன் திரிலோக சக்கரவர்த்தியும் பெரிய போர் வீரனுமாயுள்ளமையால் அந்தத் தகுதிக்கேற்ப மணப் பரிசாக மயன் அயிலை வியனோடு கொடுத்தான். தெய்வீக வலியுடைய இதன் மந்திர முறைகளையும் மருமங்களையும் மருமமாயுரைத்துப்போனான்.

தாளார் தண் தாமரையோன் தன்மேலே
 விடினும் அவன் உயிர்கொண்டன்றி
மீளாவே லுங்கொடுத்து மயன்போக
 மெல்லியலை உடனே கொண்டு
தோளாறும் ஏழிரண்டும் சுடர்முடிகள்
 ஈரைந்தும் பொலிந்து தோன்ற
வாளார்திண் படைசூழ மதிளிலங்கை
 வளநகரில் மன்னன் புக்கான்.

(உத்தர, இராவணன்பிறப்பு, 64)

தனக்கு உரிமையாகப் பெண்ணைக் கொடுத்த மாமனிடமிருந்து இராவணன் அருமையான வேலைப் பெற்றிருப்பதை இதனால் அறிந்து கொள்கிறோம். அதிசய மகிமை வாய்ந்த அந்த வேலை உயிரினும் அருமையாப் பேணி வந்தான்; இது வரை யார்மீதும் தொடுக்கவில்லை; உற்றபோரில் உறுதியான முடிவு காண வெற்றி வீறுடைய அதனை அன்று விடுக்க நேர்ந்தான்.

நான்முகன் ஆயினும் படுக்கும்.

இராவணன் தொடுக்க எடுத்த வேலின் ஆற்றலை இது நன்கு விளக்கியுள்ளது. சிருட்டி கருத்தாவான பிரமாவே யானாலும் ஆவியைப் போக்காமல் அவலமாய் மீளாது என்றதனால் அதன் அற்புத வன்மையை அறிந்து கொள்கிறோம். உம்மை அவனது உயர்வை உணர்த்தி அதன் இயல்பைத் துலக்கியது.

ஆக்கும் கடவுளையும் அழிக்க வல்லது என அந்த வேலின் திறலை விளக்கியிருக்கும் வித்தகம் நன்கு உய்த்துணரத் தக்கது.

இத்தகைய வீர வேலை விரைந்து எடுத்து விபீடணனை நோக்கி அவன் வெகுண்டு எறிந்தான். வேல் எழுந்த போது மேல் எங்கும் தீயொளி வீசியது. ஊழித் தீபோல் உருத்து வருகிற வேலைக் கண்டதும் வீடணன் உள்ளம் கலங்கினன். அதன் மருமங்களை யெல்லாம் நன்கு தெரிந்தவன் ஆதலால் தனக்கு முடிவு நேர்ந்தது என்று கடிது துணிந்து "இளையவள்ளலே! இது என் உயிரை அழித்தே விடும்; நீங்கள் யாதும் உளைய வேண்டாம்; ஒதுங்கி நில்லுங்கள்" என்று உறுதியோடு ஓலமிட்டான்.

அந்த அவல ஒலியைக் கேட்டதும் இலக்குவன் கடுத்துத் துடித்து "அஞ்சாதே!" என்று அபயம் கொடுத்து வீடணனுக்கு முன்னே பாய்ந்து நின்று சீறி வருகிற வேலை நோக்கி அம்புகளைப் பொழிந்தான். அவை தும்புகளாய்க் கழிந்தன.

செய்த செயல்.

இவ் வீரன் எய்த பாணங்கள் யாவும் யாதும் செய்ய முடியாமல் இழிந்து வீழ்ந்தன. வேல் வீறோடு விரைந்து மேலே வந்தது; வரவே இளையவன் முன் ஏறி விரைந்தான்; வில்லில் பாணம் தொடுக்கவில்லை; தன் உயிரைக் கொடுக்கவே ஊக்கி விரைந்தான். விவேக வேகங்கள் வீறோடு மூண்டு ஓடின.

சாக விரைந்தது.

வேகமாய் மேலே வருகிற வேலை வெல்ல முடியாது என்று தெரிந்து இலக்குவன் சாகத் துணிந்து அதன் நேரே ஏறினன். அந்தக் குறிப்பை அறிந்ததும் வீடணன் அவனுக்கு முன்னே விரைந்தான்; இந்த இருவரையும் கடந்து அங்கதன் முந்தித்தாவினன்; இம்மூவரையும் பின்னே தள்ளிச் சுக்கிரீவன் முன்னே குதித்தான்; அனுமான் என்ன செய்தான்? எல்லாரும் பின்னே நிற்கும்படி மேலேறி முன்னே பாய்ந்தான்; "நில்லுங்கள்! நான் வில்லால்வென்று இந்த வேலைத் தொலைக்கின்றேன்" என்று சொல்லிக் கொண்டே இலக்குவன் எல்லாருக்கும் முன்னே வேகமாய் ஓடி மார்பை எதிகாட்டி நின்றான்; வேல் உரத்தை ஊடுருவிப் போயது; வீர இளவல் தரையில் வீழ்ந்து மாய்ந்தான்.

இந்தப் பரிதாப நிலையைக் கவி கண்ணீர் சொரிந்து பாடியிருக்கிறார். பாடல்கள் அயலேவருகின்றன; படித்துப்பாருங்கள்.

தேவர் அலமந்தது.

எய்த வாளியும் ஏயின படைக்கலம் யாவும்
செய்த மாதவத்து ஒருவனைச் சிறுதொழில் தீயோன்,
வைத வைவினில் ஒழிந்தன வீடணன் மாண்டான்
உய்தல் இல்லை என்று உம்பரும் பெருமனம் உலைந்தார். (1)

இளவல் எதிர்ந்தது.

தோற்பன் என்னினும் புகழ்நிற்கும் தருமமும் தொடரும்
ஆர்ப்ப நல்லவர் அடைக்கலம் புகுந்தவன் அழியப்
பார்ப்பது என்நெடும் பழிவந்து தொடர்வதன் முன்னம்
ஏற்பன் என்தனி மார்பின்என்று இலக்குவன் எதிர்ந்தான்.

வீடணன் முதலோர் விரைந்தது.

இலக்கு வற்குமுன் வீடணன் புகும்;இரு வரையும்
விலக்கி அங்கதன் மேற்செலும்; அவனையும் விலக்கிக்
கலக்கும் வானரக் காவலன்; அனுமன்முன் கடுகும்
அலக்கண் அன்னதை இன்னதென் றுரைசெய லாமோ?

வேல் ஏற்று வீரன் வீழ்ந்தது.

முன்நின் றாரெலாம் பின்னுறக் காலினின் முடுகி
நின்மின் யான்இது விலக்குவன் என்றுரை நேரா
மின்னும் வேலினை விண்ணவர் கண்புடைத்து இரங்கப்
பொன்னின் மார்பிடை ஏற்றனன் முதுகிடைப் போக. (4)

(வேல்ஏற்ற படலம் 29---32)

இங்கே நிகழ்ந்துள்ள நிகழ்ச்சிகளை உள்ளக் கண்களால் ஓர்ந்து காண்பவர் எவரும் உருகி மறுகுவர். குறிதவறுமல் தான் கருதி எய்த பாணங்களையெல்லாம் வாரி விழுங்கிக் கொண்டு வேல் வேகமாய் மேலே வரவே இளையவன் சாகவேழுண்டான். பட்டபோது அவன் நான்முகன் ஆயினும் படுக்கும் என்று வீடணன் சொன்னமையால் வேறே போராடுவது வீண் என்று வில்லை இடதுகையில் ஏந்திக்கொண்டு ஒல்லையில் நேரே எதிர்ந்து சென்றான். தான் செத்தாலும் விபீடணனைச் சாகாமல் காத்தருளினல் அது தனது பிறவிப் பேரும் என்று பெரு மகிழ்வோடு இளவல் முன்னே விரைந்து நின்றான். தம்பால் அன்பாய்த் தம்

மைவந்து சேர்ந்துள்ளவனுக்கு அல்லல் யாதும் அணுகலாகாது என்று உள்ளம் துணிந்து உரிமையோடு ஊக்கி விரைந்தான்.

அடைக்கலம் புகுந்தவன் அழியப் பார்ப்பது என்?

இலக்குவன் கருதி மூண்டுள்ளதை இது காட்டியுள்ளது. கருத்தும் குறிப்பும் கூர்ந்து சிந்தித்து ஓர்ந்து உணரவந்தன.

இலங்கை வேந்தன் வெறுத்துத் துரத்தியபின் இராமனே தஞ்சம் என்று நெஞ்சம் துணிந்து வந்து நேரே அடைக்கலம் புகுந்தவன் ஆதலால் அந்த விபீடணனை எவ்வழியும் இனிது பாது காப்பதே தனது செவ்விய கடமை என்று திவ்விய நீர்மையோடு இளையவன் எண்ணி முன்னே விரைவாய் முனைந்திருக்கிறான்.

அடைக்கலமாய்த் தன்னை அடையவில்லை; அண்ணனையே சரணம் அடைந்திருக்கிறான்; ஆயினும் அம் முன்னவன் செய்யவுரியதைப் பின்னவன் மூண்டு புரிந்தான். கரும நிலையில் உயிரின் கிழமைகள் மருமமாய் மருவித் தருமங்கள் மிளிர்கின்றன.

தமையனது அடைக்கலப் பொருளைக் காத்தற்காகத் தன் இன்னுயிரைத் தம்பி முன்னுற வழங்க நேர்ந்தது அரிய தியாகமாய் விளங்கி நின்றது. தன்னை அடைந்த ஒரு புறுவைப் புரந்தருள முன்னம் உயிரை உவந்தருளிய புண்ணிய வேந்தன் மரபில்வந்தவன் ஆதலால் அடைக்கலம் காக்க ஆர்வமாய் முந்தினன்.

காட்டுப் பறவையைக் காத்தருளத் தன்னுயிராம்
கூட்டுப் பறவை கொடுத்தளித்தான்---ஈட்டுபுகழ்
வள்ளல் வழிமரபில் வந்தான் இளையவனும்
உள்ளுவந்து தந்தான் உயிர்.

என்று உம்பரும் இம்பரும் ஒருங்கே பரிந்து மருங்கெங்கும் மறுகி நின்று உருகிப் புலம்ப இலக்குவன் உறுதியாய் முன்னே புகுந்தான். தன் நெஞ்சில் அந்த வேலை நேரே தாங்க இவன் அஞ்சாமல் பாய்ந்தது அதிசய தீரமாய்த் தோன்றியது.

ஏற்பன் என் தனி மார்பின்.

இராவணன் ஏவிய வேல் அதிசய மகிமையுடையது; எவ்வகை ஆயுதங்களாலும் யாதும் தடை செய்ய முடியாது; வெளியே விட்டால் ஓர் உயிரைப் பருகாமல் வறிதே மீளாது

என்று அதன் மருமங்களை யெல்லாம் நன்கு தெரிந்து கொண்டான் ஆகலால் அம்பு தொடுக்காமல் ஆருயிரையே கொடுக்க நேர்ந்தான். அஞ்சாத நெஞ்சத் துணிவு அதிசயமாய் நீண்டது

சிறந்த போர் வீரன் ஆதலால் இறந்து போவதிலும் இழிந்துபோகாமல் விரைந்து இறக்கவேண்டும் என்று துணிந்து கொண்டான். எதிரி வீசி எறிந்த வேல் மார்பில் பாய்ந்து மாய்ந்தால் அது வீரர்க்கு மகிமைச் சாவாம்; அந்த அரிய சாவை உரிமையோடு அடைய விரைந்தான்; அந்த உண்மை என் மார்பின் ஏற்பன் என்றதனால் தெரிய வந்தது. தனி மார்பு என்றது அதன் தகைமையை நுணுகி உணர. நீர்மை நேர்மை வீரம் முதலியமேன்மைகளில் ஒப்பற்று விளங்குகிறஅந்தஅற்புதமார்பைத் தனி உரிமையாகவே எதிரியின் வேலுக்கு இனிது வழங்கினான்.

வீடணனைக் கொன்று தொலைக்க வென்றி வீறோடு வேகமாய் வருகிற வேலைத் தன் ஆகத்தில் ஏற்கக் கருதி நேரே இலக்குவன் ஏகவே நிலை தெரிந்த அவன் விரைந்து இளவல் முன்னே சேர்ந்தான். அவனுக்கு முந்தி அங்கதன் ஓடினான்.

பரிதாப நிலை.

விபீடணனைப் பின்னே தள்ளி அங்கதன் ஓடவும், அவனுக்கு முன்னே சுக்கிரீவன் தாவினான்; அந்த மூவருக்கும் முன்னதாக அனுமான் ஓடவே இலக்குவன் அதிவேகமாய் அவனுக்கு முன்னே பாய்ந்தான்; பாயவே வேல் நேரே பாய்ந்து மார்பை ஊடுருவிப்போயது. போகவே இளவல் அவசமாய்க் கீழேவீழ்ந்தான்.

அலக்கண் அன்னதை இன்னது என்று உரை செயலாமே?

ஐந்து பேரும் ஒருவருக்கு முந்திஒருவர் சாகவிரைந்து வேல் மேல் ஓடிய நிலைமையைக் கூறி வந்த கவி இறுதியில் இவ்வாறு பரிதாபமாய் உருகி உரைத்திருக்கிறார். அலக்கண் = துன்பம். அந்த துன்பக் காட்சியை நான் எவ்வாறு சொல்லுவேன்? எப்படி விளக்குவேன்? அந்தோ! என்று அல்லல் நிலையை எண்ணி உள்ளம் தத்தளித்திருப்பது உரையில் உய்த்துணர வந்தது. நேரே பார்த்தால் எந்த நெஞ்சும் நிலை குலைந்து போம்; ஓர்ந்து பேச நேர்ந்தால் உள்ளம் கரைந்து தேய்ந்து ஓய்ந்து போம் என்பது ஆய்ந்து கொள்ள நேர்ந்தது. அல்லல் நிலை சொல்ல முடியாது.

நேரே இறந்துபட எண்ணித் தனக்கு முன்னே விரைந்து ஓடிய நால்வரையும் கடந்து இளையவன் முதலில் பாய்ந்துள்ளான். பாயும்போதே அவர் ஆறுதலடையும்படி வாய் திறந்து கூவியிருக்கிருன். நின்மின் யான் இது விலக்குவன் என்று இலக்குவன் இவ்வாறு உரைத்துக் கொண்டு ஓடியது மற்ற நால்வரும் சாகாமல் நிற்க வேண்டியே. வேலை வெல்ல முடியாது; தன்னை அது கொன்றுவிடும் என்று தெரிந்தும் அவர் நின்று விடும்படி அங்ஙனம் நேரே விரைந்து கூறி வென்றி வீரோடு நேர்ந்தான்.

சீறி வருகிற அக் கூரிய வேல் எதிரே தன் மார்பை நேரே காட்டி இவ் வீரன் தீரமாய்ப் பாய்ந்தான். அவ்வாறு பாயும் போது தேவர் யாவரும் ஐயகோ! என்று அலறித் துடித்தார்.

> மின்னும் வேலினை விண்ணவர் கண்புடைத்து இரங்கப்
> பொன்னின் மார்பிடை ஏற்றனன்.

இலக்குவனுடைய மார்பில் வேல் பாய்ந்த போது வெய்ய துயரமாய் விண்ணவர் கண்களை மோதிக் கலுழ்ந்து துடித்துள்ளமையை இது காட்டியுள்ளது. இந்தப் புண்ணிய வீரன் சாவதைக் கண்களால் நேரே காண நேர்ந்தோமே! என்று அமரர் தமரோடு அலமந்து பதைத் திருத்தலால் அவரது அவலத்துயரம் அறியவந்தது. விண்ணோர் துடித்தது இவ்வீரனிலையைவிளக்கியது.

அழகு குடி கொண்ட விழுமிய நிலைமையது ஆதலால் பொன்னின் மார்பு என்ருர். இராமனையே எண்ணி எண்ணி இனிது மகிழும் பெருமையது; வீரத் திரு விழைந்திருப்பது; அத்தகைய உத்தம மார்பில் எதிரி உய்த்த அதிசய வேலை எதிரோடி ஏற்ருன்.

அச்சம் யாதும் இல்லாமல் உச்சமாய் முன்னே பாய்ந்து நெஞ்சை நேரே காட்டி வேலை விரைந்து வாங்கி யிருத்தலால் ஏற்றனன் என்ருர். உற்ற நண்பனுக்கு உயிரை ஈய உரிமையோடு வேலை ஏற்ருன். பிறர் சுகமாய் வாழத் தான் துயராய்ச் சாக நேர்ந்தது அரிய தியாகமாய் அதிசய நிலையில்ஓங்கிநின்றது.

அருமைச் செயல்கள் பெருமைக் கீர்த்திகளாய்ப் பெருகியுள்ளன. உயர்ந்த உத்தம நிலைகள் ஈங்கு உய்த்துணர வந்தன.

சத்திய சோதனை

கோசிக முனிவரது சதியால் அரிச்சந்திரன் அரசை இழந்து

அடவி புகுந்தான். மனைவியும் மகனும் மந்திரியும் அவனைப் பின் தொடர்ந்து சென்றனர். முனிவர் புரிந்த சூழ்ச்சியால் வனத்தினிடையே கொடிய காட்டுத் தீ ஒன்று தோன்றியது. ஓர் உயிரை அழித்தே தீரும் என்று தெரியவே அரிச்சந்திரன் அதில் பாய விரைந்தான். மந்திரி அவனைத் தடுத்துத் தான் மாள முந்தினன்; அந்த இருவரையும் நிறுத்திச் சந்திரமதி சாக விரைந்தாள்; அந்தத் தாய்க்கு முன்னே மகன் தேவதாசன் மாண்டுபட மூண்டான். மறுக்கமான அத்துயரக் காட்சியைக் கண்டு வானும் மறுகியது; அந்த அவல நிலையை அயலே காண வருகிறோம்.

மந்திரி மறுகியது.

அன்னவை உரைக்க அண்ணல் அவனைமார் பிறுகப்புல்லி
மன்னவர் தம்மை அன்றி மற்றவர் உயிரை உண்ணாது
என்னவும் கேட்டேன் யான்நீ இறக்கினும் இறக்க வேண்டும்
உன்னுயிர் விடாமல் என்றன் ஓருயிர் விடுதல் நன்றே. (1)

மன்னன் மறுத்தது.

இருவரும் இறந்தோம் ஆகில் இவளைஓர் பதியில் சேர்க்க
ஒருதுணை உண்டோசொல்லாய் உறுபொருளுணர்ந்தோய்என்று
மருமலர் நறுந்தார் மன்னன் மறுதலைத் துரைக்கும் எல்லை
திருவெழில் வடமீன் கற்பின் திருந்திழை செப்ப லுற்றாள். (2

சந்திரமதி உரைத்தது.

மாந்தரால் இறத்தல் வாழ்தல் மாதரார்க்கு என்று மேலோர்
ஆய்ந்தநூல் அறிந்தோர் கூறக் கேட்டனன் ஆத லாலே
வேந்தனை விடாது காத்தி யண்ணல்நீ யான்இவ் வெந்தீப்
பாய்ந்துயிர் விடுவேன் என்றுப் பைந்தொடி முந்திச் சென்றாள்.

மகன் முந்தியது.

அன்னை தான்ஏகமைந்தன் அலறிச் சென்று அடிவீழ்ந்து அன்னாய்!
என்னைநீர் பயந்தீர் உங்கள் இடுக்கணுக்கு உதவ அன்றோ?
முன்னைஊழ் விதியி னாலே முந்தயான் தழலில் வீழ்வேன்
பின்னைநீர் பிழைமின் என்றான் பெருகுநீர் அருவிக் கண்ணான்.

தாய் உருகியது.

தையலாள் அச்சொற் கேட்டுத் தனயனைத் தழுவி மோந்து
செய்யவாய்ப் பல்வீழ்ந் நில்லாய் செழுமுலை மறந்தாயல்லை
ஐயவித் துணிவும் இந்த அறிவும்எங்கு அடுத்த தென்னாக்
கையினால் முகத்தில் மோதிக் கண்ணினீர் அருவி சோர்ந்தாள்.
(அரிச்சந்திர புராணம்)

அங்கே நிகழ்ந்துள்ள நிலைகளை இவை உணர்த்தியுள்ளன. உத்தமமான ஓர் உயர்ந்த குடும்பம் தீயுள் பாய்ந்து மாய ஒருங்கே விரைந்திருக்கிறது. ஒருவரினும் ஒருவர் முந்தி இறந்து போக விரைந்தது வியந்து காண நேர்ந்தது. அரிய செயல் வியப்பாயது.

அத்தகைய சத்திய வேந்தன் மரபில் வந்த இந்த உத்தம இளவல் இங்கே போர் முகத்தில் நேரே பாய்ந்து யாரையும் கொல்ல வல்ல வேலை மார்பில் ஏற்றுப் பார்மேல் வீழ்ந்தான்.

இராவணன் மீண்டது.

இவ்வீரன் கீழே விழவே விபீடணன் இராவணன் தேர் மேல் பாய்ந்து சாரதியைக் கொன்று தொலைத்து அவனைக் கொல்ல மூண்டு ஒல்லையில் உருத்துப் பொருதான். அவன் கொதித்து ஏவிய கொடிய பாணங்கள் விபீடணனுடைய உடலை ஊடுருவி ஓடின. அனுமான் ஆர்த்துவரவே அவனையும் அம்புகளால் துன்புறுத்தி வீழ்த்தினான். தலைவர் பலரையும் நிலைகுலைத்து இலங்கை வேந்தன் வெற்றிக் களிப்போடு மீளநேர்ந்தான். அவ்வாறு அவன் மீண்டு தேரைக் கடாவி விரைந்து செல்லுங்கால் "நான் மாண்டு மடிந்தாலும் உன்னை விடேன்" என்று மூண்டு தொடர்ந்து வீடணன் அடர்ந்து போராடினான். ஆங்காரமாய் அமராடியும் அவன் ஏவிய சுடு தீக் கணைகளால் யாதும் ஆற்ற முடியாமல் அயர்ந்து சாய்ந்தான். வீடணன் சாயவே இராவணன் விரைந்து வெற்றி முழக்கம் புரிந்து இலங்காபுரிக்கு நேரே போயினான். பகை தொலைந்தது என்ற உவகை ஓங்கி நின்றது.

பரிந்து புலம்பியது.

அதிசய வீரனான இலக்குவன் மாய்ந்தான் என்று தெரியவே வானர வீரர்கள் யாவரும் உள்ளம் துடித்து உருகிப் புலம்பினார். அம்புகளால் அடிபட்டு அயர்ந்து கிடந்த விபீடணன் விரைந்து வந்து இளையவனைப் பார்த்து உளம் மிக மறுகி உயிர் பதைத்துத் துயரோடு அலறினான். அழுது துடிக்கின்ற அவனைச் சாம்புவன் தேற்றி அபாயம் நீக்கும் உபாயத்தை விரைந்து நோக்கினான். ஆறுதல் கூறினும் அல்லல்கள் எல்லைகளை மீறின.

துயரால் துடித்தது.

அரக்கன் ஏகினன் வீடணன் வாய்திறந்து அரற்றி

இரக்கம் தானென இலக்குவன் இணையடித்தலத்தில்
கரக்க லாகலாக் காதலன் வீழ்ந்தனன் கலுழ்ந்தான்
குரங்கு வெள்ளமும் தலைவரும் துயரிடைக் குளித்தார்.

வீடணன் பதைத்தது.

பொன்னிரும்புறு காளிமைப் பொருப்பினான் பொன்ற
என்னிருந்து நான் இறப்பன் இக் கணத்து எனையாளும்
மன்னிருந்தினி வாழ்கிலன் என்றனன் மறுக
நின்னில் என்றிறை சாம்பவன் உரைஒன்று நிகழ்த்தும்.

சாம்பவன் தேற்றியது.

அனுமன்நிற்க நாம் ஆருயிர்க்கு இரங்குவது அறிவோ?
நினையும் அத்துணை மாத்திரத் துலகெலாம் நிமிர்வான்
வினையின் நன்மருந் தளிக்கின்றான் வீரர்க்கு வீரன்
தினையும் அல்லலுற் றழுங்கன்மின் என்றிடர் தீர்த்தான்.

அனுமானை ஊக்கியது.

மருந்தின் காதலன் மார்பிடை அம்பெலாம் வாங்கி
இருந்தி யோகடிது ஏகலை இளவலை இங்ஙன்
வருந்தம் காணுமோ மன்னவன் என்னலும் அன்னான்
கருத்தை உன்னி அம் மாருதி உலகெலாம் கடந்தான். (4)
(வேல் ஏற்ற படலம் 38-40)

போர்க்களத்தில் நேர்ந்துள்ள நிலைகளையும் துயர்களையும் இங்கே கூர்ந்து நோக்கி ஓர்ந்து கொள்கிறோம். இலங்கை வேந்தன் எறிந்த வேலால் இலக்குவன் கீழே விழ்ந்து மாய்ந்தது போல் மயங்கிக் கிடக்கவே எல்லாரும் கலங்கி அழுதார். இளவலின் காலடியில் நெடிது விழுந்து புரண்டு வீடணன் கதறிப் புலம்பினான். "ஆ வீரக்குரிசிலே! என் உயிரைக் காப்பாற்ற உன் உயிரைக் கொடுத்தாயே! அடைக்கலப் பொருளை ஆதரித்தருளும் அரிய பேராண்மையைக் கருதுந்தோறும் என் உள்ளம் உருகிக் கரைகிறது; உன் பிரிவை எம் பெருமான் அறிந்தால் தன் உயிரை வைத்திருக்க மாட்டார்; தம்பி மாண்டான் என்ற சொல் செவியில் விழுமுன்னரே நம்பி புவியில் விழுந்து மாண்டு விடுவான்; அந்தப்பரிதாபநிலையை என்கண்கள் காணுமுன்னரே நான் விரைந்து இறந்து மடிவேன்; இருந்து பழியும் பாவமும்

அழி துயரங்களையும் பாரேன்'' என்று விழி நீர் சொரிந்து இவ்வாறு பரிதாபமாய்ப்புலம்பிச் சாக விரைந்துவேகமாஎழுந்தான்.

சாம்பவன் குறித்தது

அவலத் துயரால் அலமந்து வீடணன் சாகவிரைந்தபோது சாம்பவன் தடுத்து நிறுத்தினன். இலங்கைத் ''தம்பி! நீ கலங்கி மயங்காதே; அரிய சஞ்சீவி ஆகிய அனுமன் இருக்கும் போது நாம் மனம் மறுகிப் புலம்பலாமா? ஆருயிரருளும் பேரமுது அவன்; சிறந்த கலைஞானி; உயர்ந்த போர்வீரன் என உலகம் அவனைப் புகழ்ந்து வந்தாலும் நான் அவனை ஒரு தரும தேவதை; சிவ அமுதம் என்றே கருதி வருகிறேன்; விரைந்து மருந்து தந்து இளவலை எழுப்பியருளுவான்; நீ உளம் மறுகி அழாதே; உறுதியாய் நில்'' என்று தேற்றி நிறுத்தி விட்டு அனுமனிடம் ஓடினன்.

அனுமன் நிலை.

இராவணன் ஏவிய கொடியபாணங்களால் நெடிது மயங்கி நிலத்தில் கிடந்த அனுமனைச் சாம்பவன் ஏம்பலோடு எடுத்து மார்பில் தைத்திருந்த அம்புகளையெல்லாம் பறித்து எறிந்தான். எறியவே மாருதி சிறிது கண்விழித்துக் கிழவனை நோக்கி இளவலின் நிலையை நினைந்து உழுவலன்போடு உருகி அழுதான்.

உள்ளம் உருகிக் கண்ணீர் சொரிந்து அழுகின்ற அந்த விழுமிய வீரனை வியந்து பார்த்து ''அஞ்சனைச் சிங்கமே! நீயுமா எங்களைப் போல நெஞ்சம் கலங்கி அழுகிறாய்! அழுவதால் யாது பயன்? ஆவதை வேகமாய்ச் செய்! உனது அதிசய ஆற்றல் உனக்கு மாத்திரம் தெரியாமல் இருப்பது எனக்குப் பேரதிசயமாய்த் தோன்றுகிறது. தோன்றலே! இளவலுக்கு நேர்ந்துள்ள அழிவு நிலையை நம் பெருமான் அறியுமுன்னரே விழி தெரியாமல் செய்ய வேண்டும்; விரைந்து போய் மருந்து கொண்டு வந்து விண்ணையும் மண்ணையும் வாழச் செய்!'' என்று இன்னவாறு சாம்பவன் கூறவே உள்ளம் தெளிந்து அனுமான் அதிவேகமாய் மேலே தாவினன். வான வீதியில் வாவி வட திசை நோக்கி அடலோடு அதிசய விரைவில் போயினன்.

மாருதி உலகெலாம் கடந்தான்.

கதிவேகம் கொண்டு அதி வேகமாய் ஆகாய வீதியில் அனுமான் போயிருக்கும் நிலையை இது காட்டியுள்ளது. இங்கே வேறு பேர் கூருமல் மாருதி என்றது வான வீதியில் போன வேகத்தை விவேகமாய் ஓர்ந்து உணர்ந்து கொள்ள. மருத்து = காற்று. அந்த மருத்தின் மகன் மாருதி என நேர்ந்தான். வாயு குமாரன் தந்தையும் வியந்து காண வாயுவேகத்தினும் மேலான வேகத்தில் மேலே வேகமாய்ப் போயினன். அந்தப் போக்கையும் நோக்கையும் உய்த்துணர உரிய பெயரை இங்கே வைத்தருளினர். அதிசய நிலைமைகள் மதிநலனோடு துதிசெய்ய வந்தன.

பெருந்தகைமை.

இவ்வளவு அற்புத ஆற்றலும் அதிசய ஏற்றமும் தன்னிடம் அமைந்திருந்தும் யாண்டும் யாதொரு பெருமையும் காட்டாமல் மவுனமாய் அடங்கியிருப்பது அனுமானுடைய மகிமையை மிகவும் உயர்வாக விளக்கியுள்ளது. பணிவும் இன் சொல்லும் அடக்கமும் கரும வீரமும் இவனிடம் மருமமாய்த் தரும ஒளிகளை வீசியுள்ளன. பண்பாடுகள் பயனோடு திகழ்கின்றன.

சிறிது ஆற்றல் மருவியிருந்தாலும் தன்னை வியந்து தருக்கிச் சின்னமனிதர் சிறுமையை விளக்கி நிற்கின்றார். வீணுகப் பெருமை பேசுபவன் வீண மனிதனுய்க் காண நேர்கிருன். சிறுமைகளை மருவி நின்று பெருமை பெற விழைவது முழு மடமையாய் இழிவுகளையே விளைத்து எவ்வழியும் பழிகளையே பயந்துள்ளது.

பிலுக்கும் செருக்கும் சின்னத் தனத்தின் அடையாளங்களாய் மின்னி நிற்கின்றன. பெருந்தன்மை நிறைந்த பொழுது அவை இருந்த இடமும் தடந் தெரியாமல் அடியோடு மறைந்து போகின்றன. நல்லநீர்மைகள் வரப் புல்லிய கீழ்மைகள் ஒழியும்.

"Where boasting ends, there dignity begins." (Young)

"எங்கே வீண் பிலுக்கு ஒழிகிறதோ அங்கேயிருந்துதான் கண்ணியம் விளைகிறது" என்னும் இதுஈண்டு எண்ணியுணர வுரியது. அரிய மகிமை மாண்புகள் இனிய தகைமைகளால் எழில் சுரந்து திகழ்கின்றன. குணநலங்கள் உயர் கணங்களாகின்றன.

மேலான பெருந் தன்மைக்கு அனுமான் சால்பான தனி

நிலையமாய் நிலவி நிற்கிறான். புனித குண சொரூபியான இராமனும் இவனுடைய இனிய பண்புகளை நினைந்து வியந்து எவ்வழியும் மகிழ்ந்து புகழ்ந்துள்ளான். அரிய வீரமும் பெரிய நீர்மைகளும் பெருகியுள்ளமையால் அமரரும் அனுமனை அதிசய நிலையில் துதி செய்து யாண்டும் ஆவலோடு போற்றி வருகின்றார்.

அருந் திறல் நிறைந்த இப் பெருந்தகையாளன் விரைந்து வான வீதியில் போகவே வானர வீரர்கள் யாவரும் உய்தி பெற்றோம் என்று உறுதி பூண்டு ஊக்கி நின்றார். போன அரை நாழிகைக்குள் மருந்து மலையோடு மாருதி மீண்டு வந்தான். அமிர்த மயமான அந்தச் சஞ்சீவி நேரே வரவே கீழே சாய்ந்து கிடந்த இலக்குவன் விழித்து எழுந்தான். அந்த எழுச்சியைக் கண்டதும் எல்லாரும் உள்ளம் களித்துத் துள்ளிக் குதித்து ஆனந்த ஆரவாரங்கள் செய்தனர். ஆகாயத்தில் நின்றவாறே அந்த மருந்து மலையைப் பழையபடியே போய் இருந்தருளும் படி நினைந்து வீசினான். குறித்தவாறே அது குறிதவறாமல் போய்க் குலாவியிருந்தது. வித்தக வீரனுடைய விஞ்சை விசித்திரக் காட்சியாய் விளங்கி நின்றது. கருதிச் செய்த கருமம் பயனைத் தரவே பெரிதும் மகிழ்ந்து உறுதி கூர்ந்து சேர்ந்தான்.

அநுமான் விரைந்து கீழே பாய்ந்து இலக்குவனை வணங்கி நின்றான். அடியில் வணங்கினவனைப் படியில் விழாமல் வாரி எடுத்து மார்போடு அணைத்து உழுவலன்போடு உருகி நோக்கி வீடணன் எங்கே? சேமமா? என்று இவ்வீரன் ஆர்வமாய்க் கேட்டான். அந்தக் கேள்வி முடியுமுன்னமே இளவல் அடியில் விழி நீர் சோர வீடணன் விழுந்து தொழுதான். அவனைத் தழுவி மகிழ்ந்தான். மருந்து வந்ததும் இளையவன் எழுந்ததும் யாவும் விரைந்து நடந்தன. சரித நிகழ்ச்சிகள் அரிய காட்சிகளாயுள்ளன.

சஞ்சீவி சார்ந்தது.

உய்த்தொரு திசைமேல் ஓடி உலகெலாம் கடக்கப் பாய்ந்து
மெய்த்தகு மருந்து தன்னை வெற்பொடுங் கொணர்ந்த வீரன்
பொய்த்தலில் குறிகள் தானே பொதுவற நோக்கிப்போன்போல்
வைத்தது வாங்கிக் கொண்டு வருதலில் வருத்தம் உண்டோ?

இலக்குவன் எழுந்தது.

தந்தனன் மருந்து தன்னைத் தாக்குதல் முன்னே யோகம்

வந்தது மாண்டார்க்கெல்லாம் உயிர் தரும் வலத்தது என்றால்
நொந்தவர் நொய்வு தீரக்கச் சிறிதன்றோ நொடிதன் முன்னே
இந்திரன் உலகம் ஆர்க்க எழுந்தனன் இளைய வீரன்.

உவந்து மொழிந்தது.

எழுந்து நின்று அனுமன் தன்னை இருகையால் தழுவி எந்தாய்
விழுந்திலன் அன்றோ மற்றவ் வீடணன் என்ன விம்மித்
தொழுந்துணை யவனைநோக்கித் துணுக்கமும் துயரும் நீங்கிக்
கொழுந்தியும் மீண்டாள் பட்டான் அரக்கன்என்று உவகை
(கொண்டான்.

உறுதி கூர்ந்தது

தருமம்என்று அறிஞர்சொல்லும் தனிப்பொருள் தன்னை இன்னே
கருமம் என்று அனுமன் ஆக்கிக் காட்டிய தன்மை கண்டால்
அருமைஎன் இராமற்கு அம்மா அறம்வெல்லும்பாவம்தோற்கும்
இருமையும் நோக்கின் என்னு இராமன்பால் எழுந்து சென்றார்.

நிகழ்ந்துள்ள நிலைகளை இங்கே நேரே காண்கின்றோம். அதிசய விளைவுகள் வியப்புகளாய் விரிந்து விளங்குகின்றன. சஞ்சீவியால் துயர் நீங்கி உயிர்த்து எழுந்த இலக்குவன் அனுமானை ஆரத்தழுவிக் கொண்டு உடனே ஆவலோடு வீடணனைக் குறித்து விசாரித்திருப்பது உள்ளத்தின் கவலையை உணர்த்தி நிற்கிறது.

இராவணன் வேலை வீசியது வீடணனை நோக்கியே ஆதலால் தன் மார்பை ஊடுருவிப் போய் அவனையும் அது வீழ்த்தியிருக்குமோ? என்று ஐயம் அடைந்திருந்தான்; உள்ளத்தில் ஆழ்ந்திருந்த அந்தப்பரிவு விழித்து எழுந்த போது விரைந்து முந்தியது; முந்தவே விழுந்திலன் அன்றோ வீடணன்? என்று விழைந்து வினவினான். விழுதல் முதலில் எழுந்தது உழுவலன்புடைய அவன் பழுதின்றி யிருக்கும் நிலைமை தெரிந்து கொள்ள நேரே வந்தது.

தன் உயிரையும் மதியாமல் முன் ஏறிப் பாய்ந்து அவன் உயிரைப் பாதுகாத்தவன் அந்த ஆவி நிலையை இந்தவாறு அவாவி உசாவினான். தான் பிழைத்து எழுந்த பொழுது பிழையின்றி உள்ளானோ? என்று விழைவோடு கேட்ட அவ்வுரையைக் கேட்டதும் வீடணன் உள்ளம் உருகி அழுது கண்ணீர் பெருகி ஓட இளையவனைத் தொழுது உழுவலன்போடு எதிரே நின்றான்.

அவனைக் கண்டதும் ஆனந்த பரவசனாய் இளவல் உளம் களி கூர்ந்தான். அந்த இன்பக் களிப்பில் துன்பங்கள் யாவும் மறந்து உறுதியும் ஊக்கமும் பெருகி நின்றான். அந்த உவகை நிலையை அது பொழுது உரைத்த உரைகள் நன்கு தெளிவாக்கி நின்றன.

கொழுந்தியும் மீண்டாள்; பட்டான் அரக்கன்.

இலக்குவன் மொழிந்த இந்த மொழிகள் சிந்தனை செய்து தெளிந்து கொள்ள வந்தன. தான் பட்டு வருகிற பாடுகளுக்கெல்லாம் பூரணமான காரணத்தை இங்கே சுட்டியிருக்கிறான்.

சீதையைச் சிறை எடுத்து இராவணன் சிறுமைப் படுத்தியதே இராமனது இலங்கைப் போருக்கு ஏதுவாய் நேர்ந்தது. அந்தப் போராட்டம் விரைவில் முடிந்து வெற்றியடைந்து மீளலாம் என இளையவன் உள்ளம் களித்திருப்பதை உரை வெளிப்படுத்தி நின்றது. தொனிக் குறிப்புகள் நுனித்து உணரவுரியன.

கொழுந்தி என்று சீதையை மிகுந்த உரிமையோடு இலக்குவன் ஈண்டு உரைத்திருக்கிறான். யாண்டும் கூறாத முறையை இங்கே கூற நேர்ந்தது கூர்ந்து சிந்திக்கவுரியது. இலட்சுமணன் மனைவி ஊர்மிளை; சனகன் மகள்; சீதைக்கு நேரே தங்கை. ஆகவே கொழுந்தி என்று விழைந்து கூறும் கிழமை பரத சத்துருக்கனரை விட இளையவனுக்கே தலைமையான கிளையுரிமையாய் வளமை தோய்ந்து வழிமுறை வாய்ந்து நெறியே வந்துள்ளது.

அண்ணன் மனைவி அண்ணி என்றதோடு அமையாமல் இவ்வண்ணமும் கெழுதகைமை நண்ணியுள்ளமை எண்ணியுணர வந்தது. உரிய கிழமையை உள்ளம் உவந்து சொல்லினான்.

சீதையைச் சிறை மீட்ட வேண்டும் என்று இராமன் எவ்வாறு துடித்து நிற்கிறானோ அதைவிட அதிகமான துடிப்பு இலக்குவனிடம் இசைந்து நிற்கிறது. தனது அருமை மனைவியை இந்த உரிமைத் தம்பியின் பாதுகாப்பில் வைத்து விட்டுத்தான் இராமன் மானின்பின் ஏகினான்; அப்போது வந்து பேதித்துத் தன்னை அயலே நீக்கி ஒதுக்கி இராவணன் சீதையைக்கவர்ந்து கொண்டு போனான். தன் பாதுகாப்பிலிருந்து தப்பிப் போன பொருளை எப்படியும் மீட்டித் தர வேண்டியது தனது கடமை ஆதலால் அந்தப் பொறுப்புணர்ச்சி இந்தத் தம்பியிடம் நிறைந்திருக்கிறது.

ஆற்ற வுரிய கருமத்தை அரிய தருமமாய்ப் போற்றி வருகிருன்.

என்னைச் சிறை மீட்ட வேண்டிய பொறுப்பு எனது கொழுநனுக்கே தனியுரிமையானது எனச் சீதை * முன்னம் அனுமானிடம் சொல்லியிருப்பதும் ஈண்டு உள்ளியுணரவுரியது. கொடிய சிறையை நீக்கி இனிய இறையிடம் என்னைச் சேர்ப்பது என்னைக் காத்திருந்தவற்கே கடன் என்று சானகி அனுமான் மூலம் வார்த்து விடுத்த அந்த வார்த்தை இளையவன் உள்ளத்தை எவ்வழியும் செவ்வையாய்ப் பிணித்து நேரே ஈர்த்து நிற்கிறது.

கொழுநனை இராமன் மனைவியை மீட்ட உரிமைக்காகப் போராடுகிருன். கொழுந்தனை இலக்குவன் கொழுந்தியை மீட்டக் கடமைக்காக உறுதியோடு கருதி யுழைக்கிருன்.

உரிமையாளனது உடைமையையும் கடமையாளனது நிலைமையையும் ஈண்டு நாம் ஒருங்கே உணர்ந்து கொள்ளுகிருேம்.

இராவணனைக் கொன்று தொலைத்தால் அன்றிச் சீதையைச் சிறை மீட்ட முடியாது; அவன் உயிரோடிருந்து சமாதானத்துக்கு இசைந்து அமைதியாய் அமைய முடிவு செய்யான். தான் அடியோடு முடிந்து போவதையே அவன் முடிவாக முடிவு செய்து யாண்டும் கொடுமையாய் மூண்டு முனைந்துள்ளான்.

என் உயிரை விட்டாலும் நான் சீதையை விடேன் என்று வெறிகொண்ட பேயனாய் அவன் மூண்டு நிற்கின்ருன். அந்நிலை கொலையையே அவாவியுள்ளமையால் அவனது அழிவு நிலையை இளையவன் தெளிவாகத் தனது வெற்றியால் துலக்கியிருக்கிருன்.

அரக்கன் பட்டான் என்றது இராவணன் அழிந்து படுவதைத் தெளிந்து கொள்ள வந்தது. அரக்கன் என இகழ்ச்சிக் குறிப்போடு குறித்தது இரக்கமும் நீதியும் இன்றி அந்த இனத்தையெல்லாம் நாசமாக்கி அழிக்கும் நீச நிலை தெரிய. செத்து மடியவே தீமையை அவன் பற்றி யுழல்கிருன். சாவிலேயே களித்து வருவதை அவனுடைய வாழ்விலேயே தெளித்து வருகிருன். அருமை மகன் இறந்தான்; வீரத்தம்பி அழிந்தான்; உரிய சுற்றங்கள் ஒழிந்தன; பெரிய போர் வீரர்கள் யாவரும்

---

* இந்நூல் பக்கம் 3104 வரி 9 பார்க்க.

பொன்றி முடிந்தனர்; முடிவில் மூலபலம் முழுவதும் அடியோடு மாண்டது; மாண்டும் நிலைமையை உணர்ந்து திருந்தாமல் தீமையிலேயே மூண்டு திமிர் கொண்டு தீங்குகள் புரிந்து நிற்கிறான்.

பட்டால் தெரியும் படு முட்டாள் என்ற பழமொழிப்படியும் தெளியாமல் மதி கேடனாய் மதம் மீறி நிற்றலால் இதம் யாதும் கையாளாமல் அதமே செய்ய வேண்டும் என்று நிருதர் குல நாசத்தை நேரே கருதி இளையவன் உளம் துணிந்து நின்றான்.

படும் முன்னமே பட்டான் என்றும், மீளும் முன்னமே மீண்டாள் என்றும் உறுதியோடு கூறியது துணிவும் தெளிவும் விரைவும் தெரிய. கால வேகம் கரும வேகத்தைக் காட்டியது.

"வாராக் காலத்தும் நிகழும் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர். (1)

வாராக் காலத்து வினைச்சொற் கிளவி
இறப்பினும் நிகழ்வினும் சிறப்பத் தோன்றும்
இயற்கையும் தெளிவும் கிளக்கும் காலை." (2)

(தொல்காப்பியம், வினை, 44, 48)

இந்த இலக்கண விதிகள் இங்கே சிந்திக்கத் தக்கன

இலங்கை வேந்தன் செத்தான் என்று அவன் சாகும் முன்னமே இவ்வீரன் இவ்வாறு வெற்றியோடு விளம்பியருளினான். அக்கொடியவன் கொலை செய்த நிலையிலிருந்து வீடணன் தப்பிப் பிழைத்தான்; ஆதலால் அந்த மகிழ்ச்சியில் இந்த உணர்ச்சி மொழி ஒளி வீசி வந்தது. தன் உயிரைக் கொடுத்து அவன் உயிரைக் காத்தவன் அவனுடைய அண்ணன் உயிரை எடுக்க விரைந்தான். இவ் வீரக் குரிசிலின் மொழி வெற்றி ஒளியாயது.

நல்லோரைக் காப்பதும் தீயோரை அழிப்பதும் தனது குல தருமமாய் மருவியிருப்பதை இக்கோமகன் உணர்த்தி வருகிறான்.

சீதை மேல் வைத்த ஆசையே இராவணனை நாசமாக்கியது; அந்த நாச நிலை ஈண்டு நயமாய்த் தெரிய வந்தது. உத்தமபத்தினி மேல் பித்தனாய்ப் பிழை புரிந்தமையால் பழியும் பாவமும் அடைந்து குடியும் குலமும் அழிந்து அடியோடு பாழாயினான்.

எவ்வளவு வலிமைகளை எய்தி யிருந்தாலும் பாவம் படிந்தவன் யாவும் இழந்து பாழாயழிவன் என்பதை விழி தெரிய விளக்கி அவன் விளிவுற நேர்ந்தான். புண்ணியம் பொருந்தி வருவதால் இறந்தவரும் எழுந்து வர நேர்ந்தார்; அரிய தருமம் தழுவியுள்ள வரது கருமங்கள் வெற்றிகளைத் தரும் மருமங்கள் காணவந்தன.

தருமம் என்று அறிஞர் சொல்லும் பொருளை
அனுமன் காட்டினன்.

தன்னைப் பேணி வருபவரைத் தருமம் காணியாக் காத்து வருகிறது; அது அதிசய ஆற்றலுடையது; வெற்றியும் இன்பமும் யாண்டும் விளைத்தருளுவது; அத்தகைய புண்ணியத்தின் உண்மையை அநுமான் இங்கே பண்ணியுள்ள காரியங்களால் கண் எதிரே காட்டி உலகம் கண்டு தெளிய நன்கு விளக்கினன்.

எவ்வளவு இடையூறுகளை இந்தக் கரும வீரன் நீக்கியருளுகிறான்! இராமசரிதம் எவ்வழியும் செவ்வையாய்ச் செழித்து வர இவன் உழைத்து வருகிறான். எழுபது வெள்ளம் வானரங்களும் இராம லட்சுமணரும் சுகமாய் வெற்றி பெற்று வீறோடு விளங்கி வருவது இத் தீரன் சீரோடு செய்து வரும் செயலினலேயாம்.

யாரும் கருத முடியாததும் தேவரும் எண்ண இயலாததுமாகிய அதிசய காரியங்களை மிகவும் எளிதாக இவன் செய்கிறான்.

வேறு ஆதரவு யாதுமின்றித் தன் உள்ளமே துணையாய் விரைந்து சென்று சஞ்சீவி மலையைக் கொண்டு வந்து இறந்தவரை எழுப்பியருளுவதை நினைந்தபோதெல்லாம் உலகம் வியந்து மகிழ்ந்து அனுமநாயகனை உரிமையோடு புகழ்ந்து வருகின்றது.

இந்த மதிமானுடைய உறுதியும் ஊக்கமும் தீர தைரியங்களும் பொருவருநிலையில் உயர்ந்து அதிசய மருமங்களாயுள்ளன.

"Courage from hearts and not from numbers grows"
(Dryden)

"தைரியம் வெளியே கூட்டங்களில் இல்லை; உள்ளே இருதயங்களிலிருந்து வளருகிறது" என்னும் இது இங்கே அறிய வுரியது. வீரத்துணிவு விழுமிய நெஞ்சின் விளைவாயுள்ளது.

பரிசுத்தமான எண்ணங்களுடைய தருமவான் ஆதலால் இந்த மேதையிடம் அதிசய ஆற்றலும் அற்புத தீரமும் குடி

கொண்டு எவ்வழியும் திவ்விய நிலையில் நிற்கின்றன.

Courage is, an all hands, considered as an essential of high character. (Froude)

"எல்லா வகையிலும் தைரியம் என்பது உயர்ந்த ஒழுக்கத்தின் சாரமாய் அமைந்துள்ளது" என ப்ரூடு என்னும் அறிஞர் இங்ஙனம் கூறியிருக்கிறார். சீலத்தில் வீரம் சிறந்து நிற்கிறது.

புனிதமான பிரமச்சாரி ஆதலால் இம்மதிமானிடம் அதிசய சத்தி பெருகி யிருக்கிறது. புலன்களை அடக்கினவன் எதிரே உலகங்கள் அடங்கி நிற்கின்றன. தரும தேவதையின் சீவ ஒளி இக்கரும வீரனிடம் மேவி மிளிர்கிறது. இவனை உறவுரிமையாகப் பெற்றது தனது புண்ணியப் பேறு என்றே இராமன் எண்ணி மகிழ்ந்து வருவதைக் காவியத்தில் இடங்கள் தோறும் கண்டு இவனது நிலைமையை வியந்து தெளிந்து வருகிறோம்.

அருமை என் இராமற்கு அம்மா!
அறம் வெல்லும்; பாவம் தோற்கும்.

சாம்பவன் முதலிய அறிஞர்கள் இவ்வாறு எம்பலோடு இயம்பி உவந்திருக்கின்றனர். அநுமான் உரிமையாய் அமைந்திருத்தலால் இராமபிரானுக்கு எல்லாம் இனிமையாய் முடியும் என்று எல்லாரும் உவகை கூர்ந்துள்ள உரைகளால் அவனது உத்தம சத்திகள் இங்கு நன்கு உய்த்து உணர வந்தன.

அபாயங்கள் யாவும் கடந்து போயின; இனி யாதொரு இடரும் நேராது; எதிரியை விரைந்து வென்று விடலாம் என்று தைரியம் மீதூர்ந்து நின்றார். புண்ணிய மூர்த்தியான இராமன் இனி வெற்றி பெறுவது உறுதி என்பார் அறம் வெல்லும் என்றார்.

பாவம் தோற்கும் என்றது பாவமே பயின்றுள்ள இலங்கை வேந்தன் பாழாய் அழிந்து போவன் என்பது தெளிந்து கொள்ள. அழிவுக்கு உரிய காரணம் பூரணமாய் ஈங்குக் காண வந்தது.

பாவம் நஞ்சினும் கொடியது; அதனோடு யாதும் பழகலாகாது; பழகினால் அழிவே நேரும். தருமத்தையே தழுவி வாழுங்கள்; அதுதான் உங்களுக்கு வெற்றியும் இன்பமும் அருளும் என உலகமக்களுக்கு ஓர் உறுதியான போதனையை ஈண்டு உணர்த்தியருளினார். தருமம் எவ்வழியும் பெருமையேதருகிறது.

"Virtue and happiness are mother and daughter." (Pr)

தருமமும் இன்பமும் தாயும் மகளும் போல் உள்ளன என்னும் இது ஈண்டு உணரவுரியது. நேர்ந்த அபாயத்திலிருந்து இளைய பெருமாள் தப்பிப் பிழைத்தமையால் தருமம் தலை காத்தது என்று எல்லாரும் உள்ளம் உவந்து வியந்து ஒருங்கே எழுந்தார்.

இராமனைக் காண விழைந்து போர்க்களத்தை நீங்கி நடந்தார். மூலபலப் போரை முடித்து விட்டுத் தம்பியை ஆவலோடு நாடி வருகிற அந்த அண்ணலைக் காண வேண்டும் என்று வேணவாவோடு யாவரும் விரைந்து சென்றார். எதிரே வீரகம்பீரமாய் வெற்றிப் பொலிவுடன் கோதண்ட வீரன் நேரே வருவதைக் கண்டார்; எல்லாரும் ஆனந்த பரவசராய் உள்ளம் உவந்து தொழுது உழுவலன்போடு விழைந்து உருகி நின்றார்.

நிகழ்ந்ததை அறிந்தது.

தன்னைப் பிரிந்து போன பின் நடந்தவைகளை யெல்லாம் தொடர்ந்து சொல்லும்படி இராமன் கேட்டான். கேட்கவே சாம்பவன் யாவும் தெளிவாகச் சொன்னான். தான் கருதிய படியே இராவணன் மாயவஞ்சமாய்ப் புகுந்து தீயவேலை செய்திருப்பதை அறிந்து இத்தூயவன் வருந்தினான். பொல்லாத கொடியவனால் நேர்ந்த அல்லல்களை யெல்லாம் நீங்கி நல்ல சுகமாய் யாவரும் வந்துள்ளதை உணர்ந்து உள்ளம் உவந்தான்.

உற்றது முழுதும் நோக்கி ஒழிவற உணர்வு ளூறச்
சொற்றனன் சாம்பன் வீரன் அனுமனைத் தொடரப்புல்லிப்
பெற்றனன் உன்னை என்னை பெறுதன பெரியோய்! என்றும்
மற்றிடை யூறு செல்லா ஆயுளை ஆக என்றான்.

புயல்பொழி அருவிக் கண்ணன் பொருமலன் பொங்குகின்றான்
உயிர்புறத் தொழிய நின்ற உடலன்ன உருவத் தம்பி
துயர்தமக் குதவி மீளாத் துறக்கம் பெற்றுயர்ந்த தொல்லைத்
தயரதற் கண்டால் ஒத்தான் தம்முனைத் தொழுது சார்வான்.

இள்வலைத் தழுவி ஐய இரவிதன் குலத்துக்கு ஏற்ற
அளவினம் அடைந்தோர்க் காகி மன்னுயிர் கொடுத்தவன்மைத்
துளவியல் தொங்கலாய் நீ அன்னது துணிந்தாய் என்றால்
அளவிய லன்று செய்தற் கடுப்பதே ஆகு மன்றே.

புறவொன்றின் பொருட்டா யாக்கைபுண்ணுற அரிந்தபுத்தேள்
அறவனும் ஐய நின்னை நிகர்க்கிலன் அப்பால் நின்ற
பிறவினி உரைப்ப தென்னே பேரரு ளாளர் என்பார்
கறவையும் கன்றும் ஒப்பார் தமக்கிடர் காண்கின் என்றான்.

சாலிகை முதல வான போர்ப்பரந் தாங்கிற் றெல்லாம்
நீல்நிற ஞாயிறு அன்ன நெடியவன் முறையின் நீக்கிக்
கோல்சொரி தனுவும் கொற்ற அனுமன்கைக் கொடுத்துக் கொண்டல்
மேல்நிறை குன்றம் ஒன்றின் மெய்ம்மெலி வாற்றலுற்றான்.

(வேல் ஏற்ற படலம்46-50)

இங்கே நிகழ்ந்துள்ள சரித்திரக் காட்சிகளைக் கருதிநோக்கி அரிய பல உண்மைகளை உரிமையோடு உணர்ந்து கொள்கிறோம்.

தன் மேல் மூல பலச் சேனைகளை ஏவி விட்டு வேறொரு வழியாய்ச்சென்று இராவணன் மாய வஞ்சமாய் வானரங்களை வதைக்க நேர்வான் என்று யூகமாயுணர்ந்த இராமன் இளையவனை முன் எச்சரிக்கையா அவற்றைப் பாதுகாத்து நிற்கும்படி அனுப்பி வைத்தான்; விபீடணன் முதலானோரும் அவன் உடன் சென்றனர். இக்கோமகன் குறித்தபடியே இலங்கை வேந்தன் அங்கே போய்க் கொலைகள் புரிந்தான்; கொடிய அல்லலான அந்த அபாயத்திலிருந்து தப்பிப் பிழைத்து இளவல் முதலாயினோர் அண்ணலை நாடி வருகின்றார்; இந்த நம்பியும் வெற்றி பெற்றுத் தம்பியைத் தேடி வருகின்றான்; இடையே சந்திக்க நேர்ந்தான். இருவரும் பிரிந்து நின்று பெரும்போர் ஆற்றிய நேரம் நடுவே ஒன்பது நாழிகை கழிந்து போயுள்ளது.

பிரியாத பிரியத் தம்பியைப் பிரிந்து நின்றவன் பரிவு கூர்ந்து வேணவாவோடு காண வந்தான். இடையே படைகளைக் கண்டான்; கோதண்டத்தைத் தரையில் ஊன்றி ஓர் ஆலமர நீழலில் நின்றான். வீர கம்பீரமாய் நிற்கின்ற அந்தக் கோலத்தைக் கண்டதும் படைகள் ஆரவாரம் செய்து இராம ஜெயம்! இராம ஜெயம்! என்று உள்ளம் களித்துத் துள்ளிக் குதித்துத் தொழுது துதித்தன. அருகில் வந்து அடி வீழ்ந்து வணங்கிய தலைவர்கள் எல்லாரையும் முகம் மலர்ந்து நோக்கி ஏதேனும் சதிகள் நேர்ந்தனவா? என்று மதி யூகமாய் விசாரித்தான். முதியவனான சாம்பவன் யாவும் இனிது விளக்கிநேரே தெளிவாக உரைத்தான்.

மாருதி புரிந்துள்ள ஆருயிர் உதவியை அறிந்து உள்ளம் உருகி இவ்வள்ளல் அவனை அள்ளியணைத்து உழுவலன்போடு உவந்து புகழ்ந்தான். அன்பு கனிந்து வந்த அருமை மொழிகள் ஆழ்ந்த பொருளுடையனவாய் இன்பம் சுரந்து பண்புபல படிந்து பயன்களை ஓர்ந்து நயன்களைக் கூர்ந்து உணர நின்றன.

பெரியோய்! பெற்றனன் உன்னை!
பெறாதன என்னை?

ஆர்வமாய் அனுமானை ஆரத்தழுவிக்கொண்டு இராமன் இவ்வாறு உரிமையோடு உரையாடியிருக்கிறான். உள்ளம் கரைந்து உணர்ச்சி மீதூர்ந்து வார்த்தைகள் வெளியே வந்துள்ளன. தனக்கு மாருதி துணையாக அமைந்தது தனது அரிய தவப்பேறே என்று கருதியிருப்பதை நேரே அவனிடம் இக்கோமகன் இங்ஙனம் குறித்தான். நீ உரிமைத் துணையாய் என் அருகு இருக்கும் போது எனக்குக் கிடையாத அரிய பொருள் யாதும் இல்லை; பெறலரிய யாவும் எனக்கு எளிதே கிடைக்கும் என்பான் பெறாதன என்னை? என்றான்.

எதை அடைந்தால் எல்லாம் அடைந்ததாமோ அதை அடைந்து கொண்டேன் என்று அகம் மிக மகிழ்ந்துள்ளான். விளி விழுமிய நிலையில் எழுந்தது. யாரும் செய்ய முடியாத அரிய காரியங்களைச் செய்து பெரிய உயிருதவி செய்துள்ளமை யால் பெரியோய்! என்று உரிமையோடு உவந்து அழைத்தான்.

"செயற்கு அரிய செய்வார் பெரியர்" (குறள் 26)

என்னும் பொய்யாமொழிக்கு மெய்யான சான்றாய் அனுமன் மேவியுள்ளான்; அவ்வுண்மையை இவன் செய்துவரும் செயல்கள் தெளிவாக்கி வருகின்றன. அரியசெயலால் பெரியனாயினான்.

மனத்தை அடக்கிப் பொறிகளை வென்று அருந்தவ முனிவரினும் இவன் உயர்ந்து நிற்கின்றான்; யாரும் செய்தற்கு அரிய காரியங்களைச் செய்து கரும வீரனாய் நிலவி மிளிர் கின்றான். இராம காரியமாய் இவன் ஆற்றி வந்துள்ள செயல்கள் அதிசயமுடையன; அற்புத நிலையன. கருங்கடல் கடந்து இலங்கை புகுந்து சீதையைக் கண்டு ஆதரவுகூறித் தேற்றி யருளி அரக்கர் திரள்களை அழித்து ஒழித்து ஊரை எரித்துக் கரி

யாக்கி வெற்றி வீரேடு மீண்டு வந்தான்; பிரமாத்திரத்தால் அடிபட்டு இலக்குவன் மாண்டபோது விரைந்து போய்ச் சஞ்சீவியைக் கொண்டுவந்து உயிர்ப்பித்தான்; கொடிய அபாயங்கள் நேர்ந்தபோதெல்லாம் உபாயங்கள் புரிந்து உய்தி செய்தருளுகிருன்; முடிவில் வேலால் நேர்ந்த துயரையும் கடிது நீக்கி நெடிது காத்தான்; இவ்வாறு எவ்வழியும் இதமே புரிந்து திவ்விய மகிமையோடு சிறந்து வருகிருன். யாண்டும் தளராமல் வேண்டிய வழியெல்லாம் வினையாற்றிக் கண்ணை இமை காப்பதுபோல் இராமனையும் சேனைகளையும் இம்மான வீரன் பேணி வருவதைக் கருதிக்காணுவார் எவரும் இவனுடைய மகிமை மாண்புகளை உறுதியாய் நன்கு உணர்ந்து கொள்ளுவர்.

அதிசயமான அற்புதங்களைச் செய்திருத்தலால் அமரரும் இவனைத் துதிசெய்து வருகின்ருர். அரிய செய்வார் பெரியர் என்ற முதுமொழிக்கு இவன் முதன்மையாய் நிற்கின்ருன். இவனது சீவிய சரிதம் உலக சரித்திரமாய் நிலவி நிற்கிறது.

No great man lives in vain. The history of the world is but the biography of great men. (Carlyle)

"பெரிய மனிதன் வீணே வாழான்; அரியன ஆற்றுவான்; பெரியோர்களுடைய சீவிய சரிதமே உலக சரித்திரமாயுள்ளது" என கார்லைல் என்னும் ஆங்கில அறிஞர் இவ்வாறு கூறியிருக்கிருர். பெருமைநிலைகள் ஈங்குஉரிமையா யுணரவந்தன.

பெரியோர் எவரும் இராமனைப் பெரியோன் என்று புகழ்ந்து போற்றி வருகின்ருர்; அந்தப் பெருந்தகை அனுமானைப் பெரியோன் என்று இங்கே உவந்து உரைத்திருக்கிருன். உரையின் தொனிகள் ஊன்றி உணர வுரியன.

கொடிய பகைகளை வென்று அரியன ஆற்றி அல்லல் எல்லாம் கடந்து நல்ல சுகமாய்த் தான் ஒரு பெரியன் என வாழ்வதற்குக் காரணம் அனுமானது உரிமையான துணைமையேயாம் என இராமன் மனம் மகிழ்ந்து முனிவர்களிடம் கூறியுள்ளான். அகத்திய முனிவரிடம் ஒருமுறை பேசும்பொழுது அனுமானுடைய வீரப்பிரதாபங்களையும் அவஞல் தான் அடைந்துள்ள பெருமைகளையும் இப்பெருமான் விரித்து விளக்கினன் உரிமையா வந்த அவ்வுரைகளுள் சில இங்கே காண வருகிருேம்.

அங்கார தாரை குடர்மாலை சூடி அலைவேலை தாவி அடையார்
தங்காரணங்கள் பொடியாக நூறி வருசம்பு மாலி முதலோர்
பொங்கார வார மொடு நேர்பொருந்த அவர்சேனை யானை பரிதேர்
சங்காரம் ஆடும் அனுமானை ஒக்கும் அவரார் சகத்தில் இனியே? (1)

வரையோடு உருத்திரனை மீது எடுத்த வயவாள் அரக்கன் மகனைத்
தரையோடு அரைத்து நகர்தீ மடுத்து வருசேனையைச் சலதியில்
திரையோடு அமுக்கி ஒருதாவில் அத்தி வடதீரமுற்ற திசைமேல்
உரையோடு வெற்றி அனுமானை ஒக்கும் உரவோர் சகத்தில் உளரோ?

அருமா தவத்தின் முனிவா! உரைக்கின் அனுமானை ஒக்குமவரார்?
செருவார் சிலைக்கை இளையோனை மிக்க திறவானரப்படையொடு
மருவார் மயக்க வடமேரு வுக்கு வடபால் மருத்து மலைகொண்டு
ஒருநா ழிகைக்குள் வருவார் ஒருத்தர் உளரோ சகத்தில் இனியே? (3)

இவனால் அருக்கன் மகனோடு எமக்கும் இனிதாய நட்புமியல்பும்;
இவனால் அளப்பில் பெருநீர் அடைத்தது; இணையாவயத்தனுமானும்
இவனால் அரக்கர் பொருசேனையிற் சென்று இடையூறகற்றியஎலாம்;
இவனால் அரக்கர் குலம்வேர் அறுத்தது; இனியான் உரைப்பது எவ
[னோ? (4)

(உத்தரகாண்டம், அநுமப் படலம் 3—6)

அனுமானைக் குறித்து முனிவரிடம் இராமன் இவ்வாறு உள்ளம் உவந்து உரையாடியுள்ளான். அவன் ஆற்றியுள்ள அற்புத நிலைகளையும், அதிசய வெற்றிகளையும், ஆருயிர் உதவிகளையும் எண்ணி எண்ணி அஞ்சனவண்ணன் நெஞ்சம் களித்துள்ளமையை உரைகள் தோறும் நாம் உணர்ந்து கொள்கிறோம். நன்றியறிவும் நண்புரிமையும் இவ்வென்றி வீரனிடம் விழுமிய நிலையில் செழுமி என்றும் தெளிவாய் மிளிர்கின்றன.

இராமபிரானுக்கு யாண்டும் ஊழியம் செய்யும குடி அடிமை எனத் தன்னை எவ்வழியும் அனுமான் பேரன்போடு கருதி மகிழ்ந்து உரிமை தோய்ந்து வருகிறான்; அந்த அடிமையை இந்த ஆண்டவன் தனது அரிய குடியைக் காக்க வந்த பெரியவன் என்று உரிமை பாராட்டி உலகம் அறிய உவந்து கொண்டாடி வருகிறான். இருவருடைய பண்பாடுகளையும் அன்புரிமைகளையும் ஊன்றி உணருந்தோறும் நாம் உள்ளம் உவந்து வியந்து ஆன்ற மேன்மைகளை அடைந்து வருகிறோம்.

தம்பியை வியந்தது

அனுமானை இவ்வாறு இனிமையாய்த் தழுவி உரிமை உரைகள் கூறி உவந்து வாழ்த்திவிட்டு இராமன் அயலே நோக்கினன்; தம்பியைக் கண்டான்; காணவே அன்பு மீதூர்ந்தது; கண்கள் நீர் சொரிந்தன. பிரியாமல் பிரிந்து சென்ற தம்பி பெரியவன் அடியில் விழுந்து உருகித் தொழுதான். அங்ஙனம் தொழுத வனது உழுவலன்பின் விழுமிய நிலையை உலகம் தெளிவாய் அறிந்து மகிழக் கவி அழகாக விளக்கியிருக்கிறார்.

உயிர் புறத்து ஒழிய நின்ற
உடல் அன்ன உருவத் தம்பி.

இலக்குவனது நிலையை இது நன்கு துலக்கியிருக்கிறது. உருவகமாய் மருவி வந்துள்ள உவமானம் ஊன்றி உணரவுரியது. அருமைத் துணைகளை உரிமையோடு உவந்து காண்கிறோம்.

தனது இனிய உயிர் வெளியே நிற்க உடல் தனியே நின்றது போல் இளவல் நின்றுள்ளான். இலக்குவனுடைய உண்மையான உயிர் இராமன்; அந்த அருமை உயிரை அயலே விட்டு அமரின் செயலை நாடிச்சென்றான்; சென்றவன் வென்றி நிலையில் விரைந்து வந்தான்; வந்ததும் சொந்த உயிரைக்கண்டான்; ஆவலோடு தொழுது அகம் மிக மகிழ்ந்தான்.

தன்னைப் பிரிந்து போய் மீண்டுவந்த தம்பியைக் கண்டு அண்ணன் கண்ணீர் சொரிந்து அழுகிறான்; அவனை அணுகவே உழுவலன்போடு உருகி இளவல் உயிர் தளிர்த்து நிற்கிறான். இருவர் நிலையும் அன்பும் ஆர்வமும் பெருகி ஒருவரும் மருவாத உரிமையாய் ஓங்கிப் பொருவரு நிலையில் ஒளி மிகுந்துள்ளது.

தாய், தந்தை, கண், உயிர் என இராமனை இலட்சுமணன் கருதி ஒழுகி வருகிற கெழுதகைமையை இங்கே விழுமிய நிலையில் கண்டு நாம் உளம் மிக மகிழ்கின்றோம். இப்படி ஒரு தம்பியையும் அண்ணனையும் இம்மண்ணுலகம் முன்னம் பெற்றதனாலே தான் விண்ணுலகமும் இதனை விழைந்து புகழ்கிறது. விண்ணவரும் மனித சாதியை எண்ணி மகிழ்கின்றார்.

சிபியும் இலக்குவனும்

தனது அடியில் நெடிது வீழ்ந்து தொழுத தம்பியைத் தழுவி

எடுத்து விழிகளிப்ப நோக்கித் தழுதழுத்த குரலில் இராமன் தகவுரை பகர்ந்தான். தன்னை அடைக்கலமாய் அடைந்த விபீடணனைக் காக்கும் பொருட்டுத் தனது இன்னுயிரைக் கொடுக்க நேர்ந்த அந்த வீரக்கொடையை உன்னி உன்னி உள்ளம் உவந்து இவ் வீர வள்ளல் ஆர்வமாய்த் தம்பியை வியந்து புகழ்ந்தான்.

> புறவு ஒன்றின் பொருட்டு யாக்கை அரிந்த
> அறவனும் நின்னை நிகர்க்கிலன்.

தன்னை அடைந்த ஒரு புறுவைப் பாதுகாக்கும் பொருட்டுத் தன் உடம்பைக் கொய்து கொடுத்த சிபிச் சக்கரவர்த்தியும் உனக்கு நிகராகான் எனத் தன் தம்பியை இந்நம்பி இங்ஙனம் வியந்து புகழ்ந்துள்ளான். தன்னைக் காப்பாற்றியருளும்படி வேண்டிய பறவைக்காக அவன் உடலை அறுத்துத் தந்தான்; யாதும் வேண்டாத விபீடணனுக்காகத் தன் உயிரையே இவன் கொடுத்தான் ஆகலால் அவனும் இவனை நிகர்க்கிலன் என்றான். உரிமையோடு உதவிய நிலை உள்ளத்தை உருக்கியது.

தன்பால் வந்து அன்பால் அடைந்த அடைக்கலப் பொருளைத் தானே எவ்வழியும் காக்கவுரியவன்; தன் கடமையை இளையவன் செய்து முடித்தமையால் மூத்தவன் உள்ளம் உவந்து புகழ்ந்தான். ஆற்றிய ஆதரவு போற்ற நேர்ந்தது.

தனது குல முதல்வன் ஆன சிபியின் தியாகத்தை வியந்து பல இடங்களிலும் இராமன் புகழ்ந்து வந்துள்ளான். பறவை வாழத் தான் சாக நேர்ந்தான் என அவ்வேந்தனை மாந்தர் யாவரும் மகிழ்ந்து போற்றியுள்ளனர் அந்த அரிய தியாகியை விட நீ பெரிய தியாகி எனத் தம்பியை இராமன் இங்கே அன்புரிமையோடு பரவசமாய் வியந்து புகழ்ந்திருக்கிறான்.

பிறர்க்கு ஆதரவாய் உபகாரம் செய்வதில் பெருவிருப்பு உடையவன் ஆதலால் இளையவன் செய்துள்ள உதவி நிலையை உவந்து இவ்வள்ளல் உள்ளம் களித்தான் மன்னுயிர்க்கு இதம் செய்வதே மனித வாழ்வின் புனித மகிமை என இனிது கருதி வருபவன் இளவலைத் தழுவி ஈண்டு இன்பம் மீதூர்ந்தான்.

உள்ளத்தின் உவகை நிலை உரைகளில் உலாவி நின்றது.

இயல்பான குண நீர்மைகள் செயல்களைக் காணும்போது

சிறந்து திகழ்கின்றன. தஞ்சம் என்று வந்து தன்னைச் சரண் அடைந்தவனைத் தம்பி காத்தருளியது இந்நம்பிக்கு இன்பம் பூத் தருளியது. பெரிய கொடைவள்ளல் ஆதலால் உரியவன் செய்த உபகார நீர்மை உள்ளத்தை உருக்கி உவகையை விரித் தது. உருக்கமான அந்த உவகையில் உரைகள் பெருக்கமாய் வந்தன. கருணையும் உதவியும் நேரே காண நேர்ந்தன.

பேரருளாளர் என்பார் கறவையும் கன்றும் ஒப்பார்.

உபகார நீர்மையை வியந்து உரிமையோடு உரையாடி வந்தவன் முடிவில் இங்ஙனம் உவமானத்தைக் குறித்து உணர்த் தினன். நேர்ந்த நிகழ்ச்சியை நேரே தெளிவாக விளக்குதற்கு நேரான ஒன்றைச் சீராக இணைத்தது ஓர்ந்து சிந்திக்க வந்தது.

தனது கன்றுக்கு ஏதேனும் இடர் நேர்ந்தால் தாய்ப் பசு எவ்வாறு பதைத்து விரைந்து பாதுகாத்து அருளுமோ அவ் வாறே உரியவர்க்கு ஒரு துன்பம் தோன்றினல் பெரியோர் அதனை விரைந்து நீக்கி அவரை இனிது பேணியருளுவர். அந்தக் காப்பு நிலையை நீ காட்டியருளினய் என இளவலுக்கு ஏந்தல் உவகையை ஊட்டி உரிமை மீதூர்ந்து புகழ்ந்தருளினன்.

கறவை—பசு. தனது இனிய பாலை மனிதன் கறந்து கொள்ள உரிமையோடு சுரந்து நிற்பது ஆதலால் பசுவுக்குக் கறவை என்று ஒரு காரணப்பெயர் வந்தது. எருமை ஒட்டகம் ஆடு முதலியன கறப்பன ஆயினும் சிறப்பு நோக்கிக் கறவை என்பது பசுவையே குறித்தது. குறிப்பு கூரிய நீர்மையது.

பசுவின் பான்மை

காட்டிலே தானுக வளர்கிற புல்லைத்தின்று நாட்டு மக் களுக்குச் சீவாதாரமான நல்ல பாலை ஊட்டியருளுதலால் பசு பேருபகாரமுடையதாய்ச் சீரடைந்து நின்றது. பாலுக்கு மிஞ் சின பவிசு இல்லை என்பது பழமொழி. அந்த இனிய அமுதத் தை ஈந்தருளுதலால் பசு இலட்சுமி, தருமதேவதை, கருணை வள்ளல் எனப் பெருமைபெற்று யாண்டும் அருமையுற்றுள்ளது.

“ விடுநில மருங்கில் படுபுல் ஆர்ந்து
நெடுநில மருங்கில் மக்கட்கு எல்லாம்

பிறந்தநாள் தொட்டும் சிறந்ததன் தீம்பால்
அறந்தரு நெஞ்சோடு அருள்சுரந்து ஊட்டும்.'
(மணிமேலை, 13)

உலக மக்களுக்குப் பசு புரிந்து வரும் உபகார நீர்மையை ஆபுத்திரன் இவ்வாறு உரிமை தெரிய உணர்த்தியிருக்கிறான்.

வான்போல் கைம்மாறு கருதாமல் ஆனும் அருள் புரிந்து ஆருயிர்களை ஆதரித்து வருதலால் வையம் அதனைத் தெய்வமாக வாழ்த்த நேர்ந்தது. உதவிநிலை உயர்வை அருளியது. தம்மை வாழ வைப்பதை யாரும் வாழ்த்தி வருகின்றார்.

"வாழ்க ஆன் இனம்" எனத் தேவாரமும் நாவாரப் பாட நேர்ந்தது. இனிய பாலை அருளுவதோடு அரிய பல நீர்மைகளும் கறவையிடம் மருவியிருக்கின்றன. தாய்மை அன்பு அதனிடம் வாய்மையாய் வளர்ந்துள்ளது. தன் கன்றிடம் பேரன்புடையது ஆதலால் உருக்கத்தின் பெருக்கத்துக்குக் கறவை உயர்ந்த உவமையாய் ஈண்டு உரிமையோடு வந்தது.

கன்றினுக்குச் சேதா கனிந்திரங்கல் போல எனக்கு
என்றிரங்குவாய் கருணை எந்தாய்! பராபரமே. (தாயுமானவர்)

கறவையைப் போல் எனக்கு இரங்கியருள் என்று இறைவனை நோக்கித் தாயுமானவர் இவ்வாறு மறுகியிருக்கிறார். பரமபதியும் பசுவாய் வரவேண்டும் என்று அவர் விழைந்து வேண்டியிருப்பதை உணர்ந்து சிந்திக்க வேண்டும். சேதா = செம்மையான நல்ல பசு. செம்பேனி அம்மானே ஆனாய் அருள்புரி என ஆனை ஆர்வமாய் ஞானி உருகியுள்ளார்.

குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே.
(திருவாசகம்)

பசுவின் மனம் தனக்கு வேண்டும் என மாணிக்க வாசகர் ஆண்டவனை நோக்கி இவ்வாறு வேண்டியிருக்கிறார். அரிய மனிதப்பிறவியை அடைந்து புனித நிலையில் உயர்ந்துள்ள மகான் ஆவின் மனம்போல் என் மனம் கசிந்து உருகவில்லை என்று கரைந்து உருகியிருத்தலால் கறவையின் பரிவும் பண்பும் கருதியுணர வந்தன. மனம் உருகின் மனிதன் மகான் ஆகிறான்

கறவை கன்றுஇழந்த போன்றும் கிடந்தழுகின்ற கண்ணார்.
(சிந்தாமணி, 1283)

கன்றை இழந்த போது கறவை படும் துயரை இது காட்டியுள்ளது. பிரிவின் பரிவு கறவையிடம் பெருகியுளது.

கறவை காண் கன்றின் வெஃகி (சிந்தாமணி, 1125)

கறவையைக்கண்டபோழ்து கன்று மகிழ்வதை இதுநன்கு உணர்த்தியுள்ளது. மனித அன்பினும் அது மகிமை மிகுந்தது.

கன்று பிரிந்துழிக்
கறவை ஒப்பக் கரைந்து கலங்கினாள். (இராமா, நகர் நீங்கு 14)

கன்றுபிரி காராவின் துயருடைய கொடி.
(இராமா, குகப்படலம் 66)

இராமன் பிரிந்த பொழுது கோசலை கரைந்து கலங்கி வருந்தியிருந்த துயரநிலையை இது வரைந்து காட்டியுள்ளது. உரிய தாயையும் அரிய மகனையும் கறவை கன்று என இணைத்துப் பிரியம் மீதூர்ந்த பெரிய பரிவுநீர்மைகளை உணர்த்தியுள்ளார். குணநலங்களின் உயர்நிலைகள் கூர்ந்து ஓர்ந்து கொள்ளவுரியன.

இளங்கன்றினைப் பிரிவுற்று
எய்திய ஆவின் பான்மையான். (இராமா, அயோமுகி 84)

நடுநிசியில் பிரிந்து தண்ணீர் கொண்டுவரப்போன இலக்குவனைநெடுநேரம் காணாமையால் வருந்தி நொந்து இறந்து போக நேர்ந்த இராமன் பின்பு அவனைக் கண்டபோது உவந்த நிலையை இது உணர்த்தியுள்ளது. விழுமிய அன்புகள் விழிதெரிய வந்தன.

ஈன்ற கன்றையும் கறவை ஊட்டில. (இராமா, நகர் 214)

இராமன் காட்டுக்குச் சென்றபோது அயோத்தி நகரில் அன்று ஈன்ற கன்றுக்குப் பால் ஊட்டாமல் கறவைகள் மறுகி நின்றன என அவற்றின் பரிவு நிலைகளை இது குறித்திருக்கிறது.

கறவையும் கன்றும் காவியத்தில் இன்னவாறு துறைகள் தோறும் தோய்ந்து வந்திருக்கின்றன. கன்றுக்கு இடர் நேராமல் கறவை காப்பது போல் கருணையாளர் காத்தருளுவர். அத்தகைய பாதுகாப்பைப் போர்முகத்தில் வீடணனுக்கு நேர்

முகமாய் நின்று நீ செய்திருக்கிறாய்! என்று தன் தம்பியை அன்புரிமையோடு புகழ்ந்து இந்நம்பி பாராட்டியருளினான்.

கன்றமர் கறவை மான
முன்சமத்து எதிர்ந்ததன் தோழற்குவருமே. (புறம், 275)

சமர்முகத்தில் தன் நண்பனைக் காத்தற்கு ஒரு வீரன் பரிவோடு ஓடிவந்துள்ள நிலையை ஒரூஉத்தனார் என்னும் சங்கப் புலவர் இங்ஙனம் பாடியிருக்கிறார். கறவையும், கன்றும் இதில் உவமையாய்வந்து உரிமை சுரந்திருத்தலை ஓர்ந்து கொள்கிறோம்.

வெளியே விரைந்து உதவி புரிதற்கு உள்ளே அன்பு மிகவும் உரியது. இந்த அன்புரிமையில் கறவை தலைமையாய் நிற்றலால் ஈண்டு அது முதன்மையாய் வந்தது.

"ஈற்று விருப்பின் போற்றுபு நோக்கிநும்
கையது கேளா அளவை ஒய்யெனப்
பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கித் தூய
கொட்டைக் கரைய பட்டுடை நல்கி."
(பொருநராற்றுப்படை)

ஈன்ற பசு கன்றை விரும்பியது போல் இரவலரை உவந்து நோக்கி வளவன் உதவி புரிந்துள்ளதை இது உணர்த்தியுள்ளது. பொருள்களைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுக.

உள்ளம் பரிந்து உதவும் நீர்மைக்குக் கறவையை உவமையாய்க் குறித்துக்காட்டிக் கவிகள் விளக்கியுள்ள நயங்கள் கருதியுணரவுரியன. பிறர்க்கு உபகாரம் செய்கின்ற அளவே மனிதன் பெருமை பெறுகிறான். பேராண்மைக்கு அழகு ஊராண்மையுடன் ஆருயிர்கட்கு ஆதரவு செய்வதேயாம்.

பரோபகாராய பலந்தி வ்ருட்சா; பரோபகாராய வஹந்தி நத்ய; பரோபகாராய துஹந்தி காவ; பரோபகாரார்த்தமிதம் சரீரம்.

மரங்கள் கனிகளையும், நதிகள் நீர்களையும், பசுக்கள் பால்களையும், பரோபகாரத்தின் பொருட்டே கொடுக்கின்றன; ஆகவே இந்த உடம்பு எடுத்துவந்தது பிறர்க்கு இதம் செய்யவேயாம் என இது குறித்துள்ளது. கறவை இதன் கண்ணும் வந்திருக்கிறது. இனிய உதவியும் அன்பும் மகிமை தந்துள்ளன.

தன் கன்றுக்கு ஏதேனும் இடர் நேர்ந்தால் தன் உயிரையும் மதியாமல் ஆ அதனை விரைந்து காத்தருளும்; அது சமையம் புலியையும் அது எதிர்த்துப்பாயும். புத்திரவாஞ்சை என்று மனித இனத்தில் மருவியுள்ள அந்தப்பிள்ளைப் பாசம் பசுவினிடம் மிகவும் உச்ச நிலையில் உரிய தகவோடு ஓங்கியுள்ளது.

வடமொழியில் பசுவின் கன்றுக்கு வத்ஸ என்று பெயர். அதிலிருந்து தான் வாத்ஸல்யம் என்பது வந்துள்ளது. வாற்சல்லியம் என்னும் சொல் மனவுருக்கத்தை உணர்த்தி வரும். இன்னுயிரினும் இனியதாகத் தன் கன்றை அது பேணி வருதலால் தன்னை அடைக்கலமாய்ச் சார்ந்த வீடணனைத் தம்பி காத்திருக்கும் ஆர்வக்காப்புக்கு இந்நம்பி அதனை நேரே நினைந்து குறித்தான். அரிய இதநிலைகள் இனிது தெரிய வந்தன.

சிறந்த வீரக் குடியில் பிறந்த உயர்ந்த வள்ளல் ஆதலால் உபகார நிலையை இங்ஙனம் உள்ளம் உவந்து விழைந்து புகழ்ந்தான். தன்னலம் கருதாமல் பிறர்க்கு உதவி புரிகிறவன் எவ்வழியும் மனிதருள் தெய்வமாய் மருவி வருகிறான்.

பிறர் வாழத் தான் சாக நேர்வது எவ்வளவு தியாகம்! எத்தனை அதிசயம்! அந்த அற்புத உதவியை இலக்குவன் இங்கே செய்திருக்கிறான். வீரத்திறலோடு விரைந்து புரிந்துள்ள உயர்ந்த உபகாரம் உள்ளத்தை உருக்கியுள்ளமையால் வண்மையாளர் எவரினும் உண்மையாகவே நீ உயர்ந்தவன் என்று உள்ளம் உருகி உழுவலன்போடு இளவலை இவ்வள்ளல் வாழ்த்தினான்.

அயலாருடைய துன்பத்தை நீக்குகிறவன் இயல்பாகவே உயர்வினை அடைகிறான்; அவ்வுயர்வு ஒளி மிகுந்து உய்தியை அருளுகிறது. பரதுக்க நீக்கம் பரகதியை ஆக்குகிறது.

உபகாரமான செயல் புண்ணியத்தை விளைத்து வருதலால் அந்த உபகாரி புண்ணியவானாய் உயர்ந்து கண்ணியம் பெறுகிறான். பிறர்க்கு இதம் செய்கின்ற அளவே மனிதன் பெருந்தகையாளனாய் உயர்ந்து பேரின்ப நிலைகளை அடைகிறான்.

தனது அரிய உயிரினும் இனியனாக இலக்குவனை இராமன் எவ்வழியும் எண்ணி இனிது பேணி வருகிறான்; அந்த அருமைத் தம்பி தன் உயிரைக் கொடுத்து ஒருவனைக் காப்பாற்றியதை

நினைந்து வியந்து அவனை இங்கே புகழ்ந்து போற்றியிருத்தலால் இக் குல வீரனுடைய இயல்பான உபகார நிலையை ஓர்ந்து உணர்ந்து நாம் உள்ளம் உவந்து உயர்ந்து கொள்கிறோம்.

அயலார் அல்லலுக்கு இரங்கி உதவுகின்றவன் உலகம் புகழ உயர்ந்து திகழ்கிறான். தீன தயாளன் என்று கடவுளுக்கு ஒரு பெயர். ஏழைகளுக்கு இரங்கி அருள்பவன் என்னும் பொருளை அப் பெயர் உயர்வான உரிமையோடு மருவியுள்ளது.

இரக்கம் மனிதனை மகான் ஆக்குகிறது; ஈகை அவனைத் தெய்வமாத் திகழச் செய்கிறது. செவ்விய இதநலங்களால் திவ்விய நிலைகள் விளைகின்றன. அவ்விளைவு விழி தெரிய வந்தது.

"Men resemble the gods in nothing so much as in doing good to their fellow creatures." (Cicero)

தம்மைச் சார்ந்த சீவர்களுக்கு நன்மை செய்யும்போது தான் மனிதர் தெய்வங்களாய்த் திகழுகின்றனர் என ஸிஸரோ என்னும் பெரியார் இங்ஙனம் சீர்மையோடு கூறியிருக்கிறார்.

"To pity distress is but human; to relieve it is God like." (A. Mann)

பிறரது துன்பத்தைக் கண்டு இரங்கும்போது ஒருவன் உண்மையான மனிதன் ஆகிறான்; அந்தத் துயரை நீக்கியருளினால் அவன் கடவுள் போல் நிலவுகிறான் என்னும் இது இங்கே ஊன்றி உணர உரியது. அன்பான ஆதரவு அரியதை அருளுகிறது.

சீவர்களுக்கு உதவி செய்கின்றவன் தேவன் ஆகின்றான்; ஆகவே உபகாரத்தின் உத்தம தத்துவத்தை உய்த்துணர்ந்து கொள்கிறோம். பிறர்க்கு இதம்புரிவது பேரின்பமாய் வருகிறது.

இடர் காணின் கறவை கன்றைக் காத்தல் போல் அருளாளர் எவரையும் காத்தருளுவர் என்னும் இந்த வார்த்தைகள் இராமபிரானுடைய இரக்கத்தையும் ஈகையையும் உயிர்களின் துயர்களை நீக்கியருளும் உயர் பெருந்தகைமையையும் உபகார நீர்மையின் உறுதிநிலையையும் உலகம் அறிய உணர்த்தியுள்ளன.

நல்லவர்களின் துயர்களை நீக்கவே பொல்லாதவர்களை அழித்துப் போக்கி வெற்றிக் களிப்போடு வந்த வீரன் உற்ற தம்பி செய்துள்ள உதவி நிலையை உணர்ந்து உள்ளம் களித்தான்.

சாரலில் தங்கி இருந்தது.

இலங்கை வேந்தன் செய்த சதியிலிருந்து நீங்கி அதிசய நிலையில் வந்த இளவலைத் தழுவி மகிழ்ந்து உரிய துணைவர்களோடு இராமன் இனிய ஒரு மலைச்சாரலை அடைந்தான். குளிர் நிழலோடு கனிமரங்கள் நிறைந்த அழகிய சோலையிடையே போர்க் கோலம் யாவும் நீங்கிஅமைதியாய் இவ்வீரன் அமர்ந்திருந்தான்.

அதிமதுரமான தீங்கனிகளை அருந்தி வானர சேனைகள் மகிழ்ந்திருந்தன. விபீடணன் சுக்கிரீவன் அங்கதன் சாம்பவன் நீலன் குமுதன் நளன் முதலிய தலைவர்கள் அயல் அமர்ந்திருந்தனர்; இலக்குவன் இராமன் அருகே உரிமையோடு உறைந்திருந்தான். தனது இரண்டு கைகளிலும் கோதண்டத்தைப் பயபத்தியோடுதாங்கிக் கொண்டு அனுமான் பின்புறமாக உருகிய அன்புடன் உலாவி நின்றான். விழுமிய நீர்மைகள் செழுமி நின்றன.

ஆயிரம் வெள்ளம் அரக்கர் சேனைகளை ஒருங்கே உயிருண்டு வந்த தனது வெற்றி வில்லை வேறு யாரிடமும் கொடாமல் அனுமானிடமே உரிமையோடு இராமன் தந்தான் ஆதலால் அந்த வீரச் சிலையை ஆர்வம் மீதூர்ந்து ஏந்தி வீர மாருதி பருகு காதலோடு ஆண்டவனைப் பார்த்துக் கொண்டே பணிவாய் நின்றான்.

கோல் சொரி தனுவும் கொற்ற அனுமன் கைக்கொடுத்து.

அம்புகளை ஓயாது பொழிகின்ற வீர கோதண்டத்தை மாருதியிடம் கொடுத்திருப்பது அத் தீரன்பால் இவ் வீரன் கொண்டுள்ள மதிப்பையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தி நின்றது. செய்கின்ற செயல்களில் சீர்மைகள் திகழ்கின்றன.

இந்த அற்புத வில் ஆற்றியுள்ள அதிசய வெற்றிகள் எல்லாம் உன் கையிலேயே உள்ளன என்று தனக்கு அனுமான் செய்து வருகிற ஆதரவுகளை வையம் அறியக் காட்டுவான் போலத் தனது விசய கோதண்டத்தை இந்த ஐயன் அந்த மெய்யனிடம் மேன்மையோடு கொடுத்து வைத்தான்.

தன்னுடைய வெற்றி வில்லை வைத்திருத்தற்கு உற்ற தகுதி அனுமான் ஒருவனுக்கே உண்டு என்பதை இக்கோமகன் குறிப்பால் உணர்த்தியிருப்பது கூர்ந்து சிந்திக்கத்தக்கது. மதியூகியின் செயல் விதி நியமங்களை விளக்கி அதி விநயமாய் மிளிர்கின்றது.

நீல் நிற ஞாயிறு மெய்மெலிவு ஆற்றல் உற்றான்.

போரில் நேர்ந்த களைப்பை ஆற்றுதற்கு இனிய மலைச்சாரலில் இராமன் இளைப்பாறி இருந்த நிலையை இது வரைந்து காட்டியுள்ளது. குறிப்புகள் கூர்ந்து சிந்திக்க வந்தன.

உலகை ஒளிசெய்து வருகிற சூரியன் சிவந்த நிறம் உடையவன். அந்தச் செஞ்ஞாயிறினும் வேறுபாடான சிறப்பு நிலை தெரியக் கருஞாயிறு என்று உருவக அணியில் உரைத்தருளினர்.

ஞாயிறு = சூரியன். ஆதிசோதி என்னும் பொருளையுடையது.

பசிய கோலத் திருமேனியனாய் பளபளப்பான ஒளியோடு உலாவி யுள்ளமையால் கரு ஞாயிறு என நேர்ந்தான். வெய்யோன் ஒளி தன் மேனியின் விரிசோதியில் மறைய ஒரு பசுஞ்சோதியை வீசி மிளிர்கின்ற விழுமிய எழில் மேனியைத் தெளிவான அழகு மொழிகளால் கவி விழிகளிப்ப விளக்கி வருகிறார்.

இருளை நீக்கி ஒளியை வீசி உலகுக்கு உவகை செய்து வரும் செஞ்ஞாயிறு போல் இந்தக் கரு ஞாயிறும் காரியம் செய்து வந்துள்ளமையால் சூரியன் என நேரியைந்து நின்றது.

அச்சத்தையும் துயரத்தையும் மருளையும் மயக்கத்தையும் இருள் உயிர்களுக்கு விளைக்கும்; அதுபோல் நெடுங்காலமாகக் கொடுங்கேடுகள் செய்து வந்த அரக்கரும் தீய இருள் எனச் செறிந்து நின்றார்; அந்தப் பொல்லாத புலையிருளை அடியோடு அழித்து வந்திருத்தலால் இங்கே இராமன் ஞாயிறு என நேர்ந்தான். உரிய இடத்தில் அரிய பொருள் அறிய வந்தது.

உலகத்தைக் கதுவி நின்று விரைவில் விலகும் இருள் போலாது உயிர்களைக் கவ்வி ஊழிகாலமாய் நிலைத்து நின்ற கொடிய இராக்கத இருளைக் கடிந்து நீக்கி வெற்றித் தேசோடு விளங்கி வந்துள்ளமையால் கரு ஞாயிறு என இப் பெருமான் பேரெய்தி நின்றான். நேர்ந்த நாமம் நிலைமையைத் தலைமையாத் துலக்கியது.

ததமிகுந்து இரைத்துப் பொங்கும் கனைகடல் உலகம் எல்லாம்
புதைவுசெய் இருளிற் பொங்கும் அரக்கர்தம் புரமும் பொற்பும்
சிதைவுசெய் குறியைக் காட்டி வடதிசைச் சிகரக் குன்றின்
உதையமது ஒழியத் தோன்றும் ஒருகரு ஞாயிறு ஒத்தான்.

(இலங்கைகாண், 27

இலங்கையின் வடபால் உள்ள சுவேலமலையின் உச்சிமேல் ஏறி நின்று இராமன் அந்நகரத்தின் விழுமிய அழகு முதலிய நிலைகளை யெல்லாம் நோக்கிய காட்சியை இது குறித்திருக்கிறது.

சூரியன் வழக்கமாய்க் கிழக்கே தோன்றுவது இயல்பு; அதற்கு மாருக அன்று இலங்கையின் வடக்கே தோன்றினன்; நிறமும் மாறியது; சிவந்த ஒளி நீங்கி நீலசோதி வீசி நிலவியது; அத் தோற்றம் நாச காலத்தின் அடையாளமாயது. அழகிய இலங்கையும் அரசும் அரக்கர் குலமும் விரைந்து அழிந்துபோம் என்பதைத் தெளிந்து கொள்ளும்படி அது விளங்கி நின்றது.

அரக்கர் குலமும் நிலமும் சிதைவு செய்குறியாகத் தோன்றிய ஒரு கரு ஞாயிறு என முதலில் குறித்த அதே உருவை வினையின் முடிவிலும் நினைவோடு கொண்டு வந்து நேரே முடித்திருக்கிருர்.

அன்று சுவேலமலை உச்சியில் தோன்றிய கருஞாயிறு தன் தோற்றத்தின் காரணத்தைப் பூர்த்தி செய்து விட்டு இன்று பதுமராக மலைமேல் வந்து சுகமாய்த் தங்கி யிருக்கிறது.

அங்கே உதயமாய் எழுந்த ஞாயிறு உரிய கருமத்தை முடித்து வந்து இதய சாந்தியாய் இங்கே ஒய்வு கொண்டுள்ளது. இரண்டாயிரத்து எழுநூறு பாடல்களுக்கு முன் நயமாக் குறித்த நாமத்தை மீண்டும் ஈண்டு நியமமாயுரைத்திருப்பது நிலைமைகளை நினைந்து சிந்தித்துப் பலவும் ஓர்ந்து கொள்ளவந்தது.

கொடிய அரக்கர்களாகிய நெடிய பேரிருளை நீக்கி நிறை புகழோடு நிலவியுள்ள ஸ்ரீராமனைக் காரிருள் நீக்கும் பேரொளி எனக் காட்டி யிருக்கும் காட்சி உவகையை யூட்டி உணர்வொளி நீட்டியுள்ளது. மதியூகங்கள் அதிநயமாய் வருகின்றன.

சரித நிகழ்ச்சிகளைக் கவி விளக்கிச் செல்லும் திறம் அரிய பல சுவைகளை விளைத்துப் பெரிய இன்பங்களைப் பெருக்கியருளுகிறது. எதையும் கருதி யுணர்ந்து உறுதி கண்டு தெளியும்படி உரைகள் முறையே துறைகள் தோறும் தொன்றி வருகின்றன.

தலைவர் வியந்தது.

சுக்கிரீவன் அங்கதன் முதலிய தலைவர்கள் எல்லாரும் நேர்ந்து முடிந்த நிலைமைகளை நினைந்து வியந்தார். பெருங்கடல்கள் போல் பொங்கி வந்த மூலபலப் படைகளைத் தன்னம்

தனியே நின்று ஆண்டவன் எவ்வாறு அழித்து ஒழித்தான்? என்று நீண்ட ஐயங்கள் எல்லாருடைய நெஞ்சங்களிலும் நெடிது தோன்றின. அதிசய வியப்புகள் பெருகி வரவே அனைவரும் திரண்டு வந்து இராமனைத் தொழுது நின்றனர். உழுவலன்போடு நின்ற அவரை இக் குல வீரன் குளிர நோக்கினன்; தம் உள்ளத்தில் உள்ள ஐயத்தை அவர் ஒளியாமல் உரைத்தார்: பிரளய காலம் வெள்ளம் போல் எவ்வழியும் வெவ்விதாய்ப் பெருகிவந்த மூலபலங்கள் எவ்வாறு ஒருங்கே அழிந்தன?என்று வானர வேந்தன் வணக்கமாய்க் கேட்டான். இராமன் குறுமுறுவலோடு அவனை இனிது பார்த்து நிருதர் மடிந்து மாய்ந்துள்ள நிலைகளை விபீடணனோடு போய்க் கண்டு தெளிக என்று கருத்துடன் குறித்தான். குறிக்கவே யாவரும் விருப்போடு விரைந்தார். அமர்க்களம் நோக்கி ஆவலாய் நடந்தார்.

வானரர் களம் கண்டது.

கருங்கடல்போல் வந்த படைகள் மருங்கற மாண்டு மடிந்துள்ளதைக் காண வேண்டும் என்று வேணவாவோடு அனைவரும் ஒருங்கே திரண்டு வந்தவர் சமர பூமியை அடைந்தார். யுகாந்த காலத்து உலக பயானம் போல் நிருதர் குலம் நிலைகுலைந்து மாய்ந்து கிடப்பதைக் கண்டார்; மறுகி நின்றார். யானை தேர் குதிரை காலாள் என வந்த நால்வகைச் சேனைகளும் அடியோடு நாசம் அடைந்துள்ளதை நினைந்து நினைந்து நெஞ்சம் திகைத்தார். கழுகுகளும் நரிகளும் நாய்களும் பேய்களும் பிணங்களோடு கணங்களாய்த் திரிவதைக் கண்டு மயங்கினர். அழிவு நிலைகள் அதிசயங்களை விளைத்தன.

தொழுதனர் தலைவர் எல்லாம் தோன்றிய காதல் தூண்ட
எழுகென விரைவில் சென்றார் இராவணற்கு இளவலோடும்
கழுகொடு பருந்தும் பாறும் பேய்களும் கணங்கள் மற்றும்
குழுவியகளத்தைக்கண்ணின்நோக்கினர் துணுக்கம்கொண்டார்

ஏங்கினர் நடுக்கம் உற்றார்; இரைத்திரைத்து உள்ளம் ஏற
வீங்கினர்; வெருவ லுற்றார்; விம்மினர்; உள்ளம் வெம்ப
ஓங்கினர்; மெள்ள மெள்ள உயிர் நிலைத்து உவகை யூற
ஆங்கவர் உற்ற தன்மை யாரறிந்து அறைய கிற்பார்?

ஆயிரம் பருவம் கண்டால் காட்சிக்குஓர் கரையிற் றன்றால்
மேயின துறைகள் தோறும் விம்மினர் நிற்ப தல்லால்
பாய்திரைப் பரவை ஏழும் காண்குறு பதகர் என்ன
நீயிருந்து உரைத்தி என்றார் வீடணன் நெறியில் சொன்னான்.

(வானரர் களங்காண் படலம், 3-5)

மூல பலங்கள் மடிந்து கிடக்கும் படுகள நிலைகளை நோக்கிச் சுக்கிரீவன் முதலாயினோர் திகிலடைந்து திகைத்து நின்றனர். பிண மலைகள் குவிந்து இரத்த வெள்ளங்கள் பெருகி இடங்கள் தோறும் நிணங்கள் படர்ந்து அடர்ந்து தொடர்ந்து நிமிர்ந்து கிடப்பன நெடிய கொடிய பயங்கரங்களாய் நிலவி நின்றன. கண் எட்டிய மட்டும் கண்டு மருண்டனர்.

வானரத் தலைவர்கள் நெஞ்சம் அஞ்சாத பெரிய தீரர்கள் ஆயினும் போர்க்களத்தின் சாக்காடுகளை நோக்கும் தோறும் உள்ளம் கலங்கி உறுதி குலைந்து ஊழி முடிவின் பாழ் என வெருவினர். அச்சத் திகில்கள் உச்சமாய் ஓங்கின.

ஏங்கினார்; நடுக்கம் உற்றார்;
வீங்கினார்; வெருவல் உற்றார்

என்றதனால் ஆங்கு அவர் அடைந்து நின்ற திகில்களையும் திகைப்புகளையும் அச்சங்களையும் ஈங்கு நாம் நன்கு உணர்ந்து கொள்கிறோம். ஏக்கம் அதிசய வியப்பால் எய்தியது; நடுக்கம் மனக் கலக்கத்தால் மருவியது; வீங்கியது உயிர்ப்பு அடங்கி நெடு மூச்சு எறிந்தமையால் நேர்ந்தது; வெருவல் பயங்கரமான நெடிய திகிலால் விளைந்தது.

உள்ளத்தில் அடைந்த குழப்பங்கள் புறத்தில் புலனாய் நின்றன. அஞ்சா நெஞ்சர் யாவரும் அலமரல் அடைந்தனர்.

பரந்து விரிந்துள்ள கடல்களைக் கண்டு எல்லைகாண முடியாமல் நெடிது மயங்கி நிற்றல்போல் இறந்து பட்டுள்ள அந்த இனங்களின் எண்ணரிய நிலைகளை எண்ணி எண்ணி வியந்தார்.

சருவ சங்கார காலத்தில் உருத்திரமூர்த்தி செய்வதுபோல் தன்னந்தனியே நின்று அஞ்சன வண்ணன் அரக்கர் குலத்தை அழித்திருப்பது அனைவருக்கும் வியப்பை விளைத்து நின்றது.

ஓர்ந்து நாணியது.

இத்தகைய அற்புத ஆற்றலுடைய வீரமூர்த்தி வானரங்களாகிய நம்மைச் சேனைகளாகச் சேர்த்து வைத்திருப்பது சிரிப்புக்கு ஏதுவான மாயக் கூத்தாய் மருவியுள்ளது எனத் தலைவர்கள் எல்லாரும் நாணி நின்றனர். நாமும் இராமனுக்குப் போர்த் துணையாக நேர்ந்து உதவி செய்ய வந்திருப்பதாக எண்ணின் அது முழுமடமையாம் என அனைவரும் தெளிவடைய நேர்ந்தனர். இதற்கு முன் நேராத நாணமும் வெட்கமும் அவரைத் தானமாச் சூழ்ந்து கொண்டு தனியுணர்வு தந்தன.

ஆழ்ந்த யோசனைகளும் அதிசய விவேகங்களும் யாவரிடமும் மேவலாயின. தேவருடைய துயரங்களைத் தீர்க்கத் தேவதேவனே இராமனாய் வந்திருக்கிறான் என வாலி முதலாயினோர் கூறிவந்த உரைகளையெல்லாம் கூர்ந்து சிந்தித்து ஓர்ந்து உணரலாயினர். அதிசய நிலையால் மதிதெளிந்து துதிசெய்து நின்றார்.

தேர்ந்த மதிமான் ஆன விபீடணனைச் சுக்கிரீவன் விழைந்து நோக்கினான். “ஆண்டவனுடைய அதிசய வெற்றிகளைக் காணுந்தோறும் கழிபேருவகைகளே பெருகி வருகின்றன. ஒரு நிலையில் நின்று போர்க்கள முடிவை முழுதும் காணமுடியாது; உள்ளே புகுந்து பிண மலைகள் தோறும் சென்று சென்று நின்று நின்று நேரே கண்டபோது தான் ஓரளவாவது உணர முடியும்” என்று வானர வீரர்கள் கருதுகின்றனர் எனத் தன் கருத்தைத் திருத்தமா வெளிப்படுத்தித் தெளிவுகூறவேண்டினான்.

வீடணன் விளக்கியது.

கவியரசன் குறித்தபடியே யாவரும் போர்க்களத்துள் புகுந்து பார்த்தனர்; அழிவு நிலைகள் விழிகளை மயக்கி அச்சமும் திகில்களும் விளைத்தன. நெடுங்காலப் நிலை பெற்ற வீரர்களாய் நிலைத்து வந்த நிருதர் தலைவர்கள் பலரும் நிலைகுலைந்து அழிந்து கிடந்ததைக் கண்டு நெஞ்சம் திகைத்தார். பல தீவுகளிலுமிருந்து வந்த தலைமையான அதிபதிகளையெல்லாம் இனம் துலக்கி வீடணன் தெளிவா விளக்கி வந்தான். சாகத்தீவு, குசத்தீவு, இறலித்தீவு முதலிய இடங்களிலிருந்து வந்த அரிய பெரிய மன்னர்கள் தங்கள் சேனைகளோடு செத்துக் கிடப்பதை

உய்த்துணர வுரைத்தான். பெருவலி படைத்த நிருதர் குலங்களோடு யானைகளும் புரவிகளும் சின்னபின்னமாய்ச் சிதைந்து உதிர வெள்ளத்தில் புதைந்து வீழ்ந்துள்ள நிலைகளையெல்லாம் தொகையாக நெடிது விளக்கி முடிவுகள் பலவும் நேரே குறித்தான்.

கைக்குன்றப் பெருங்கரைய நிருதர்புயக் கற்செறிந்த கதலிக்கானம்
மொய்க்கின்ற பரித்திரைய முரட்கரிகைக் கோண்மாவ முளரிக்கானம்
மெய்க்கின்ற வாண்முகத்த விழுக்குடரின் பாசடைய நிணமேற்செற்ற
உய்க்கின்ற உதிரநிறக் களங்குளங்கள் உலப்பிறந்த உவையும்
[காண்மின் (1)

வெளிநீர்த்த வரைபுரையும் மிடலரக்கர் உடல்விழவும் வீரன் வில்லின்
ஒளிநீர்த்த முழுநெடுநாண் உருமேறு பலபடவும் உலகம் கீண்டு
நளிநீர்த்த நாகபுரம் புக்கிழிந்த பகழிவழி நதியின் ஓடிக்
களிநீர்த்துப் புகமண்டும் கருங்குருதித் தடஞ்சுழிகள் காண்மின்!
[காண்மின்! (2)

கைத்தலமும் காத்திரமும் கருங்கழுத்தும்
நெடும்புயமும் உரமும் கண்டித்து
எய்த்திலபோய்த் திசைகள்தொறும் இருநிலத்தைக்
கிழித்திழிந்தது என்னின் அல்லால்
மத்தகரி வயமாவின் வாணிருதர்
பெருங்கடலின் மற்றிவ் வாளி
தைத்துளதாய் நின்றதென ஒன்றேயும்
காண்பரிய தகையும் காண்மின்! (3)

படுகளத்தில் அழிந்து குவிந்துள்ள நிலைகளையெல்லாம் வீடணன் இவ்வாறு செவ்வையாய் விளக்கிக் காட்டியிருக்கிறான். செதுக்கிடக்கின்ற சீவகோடிகளைக் கண்டு வருந்தோறும் கோதண்ட வீரனுடைய அற்புத ஆற்றலும் அதிசய நிலையும் மதி தெளிய வந்தன. உண்மை நிலைகளை உணர உணர எல்லாருடைய உள்ளங்களிலும் நாணங்கள் ஓங்கி எழுந்தன.

ஒரு வில்லால் உலகங்களையெல்லாம் ஒருங்கே அழிக்க வல்ல இந்த வீரமூர்த்திக்கு நாமும் போர்த்துணைகளாய் அமைந்து வந்திருக்கிறோம் என்று இதுவரை நினைந்து வந்தது நெடிய மடமை என்பதை இந்தப் படுகளக் காட்சி நேரே நமக்குக் காட்டியருளியது என வானர வேந்தன் முதல் யாவரும் தெளிந்து வியந்து திசை நோக்கித் தொழுது நின்றனர். உரியவர் எவரும் அரிய காட்சிகளைக் காணவே அதிசயம் மீதூர்ந்து துதி செய்ய நேர்ந்தனர். இராமபாணங்கள் ஆயிர வெள்ளம் சேனை

களையும் அடியோடு அழித்து ஒழித்தன ஆயினும் ஒரு பகழியாவது எந்த உடலிலும் தங்கி நிற்கவில்லை. யாவும் ஊடுருவித் திசைகள் தோறும் பாய்ந்து போயுள்ளன. மேலே சென்றன விண்ணைப் பிளந்து போயின; கீழே பாய்ந்தன மண்ணைத் துளைத்து நீண்டன; பாணங்கள் புகுந்தபோன புழைகள் வழியே உதிர வெள்ளங்கள் ஓடியிருக்கின்றன. புது வெள்ளம் பொங்கி வந்தபோது நதிகளின் கரைகளைக் கடந்து செல்லுதல் போல் இரத்த வெள்ளங்கள் எங்கும் மண்டிக் கீழ் நோக்கி யாண்டும் விரைந்து மூண்டு பாய்ந்து நீண்டு போயிருக்கின்றன.

களிறு ஈர்த்துப் புகமண்டும்
கருங்குருதித் தடம் சூழிகள்.

செத்த யானைகளைப் புரட்டிக் கொண்டு இரத்த வெள்ளங்கள் கீழ் நோக்கிப் பாய்ந்துள்ளன என்றமையால் இராம பாணங்களால் நேர்ந்துள்ள கொலைகளையும் நிலைகளையும் ஓர்ந்து உணர்ந்து கொள்ளலாம். அம்புகள் யாண்டும் இடைதங்காமல் எவ்வழியும் வேகமாய் ஊடுருவி ஒருவி ஓடி யிருக்கின்றன; ஆகவே அவற்றின் திவ்விய ஆற்றல்கள் திகைப்பை விளைத்தன. படுகள நிலை நெடிய விவேகத்தை நேரே யூட்டி அரிய பல உறுதி நலங்களை அருளிப் பெரிய ஞான போதமாய் மருவி நின்றது.

ஆழிபோல் ஆர்த்து வந்த சேனைகளையெல்லாம் ஒரு வில்லால் தனியே நின்று அழித்து ஒழித்தவன் தம்மை உதவிக்காக அழைத்து வந்திருப்பது விநோதக் கூத்தாயுள்ளது என்று வானர வீரர் அனைவரும் நாணி வியந்து இராமனைக் காண விழைந்தனர். புதிய ஒரு திகிலும் அரிய உணர்ச்சியும் பெரிய மகிழ்ச்சியும் பேருக்கமும் அவரிடம் பெருகி நின்றன.

தேவர் முதல் யாவரையும் அடக்கி ஒடுக்கி வீரச்செருக்கோடு யாண்டும் தலைமையாய் வாழ்ந்து வந்த அரக்கர் குலங்கள் அழிந்து பட்டன. பல தீவுகளுக்கும் அதிபதியாயிருந்த யாவரும் ஒருங்கே மாய்ந்து போனமையால் நிருதர் இனம் பெரும்பாலும் நாசமாயது என நெஞ்சம் துணிந்து எல்லாரும் நெடுங் களிப்படைந்தனர். மாண்டவர் மாண்புகளை விளக்கி வந்த வீடணன் ஆண்டவனை வியந்து புகழ்ந்து வானர வீரர்களோடு மீண்டு வந்தான். இராமனைக் கண்டு பேரன்போடு உருகித்

தொழுதான்; சுக்கிரீவன் முதலிய தலைவர்கள் எல்லாரும் அளவிடலரிய உவகையோடு உரிமை மீதூர்ந்து வணங்கி நின்றனர்.

மூலபலங்கள் மடிந்து கிடந்த நிலைகளைக் கண்டு வந்த களிப்பு எல்லாருடைய முகங்களிலும் நல்ல மலர்ச்சியை உண்டு பண்ணியிருந்தமையால் ஆண்டு உல்லாசமாய் அமர்ந்திருந்தார். தங்கள் ஆண்டவனுடைய அடலாண்மையையும் அதிசய நிலையையும் இடங்கள்தோறும் துதி செய்து கொண்டு கவிக்குலங்கள் களித்திருந்தன. உள்ளக் களிப்பு உறுதிநலங்களை ஊக்கி வந்தன.

இராமன் இருப்பு.

கொடிய நிருதரை அடியோடு தொலைத்து அரிய வெற்றி பெற்று வந்துள்ள பெரியவன் பதுமதளம் என்னும் இனிய மலைச் சாரலில் மேலே செய்ய வேண்டிய காரிய நிலைகளைக் கருதி அருமைத் தம்பியிடம் உரிமையுடன் உசாவி இருந்தான். அனுமான் அயலே நின்றான்; இராம நாமத்தை இனிது செபித்துக் கொண்டு பத்திப்பரவசமாய் அக் கருமவீரன் நின்றிருந்தது அரிய தருமக் காட்சியாய் நிலவியது. சேனைகளை ஆதரவோடு பாதுகாத்து நோக்கி வீடணன் மிக்க எச்சரிக்கையாயிருந்தான். அங்கதன் குமுதன் நீலன் முதலாயினோர் படைகளுக்கு வேண்டியதை அங்கங்கே தடையறச் செய்து தகையூக்கி வந்தனர்.

இராவணன் களிப்பு.

இன்னவாறு இராமன் இங்கே இருக்க இராவணன் அங்கேபோனபின் விழைந்துசெய்ததை இனிமேல் காண வருகின்றோம். "வேலால் எறிந்து இலக்குவனைக் கொன்றுவிட்டோம்; வானரங்கள் பெரும்பாலும் அழிந்தன; பகை ஒழிந்தது" என்று உள்ளம் களித்து ஊக்கிப்போன இராவணன் இலங்கை புகுந்ததும் பெரிய வெற்றிவிழாக் கொண்டாட விழைந்தான். அதற்கு வேண்டியன யாவும் விரைந்து புரிந்தான். இலங்காபுரி எங்கணும் அலங்காரங்களாயின; யாண்டும் களியாட்டங்கள் நீண்டன; சிறந்த விருந்துகள் உயர்ந்த நிலைகளில் விரிந்தன. நடனங்களும் நாடகங்களும் நாட்டியங்களும் வீர வெற்றிகளைக் காட்டி வீதிகள்தோறும் ஆட நேர்ந்தன. அழகிய தேவமங்கையர் யாவரும் அங்கே வந்து சேர்ந்தனர். எவ்வழியும் இன்பக்காட்சி

கள் பொங்கிப் பொலிந்தன. வேந்தனுடைய நெஞ்சம் களிக்க மாந்தர் யாவரும் யாண்டும் மூண்டு வேலை செய்தனர். ஊரில் எழுந்த உவகைக் காட்சிகள் அவன் போரில் அடைந்த வெற்றி மாட்சிகளை வியனக் காட்டி நின்றன. மூண்ட எதிரிகள் அடியோடு மாண்டு போனார் என்ற களிப்பு நிருதர்பதி நெஞ்சில் நீண்டு நின்றமையால் தனது வெற்றி நிலைகளைத் துலக்க வேண்டிய கலைகளை விளக்கி யாண்டும் நலமா விரித்தான்.

அலக்கண் எய்தி அமரர் அழிந்திட
உலக்க வானர வீரரை ஒட்டிஅவ்
இலக்கு வன்தனை வீட்டி இராவணன்
துலக்கம் எய்தினன் தோமில் களிப்பினே. (1)

பொருந்து பொற்பெருங் கோயிலுள் போர்த்தொழில்
வருந்தி னர்க்குத்தம் அன்பினின் வந்தவர்க்கு
அருந்து தற்கு அமைவாயின ஆக்குவான்
விருந்தமைக்க விரைகின்ற வேட்கையான். (2)

வான நாட்டை வருகென வல்விரைந்து
ஏனை நாட்டவ ரோடுவந்து எய்தலும்
ஆன நாட்டந்த போகம் அமைத்திர் மற்று
ஊனம் நாட்டின் உயிர் இழந்தீர் என்றான். (3)

நறவும் ஊனும் நவையற நல்லன
பிறவும் ஆடையும் சாந்தமும் பெய்மலர்த்
திறமும் நானப் புனலொடு சேக்கையும்
புறமும் உள்ளும் நிறையப் புகுந்தவால். (4)

நான நெய்நன் குரைத்து நறும்புனல்
ஆன கோதற ஆட்டி அமுதொடும்
பானம் ஊட்டிச் சயனம் பரப்பவும்
வான நாட்டியர் யாவரும் வந்தனர். (5)

பாடு வார்கள் பயில்நடம் பாவகத்து
ஆடு வார்கள் அமளியின் இன்புறக்
கூடு வார்கள் முதலும் குறைவறத்
தேடி னன்எனப் பண்ணையில் சேர்ந்ததால். (6)

அரசர் ஆதி அடியவர் அந்தமா
வரைசெய் மேனி இராக்கதர் வந்துளார்

விரைவின் இந்திர போகம் விழைதரக்
கரைசெலாத பெருவளம் கண்ணினர். (7)
(இராவணன் களம்காண் படலம் 1-7)

பகைவரை வென்று தொலைத்துவிட்டதாக எண்ணி மகிழ்ந்து இலங்கை வேந்தன் வெற்றி விழாக் கொண்டாடியிருக்கும் நிலைகளையும் முறைகளையும் இவை நேரே விளக்கியுள்ளன. அவனுடைய போக்கும் நோக்கும் செருக்கும் களிப்பும் விசித்திர விநோதங்களாய் விரிந்து நிகழ்கின்றன. அழிகேடுகள் பல அடைந்தும் விழி திறந்து தெளிவடையாமல் கழிமடமையாய்க் களித்து வருவது விதியின் விளைவைத் தெளித்து நிற்கிறது. மதிகேடு மண்டி நிற்றலால் எதையும் மதித்து உணராமல் பிழையாகவே செருக்கி இழி பழிகளில் விரைகிறான்.

"எல்லை காணமுடியாத சேனைகளோடு மூலபலப் படைகளும் போயிருக்கின்றன; ஆகவே இராமனை அவை கொன்று நின்றேயிடும்; அங்கே மூத்தவன் செத்தான். இங்கே அவன் தம்பி இலக்குவன் என் கை வேலால் மாண்டான்; குரங்குகள் யாவும் இறந்து மடிந்தன; சாகாமல் ஒதுங்கிநின்ற வானரங்கள் எல்லாம் விரைந்து ஓடி மறைந்துபோம்; எதிரிகள் அடியோடு தொலைந்தனர்; இனி நமக்குத் தொல்லை இல்லை" என்று இன்னவாறு கருதி உள்ளம் களித்திருத்தலால் ஊரில் களியாட்டம் கொள்ளும்படி இராவணன் வெறியாட்டம் கொண்டான்.

சீதைமேல் மூண்டுள்ள மையல் மயக்கத்தால் மதிமருண்டு பித்தேறிய பேதையாய்ப் பிழைபாடுகளைச் செய்ய நேர்ந்தான். மாயமோகம் அவனை மாய்த்து வருகிறது; காமம் சூழ்கொண்டமையால் அறிவு பாழாய் வெறியாட்டங்களை விரிவா விளைத்தான்.

தீமையான காம இச்சை எந்த மனிதனையும் மடையனாக்கி விடுகிறது; அது உள்ளத்தில் புகுந்தபொழுது எவனும் கடையனாயிழிந்து படுகிறான். பெண்ணைப் பிழையாய் விழைந்தவன் கண் இழந்த குருடனாய்க் கலங்கி யழிகிறான். மாதர் காதலால் மகிமை சாதலாம் என்பது வேத வசனமாய் வெளிவந்துள்ளது.

மானமும் வீரமும் மதிப்பும் காமத்தால்
ஈனமா யிழிந்திழி பழிகள் ஏறின;
ஞானமும் கலைகளும் நாச மாயின;
ஊனமாய் உயிரழிந்து ஒழிய லாயினன்.

இன்னவாறு வாயுடையார் எல்லாம் வைது பழிக்க இலங்கை வேந்தன் துலங்கி நிற்கிறான். கலையறிவிலும் சிலை வலியிலும் போர் வீரத்திலும் தலைசிறந்து விளங்கி வந்த இராவணன் புலையான காம இச்சையால் நிலையாயிருந்த எல்லா உயர் நிலைகளையும் அடியோடு இழந்து குடியோடு அழிய நேர்ந்தான்.

"Lust is a canker to the mind, a corrosive to the conscience, a weakness of the wit, and finally, a mortal bane to all the body." (Pliny)

காம நசை கொடிய ஒரு நஞ்சு; அறிவைக் கெடுத்து, உணர்ச்சியை ஒழித்து, மனத்தைப் பாழாக்கி உயிர்க்கேடு செய்யும் எனக் குறித்துள்ள இது இங்கே கூர்ந்து சிந்திக்கத் தக்கது. நீசமான ஆசை நாசமாய் மூண்டது.

தீய காம மோகமே இராவணனைப் பேயன் ஆக்கிப் பெருங்கேடு செய்து வருகிறது. இராமனுடைய பேராற்றலைப் பலமுறையும் நேரே அறிந்திருந்தும் அறிவு கேடனாய் வெறியாட்டங்களைச் செய்ய நேர்ந்தான். மூலபலத்தால் எதிரி அழிந்திருப்பான் என்று துணிந்து கொண்டு நகரம் எங்கும் இன்பவிழாக் கொண்டாட இசைத்து இறுமாந்து களித்து நின்றான்.

விருந்து நிலை.

விண்ணுலக போகங்கள் யாவும் இலங்கைக்கு வரவேண்டும் என்று பணித்தான்; உடனே எல்லாம் வந்தன; அரக்கர் குலத்தில் பிறந்தவர் எவரும் பேரின்பங்களை நுகரும்படி சிறந்த விருந்து செய்ய விழைந்து புரிந்தான். அதனைச் சரியாகக் குறிப்பறிந்து பரிமாறுதற்குத் தேவர்களே வந்து ஏவலாளராய் இசைந்து நின்றனர். யாதொரு குறையும் எவ்வித வழுவும் யாண்டும் நேராமல் நிருதர் எவரும் பெருமகிழ்வடைய உரிமையோடு ஓர்ந்து செய்ய வேண்டும்; இதில் அணு அளவு தவறு நேர்ந்தாலும் உங்கள் உயிர் போய்விடும் என்று அமரரை அச்சுறுத்தித் தமர்களை இனிது பேண ஆணை விதித்தான்.

ஊனம் நாட்டின் உயிர் இழந்தீர்!

களியாட்டத்தில் தன் இனத்தார்க்குத் தான் ஊட்ட நேர்ந்த விருந்தில் ஊழியம் செய்ய வந்துள்ள தேவர்களை நோக்கி

இராவணன் இந்த உத்தரவைக் குறித்திருக்கிறான். எவனாவது சிறு பிழை செய்தாலும் அவனுக்கு மரண தண்டனையாம் என அமரர்க்கு விதித்திருப்பது அவனது கொடிய அதிகார ஆற்றலை விளக்கி நெடிய வீர பராக்கிரமங்களைத் துலக்கி நின்றது.

திருவிலும் திறலிலும் சிறந்து வீரச் செருக்கோடு விண்ணவரை யாண்டும் அடக்கி நடத்தி வந்துள்ளான் ஆதலால் அந்தப் பழக்கத்தால் வார்த்தைகள் துடுக்காய்த் தடித்து வந்தன. வெளியே வருகிற வாய்மொழிகள் உள்ளே புதைந்துள்ள உறுதிநிலைகளை உள்ளவாறு உணர்த்தி விடுகின்றன.

கொடிய அழிவுகள் பல அடைந்தும் இராச கம்பீரம் அவனை விட்டு ஒழியவில்லை. எவ்வழியும் அவனிடம் அது செவ்வையாக ஒளி வீசியுள்ளது. தெவ்வரை வென்று செயம்பெற்று விட்டதாகத் தீர்மானமாய் நன்கு துணிந்து கொண்டான்; கொள்ளவே அந்த வெற்றி நிலையை உலகறியச் செய்ய ஊரில் ஆரவாரமாய் விழாக்கள் கொண்டாடி யாவருக்கும் சிறந்த விருந்து புரிந்தான். நிருதர் இனம் நெடிய மகிழ்வடைந்தது.

மரபு முறைப்படி மதுவும் மாமிசமும் அந்த விருந்தில் பெருகியிருந்தன ஆதலால் நறவும் ஊனும் என அதன் உறவுரிமைகள் தெரிய வந்தன. ஆங்கிலேயரின் பாங்குகள் அவ் விருந்தில் ஓங்கியுள்ளமை ஈங்கு ஊன்றி ஓர்ந்து கொள்ள நேர்ந்தது.

ஆடல்களும் பாடல்களும் நடனங்களும் நவநவமாய் நடந்திருக்கின்றன. நிருதர் யாவரும் ஐம்புல இன்பங்களும் ஆர அருந்தியிருக்கின்றனர். குடிவெறியோடு காம வெறியும் கலந்து எவ்வழியும் களியாட்டங்கள் செவ்வையாய் நிகழ்ந்துள்ளன.

ஆடுவார்கள் அமளியின் இன்புறக்
கூடுவார்கள்.

அருந்தலோடு பொருந்தலும் அவ் விருந்தில் விரிந்துள்ள நிலைகளை இதனால் அறிந்து கொள்கிறோம். அழகிய தேவ மாதரோடும் போகங்களைப் பொருந்தி நுகர்ந்துள்ளனர். அரக்கர் கருதியபடியெல்லாம் அரமகளிர் மருவியிருந்து மகிழ்வு புரிந்தனர். தேக போகங்கள் ஏக போகங்களாய் விரிந்து எவ்வழியும் பெருகி யாண்டும் காமக் கலைகள் கனிந்து நின்றன.

இந்திர போகம் விழைதர.

இராவணன் புரிந்த விருந்தின் இன்பநிலைகள் யாவும் நன்கு தெரிய இந்த வாசகம் இங்கே வந்துள்ளது. உயர்ந்த புண்ணிய நிலையில் பொலிந்து உள்ளவன் ஆகலால் எண்ணிய போகங்களை எல்லாம் இந்திரன் இனிதே நுகர்கின்றான். போகி என்று அவனுக்கு ஒரு பெயர் அமைந்துள்ளது; ஆகவே போகங்களில் அவனது ஏக நிலையும் இன்ப வகையும் எளிது தெளிவாம்.

அத்தகைய இந்திர போகத்தை ஒவ்வொரு அரக்கனும் செவ்வையாய் அனுபவிக்கும்படி அன்று அங்கே இராவணன் ஆக்கியருளினான். என்றும் இன்ப நலன்கள் சுரந்திருந்த இலங்காபுரி அன்று ஒரு புதிய போக பூமியாய்ப் பொலிந்து அதிசய ஆனந்த நிலையமாய்த் துதிகொண்டு விளங்கியது.

அரக்கர்பதி புறத்தே புரிந்த விருந்து அவனது அகத்தின் மகிழ்ச்சியை உணர்த்தி நின்றது. பகை நீங்கியது என உவகை ஓங்கியது. மாயமயக்கால் பேயன் பெரிய களிப்பை அடைந்திருக்கிறான். அதனால் களியாட்டங்கள் பெருகி நின்றன.

இறுதி மகிழ்ச்சி.

இதுதான் இலங்கை வேந்தன் கண்ட இறுதியின்பம். இனிமேல் மரண துன்பத்தையே காணப்போகிறான். சாகப்போகிற அந்தப் போக்கில் அவனைப் போகக் களிப்பில் மூழ்கச் செய்த கவி கருணை புரிந்திருப்பது இங்கே நூதனமா நுணுகி யுணரவுரியது.

மானச தத்துவங்களையும் உயிர் உணர்ச்சிகளையும் இராம காவியம் இடங்கள்தோறும் விழுமிய நிலைகளில் விளக்கி வருகிறது. சரித நிகழ்ச்சிகளில் அரிய வுண்மைகள் மருவி மிளிர்கின்றன. மனித வாழ்வின் இனிய நுகர்ச்சிகளைக் கவிகள் அதிசய விநயமாய் இனிது வெளிப்படுத்தி யருளுகின்றன.

Poetry is the utterance of deep and heart felt truth.
[Chapin

கவி என்பது மனித இதயத்தில் ஆழ்ந்துள்ள உணர்ச்சி உண்மைகளை உரைப்பதே என இது உணர்த்தியுள்ளது. மக்கள் பருவமும் பண்பாடும் அடைந்து உயரத்தக்க சீர்மைகளை

சீர்மையாகத் தெளித்து வருதலால் காவியம் சீவிய அமுதமாய்ச் சிறந்து செவ்விய நீதிகள் சுரந்து திகழ்ந்துள்ளது.

Poetry comes nearer to vital truth than history. (Plato)

சரித்திரத்தைக் காட்டிலும் சீவ தத்துவங்களை இனிது விளக்கி வருவதே உயர்வான காவியமாய் ஒளி புரிந்து வருகிறது என்ப் பிளாட்டோ இவ்வாறு கூறியிருக்கிருர்.

இராம சரிதத்தைக் குறித்து வருகிற இக்காவியம் சீவ சுபாவங்களை விளக்கிக் கலை ஞானங்களைத் தலக்கி நிலையான உறுதிபுண்மைகளைத் தெளித்து உலகமக்களுக்கு அரிய பல வுணர்வு நலங்களை இனிமையாகப் போதித்து வருகின்றது.

உயிரினங்களின் நிலைகளை உயர்தரமான மொழிகளில் நளினமாக உணர்த்தி வருதலால் எவ்வழியும் செவ்விய சுவைகளை விளைத்தருளுகிறது. குறித்த பாத்திரங்களை விசித்திரமா ஆட்டிக் காட்டி விதி விளைவுகளை விளக்கி வியப்பை யூட்டி யருளுகிறது.

நேர்ந்துள்ள நிலைகளை ஓர்ந்து உணராமல் வெற்றி பெற்று விட்டதாக வீணே களித்து இராவணன் ஈண்டு விருந்து செய்து வைத்திருப்பது மிகுந்த நகைப்பை விளைத்திருக்கிறது.

போர் மேல் போயுள்ள மூலபலங்கள் எதிரிகள் எல்லாரையும் ஒல்லையில் அழித்து மீண்டு வந்துவிடும்; அந்தச் சேனைகளுக்கு வானவரும் கண்டறியாத அரிய பெரிய இன்பவிருந்தை யூட்ட வேண்டும் என்று உள்ளம் களித்து ஊக்கி ஆக்கி ஆனந்தமயமான விழாக்களை நோக்கி யாண்டும் ஆணைகள் போக்கி இலங்கை வேந்தன் அரியணையில் இறுமாந்து அமர்ந்திருந்தான்.

ஒற்றர் உற்றது.

உல்லாசமான களியாட்டங்களை ஊர் எங்கும் விளைவித்து உவகை வெள்ளத்தில் மிதந்து உள்ளம் களித்திருந்த இராவணன் எதிரே தூதுவர் இருவர் ஆதரவோடு வந்து அடி வணங்கி நின்ருர். நடந்துள்ள உண்மையை நேரே சொல்ல வந்த அவர் யாதும் சொல்ல முடியாமல் அஞ்சி அலமந்து அடங்கி ஒடுங்கி நெஞ்சம் தளர்ந்து நிலைகுலைந்து நடுங்கி யுளறினர்.

நடுங்கு கின்ற உடலினர்; நாவுலர்ந்து

ஒடுங்கு கின்ற உயிர்ப்பினர்; உள் அழிந்து
இடுங்கு கின்ற விழியினர்; ஏங்கி மேல்
பிடுங்கு கின்ற உரையினர் பேசுவார்.

மூலபலங்களின் அழிவு நிலையைச் சொல்ல வந்த தூதுவர் வேந்தன் எதிரே உள்ளம் கலங்கி நிற்கும் நிலைகளை இக்கவிப் படம் தெளிவாக விளக்கிக் காட்டியுள்ளது. இந்த அச்சத் திகில்கள் அந்த அரசனுடைய அடலாண்மையையும் கொடிய கோபத்திறலையும் அயலே உச்சமா உணர்த்தி நிற்கின்றன.

மன்னன் இன்பக் களிப்பில் மூழ்கியுள்ள இந்தச் சமையத்தில் துயரச் செய்தியைச் சொன்னால் நம் உயிர் போய்விடுமே என்ற பயம் நெடிது ஓங்கி நின்றமையால் தூதர் இவ்வாறு குடல் கலங்கி உடல் நடுங்க நேர்ந்தார். உள்ளதைச் சொல்லத் துணிந்தாலும் உரைகள் வெளியே வாராமல் திண்டாடி நின்றனர். அந்த நிலையைக் கவி விளக்கியிருக்கும் திறம் சுவை சுரந்து வந்துள்ளது. வெருவரல்கள் பருவரல்களாய்ப் பெருகி நின்றன.

மேல் பிடுங்கு கின்ற உரையினர்.

இந்தப் பிரயோகம் சிந்தனை செய்து தெரியத்தக்கது. கருதி வந்ததைச் சொல்லமுடியாமல் மறுகி நின்றவர் உறுதி கொண்டு பிரயாசையோடு உரையாடியுள்ளனர். “மகா ராஜா! இங்கிருந்து போன மூலபலச் சேனைகள் யாவும் பாழாயின” என்று சொல்லு முன் அல்லல் மிக அடைந்தனர். ஒவ்வொரு வார்த்தையா உள்ளேயிருந்து வெளியே வலிந்து இழுத்து உரைத்தார் ஆதலால் பிடுங்குகின்ற உரையினர் என அவரது பேச்சு நிலையைக் காட்சிப் படுத்தினார். இடுங்குதல் = குழிந்து குவிதல்.

ஒற்றரது உரை நடுக்கம் கொற்றவனது கொடிய சீற்றத்தையும் நெடிய ஆற்றலையும் நேரே துலக்கி நின்றது. முதலில் இவ்வாறு அஞ்சி அலமந்தவர் பின்பு துணிந்து அங்கு நடந்தன யாவும் தெளிவாக விளக்கி யாதும் ஒளியாமல் உரைத்தார்.

தூதர் ஓதியது.

ஒன்றுயார் விருந்து இங்கு உண்பார்? இக்கல் முகத்துஇமையோர்தந்த

வென்றியாய் ஏவச்சென்ற ஆயிர வெள்ளச் சேனை
நின்றது புறத்ததாக இராமன்கை நிமிர்ந்த சாபம்
ஒன்றினால் இரண்டு மூன்று கடிகையின் உலந்தது என்றார். (1)

வலிக்கடன் வானுளோரைக் கொண்டுநீ வகுத்த போகம்
கலிக்கடன் அளிப்பல் என்று நிருதர்க்குக் கருதினையேல்
பலிக்கடன் அளிக்கற் பாலை அல்லது உன்குலத்தின் பாலோர்
ஒலிக்கடல் உலகத்து இல்லை ஊருளார் உளரே உள்ளார். (2)

கேட்டவன் திகைத்தது

ஈட்டரும் உவகை யீட்டி இருந்தவன் இசைத்த மாற்றம்
கேட்டலும் வெகுளியோடு துணுக்கமும் இழிவும் கிட்ட
ஊட்டரக்கனைய செங்கண் நெருப்புக உயிர்ப்பு வீங்கத்
தீட்டிய படிவம் என்னத் தோன்றினன் திகைத்த நெஞ்சன். (3)

ஐயம் அடைந்தது.

என்னினும் வலியர் ஆன இராக்கதர் யாண்டும் வீயார்
உன்னினும் உலப்பி லாதார் உவரியின் மணலின் நீள்வார்
பின்னெடு பெயரும் இன்றி மாண்டனர் என்று பேசும்
இன்னிலை இதுவோ பொய்ம்மை விளம்பினர் போலும் என்றான்.

நிகழ்ந்துள்ள நிலைகளை இக்கவிகள் சுவையாய்க் காட்டியுள்ளன. வந்த தூதுவர் முதலில் அஞ்சி நடுங்கினும் பின்பு நெஞ்சுந் துணிந்து நேரே பேசியிருக்கின்றனர். நல்ல பேச்சாளிகள் என்று அவர் பேசியிருக்கும் முறைகளால் தெரிய வருகிறது. "அரசர் பெரும! அமரர்களைக் கொண்டு வந்து அமுத உண்டிகள் ஆக்கி வைத்து அரிய பெரிய விருந்து செய்யத் தேவரீர் ஆவலோடு அமைந்திருப்பதாகத் தெரிகிறது; இங்கே உண்ண வருவார் ஒருவரும் இலர்; அங்கே போர் மேல் போன ஆயிர வெள்ளம் சேனைகளும் அடியோடு நாசமாய்ப் போயின. மூலபலங்கள் மூண்டு ஆலகாலங்கள் போல் நீண்டு சொதித்து யுகாந்த காலக் கடல்கள் போல் ஆண்டுப் பொங்கிப் புகுந்த போது இராமன் என்னும் அந்த ஒரு மனிதன்தான் தன்னந் தனியே அங்கு நின்றிருந்தான்; அவன் கையில் ஒரு வில் இருந்தது; படைக் கடல்கள் எங்கும் திரண்டு அவனை வளைந்தன; வளையவே அவனுடைய கையில் இருந்த அந்த வில்லும் வளைந்தது;

பொருத நிருதர் திரள்கள் எவ்வழியும் பொன்றி மடிந்தன; எழு கடல்கள் போல் பொங்கிப் போன யாவும் ஏழு நாழிகைக்குள் அடியோடு பாழாயின; ஊழிக்காலத்து அழிவு நிலைபோல் சமர பூமி உருவமைந்துள்ளது; பிண மலைகளும் இரத்த வெள்ளங் களும் யாண்டும் நீண்டு பெருகியிருக்கின்றன; ஈண்டு வந்து விருந்து அருந்துவார் யார் அரசே! இறந்து போனவரை நினைந்து பிண்டம் போடுவதுபோல் சிறந்த உண்டிகளைச் செய்துவிடவே மனிதன் செய்து விட்டான்; பகைவனிடம் பலியானவர்க்குப் பலிக்கடன் ஆற்றவே ஆண்டவா! மூண்டுள்ளது; உண்மையை உள்ளம் திறந்து உரைத்துள்ளேன்; மேலே செய்ய வேண்டி யதை நன்றாக ஆலோசித்துச் செய்தருளுங்கள்" என்று அவர் சொல்லி முடித்தார். அவருடைய உரைகள் துயரமாய் வந்தன.

உன் குலத்தின் பாலோர் உலகத்து இல்லை;
ஊர்உளார் உளரே உள்ளார்.

இராவணன் நெஞ்சம் தெளிந்து நிலைமையை உணர்ந்து கொள்ளக் கையிருப்பை இங்ஙனம் அவர் நன்கு காட்டி நின் றார். "இலங்கேசா! அரக்கர் குலத்தில் பிறந்தவர் உலகத்தில் யாண்டும் யாரும் இலர்; இந்த ஊரில் உள்ளவர் தான் உயிரோடு இருக்கின்றார்; வேறு எங்கும் இந்த இனத்தார் இல்லாதபடி அந்த மனிதன் கருவறுத்து விட்டான்; இனி உருவெடுக்க ஒட்டான்" எனப் பருவரலோடு அவர் பரிந்து உரைத்தார்.

இராமனோடு போருக்குப் போகாமல் ஊருக்குள் இருந் தவர் தாம் தப்பிப் பிழைத்திருக்கின்றார்; போனவர் எவரும் பொன்றியே ஒழிந்தார் என்றது அவ்வீர வள்ளலின் வென்றியை விளக்கி நின்றது. சாகாமல் எஞ்சியுள்ள இனம் தெரியவந்தது.

ஊர் உளார் உளரே என்றதில் ஏகாரம் ஐயவினாவாய் அமைந்து நின்றது. இவரும் இல்லாமல் ஒல்லையில் ஒழிந்து போவர் என்னும் குறிப்பு உரையில் மருவியுள்ளது; உண் மையை ஊன்றி உணர்ந்து கொள்க. அழிவு நிலையை அறிந்து வந்த சாரணர் விழி எதிரே நேரே கண்டதை வேந்தனிடம் தெளிவு தோன்ற விளக்கி உறுதிகண்டு உய்தி பெற உரைத்தார்.

இந்த உரைகளைக் கேட்டதும் அவன் மிகவும் மறுகண்டு

திகைத்தான். மறுகி நினைந்தான். "மூலபலங்கள் அதிசய வலி களையுடையன; பல தீவுகளிலுமிருந்து வந்த நிருத வேந்தர்கள் அரிய திறலினர்; பெரிய வர பலங்களையுடையவர்; நெடிய சேனைகளோடு இங்கே துணை புரிய வந்தார்; பகைவனை எளிதே வென்று விரைவில் மீண்டு வருவார்" என்று இன்னவாறு உறுதியோடு கருதி ஊக்கியிருந்தான்; அவர் அனைவரும் ஒருங்கே அழிந்தார் என்பது அவனுக்குப் பெரு வியப்பாய் நின்றது.

என்னினும் வலியர்; யாண்டும் வீயார்.

பல மண்டலங்களிலுமிருந்து தனக்கு உதவி புரிய வந்த அரக்கர் அதிபதிகளைக் குறித்து இராவணன் இவ்வாறு எண்ணி யிருக்கின்றான். தன்னைக் காட்டிலும் அதிக வலிமை வாய்ந்தவர் என இம்மன்னன் எண்ணியிருத்தலால் அவரது ஆற்றலையும் அடுதிறல்களையும் ஏற்றத்தையும் உணர்ந்து கொள்கிறோம்.

பெரிய போர் வீரர்கள் பெருங்கடல்போல் திரண்டு வந் திருக்கின்றார்; இவரைக் கண்டதும் குரங்குகள் யாவும் அஞ்சி நடுங்கி அயலே விரைந்து ஓடியே போய்விடும்; இராமன், இலக் குவன் என்னும் அந்த மனிதர் இருவரும் இறந்து ஒழிந்தே போவர் என்று உள்ளம் துணிந்து உறுதி பூண்டு ஊக்கியிருந் தான் ஆதலால் போன சேனைகள் எல்லாம் செத்தன என்று கேட்டதும் சித்தம் கலங்கித் திகிலடைந்து தயருழந்தான்.

தீட்டிய படிவம் என்னத் தோன்றினன்.

மூலபலர் நிர்மூலமாய் அழிந்தது என அறிந்தபோது இரா வணன் இருந்த நிலையை இது வரைந்து காட்டியுளது. சுவரில் எழுதி வைத்த சித்திரப் பாவைபோல் யாதும் அசையாமல் பிரமை கொண்டு பேச்சு மூச்சின்றியிருந்துள்ளான். மனம் இருண்டு மதி மருண்டு செயல் சுருண்டு போனமையால் விழி திறந்தபடியே மொழி அடங்கி வெருண்டு நின்றான்.

சித்தம் இயங்காமல் மயங்கி நின்றது; நிற்கவே பித்தம் பிடித்தவன்போல் பிரமையாய் நெடுநேரம் பேசாமல் இருந்தான்.

"சிந்தை யுடம்பட்டோன் அவிநயம் தெரியின்
முந்தை யாயினும உணரா நிலைமையும்
பிடித்த கைமேல் அடைத்த கவினும்

முடித்தல் உறுத கரும நிலைமையும்
சொல்லுவது யாதும் உணரா நிலைமையும்
புல்லும் என்ப பொருந்துமொழிப் புலவர்." [அவிநயம்]

சிந்தை மயங்கியபோது அந்த மனிதன் இருக்கும் நிலையை இது குறித்திருக்கிறது. திடீர் என்று கொடிய அழிவு நிலையைக் கேட்டமையால் நெஞ்சம் திகில் அடைந்து செயல் இழந்து நின்றது. திகைத்த நெஞ்சன் என்றது அந்த நெஞ்சைக்கொண்டு அவனது நிலைமையை நேரே கண்டு கொள்ள வந்தது.

தலைமையான களிப்பிலும் செருக்கிலும் தழைத்து நின்றவன் இழவு நிலை தெரியவே ஏங்கி மயங்கினன். அவ்வாறு அலமந்து அயர்ந்தவன் பின்பு அறிவு தெளிந்து பெரிதும் வியந்து, "தூதர் கூறுவது பேதைமையாம்; நேரே பாராமல் ஏதோ விபரீதமாய்ப் பேசுகின்றார்; அந்த மனிதன்தான் செத்திருப்பான்; மூலபலங்கள் இறந்தன என்பது சாலவும் பொய்யே" என்று அவ்வெய்யோன் வெறியனாய் வீறோடு கூறினன்.

மடமை மண்டி மாலுழந்து அவன் பேசிய உரைகளைக் கேட்டதும் அயலேயிருந்த மாலியவான் பரிந்து நொந்து பண்போடு எதிர்ந்து பேசினன். உண்மை நிலையை ஓர்ந்து உணரும்படி உரைகள் உரிமை தோய்ந்து உறுதி வாய்ந்து வந்தன.

பாட்டன் பகர்ந்தது.

கேட்டயல் இருந்த மாலி ஈதொரு கிழமைத் தாமோ?
ஒட்டுறு தூதர் பொய்யே உரைப்பரோ உலகம் யாவும்
வீட்டுவது இமைப்பின் நன்றே வீங்கெரி விரிந்த எல்லாம்,
மாட்டுவான ஒருவன் அன்றே இறுதியில் மனத்தால் என்றான்.

அளப்பரும் உலகம் யாவும் அமைத்துக்காத் தழிக்கின்றான் தன்
உளப்பருந் தகைமை தன்னால் ஒருவன்என்று உண்மைவேதம்
கிளப்பதும் கேட்டு மன்றே அரவின்மேல் கிடந்து மேனாள்
முளைத்தபேர் இராமன் என்ற வீடணன்மொழி பொய்த்தாமோ.

ஒன்றிடின் உலகை யுண்ணும் உலகத்தின் உயிர்க்கு ஒன்றாக
நின்றன எல்லாம் பெய்தால் உடனுங்கு நெருப்பும் காண்டும்
குன்றொடு மரனும் புல்லும் பல்லுயிர்க் குழுவும் கொல்லும்
வன்றிறல் காறறும காண்டும வலிக்கொரு வரமபும் உண்டோ.

பட்டதும் உண்டே உன்னை இந்திரச் செல்வம் பற்று
விட்டதும் மெய்யே ஐய! மீண்டொரு வினையும் இல்லை;
கெட்டதுன் பொருட்டினாலே நினனுடைக்கேளிர் எல்லாம்
சிட்டது செய்தி என்றான் அதற்கவன் சீற்றம் செய்தான். (4)

(இராவணன் களம்காண் படலம் 14-17)

மன்னனை நோக்கி மாலியவான் இன்னவாறு பேசியிருக்கிறான். அளவிடலரிய பெரிய நிருதர் படைகளை ஒரு மனிதன் எப்படி அழிக்க முடியும்? நேரே பாராமல் தூதர் மாறாகப்பொய் பேசுகின்றார் என்று அவன் கூறிய வார்த்தைகள் நேரிய சீரிய இம் முதியவனுக்கு நெடிய கொடிய வேதனையை விளைத்தன.

இராமனது அற்புத ஆற்றலைப் பலமுறை பார்த்திருந்தும் இப்படி மடமையாய்ப் பிதற்றுகின்றானே! என்று பரிந்து வருந்தியவன் அவன் தெளிந்து திருந்துமாறு விழைந்து மொழிந்தான்: "வேந்தர் பெரும! நீங்கள் பேசுவது எனக்குப் பெரிய துயரமாய்த் தோன்றுகின்றது; தூதர் பொய் சொல்லார்; உள்ளதையே சொல்லுவார்கள்; கடல்போல் கலித்துப்போன மூல பலங்கள் யாவும் அழிந்து ஒழிந்தது உறுதி; யுகாந்த காலத்தில் சீவகோடிகள் அனைத்தையும் நெற்றி நெருப்பினால் எரித்து ஒழிப்பவன் உருத்திரமூர்த்தி ஒருவனே; நீரும் தீயும் காற்றும் தனித் தனியே நின்று எதையும் அழிக்க வல்லது; ஒரு மனிதன் என இராமனை எளிதாக இகழ்ந்து பேசுவது நமக்கு இழிவேயாம்; மூலமும் நடுவும் ஈறும் இல்லாத ஆதி பகவனே அயோத்தி வேந்தன் மகனாய் வந்துள்ளான் என வீடணன் முதலிய மேதாவிகள் பலரும் உரிமையோடு உரைத்திருக்கின்றனர்; அனுபவத்திலும் அறிந்து வந்துள்ளோம்; இன்னும் உணர்ந்து தெளியாமல் மேலும் செருக்கி மூண்டு நின்றால் அடியோடு மாண்டு மடியவே நேர்ந்துவிடும்; இந்திரனும் தலைவணங்கி நிற்க மூவுலகங்களையும் தலைமையோடு ஆண்டு வந்த அந்த நிலைமை நிலைகுலைந்து போயதே என்று என் நெஞ்சம் நெடிது கலங்கியுள்ளது; தீவுகளிலும் தீவாந்தரங்களிலும் சுகமாய் வாழ்ந்து வந்த அரக்கர் குலம் எல்லாம் உங்கள் பொருட்டு இங்கு வந்து ஒருங்கே பொன்றி முடிந்தன. எஞ்சியுள்ளவராவது இனியேல் இருந்து வாழும்படி கொஞ்சம் சிந்தனைசெய்து குணமாய் நடந்து கொள்வது நல்லது" என அப் பெரியவன் உரிமையோடு சொன்னான்.

ஒரு மனிதன் என இராமனை எளிமையாக எண்ணி மூல பலங்களை இராவணன் பெருமையாகப் பேசினான் ஆதலால் அந்தச் சிறுமை நீங்கித் தெளிவடையச் சருவ சங்காரகாலத்தில் உருத்திர மூர்த்தி தன்னந்தனியே நின்று அகில வுலகங்களையும் அழித்து ஒழிப்பதை முதியவன் அதி விநயமாய்க் குறித்துக் காட்டினான். ஊழியின் அழிவுநிலை அவனது விழிதெரிய வந்தது.

இறுதியில் மனத்தால் மாட்டுவான் ஒருவன்.

சிவபெருமானது சங்கார நிலையை இங்ஙனம் விளக்கினான். யாதொரு ஆயுதமும் கையில் எடாமல் தனது எண்ணத்தினாலேயே எல்லா உயிரினங்களையும் உலகங்களையும் ஒருங்கே அழித்து ஒழிக்க வல்ல பரமன் ஒருவனே என இங்ஙனம் எடுத்துக்காட்டி அவனுக்கு இடித்து அறிவூட்டியிருக்கிறான். மாட்டுதல் = மாளச்செய்தல். மானசமானசங்கற்பத்தினாலேயே அண்டசராசரங்களையும் உல்லாசமாக ஒல்லையில் அழித்து எல்லையில்லாத வகையில் ஏற்றமாய்த் தனியே நிற்பன் என்றதனால் அந்தப் பரம்பொருளின் அற்புத நிலையை அறிந்து கொள்கிறோம்.

ஸ ஹத்வா ஏதத் ஸ்ருஜதி ப்ரபுஹர: (சிவஞானபோதம்)

இவ்வுலகை அழித்துப் படைக்கிற தலைவனான அவன் அரனே என்னும் இது இங்கே அறியவுரியது. யாவும் நாசம் செய்கிற ஈசன் போலவே உனது மூல பலங்கள் யாவும் இராமன் ஒருவனால்ஒருங்கே நாசம் ஆயின என நன்கு விளக்கினான்.

கடல் போல் அடலோடு சென்ற என்படைகளை ஒரு மனிதன் எவ்வாறு அழிக்க முடியும்? என்று இலங்கை வேந்தன் செருக்கிக் கூறினான் ஆதலால் அதற்கு இவ்வாறு சுருக்கமாமாலியவான் மாறு கூறி மனம் தெளிய மதியுறுத்தினான்.

இராமனை மனிதன் என்று எளிதாக எண்ணாதே; அவன் அதிசயவலியினன்; அற்புத நிலையினன்; அரக்கர் குல காலனை திருமாலே இந்த உருவில் வந்துள்ளதாக அனுமானங்கள் பல வந்துள்ளன; பேரன்புடைய பேரனை விபீடணன் முன்னம் சொன்னவையாவும் உண்மை என்பதை அனுபவங்களால் அறிந்துவருகிறோம்; அறிந்தும் உய்திகாணமல்வெய்யமையலால் இழிந்து கழிகிறோம் என அழி துயரங்களை விழி எதிரே அளந்து காட்டிக் கழிவிரக்கத்தோடு கிழவன் நேரே தெளிவுறுத்தினான்.

நின் கேளிர் எல்லாம் கெட்டது உன் பொருட்டினாலே.

கும்பகருணன் இந்திரசித்து அதிகாயன் அட்சயன் கும்பன் நிகும்பன் தேவராந்தகன் நராந்தகன் முதலிய இராச குடும்பத்தார் பலரும் மாண்டு மடிந்து போனார் ஆதலால் அந்த இழவுகளையெல்லாம் விழி எதிரே தெரிய இவ்வாறு விளக்கியருளினான். குடியும் குலமும் அடியோடு அழிந்து படுகின்றன; இந்த அழிவுகள் யாவும் உன் பொருட்டே நடந்திருக்கின்றன; தூய பதிவிரதையான சீதைமீது நீ தீய காதல் கொண்டாய்; அதனால் அளவிடலரிய கொடிய சாதல்களைக் கண்டாய்! முடிவில் உலகம் எங்கணும் இருந்த நிருதர் குலங்கள் எல்லாம் ஒருங்கே திரண்டு வந்து மூல பலங்களோடு சென்று முழுதும் நாசமாயின; இவ்வளவு கொடிய நாசங்களை அறிந்தும் தெய்வின் திவ்விய நிலைமையை உணராமல் வெவ்விய நிலையிலேயே புலையாடிவருவது பொல்லாத நீசமேயாம்; ஊரில் உள்ளவராவது உயிரோடு பிழைக்கவேண்டுமானால் உனது பிழைவழியை விட்டு விலகி விழிதிறந்து தெளிவடைந்து நல்லவழியில் ஒல்லையில் நடக்க வேண்டும்; இல்லையேல் நமக்கு இங்கே இருப்பு இல்லை; நம் குலம் முழுவதும் பாழாய் விடும்; நிலைமைகளை நேர்மையோடு கூர்மையா ஆராய்ந்து நல்ல நீர்மையாய் நடந்து கொள்ளுக.

சிட்டது செய்தி!

உறுதியுணர்வுகளை உரிமையோடு கூறிவந்த மாலியவான் இறுதியில் இவ்வாறு கூறியருளினான். அரசே! நீ கெட்டது செய்ததனாலேதான் கொடிய கேடுகள் எல்லாம் வந்தன; அதனை அடியோடு கைவிட்டு இனி மேலாவது சிட்டது செய்தி என்று நெஞ்சம் பரிந்து கிழவன் இப்படிக் கெஞ்சியிருக்கிறான்.

"சிட்டர் செயல் செய்திலை;
குலச்சிறுமை செய்தாய்!"

என முன்னம் * கும்பகருணன் இராவணனை நோக்கிக் கூறியிருப்பதும் இங்கே கூர்ந்து ஓர்ந்து கொள்ளவுரியது. சிட்டு = நீதிமுறையான நல்ல ஒழுக்கம். அதனையுடையவர் சிட்டர் என வந்தார். திட்டமான தருமநெறி சிட்டம் என வந்தது.

---

* இந் நூல் பக்கம் 3413 வரி 7 பார்க்க.

சிட்டனே திருஆலவாய் மேவிய
அட்டமூர்த்தியனே அஞ்சல் என்று அருள்." (தேவாரம்)

சிவபெருமானைச் சிட்டன் என்று ஞான சம்பந்தர் இவ்வாறு குறித்திருக்கிறார். சீலமுடைய சிட்டர்களுக்கு உரிமையோடு உவந்து எவ்வழியும் செவ்வியனாய் அருள் புரியும் பரமன் ஆதலால் சிட்டன் எனச் சிரேட்டமாய் நின்றான்.

"சிட்டப்பட்டார்க்கு எளியான்" (தேவாரம்)

இறைவனை இவ்வாறு குறித்திருத்தலால் சிட்டரது மகிமையை உணர்ந்து கொள்கிறோம். தருமநெறி தழுவி ஒழுகும் விழுமியோரிடம் பரமனது பிரியம் இயல்பாய்ப் பெருகி வருகிறது. அவ்வரவினையுடையவர் திவ்வியநிலையினை அடைகிறார்.

கெட்டது செய்யாதே; சிட்டது செய்! என இராவணனுக்கு மாலியவான் புத்தி போதித்திருப்பது உய்த்துணரத்தக்கது. பிறனுடைய மனைவியை விரும்பியதால் பழியும் பாவமும் பகைமையும் அழிதுயர்களும் மூண்டன; அரக்கர் குலங்கள் மாண்டன; அவலக்கேடுகள் நீண்டன; ஆதலால் அந்தத்தீய நிலையிலிருந்து விலகித் தூயனாய் ஒழுகுக என உணர்த்தியருளினான்.

ஒழுக்கம் உடையவன் உயர்ந்த மணியாய் ஒளி பெற்று யாண்டும் சிறந்து திகழ்கின்றான்; அஃது இல்லாதவன் எவ்வழியும் இழிந்த மண்ணாய்க் கழிந்து மங்கி ஒழிந்து போகின்றான்.

"Character is a diamond." (Bartol)

ஒழுக்கம் ஒரு வயிரமணி என இது உணர்த்தியுள்ளது.

The great hope of society is in individual character.
(Channing

சமுதாயத்தின் உயர்ந்த மதிப்பு மனிதனது ஒழுக்கத்தில் மருவியிருக்கிறது என்னும் இது இங்கே நன்கு அறியவுரியது.

ஒழுக்கம் சீலம் என்பன பெரும்பாலும் கற்பையே குறித்து வருகின்றன. பிறர்மனைவியரை நயவாத மனிதனே புனிதனாய் உயர்ந்து தனி மகிமை பெறுகின்றான். உத்தமன், பரிசுத்தன் தருமவான் என ஏகதாரவிரதனே இசைபெற்று நிற்கின்றான்.

"A pure mind in a chaste body is the mother of wisdom and deliberation." (Jeremy Taylor)

புனித உடம்பிலுள்ள தூயமனம் தெளிந்த ஞானத்தின் பயனுயுள்ளது என்னும் இது ஈண்டு நயனேடு சிந்திக்கத்தக்கது.

அறிவு கெட்டு நெறி கேடனாய் நிலை திரிந்தமையினாலே தான் புலைப் பழியும் கொலைத்துயரங்களும் கொடுமையாய் நேர்ந்தன; மூலகாரணங்களை ஓர்ந்து சீலமுடையனாய்த் திருந்தி வாழுக என வயவனுக்கு வயோதிகன் வழி காட்டி ஒளி நீட்டி உதவினான். மதிமானான முதியவன் கூறிய உறுதிமொழிகளை ஒரு சிறிதும் சரியாக உணராமல் மேலும் பேய்த்தனமாகவே அவன் பேச நேர்ந்தான்: "நான் அனுப்பியிருந்த மூல பலங்கள் அடியோடு செத்துப்போனால் போகட்டும். இராமன் வென்றது உண்மையானாலும் தானாகவே அவன் பொன்றி முடிவான்; இலக்குவனை நான் கொன்று வந்துள்ளேன்; இளையவன் இறந்து பட்டதை அறிந்தால் உடனே இராமன் உயிரை மாய்த்துக் கொள்வான்; குரங்குகள் யாவும் அயலே ஓடி ஒழிந்து போம்; ஆகவே நான் பூரண வெற்றியை அடைந்து கொண்டேன்; நீர் காரணம் தெரியாமல் ஏதோ நீதிகளையும் நெறிமுறைகளையும் விரித்துப் பேசி என் குல வீர நிலையைக் குலைக்க முயலுகின்றீர்; நிருதர் பொன்றினும் இறுதி வெற்றி என்னுடையதே" என்று இன்னவாறு அவன் இறுமாந்து கூறினான். அவனுடைய போக்கெல்லாம் மடமை மண்டி நெஞ்சத் திமிரோடு நிலவிநின்றன.

> இலக்குவன் தன்னை வேலால் எறிந்து உயிர் கூற்றுக்கு ஈந்தேன்;
> அலக்கணில் தலைவர் எல்லாம் அழுந்தினர்; அதனைக் கண்டால்
> உலக்குமால் இராமன் பின்னே உயிர்ப்பொறை யுகவான் உற்ற
> மலக்கம் உண்டாகின் ஆக, வாகைஎன் வயத்தது என்றான்.

இலங்கை வேந்தன் கருதிக் களித்துள்ள நிலையை இதனால் நன்கு அறிந்து கொள்ளுகிறோம். தன் வேலால் இலக்குவன் இறந்து போனான்; அவன் மடிந்து போனதை அறிந்தால் இராமன் செத்தே போவான்; சாகாமல் எஞ்சியுள்ள குரங்குகள் எல்லாம் ஒழிந்து ஓடியே போய்விடும்; ஆதலால் எனது மூல பலப்படைகள் அழிந்து போனாலும் நான் வெற்றி பெற்றுள்ளேன் என்று உள்ளங்களித்து உரைத்து நின்றான். அந்த நிலையில் அயலே வந்து நின்ற தூதுவர் "ஆண்டவா!" என்று நீண்ட

கைகளைத் தலைமேல் கூப்பித் தொழுதார். அவரை விழிபலர்ந்து வேந்தன் விழைந்து நோக்கினன். "அரசே! பழி விளைந்தது" என அவர் முழுதும் உரைத்தார். "தங்கள் வேலால் மாண்டு மடிந்த அந்த இளைய மனிதன் மீண்டும் எழுந்தான்; நம் ஊரில் வந்து முன்னம் தீயை வைத்துப் போன அவ்வானரம் வான வீதியில் பாய்ந்து போய்ச் சஞ்சீவியை விரைந்து கொண்டு வந்தது; இறந்தவர் எல்லாரும் பிழைத்துஎழுந்து களித்துச்சென்று இராமனைக்கண்டு தொழுதார். மூல பலங்களை நிர் மூலமாக்கி வெற்றிக்கோலத்தோடு வந்த அவன் தம்பியைத் தழுவி மகிழ்ந்தான்; யாவரும் இன்பமாய் ஓர் மலைச்சாரலில் உல்லாசமாயிருக்கின்றார்" என்று போர் நிலையை அறிந்து புதிதாய் வந்த சாரணர் இவ்வாறு கூறவே இராவணன் மறுகித் திகைத்தான். இந்தச் செய்தி மெய்யா? பொய்யா? என்று மேலும் சந்தேகித்து நீண்ட கோபுரம் ஒன்றில் ஏறி அந்தப் போர்க்களத்தை நேரே பார்க்க நேர்ந்தான். படுகளக் காட்சி நெடிய துயராய் நீண்டது.

உற்றவர் உரைத்தது.

ஆண்டது கேட்டு நின்ற தூதுவர் ஐய மெய்யே
மீண்டது அவ் இளவல் ஆவி மாருதி மருந்து மெய்யில்
தீண்டவும் தாழ்ந்த தில்லை யாருமஅச் செங்கணானைப்
பூண்டனர் மருந்து வெற்பை வீசினன் புக்கது என்றார்.

கொற்றவன் குலைந்தது

தேறிலன் ஆதலானே மறுகுறு சிந்தை தேற
ஏறினன் கனகத் தாரைக் கோபுரத்து உம்பர் எய்தி
ஊறின சேனை வெள்ளம் உலந்தபேர் உண்மை எல்லாம்
காறின உள்ளம நோவக் கண்களால் தெரியக்கண்டான்.

(இராவணன் களம காண்படலம் 19, 20)

பேராற்றல்களையுடைய இராவணன் ஓராற்றலும் உள்ளம் தெளியாமல் உழந்து உழலுகின்றான். எப்படியும் பகைவரைத் தொலைத்து வெற்றி பெற்றுவிட வேண்டும் என்னும் வீறும் வீணசையும் அவனிடம் எவ்வழியும் மீறியாண்டும் நீண்டு நிற்கின்றன. மதி மயக்கம் விதி இயக்கமாய் வெளியேவிரிந்தது.

இறுதியில் தான் செய்து வந்த செயலால் மேய்யாகவே தனக்குச் செயம் கிடைத்து விட்டது என்று மனம் களித்து

நின்றமையினலே தான் தனது இனங்களுக்கெல்லாம் பெரிய இன்ப விருந்து அரிய ஆடம்பரங்களோடு செய்ய நேர்ந்தான். அந்த மகிழ்ச்சியிலும் மண் விழுந்தது; விழவே கண் சிவந்து கடுத்து எண் சினந்து கறுத்து ஏற்றமாய் எழுந்தான்.

தன் வெற்றி வேலால் செத்து வீழ்ந்தவன் பிழைத்து எழுந்தது உண்மையா? உற்ற நிலைகளை முற்றும் நேரே உற்று உணராமல் ஒற்றர்கள் உள்ளம்கலங்கிமாறுயுரைத்திருப்பரோ? என்ற ஐயம் அவன் உள்ளத்தில் வெய்ய நிலையில் விரைந்து நீண்டது; நீளவே நீண்ட ஒரு கோபுரத்தின் சிகரத்தில் ஏறி நின்று தான் மூண்டு போராடிய சமரபூமியை ஆவலோடு நோக்கினன்.

கண்டு கலுழ்ந்தது.

எதிரிகள் யாரும் சாகாமல் தன் இனத்தாரே எங்கும் செத்துப் பிணமலைகளாய்க்குவிந்து கிடப்பதைக் கண்டதும் இலங்கை வேந்தன் கண்ணீர் மல்கிக் கலங்கி நின்றான். இளவல் ஆவி மீண்டது என்று உளவு கண்டு வந்தவர் உண்மையைச் சொன்ன போது தன் ஆவி மாண்டது போல் மறுகி மயங்கினவன் இப்பொழுது நேரே கண்டவுடன் நெடுந்திகில் கொண்டு நெஞ்சம் திகைத்து நிலை குலைந்து நெடிது மயங்கிக் கடிது உயங்கினன்.

இறந்து கிடந்த கணவர்களைத் தேடி இளமங்கையர் உளம் கலங்கி உழல்வதையும், மக்களை நாடித் தாய்மார்கள் மறுகி அலைவதையும், ஒக்கலை நோக்கி உறவினர் பக்கம் எங்கும் பரிந்து திரிவதையும், பருந்து கழுகு நாய் நரிகள் பிணங்களை அருந்தி மகிழ்வதையும் பார்த்து இராவணன் பரிதாபம் அடைந்தான். கண்கள் நீர் மல்கக் கரைந்து கலங்கி எண்களை இழந்து எவ்வழியும் வெவ்விய துயரங்களில் ஆழ்ந்து இழிந்து அயர்ந்துமயங்கினன்.

குமிழிநீர் ஓடும் சோரிக் கனலொடும் கொழிக்கும் கண்ணன்
தமிழ்நெறி வழக்கம் அன்ன தனிச்சிலை வழக்கில் சாய்ந்தார்
அமிழ்பெருங் குருதி வெள்ளம் ஆற்றுவாய் முகத்தில் தேக்கி
உமிழ்வதே ஒக்கும் வேலை ஓதம்வந் துடற்றக் கண்டான்; (1)

விண்பிளந்து ஏங்க ஆர்க்கும் வானர வீக்கம் கண்டான்;
மண்பிளந்து அழுந்த ஆடும் கவந்தத்தின் வருக்கம் கண்டான்;
கண்பிளந்து அகல நோக்கும் வானவர் களிப்பும் கண்டான்;
புண்பிளந் தனைய நெஞ்சன் கோபுரத் திழிந்து போந்தான். (2)

நகைபிறக்கின்ற வாயன்; நாக்கொடு கடைவாய் நக்கிப்
புகைபிறக்கின்ற மூக்கன்; பொறிபிறக் கின்ற கண்ணன்;
மிகைபிறக் கின்ற நெஞ்சன்; வெஞ்சினத் தீமேல் வீங்கிச்
சிகைபிறக்கின்ற சொல்லன்; அரசியல் இருக்கை சேர்ந்தான் (3)
(இராவணன் களம் காண்படலம் 25, 27)

பகை ஒழிந்தது என்று உவகை மீதூர்ந்து நின்ற இராவணன் படைகள் அழிந்து கழிந்துள்ள நிலைமைகளை நேரே கண்டதும் நெஞ்சம் கலங்கி நிலைகுலைந்து நெடிது தளர்ந்து கடிது இறங்கி அரண்மனைக்குள் அவலமாய்ப் போயினன்.

வெற்றி பெற்று வருகின்ற தன் சேனைகளுக்கு அரிய இனிய விருந்து செய்ய வேண்டும் என்று பெரிய மகிழ்ச்சியோடு இருந்தவன் நெடிய கவலையோடு நிலைகுலைய நேர்ந்தான். பலபல யோசனைகளைப் பரிந்து சூழ்ந்தான். மூல பலங்கள் அழிந்து போன துயரம் சாலவும் பெருகி நின்றது.

ஒரு வில்லால் ஒரு மனிதன் என்னவேலை செய்திருக்கிறான்! என அதனை எண்ணி எண்ணி வியந்தான். கோதண்டவீரனுடைய அதிசய நிலை இலங்காதிபதியைக் கதிகலங்கச் செய்தது. கலங்காத கண்டன் கலங்க நேர்ந்தது காகுத்தன் கலையையும் நிலையையும் சிலையையும் நினைந்தமையால் நிகழ்ந்து வந்தது.

சிலை நிலை.

தமிழ்நெறி வழக்கம் அன்ன
தனிச்சிலை வழக்கில் சாய்ந்தார்.

இராமபிரானது வில்லின் நிலையைக் கவி இங்ஙனம் அதிசய விநயமாய்ச் சொல்லியிருக்கிறார். குறிப்பைக் கூர்ந்து நோக்கிப் பொருளை ஓர்ந்து கொள்ள வேண்டும். தக்க இடங்களில் மிக்க விவேக நயங்களை வியப்புற விளக்கியருள்கின்றார்.

தலைமை வீரன் ஆன இராமன் கையில் உள்ள சிலையின் நிலைமை சிந்திக்க வந்தது. எவரும் யாண்டும் எவ்வகையிலும் தடுக்க முடியாத அதிசய ஆற்றல் உடையது ஆதலால் விசய கோதண்டம் என இசையான வெற்றிப் பேர் பெற்று எவ்வழியும் திவ்விய விறலோடு விழுமிய நிலையில் அது விளங்கியுள்ளது.

அரிய தவமுடைய பெரிய முனிவரது சாபம் எதையும்

விரைந்து செய்யவல்லது; யாரும் எதிரே தடை செய்யமுடியாத பேராற்றலுடையது. அந்த முனிவருடைய சாபச் சொல்லைப் போல் இராமனுடைய வில்லும் சரமும் என்றும் வெற்றி நிலையில் வீறு கொண்டு யாண்டும் அதிசயங்களாய் நீண்டுள்ளன.

"நின்கைச் சுடுசரம் அனைய சொல்" (இராமா, அகலிகை, 78)

கௌதம முனிவரது சொல் இராமபாணம்போல் அதிசய வலியுடையது என விசுவாமித்திர முனிவர் இக்கோமகனிடம் நேரே இங்ஙனம் கூறியிருக்கிறார்.

சொல் ஒக்கும் கடிய வேகச் சுடுசரம் (தாடகை 71)

வைவன முனிவர்சொல் அனைய வாளிகள். (அதிகாயன் 116)

சொல்லும் சரமும்இவ்வாறுவெல்லும்விறலில்மருவிவந்துள்ளன.

கிழிபடக்கடல் கீண்டது மாண்டது
மொழிபடைத்த வலிஎன மூண்டது. (ஒற்றுக்கேள்வி 45.)

முனிவரது சாபமொழிபோல் இராமபாணம் பெரு வலியுடையது என இது குறித்திருக்கிறது. அம்மொழி எதையும் எளிதே அழிக்க வல்லது; இந்தப் பாணமும் அவ்வாறே அழிவுகளை அதிவிரைவில்ஆற்றிஅதிசய வெற்றிகளை விளைத்துவிடுகிறது.

சரம் தரு சாபம் அல்லால் தடுப்பரும் சாபம் வல்ல
வரம் தரு முனிவன். (அகலிகை, 77)

வில்லும் சரமும் சொல்லும் வரமும் இதில் தோய்ந்து வந்துள்ளன. சாபம்=வில், சபித்தல். இராமன் கைச்சாபம் முனிவர் வாய்ச்சாபம் போல் அதிசயங்களை ஆற்றியருள்வது எனக் காவியத்தில் இடங்கள் தோறும் புகழ்ந்து போற்றி வந்தவர் ஈண்டு அதனை இங்ஙனம் ஏத்தியிருக்கிறார். கலை வழக்கம் துலக்கிச் சிலை வழக்கை விளக்கினர். தமிழ் மொழியிலே மந்திரத்திற்கு இலக்கணம் குறிக்கும் பொழுது முனிவர் மொழியையே தனி உரிமையோடு முதன்மையாக உரைத்திருக்கின்றார்.

நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப. (தொல்காப்பியம்)

மந்திரம் என்னும் இரகசியம் இங்கே இங்ஙனம் சிந்தனை செய்ய வந்தது. அதிசய மொழி விதிவழி விளைந்தது.

அரிய தவமுடைய பெரிய முனிவரை நிறை மொழி மாந்தர் என்றது அவரது நிலைமையும் தலைமையும் தெரிய. அறிவு நிறைந்த, தவம் நிறைந்த, அருள் நிறைந்த, பொருள் நிறைந்த, ஆற்றல் நிறைந்த என நிறைவுக்கு உரியன யாவும் கருதியுணரநேர்ந்தன.

ஒரு சொல்லால் உலகை வெல்ல வல்லவர் ஆதலால் அந்த முனிவரது மகிமை இந்த வகையில் இங்கே இனிது காண வந்தது.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (குறள், 28)

சிறந்த தவசிகளுடைய பெருமையை அவரது வாய்மொழி காட்டி விடும் எனத் தேவர் இவ்வாறு நன்கு காட்டியிருக்கிருர்.

இத்தகைய முனிவர் சாபம் போல் இராம சாபம் நிருதரை எளிதே நாசம் செய்துள்ளது. தமிழ் வழியில் வந்துள்ள இம் மந்திர மொழி எனக் கோதண்டம் கொன்று குவித்து வென்றி பெற்றிருத்தலால் தமிழ் நெறி வழக்கம் அன்ன தனிச் சிலே வழக்கில் சாய்ந்தார் என்று மூல பலங்களின் அழிவு நிலையை இவ்வாறு தெளிவாக விளக்கி அவ்வீரமூர்த்தியின் வெற்றியைத்துலக்கினுர்.

தமிழ்மொழி தம் தாய் மொழி ஆதலால் அதில் கவி பேரன்பும் பெருமதிப்பும் வைத்திருக்கிருர். உரிமையான அந்த உள்ளப் பிரியம் உரைகளில் பெருமையாய் விரிந்து வெளியேவந்தது.

"இன் தமிழ் இயற்கை இன்பம்
நிலைபெற நெறியில் துய்த்தார்" (சீவசிந்தாமணி 2063)

அழகிய தன் காதலியோடு சீவகன் காமபோகம் நுகர்ந்த நிலையைக் காவியக் கவிஞர் இவ்வாறு குறித்திருக்கிருர். தமிழ் நெறி வழக்கமான காந்தருவ முறையில் கலந்து அவர் இன்பம் துய்த்தார் ஆதலால் இன் தமிழ் இயற்கை இன்பம் என அதன் இயல்பினை அதிசயமாக ஈண்டு இனிது விளக்கினுர்.

தாய்மொழி வாஞ்சையும் நாட்டுப்பற்றும் உத்தமக் கவிகளிடம் இயல்பாகவே ஓங்கியிருத்தலால் அவருடைய பாட்டுக்களில் அவை ஊடுருவி வருகின்றன. உள்ளே பதிந்திருந்தன உரியசமையம் வாய்ந்த அளவில் உரைகளில் தோன்றி விளங்கின.

காவிய நாயகனுடைய வில்லைக்குறித்துச் சொல்ல நேர்ந்த பொழுது தன் சீவிய மொழியின் சீர்மையை உவமை கூறி

உணர்த்தியிருப்பது மானச நீர்மைகளைத் துலக்கி மகிழ்ச்சியை விளைத்திருக்கிறது. பழகியிருந்தன வெளியே தெளிய வந்தன.

கருதி நொந்தது.

தான் முற்றும் வெற்றி பெற்று விட்டதாக உள்ளம் களித்து ஊர் எல்லாம் களியாட்டம் கொண்டாடச் செய்த இராவணன் எதிரிகள் யாவரும் மீண்டு எழுந்ததையும் மூல பலச் சேனைகள் அடியோடு மாண்டு ஒழிந்ததையும் தெளிவாகத் தெரிந்து அழி துயரடைந்தான். மனக்கொதிப்பு சினத்துடிப்பு மானக்கேடு முதலியன அவனை ஈனப் படுத்திச் சித்திரவதை செய்தன.

உள்ளம் கலங்கி உணர்வு மயங்கி உயிர்பதைத்து நின்றான் துடிப்பான அத் துயரநிலைகளை உடலின் செயல் துலக்கி நின்றது கடுந்துயருழந்து நெடுமூச்சு விட்டு நிலைகுலைந்து நெஞ்சம் கலங்கி மறுகிய மறுக்கம் நேரே குறிப்பால் தெரிய வந்தது.

புகை பிறக்கின்ற மூக்கன்;
பொறி பிறக்கின்ற கண்ணன்.

கோபக் கொதிப்பால் கண்கள் சிவந்தன; வெப்பமான மூச்சால் நாசிகள் புகையை வீசின என்றதனால் அவன் உயி ரடைந்துள்ள துயரங்களை உணர்ந்து கொள்ளுகிறோம். வாயன் மூக்கன், கண்ணன், நெஞ்சன், சொல்லன் என வெளி உறுப்புக் களைச் சுட்டிக் காட்டி அவன் பட்டிருக்கிற வேதனைப் பதைப் புக்களை விழி தெரிய விளக்கியிருக்கும் வித்தகம் உய்த்துண ரத் தக்கது. எல்லை மீறிய நிலையில் அல்லல்கள் நீண்டன.

முடிவான வெற்றி கிடைத்தது என்று முடிவு செய்து நெடிது மகிழ்ந்து பெரிய விருந்து ஆற்றியிருந்தவன் தனக்கு நேர்ந்த முடிவை அறிந்ததும் கடிது கலங்கினான். உடனே உறுதி பூண்டு துணிந்தான். இறுதி மூண்டது என்று அறுதியிட்டு விரைந்தான். காரிய விரைவு வீரிய முடிவாய் விரிந்து நீண்டது

உள்ளம் கனன்று ஊக்கியது.

அல்லலாய் நேர்ந்த அவலக் கவலைகளை எல்லாம் ஒல்லையில் மறந்து எல்லையில்லாத கொதிப்போடு உள்ளம் துணிந்து ஊக்கி நின்றவன் அயலே மயலோடு நின்ற சேனாதிபதிகளைச் செயிர்த்து நோக்கினான்; அதன் பின் முதல் மந்திரியை முனிந்து

பார்த்தரன். மகோதரன் மறுகி வணங்கி அருகே நெருங்கினன். ஊரில் உள்ள தானைகள் யாவும் போருக்கு எழுந்து வருமாறு போர் முரசங்கள் அறையும் படி அவனிடம் நேரே கூறினன்.

இராவணன் இசைத்தது.

பூதரம் அனைய மேனிப் புகைநிறப் புருவச் செந்தீ
மகோதரன் என்னும் நாமத்து ஒருவனை முகத்து நோக்கி
ஏதுளது இறந்திலாத இலங்கையுள் இருந்த சேனை
யாதையும் எழுகென்று ஆனை மணிமுரசு எற்றுகென்றான். (1)

சேனை திரண்டது.

எற்றின முரசினோடும் எழிரு நூறு கோடி
கொற்றவாள் நிருதர் சேனை சூழீ இயது கொடித்திண்டேரும்
சுற்றுறு துளைக்கை மாவும் துரகமும் பிறவும் தொக்க
வற்றிய வேலை என்ன இலங்கையூர் வறளிற் றாக. (2)

பூசனை புரிந்தது.

ஈசனை இமையா முக்கண் இறைவனை இருமைக்கு ஏற்ற
பூசனை முறையில் செய்து திருமறை புகன்ற தானம்
வீசினன் இயற்றி மற்றும் வேட்டன வேட்டோர்க் கெல்லாம்
ஆசற நல்கி ஒல்காப் போர்த் தொழிற்கு அமைவ தானன் (3)

இங்கே நேர்ந்துள்ள நிகழ்ச்சிகளையும் நிலைகளையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ளுகிறோம். மானச விளைவுகள் மானவீரங்களோடு மருவி வந்துள்ளன. துணிவும் துடிப்பும் தொடர்ந்து தோன்றியிருக்கின்றன. முடிவான போருக்கு முடிவு செய்து இலங்கை வேந்தன் நெடிது மூண்டு கடிது விரைந்திருக்கிறான். போரில் எப்படியும் தனக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்ற ஆசையினால் ஈசனை நினைந்து தொழுது தனியே பூசனை செய்ய நேர்ந்தான். அல்லல் தீர்ந்து வர நல்ல யோசனைகளை நாடினன்.

தான் என்றும் உழுவலன்போடு தொழுது வந்த கடவுளை இறுதி நேர்ந்த அன்று உரிமை மீதூர்ந்து உள்ளம் உருகி உறுதி கூர்ந்து கருதினன். பிரமாவையும் திருமாலையும் எளிதாக எண்ணி இறுமாந்துள்ளவன் சிவபெருமானை எண்ணிக் கண்ணீர் மல்கித் தொழுதான்; அந்தப் பணிவுக்கும் அன்புக்கும் காரணம் முன்பு அப்பெருமானிடம் இவன் துன்பமடைந்து தெளிந்தமையேயாம். அனுபவ நிலை அதிசய அறிவை இனிது அருளியது.

தேகபலம் மனோபலம் புத்திபலம் முதலிய நிலைகளில் அதிசய வலிகளை அடைந்திருந்தான் ஆதலால் யாரையும் மதியாமல் எவ் வழியும் தனித் தலைமையாளனாய் இலங்கை வேந்தன் துலங்கி நின்றான். அங்ஙனம் நின்று வருங்கால் ஈசனுக்கு இனிய நிலைய மான கைலாச மலையை ஒரு நாள் தனது ஆணவச் செருக்கால் பெயர்க்க மூண்டு அடலாண்மை யோடு இவன் விசைத்து அசைத்தான். அசைக்கவே கண்ணுதல் பரமன் இவனது எண் ணத்தை எண்ணி நகைத்துத் தனது இடது காலின் பெருவிரல் நுனியால் அம்மலையைச் சிறிது அழுத்தினார்; அழுத்தவே அடி யில் அகப்பட்ட இவன் அல்லலுழந்து அலமந்து நொந்து "ஆண்டவா! மடமையால் செய்த எனது பிழையைப் பொறுத் தருள்" என்று பேரொலியாய் அழுது தொழுதான். தொழவே பரம கருணாநிதியாகிய இறைவன் இரங்கியருளி வெளியே விட் டான்; விடவே தனக்கு உயிர்ப் பிச்சை தந்த உயர் பரம் பொருள் என்று உருகி நின்று இனிய கீதங்களோடு அரிய புகழ்களைப் பாடினான். இசையில் அதிசய நிபுணன் ஆதலால் வீணையோடு இழைந்து பாடிய இவனது கானத்தையும் ஞானத்தையும் தானத்தையும் தகுதியையும் அறிந்து மகிழ்ந்து அரிய பல வரங்களை இறைவன் உரிமையுடன் அருளினான்.

இலங்கை வேந்தனுக்கு ஈசன் அருளிய நிலைகளைச் சைவ சமய குரவர்கள் யாவரும் ஆவலோடு புகழ்ந்துள்ளனர். சிவன் அடியார்களுள் இராவணன் உயர் தலைமையுடையவன் ஆத லால் கைலாச கிரியோடு ஈசனைத் தாங்கும் பாவனையில் இவனை வாகனமாக வைத்து யாண்டும் வணங்கி வருகின்றனர்.

குலங்கிளரும் வருதிரைகள் ஏழும் வைத்தார்
 குருமணிசேர் மலைவைத்தார் மலையைக் கையால்
உலங்கிளர எடுத்தவன் தோள் முடியும் நோவ
 ஒருவிரலால் உறவைத்தார் இறைவா! என்று
புலம்புதலும் அருளொடுபோர் வாளும் வைத்தார்
 புகழ்வைத்தார் புரிந்தாளாக் கொள்ள வைத்தார்
நலங்கிளரும் திருவடிஎன் தலைமேல் வைத்தார்
 நல்லூர்எம் பெருமானார் நல்ல வாறே. (1)

இறவாமே வரம்பெற்றேன் என்று மிக்க
 இராவணனை இருபதுதோள் நெரிய ஊன்றி

உறவாகி இன்னிசைகேட்டு இரங்கிமீண்டே
உற்றபிணி தவிர்த்தருள வல்லான் தன்னை
மறவாதார் மனத்தென்றும் மன்னி ஞானை
மாமதியம் மலர்க்கொன்றை வனனி மத்தம்
நறவார்செஞ் சடையானை நள்ளாற் றானை
நானடியேன் நினைக்கப்பெற் றுய்ந்தவாறே.

(தேவாரம்) (2)

கைலைமலையில் சிக்கி முதலில் கலங்கிய இராவணன் பின்பு தெளிந்து அன்போடு இனிய இசைபாடி இறைவனிடம் அரிய வர பலங்கள் பெற்றுள்ள அதிசய நிலைகளை அப்பர் சுவாமிகள் இவ்வாறு ஆர்வத்தோடு குறித்திருக்கின்றார்.

சிறந்த போர் வீரன் ஆதலால் இவனுடைய தலைமைக்கும் நிலைமைக்கும் தகுதியாக உயர்ந்த வாள் ஒன்றைச்சிவபெருமான் உவந்து கொடுத்தார். அந்த வாளாயுதம் சந்திரகாசம் என்னும் பேருடையது. அற்புத ஆற்றல் அமைத்தது. இந்திரனுடைய குலிசத்தையும் இருபிளவாக்க வல்லது. சிவன் தந்த அந்த வாளை இவன் கையில் வைத்திருக்கும் போது எந்த ஆயுதங்களும் யாதும் செய்ய இயலாது. அதனால் இவன் அதிசயனுயினன்.

தசமுகன் கைக்குக் கட்கம் அளிக்கும் பெரியோன்.

(திருப்புகழ் 465)

இராவணனுக்கு ஈசன் வாள் அருளியிருத்தலை அருணகிரி நாதர் இங்ஙனம் உரைத்திருக்கிறார். கட்கம் = வாள். எதையும் கட்டறக் கடிவது என்னும் காரணம் பூரணமாய் மருவி வந்தது.

ஐந்து தலையான் தந்த வாளால் பத்துத் தலையான் பதினலு உலகங்களையும் வென்றான் என்று வானவரிடம் நாரத முனிவர் ஒரு முறை இவ்வாறு கூறியிருக்கிறார். ஆகவே அதன் வெற்றித் திறலை இங்கே நாம் உய்த்து உணர்ந்து கொள்ளுகின்றோம்.

தருக்கோடு தான் துணிந்து செய்த பிழையைப் பொறுத்துத் தனக்குப் பேரருள் புரிந்து பெருவளங்கள் தந்துள்ளமையால் ஈசனை இலங்கை வேந்தன் நாளும் பூசனை செய்து வரலானன். அந்த முறையில் அன்று போர் மேல் மூண்டு போக எழுந்த பொழுது ஆண்டவனை விவேகமாய் வேண்டினன்.

ஈசனை இமையா முக்கண் இறைவனை
இருமைக்கு ஏற்ற பூசனை முறையில் செய்து.

சிவபெருமானை அன்று இவன் நியமமாய் நேசித்துப் பூசித்திருக்கும் நிலைமையை ஈண்டு வாசித்து யோசித்து யூகமாய் ஓர்ந்து கொள்கிறோம். எல்லா ஐசுவரியங்களையும் இயல்பாக உடையவன் எவனோ அவன் ஈசன் என நின்றான். அதிசயமாக நெற்றியில் ஒரு கண் வெற்றி நிலையில் விளங்கியிருத்தலால் முக்கண் இறைவன் என்று தக்க தலைமை தெரிய உரைத்தார்.

எங்கும் என்றும் பூரணமாய் நிறைந்துள்ள இறைவனை இலங்கைக்கு இறைவன் காரணம் கருதி ஆரண முறையில் அன்று பூசித்தான். போரில் தனக்கு வெற்றி தர வேண்டும் என்றே வேண்டி உற்ற மறைகளை ஓதி யிருக்கிறான்.

இருமைக்கு ஏற்ற பூசனை என்றது இம்மையிலும் மறுமையிலும் நன்மை தரவுரியது என்னும் அதன் தன்மை தெரிய வந்தது. இராவணன் தெய்வ சிந்தனையாளன், வேதங்களை நன்குபயின்றவன், அதிசய மதிமான் என்பதை இங்கே அறிந்து கொள்ளுகிறோம். இவ்வளவு மேன்மைகளை எய்தியிருந்தும் வெவ்விய பழியாளனாய் அவன் விளிய நேர்ந்தது வியப்பை விளைத்துள்ளது.

உயர்ந்த கல்வியறிவுக்குப் பயன் சிறந்த ஒழுக்கமே; அது இல்லையானால் அந்த அறிவு பொல்லாததாய்ப் புலைப்படுகின்றது.

"உள்ளத்தில் ஒழுக்கம் ஒன்றுறாதவன் கல்வி
வெள்ளத்தை ஒத்துமேல் விரிந்தது என்னினும்
எள் ஒத்த பயனையும் எய்திடாமலே
பள்ளத்தில் இழிந்து பாழாகும் என்பவே"

என்றதனால் சீலம் இல்லாத கல்வியின் சிறுமை தெரிய நின்றது. உரிய பயனை இழந்த போது அரிய அறிவும் அவமே அடைகிறது. உற்றஒழுக்கமே உயர்ந்தவெற்றியாய் ஒளிர்கிறது.

சிறிது கற்றாலும் சீலம் உடையவன் பெரிய மேன்மைகளை அடைகிறான்; அரிய பல கலைகளை அறிந்தாலும் அஃது இல்லாதவன் வறியனாய்ச் சிறுமைகளை மருவிச் சீரழிந்து போகின்றான்.

"The poorest education that teaches self-control, is better than the best that neglects it." [Anon]

புலன் அடக்கத்தை அருளுகிற கல்வி சிறிதா யிருந்தாலும் அதனைக் கொடாத பெரிய கல்வியினும் அது அரிய மகிமையுடையது என்னும் இது இங்கே நன்கு அறியவுரியது.

தன் அறிவை நெறியோடு பயன்படுத்தாமல் பொறி வெறியனாய்ப் போனமையால் இராவணன் கொடிய பல துயரங்களை அடைந்தான். உன்குடி குலைந்து குலம் அழிந்து முடியிழந்து அடியோடு நீ அழிந்து படுவாய்! என்று பதிவிரதை வயிறு எரிந்து சபித்த சாபம் இவனை எவ்வழியும் வதைத்து வருகிறது.

அந்த வதையின் முடிவை அன்று அடைய நேர்ந்தவன் என்றும் முடிவில்லாத முதல்வனைத் தொழுது துதித்து நெடியதானங்களை வழங்கி முடித்து உரிய போருக்கு ஆயத்தம் ஆயினன்.

போர்க் கோலம்.

யானைகள் மேல் பெரிய முரசங்களை ஏற்றி யாண்டும் முழக்கிச் சேனைகள் எழும்படி சேனாதிபதிகளுக்குப் பணித்து விட்டுத் தனியே அழகிய மணிமாளிகையுள் புகுந்து இராவணன் போர்க் கோலம் பூண்டான். அமரரும் துதிசெய்துதொழுதுவர அதிசய வீரனாய் விளங்கி யிருந்தவன் அன்று விளைந்த அமருக்கு வென்றி வீறோடு விரைந்து கோலம் புனைந்தது ஞாலம் வியந்து காண வந்தது. அந்தப் போர்க் கோலத்தை வருணித்து வந்துள்ள கவிகளின் சுவைகளையும் வீர நிலைகளையும் அயலேகாணவருகின்றோம்.

கவசம் அணிந்தது

அருவி அஞ்சனக் குன்றிடை ஆயிரம் அருக்கர்
உருமி னோடும்வந்து உதித்தன ராமென ஒளிரக்
கருவி நான்முகன் வேள்வியிற் படைத்ததும் காட்டிச்
செருவில் இந்திரன் தந்தபொற்கவசமும் சேர்த்தான். (1)

கச்சை கட்டியது.

வாள்வலம்பட மந்தரம் சூழ்ந்தமா சுணத்தின்
தாள்வலந் தொளிர் தமனியக் கச்சொடும் சார்த்திக்
கோள்வலந்தன குவிந்தன வாமெனும் கொள்கை
மீள்வில் கிம்புரி மணிக்கடி சூத்திரம் வீக்கி. (2)

உடை உடுத்தியது.

மறைவிரித் தன்னமாடுறு மானமாக் கலுழன்

சிறைவிரித்தன்ன கொய்சகம் மருங்குறச் சேர்த்தி
முறைவிரித்தன்ன முறுக்கிய கோசிகம் முறையே
பிறை விரித்தன்ன வெள்ளயிற் றரவமும் பிணித்து. (3)

இடைவாள் இசைத்தது

மழைக் குலத்தொடு வானுரு மேறெலாம் வாரி
இழைத் தொடுத்தன அனையவாள் இடைமணி யார்த்து
முழைக் கிடந்தவல் அரியினம் முழங்குவ போல்வ
தழைக்குமின்னொளிப் பொன்மலர்ச் சதங்கையும் சார்த்தி.

வீரக்கழல் விசித்தது.

உரும்இடித்துழி அரவெனக் கரக்கவா னுலகின்
இருநிலத்திடை எவ்வுல கத்திடை யாரும
புரிதரப்படும பொலங்கழல் இலங்குறப் பூட்டி
சரியுடைச் சுடர் சாய்நலம் சார்வுறச் சாத்தி. (5)

கங்கணம் புனைந்தது.

நாலைஞ் சாகிய கரங்களின் நனந்தலை அனந்தன்
ஆலஞ் சார்மிடற்றருங்கறை கிடந்தென இலங்கும்
கோலஞ் சார்நெடுங் கோதையும் புட்டிலும் கட்டித்
தாலஞ் சார்ந்தமா சுணம்எனக் கங்கணம தழுவ. (6)

வாகுவலயங்கள் வனைந்தது

கடல் கடைந்தமால் வரையினைச் சுற்றிய கயிற்றின்
அடல்கடந்த தோள் அலங்குபோர் வலயங்கள் இலங்க
உடல் கடைந்தநாள் ஒளியவன் உதித்தபொற் கதிரின்
சுடர் தயங்குறக் குண்டலம் செவியிடைத் தூக்கி. (7)

குண்டலங்கள் கொண்டது.

உதயக் குன்றத்தொடு ஒத்ததின் உலாவுறு கதிரின்
துதையும் குங்குமத் தோளொடு தோளிடை தொடரப்
புதையிருட்பகைக் குண்டலம் அனையவை பொலியச்
சிதைவில் திங்களும் மீனும்போல் முத்தினம் திகழ. (8

கிரீடங்கள் கிளர்ந்தது.

வேலை வாய்வந்து வெய்யவர் அனைவரும் விடியும்
காலை யுற்றன ராமெனக் கதிர்க்குலம் காலும்
மாலை பத்தின்மேல் மதியமுன் னிடைப் பலவாய்
மூலை முற்றிய அனையமுத் தக்குடை இமைப்ப. (9)

வீர பட்டம் விரித்தது.

ஒத்த தன்மையின் ஒளிர்வன தரளத்தின் ஓதம
தத்து கின்றன வீரபட்டத் தொகை தயங்க
முத்த ஓடையின் முரட்டிசை முழுமத யானை
பத்து நெற்றியும் சுற்றிய பேரெழில் படைக்க. (10)

வாகை மாலை சூடியது.

நாகர் நானில நான்முகன் நாடென நயந்த
பாகம் மூன்றையும் வென்றுகொண்டு அமரர்முன் பணிந்த
வாகை மாலையும் மருங்குற வரிவண்டோடு அளவித்
தோகை அன்னவர் விழிதொடர் தும்பையும் சூட்டி. (11)

அம்புப் புட்டில் அமைத்தது.

அகழி வேலையைக் காலத்தை அளக்கர்நுண் மணலை
நிகழு மீன்களை விஞ்சையை நினைப்பதேன் நின்ற
இகழ்வில் பூதங்கள் இறப்பினும் இறுதிசெல் லாத
புகழெனச் சரம் தொலைவிலாத் தூணியும் பூட்டி. (12)

தேர் வந்தது.

வருக தேர்என வந்தது வையமும் வானும்
உரக தேயமும் ஒருங்குடன் இவரினும் உச்சிச்
சொருகு பூவன்ன சுமையது துரகம் இன்றெனினும
நிருதர் கோமகன் நினைந்துழிச்செல்வதோர் நினைப்பில்.(13)
[தேர் ஏறுபடலம்]

இராவணன் யுத்த சன்னத்தனாய்ப் போர்க்கோலம் கொண்டுள்ள நிலைகளை இங்கே விழைந்து பார்த்து வியந்து நிற்கின்றோம். சிறப்போடு குறித்திருக்கின்ற அணிமணிகளின் அலங்கார விசேடங்களால் இலங்கேசனுடைய அதிசய ஆடம்பரங்களையும் அருந்திறலாண்மைகளையும் திருவின் போகங்களையும் உருவின் யோகங்களையும் ஓர்ந்து உணர்ந்து கொள்ளுகின்றோம். போராடநேர்ந்தவன் வீரக் கோலங்களை விரைந்து சேர்ந்தான்.

அரிய வச்சிர கவசத்தை மார்பில் அணிந்தான்; அதில் மருவியிருந்த இரத்தினங்கள் பக்கம் எங்கணும் மிக்க ஒளிகளை வீசின; இடையில் புனைந்த உடைவாள் இமையவர் எவரையும் அடைய வென்ற அதிசய ஆற்றலையுடையது; உள்ளே கச்சை

வரிந்து கட்டிய பின் வெளியே உச்ச நிலையில் உடை விரித்து உடுத்தினன்; அழகிய ஆடையைப் பலவகையாக மடித்து அரையில் மடுத்த பின் அதன்மேல் உதரபந்தனம் தொடுத்தான். பின் தார் புனைந்து பஞ்ச கச்சமா வனைந்து வரைந்து கட்டினன் ஆதலால் அக்காட்சி மணக்கோல மாட்சியாய் மருவி விளங்கியது.

கலுழன் சிறை விரித்தன்ன கொய்சகம் என்றதனால் அந்த ஆடையின் மடிப்புகளை மதித்து அறிந்து கொள்கிறோம். கருடனுடைய சிறகுகளில் இறகுகள் ஒன்றன் மேல் ஒன்று உறைந்து படிந்து நிறைந்திருக்கும் ஆதலால் அந்த முறையில் குசவங்கள் அமைந்திருந்தன. இக் காலத்துக் காலுறைகள் போல் ஊனமாய் ஒட்டி நில்லாமல் அது மானமாய் மாண்பு தோய்ந்து நின்றது. தோளில் சுற்றியிருந்த வாகுவலயம் மந்தர கிரியை மருவி நின்ற வாசுகி போல் தேசுவீசி விளங்கியது; அதன் பின் கால்களில் வீரக்கழல் வனைந்து காதுகளில் குண்டலங்கள் புனைந்தான்; பின்பு மணி மகுடங்கள் தரித்து அரியணையில் சிறிது போது அமர்ந்து யாவருக்கும் தானங்களை வழங்கினன். போரில் தனக்கு வெற்றி கிடைக்கும்படி அரிய பல செல்வங்களை அயலெங்கும் அள்ளி வீசி விட்டு வில் ஏந்தி வீரகம்பீரமாய் வெளியே வந்து நின்றான். அந்த நிலை அமரர் அசுரர் முதலிய யாவரையும் நிலை குலையச் செய்தது; அற்புதமான ஓர் வீரப் பொலிவு இங்கேசன் முகத்தில் அப்பொழுது துலங்கி நின்றது. எப்பொழுதும் காணாத உறுதியும் ஊக்கமும் பெருமிதமும் வீர கம்பீரமும் அவனிடம் அன்று வீறு கொண்டு விளங்கின; இறுதி நிலையை அறுதியிட்டு அத்தோற்றப் பொலிவு ஏற்ற முற்றுள்ளதை நோக்கி இலங்கை வாசிகள் யாவரும் ஏங்கி நின்றனர். அழிவு மூண்டதே என்று விழிநீர்கள் நீண்டன.

இரதம் எய்தியது.

அந்த நிலையில் தனது அதிசய இரதத்தை விரைந்து கொண்டு வரும்படி பணித்தான்; பேரெழில் நிறைந்த அத்தேர் நேரே வந்து நின்றது. அது தெய்வீகமானது; வரபலத்தால் வந்தது; மூவகை உலகங்களையும் ஆளுகின்றவன் ஆதலால் அதில் மேவியே இராவணன் யாண்டும் சென்று வருவது வழக்கமாயிருந்தது.

நிருதர் கோமகன் நினைந்துழிச் செல்வது.

என்றதனால் அத்தேரின் திவ்விய நிலைமைகளை நேரே நாம் அறிந்து கொள்கிறோம். பரிகள் இல்லாமலே திருதர் பதி கருதிய படியெல்லாம் கடிது செல்லவல்ல அந்த இரதம் அரண்மனை வாசலின் எதிரே வந்து நின்றது. அதன் அதிசய நிலைகளையெல்லாம் வியந்து அமரர் முதல் யாவரும் துதி செய்து நின்றனர்.

தேரின் சீர்

பாரில் செல்வது, விசும்பிடைப் படர்வது, பரந்த
நீரில் செல்வது, நெருப்பினும் செல்வது, நிமிர்ந்த
போரில் செல்வது, பொன்னெடு முகட்டிடை விரிஞ்சன்
ஊரில் செல்வது, எவ்வுலகத்தும் செல்வதுஓர் இமைப்பின் [1]

எண்டிசைப்பெருங் களிற்றிடை மணிஎன இசைக்கும்
கண்டை ஆயிர கோடியின் தொங்கயது கதிரோன்
மண்டிலங்களை மேருவிற் குவித்தென வயங்கும்
அண்டம் விற்கும் நன்காசினம் குயிற்றிய தடங்க. [2]

முனைவர் வானவர் முதலினர் அண்டத்து முதல்வர்
எனைவர் ஈந்தவும் இகலினில் இட்டவும் இயம்பா
வினையின் வய்யன படைக்கலவேலை என்றிசைக்கும்
சுனையின் நுண்மணல் தொகையன சுமந்தது தொக்க. [3]

கண்ணன் நேமியும் கண்ணுதல் கணிச்சியும் கமலத்து
அண்ணல் குண்டிகைக் கலசமும் அழியினும் அழியா
திண்மை சான்றது தேவரும் உணர்வரும் செய்கை
உண்மை யாம்எனப் பெரியது வென்றியின் உறையுள் [4]

அனைய தேரினை அருச்சனை வரன்முறை ஆற்றி
எனையர் என்பதோர் கணக்கிலா மறையவர் எவர்க்கும்
வினையின் நன்னிதி முதலிய அளப்பரும் வெறுக்கை
நினையின் நீண்டதோர் பெருங்கொடை அருங்கடன் நேர்ந்தான் [5]

ஏறினன் தொழுது இந்திரன் முதலிய இமையோர்
தேறினர்களும் தியங்கினர் மயங்கினர் திகைத்தார்
வேறு நாம்சொலும் வினையிலை மெய்யின் ஐம்புலனும்
ஆறினர்களும் அஞ்சினர் உலகெலாம் அனுங்க. [6]

போர் மேல் போக ஆயத்தமாய் வந்துள்ள சீரிய தேரின் அற்புதநிலைகளை இங்கே விழைந்து நோக்கி வியந்து நிற்கின்றோம். அரிய பல அதிசயங்களையுடையதாய்ப் பெரிய மகிமைகளை அது மருவியிருக்கின்றது. அதில் பூட்டியுள்ள குதிரைகள் அழகு

வேகம் முதலிய விழுமிய நிலைகளை இயல்பாகவுடையன; சூரிய னுடைய தேரில் தோய்ந்துள்ள வீரியமான பச்சைப் புரவிகளி னும் அவை உச்ச நிலைகள் அமைந்தன. அதிசயமான கதிவே கங்கள் வாய்ந்தன; அவ்வாசிகளின் தேசுகளை நோக்கி வானுலக வாசிகளும் கூசி நின்றனர். துள்ளலும் துடுக்குமாய்க் காதுகளை நேர்நிறுத்திக் கடுவேகம் காட்டி அடலாண்மையோடு அவை ஆர்த்து நின்றன. அசுவங்களின் காட்சி அரிய மாட்சியாயது.

தத்தித் தாவி எத்திசைகளிலும் செல்லவல்ல அத்தகைய வித்தகப் பரிகள் பூண்ட விசித்திரத் தேரைச் சத்திரசித்து என் னும் சாரதி சமர வீறோடு கொண்டு வந்து நேரே நிறுத்தினன்.

யாண்டும் எவ்வழியும் அதிவேகமாய் ஏகவல்ல அந்தத்திவ் விய இரதம் அன்று செவ்விய அலங்காரங்களோடு சிறந்து விளங்கியது. அதன் மருங்கு எங்கும் வீரகண்டாமணிகள் வீறோடு ஒலித்து நின்றன. போருக்கு வேண்டிய கருவிகள் பல வும் மருவி உருவ எழிலோடு ஒளி செய்து மிளிர்ந்தது. வீணை எழுதிய கொடி மேலே கோலாகலமாய் வீசி நின்றது. எண்ண ரிய திறலோடு இலங்கி விளங்கியது. கண்ணனும் கண்ணுதலும் கமலத்து அண்ணலும் எண்ணி மகிழ வுரிய ஏற்ற முடையது என்றதனல் அதன் தோற்றமும் தொழிலும் ஆற்றலும் அமைதி யும் அதிசய நிலைகளும் நன்கு அறியலாகும்.

அது வந்தபோது இந்திரனும் இமையவரும் சிந்தைகலங்கித் திகைத்து நின்றனர். அந்தத் தேரையுடையவனை யாரும் வெல்ல முடியாது என்னும் பேரை அடைந்திருந்தது ஆதலால் அதன் சீரையும் சிறப்பையும் நினைந்து மயங்கித் தேவர்கள் தியங்கினர். அமரர் முதல் யாவரும் அலமரலடைய அது நலமாய் வந்து நிருதர் பதியின் விருது நிலையமாய் நேரே நிலவி நின்றது.

வென்றியின் உறையுள்.

வந்த அந்தத் தேரைப் பலவகையாக வருணித்து வந்த கவி முடிவில் இந்தவாறு அதன் நிலையைவரைந்து காட்டியிருக்கிறார்.

வெற்றிக்கு நிலையம் என்று குறித்தது அதன் வித்தகத்திறலை உய்த்து உணர்ந்து கொள்ள. தன் பால் ஏறியிருந்தவன் சிறந்த வீரம் இல்லாதவன் ஆயினும் போரில் அவனுக்கு உயர்ந்த வெற் றியைத் தந்தருளுவது என அதன் அதிசய நிலைமையை இவ்

வாறு துதி செய்து கூறினர். சாதாரணமானவன் ஏறினும் வெற்றியை அருளவல்ல அத்தேர் பெரிய போர் வீரனான இராவணனுக்கு எத்தகைய கொற்றத்தை விளைத்து எவ்வாறு இதம் விரித்தருளும் என்பது ஈண்டு நுனித்துணரவந்தது.

தேகபலம் மனோபலம் ஆயுதபலம் முதலிய வலிமைகள் யாவும் நிலையாக வாய்ந்த இலங்கேசனுக்குத் தெய்வீக மகிமைகள் தோய்ந்த திவ்விய இரதமும் உரிமையாய் வந்து நின்றது.

அனைய தேரினை அருச்சனை
வரன்முறை ஆற்றி.

போர் மேல் போவதற்குத் தனக்குத் தனி உரிமையாய் இனிது வந்து நின்ற அந்தத் தேரை மிகவும் மரியாதை யோடு இராவணன் பூசித்திருக்கிறான். வந்தவுடன் தேரில் விரைந்து ஏறி விடவில்லை; சிந்தை நிறைந்த அன்போடு வந்தனை வழிபாடுகள் ஆற்றிப் பூசனை செய்துள்ளான்; ஆகவே அதன் தெய்வீக நிலைமையையும் தலைமையையும் இவன் மதித்துப் போற்றி வழி பாடுகள் ஆற்றி வந்திருக்கும் மரபுகள் தெரியவந்தன.

வேத மந்திரங்களைச் சொல்லி நல்ல மலர்களைக் கொண்டு பூசனை புரிந்துள்ள நிலையை அருச்சனை ஆற்றி என்றதனால் அறிந்து கொள்கிறோம். போரில் தனக்கு வெற்றி கிடைக்க வேண்டும் என்னும் ஆவலால் இலங்கைக் காவலன் இவ்வாறு தேருக்குப் பூசை செய்ய நேர்ந்தான். உள்ளத்தில் புகுந்துள்ள ஆசையை வெளியே செய்த செயல்கள் நன்கு விளக்கி நின்றன.

மானச நிலை.

காலமும் இடமும் கருமங்களைச் சாலவும் தெளிவாக்கி ஞாலம் அறியச் செய்து விடுகின்றன. யாண்டும் அஞ்சாமல் எவரையும் மதியாமல் எவ்வழியும் வீறோடு வீர கம்பீரமாய்ச் செல்லுகின்ற நிருதர்பதி ஈண்டு இவ்வாறு தாழ்ந்து வேண்டியிருப்பது நேரே மூண்டு நிற்கும் எதிரியின் ஆண்டகைமையையும் அதிசய வீர பராக்கிரமத்தையும் ஓர்ந்து உணரச் செய்தது.

தேரில் ஏறியது.

மந்திர முறையில் சிந்தனை செய்து பூசனை புரிந்தபின் தனது வலது காலை முந்துற வைத்து இராவணன் அத்தேரில் ஏறிச்

செவ்வையாக இடையே அமைந்திருந்த ஆசனத்தில் அமர்ந் தான். சிறந்த வில்லைக் கையில் தாங்கி வீரப்பிரதாபத்தோடு வீற் றிருந்த அவனது தோற்றப் பொலிவை நோக்கி விண்ணும் மண் ணும் வெருண்டு மருண்டு எண்ணங்கள் புரண்டு நின்றன.

அசுரர் குலங்களும் அமரர் திரள்களும் பலமுறையும் அரக் கர்பதியால் அல்லலுழந்து அழிவடைந்தனர் ஆதலால் இம்முறை அவன் எழுந்த பொழுது என்ன நேருமோ! என்று இன்னல் மீதூர்ந்து ஏங்கியுளைந்தார். பாவம் மிகுந்துள்ளமையால் "இனி மேல் இவன் அழிந்தே போவான்" என்று தெளிந்து தேறியிருந் தவர்களும் அவன் தேரில் ஏறியிருந்த நிலையைக் கண்டதும் நெஞ் சம் கலங்கி நெடிது மயங்கி அஞ்சி மறுகி அலமந்து நின்றனர்.

தேறினார்களும் தியங்கினார்;
மயங்கினார்; திகைத்தார்.

போரில் ஏற மூண்டு இராவணன் தேரில் ஏறிய பொழுது தேவர் முதல் யாவரும் சிந்தை கலங்கித் தியங்கி மயங்கியுள்ள நிலையை இதனால் தெரிந்து கொள்ளுகிறோம். அவனது போர்க் கோலமும் தேர்க்கோலமும் வீரப்பொலிவும் தீர நிலையும் யாருக் கும் அச்சத்தையும் திகில்களையும் உச்சமா விளைத்தன

இலங்கை வாழ்வு இனி நில்லாது; வேந்தன் வீரம் செல் லாது; இராமபிரானால் ஒல்லையில் அழிந்து ஒழிந்தே போவான் என்று உள்ளம் தெளிந்திருந்த எல்லாரும் இப்பொழுது அந்தத் தெளிவு குன்றி இராவணன் யாவரையும் அழிவு செய்துவிடு வான் என்று அஞ்சி அலமந்தனர் ஆதலால் தேறினார்களும் தியங் கினார் என்றார். அவன் தேரினன் ஆகவே முன் தேறினார் யாவ ரும் மாறினார். தாங்கள் திண்ணமாய் எண்ணித் தெளிந்திருந்த உறுதி ஒழிந்தது என்று உள்ளம் குலைந்து உளைந்துள்ளனர். அவ்வுண்மையை உரைகள் உணர்த்தி நின்றன. அக நிகழ்ச்சி களை மொழிகள் தெளிவாக வெளியே தெரியச் செய்தன.

தியக்கமும், மயக்கமும், திகைப்பும் மனக்கலக்கத்தின் நிலைகளைத் துலக்கின. நெஞ்சம் கலங்கிய நிலையில் முதலில் நின்ற வர் தியங்கினார்; அந்த எல்லையைக் கடந்து அல்லலுழந்த போது மயங்கினார்; சேர்ந்த இருவகை நிலைகளும் ஒருவி ஒருவகையும் தெளியாமல் உள்ளம் மறுகி உயங்கி நின்றவர் திகைத்தார்.

நெஞ்சம் மருண்டு நிலைவெருண்டு குலை வெருவி இவ்வாறு அனைவரும் பதறி நின்றது அரக்கர் பதியின் அடலாண்மைகளையும் அதிசய ஆற்றல்களையும் அறியச் செய்தது ஆதலால் அந்த மெய்ப்பாடுகளை வியப்போடு விரித்து விளக்கினர். அச்சங்களை அளந்து காட்டியது அவனது உச்ச வீரத்தின் உறுதி காண வந்தது. உள்ளத்திகில்கள் எல்லாரையும் கலக்கியுள்ளன.

ஐம்புலனும் ஆறினர்களும் அஞ்சினர்.

தேவர் கோன் முதலாகத் தேறியிருந்தவரும் மாறி மயங்கினர் எனக் கூறி வந்தவர் முடிவில் மாதவர்களையும் இவ்வாறு கூறியருளினர். மெய் வாய் கண் மூக்கு செவி என்னும் ஐம்பொறிகளையும் புலன்களில் செல்லாமல் அடக்கி மனத்தை ஒருமுகப்படுத்தி யோக நிலையில் சித்த சாந்தி அடைந்திருந்த முனிவர்களும் இராவணன் தேரில் ஏறிய பொழுது உலகத்துக்கு என்ன நேருமோ? என்று உள்ளம் கலங்க நேர்ந்தார் ஆதலால் அந்த அதிசய நிலையை இந்தவாறு வியந்து குறித்தார்.

உலகப் பற்றுகள்யாவும் நீங்கி முற்றத்துறந்த முனிவர்களாய்த்தனியே ஒதுங்கியுள்ள யோகிகள் எதற்கும் அஞ்சார்; அச்சம் யாதும் இன்றி உச்ச நிலையில் உரம் கொண்டுள்ள தத்துவஞானிகளும் சித்தம் கலங்கி அஞ்சினர் என்றது அரக்கர் பதியின் உக்கிர வீர நிலையை நன்கு உணர்த்தி நின்றது.

ஊழி பெயரினும் தாம் பெயராமல் சாந்தி நிலையில் சார்ந்திருக்கும் தவசிகளையும் அன்று அவன் எழுந்த எழுச்சி தளரச் செய்தது. நிறைந்த கருணையாளர் ஆதலால் சீவகோடிகளுக்கும் தேவ கோடிகளுக்கும் அவனால் யாது நேருமோ என்று பேதறலடைந்தார். தண்ணளியாளர் எண்ணழிந்து கண்ணழியலானர்.

பொறிகளை வென்று அமைதியாய் அடங்கியுள்ள அவரது சாந்த நீர்மையைக் கூர்மையாய் உணர்ந்து கொள்ள ஆறினர்கள் என்றார். காமம் கோபம் முதலிய தாபங்களால் தவியாமல் எவ்வழியும் திவ்விய நிலையில் அமைதியாய் மருவியிருக்கும் மகிமை தெரிய வந்தது. முத்திக்கு மூலம் சித்த சாந்தம் ஆதலால் அது தோய்ந்துள்ள உத்தமரது தூய்மையைத் துலக்கியருளினர்.

ஆறினரும் அஞ்சினர் என அமைந்துள்ள இந்த வாக்கியத்

தின் சொல்லணிகளையும் பொருள் அழகுகளையும் எண்ணலங்கா ரங்களையும்கூர்ந்து நோக்கி ஓர்ந்து உணர்ந்துகொள்ளவேண்டும்.

ஐம்புலன்களையும் வென்றவன் அகில பந்தங்களையும் கடந்து ஆறுதலடைந்து அரியபரமநிலையில் மருவி மிளிர்கின்றான்.

ஜிதாத்மந: ப்ரசாந்தஸ்ய பரமாத்மா ஸமாஹித:
சீதோஷ்ண சுகதுக்கேஷு ததா மாநாபமாநயோ:
(பகவற்கீதை 6-7)

புலன்களை வென்றவன் சாந்தசீலனாய் ஆறுதலுறுகின்றான்; குளிர் வெப்பம் சுகம் துக்கம் மானம் அவமானம் முதலிய நிலைகள் யாவும் கடந்து மேலான பரமாத்மாவாய் மேவி நிற்கின்றான் என்னும் இது இங்கே ஊன்றி உணர்ந்து கொள்ள வுரியது.

உலகத் துயர்களை மறந்து இத்தகைய உத்தம நிலையில் ஒடுங்கியிருந்த தத்துவ ஞானிகளும் சித்தம் கலங்க இராவணன் போர் மேல் மூண்டு எழுந்த தேர்மேல் ஏறினான். அங்ஙனம் ஏறினவன் அயலே நின்றவர் வியந்து கேட்க வீரசபதம் கூற நேர்ந்தான். அமரர் எவரும் அயர அடலோடு பேசினான்.

உள்ளம் துணிந்து உக்கிரவீரமாய் அவன் ஊக்கியுரைத்த வஞ்சினமொழிகள் இறுதி நிலைகளை அறுதியிட்டு உறுதியாய் வந்தன. நெஞ்சம் கருதியுள்ளதை நேரே தெரிய உரைத்தான்.

வீர சபதம்.

மன்றலங்குழற் சனகிதன் மலர்க்கையால் வயிறு
கொன்றலந்தலைக் கொடுநெடுந் துயரிடைக் குளித்தல்
அன்றி தென்றிடின் மயன்மகள் அத்தொழில் உறுதல்
இன்றிரண்டின் ஒன்று ஆக்குவன் தலைப்படின் என்றான்.

இந்தப் பாட்டைக் கூர்ந்து நோக்குவோர் அவன் உள்ளம் தேர்ந்துள்ளதை ஓர்ந்து உணர்ந்து கொள்ளுவர். தன் முடிவை முடிவாய் முடிவு செய்திருக்கிறான் உறுதியான அந்த முடிவுகளை உலகம் வியந்துகாண அதிசய விநோதமாய் வெளியிட்டுள்ளான்.

இன்று நான் இராமனை வென்று மீளுவேன்; அல்லது பொன்றி மாளுவேன் என்று சொல்ல வேண்டியவன் அவ்வாறு சொல்லாமல் இவ்வாறு சொல்லியிருக்கிறான். மானச மருமங்கள் மதிநலங்கள் சுரந்து உரைகளில் மருவி வந்துள்ளன.

மூண்ட பகைமைக்கும் நீண்ட போருக்கும் மாண்டு மடிய நேர்ந்துள்ளமைக்கும் மூலகாரணம் ஞாலம் அறிய நயமாய் ஈண்டு வெளிவந்துள்ளது. தன் குடியையும் குலத்தையும் அடியோடு கெடுத்தவள் சீதையே என்ற கடுப்பு இராவணன் நெஞ்சத்தில் மடுத்திருத்தலால் அவளை ஈண்டு எடுத்துப் பேசினான். உள்ளக் கொதிப்புகள் உரையில் ஓங்கி நின்றன.

தன்கையால் வயிற்றில் அடித்து அலறி அழுது துயரில் விழுந்து சீதை துடித்துப் பதைக்கும்படி இன்று நான் கடுத்துச் செய்வேன்; அது முடியாது போனால் மண்டோதரி அவ்வாறு செய்யும்படி நேரும் என்று தேரிலிருந்தபடியே அவன் கூறி நின்றான். போரில் சாக நேர்ந்தவன் சாவுகளைச் சாற்றினான்.

என் சத்துருவான இராமன் மாண்டு மடிவான்; அல்லது நான் செத்து முடிவேன் என்பதை இப்படி வித்தகமாய் விளக்கியிருக்கிறான் முன்னம் போராடி மீண்டு வந்தது போல் இன்று வரமாட்டேன்; பகைவனைக் கொல்லுவேன்; கொல்லேனாயின் கொலையுண்டு அழிவேன் என முடிவைத் தெளிவாக்கினான்.

உள்ளம் கொதித்து உருத்து வெறுத்து உரைத்தபோதும் சீதைமேல் அவன் வைத்துள்ள ஆசை நிலையை யாவரும் அறியுமாறு உரைகளின் ஒசைகள் நன்கு உணர்த்தி நின்றன.

மன்றல் அம் குழல் சனகி என்றது அக்குலமகளின் கூந்தல் அழகில் அவன் நெஞ்சம் பறிபோயுள்ளமையை நேரே தெரியச் செய்தது. இயற்கையான நறுமணமும் கருமை அடர்ந்த அருமை எழிலும் அந்தக் கூந்தலில் உயர்வாய்த் தோய்ந்திருந்தன.

வஞ்சமாய்க் கவர்ந்து விமானத்தில் அவன் எடுத்துவரும் போது தலைவிரி கோலமாய்ச் சீதை பதறியழுதாள்; அப்பொழுது அக்கூந்தல் முழங்கால் வரையும் நீண்டு விரிந்து அடர்ந்து அலமந்தது; அவ்வமையம் அதிலிருந்து ஒருவகையான பரிமளம் எழுந்தது; அந்த அதிசய மணத்தை நுகர்ந்து இலங்கை வேந்தன் மதிமயங்கிமகிழ்ந்தான். அம்மயிரின் வாசனையிலிருந்தே அவனது ஆசைமோசமாய் வளர்ந்து வந்தது; மோகமாய்க் கிளர்ந்து நீண்டு முடிவில் உயிரும் நாசம் அடைய நேர்ந்தது.

மணம், வாசனை என வருவதினும் மன்றல் உயர்நிலையுடை

யது. நாளும் புதுமையாய் நிலைத்து வரும் பரிமள நீர்மையே மன்றல் என மருவி நின்றது. இயல்பான இனியமணம் உயர்வான உரையால் நயமா உணரவந்தது. சீதை என்னுது சனகி என்றது பிறந்த குலத்தின் புனித நிலையை நினைந்து. தான் செய்த தீய வஞ்சனைகளுக்கெல்லாம் யாதும் மயங்காமல் தூயளாய் இருந்து வந்துள்ளாள் ஆதலால் ஞானதீரன் ஆன சனகன் மகள் எனப் பிறப்பின் மகிமையைச் சிறப்பாக வுரைத்தான். நிறையும் பொறையும் நெறியும் முறையும் பிறவிக் குணமாக அப் பெண்ணரசியிடம் பெருகியுள்ளன என உருகியிருக்கிருன். அல்லல் அடைந்து சொல்லுகின்ருன் ஆனலும் உள்ளதை ஒளியாமல்நல்லதை நவின்ருன். மலர்க்கை என்றது சிவந்த காந்தள் மலர் போல்அழகு பொலிந்து விளங்கியகைகளை. மென்மை செம்மை முதலிய தன்மைகளை நினைந்து மொழிந்தான். அவன் விழி களிப்பக் கண்ட அழகுகள் மொழிவழியே வெளி அறிய வந்தன. கண்ணும் மனமும் அவள் வண்ணமாகவே வளைந்து வந்துள்ளமையை விளைந்து வந்துள்ள மொழிகளால் உணர்ந்து கொள்கிருேம். உரைவழியே உள்ளநிலை தெளிவாய் நின்றது.

தன் மனைவியையும் மயன்மகள் என்று பிறப்பின் பெருமை தெரிய உரைத்தான். மண்டோதரி பேரழகும் பெருங்குணங்களும் நிறைந்தவள். தனது நாயகன் பால் பேரன்புடையவள்.

உழுவலன்பு நிறைந்த அந்த அருமை மனைவியிடம் மிகவும் பிரியம் மீதூர்ந்து உரிமைபூண்டிருந்தவன் சீதையைக் கண்டதிலிருந்து அவளை யாதும் கவனியாமல் அவலமாய் ஒதுங்கியிருந்தான். அந்தப் புரத்தையே அணுகாது நின்ருன்.

ஏக நாயகன் தேவியை எதிர்ந்ததன் பின்னை
நாகர் வாழ்விட முதலென நான்முகன் வைகும்
மாக மால் விசும்பு ஈறென நடுவண வரைப்பின்
தோகை மாதர்கள் மைந்தரின் தோன்றினர்சுற்ற.

(சுந்தர, பிணி, 45)

சீதையைப் பார்த்தபின் இராவணன் நிலைமாறியுள்ள நிலைமையை இது நயமாக் காட்டியுள்ளது. அகில உலகங்களிலுள்ள எந்த அழகிகளும் அவன் கண்ணுக்கு ஒரு பொருளாத் தோன்றவில்லை; யாவரும் ஆடவராகவே தோன்றி நின்றனர்;

எழில் மிகுந்த எந்தமங்கையரிடமும் காம நோக்கமின்றி அவன் கருத்து மாறியிருப்பது சானகியைத் தெரிசித்த பலனாய்நேர்ந்தது.

காம போகியாய்க் களித்துத் திளைத்து எவ்வழியும் செழித்து வந்தவன் நேமமான பிரமச்சாரி போல் நிலைமாறி யிருப்பது மானச மருமமாய் மருவியுள்ளது. சீதை மேல் வைத்த காதல் அவனைப் பேதையாக்கிப் பித்தேற்றி யிருத்தலால் உரிய மனைவியரிடமும் பிரியமின்றிப் பெரிய வெறியனாய் நின்றான். தன்னை மறந்து அன்னவாறு அவன் பின்னமாய் இருந்தாலும் எவ்வழியும் மண்டோதரி அவனுக்கு இதமே செய்து வந்தாள்.

அவளுடைய அன்பும் அமைதியும் பண்பும் பணிவும் அறிவும் நெறியும் இராவணன் உள்ளத்தில் பரிவை வளர்த்து வந்தன; இறுதியாக அன்று போரில் மூண்டு தேரில் ஏறி யிருந்த போது அந்தப் பதிவிரதையைக் கருதி மறுக நேர்ந்தான்.

மனைவியை மதித்தது.

இராமன் இறந்தால் சீதை உயிர் வைத்திராள்; துள்ளித் துடித்து உடனே சாவாள்; அவ்வாறே இராவணன் செத்தால் மண்டோதரி உயிர்வாழாள்; அப்பொழுதே மாண்டு மடிவாள் என்பதை ஈண்டு வந்துள்ள உரைகளால் உணர்ந்து கொள்கிறோம். நீண்ட காலம் பழகியுள்ளவன் ஆதலால் நிலைமைகளையும் நீர்மைகளையும் நேரே நினைந்து துணிந்து மொழிந்தான்.

மயன்மகள் அத்தொழில் உறுதல்.

என்றது முன்னம் சொன்னதைச் சுட்டி வந்தது. சனகியைால் வயிறு கோன்று துயரிடைக் குளித்தல் என முதலில் குறித்த அனைத்தையும் அத்தொழில் உறுதல் என்று சுருக்கமாய்ச் சுட்டி உரைத்தான். வயிற்றில் அடித்து என்னுமல் கோன்று என்றது கொலைகளில் அவன் பழகி வந்துள்ள நிலைமை தெரிய நின்றது. தன்னை வயிறு எரியச் செய்தவள் வயிறு எரிந்து சாக வேண்டும் என்று கொடிய வேகமாய் மூண்டிருக்கிறான்.

மண்டோதரியை முதலில் குறியாமல் சீதையை முன்னுறக் குறித்தது இராமன் பொன்றி முடிவான்; தான் வென்றி பெறலாம் என்னும் வீண் ஆசையால் விளைந்தது. எதிரியின் அழி

வையே எதிர்நோக்கி யிருத்தலால் மொழிவழியே அது முந்தி வந்தது. பகை நீங்கி உவகை ஓங்கி வாழ உறுதியாயிருந்தான்.

உள்ளத்தில் மறைவாய்ப் பதிந்து கிடந்தது உரைகளில் விரைவாய் வெளிப்பட்டு வந்தது. உறுதியான முடிவில் தன் வாழ்வை முடிக்க மூண்டுள்ளான்; அவ்வுண்மையை வாய்மொழி திண்மையாய் உணர்த்தி நின்றது. வென்றி பெறுவேன்; அன்றேல், பொன்றி முடிவேன் என்று வீரோடு தேறி அவன் போராடப் பொங்கியிருப்பது வெளியறிய வந்தது.

இன்று இரண்டில் ஒன்று ஆக்குவன்

போரில் மூண்டு தேரில் ஏறியவன் இறுதியாய்க் கருதியுள்ள உறுதி நிலையை இது காட்டியுள்ளது. இரண்டு என்றது எவற்றை? முதலில் விரித்து உரைத்ததை எண்ணுத் தொகையுள் அடக்கி மீண்டு இவ்வண்ணம் செவ்வையாய்க் குறித்தான்.

சீதை தாலியை இழந்து அழுது அழிவது; அல்லது
மண்டோதரி மங்கலம் இழந்து மாண்டுஒழிவது.

இந்த இரண்டுள் ஏதாவது ஒன்று இன்று முடியும் என்று முடிவு செய்து மூண்டு நின்றான். அவனுடைய உறுதியும் ஊக்கமும் இறுதியை நோக்கி இறுமாந்துள்ளன. கருமத்தின் முடிவு மருமத்திலிருந்து மான வீரோடு மருமமாய் வெளி வந்துள்ளது.

போர் மூண்டதிலிருந்து நெடிய கொடிய அழிவுகளை நேரே கண்டிருக்கிறான். அதிசய வீரர்கள் அனைவரையும் இழந்து விட்டான்; அருமை மகன் மாண்டவுடன் மறுகி மயங்கி உருகி அழுதான்; பின்பு தேறி மூலபலங்களை அனுப்பினான்; அவை அடியோடு முடிந்து ஒழிந்தன; இவ்வளவு நாசங்களை அடைந்தும் நெஞ்சம் தளராமல் நேரேபோராடத்தேர்மேல் ஏறியிருக்கிறான்.

சிறந்த அறிவாளி யாயிருந்தும் பழியான வழியில் இறங்கி எவ்வழியும் தெளியாமல் அழிவையே நாடி அடலாண்மையோடு களிமிகுத்து நிற்கின்றான். நாச காலம் மூண்டமையால் நல்ல அறிவு மாண்டதே; பொல்லாத புலை நீண்டதே என்று மாலியவானும் நீண்ட துயரோடு நெடிது புலம்பியுள்ளான்.

"சேட்டு காலமுநகு செடு புத்தி புட்டுநு"

என்று தெலுங்கில் ஒரு பழமொழி வழங்கி வருகிறது.

கெட்ட காலத்துக்குக் கெடுமதி தோன்றும் என்பது அதன் பொருள். இராவணன் சீதைமேல் ஆசை கொண்டு நாசம் அடைந்ததை நோக்கி இந்த வாசகம் வந்துள்ளது. அல்லலான அழிவுக்கு வழி பொல்லாத புலையில் புகுவதேயாம் என்பதை அவனது போக்கு எல்லாருக்கும் தெளிவாய் விளக்கி நின்றது.

தேவரும் ஏவல் செய்ய மூவுலக அதிபதியாய் வாழ்ந்து வந்தவன் கருதிய ஒரு பாவ வினையால் பல துயரங்களை அடைந்து இறுதியாய் அழிவுற நேர்ந்தான். உறுதியும் ஊக்கமும் பெருகி உக்கிர வீரமாய் இலங்கை வேந்தன் போருக்கு மூண்டு எழுந்தவுடனே சேனைகள் யாவும் திரண்டு எழுந்தன. வேல் வாள் வில் முதலிய பல் வகை ஆயுதங்களையும் தாங்கி யாண்டும் வீரர்கள் அடர்ந்து தொடர்ந்துவர அதிசய கம்பீரமாய் இராவணன் தேர் மேல் திகழ்ந்து போர் மேல் வந்தான். தீரமாய் மூண்டு ஆரவாரமா வருகிற அந்த நிலையால் யாண்டும் யாரும் கலங்க நேர்ந்தனர்.

பொருதிறலோடு நிருதர் குலம் பொங்கி வர உறுதி பூண்டு இலங்கேசன் உருத்து வருவதைக் கண்டதும் அமரர் யாவரும் அஞ்சி மறுகினர். தானவர் முதலாக வானவர் கணங்களும் யாது நேருமோ என்று பேதுறலடைந்து யாண்டும் அலமந்து நின்றனர்.

தோன்றினன் வந்து சுரர்களோடு அசுரரே தொடங்கி
மூன்று நாட்டினும் உள்ளவர் யாவரும் முடிய
ஊன்றினன் செரு வென்றுயிர் உமிழ்தர உதிரம்
கான்று நாட்டங்கள் வடவனற்கு இருமடி கனல. (1)

உலகில் தோன்றிய மறுக்கமும் இமைப்பிலர் உலைவும்
மலையும் வானமும் வையமும் மறுகுறு மறுக்கும்
அலைகொள் வேலைகள் அஞ்சின சலிக்கின்ற அயர்வும்
தலைவனே முதல் தண்டலி லோரெலாம் கண்டார். (2)

கொடிய கொலைக் கருவிகளை யாண்டும் நீட்டி நெடிய ஆரவாரங்கள் காட்டி நேரே மூண்டு திரண்ட சேனைகளோடு இராவணன் போர்க்களத்தை நோக்கி வருங்கால் உலகில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை ஈண்டு நாம் வியந்து காண்கின்றோம். அரிய பல வரபலங்கள் அமைந்து அதிசய ஆற்றல்கள் நிறைந்து எவ்வுலகங்களையும் வென்று அடக்கித் திவ்விய மகிமைகளோடு சிறந்து

வாழ்ந்து வந்தவன் ஆதலால் வீரபராக்கிரமமாய் அவன் போர் மேல் பொங்கி எழவே எங்கும் திகில்கள் பெருகி எழுந்தன.

ஊழித் தீயையும் பிரசண்ட மாருதத்தையும் கண்டு உலகங்கள் அஞ்சுதல் போல் உயிரினங்கள் அன்று அஞ்சியிருத்தலால் அவனுடைய அருந்திறல்களும் அழிவு நிலைகளும் தெரிய வந்தன. இமையவர் எவரும் அமைதியின்றி அலமந்து கலங்க இன்னவாறு அவன் மன்னிவரவே வானரத் தலைவர்களும் மறுக நேர்ந்தனர். சேனைகள் யாவும் திகிலடைந்து திகைத்து நின்றன.

வீடணன் விரைந்தது.

நெடிய தேரில் ஏறி நீண்ட படைகளோடு இராவணன் மூண்டு முனைந்து வருவதை அறிந்ததும் விபீடணன் விரைந்து வந்து இராமனை வணங்கி விளைவுகளை விநயமாய் விளக்கினன்.

எழுந்து வந்தனன் இராவணன் இராக்கதத் தானைக்
கொழுந்து முற்றிய துற்றது கொற்றவ! குலுங்குற்று
அழுந்து கின்றது நம்பலம் அமரரும் அஞ்சி
விழுந்து சிந்தினர் என்றனன் வீடணன் விரைந்தான்.

இலங்கை வேந்தன் பொங்கிப் போராட வருகிற நிலைமையைக் கண்டு நெஞ்சம் கலங்கி விபீடணன் விரைவாய் நெருங்கி இராமனிடம் உரை செய்துள்ளமையை இதனால் ஓர்ந்து கொள்கிறோம். அந்தப் படைகள் வரும்பொழுது இந்த இலங்கைத் தம்பி தனியே ஒரு மகிழ மரத்து நிழலில் மருவியிருந்தான். சேனைகளின் ஆரவாரம் செவியில் விழவே திகைத்து எழுந்து திசையை நோக்கினன்; நிருதர் குலம் நெடிது பொங்கி வருவதையும் விழுமிய தேரில் வேந்தன் திகழ்வதையும் வியந்து நோக்கினன். போர் மூண்டது என்று முடுகி வந்து கோதண்ட வீரனிடம் கடிது மொழிந்து கடிதியில் விரைந்தான்.

நம்பலம் அழுந்துகின்றது என்றது வானரங்கள் அது பொழுது அடைந்த அலமரல்களைத் தெளிவா விளக்கி நின்றது. பலம் = சேனை. வலியுடையது என்னும் குறிப்பில் வந்தது.

மன்னர் பெரும! இப்பொழுது இலங்கை வேந்தன் உக்கிர வீரமாய் உருத்து வருகிறான்; முன்னம் வந்தது போல் அன்று; இன்று முடிவாக முடிவு காணவே மூண்டு வருகிறான்; ஆண்

டவா! அருள் புரிந்து விரைந்து வேண்டியதை ஆற்றியருளுக என்று போற்றி நின்றான். தேரில் வருகிறவனுடைய நிலைமையை நேரே தெரிந்து கொண்டான் ஆதலால் கால தாமதம் செய்யாமல் கடிது போரில் மூளும்படி இவ் வீரனை விரைவு படுத்தினான்.

கொற்றவ!

என்று இராமபிரானை விபீடணன் இங்கே குறித்து அழைத்திருப்பது கூர்ந்து சிந்திக்க வந்தது. முன்னம் வந்து தோல்வியடைந்து போன இலங்கை வேந்தன் இன்று முடிவாய் மூண்டு வருகிறான்; அவனை விரைந்து முடித்தருள் என்று வேண்டுகின்றவன் இவ்வாறு சிறந்த குறிப்போடு தூண்டி யிருக்கிறான்.

வெற்றி வீரா என்று விளிக்க வேண்டியவன் அவ்வாறு கூறாமல் கோற்றவ! என்று குறித்திருக்கிறான். வெற்றிக்கும் கொற்றத்துக்கும் உள்ள வேற்றுமை இங்கே உய்த்துணர வந்தது. உற்றமொழிகள் உரிய வழிகளில் வெளியாகின்றன.

எதிரிகளை வென்று பெறுவது வெற்றி.

அவரைக் கொன்று கொள்வது கொற்றம்.

இன்று அடைய மூண்டிருப்பது கொற்றமே ஆதலால் கொற்றவ! என்று உற்ற உரிமையோடு வெற்றி வீரனை விளித்து நின்றான். விளிநிலை எதிரியின் அழி நிலையில் விழியூன்றி வந்தது.

முன்பு வந்து மூண்டு பொருதவனை முழுதும் வென்று விழுமிய வெற்றி வீரனாய் நின்றவன் உற்ற பகைவனை நோக்கி இன்று போய் நாளை வா! என்று இரங்கி வெளியே விட்டான்; அங்ஙனம் தொலைந்து போனவன் தெளிந்து தேர்ந்து சமாதானமாய் வாழாமல் மீண்டும் தீய நோக்கோடு மாய வஞ்சங்கள் பல புரிந்தான்; யாவும் பலியாமல் போயின; போகவே இறுதியில் சாகத் துணிந்து அவன் உறுதியோடு வந்துள்ளான்; அவனை வேகமாய்க் கொன்று தொலைத்துக் கொற்றக் குரிசிலாய் விளங்கவுரிய வெற்றி வீரனைக் கொற்றவ! என்று குறிப்போடு வேண்டி உற்ற நட்புரிமையில் அவன் உறுதி பூண்டு நின்றான்.

இராமன் எழுந்தது.

இலங்கை வேந்தன் நீண்ட படைகளோடு போருக்கு

மூண்டு வருகிற நிலையையும், வானர சேனைகள் கலங்குகின்ற வகையையும், விபீடணன் குறித்த உரையையும் உணர்ந்து இராமன் விரைந்து எழுந்தான்; அந்த எழுச்சி வீரகம்பீரமாய் விளங்கி நின்றது. அந்நிலைகளை அயலே காண வருகிறோம்.

தொழுங்கையொடு வாய்குழறி மெய்ம்முறை துளங்க
விழுந்துகவி சேனையிடு பூசல்மிக விண்ணோர்
அழுந்துபடு பாலமளி துஞ்சிஎழும் அந்நாள்
எழுந்தபடி யேகடிது எழுந்தனன் இராமன்.

போர் மூண்டது என்று தெரிந்தபோது இராமன் எழுந்த நிலையை இது வரைந்து காட்டியுள்ளது. இந்தக் கவிப்படம் ஒலித்து ஒளிசெய்து தெளிவாக விளக்கியிருக்கும் காட்சிகளைக் கருதிக் காணுங்கள் வினை விளைவுகள் விதி நியமங்களாயுள்ளன.

இராமன் ஒரு சக்கரவர்த்தித் திருமகனாய் ஈண்டு எதன் பொருட்டு வந்துள்ளானோ அந்த அவதாரத்தின் பயனை வியனாப் பூர்த்தி செய்ய இப்பொழுது எழுகின்றான்; ஆகவே அவ் வீர எழுச்சி பழைய தெய்வ நீர்மையோடு சேர்ந்து காண வந்தது. ஆதி மூல நிலை நீதிநிலையைத் துலக்கி நின்றது.

அரக்கர் இனம் புரிகிற அழிதுயரங்களைப் பொறுக்க முடியாமல் அமரர் குலம் திரண்டு வந்து திருமாலிடம் முறையிட்டது; அப்பொழுது பாலாழியில் பள்ளி கொண்டிருந்த பெருமாள் அருளோடு எழுந்து அமரர்களை இனிது நோக்கி "நான் மனித உருவில் இராமனாய் வந்து உங்கள் இடர்களை நீக்கியருளுகின்றேன்" என்று ஆறுதல் கூறிப் போக்கியருளினார்.

"திரைகெழு பயோததி துயிலும்
தெய்வவான் மரகத மலை." (பால, அவதார, 12)

என மருவியிருந்த பெருமான் அன்று பரிவு கூர்ந்து எழுந்து உறுதி கூறியபடியே இன்று போர்மேல் ஆர்வமாய்ப் பொங்கி எழுந்தான் என ஆதி மூல நிலையை ஓதியுணர்த்தியிருப்பது உவகையை விளைத்து வருகிறது. அவதார மருமமும் ஆற்றும் கருமமும் அறிந்து மகிழ மொழிகள் ஒளி வீசி உயர்ந்து வந்தன. அங்கே கடலில் துயின்ற மலை இங்கே அடலமைந்து சிலையுடன் எழுந்து செருநோக்கிச் செயலில் இறங்கியிருக்கிறது.

பால் அமளி துஞ்சி எழும் அந்நாள்
எழுந்த படியே கடிது எழுந்தனன்.

இலங்கை அயலே ஒரு மலைச்சாரலில் ஓய்வு கொண்டிருந்த இராமன், படைகளோடு இராவணன் போருக்கு வருகிறான் என்று அறிந்ததும் விரைந்து எழுந்த நிலையை இப்படிக் கலைநலம் கனியக் காட்டி அவனது தலைமை நிலையைத் துலக்கியிருக்கிறார்.

முன்னம் தேவருக்கு அளித்த வாக்கு வலியை நிறைவேற்ற நேர்ந்தான். சொல்லிய வண்ணம் செய்து முடிப்பது அருமை ஆதலால் அதனை உரிமையோடு முடிக்கமூண்டபோது உள்ளத்தில் பெரு மகிழ்ச்சி ஓங்கி எழுந்தது. கடிது எழுந்தான் என்றது போர் மேல் மூண்டுள்ள வேகத்தையும் வேட்கையையும் நேரே விளக்கி நின்றது. வீரக் குரிசில் ஆதலால் வெற்றித் திறலை விழைந்து விரைந்தான். யுத்த கோலங்களை உவந்து புனைந்தான்.

போர்க்கோலம் பூண்டது.

அமைதியாய் இளைப்பாறி இருந்தவன் அமராட மூண்டதும் அதற்கு உரிய ஆயத்தங்களை விரைந்து செய்தான்: உடைவாளை இடையில் விசித்தான்; அம்புகள் எய்தற்கு வசதியாக விரல்களில் உறைகளை மாட்டினான். அனுமான் கையில் கொடுத்து வைத்திருந்த விசய கோதண்டத்தை விரைந்து வாங்கினான். கையில் அதனை வாங்கும் போதே சீதை துயர் நீங்கியது என்று வாயில் ஒரு மொழி அதிமருமமாய் மெல்ல வெளியே வந்தது. உள்ளம் கருதிய உறுதிநிலை உரையில் துள்ளி எழுந்தது.

கடக்களி றெனத் தகைய கண்ணன் ஒரு காலன்
விடக்கயி றெனப் பிறழும் வாள்வலன் விசித்தான்
மடக்கொடி துயர்க்கும் நெடு வானின் உறைவோர் தம
இடர்க்கட லினுக்கும் முடிவு இன்றெனஇசைத்தான். (1)

புட்டிலொடு கோதைகள் புழுங்கிளரி கூற்றின்
அட்டிலென லாயமலர் அங்கையின் அடக்கிக்
கட்டியுல கிற்பொருள் எனக்கரையில் வாளி
வட்டில்புறம் வைத்தவை பொருந்திட வரிந்தான். (2)

வீர கம்பீரமாய் விரைந்து இராமன் போர்க்கோலம் பூண்டு நின்ற நிலையை ஈண்டு நேரே காண்கின்றோம். கண்ணன் ஒரு

காலன் என்று தொடர்ந்துள்ள தொனியில் எண்ணரிய நிலையில் இலங்கியிருந்த இலங்கைவேந்தன் அழிந்து படுவது துலங்கியது.

சீதையை மடக்கொடி என்று இங்கே குறித்தது குணமும் அழகும் கருதி. மடம் என்னும் சொல் இளமை அறிவின்மை தரும நிலையம் முதலியவைகளை உணர்த்திவரும். மானைப் பிடித்துத் தா என்ற மடமையே கொடிய துயரங்களுக்கெல்லாம் காரணம் ஆயது ஆதலால் அந்தக் குறிப்பு இங்கே கூர்ந்து காண வந்தது. பூங்கொடிபோல் ஒல்கி ஒசியும் மெல்லிய தகைமையள் அல்லல் அடைய நேர்ந்தாள். அந்த அவல நிலையை உடையவன் சொல் இனிது உணர்த்தி உரிய நீர்மைகளை விளக்கி நின்றது.

மடக்கொடி துயர்க்கும் வானின் உறைவோர்தம்
இடர்க் கடலினுக்கும் இன்று முடிவு.

வென்றிவீரோடு போர் மேல் எழுந்த இராமன் அருகே நின்ற துணைவர் யாவரும் கேட்க இவ்வாறு கூறியிருக்கிறான். உரையின் உயிருணர்ச்சிகள் தெளிவா ஒளி வீசி நிற்கின்றன.

இன்று எதிரி செத்தான்; நமக்கு வெற்றி உறுதி என்று கூற வேண்டியவன் அங்ஙனம் கூறாமல் இங்ஙனம் கூறியுள்ளான். வெற்றி வீரனுடைய உரைகள் உய்த்துணர்வு தோய்ந்து விநய வினையங்கள் வாய்ந்து வித்தக நிலையில் வெளிவந்துள்ளன.

தேவர்களுடைய துயர்களைத் தீர்க்கவே அரசு முடிதுறந்து இராமன் காட்டுக்கு வந்தான்; அவனுடைய வினையாண்மைக்குத் துணையாக மனைவியும் இனமாய்ச் சேர்ந்து வந்தாள்; முன்னதாக இலங்கை போய்ச் சிறைபுகுந்தாள்; விண்ணரசு துயர்தீரப் பெண்ணரசி துயர் கூர்ந்தாள் என்று ஞான யோகிகளும் துயர் கூரச் சானகி அயல் சார்ந்துள்ளமை ஓர்ந்து சிந்திக்க வுரியது.

கரும வினைவாய் மருவியுள்ள அந்தத் துயரம் இன்று முடிவடைந்தது என்று முடிவு கூறி இராமன் கடிது எழுந்தான். அல்லல்கள் யாவும் நீங்கித் தேவர்கள் நல்ல சுகமாய் வாழவும், கொடிய சிறையிலிருந்து சீதை விரைந்து வெளியேவரவும் இன்று உரிய நாளாய் நேர்ந்தது என்று கோதண்ட வீரன் குறித்திருத்தலால் பகையின் முடிவு தொகையாய் அறிய வந்தது. உள்ளத்தில் துணிந்துள்ள துணிவு தெளிந்த வீர ஒளியாய் விளங்கி நின்றது. பகையின் ஆவியை நீக்கித்தேவியைச் சிறைநீக்கினான்.

தன்னை யாண்டும் பிரியாமல் எவ்வழியும் உழுவலன் போடு தழுவி வாழ்ந்த விழுமிய மனைவி ஆதலால் பிரிவில் அவள் அடைந்திருக்கும் துயரங்களை நினைந்து இக்கோமகன் நெடிது மறுகியிருந்தான். அந்த மறுக்கம் இங்கே உருக்கமாய் வெளிவர நேர்ந்தது. உள்ளம் உருகியுள்ளது உரையில் தெரிய வந்தது.

வனவாசம் மிகவும் கடுமையானது; மெல்லிய உன்னால் சகிக்க முடியாது; நான் விரைவில் மீண்டு வருவேன்; நீ ஈண்டு அரண்மனையிலே இரு என்று இராமன் கூறியபொழுது நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு? என்று மறுகிவாதாடி மருங்கே தொடர்ந்து வந்தவள் ஆதலால் அவளுடைய அன்பையும் பண்பையும் நினைந்து நினைந்து பிரிவில் உருகியிருந்தான். பிரிய மனைவியைப் பிரிந்து தான் அடைந்த துயரினும் அவள் அடைந்துள்ள துயரம் அதிகம் ஆதலால் அது இன்று தீர நேர்ந்தது என்று இவ்வென்றி வீரன் ஆர்வம் மீதூர்ந்து வீறோடு கூறி நின்றான்.

அமரர் துயரம் தீர்க்க வந்தவன் மனைவி துயரை முதலில் நினைந்தான். நினைவில் நின்று நெஞ்சை வருத்தி வந்தது விரைவாய் முந்தி நின்றது. அவர் துயர் தீர இவள் துயர் கூர்ந்துள்ளமையால் உயர்வு நிலை உணர வந்தது.

நீர் பிரிந்த மீன்போல் நீர்பிரியின் வாழேன் என்று அழுது தொடர்ந்து வந்தவளது உழுவலன்பு இவ்விழுமிய வீரன் உள்ளத்தில் உறைந்து புரிந்துள்ள நிலையை உரைகள் தோறும் உணர்ந்து உரிய பாசங்களைத் தெளிந்து வருகிறோம்.

ப்ரஸாதாக்ரே விமானைர்வா வைஹாயஸகதேநவா
ஸர்வாவஸ்தாகதா பர்துரு: பாதச்சாயா விசிஷ்யதே.
ஸ்வர்கோபிச விநா வாஸோ பவிதா யதி ராகவ
த்வயா விநா நரவ்யாக்ர நாஹம் ததாபி ரோசயே.
(வால்மீகி, அயோத்தி, 27-8, 20)

“சிறந்த மாளிகைகளில் உயர்ந்த விமானங்களில் மேலான வான உலகங்களில் சுகமாய் வாழ்வதினும் பல துக்கங்களோடு கணவனுடைய அடி நிழலில் அமர்ந்திருப்பதே குல மகளுக்கு மேன்மையாம். ரகுநாதா! மனுவின் தனிவீரா! சுவர்க்கமே யானாலும் நீ இல்லையானால் நான் அதை விரும்பேன்” என்று சீதை

இராமனிடம் நேரே கூறியிருப்பதை வால்மீகி முனிவர் இவ்வாறு குறித்திருக்கிறார். அன்புரிமைகள் பண்பு படிந்து வந்துள்ளன.

யாண்டும் பிரியாமல் தன் நாயகனோடு என்றும் இன்பமாய் வாழவேண்டும் என்று ஆழமாய் அன்பு பூண்டிருந்த இத்தகைய உத்தம பத்தினியைக் கொடுமையாய்ப் பிரித்துக் கொண்டு போய்த் துயரப்படுத்தினமையால் குலத்தோடு இராவணன் அழிய நேர்ந்தான். அவன் உயிர்க்கு முடிவு சீதையின் துயர்க்கு முடிவாய் முடிந்து ஈண்டு மூண்டு நின்றது.

அந்த முடிவு கடிது நெருங்கியது என்று இராமன் வீர கம்பீரமாய்க் கூறிப் போர்மேல் மூண்டு நின்றான். யுத்த சன்னத்தனாய்க் கோதண்டத்தைக் கையில் ஏந்தி இவ்வீர மூர்த்தி போர்க்களம் நோக்கிப் போக நேர்ந்த போது வானிலிருந்து ஒரு விமானம் அதிசய சோதி வீசி நேரே வந்தது.

பரமன் பணித்தது.

இலங்கைப் போர் இன்று முடிந்து விடும்; இராமன் வென்று விடுவான்; அந்த வீரனுக்குப் போரில் ஆதரவாக உனது இரதத்தை அனுப்புக என்று இந்திரனுக்கு மானசமருமமாய்ச் சிவபெருமான் அருளினான்; அமரர்கோன் பெருமகிழ்ச்சியடைந்து உரிமையுடன் அதனை உடனே செய்தான். அந்தத் தெய்வ விமானத்தின் அதிசய சாரதியான மாதலி அதனைக் கொண்டு வந்து நிறுத்தினான். தேவர் யாவரும் கண்டு மகிழ்ந்தார்; இராமஜெயம் என்று சோபனம் கூறி மலர்களை வாரிவீசிச் சாரதியை ஆதரவு செய்து அனுப்பினர். வான வீதியில் உலாவி மேலிருந்து அதிவேகமாய் அந்த அதிசய இரதம் வந்தது.

இராமன் கண்டது.

வில்லோடு சமரபூமியை நோக்கிச் செல்ல நேர்ந்த இராமன் எதிரே வந்து நின்ற திவ்விய இரதத்தைக் கண்டு திகைத்து வியந்தான். அதன் அழகும் ஒளியும் அதிசய நிலைகளும் பெரிய வியப்புகளை விளைத்தன. உரிய நிலைகளை உசாவ நேர்ந்தான்.

கருதி வியந்தது.

அலரிதனி ஆழிபுனை தேர்இது எனின் அன்றால்;
உலகின்முடி விற்பெரிய ஊழ்ஒளி யிதன்றால்;

நிலைகொள் நெடு மேருகிரி அன்று நெடிது அம்மா!
தலைவர்ஒரு மூவர் தனி மானமிது தானோ? (1)

சாரதியை வினவியது.

என்னையிது தம்மையிடை எய்தல்என எண்ணு
மன்னவர் தம் மன்னன்மகன் மாதலியை வந்தாய்
பொன்னின்ஒளிர் தேரிதுகொடுஆர்? புகறி என்றான்
அன்னவனும் அன்னதனை யாவும் உரைசெய்தான். (2)

முன்னும் பின்னும் தெரியாமல் தன் எதிரே வந்து நின்ற அதிசய இரதத்தைக் கண்டதும் அதன் பெருமித நிலைகளை நினைந்து இராமன் பலவும் கருதினான். சூரியன் தேரோ? தேவ ராசன் இரதமோ? தேவதேவர்களின் விமானமோ? என இன்ன வாறு எண்ணி வியந்தவன் அதன் சாரதியை நோக்கி நேரே வினவினான். கேட்ட கேள்விகள் அதன் மாட்சியை விளக்கின.

“இது யாருடைய தேர்? எங்கிருந்து வருகிறது? என்எதிரே கொண்டு வந்து ஏன் நிறுத்தியுள்ளாய்?” என்று இவ்வாறு இவ் வீரன் கேட்கவே அவன் யாவும் தெளிவாக விளக்கிச் சொன்னான். தேரின் வரலாறு சீர் நிறைந்து வந்தது.

சாரதி உரைத்தது.

முப்புரம் எரித்தவனும் நான்முகனும் முன்னாள்
அப்பகல் இயற்றியுளது ஆயிரம் அருக்கர்க்கு
ஒப்புடையது ஊழிதிரி காலும் உலைவில்லா
இப்பொருவில் தேர்வருவது இந்திரனது எந்தாய்! (1)

அண்டமிது போல்வன அளப்பில அடுக்கிக்
கொண்டுபெயரும் குறுகும் நீளும்அவை கோளுற்று
உண்டவன் வயிற்றினையும் ஒக்கும் உவமைக்குப்
புண்டரிக நின்சரம் எனக்கடிது போமால். (2)

கண்ணுமன மும்நெடிய காலும்இவை கண்டால்
உண்ணும்விசை யால் உணர்வு பிற்படர ஓடும்
விண்ணு நிலனும்மென விசேடமிலது அஃதே
எண்ணுநெடு நீரினும் நெருப்பிடையும் எந்தாய்! (3)

நீருமுள தேயிதனின் நீரில்எழு கிற்கும்
பாருமுளதே யிதின் இரட்டியவை பண்பின்

பேரும் ஒருகாலையிரு காலையிடை போராத்
தேரும் உளதே யிதுவ லாலுலகு செய்தோய்! (4)

தேவரும் முனித்தலை வரும்சிவனும் முன்னாள்
மூவுல களித்த முதலும் முதல்வ முன்னின்று
ஏவினர் சுரர்க்கிறைவன் ஈந்துள துஇது என்றான்
மாவின் மனம் ஒப்பவுணர் மாதலி வலித்தான். (5)
(தேர் ஏறுபடலம் 54-58)

வானிலிருந்து வந்த விமான சாரதி இவ்வாறு நிலைமைகளைத் தெளிவாக்கி நேரே உரைத்திருக்கிறான். அந்தத் திவ்விய இரதத்தைக் கொண்டு வந்துள்ளவன் மாதலி என்னும் பேரினன். அரிய பலகலைகளை அறிந்தவன். குதிரைகளுடைய குணநலங்களையும் மானசமருமங்களையும் நன்கு தெரிந்தவன். அதிசய ஆற்றல்கள் அமைந்தவன். புதுமையாய் வந்த தேரைக் கண்டு இராமன் சந்தேகமாய் உசாவவே எல்லா விவரங்களையும் சிந்தை தெளிய உரைத்தான். “ஐயனே! இந்த விமானம் இந்திரனுக்குச் சொந்தமானது; தேவ தேவரான மூவரும் ஆவலோடு ஆதியில் ஆக்கியருளியது; தேவ போகங்களில் ஒன்றாகத் தேவராசனுக்கு அமைந்தது; ஆயிரம் ஆதவர் போல் அதிசய சோதி வீசுவது; எதையும் ஏந்திக்கொண்டு யாண்டும் செல்லவல்லது; நீண்டும் சுருங்கியும் வேண்டிய வழியெல்லாம் வித்தக வடிவம் படிவது; வாயுவினும் மனத்தினும் அதி வேகமான கதிவேகங்களையுடையது; ஊழியும் அழியாத மீளிமை மேவியது; அரிய பல அற்புதங்கள் வாய்ந்தது; ஈசன் மால் பிரமன் இமையவர் யாவரும் சேர்ந்து உவகையோடு ஈண்டு அனுப்பியருளினார்; வீரமூர்த்தியான உங்களுக்குப் போரில் உதவி புரியவே இந்தத் தேரை இங்கே நான் கொண்டு வந்திருக்கிறேன்” என்று இவ்வாறு உண்மையை உரிமையோடு நேரே அவன் உரைக்க நின்றான்.

மாதலி தேவ சாதியன் ஆதலால் யாவும் அறிந்திருந்தான். இராமனுடைய குணநீர்மைகளையும் வீரப்பிரதாபங்களையும் கேள்வியுற்று மகிழ்ந்து வந்தவன் நேரே கண்டதும் நெஞ்சம் களித்து நெடிது வியந்தான். போர்க்கோலம் பூண்டு வில்லும் கையுமாய்ச் செல்ல நிற்கும் தீர நிலை வீர ஒளி வீசி வியனாய் விளங்கி நின்றது. இயற்கை எழிலோடு வீரப்பொலிவும் தோன்றியது.

கண்ட கண்ணையும் கருத்தையும் கவர்ந்த கட்டழகனை விழி களிப்ப நோக்கி வியந்து நின்றான் ஆதலால் உள்ளம் உவந்து உறுதி கூர்ந்து நேரே உரிமையோடு ஆர்வமாய்ப் பேச நேர்ந்தான்.

புண்டரிக! நின்சரம் எனக் கடிது போம்.

தான் கொண்டு வந்துள்ள தேர் யாண்டும் அதிவேகமாய்ச் செலவல்லது என்று சொல்ல நேர்ந்தவன் இப்படி உவமை சொல்லி உணர்த்தியிருக்கிறான். செந்தாமரைக் கண்ணா? என்று உள்ளம் உவந்து விளித்திருத்தலால் அந்தக் கண் அழகில் அவன் ஈடுபட்டுள்ள பாடு தெரிய வந்தது. இராமபாணத்தின் அதிசய ஆற்றலையும், அற்புதவேகத்தையும் வியந்து புகழ்ந்து விண்ணோர் நயந்து பேசியிருப்பதைக் கேட்டு வந்தவன் ஆதலால் அதனை ஈண்டு உவமை காட்டி அதி விநயமாய் நவின்று நின்றான்.

நின்சரம் எனக் கடிது போம் எனத் தனது இரத வேகத்தை இரசமாக இனிது விளக்கியிருக்கிறான். பேசுவதில் மாதலி பெரிய சதுரன் என்பதை இதனால் அறிந்து கொள்ளுகிறோம்.

கேட்கின்றவன் பிரியம் மீதூர்ந்து உரிமையோடு உவந்து கேட்கும்படி நயமாய்ப் பேசுவது பேச்சுக்கலையுள் ஒரு தனிநிலை. தன்னுடைய அழகு அறிவு வலி முதலிய நிலைகளைக் குறித்துப் புகழ்ந்து பேசினால் எந்த மனிதனும் மகிழ்ந்து கேட்பான். அந்தப் பேச்சு உண்மைதோய்ந்து உள்ளம் கனிந்து வந்தால் அது உயர் வாய்மதிக்கப்படும்; வீண் வியப்பும்வஞ்சமும் இச்சகமும்கலந்து வரின் அந்த வார்த்தை கொச்சையாய் இழிக்கப்படும்.

கண்ணியமான மொழிகளே எவ்வழியும் திண்மையாய் எண்ணி மகிழ வருகின்றன. புதிதாய்த் தேவலோகத்திலிருந்து வந்துள்ள மாதலி அதிவிநயமாய் இராம சரத்தை இங்கே வியந்து கூறியிருக்கிறான். வீரப் பகழி வெற்றிப் புகழை விளைத்துள்ளது.

இராமபிரானது பேராற்றலையும் வில்வீரத்தையும் பாணப் பிரயோக விதங்களையும் அவற்றின் அதிசய வெற்றி வேகங்களை யும் முன்னதாகவே அவன் நன்கு அறிந்திருப்பதை இங்கே நாம் யூகமாயுணர்ந்து கொள்ளுகிறோம். ஒருவன் வாயிலிருந்து வெளி வருகிற மொழிகள் அவனுடைய உள்ளத்தையும் உணர்வையும் உலக அனுபவங்களையும் வளமா வரைந்து காட்டுகின்றன.

இலங்கைப் போர் மண்ணுலகில் நிகழ்ந்து வந்தாலும் விண்ணுலக வாசிகளும் அதனை வியந்து நோக்கி உவந்து வருவதைக் காவியத்தில் இடங்கள் தோறும் உணர்ந்து வருகிறோம். கோதண்டபாணியின் போர் வீரம் மூதண்டங்களிலும் ஒளி வீசி உலாவுகின்றது. அந்த நிலையைநீண்ட காலமா வியந்து சிந்தை தெளிந்து வந்தவன் ஈண்டுவந்தனையோடு வணங்கிமொழிந்தான்.

மாவின் மனம் ஒப்ப உணர் மாதலி.

தேர்ச்சாரதியாய் வந்துள்ளவனது பேரும் சீரும் இதனால் அறியவந்தன. குதிரைகளின் சாதி வகைகளையும் குணம் குற்றங்களையும் மனநிலைகளையும் நன்கு தெளிந்தவன்; அவனுடைய தொழிலில் அதிசய நிலையினன்; தேவராசன் உவந்து புகழ்ந்து வியந்து மகிழத் தேரைச் செலுத்திச் சீரைப் பெருக்கி வந்துள்ள நிபுணன் என்பதை நேரே தெரிந்து கொள்கின்றோம். மா என்பது இங்கே தேவசாதிக் குதிரைகளை உணர்த்தி நின்றது. தேரை நடத்துவதிலும் போர் நிலைகளை நுணுகி அறிந்து யாண்டும் துணிவோடு செயல் புரிவதிலும் சிறந்த தீரன் என்று தெரிய வந்தது.

ஐயனது ஐயம்.

அதிசயமான விமானத் தோடு வந்து நின்று உரிமையுடன் உரையாடிய ஊர்தியின் மொழிகளைக் கேட்டு இராமன் உள்ளம் உவந்தான்; ஆயினும் உள்ளே ஒருஐயம் நிகழ்ந்தது. "இதுவரை அயலேயிருந்து போரில் நமக்கு யாரும் ஆதரவு செய்ய வரவில்லை; இது பொழுது மாய விசித்திரமான தேர் வந்துள்ளது; சாரதி சாதுரியமாய்ப் பேசுகிறான்; வரவும் பேச்சும் உறவுரிமைகள் போல் தோன்றுகின்றன; அரக்கர் இவ்வாறு மாய வஞ்சமாய்ச் சூழ்ச்சி செய்யவும் கூடும்; இலங்கை வேந்தன் சதிபுரிவதில் அதி சமர்த்தன்; அவனது தீய மாய வேலையாய் இவ்விமான வரவு இருக்குமோ?" என்று இம்மான வீரன் ஐயுறவோடு கருதவே அந்தத் தெய்வப் பரிகளிடமிருந்து ஓர் வேத ஒலி வெளியாயது. அதனைக் கேட்டதும் தெளிவடைந்தான். அதன் பின் சாரதியை நோக்கி உன் பேர் என்ன? என்று உரிமையோடு இவ் வீரன் கேட்டான். ஐயம் தீர அவனும் மெய்யை உரைத்தான்.

ஐயன்இது கேட்டிகல் அரக்கன் அகன்மாயச்
செய்கைகொல் எனச்சிறிது சிந்தையில் நினைந்தான்
மெய்யவன் உரைத்ததென வேண்டியிடை பூண்ட
மொய்யுளை வயப்பரி மொழிந்தமுது வேதம். (1)

இல்லையினி ஐயம்என எண்ணிய இராமன்
நல்லவனை நீயுனது நாமநவில் கென்ன
வல்லிதனை ஊர்வதொரு மாதலி எனப்பேர்
சொல்லுவர் எனத்தொழுது நெஞ்சினொடு சொன்னான். (2)

வந்த தேர்மீது சந்தேகம் கொண்டு பின்பு சிந்தை தெளிந்து சாரதியிடம் பேரினை உசாவியறிந்து யூக விவேகமாய் இராமபிரான் இங்கே ஓர்ந்துள்ள நிலையைக் கூர்ந்து உணர்ந்து கொள்கிறோம். இராட்சசர்களுடைய மாய வஞ்சனைகளால் பலமுறையும் வருந்தி நொந்தவன் ஆகலால் உரிமையோடு உண்மையாய் வந்த தெய்வ உதவியிலும் ஐயம் அடைய நேர்ந்தான். அயலிடத்தில் எதையும் எளிதா நம்பலாகாது; எவ்வழியும் மிக்க எச்சரிக்கையோடு இருக்க வேண்டும் என்பதை இவ் வீரக் குரிசில் ஈண்டு விளக்கியிருக்கிறான். வினைத்திறம் வித்தகத் துறையாயது.

அபாயங்களில் அடிபட்டவர் யாண்டும் ஐயமாய் உபாயங்களை நாடியுணர்ந்து உறுதி கூர்வர் என்னும் மானசமருமமும் இங்கே தெளிவாய்த் தெரிய வந்தது. இவ்வளவு தேர்ந்த பின்பும் மீண்டும் தம்பியையும் அனுமானையும் இங்ஙனம் நோக்கி அந்த இருவருடைய உறுதி நிலைகளைத் தெளிவா அறிய விரும்பினான்.

மாருதியை நோக்கிஇள வாளரியை நோக்கி
நீர்கருது கின்றதை நிகழ்த்தும்என நின்றான்
ஆரியன் வணங்கியவர் ஐயமிலை ஐயா
தேரிது புரந்தரனது என்றனர் தெளிந்தார்.

அனுமனையும் இலக்குவனையும் இராமன் இங்கே விநயமாய் வினவி மன நிலைமைகளை நன்கு அறிந்துள்ளான்.

மாருதியை நோக்கி என்றதனால் அனுமானது கருத்தையே முதலில் அறிய நேர்ந்திருக்கிறான் என்று தெரிகின்றது. எதையும் நுணுகி அறிந்து விரைந்து தெளியும் மதியூகி ஆதலால் அவனுடைய உள்ளக் குறிப்பையும் உடன் பாட்டையும் உணர விரைந்தான். அதன் பின் தனது இளவலை நேரே உசாவினான்.

மாயவஞ்சமாய் வந்த மானைத் தான் நல்லது என்று நம்பிய போது "ஐயனே! இது பொல்லாத மாயமுடையது; தீயவஞ்ச நிலையில் வந்துள்ளது; இதன் பின்னே போகலாகாது" என்று விவேகமாய்த் தடுத்து அறிவுறுத்தினன் ஆதலால் அதிலிருந்து இளையவனது புத்திமதியையும் ஆலோசனைகளையும் இந்த அண்ணல் மதித்துப் போற்றி வருகிருன். அந்த வரவில் சிந்தை தெளிய வினவினன். அனுபவ நிலை அறிவு நலனை அருளியது.

உரிமையான அந்த இருவரும் தங்கள் சம்மதத்தை ஒருமுகமாயுரைத்தார். "ஆண்டவா! இது இந்திரனது இரதமே; சந்தேகம் இல்லை" என்று சிந்தை துணிந்து சொன்னர். உரிமையாளருடைய உணர்வு கனிந்த துணிவுரை உறுதி நிலையை உதவியது.

வந்த தேரில் சந்தேகம் தோன்றிய பொழுது அந்த இருவரிடமும் சிந்தை தெளிய இந்த மதிமான் வினவியிருப்பது வினயம் மிகவுடையது. தான் எவ்வளவு பெரிய மேதையாய் இருந்தாலும் நேர்ந்த கரும நிலைகளைச் சேர்ந்த துணைவர்களோடு உசாவி ஓர்ந்து தேர்ந்து கொள்வது உயர்ந்த அரசனது சிறந்த நீர்மையாம். இறைமாட்சியின் முறையாய் வந்துள்ள அந்த அருமைக் காட்சியை இராமமூர்த்தியிடம் இங்கே நன்கு கண்டு கொள்கிறோம். பக்கம் தழுவி வருவது தக்க வளமையாயுளது.

அருகே மருவியுள்ளவர்களை எவ்வழியும் பெருமைப்படுத்தி மரியாதையோடு நடத்தி வருகிருன். இனிய பண்பாடுகள் யாண்டும் தழைத்துச் செழித்து வர இக்கோமகன் விளைத்தருளுகின்ருன். கரும சாதுரியம் மருமமா மருவி வருகிறது.

வீடணன் சுக்கிரீவன் முதலிய துணைவர்களிடம் யாதும் கேளாமல் அனுமன்பாலும் இளவல் இடமுமே அளவளாவிக் கேட்டிருக்கிருன். போர் மூண்டது என்று தெரிந்தவுடனே வானர வேந்தனும் இலங்கைத் தம்பியும் சேனைகளை ஆயத்தம் செய்து கொண்டு நின்றனர்; ஆகவே அருகே நின்ற இருவரையுமே இப்பெரியவன் உரிமையோடு உசாவி அறிய நேர்ந்தான்.

தேர் இது புரந்தரனது.

சீராமன் கேட்டபோது அனுமானும் இளையபெருமாளும் இவ்வாறு உறுதி கூறியுள்ளனர் இது என்று சுட்டியதனல்

நேரே கிட்டவந்து நிற்கும் அதன் நிலை தெரிய வந்தது. புரந்தரன் = இந்திரன். விண்ணுலகையும் மண்ணுலகையும் பாதுகாத் தருளுபவன் என்னும் பொருளையுடையது. புரத்தல் = பாதுகாத்தல். பகைவர்களை அழித்து எவ்வழியும் செவ்விதா உரிமைகளைப் பாதுகாக்கவல்லவன் என்றகுறிப்போடு இப்பேர் சிறப்புற்றுள்ளது.

அத்தகைய புரந்தரன் இத்தகைய வித்தகத் தேரை வைத்திருந்தும் வெற்றிகாண முடியாமல் இலங்கை வேந்தனுக்கு அடங்கி நிரந்தரமான பழியோடு நிலைத்து நிற்க நேர்ந்தான். அரக்கர் அதிபதியின் வரபலம் அமரர்பதியும் பதிந்து வணங்க அவ்வளவு அதிசயம் உடையதாய்த் துதி மிகுந்து நின்றது.

அரிய அந்த உயர்நிலைக்கு அழிவு காலம் மூண்டது. யாரும் செய்ய முடியாத அழிவைச் செய்யமூண்டு கோதண்டவீரன் இங்கே தீரமாய் நிற்கின்ருன் ஆதலால் இந்தப் போர் வீரனுக்குத் தனது அருமைத் தேரைப் புரந்தரன் உரிமை கூர்ந்து உவந்து அனுப்பினன். உய்தி காண உதவி செய்தான்.

"இராமநாதா! என்னைப் புரந்தருள்" என்று புரந்தரன் போற்றி வேண்டியபடியாய் நேரே இரதம் ஏற்றமாய் வந்தது.

வானவர் செய்த மாதவமே திருமாலை மானவனாய் வரும்படி செய்தது; இராமன் என்னும் இனிய பேரோடு புனிதமாய்த் தோன்றியுள்ளவன் தனது இயல்பான உரிமையோடு போருக்குப் போக மூண்டபோது ஆதரவாய் உதவி செய்யத் தேவராசனுடைய தேர் செய விருதுகளோடு வந்து நின்றுள்ளது.

மனித உருவில் மருவி இருந்தாலும் புரந்தரனையும் புரந்தருளும் புனித வீரன் என இராமனை இங்கே இனிது அறிந்து கொள்கிறோம். காவிய நிலையில் இராமனது சீவிய சரித்திரம் நடந்து வந்தாலும் அதில் நித்தியமான உண்மைகளை உய்த்து உணர்ந்து உரிய நிலைமைகளைத் தெளிந்து வருகிறோம்.

"In poetry, which is all fable, truth still is the perfection."
(Shaftesbury)

காவியத்தில் கதையும் கற்பனையும் இருப்பினும் உறுதியான உண்மையும் அதில் பூரணமாய் நிறைந்திருக்கிறது என்னும் இது இங்கே அறியவுரியது. காவிய சீவியம் காண வந்தது.

சரித நிகழ்ச்சியோடு அரிய பல உறுதி நலங்களையும் உண்மை நிலைகளையும் காவியம் இனிமையாக உணர்த்தி வருகிறது.

"The office of poetry is not to make us think accurately, but feel truly" (Robertson)

கவியின் வேலை நம்மைச் சரியாக நினைக்கச் செய்வது அன்று; உண்மைகளை ஊன்றி உணரச் செய்வதே என ராபர்ட்சன் என்னும் ஆங்கில அறிஞர் இங்ஙனம் கூறியிருக்கிறார்.

தெய்வீக நிலையில் தோன்றியுள்ள இராமனுக்குத் தெய்வத் தேர் உரிமையாய் வந்தது; அதில் ஐயம் அடைய நேர்ந்தது எய்திய பிறப்பின் இயல்பாய் நின்றது. எதையும் ஆராய்ந்து பார்த்து அதன் பின் காரியத்தில் இறங்க வேண்டும் என்னும் வினைமாட்சி ஈண்டு அதி விநயமாய் வெளிப்பட்டுள்ளது.

"First weigh, then attempt."

முதலில் நிதானமாய் ஆராய்ந்து பார்; அதன்பின் துணிந்து வினைசெய் என்று பிஸ்மார்க் (Bismark) என்னும் ஜெர்மன் தேசத்துப் பெரியார் காரிய நிலையை இவ்வாறு கூறியிருக்கிறார்.

"எண்ணித் துணிக கருமம்" (குறள் 467)

என்னும் வினையாண்மையின் தரும நீதி இங்கே மருமமாய்த் தெரிய வந்தது. வந்த தேரைக் குறித்துச் சிந்தனை செய்து தெளிந்த பின் இராமன் அதில் சீரோடு நேரே ஏறினன்.

அந்தத் தெய்வரதத்தில் இந்த வீரமூர்த்தி வில்லோடு வீரகம்பீரமாய் ஏறும்போது தரும தேவதை உளம் மிக மகிழ்ந்தது. உலகவுயிர்கள் யாவும் உவகை மீதூர்ந்தன.

தேர் ஏறியபோது நேர் ஏறியது.

விழுந்துபுரள் தீவினை நிலத்தொடு வெதும்பத்
தொழுந்தகைய நல்வினை களிப்பினொடு துள்ள
அழுந்துதுய ரத்தமரர் அந்தணர்கை முந்துற்று
எழுந்துதலை ஏற இனிது ஏறினன் இராமன்.

(தேர் ஏறுபடலம் 62)

இராமன் இரதத்தில் ஏறியபொழுது பாவம் நிலத்தில் விழுந்து புரண்டு அழுதது; புண்ணியம் உள்ளம் களித்துத் துள்ளி எழுந்

தது; அமரரும் முனிவரும் தலைமேல் கைகூப்பித் தொழுது துதித்தனர் என இது விழி தெரிய விளக்கியுள்ளது.

தேர் ஏறினவன் செய்யப் போகும் காரியமும், அதனால் வையமும் வானமும் உய்தி பெறும் வகையும் தொகையா உணர்ந்து தெள்ளியக் கவி இங்ஙனம் சுவையா உரைத்திருக்கிறார்.

இந்தப் போர்வீரன் தேர்மேல் ஏறிய போதே போர்மேல் வந்த இராவணன் பொன்றி முடிந்தான்; அவன் முடியவே அரக்கர்குலம்அடியோடு அழிந்தது; அது அழியவே தீவினைக்கு இவ்வுலகில் உயிர் வாழ இடமில்லாமல் போயது; போகவே தான் சாக நேர்ந்த படியாய் அது வெம்பி வெதும்பி வேக நேர்ந்தது; ஆகவே தனது அழிவு நிலையை நினைந்து வெருண்டு நிலத்தில் விழுந்து புரண்டு தீவினை அவலமாய் அழுது பதைத்தது.

பொய் கொலை களவு நெறிகேடு முதலிய தீமைகள் யாவும் தீவினை என நிற்றன. பொல்லரத அந்தப் பாவத் தொடர்புகள் எல்லாம் ஒல்லையில் அழிந்து ஒழிந்து போம் என்பது தெளிந்து கொள்ள வந்தது விளைவு வியன் களிப்பாயது.

நல்வினை களிப்பினெடு துள்ள.

கொடிய அழிவு நேர்ந்ததே என்று தீவினை அழுது புலம்ப, நெடிய வாழ்வு வந்தது என்று நல்வினை உவந்து களிக்க இம் மான வீரன் வான விமானத்தில் ஏறினான் என்றதனால் அந்த ஏற்றமும் வந்த தோற்றமும் ஒருங்கே நன்கு உணர வந்தன.

கோசலை வயிற்றில் இராமன் பிறந்தபோது குறித்த குறிப்புகளைக் கவி இங்கே சிறப்பாக இணைத்துச் சீர்மை நீர்மைகளை இனிது விளக்கி விநயமாத் தலக்கியிருக்கிறார்.

விரிந்திடுதீ வினைசெய்த வெவ்வியதீ வினையாலும்
அருங்கடையின் மறைஅறைந்த அறம்செய்த அறத்தாலும்
இருங்கடகக் கரதலத்துஇவ் எழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலை என்பாள்பயந்தாள்.

[இராமா, பால, குலமுறை 20]

இந்தப் பாசுரத்தின் அழகையும் விழுமிய நிலையையும் விழி யூன்றியுணர வேண்டும். கலையின் கவினும் அறிவின் சுவையும் கருதி யுணருந்தோறும் பெருமகிழ்வு தந்து வருகின்றன.

இராம சவுந்தரியத்தை நினைந்து நெஞ்சம் கனிந்து நெடிது வியந்து வந்திருத்தலை இடங்கள் தோறும் கவியின் சுவையான மொழிகளால் உணர்ந்து வந்திருக்கிறோம்.

தான் கண்டு மகிழ்ந்த அழகைப் பிறரும் பார்த்து மகிழும் படி நயமாக எழுதிக்காட்டவோ, சுவையாகச் சொல்லி உணர்த்தவோ முடிய வில்லையே என்று கவி ஏங்கியிருப்பதை எழுதஅரிய திருமேனி என்று எழுதிவிட்டிருப்பதால் முழுதும் தெரிந்து கொள்ளுகிறோம். விரிந்திடு தீவினைசெய்த வெவ்விய தீவினையால் இராமன் இங்கே தோன்றியிருக்கிறான் என்றது அவன் அயோத்தி அரண்மனையில் பிறந்த பொழுது உலகத்தில் பரந்து விரிந்துள்ள பாவத்தின் வாயில் மண் விழுந்தது; அது அடியோடு இறந்து போக எழுந்தது என்பது தெளிந்துகொள்ள நின்றது.

அவதரித்த அமையம் அங்கே குறித்த தீவினையை இங்கே அமரில் ஏறும்போது உரைத்தார்; அவன் வந்த காரியம் முடியப் போகிற அந்த முடிவு நிலை நெடிது தெரியவந்தது.

பாவம் மடிந்து மறையப் புண்ணியம் உயர்ந்து திகழப் புனித மூர்த்தி மனிதனாய் வந்துள்ளான். பாவம்செய்த பாவத்தாலும் புண்ணியம் புரிந்த புண்ணியத்தாலும் அவதரித்து வந்துள்ளவன் அமரில் ஏற மூண்டு அமரர் தேரில் அதிசய கம்பீரமாய் ஏறினான்.

இந்தவீரன் ஏறியவுடனே அந்த தெய்வத்தேர் பாரில் படிந்து நேரே எழுந்தது. அதனைக் கண்டு அமரர் அதிசயம் அடைந்து துதிசெய்து தொழுது விதி முறையான ஆசிகள் கூறினர்.

ஆழியந் தடந்தேர் வீரன் ஏறலும் ஆசி கூறிப்
பூழியில் சுரித்த தன்மை நோக்கிய புலவர் போத
ஊழிவெங் காற்றின் வெய்ய கலுழனை ஒன்றும் சொல்லார்
வாழிய அனுமன் தோளை ஏத்தினர் மலர்கள் தூவி.

வந்துள்ளது தெய்வீக இரதம்; அது மனிதனை மதித்துத் தாங்காது; இராமன் ஏறிய போது அத்தேர் தரையில் ஆழ்ந்து தாழ்ந்து நின்றது; ஆகவே அதில் ஏறினவன் தேதேவன் என்பது தெரிய வந்தது; தெரியவே அவனை யாண்டும் சுமந்து போரில் மூண்டு பொருதுவர உரிமை பூண்டு உதவி வந்த அனுமநாயகனை அமரர் யாவரும் வியந்து புகழ்ந்து உவந்து வாழ்த்தினர்.

முதல் நாள் போரில் அனுமன் தோளில் அமர்ந்தே இலங்கை வேந்தனை இராமன் கலங்கவென்றான்; இன்று இறுதிப் போரில் இந்திரனது இரதம் வந்து தாங்கியுள்ளது ஆதலால் முந்தி வாகனமாயிருந்து வேகவெந்திறல் புரிந்த வீரனை வியந்து ஏத்தினர்.

உலக உயிர்கள் அல்லல் நீங்கி அமைதியாய் வாழ இந்த அமர் மூண்டுள்ளது; பொலலாதவர் பொன்றிமடிய நல்லவர்கள் நின்று மகிழ இவ்வென்றிவீரன் வினைமேல் மூண்டு செல்லுகின்றான்; அதிசயமான அந்த ஆதரவுகளை நினைந்து முனிவரும் தேவரும் மனம் மிகமகிழ்ந்து இன்மாய்ச் சேர்ந்து துதித்து நின்றனர். துதி நிலை அதிசய உவகையாய்த் தோன்றியது.

எல்லாரும் உவந்து வாழ்த்தி உயர்ந்த மலர்களை யாண்டும் வாரி வீசிப் பல்லாண்டுகள் பாடி மகிழ ஏறிய தேர் போர்முகம் புகுந்தது. வீரவில்லி நிலை வியப்பை விளைத்தது.

சமரபூமியில் சதுரங்க சேனைகளோடு வந்து அதிசயமான அழகிய இரதத்தில் அடலாண்மையுடன் நின்ற இராவணன் தன் எதிரே வருகிற திவ்விய தேரைக் கண்டு சிந்தை திகைத்தான். இந்திரனது இரதம் என்று தெரிந்தான். நெஞ்சம் எரிந்தது; வெஞ்சினம் மிஞ்சியது. "எனது பகைவனான இராமனுக்குத் தேவர்களும் தேவராசனும் ஆதரவாய் உதவிசெய்து வருகிறார்; அவரை அடியோடு அழித்துஒழிப்பேன்; முதலில் மூண்ட எதிரியைக் கொன்று தொலைத்து விட்டு அதன்பின் அதனைச் செய்வேன்" என்று ஆங்காரத்தோடு உருத்துக் கடுத்தான். அவனுடைய கோபக்கொதிப்பு தேவர் குலத்தை நீறுசெய்யும்படி சீறி எழுந்தது. சினமும் சீற்றமும் இனமாய் ஓங்கின.

அன்னது கண்ணில் கண்ட அரக்கனும் அமரர் ஈந்தார்
மன்னெடுந் தேர்என் றுன்னி வாய்மடித்து எயிறு தின்றான்
பின்னது கிடக்க என்னைத் தன்னுடைப் பெருந்திண் தேரை
மின்னகு வரிவிற் செங்கை இராமன்மேல் விடுதி என்றான்.

(இராவணன் வதைப்படலம்5)

இராமன் ஏறி வந்த தெய்வத் தேரை நேரே கண்டதும் இராவணன் உள்ளம் கொதித்து உருத்துக் கடுத்திருக்கிற நிலையை இது குறித்துக் காட்டியுள்ளது. வாய்மடித்து எயிறு

நின்றான் என்றதனால் அவனுடைய நெஞ்சக் கொதிப்புகளின் நிலைகளையும் நினைவுகளையும் நேரே அறிந்து கொள்ளுகிறோம்.

பல்லைக் கடித்திருப்பது கோபத்தின் எல்லையைக் குறித்திருக்கிறது. எவ்வழியும் தனக்கு அடங்கி ஒடுங்கி ஏவல் செய்து வந்துள்ள தேவர்கள் இன்று இவ்வாறு ஒரு மனிதனுக்கு உதவியாய் நின்று தனக்குக் கேடு செய்ய நேர்ந்தாரே என்ற சினமும் சீற்றமும் அவனிடம் நெடிது மூண்டு கடிது நீண்டு நின்றன. இமையவர் உலகம் இனிமேல் இல்லை என்னும்படி ஒல்லையில் செய்வேன் என்று உருத்து ஊக்கினவன் பொறுத்து நோக்கி மறுத்து நின்றான். உன்னி எழுந்தது பின்னே கழிந்தது.

பின் அது கிடக்க என்றது முன்னம் செய்ய வேண்டியதை விரைந்து முடித்து விட்டுப் பின்பு அதனைக்கவனிப் போம் என்று அவன் நிதானித்து நிறுத்தியிருப்பது நேரே தெரிய வந்தது.

தன்னோடு போராட மூண்டு வந்துள்ள இராமன் மீது கொண்ட கோபத்தினும் தேவர்கள்மேல் இராவணன் கடுஞ்சினங்கொண்டு அடுந்துயர் செய்ய ஆர்த்து நிற்பதை அவனுடைய செயல்களால் அறிந்து இயல்களை உணர்ந்து கொள்கிறோம்.

அமரர் அஞ்சி அடங்கியிருந்தவர் ஆதலால் அவரை எளிதாக எண்ணி இலங்கை வேந்தன் நெஞ்சம் அழிவு செய்ய மூண்டது. வலிய பகைமேல் செல்ல நேர்ந்தவன் மெலிய தொகையைக் கொல்ல வேண்டும் என்று வீறோடு சீறி நின்றான். கொலையுண்டு மடிய ஈண்டு மூண்டு வந்தவன் வீணே அமரரைக் கொல்ல விழைந்து எல்லை மீறி வெகுண்டு கனன்றான்.

வானவரைப் பின்பு பார்த்துக் கொள்வோம்; இப்பொழுது மானவனைப் பொருது வெல்வோம் என்று உறுதி கூர்ந்து மான வீறோடு அவன் கோதண்ட வீரன் மேல் கொதித்து வந்தான்.

தேரை இராமன்மேல் விடுதி.

தனது சாரதியை நோக்கி இராவணன் இவ்வாறு கூறியிருக்கிறான். நேரே விரைந்து பொருது வெற்றி காண வேண்டும் என்று அவன் மூண்டு நிற்கும் நிலையை இவ்வுரை உணர்த்தியுள்ளது. உறுதியூக்கம் பெருந்திறலை நோக்கிப் பெருகி வந்தது

வேந்தன் கூறியபடியே சாரதி விரைந்து தேரை நேரே செலுத்தி வந்தான்; அரக்கர் சேனைகள் யாண்டும் ஆர்த்து மூண்டன; அடலாண்மைகள் நீண்டன; போர் முரசங்கள் எங்கும் பொங்கி முழங்கின. சமரபூமியை நோக்கி அமரர் யாவரும் ஆவலோடு நின்றனர். அமர் விளைவு அதிசயமாயது.

இலங்கைவேந்தன் தேர் அதிசய விசித்திரமாய்க் கதிவேகம் கொண்டு நேரே வருவதைக் கண்டதும் மாதலி சாதுரிய சாகசமாய்த் தனது தேரை வலசாரியாகச் செலுத்தினன். போர்முகத்தில் விரைந்து அவன் புரிந்ததை நோக்கி இராமன் அவனிடம் இனிய பல அறிவுரைகள் கூறி மேல் செய்யவுரியதைவிளக்கினன்.

கோதண்டவீரன் குறித்தது.

மாதலி வதனம் நோக்கி மன்னர்தம் மன்னன் மைந்தன்
காதலால் கருமம் ஒன்று கேட்டியால் களித்த சிந்தை
ஏதலன் மிகுதி எல்லாம இடையிற்ற பின்றை என்றன்
சோதனை நோக்கிச் செய்தி துடிப்பிலை என்னச் சொன்னன்.

மாதலி மறுமொழி.

வள்ளல்நின் கருத்தும் மாவின் சிந்தையும் மாற்றலார்தம்
உள்ளமும் மிகையும் உற்ற குற்றமும் உறுதி தானும்
கள்ளமில் காலப் பாடும் கருமமும் கருதேன் ஆகின்
தெள்ளிதென் விஞ்சை என்ருன் அமலனும் சீரிதென்ருன்

இலங்கை வேந்தன் போர்மேல் மூண்டு தேர்மேல் வருவதைக் கண்டதும் தன் தேரை மதியூகமாய் மாதலி விரைந்து செலுத்தியதும், அதுபொழுது அவனை நோக்கி இவ்வீர மூர்த்தி கூறியிருக்கும் விவேக போதனைகளும் ஈண்டு வியந்து சிந்திக்க வந்துள்ளன. நிகழ்ச்சிகள் நிலைமைகளை நேரே துலக்கி நிற்கின்றன. பாகன் புரிந்த வேகம் யூகம் புரிய நேர்ந்தது.

தேவ சாரதி சிறந்த மதிமான்; விமானத்தைச் செலுத்துவதில் வியக்கத்தக்க நிபுணன்; நல்ல தீரன்; பல போர்முனைகளிலும் இந்திரனுக்குத் தேர் ஊர்ந்து சீரும் சிறப்பும் பெற்றிருக்கிருன். அசுரப் படைகளையும் அரக்கர் சேனைகளையும் எங்கும் நன்கு பார்த்திருக்கிருன்; போர்த்தொழில் முறைகளையும் துறைகளையும் தெளிவாகத் தெரிந்தவன்; இராவணன் திக்குவிசயம்

செய்த காலத்தில் மண்ணுலகிலும் விண்ணுலகிலும் புரிந்த அடலாண்மைகள் அதிசயமுடையன; அதிலிருந்து வானவர் யாவரும் அவனுக்குத் தலைவணங்க நேர்ந்தனர். வெற்றி வீரனாய் விளங்கியிருந்த அத்தகைய இலங்கேசன் போர் மேல் மூண்டு வருவதைப் பார்த்ததும் தனது தேரை நேரே அமர்முறையில் நியமமாய்ச் செலுத்தினான்; அதி வேகமுடைய குதிரைகளின் கதிவேகங்களை நன்கு உணர்ந்தவன் ஆதலால் இரதத்தை விரைவாய் ஓட்டினான். மாதலி மதியூகமாய்ச் செய்தான் ஆயினும் தனது குறிப்பைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வேண்டும் என்று இராமன் அவனுக்கு அமராடலின் அமைதிகளை அறிவுறுத்தினான். தேர்ச்சாரதி தேர்ந்து கொள்ளத் தெளிவுறுத்தினான்.

என் சோதனை நோக்கிச் செய்தி.

போர் முனையில் தன் தேரைச் செலுத்துகின்ற மாதலிக்கு இராமன் இவ்வாறு கட்டளையிட்டிருக்கிறான். எதிரி செய்கின்ற போராட்டத்தின் ஆரவாரங்களையும் அடலாண்மைகளையும் போக்குகளையும் நுனித்து நோக்கிய பின்பே யாவும் ஆற்ற வேண்டும் என்று குறித்திருப்பது இவ் வீரனது போர் முறைகளையும் நேர்மையான நிலையையும் அதிசய தீரத்தையும் மதியூகத்தையும் மனப் பண்புகளையும் நன்கு துலக்கியுள்ளது.

ஏதலன் என்றது இராவணனை. கொடிய கேடுகளைக்கூர்ந்து செய்பவன் என்னும் குறிப்பில் வந்தது. ஏதம் = கேடு. நீதங்கள் யாதும் இன்றி ஏதங்களையே யாண்டும் மூண்டு செய்கின்ற கொடிய பகைவன் ஈண்டு என்னோடு போராடநேர்ந்து வந்திருக்கின்றான்; அவனுடைய தீய கபடங்களும் மாய வஞ்சனைகளும் தேவர்களும் தெரிய அரியன; கரவாய் அவன் புரிகிற மாயத் தீமைகள் எல்லாம் மாய்ந்து வீழ்ந்த பின்பே அவனை நாம் மாய்த்து வீழ்த்த வேண்டும்; அந்த வீழ்ச்சி நிலையை விவேகமாச்செய் என்று இவ் வீரன் சூழ்ச்சியோடு துலக்கியிருக்கிறான்.

ஏதலன் மிகுதி எல்லாம் இடை இற்ற பின்றை என்றது எதிரியின் கொடிய செயல் நிலைகளையெல்லாம் முடிய உணர்ந்துள்ளமை தெரிய வந்தது. சுத்த வீரர்க்குத் தகுதியில்லாத கெட்ட காரியங்களையெல்லாம் அவன் செய்வான் என்பது மிகுதி எல்லாம் என்றமையால் இங்கே நன்கு விளங்கி நின்றது.

எதிரி சிறந்த போர் வீரனே ஆயினும் இழிந்த காரியங்களைத் துணிந்து செய்வான்; அவன் விழைந்து புரிகிற வெய்ய தீமைகள் எல்லாம் தொலைந்து ஒழிந்த பின்பே அவனை நாம் தொலைக்க வேண்டும்; இவ்வுண்மையை நீ நன்கு தெளிந்து கொண்டு உறுதியோடு வேலை செய்ய வேண்டும் என்று இவ் வீர வள்ளல் தேரின் சாரதியான மாதலிக்கு விநயமாய் அறிவுறுத்தியிருக்கிருன்.

எவ்வழியும் என் மனக் குறிப்பைக் கூர்ந்து ஓர்ந்து மொழி வழியே விழியூன்றித்தொழில்புரிக எனத்தெளிவு கூறியுள்ளான்.

தான் ஒரு தேவ சாதி; சாரதி நிலையில் யாரும் நிகரில்லாச் சதுரன் என்று மாதலி கருவமாய்க் கருதலாம் ஆதலால் அந்த முனைப்பு நேராதபடி முனை முகத்தில் இவ் வீரன் வினையமுடன் விளம்பியருளினன். மானச தத்துவம் உய்த்து உணர வுற்றது.

எதிரியின் தேரைக் கண்டவுடனே மாதலி குதிரைகளைத் தட்டியிருக்கிருன்; தனது கட்டளையை எதிர்பாராமல் சாரதி அதிதுரிதமாய் வேலை செய்ததைக் கண்டதும் இரகுநாதன் இவ்வாறு செவ்வையாய்ப் போதிக்க நேர்ந்தான். போதனை கரும வீரமாய்க் கதித்து அரிய பல மருமங்களை மருவி வந்துள்ளது. அருந்திறலும்பெருந்தகவும்பேரறிவும்நேரறியநின்றன.

சோதனை என்ற சொல் பொருள் ஆழம் உடையது. எதையும் நன்குஆராய்ந்து சோதித்துச்செய்யும் சாதனையே சோதனை என வந்திருத்தலால் அதனைச் சொன்னவனது வினையாண்மையையும் வித்தகத் திறலையும் உய்த்து உணர்ந்து கொள்கிருேம்.

துடிப்பு இலை என்றது தடுக்காய்த் துடித்து எதையும் விரைந்து செய்து விடாதே என்று வரைந்து கூறியவாறும்.

இந்த உரைகளைக் கேட்டதும் மாதலி உறுதி யுண்மைகளை உணர்ந்து கொண்டான். உரிமையோடு பதில் மொழிந்தான்: "வீர வள்ளலே! உங்கள் உள்ளம் உணர்ந்து எவ்வழியும் நான் செவ்வையாகத் தொழில் செய்வேன்; குதிரைகளின் மனநிலைகளையும், எதிரிகளின் இயல்புகளையும், அவர் புரிகின்ற கரவான வினைவிளைவுகளையும் காலம் இடம் கருமம் முதலிய தொடர்புகளையும் தெளிவாகத் தெரிந்தே யாண்டும் சீர்மையாய் வினை செய்து

வருவேன்'' என்று மாதலி இவ்வாறு மதிநலமுடையனுய் அதி விநயமாக் கூறவே இராமன் மனம் மிக மகிழ்ந்தான்

இராமனை இங்கே அமலன் என்றது அவனது பரமபரிசுத்த நிலை தெரிய. தூய நிலையில் தனிமுதல் தலைவனுய் இருந்த பரமன் அரக்கரை மாய்க்க வந்திருக்கிருன்; தீமைகள் மாய்ந்து ஒழிய அவன் ஆய்ந்து செய்யும் மாய வேலை யாரும் எளிதே அறிய அரியது என அவனது அதிசய நிலைமையைக் கவி இங்கே துதி செய்திருக்கிருர். உரிய இடத்தில் அரிய பெயரை ஓதியருளினர்.

மலம் என்னும் சொல் அழுக்கு குற்றம் இழிவு முதலிய கழிவுகளைக்குறித்து வரும். அவையாதும் இயல்பாகவே இல்லாதவன் அமலன் எனநேர்ந்தான். அதிசயநாமம்மதிதெளியவந்தது.

அமலன் ஆதிபிரான் அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் விண்ணவர்கோன் விரையார்பொழில் வேங்கடவன்
நிமலன் நின்மலன் நீதிவானவன் நீள்மதிள் அரங்கத்தம்மான் திருக்
கமலபாதம் வந்துஎன் கண்ணின் உள்ளன ஒக்கினறதே.
(திருப்பாணுழ்வார்)

அமலன் விமலன் நிமலன் நின்மலன் நீதி வானவன் எனத் திருமாலைக் குறித்து வந்துள்ள இவை இங்கே சிந்திக்க வுரியன.

அரக்கரைக் கொலை செய்கின்றவன் யாவன்? என்பதைக் கூர்ந்து ஓர்ந்து கொள்ள அமலன் என்ருர். தன் காவியநாயகன் காப்புக் கடவுளே என்பதை இடங்கள்தோறும் கவி நினைவுறுத்தி மனம் தெளியச் செய்து வருவது விநயம் மிகவுடையது.

மனித தெய்வமாய் மருவி வந்துள்ள புனித மூர்த்தி உலகம் உய்ய அலகில்லாத அருள் விளையாடல்களைச் செய்து வருகிறது. அந்த அதிசய நிலையை விதிமுறையே கவி துதி செய்து வருகிருர். மதிநலம்கனிந்த துதிமொழிகள் மகிமை சுரந்துள்ளன.

அரிய பல குணநலங்களுக்கு உரிய நிலையமாய் ஒளி பெற்றுள்ள இராமனிடம் போர் வீரமும் பொருவரு நிலையில் மருவி நேர்மையாயுள்ளது. உருவ அழகும் உத்தம நீர்மையும் வித்தக மேன்மையும் சத்திய சீலமும் இராச கம்பீரமும் எவ்வழியும் திவ்விய ஒளிகளை வீசி வர யாண்டும் சிறந்து விளங்கி வருகிருன்.

அமரர் உதவிய தேர்மேல் அமர்ந்து சமர பூமியில் சாரதியிடம் இவ்வீரநாயகன் கூறியுள்ள விவேக போதனைகளால் போர் முறைகளை ஓரளவு நாம் உணர்ந்து கொள்ளுகிறோம்.

எதிரியின் மாய வஞ்சங்களை நன்கு அறிந்து வந்துள்ளவன் ஆகலால் இத்தூய நெஞ்சன் அத்தீயவன் புரிகிற செயல்வகைகளை யெல்லாம் தெளிவாகத் தெரிந்த பின்பே இறுதி முடிவாய அழிவு செய்ய வேண்டும் என்று உறுதி செய்து கொண்டான்.

வெள்ளி மலையை அள்ளி எடுத்தேன் என்று வீறு கொண்டுள்ள அவனை நீறு செய்ய மூண்டு நீட்டிய வில்லோடு இவ்வீர வள்ளல் நிலவி நின்றது நீண்ட வெற்றியை நேரே காட்டி விளங்கியது. அந்நிலையைக்கண்டுதருமதேவதைகளித்துநின்றது.

ஆரவாரமான அடலாண்மைகளோடு போர் முகம் புகுந்த இலங்கை வேந்தன் நேரே மூண்டு போராட நேர்ந்தபோது மகோதரன் அவன் எதிரே வந்து வணங்கி நின்றான். அவனை வேந்தன் வியந்து நோக்கி நினைந்தது யாது? என நேரே வினவினான். "மன்னர் மன்னவா! நானே முன்னதாகச் சென்று இராமனைச் சின்ன பின்னம் செய்வேன்; இந்த அரிய பணியை எனக்கு உரிமையோடு அருள வேண்டும்" என்று உறுதி பூண்டு தொழுது வேண்டினான். அவனது வேண்டுகோள் வியப்பாயது.

மகோதரன் வேண்டியது.

தோன்றினன் இராமன் ஈதால் புரந்தரன் துரந்த தேர்மேல்
ஏன்றிரு வருக்கும் வெம்போர் எய்தியது இடையே யான்ஓர்
சான்றென நிற்றல் குற்றம் தருதியால் விடையீண்டென்றான்
வான்றொடர் குன்றம் அன்ன மகோதரன் இலங்கை மன்னை. (1)

மன்னன் சொன்னது.

அம்புயம் அனைய கண்ணன் தன்னையான் அரியின் ஏறு
தும்பியைத் தொலைத்ததென்னத் தொலைக்குவன் தொடர்ந்துநின்ற
தம்பியைத் தடுத்தி யாயின் தந்தனை கொற்றம் என்றான்
வெம்பிகல் அரக்கன் அஃதே செய்வன்என்று அவனின் மீண்டான்.
(இராவணன்வதை 8-9)

அமைச்சனும் அரசனும் அமர் முகத்தில் உரையாடி உறுதி பூண்டு கருதி மூண்டு நிற்கும் நிலைகளை ஈண்டு உணர்ந்து கொள்கிறோம். இலங்கை வேந்தனுக்கு எண்ணூறு மந்திரிகள் இயைந்

திருந்தனர். பார்சுவன், பிரபாகரன், வச்சிரதந்தன், விக்கிரமவாகு முதலிய மந்திரிகள் எவரினும் மகோதரன் தலைமையாளனாய் நிலவி நின்றான். பல நில மண்டலங்களையும் ஆண்டு வருகிற ஆட்சியாளர் யாவரும் அவனுடைய ஆணையின்படி நடந்து வந்தனர். ஆட்சிக்குழு ஆயிரமாய்த் தொகை அமைந்திருந்தது. சேனைத் தலைவர்கள் தேசத் தலைவர்கள் எல்லாரும் மகோதரனிடம் மரியாதை செலுத்தி வந்தனர். இராச குடும்பத்தைச் சேர்ந்தவன் ஆதலால் இராவணன் அவன்பால் பேரன்பும் பெருமதிப்பும் புரிந்து வந்தான். இந்த மன்னன் எண்ணியபடியெல்லாம் அந்த மந்திரி இசைந்து நடந்து வந்தமையால் இடைபிரியாத பிரியம் எவ்வழியும் குறையாமல் தொடர்ந்து வந்தது.

முடிவான போர் மூண்டது என்று தெரிந்ததும் இனிமேல் இடையே ஒதுங்கி நிற்பது கடையாம் என்று கருதியுணர்ந்து உறுதி பூண்டு போருக்கு வந்தான். இராமனுடைய போராற்றலைப் பல முறையும் நன்கு தெரிந்து கொண்டவன் ஆதலால் தன் அரசு அடியோடு அழிந்ததென்று முடிவு செய்து முன்னதாகவே அவன் முடிந்து போக மூண்டு மன்னனிடம் விரைந்து வந்து மரியாதையாய் விடை கேட்க நேர்ந்தான்.

யான் இடையே நிற்றல் குற்றம்.

மகோதரன் இராவணனிடம் இவ்வாறு கூறியிருக்கிறான். பேசியுள்ள வார்த்தைகளில் அவனுடைய உள்ளத்தையும் உணர்வையும் உறுதி நிலையையும் யூகித்து உணர்ந்து கொள்கிறோம்.

“அரசர் பெரும! நமது கொடிய சத்துருவான இராமனோடு தாங்கள் போர் செய்ய மூண்டிருக்கிறீர்கள்; அந்தப் போராடலை நான் நேரே பார்த்துக்கொண்டு வீணே நிற்பது வெய்ய பழியாம்; அவ்வாறு ஆகாமல் நானே முன்னதாக அவனோடு போராட விரும்புகிறேன்; என் விருப்பத்தை நிறைவேற்றியருள வேண்டும்” என்று போர் வேட்கை யுடையனாய் வேண்டி நின்றான். அவனது உறுதி நிலை இறுதியை நோக்கி எழுந்தது.

மன்னனுக்கு முன்னதாகத் தான் மாண்டு போகவேண்டும் என்றே மகோதரன் மூண்டு நிற்கின்றான்; அந்த நிலையை வெளியே தெளிவாகக் காட்டாமல் தானும் அமர் செய்யமூண்ட அதிசய வீரன் போல் அவன் அயலே ஈண்டு நீண்டு நின்றான்.

வெற்றி பெறுவது அல்லது செத்து மடிவது என்று இறுதியை அறுதியிட்டே இம்முறை இராவணன் உறுதியாய் வந்திருக்கிறான்; அவனுடைய உள்ளத் துணிவையும் எதிரியின் வில்லின் வலியையும் இறுதியில் உறுவதையும் ஓர்ந்து கொண்டே மந்திரி சிந்தை துணிந்து இவ்வாறு செரு வேட்டு விரைந்தான்.

போரின் காட்சியைக் கண்டு கொண்டு அயலார் போல் அயலே ஒரு சாட்சிபோல் நில்லேன் என்பான் சான்று என நிற்றல் குற்றம் என்றான். நிற்பது பழி என்றதனால் நில்லாமல் ஒல்லையில் ஒழிந்து போவதே நல்லது என்று அவன் உள்ளம் துணிந்து உறுதி பூண்டு பொர நேர்ந்துள்ளமை உணர வந்தது.

சாக மூண்டு வேகமாய்த் தன்னிடம் விடை வேண்டி நிற்கின்ற மகோதரனை இராவணன் மகிழ்ந்து நோக்கினான். "அமைச்சே! நீ இராமனோடு நேரே போராட முடியாது; அவனை நானே கொன்று தொலைக்க வேண்டும்; அங்ஙனம் கொல்லுங்கால் அவனுடைய தம்பி இடையே வந்து தடை செய்யாதபடி நீ அவனைத் தடுத்து நிறுத்தி விடின் அதுவே நமக்கு வெற்றி கிடைத்தபடியாம்; ஆகவே நீ வேகமாய்ச் சென்று அந்த இலக்குவனை இலக்கோடு கலக்கி மடக்கிக் கடும்போர் புரிந்து கடிந்து நிறுத்துக" என்று கருத்தோடு குறித்து விடை கொடுத்தான்.

தம்பியைத் தடுத்தி ஆயின் தந்தனை கொற்றம்.

மகோதரனை நோக்கி இலங்கை வேந்தன் இப்படிக் குறித்திருக்கிறான் இராமனோடு தான் மூண்டுபோராடுங்கால் இடையே இளையவன் வந்து விடலாகாதே என்று இராவணன் சிந்தை கலங்கியுள்ளமையை இந்த உரையால் தெளிந்து கொள்கிறோம்.

இலக்குவனுடைய உக்கிர வீர நிலையையும் சிலையாடலின் கலையையும் பாணப் பிரயோகங்களின் விறலையும் நேரே கண்டு வியந்து சென்றவன் ஆகலால் இவ்வாறு பயந்து பேச நேர்ந்தான். இளவலை நோக்கி இலங்கைவேந்தன் கலங்கியிருக்கிறான்.

தான் வீடணன் மேல் ஏவிய விசித்திர வேலால் அடிபட்டு எழுந்துள்ளவன்; தன்மேல் கொடிய ஆங்காரங் கொண்டிருப்பான்; தன்னை நேரே கண்டால் வீர வெறிமண்டிக் கோரக் கொலை புரிந்து விடுவான் என்று தெரிந்து நின்றுள்ளான்; அந்த

உண்மையை அவனுடைய வாயிலிருந்து வந்துள்ள இந்த உரைக ளின் தொனிகளால் ஈண்டு நுணுகி உணர்ந்து கொள்கின்றோம்.

இராமனுவது இன்று போய் நாளை வா என்று முன்னம் இரங்கி வெளியே விட்டான்; இலக்குவன் அவ்வாறு விடான்; கொன்றே தீர்த்து விடுவான் என்று அவன் குறிக்கொண்டு கூறியுள்ளதைக் கூர்ந்து ஓர்ந்து தேர்ந்து வந்திருக்கிறோம்.

முளை அமை திங்கள் சூடும் முக்கண்ணுன் என இளையவனை எண்ணி உளம் மறுகி வியந்திருத்தலால் அவனிடம் அரக்கர் கோன் கொண்டிருக்கும் மதிப்பும் அச்சமும் அறியலாகும்.

அந்தத் தம்பியை அணுக விடாமல் நீ தடுத்து நிறுத்திக் கொண்டால் இந்தத் தமையனை நான் கொன்று விடுவேன் என்று வென்றி வீறோடு இராவணன் விளம்பி நின்றான். தனது தீர நிலையை வீர மொழிகளால் வியனோடு விளக்கியருளினன்.

தன்னை அரி ஏறு என்றும், இராமனைத் தும்பி என்றும் இங்கே அவன் குறித்திருக்கிறான். அந்தக் குறிப்பு கொல்லும் திறலையும் கொலையுண்ணப்படுதலையும் கூர்ந்து ஓர்ந்து கொள்ள வந்தது. உவமானக் குறிப்புகளால் உவமேயப் பொருள் உய்த் துணர நின்றன. சிங்க ஏறு மத யானையை வதைத்துச் சிதைப் பது போல் தனது பகைவனை அழித்து ஒழிப்பதாக அவன் களித் திருக்கிறான். வீரமடங்கல் எனத் தன்னை வியந்து மகிழ்ந்துளான்.

எதிரியைத் தான் கொன்று தொலைக்க வேண்டும் ஆனல் அவன் தம்பி அங்கே சேராதிருக்கவேண்டும்; ஆகையால் அவனை இடையே தடை செய்து தாக்கிக் காக்க வேண்டியது உன் கடமையாம் என மகோதரனுக்கு மன்னன் ஆணை தந்து அமர்மேல் அவனை அனுப்பியருளினன்.

உள்ளத் தருக்கால் இவ்வாறு ஊக்கி உரைத்தாலும் நிருதர் பதியின் உரையில் மெலிவுகள் ஒலி செய்துள்ளன. வெல்லும் திறம் போல் சொல்லும் திறத்திலும் வல்லவன் ஆதலால் நிலை மையைத் துலக்கி எவரும் வியந்து நோக்க விரித்து உரைத்தான்.

தம்பியைத் தடுத்தி ஆயின் என்றதனல் அவனைத் தடுத்து நிறுத்துவது அரிது என்று இராவணன் கருதியிருப்பதும் மருமு

மாத் தெரிய வந்தது. இளவலின் அதிசயவீரத்தைப் போர் முனை யில் நேரே அறிந்திருத்தலால் ஐயப்பாடுகள் விரிந்து நின்றன.

செத்தாலும் இராமனோடு போராடிச் சாக வேண்டும் என்று விவேகமாய் மூண்டு நின்ற மந்திரியை வேந்தன் வேறு வகையில் ஊக்கித் தம்பிமேல் செல்ல விட்டான். விடவே அவன் படை பெற்ற கையோடு விடை பெற்று விரைந்து போனான்.

தன்தேரைச் செலுத்திப் போர் மேல் மூண்டு இலக்குவன் மேல் இலக்கோடு அவன் போகும் போது இடையே இராமன் தேர் வருவதைக் கண்டான். அந்த வீரன் மீதே தனது தேரை விடும்படி சாரதியிடம் மகோதரன் கூறினான். அவன் மாறி மறுத்தான். பாகன் உரை விவேகமாய் வந்தது.

மகோதரன் குறித்தது.

மீண்டவன் இளவல்நின்ற பாணியின் விலங்கா முன்னம்
ஆண்டகை தெய்வத் திண்டேர் அணுகியது அணுகுங்காலை
மூண்டெழு வெகுளியோடு மகோதரன் வெகுண்டு முட்டத்
தூண்டுதி தேரை என்றான்சாரதி தொழுது சொன்னான். (1)

சாரதி மறுத்தது.

எண்ணருங் கோடி வெங்கண் இராவணர் ஏயு மின்று
நண்ணிய பொழுது மீண்டு நடப்பரோ கிடப்ப தல்லால்
அண்ணல்தன் தோற்றம் கண்டால் ஐயநீ கமல மன்ன
கண்ணனை ஒழிய இப்பால் சேறலே கருமம் என்றான். (2)

இலங்கை வேந்தன் தூண்டியபடி இலக்குவனோடு போராட மூண்டு தேர்மேல் போன மகோதரன் எதிரே இராமன் தேர் வருவதைப் பார்த்ததும் அவனோடேயே அமராட விரைந்தான். அவனுடைய போக்கும் நோக்கும் விசித்திர கதியில் விரிந்து நிற்கின்றன. கபட யுத்திகளிலும் பேச்சுத் திறத்திலும் மாட்சிமையடைந்து இலங்கை வேந்தனுக்கு எவ்வழியும் வெவ்விய துணையா யிருந்து வந்தவன் ஈண்டு விரைந்து மாண்டு போக மூண்டு நிற்கின்றான் ஆதலால் கோதண்ட வீரனோடே போராட நீண்டுநேரே தேரைச்செலுத்தும்படிவீறோடுகூறினான்.

தம்பியைத் தடை செய்து நிறுத்து என்று இராவணன் விடை கொடுத்து விட்டிருந்தும் இடையே இவன் இவ்வாறு மாறாய் மீறியிருக்கிறான். மாண்டு மடிவது உறுதி என்று தெரிந்து கொண்டமையால் சிறப்பான இறப்பை விழைந்து விரைந்தான்.

துரண்டுதி தேரை.

என்று சாரதியை நோக்கி மகோதரன் தூண்டியிருப்பதில் அவனுடைய துணிவும் நினைவும் துணைவும் தோன்றியுள்ளன. முன்னம் துணிந்து நின்றதை மறந்துவிட்டு மன்னவன் சொன்ன படியே பின்னவனோடு போராடவே பேர்ந்து வந்தான். சமர பூமியில் இளையவன் நிற்கின்ற அந்த இடத்தை நோக்கிச் செல்லுங்கால் மூத்தவன் தேர் ஒல்லையில் எதிரே மூண்டு வந்தது.

ஆண்டகை தெய்வத் திண்தேர் அணுகியது.

இலக்குவனை நோக்கி மகோதரன் போகும் போது இராகவன் இரதம் நேரே நெருங்கியுள்ள நிலையை இது வரைந்து காட்டியுள்ளது. இந்தச் சந்திப்பு இயல்பாகவே நேர்ந்திருக்கிறது.

இவ்வாறு நேரவே தன் தேரை நேரே விடும்படி பாகனிடம் அவன் வேகமாய்க் கூறினன். கூறவே சாரதி அவ்வாறு செய்வது தவறு என்று தடுத்து நிறுத்தித் தகவுரை கூறினன்.

அவனுடைய உரைகள் உணர்வு நலம் தோய்ந்து உறுதி கூர்ந்து வந்தன: “ஐயனே! இன்று பல்லாயிரம் கோடி இராவணர்கள் ஒருங்கு திரண்டு வந்தாலும் இந்த இராமன் எதிரே ஒல்லையில் மாண்டு மடிவரே அன்றி யாரும் மீண்டு உயிர்வாழ முடியாது; நமது குலம் முழுவதும் முடிவாய் முடிந்திருக்கிறது; முடிவை யாதும் உணராமல் தாங்கள் வீணே மூண்டு மாண்டு மடிய விரைவது மதிகேடேயாம்; நம் வேந்தர் பெருமான் இட்ட கட்டளைப்படி இளையவனோடு போய்ப் போராடுவதே நல்லது; சிறிது நேரமாவது நேர் நின்று பொருதோம் என்ற பேராவது கிடைக்கும்; அந்தத் தம்பிமேல் செல்லாமல் இந்த நம்பி முன் நடந்தால் நாம் விரைந்து செத்து விழுவது உறுதி; உண்மையை உணர்ந்து யாவும் ஓர்ந்து சொல்லுகின்றேன்; ஒதுங்கிப்போவதே நலம்” என்று இவ்வாறு பாகன் விவேகமாய்க் கூறி வேறு வழியில் தனது தேரைச் செலுத்திப் போக வேகித்து நின்றான்.

கண்ணனை ஒழிய இப்பால் செல்வதே கருமம்.

யுத்த தருமத்தையும் உறுதி நிலையையும் நன்கு தெரிந்த சாரதி இங்ஙனம் நவின்றிருக்கின்றான். கமலம் அன்ன கண்ணன் என இராமனை இன்னவண்ணம் ஈண்டு அவன் குறித்திருக்

கிறான். கமலம் = தாமரை. நீரில் மலர்ந்திருப்பது என்று பொருளையுடையது. குளிர்ந்த செந்தாமரை மலர்கள் போல் அலர்ந்து பொலிந்துள்ள அழகிய கண்களை அவன் விழிகள் கண்டு களித்திருக்கின்றன; அந்த விழுமிய காட்சியை அவனுடைய வாய்மொழிகள் தெளிவாய் விளக்கி நின்றன. குரோதமும் விரோதமும் நெடிது மண்டியுள்ள கொடிய அரக்கரும் இராகவனுடைய கண்ணழகைக் கண்டு மயங்கிக் காட்சியின்பம் துய்த்துக் களித்திருக்கின்றார். பார்த்தவர் எவரையும் பரவசப்படுத்தும் பேரெழில் அந்தப் பார்வையில் ஒளி வீசியிருப்பதை உரைகள் தோறும் உணர்ந்து உவகை மீதூர்ந்து வருகிறோம். அழியா அழகு உடையான் எனக் கவி குறித்த அழகு காவியம் எங்கணும் சீரிய ஒளி வீசிச் சிறந்து திகழ்கின்றது.

அற்புதமான அழகிய தெய்வத் தேர்மேல் வில்லோடு வீர கம்பீரமாய் நிற்கின்ற இராமனது அதிசய ஆற்றலைச் சாரதி துதி செய்து கூறவே மகோதரன் ஆங்காரமாய்ச் சினந்து சீறினான். அவனது அழிவு நிலையை அறிந்து வருந்திப் பாகன் பதில் யாதும் கூறாமல் தேரை நேரே செலுத்தினான். போர் மேல் மூண்டு வருகிற இராமன் எதிரே அந்தத் தேர் வரவும் நிருதர் சேனைகள் நெடிது விரைந்து கடிது வளைந்து கடுத்துப் பொருதன.

வேல் வாள் முதலிய கொடிய படைக்கலங்களை நெடிது வீசிப் படைகள் போராடவே மகோதரன் முடுகி வந்து இராமனோடு போர் தொடுத்தான். இவ்வீரன் ஏறியிருந்த தேர் மீது பாணங்கள் வந்து பாயவே பரிந்து நகைத்து விரைந்து அம்புகளைத் தொடுத்தான். எய்த பகழிகள் நொய்து கொய்து வீழ்த்தின.

எதிர்ந்தவன் இறந்தது

வேகமாய்ச் சாக மூண்டு வெகுண்டு போர் புரிந்த வெய்யவன் வேலையை நோக்கி இந்த ஐயன் புன்னகை செய்து பொரு திறல் ஒழிய விருதுகள் விளைய வித்தக விநயமாய் வில்லாடல் புரிந்தான். வீரச்சரங்கள் வீறோடு பாய்ந்தன; பாயவே மகோதரனுடைய வில் அழிந்து வீழ்ந்தது; கவசம் உடைந்து உதிர்ந்தது; தோளும் கழுத்தும் துள்ளி எழுந்து தொலையில் ஒடித்தரையில் விழுந்து உதிரங்களோடு புரண்டு விரைவில் உருண்டன.

ஒல்லையில் நிகழ்ந்த அந்த நிகழ்ச்சி எல்லையில்லாத வியப்பை விளைத்தது; அவன் மாண்டு மடிந்த நிலை யாண்டும் பரவி அரக்கர் இனங்களுக்கு நெடுந்திகிலாய் நீண்டது. ஆரவாரமாய் வீர வாதங்கள் கூறி நேரே மூண்டு போராட வந்தவன் மீண்டு யாதும் பேசாமல் ஒரு நொடியுள் செத்து விழுந்தது கோதண்ட வீரனுடைய வித்தகத் திறலை விளக்கி வெற்றியைத் துலக்கியது.

வில்ஒன்றால் கவசம்ஒன்றால் விறலுடைக் கரம் ஓரொன்றால்
கல்ஒன்று தோளும் ஒன்றால் கழுத்து ஒன்றால் கடிதின் வாங்கி
செல்ஒன்று கணையால் ஐயன் சிந்தினான் செப்பி வந்த
சொல் ஒன்றாய்ச் செய்கை ஒன்றாய்த் துணிந்தனன் அரக்கன் துஞ்சி.

மோதரன் முடிந்த வண்ணம் மூவகை உலகத் தோடும்
மாதிரம் எவையும் வென்ற வன்தொழில் அரக்கன் கண்டான்
சேதனை உண்ணக் கண்டான் செலவிடு செலவிடு என்றான்
சூதனும் முடுகித் தூண்டச் சென்றது துரகத் திண்டேர். (2)

உரிமைத் துணையாய் யாண்டும் உறுதி கூறி வந்த மகோதரன் விரைந்து மாண்டதுப், அதனைக் கண்டு இலங்கைவேந்தன் கலங்கிக் கனன்று கடுத்துக் கொதித்துப் போராட மூண்டு தேரைக் கடாவி இராமன் எதிரே சீறிச் செயிர்த்து வீர வெறியோடு ஏறி வந்துள்ள நிலையும் ஈண்டு நேரே தெரிய வந்தன.

செருமுக நிகழ்ச்சிகளை ஒரு முகமா நோக்கி நாம் இங்கே உள்ளம் உவந்து நிற்கிறோம். தன் மன்னனுக்கு முன்னதாக மூண்டு வந்த பகையைத் தொலைத்து உவகையை விளைத்துக் கொற்றக் குரிசிலாய் மீளுவேன் என்று சூளுரை கூறி உறுதியாய் ஊக்கி வந்தவன் அதி விரைவில் அழிந்து விழுந்துள்ளான் தலை கால் கை முதலியன நிலை குலைந்து துண்டங்களாய் அயலே துள்ளி வீழ உடல் முண்டமாய்க் கீழே விழுந்துள்ளது. கபட வஞ்சனைகளிலும் துராலோசனைகளிலும் தலை சிறந்து இலங்கை வேந்தனுக்கு முதல் மந்திரியாய் நின்று அதிசய நிலைகளில் அதிகாரம் செய்து வந்தவன் அமர் முகத்தில் யாதும் செய்ய முடியாமல் அவலமாய் இழிந்து விரைந்து அழிந்திருக்கிறான்.

சொல் ஒன்றாய்ச் செய்கை ஒன்றாய்த் துணிந்தனன்.

துண்டமாய் துணிபட்டு மாண்டு மடிந்துள்ள மகோதரன் நிலையை இது வரைந்து காட்டியுள்ளது. இராமனைக் கொல்வேன்

என்று மூண்டு போருக்கு வந்தான்; சொல்லியபடி செய்யாமல் முயல்லையில் கொலையுண்டு மடிந்தான் ஆதலால் சொல் ஒன்றாய்ச் செய்கை ஒன்றாய்த் துஞ்சினான் என்று அவன்சாவைத் துலக்கினர்.

மாயச் சூதுகளிலும் தீய ஆலோசனைகளிலும் தந்திரமான பேச்சுகளிலும் சிறந்திருந்தவன் காரியத்தில் யாதொரு வீரிய மும் காட்டாமல் இறந்து போனான். நெஞ்சில் வஞ்சனையுள்ள வரிடம் நேர்மையான வீரம் இராது என்பதை இவன் செயல் இங்கே காட்டி நின்றது. கேடுகளை மூட்டி யாண்டும் கபடமாய்ப் பீடைகளை விளைத்து வந்தவன் முடிவில் கெட்டு மாண்டான்.

இலங்கை வேந்தன் குடியோடு கெடுவதற்குக் காரணமா யிருந்தவன் மகோதரனே. இராமனது அதிசய ஆற்றலைக்கண்டு இராவணன் சமாதானமாய் அமைய நேர்ந்த போதெல்லாம் அழிமதி கூறிக் கெடுத்து வந்தான். உலக சரித்திரத்தில் துற் புத்தி மந்திரிகளுள் இவன் தலைமையாய் நிற்கின்றான்; இலங்கா ராச்சியம் நாசம் அடையவே இவன் மோசமாய் உள்ளே மூண்டிருந்தான். தீயவன் தூயவனால் ஈண்டு மாய நேர்ந்தான்.

கபட வஞ்சனைகளில் பெரிய வலியனாய்க் கைதேர்ந்திருந்த வன் போரில் சிறிய மெலியனாய் செத்து விழுந்துள்ளான். நாட் டை நாசப்படுத்தி வந்தவன் அமராட்டத்தில் யாதும் புரியாமல் அலமந்து செத்தான். வலிய வஞ்சன் மெலியனாய்த் துஞ்சினான்.

The weak in courage is strong in cunning. (William Blake)

கபட வஞ்சனையில் வலியராயுள்ளவர் வீரத்தில் மெலிய ராய் நிற்கின்றார் என்னும் இது இங்கே அறிய வுரியது. தீதான சூதனால் ஏதமே விளையும் ஆதலால் அவனைச் சேரலாகாது; சேர்ந்தால் கொடிய கேடுகள் நேர்ந்து விடும்; அரசும் நாடும் அடி யோடு அழிந்துபோம் என்பதை இவனால் தேர்ந்து கொள்கிறோம்.

Nothing doth more hurt in a state, than that cunning men pass for wise. [Bacon]

வஞ்சக் கபடிகளை அறிவாளிகளாக் கருதுவதைக் காட்டி லும் ஒரு இராச்சியத்துக்குக் கொடிய தீங்கு வேறு யாதும் இல்லை என இது குறித்துள்ளது. தீய வஞ்சகனைத் துணையாகத்

தழுவிக் கொண்டமையால் அரிய இலங்கை அரசு கொடிய அழிவைக் கண்டது. பொல்லாத் தொடர்பு புலையாய் முடிந்தது.

மந்திரி செத்து விழுந்தான் என்பதை அறிந்ததும் இராவணன் சித்தம் கலங்கினான். தன் தேரை நேரே இராமன்மீது செலுத்தும்படி சாரதியைத் தூண்டினான். செலவிடு செலவிடு என்ற அடுக்கு விரைவு குறித்து வந்தது. தான் ஏறியிருந்த இரதத்தை விரைந்து செலுத்து என்று சொல்ல நேர்ந்தவன் இப்படிச் சொல்லி யிருக்கிறான். ஒல்லையில் தன்னை அழிவில் விட்டு விடும்படி இம்மொழி ஒலித்துள்ளதை நுனித்து உணர்ந்து கொள்கிறோம். அழிவு நிலை மொழிவழியே வெளியாய் நின்றது.

தீய நிமித்தம்.

இராமனோடு போராட விரைந்து நேரே தேரை ஓட்டும்படி சாரதியிடம் இராவணன் கூறும்போது அவனுடைய இடது தோள்களும் கண்களும் ஏகமாத் துடித்தன. கழுகுகளும் காகங்களும் தேரின் கொடிமேல் வந்து சீறிப் பாய்ந்தன. இரத்தத் துளிகள் வானிலிருந்து சிதறின. இரதத்தில் பூட்டி யிருந்த குதிரைகள் செவிகளைச் சாய்த்துத் தலை கவிழ்ந்து நின்றன. கண்களிலிருந்து நீர்கள் வழிந்தன; பூமாலைகள் புலால் நாற்றங்கள் வீசின; கெடு குறிகளான இந்த அவல நிலைகளைக் கண்ட இராவணன் சிறிது கவலை அடைந்தான்; அடைந்தாலும் உடனே பெரிதும் தேறிச் சீறி விரைந்து போரில் ஏறினான். பொருகளம் புகுந்தபோது வெருவுற நேர்ந்த அபசகுனங்கள் விளிவு நிலையை விளக்கி நின்றன. கொடிய அழிவுகள் விழிதெரிய நேர்ந்தன.

வாவும் வாசி நடுங்கின; வாங்கலில்
ஏவும் வெஞ்சிலை நாணிடை இற்றன;
நாவும் வாயும் உலர்ந்தன; நாண்மலர்ப்
பூவின் மாலை புலால்வெறி பூத்தன. (1)

எழுது வீணைகொடு ஏந்து பதாகைமேல்
கழுகும் காகமும் மொய்த்தன; கண்கள்நீர்
ஒழுகு கின்றன ஓடிகல் ஆடல்மாத்
தொழுவில் நின்றன போன்றன சூழிமா. (2)

இன்ன வாகி இமையவர்க்கு இன்பம்செய்
துந்நி மித்தங்கள் தோன்றின தோன்றவும்

அன்ன தொன்றும் அறிந்திலன் ஆற்றுமோ
என்னை வெல்ல மனிதன்என்று எண்ணுவான். (3)

வீங்கு தேர்செலும் வேகத்து வேலைநீர்
ஓங்கு நாளின் ஒதுங்கும் உலகுபோல்
தாங்கல் ஆற்ற கிலார்தடு மாறித்தாம்
நீங்கினர் இரு பாலும் நெருங்கினர். (4)

அவகேடான அடையாளங்கள் இங்கே நிகழ்ந்திருக்கின்றன. சிறந்து வாழ்ந்து வந்த ஒருவன் விரைந்து இறந்து போக மூண்டுள்ள முடிவை முன்னதாக அறிவிக்கும் சின்னங்களாக விபரீதமான செயல்கள் விளைந்திருக்கின்றன. நேர்ந்துள்ள நிலைகளைக் கூர்ந்து ஓர்ந்து நேர்வதைத் தேர்ந்து கொள்ள வேண்டும்.

துந் நிமித்தங்கள் என்றது கெட்ட அறிகுறிகளை. நிமித்தம் என்னும் சொல் அடையாளம், குறி, காரணம் என்னும் பொருள்களை உணர்த்தி வரும். ஒருவனுக்கு வருகிற அழிவு நிலைகளை இயற்கை முன்னதாக அறிவித்து விடுகிறது. ஆடவர்க்கு வலக்கண், வலத்தோள் துடித்தல் நல்லது; இடக்கண், இடத்தோள் துடித்தல் கேடு. அந்தக் கெடுகுறி இராவணனிடம் இப்பொழுது நெடிது தோன்றியுள்ளது.

அடல்வலி அரக்கற்கு அப்போழ்து அண்டங்கள் அழுந்த மண்டும்
கடல்களும் வற்ற வெற்றிக் காலகிளர்ந் துடற்றுங் காலை
வடவரை முதல வான மலைக்குலம் சலிப்ப போன்று
சுடர்மணி வலயம் சிந்தத் துடித்தன இடத்த பொற்றோள்.

இலங்கை வேந்தனுடைய இடத்தோள் துடித்திருக்கும் நிலையை இது வடித்துக் காட்டியுள்ளது. தோளில் அணிந்திருந்த வாகுவலயமும் சிந்தத் துடித்தன என்றது அந்தத் துடிப்பின் வேகத்தையும் சோகத்தையும் நன்கு விளக்கி நின்றது.

மனிதன் ஓர்ந்து உணரும் அறிவுடையவன் ஆதலால் பின்னே நிகழ வுரியதை முன்னே உணர்ந்து கொள்ளும்படி இயற்கை இன்னவாறு மாறுபாடான வேறுபாடுகளை நேரே காட்டியருளுகின்றது. அவ்வாறு காட்டுவது அவன் கண்டு தெளிந்து உய்தி காண. கனவிலும் நனவிலும் இக் குறிகள் காணப்படுகின்றன. இந்தக் காட்சிகளில் கரும வினைவுகள் மருமமா மருவியிருத்தலால் குறி, சகுனம், நிமித்தம் என இவை கூற நேர்ந்தன.

பகுத்தறிவுடைய விஞ்ஞானிகளும் இவற்றை வியந்துள்ளனர். நிமித்தங்களுக்கு நிமித்தம் காண முடியாமையால் அவர் நெஞ்சம் திகைத்து நெடிது சிந்தித்து நேரே ஒத்திருக்கின்றனர்.

"There is something in omens." (Ovid)

நிமித்தங்களில் ஏதோ ஒன்று இருக்கிறது என இது குறித்திருக்கிறது. உற்பாதங்கள் ஊறுகளை உணர்த்தி நிற்கின்றன.

"The menacing gods filled earth, sky, and sea with portents." (Lucan)

கடல் ஆகாயம் பூமிகளைத் துர் நிமித்தங்களால் பயங்கர தேவதைகள் நிறைத்திருக்கின்றன என லூகன் என்பவர் இவ்வாறு கூறியுள்ளார். இவர் லத்தீன் மொழியில் பெரிய கவிஞர். ஆயிரத்தெண்ணூற்று எண்பது ஆண்டுகளுக்கு முன் இருந்தவர்.

"Stones have been known to move and trees to speak." (Shakespeare)

மரங்கள் பேசுகின்றன; கற்கள் இடம் பெயர்ந்து அசைகின்றன என மாக்பெத் என்னும் தலைவன் இங்ஙனம் உரைத்துள்ளான். விரைந்து அவன் சாக நேர்ந்துள்ளமையால் இந்த விபரீதங்கள் அவனுக்குத் தோன்றலாயின.

Coming events cast their shadows before. (Campbell)

பின்னே நிகழவுரியன முன்னே தம் நிழல்களை நேரே வீசுகின்றன என்னும் இது இங்கே நன்கு அறியத் தக்கது.

வினைவிளைவுகள் விசித்திரக் காட்சிகளாய் விளங்கியுள்ளன. பேர் பெற்ற பேரரசர்கள் பேர நேர்ந்த போது பாரில் நேர்வன பார்வைக்கு வந்தன. பெரிய சாவின் குறிகள் மேவி நின்றன.

இலங்கை வேந்தன் அழிந்து போக விரைந்துள்ளமையால் அவகேடான குறிகள் விழி தெரிய நேர்ந்தன. மிக்க துக்கங்களைத் துர்க்குறிகள் ஒக்க உணர்த்தி நின்றன. இவ்வாறு தீய நிமித்தங்களை நேரே கண்டும் அவன் யாதும் நெஞ்சம் தளரவில்லை. அவனுடைய தீர தைரியங்கள் அதிசய நிலையில் திமிர் ஏறி நின்றன; வீர வெறிகொண்டு வீறோடு மூண்டு நின்றான்.

என்னை வெல்ல மனிதன் ஆற்றுமோ?